www.padippakam.com

# இலங்கையில் சாதியமும் அதற்கெதிரான போராட்டங்களும்



வெகுஜனன்
இராவணா

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# இலங்கையில் சாதியமும் அதற்கெதிரான போராட்டங்களும்

• வெகுஜனன் • இராவணா

SOUTH VISION

சவுத் விஷன்

படிப்பகம்

www.padippakam.com

**The Struggles Against Casteism in Sri lanka**
First Editon : March 1989
Revised Second Edition : December 2007

Published by

**SOUTH VISION**

New No. 251 (132), Avvai Shanmugam Salai,
Gopalapuram, Chennai - 600 086.
Email: southvision@dataone.in

Rs. 100.00

முதற் பதிப்பு : 1989 பங்குனி (இலங்கை பதிப்பு)
திருத்தப்பட்ட இரண்டாம் பதிப்பு : டிசம்பர் 2007

ஆசிரியர்கள்

வெகுஜனன் (சி.கா. செந்திவேல்)
இராவணா (ந. இரவீந்திரன்)

வெளியீடு

**சவுத் விஷன்**
251, (132), அவ்வை சண்முகம்சாலை,
கோபாலபுரம், சென்னை - 600 086.
ரூ. 100/-

அட்டை அமைப்பு : ஐசக், சென்னை

படிப்பகம்

www.padippakam.com

ஆண்டாண்டு காலமாக
இலங்கைத் தமிழர்
சமூகத்தில் ஒரு அமைப்பாகவும்
கொடிய ஒடுக்குமுறையாகவும்
நீடித்து வந்த சாதியத்திற்கும்
தீண்டாமைக்கும் எதிராக
அன்றிலிருந்து இன்று வரை
போராடித் தமது உதிரத்தையும்
உயிர்களையும்
பெறுமதி மிக்க வாழ்வையும்
அர்ப்பணித்துச் சென்ற
அனைத்துப் போராளிகளின்
தியாக உணர்விற்கும்
நினைவிற்கும்
இந் நூல்
சமர்ப்பணம்.

படிப்பகம்

## பதிப்புரை

Perception without conception is blind
conception without perception is empty **kant**

சாதீய ஒடுக்குமுறைக்கு எதிராகவும் சமத்துவத்திற்காகவும் சில நூல்களை எமது நிறுவனம் வெளியிட்டுள்ளது அந்த வரிசையில் இன்று இலங்கை தமிழ் சமூகத்தில் சாதீய ஒடுக்குமுறைக்கு எதிராக நடைபெற்ற போராட்ட வரலாற்றை மிக நுட்பமாகவும் சரியான நிலைப்பாட்டுடனும் எழுதப்பட்டுள்ள 'இலங்கையில் சாதியமும் அதற்கெதிரான போராட்டங்களும்'' என்கிற நூல் வெளியிடப்படுகிறது.

1966 அக்டோபர் 21 எழுச்சியை பற்றி விரிவாக விளக்கிடும் இந்நூல் அதன்பின் 1970களில் தொடர்ந்த போராட்டங்களையும் பதிவு செய்திருக்கிறது.

இப்படிப்பட்டான போராட்ட அனுபவங்கள் தமிழகத்திலும் ஏராளம் உள்ளன என்பதை யாரும் மறுக்கப் போவதில்லை. ஒரு பரந்த நிலப்பகுதியை கொண்ட ஒரு பிரதேசத்தில், எழுத்தறிவு, மற்றும் கல்வியின் பின்தங்கிய நிலைமை ஆகியவை இணைந்து தமிழகத்தில் தமிழ் சமூகத்தின் நடைபெற்ற எண்ணற்ற போராட்ட வரலாறுகள் பதிவாகாமல் இன்றுவரை எழுதப்படாமல் உள்ளன. இந்நிலை மாறவேண்டும். இல்லையெனில் முன்னுரையில் தோழர் சிவசேகரம் கூறிய ஒரு கூற்று உண்மை என்பது போல் ஆகிவிடும். 'இந்திய இடதுசாரி இயக்கம் சாதியத்தை எதிர்த்து நிற்பதில் தமது வரலாற்று கடமையை முன்னெடுக்கத் தவறியது' என்று கூறியுள்ளார். எந்த பிரச்சினையில் எப்பொழுது என்ன தவறு நடந்தது என்று விபரங்கள் தெரிவிக்காமல் ஒரு குற்றச்சாட்டை வைத்துவிட்டு போகிறார். மக்கள் போராட்ட வரலாறுகள் எழுதப்படும் வரை இம்மாதிரியான விபரீதங்கள் நிகழ்வதை யாராலும் தடுக்க முடியாது. ஜனநாயகத்திற்கான போராட்டம் மேலும் சூல் கொண்டு வளரும் பொழுதும் மக்கள் வரலாறுகள் பதிவிடும் வேலைகள் தொடர்ந்து நடைபெற்று வளரும் பொழுதும் தான் இவ்விபரீதங்கள் ஓரளவுக்கு நடைபெறாமல் பார்த்துக்கொள்ள இயலும்.

இதன் தொடர்பாக இந்த விஷயங்களில் சில முயற்சிகளை எமது நிறுவனம் எடுத்து வருகிறது. அவற்றை கூடிய சீக்கிரம் பதிப்பிக்க உள்ளோம். இந்நூல் பற்றி உங்கள் கருத்துக்களை எமக்கு எழுதுங்கள்; பலர்வாசிக்க உதவுங்கள். உழைக்கும் மக்கள் ஒற்றுமையை கட்டுவோம். சாதிய ஒடுக்குமுறைக்கும் சாதியத்திற்கும் எதிராக தொடர்ந்து போராடுவோம் வெற்றிபெறுவோம்.

25.12.07

எம். பாலாஜி

www.padippakam.com

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| நூல்பற்றி சில வார்த்தைகள் | | 1 |
| முன்னுரை | | 5 |
| முதல் பதிப்பிற்கான மதிப்புரை | | 10 |
| 01. | அறிமுகம் | 16 |
| 02. | சாதி அமைப்பின் தோற்றமும் வளர்ச்சியும் அதன் இருப்பும் | 19 |
| 03. | வர்க்கப் பிரிவினைகளின் தோற்றமும் வளர்ச்சியும் | 26 |
| 04. | இலங்கையில் சாதி அமைப்பின் இறுக்கம் | 38 |
| 05. | இலங்கைத் தமிழர்கள் மத்தியில் சாதியும் தீண்டாமையும் | 60 |
| 06. | கொலனிய காலத்திலிருந்து சுதந்திரம் வரை | 91 |
| 07. | ஐம்பதுகளில் இருந்து அறுபத்தியாறு ஒக்ரோபர் வரை | 115 |
| 08. | 1966 ஒக்ரோபர் 21 எழுச்சியும் போராட்டங்களும் | 141 |
| 09. | 1970களில் தொடர்ந்த போராட்டங்கள் | 205 |
| 10. | தமிழ்த் தேசியப் போராட்டத்தில் சாதியத்தின் நிலைப்பாடு | 214 |
| | முடிவுரை | 227 |
| | பின்னிணைப்பு | 232 |


படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

## நூல் பற்றி சில வார்த்தைகள்!

*இலங்கையில் சாதியமும் அதன் பாற்பட்ட தீண்டாமையும் தமிழர் சமுதாயத்தில் நீண்ட நெடுங்காலமாகக் கொடுமைகள் விளைவித்து வந்துள்ளன. தமிழர்கள் மத்தியில் கடும் உடல் உழைப்பாளிகளான உழைக்கும் மக்களை சாதியம் அடக்கி ஒடுக்கி தாழ்த்தப்பட்டவர்கள் என்ற நிலையில் வைத்து வந்தது. நிலப்பிரபுத்துவ மேட்டுக்குடி வழிவந்த 'தமிழ்ப் பெருங்குடியினர்' தமது வர்க்க நலன் பேணும் கருவிகளில் ஒன்றாகச் சாதியத்தைப் பயன்படுத்தியதோடு தமிழர்களின் பழம்பெருமை பேசும் கூறுகளில் ஒன்றாகவும் அதனை முன்னெடுத்தும் வந்தனர்.*

*விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் நவீன வளர்ச்சியடைந்து அறிவியல் வளர்ச்சியும் சமூக சார்புநிலையும் உலகளாவிய ரீதியில் ஓங்கி உயர்ந்து வரும் இன்றைய கால கட்டத்தில் தமிழர் சமுதாயத்திலே சாதியமும், பெண்ணடிமையும் உள்ளார்ந்து உறுதிபெற்றனவாகத் திகழ் கின்றன. இவற்றைத் தொடர்ந்தும் நிலை நிறுத்திக் கொள்வதில் தமிழர் பழமைவாதம் தன்முனைப்புப் பெற்றதொன்றாகவே இருந்து வருகின்றது. இப் பழமைவாதமானது தனது பிற்போக்கு நிலைப்பாட்டிற்கு மதம். கலா சாரம், பண்பாடு. மரபு போன்றவற்றை போர்வையாக்கி நியாயம் கற்பிக்க முற்படுகின்றது. இன்று தமிழர் சமுதாயத்தில் ஒருவரின் சமூக சார்பு நிலையையும் அவரது முன்னோக்கிய சமூக நோக்கையும் கணிப்பீடு செய்வதற்கு ஒரு சிறந்த அளவுகோலாக சாதியத்தைப் பற்றி அவர் கொண்டிருக்கும் எண்ணக் கருத்தையும் அதனோடு ஒத்த அவரது சமூக நடைமுறைகளையும் வைத்து சரியான முடிவுக்கு வரமுடியும். ஆதலால் சாதியத்தையும் பெண்ணடிமைத் தனத்தையும் பிரதான கூறுகளாகக் கொண்ட தமிழர் பழமைவாதத்தின் பிற்போக்கு அம்சங்கள் உரிய*

www.padippakam.com



முறையில் அடையாளம் காணப்பட்டு அவற்றுக்கு எதிரான போராட்டம் மென் மேலும் முன்னெடுக்கப்பட வேண்டும்.

இலங்கையில் சாதியத்திற்கும் அதன் விளைவான தீண்டாமைக்கும் எதிராக இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் இருந்து தொடுக்கப்பட்ட போராட்டங்கள் படிப்படியாக வளர்ச்சி பெற்று வந்துள்ளதைக் காணமுடியும். இருந்த போதிலும் இந்த நூற்றாண்டின் நடுக்கூறுக்குப் பின்பே சாதியத்தின் தன்மை பற்றிய வரலாற்று நோக்கும் சமூக நிலையும் விஞ்ஞான பூர்வமான ஆய்வுக்கு உள்ளாக்கப்பட்டது. அதனூடாகவே வர்க்கப் போராட்டத்தின் ஒரு அம்சமாக சாதியத்திற்கு எதிரான போராட்டங்கள் பல முனைகளிலும் முன்னெடுக்கப்பட்டன. அதனால் சாதியத்தின் ஒரு பகுதியான தீண்டாமை பொது இடங்களில் பாராட்டப்படும் நிலை தகர்க்கப்பட்டது. பொது இடங்களில் தீண்டாமை தகர்க்கப்பட்டிருப்பினும் இன்னும் அதன் அம்சங்கள் பல தொடரப்படுவதைக் காணமுடியும். சமூக மாற்றத்தின் மூலம் சாதியம் அடிவேருடன் தகர்க்கப்படாமல் அதன் பல்வேறுபட்ட ஒடுக்குமுறை அம்சங்களை முழுமையாக அகற்ற இய லாது.

இன்று சாதியமும் தீண்டாமையும் தமிழர் சமுதாயத்தில் இருந்து அற்றுப்போய் விட்டது என்று எவரும் அறுதியிட்டுக் கூறமுடியாது. நாற்பது வருடங்களுக்கு முன்பு கம்யூனிஸ்டுகளாலும் ஜனநாயக சக்திகளாலும் முன்னெடுக்கப்பட்ட புரட்சிகரப் போராட்டங்களால் சாதியமும் தீண்டாமையும் பலத்த அடியை வாங்கித் தன் இறுக்கத்தை கையிழக்கிக் கொண்டதே அன்றி முற்று முழுதான அற்றுப் போதலைப் பெற்று விடவில்லை என்பது ஒரு யதார்த்த நிலையாகும்.

எனவே சாதியத்தை எதிர்த்த போராட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படல் வேண்டும். அதற்கு சாதியத்தின் வரலாற்று அடிப்படையை அடையாளம் கண்டு, வர்க்கப் போராட்ட வழி நிற்கும் சரியான மார்க்கம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவது அவசியமாகும். சாதியத்திற்கு எதிரான போராட்டம் குறுகிய வெறித்தனம் கொண்ட சாதிவாத மார்க்கத்தில் செல்ல முடியாது. சரியானதும் நிதானமானதுமான வர்க்கப் போராட்டப் பாதையிலேயே தாழ்த்தப்பட்ட மக்கள் முன்னேற முடியும்.

மேற் கூறியவற்றின் தேவையைக் கருத்திற் கொண்டே இந் நூல் வெளியிடப்படுகின்றது. சாதியத்தையும் அதற்கெதிரான போரா ட்ட வரலாற்றையும் இந் நூல் சுருக்கமாக முன்வைக்கின்றது. இது கடந்த காலத்தை தெளிவாகத் தெரிந்து கொள்வதற்கும் எதிர்காலத் தை

www.padippakam.com



துணிவுடன் எதிர் கொள்வதற்கும் இளம் தலைமுறையினருக்கு அனுபவ வாயிலாக உதவக் கூடிய தொன்றாகும்.

பல கிராம, நகரப் பகுதிகளில் பல்வேறுபட்ட தனிநபர்கள் பொது அமைப்புகள் போன்றவர்களிடம் இருந்து பெறப்பட்ட ஆதாரபூர்வ மான தகவல்கள், ஆவணங்களில் இருந்தும் கிராமங்களில் மிக வயதா கிவிட்ட குறிப்பிடத்தக்கவர்களிடம் இருந்து வாய் மொழி மூலம் பெறப்பட்ட தகவல்களில் இருந்தும் எடுக்கப்பட்ட விடயங்களைக் கொண்டு இந்நூ லை நூலாசிரியர்கள் எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ் இரண்டாவது பதிப்பு சிற்சில திருத்தங்கள் சேர்ப்புக ளுடன் வெளிவருகின்றது. முதலாவது பதிப்பு 1989ம் ஆண்டு மார்ச் மாதத்தில் வெளிவந்தது. இப்பொழுது பத்தொன்பது ஆண்டுகளுக்குப் பின் வெளிவரும் இப் பதிப்பில் சம காலத்தின் தேவையையும் எதிர்பார்ப் பையும் உள்ளடக்கிய இரண்டு அத்தியாயங்கள் இடம் பெறுகின்றன.

இப் பதிப்பின் வரவை உள்நாட்டிலும் புலம் பெயர்ந்த நாடுக ளிலும் தமிழகத்திலும் தோழர்கள் நண்பர்கள் சமூக ஆர்வலர்கள் வேண்டி நின்றார்கள். அத்தகையவர்களின் விருப்பம் இன்றைய நெருக்கடிச் சூழல் மத்தியிலும் நிறைவேற்றப்படுகிறது.

இந்நூல் சிலவேளைகளில் சிலருக்கு முகச் சுளிப்பையும், மன உளைச்சலையும் ஏற்படுத்தக்கூடும். அவ்வாறானோர் நிச்சயம் சாதிய த்தை ஏதோ ஒரு வகையில் நியாயப்படுத்தி நிற்பவர்களாகவே கொள்ள முடியும். ஏனெனில் தமிழர்களின் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கின ரான தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இழைக்கப்பட்டு வந்த சமூக நீதி மறுப்புக்க ளையும் சாதியக் கொடுமைகளையும் அதற்கெதிரான போராட்டங்களை யும் வரலாற்று வழியாக இந்நூல் முன்வைக்கின்றது. உண்மைகள் ஒரு போதும் மறைக்கப்படமுடியாதவை, நீதியான போராட்டங்கள் என்றும் மறுக்கப்பட இயலாதவை என்ற நியதிக்கு இந்நூல் ஒரு சாட்சியமாகின் றது. இந்நூல் பற்றிய ஆக்கபூர்வமான விமர்சனங்களும் கருத்துகளும் மனமுவந்து வரவேற்கப்படும்.

இவ் இரண்டாவது பதிப்பை தமிழ் நாட்டில் வெளியிடுவதற்கு, முன்பிருந்தே ஆர்வத்தோடு வற்புறுத்தி வந்தவர் தோழர் எம். பாலாஜி, அவருடைய விருப்பத்திற்கு அமைய சவுத் விஷன் இந் நூலை தமிழ் நாட்டில் வெளியிடுகின்றது. அதற்கு எமது நன்றிகள். மேலும் இந் நூலின் அவசியத்தைச் சுட்டிக்காட்டி வெளியிட ஆர்வப்படுத்தி முன்னுரை யையும் வழங்கிய பேராசிரியர் சி. சிவசேகரத்திற்கும். தனது

படிப்பகம்

www.padippakam.com



முன்னைய மதிப்புரையையும். மற்றொரு கட்டுரையைப் பின்னிணைப்பாகச் சேர்த்துக் கொள்வதற்குச் சம்மதம் தெரிவித்து அவறின் மூலப் பிரதிகளைத் தந்து உற்சாகமளித்த பேராசிரியர் சி. தில்லைநாதனுக்கும் எமது நன்றிகள்.

மேலும் இந் நூலில் திருத்தங்கள் சேர்ப்புகள் இடம் பெற ஆலோசனைகளும் தகவல்களும் தந்து உதவிய தோழர்கள் நண்பர்களுக்கு நாம் நன்றி கூறுகின்றோம். இவ்வேளை இந் நூலின் ஆசிரியர்கள் முதல் பதிப்பில் தமது புனை பெயர்களையே கொண்டிருந்தனர். **வெகுஜனன்- தோழர் சி. கா. செந்திவேல், இராவணா- தோழர் ந. இரவீந்திரன்** என்பதையும் அறியத்தருகின்றோம். இவ் இரண்டாவது பதிப்பை மீளமைத்து தந்து ஒத்துழைப்பை நல்கிய அதன் ஆசிரியர்களுக்கும் அவர்களுக்கு உறுதுணையாக நின்று இந் நூல் வெளிவர உதவிய தோழர்கள் சோ. தேவராஜா. இ. தம்பையா ஆகியோருக்கும் நன்றி. இந் நூலை கணனியில் வடிவமைத்த கெ. கௌரி, செ. நந்தனுக்கும். முகப்பு அட்டை வடிவமைத்துத் தந்த நண்பர் ஏ. **அஸீஸ் நிஸாருத்தீன்** ஆகியோருக்கும் எமது நன்றிகள்.

**புதிய பூமி வெளியீட்டகம்.**

**47, 3வது மாடி
கொழும்பு மத்திய சந்தைக்
கட்டிடத் தொகுதி
கொழும்பு- 11
இலங்கை.**

படிப்பகம்

*முன்னுரை*

# மறக்கக் கூடாத போராட்ட வரலாறு

*சமூக ஏற்றத் தாழ்வுகள் ஒரு சமூகத்தின் உற்பத்தி உறவுகளின் அடிப்படையிலேயே பெரிதும் முடிவாகின்றன. எனினும் பிறப்பால் மனிதரை வேறுபடுத்தி அந்த வேறுபாடுகட்குள் ஏற்றத்தாழ்வுகளைக் கொண்ட உற்பத்தி சாராத சமூக ஏற்றத்தாழ்வுகள் உள்ளன. அவற்றின் தோற்றுவாய்களை அடிமைச் சமுதாய நிலவுடைமைச் சமுதாய உற்பத்தி உறவுகளிற் தேடலாம். நிறவாதம் என்பது ஒரு ஏற்றத்தாழ்வான சமூக வேறுபாடாக அமைவதற்கு அடிமை வியாபாரம் (பழைய அடிமைச் சமுதாயத்திலில்லாது முதலாளியத்தின் தொடக்கக் காலத்தில் உருவான அடிமை முறையையொட்டி எழுந்த அடிமை வியாபாரம்) ஒரு முக்கிய பங்களித்தது. அது நிலை நிறுத்தப்பட்ட பின்பு, நிற அடிப்படையிலான ஏற்றத்தாழ்வுகளை நியாயப்படுத்துகிற விதமாக வரலாறு மதம் போன்ற பல விடயங்களும் மாற்றியமைக்கப்பட்டுள்ளன. அமெரிக்காவில் அடிமை முறை ஒழிக்கப்பட்டு நூறாண்டுகள் கடந்த பின்னுங்கூடக் கறுப்பு இன மக்கள் தீண்டத்தகா தோராகவே நடத்தப்பட்டனர். போராட்டங்கள் மூலம் அவர்கள் சட்டத்தின் முன் தம்மை வெள்ளையருக்குச் சமமானவர்களாக் கினாலுங் கூட இன்னமும் பெரும்பாலான கறுப்பு இனமக்கள் தாழ்ந்த நிலையிலேயே வாழுகின்றனர். இன்னமும் வெள்ளை இனத்தவர்களிற் சிலர் அவர்களைத் தாழ்ந்தோராக நோக்கும் மனநிலையிலேயே உள்ளனர். நவீன முதலாளிய உற்பத்தி முறை உச்ச நிலையை எட்டியுள்ள அமெரிக்காவில் நவீன முதலாளியத்திற்குத் தேவையற்றதான நிறப்பாகுபாடு ஏன்தொடருகிறது? ஒடுக்கப்பட் டோரைப் பிளவுபடுத்த*

www.padippakam.com



நிறப்பாகுபாடு உதவுகிறது என்பது இன்னமுஞ் செல்லுபடியான நியாயமாயினும் அதை விட முக்கியமான ஒரு காரணி உண்டு. அமெரிக்கச் சமூகத்தில் ஆதிக்கஞ் செலுத்துகிற சிந்தனை முறையில் நிறவாதம் இன்னமும் ஒரு பகுதியாகவே உள்ளது என்பதை நாம் மறுக்க இயலாது. அந்தவிதமான சிந்தனையின் வரலாற்று வேர்கள் பல இன்னமும் உயிரோடுதான் உள்ளன. அதேவேளை கியூபாவில் நிற அடிப்படை யிலான சமூக ஏற்றத்தாழ்வுகள் அமெரிக்காவுடன் ஒப்பிட்டாற் புறக்கணி க்கத்தக்கவை. கியூபாவில் வாழுகின்ற வெள்ளை இனத்தவரிடம் இல்லாத நிறவாதம் கியூபாவின் சோஷலிஸ அரசை வெறுத்து வெளியேறி அமெரி க்காவின் ஃபுளொறிடா மாநிலத்தில் வாழுகிறவர்களிடம் இருக்கி றது. இதிலிருந்து நாம் கற்கக் கூடியது ஒன்றுண்டு. அதாவது நிற வெறியை ஒழிப்பதானால் அதற்கு எதிரான ஒரு சமூகச் சிந்தனையால்– அதாவது மனிதரிடையே ஏற்றத்தாழ்வை மறுக்கும் ஒரு சிந்தனையால்– வழிநடத்தப்படுகிற ஒரு சமுதாயம் தேவை. நிற வேறுபாடு இல்லை என்றோ நிற அடிப்படையிலான பாகுபாடு, பாரபட்சம், ஒடுக்குமுறை என ஏதும் இல்லை என்று பாசாங்கு செய்வதால் நிறவாதம் போய் விடாது, மாறாக அது வலுவுடன் தொடரும்.

அமெரிக்காவில் நிற வேறுபாடு பற்றி மேலே கூறியதை நாம் இந்தியத் துணைக்கண்டத்தில் சாதியத்திற்குப் பொருத்திப் பார்ப்போ மேயானால் சாதிய ஒழிப்பின் பிரச்சனைகள் பற்றி மேலும் விளங்கிக் கொள்ள வசதியாயிருக்கும் என நினைக்கிறேன். உண்மையில் ஒருவரது தோற்றத்தால் தெளிவாகப் புலனாகிற நிற வேறுபாட்டை விடக் குறை வாகவே கண்ணுக்குப் புலனாகும் சாதி வேறுபாடு சில ஆயிரம் வருடங் கட்கும் மேலாக நிலைத்துள்ளதோடு நீக்குவதற்குக் கடினமான ஒன்றா கவே இருந்து வந்துள்ளது.

சாதி வேறுபாடுகளைக் கடந்த சமூகச் சிந்தனைகள் இந்தி யத் துணைக்கண்டத்தினுள் இருந்துள்ளன. அவற்றின் தோற்றமும் இருப்பும் பொதுப்பட ஏற்கப்பட்ட ''இந்து மதம்'' எனும் அடையாளத்தின் மறுப்பின் வழியிலோ அதன் வரையறைகளை மீறியோ தான் நிகழ்ந் துள்ளன. வேறுபட்ட நோக்கங்களுக்காக வைணவமுஞ் சைவமுஞ் சார்ந்த பக்தி இயக்கங்கள் சாதியாற் தாழ்த்தப்பட்டோரை ஓரளவு அரவணைத்துச் செல்ல முற்பட்டாலும் அந்தந்த நோக்கங்கள் நிறைவு பெற்ற பின்பு சாதியம் தன்னை மறுபடியும் மேலும் இறுக்கமாக நிலை நிறுத்திக் கொண்டது. தமிழ்ச் சைவ குரவர்களை விடத் தைரியமாகச் செயற்பட்டுத்

www.padippakam.com



தாழ்த்தப்பட்டோருக்குப் பூணூல் அணிவித்த ராமானுஜரின் பேரைச் சொல்லிக் கொண்டே கூரிய சாதி வேறுபாடுகளை அவருக்குப் பின்பான வைணவம் பேணி வந்துள்ளது. சாதியத்தையும் பிராமண மதத்தையும் மறுத்து உருவான கன்னட வீரசைவர்கள் தாங்களே ஒரு சாதிப் பிரிவாகுமளவுக்கு இந்தியத் துணைக்கண்டச் சாதியம் வீரியமுடையதாக இருந்து வந்துள்ளது.

பக்தி இயக்கம் முதலாகச் சென்ற நூற்றாண்டின் தொடக்கக் காலச் சீர்திருத்தவாதிகள் வரை பலரதும் முயற்சிகள் தோல்வி கண்டதற்குக் காரணம் சாதியத்திற்கு ஆதாரமாக இருந்த சமூக அமைப்பையும் அதன் உற்பத்தி உறவுகளிற் சாதி முறையின் பங்கையும் அனைத்தினும் மேலாக மதம், மரபு, சமூக வழக்கங்கள் என்கிற வடிவங்களில் ஆதிக்கம் செலுத்தி வந்த மேலாதிக்கச் சிந்தனையையும் தகர்த்தெறியக் கூடியவிதமான எழுச்சிகளோடு அன்றைய சமூகச் சீர்திருத்த முயற்சிகள் இணைந்திருக்கவில்லை என்பது தான். பெண் கல்வி மறுப்பு, பால்ய விவாகம், உடன் கட்டை ஏறல் போன்றவற்றிற்கும் தாழ்த்தப்பட்ட சாதியினரிடையே புதிய விழிப்புணர்வுக்கும் கொலனியவாதிகளின் வருகை ஒரு தூண்டு கோலாக அமைந்த தென்றால் அது கொலனி முறையின் நற்பண்புகளால் அல்ல என்பதை நாம் மறக்கலாகாது. எனினும் அந்நியரது வருகையும் ஆதிக்கமும் பழைய சமூக அமைப்பில் சில அதிர்வுகளை ஏற்படுத்தின. அதன் விளைவாக ஏற்பட்ட நவீனச் சிந்தனைகள் சில சீர்திருத்தங்கட்கு வழி செய்தன. எனினும் அவற்றின் தர்க்க ரீதியான எல்லைகள் வரை அவற்றை முன்னெடுக்குமளவுக்குக் கொலனிய ஆட்சிக்கோ அவர்களுடன் பங்காளிகளாகிக் கொண்ட நிலவுடைமை வர்க்கத்திற்கோ புதிய உள்ளூர் முதலாளி வர்க்கத்திற்கோ இருக்கவில்லை. இதனாலேயே இந்திய சுதந்திரத்திற்கு அறுபது ஆண்டுகள் பின்பும் இந்தியாவிற் தீண்டாமை இன்னமும் உயிரோடு உள்ளது. சமூக மேம்பாடுகண்ட தாழ்த்தப்பட்ட சமூகத்தினரில் ஒரு பகுதியினர் உயர்சாதியினர் போல நடந்து கொள்கின்றனர். தலித்தியத் தலைவர்கள் சிலர் தமது சமூகத்தினரைப் பார்ப்பனர் நடத்துவதைவிடக் கேவலமாகவே நடத்தி வருகின்றனர்.

இந்தியத் துணைக் கண்டத்தின் புதிய சூழல் சாதியத்தைத் தகர்ப்பதற்கான வாய்ப்புகளைக் கொண்டிருந்தாலும் சாதியத்தை வெறுமனே சாதிக் கண்ணோட்டத்திற் பார்க்கிற போது சாதியத்திற்கு எதிரான போராட்டம் தன்னைப் பலவீனப்படுத்தி வரையறைக்குட்படுத்திக் கொள்

www.padippakam.com



கிறது. அம்பேத்கர், ஈ.வெ.ரா. போன்றோர் சாதிய ஒடுக்கு முறையு டன் நெருக்கமாகப் பிணைந்துள்ள வர்க்க ஒடுக்குமுறையை ஏதோ வகையிற் புறக்கணித்ததால் பரந்துபட்ட ஐக்கியத்தின் வழியில் சாதி ஒடுக்குமுறைக்கும் சாதியத்திற்கும் எதிரான வெகுசனப் போராட்டத்தை அவர்களால் முன்னெடுக்க இயலாது போயிற்று. அதனாலேயே அவர் களது பேரைச் சொல்லிக் கொண்டு தலித்தியம் என்ற பேரில் சாதிய அரசியலைச் சிலரால் முன்னெடுக்க இயலுமாயிற்று. மறுபுறம் இந்திய இடதுசாரி இயக்கம் வர்க்கப் போராட்ட வழி நின்று சாதியத்தை எதிர்த்து நிற்பதில் தமது வரலாற்றுக் கடமையை முன்னெடுக்கத் தவறியது. ஆனால் இன்று மாக்ஸிய- லெனினிய சக்திகள் பல நிலைகளிலும் அத்தவறுகளைச் சீர்செய்து தாழ்த்தப்பட்ட சாதியினரதும் ஒடுக்கு முறைக்குட்பட்ட பழங்குடியினரதும் போராட்டங்களை முன்னெடுக்கின்றனர்.

இந்தப் பின்னணியில் நோக்கும் போது இலங்கைக் கம்யூனிஸ்ற்றுக்களின் சிறப்பாக மாக்ஸிய- லெனினியச் சிந்தனை வழியில் புரட்சிகரப்பாதையை ஏற்றுக் கொண்டவர்களின் பங்களிப்பு வரலாற்று முக்கியம் பெற்றதாக மட்டுமன்றித் தென்னாசியாவில் எழுச்சி பெற்று வரும் சாதிய எதிர்ப்புப் போராட்டங்கட்கு ஒரு நல்ல முன்மாதிரியாகவும் பயனுள்ள பாடங்களைக் கொண்டதாயும் அமைகிறது. அது மட்டுமல்லலாமல் தேசிய இனங்களதும் ஒடுக்கப்பட்ட சமூகப்பிரிவுகளதும் சிறுபான்மை இனங்களதும் விடுதலைப் போராட்டங்கட்கான பயனுள்ள நடைமுறைப்பாடங்களை அது கொண்டுள்ளது. 1966 ஒக்ற்றோபர் எழுச்சி என அறியப்படும் போராட்டம் பரந்துபட்ட ஐக்கிய முன்னணி. வெகுசன அரசியல் வெகுசனப் போராட்டம் என்பன பற்றிய சரியான நிலைப்பாடுகளை எவ்வாறு கொள்கை- போராட்ட நடைமுறை- கொள்கை என்ற இயங்கியல் சார்ந்த செயல்முறை மூலம் வந்தடைந்தது என்பதை ஆவணப்படுத்தும் வகையில் "இலங்கையில் சாதியமும் அதற்கெதிரான போராட்டங்களும்" என்ற இந்த நூல் அரசியல் வரலாற்று முக்கியம் வாய்ந்தது. இந்த நூலில் முதற்பதிப்பு வந்த போது யாழ்ப்பாணத்தில் இப்படி ஒரு மோசமான சாதிய ஒடுக்கு முறைச் சூழல் இருந்ததா என்பது பலர் மறந்து போகுமளவுக்குப் போராட்டத்தின் பின்பான இருபது ஆண்டுகளில் யாழ்ப்பாணச் சமூகம் மாறிவிட்டது. அது தானாக நடந்த மாற்றமல்ல: அது யாரும் மனமிரங்கி அருளிய மாற்றமுமல்ல: அது போராடி வெல்லப்பட்டது.

இன்று சிலர் வேண்டுமென்றும் சிலர் அறியாமையாலும் சாதியம் ஒழிந்து விட்டதென்றும் தமிழ்த் தேசியமே அதை முறியடித்தது

www.padippakam.com



என்றும் பேசுகின்றனர். இரண்டுமே பொய்யானவை. சாதியம் இன்னும் ஒழியவில்லை. அதற்கான சான்றுகள் வெளிவெளியாகவே உள்ளன. ஆயினும் சாதிய ஒடுக்குமுறைக்குச் சாவுமணி அடிக்கப்பட்டாயிற்று. தாழ்த்தப்பட்ட மக்கள் இன்று தலை நிமிர்ந்து நிற்கிறார்கள். அந்த வெற்றிக்குத் தமிழ்த் தேசியம் எவ் வகையிலும் பங்களிக்கவில்லை. அதை இயலுமாக்கியவர்கள் தாழ்த்தப்பட்ட வெகுசனங்களும் அவர்களோடு இணைந்து நின்று போராடிய நேர்மையான இடதுசாரி, சனநாயக, முற்போக்குச் சக்திகளுமேயாவர். அதை இயலுமாக்கியது மாக்ஸிய லெனி னியவாதிகளின் வழிநடத்தலின் கீழ் அவர்கள் முன்னெடுத்த வெகுசனப் போராட்டப் பாதையே.

"வர்க்கப் போராட்டத்தை என்றுமே மறவாதீர்!" என்பது மாஓ சேதுங் ஒரு முறைக்குப் பலமுறை வற்புறுத்திய கருத்து. ஒடுக்குகிற வர்க்கம் முறியடிக்கப்பட்ட பின்பும் அதன் சிந்தனை உயிரோடு இருக்கும். எனவே ஒவ்வொரு தளத்திலும் ஒவ்வொரு நிலையிலும் இடையீடின்றி வர்க்கப் போராட்டம் தொடரவேண்டும். தவறும் போது ஒடுக்கும் வர்க்கம் களைப் பூண்டுகள் போல துளிர்த்துத் தழைத்துக் காடாக மீண்டும் எழ இயலும். எந்த விடுதலைப் போராட்டத்தின் பாடங்களும் என்றென்றும் மறக்கக் கூடாதவை. இறுதி வெற்றி வரை மட்டுமன்றி அதற்கப்பாலும் அவை நினைவிலிருத்த வேண்டியன. சாதிப் பகைமை நோக்கில் அல்லாமல் சாதிய வெறுப்பின் நோக்கில் அது நினைவில் நிறுத்தப்படவேண்டும். சமூக ஒடுக்குமுறைகள் எவ்வளவு தீயனவோ, அந்த ஒடுக்கு முறைகட்கு எதிரான போராட்டங்களை ஒரு சமூகம் மறந்து போவதும் அந்தளவுக்குத் தீயது.

மேற் கூறிய வகையில் ஒரு வரலாற்று ஆவணமாகவும் இன்றைக்கும் பயனுள்ள போராட்டப் பாடங்களின் தொகுப்பாகவும் இந்த நூல் புதிய தகவல்களை உள்ளடக்கி மீளப் பதிப்பிக்கப் பெறுவது இன்று அவசியமான ஒரு சமூகக் கடமையினது நிறைவேற்றல் ஆகும். சமூக ஒடுக்குமுறைகட்கு முகங்கொடுக்கிறவர்களும் சமூக நீதிக்காகப் போராடுகிறவர்களும் இந்த நூலைக் கட்டாயம் ஊன்றிப்படிக்க வேண்டும்.

**பேராதனை** **சி. சிவசேகரம்**

**10-05-2007**

முதல் பதிப்பிற்கான மதிப்புரை

## யாழ்ப்பாணத்திற் சாதியமும் அதற்கெதிரான போராட்டங்களும்

***(சாதியமும் அதற்கெதிரான போராட்டங்களும்; வெகுஜனன், இராவணா.***
***புதியபூமி வெளியீடு, 15/1 மின்சார நிலைய வீதி. யாழ்ப்பாணம். விலை; ரூ. 25.00. 1989 பங்குனி)***

*அப்பாவி மக்களது உரிமைகளின் மறுப்பு அவர்கட்கெதிரான ஒடுக்குமுறை, பாரபட்சம், வன்முறை என்பன பற்றித் தமிழ் மக்கள் நீண்ட காலமாக முறைப்பட்டு வந்துள்ளனர். நகை முரணாகத் தமிழருக்குத் தமது மக்களில் ஒரு பகுதியினருக்கு எதிராக அதே குற்றங்களை இழைத்து வந்த வரலாறு உண்டு.*

*இதைச் சொன்னாலே சிலருக்கு முகம் சிவந்துவிடும். இவ்விடத்து ஒரு ஞானியின் சொற்கள் என் நினைவுக்கு வருகின்றன. "உண்மையைக் கற்க இயலாதாருக்கு நாம் அனுதாபங்காட்ட வேண்டும். உண்மையைக் கற்க அஞ்சுவோருக்குப் பரிதாபப்பட வேண்டும். உண்மையைக் கற்க மறுப்போர் அயோக்கியர்கள்."*

*1960களின் தொடக்கத்தில் ஆங்கில நாளேடொன்றில் யாழ்ப்பாணத்திற் சாதியம் பற்றிய ஒரு கட்டுரை வெளியானபோது அதற்கு மாறாக இரண்டு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. இறந்து கொண்டிருக்கும் ஒரு முறை பற்றி எழுதுவது தேவையற்றது என்பது ஒன்று. ஆங்கிலத்தில் எழுதுவது நமது அழுக்குகளைப் பகிரங்கமாக அலசுவதாகும் என்பது மற்றது.*

www.padippakam.com



1970களின் தொடக்கத்தில் சாதிமுறையின் அத்திவாரங்கள் அதிரவைக்கப்படுவதையும் சாதிவாதப் பத்தாம் பசலிகளது ஒப்பாரிகளையும் பற்றிய ஒரு நாடகம் மேடையேற்றப்பட்ட போது தனது முக்கியத்துவம் அனைத்தையும் இழந்த ஒரு விடயத்திற்கும் புத்துயிரூட்டப்படுகிறது என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டது.

ஆனால் இந்த நூல் தமிழ் மக்கள் தாக்குதலுக்குள்ளான 1980களிற் கூடச் சாதிப் பாகுபாடு தொடர்கிறது என்பதற்கும் சான்று கூறுகிறது.

வரலாற்றாசிரியர்கட்கும் சமூகவியலாளர்கட்கும் ஒரு வரமாக அமையப்போகும் இந்த நூல் சாதி முறைக்கு எதிரான விழிப்புணர்வைத் தட்டியெழுப்புவதையும் சாதிமுறையை இல்லாதொழிக்கும் வழியைச் சுட்டிக்காட்டுவதையும் நோக்காகக் கொண்டது.

தமிழர் மேம்பாடு பற்றித் தீவிரமான பற்றுடையோர், ஆரியரே சாதி முறையைப் புகுத்தினர் எனவும் அது தமிழருக்குரியதல்ல எனவும் சொல்லுவர். எனினும் அதன் வரலாற்றையும் அதன் பொருளாதாரத் தளத்தையும் விளங்கிக் கொள்ளாமல், இறக்குமதியான ஒரு மானக் கேட்டை நம்மால் இல்லாதொழிக்க இயலவில்லை என்று சொல்வது அற்ப ஆறுதலே!

சங்க காலத்திலேயே தொழில் அடிப்படையிலான வேறுபாடுகள் இருந்தன என்பதற்கும் ஒரு பகுதியினர் ஒடுக்கப்பட்டும் சுரண்டப்பட்டுமிருந்தனர் என்பதற்குச் சான்றுகள் உள்ளன. இப்பாகுபாட்டை வலுப்படுத்த உதவிய காரணிகள் நிலப்பிரபுத்துவச் சமூக அமைப்பின் விறைப்பான தன்மையும் வருணாசிரமமும் மறுபிறவிக் கொள்கையுமாம்.

ஒருவரது சமூக நிலை அவரது முந்தைய கரும வினையின் விளைவானது என்ற நம்பிக்கை பிறப்பின் அடிப்படையிலான ஒரு சாதி முறையை வலுப்படுத்த வழி செய்தது. ஒருவர் தனது வாழ்விற் தன்னுடைய தாழ் நிலையை ஏற்பதற்கு உதவியாக இப் பிறப்பில் ஒருவர் நெறிபிறழாமல் வாழ்ந்தால் மறுபிறப்பில் இப்பிறப்பினதை விட உயர்நிலை எய்தலாம் என்ற நம்பிக்கை அமைந்தது.

சாதிய அமைப்பைப் பற்றிய மேலோட்டமான ஒரு ஆய்வே சமூகத்தின் மேல் தட்டிலிருந்தோர் சாதி அமைப்பைத் தமக்கு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டனர் என்பதை எவருக்கும் உறுதிப்படுத்தும். சோழர். பாண்டியர். விசயநகர நாயக்கர். பார்ப்பனர். சிங்கள மன்னர்கள்.

www.padippakam.com



போர்த்துக்கேயர், டச்சுக்காரர், ஆங்கிலேயர் ஆகிய எல்லாரும் தமது ஆட்சியைக் கெட்டிப்படுத்தச் சாதிமுறையைப் பயன்படுத்தினர்.

சிலரது கருத்திற் சாதி அமைப்பு என்பது இந்து மதத்தின் சாபக்கேடு. வேதங்கள் சாதியமைப்புப் பற்றிப் பேசவில்லை. அதிகாரத்தில் இருந்தோரது நலனுக்காகச் சாதிகளை வகைப்படுத்தியவை சாத்திரங்களே. எனினும் இந்துக்கள் சாதிமுறை தெய்வத்தால் அமைக்கப்பட்டது என நம்புகின்றனர்.

ஒவ்வொரு சாதிக்கும் ஒரு நடத்தை நெறி விதிக்கப்பட்டுள்ளது. ஒரு சாதியின் ஒவ்வொரு உறுப்பினரும் எவ்வாறு வாழவும் உடுக்கவும் நடக்கவும் வேண்டுமென்று சாதி முடிவு செய்கிறது. சாதிகளும் கிளைச் சாதிகளும் நூறுமடங்காகப் பெருகியுள்ளன. முன்னைய இந்திய அமைச்சர் ஜகஜீவன்ராம் கிளைச் சாதிகளின் எண்ணிக்கை 563 என்று ஒருமுறை கூறியிருந்தார்.

வேதங்களும் உபநிடதங்களும் காவியங்களும் சாதிப் பாகுபாட்டுக்கு விரோதமான கருத்துக்களை உள்ளடக்கியிருக்கின்றன. சாதி தெய்வத்தால் அங்கீகரிக்கப்பட்டது என்று வேதங்கள் காண்பிப்பதாக நிரூபிக்கப்படுமாயின் ஒரு அழுகற் பழத்தைத் தூக்கி எறிவதுபோல இந்துமதத்தைத் தூக்கி எறிய ஆயத்தமாயிருக்கிறேன் என்று மகாத்மா காந்தி ஒரு முறை பிரகடனஞ் செய்தார்.

பிறமதங்கள் இந்துக்களைப் பெருமளவில் மதம் மாற்றுவதற்கும் சாதிமுறை சார்ந்த வேறுபாடுகளைக் கருவியாகப் பயன்படுத்துகிறதைப் பற்றி மூத்த இந்துக்கள் அதிகங் கவலைப்படுவது எவ்வளவு வினோதமானது. ஒரு மதம் என்பது அன்பின் வழியால் வளர்க்கப்படுவதா? வற்புறுத்தல் அதிகாரத்தின் வழி வளர்க்கப்படுவதா? இந்து மதத்தின் சரிவைப் பற்றி ஓலமிடுகிறவர்கள் இந்த நூலை வாசிப்பது நல்லது.

இடர் சூழுகிற போது ஒற்றுமைக்கான தேவைபற்றிக் கூவிக்கொண்டு தமது அதிகாரத்துக்கு முண்டு கொடுக்கச் சாதியைப் பயன்படுத்துகிற காட்சிகளை வரலாறு நமக்குப் பரிச்சயப்படுத்தியுள்ளது.

தங்களுடைய மேலாதிக்கத்திற்கு ஊறுசெய்யுமானால் மக்கள் இன்னொரு இடத்திற்குப் பெயர்வதைத் தடைசெய்யவும் கோயிலுக்குள் நுழைவதை மறிக்கவும் கல்வி வசதிகளையும் வேலை வாய்ப்புக்களையும் மறுக்கவும் கடுமையான சாதியவாதிகள் தயங்கமாட்டார்கள். தங்களுடன் உடன்படாத தெனின் எவ்வளவு

www.padippakam.com



தகைமையுடையவரினது கருத்தாயிருப்பினும் அவர்கள் அதைக் கேட்க ஆயத்தமாக இல்லை.

சாதியைப் பொறுத்தவரை யாழ்ப்பாணம் மிக விறைப்பானதும் ஒடுக்குந் தன்மையுடையதுமாகும். இப்போதைய சமூக ஏற்பாட்டின் கீழ்ச் சாதி அமைப்பை இல்லாதொழிக்க இயலாத போதிலும் அநாகரிகமான மட்டுப்படுத்தல்களும் கட்டுப்பாடுகளும் பார்ப்பவர்களின் வசைப்பாங்கான சிரிப்புக்கு இடமளிக்கக் கூடிய விதமான நடத்தையும் துரத்தியடிக்கப்பட வேண்டும்.

அண்மையிற் சாதி கடந்த காலத்திற்குரியது என்று நம்புகிற ஒருவருடன் பேசிக்கொண்டிருந்தேன். இனவாத வன்முறையின் போதும் வெட்கப்பட வேண்டிய சம்பவங்கள் நடந்துள்ளன என்று நான் சுட்டிக் காட்டினேன். அவரது மறுமொழி: "அந்த மாதிரி விசரர் இருப்பார்கள், அவர்களையெல்லாம் கணக்கில் எடுத்துக் கொள்ளக்கூடாது". ஆனால் அந்த மாதிரி விசரரிடம் வலிமையும் அதிகாரமும் உள்ளது; அவர்கள் நிச்சயமாகச் சமுதாயத்திற்குப் பெருமை சேர்ப்போரல்லர்.

யாழ்ப்பாணத்தின் தாழ்த்தப்பட்ட சாதியினர் கோயில் நுழைவுக்கும் தேநீர்க்கடைகட்குள் அனுமதிக்கப்படுவதற்கும் பொதுக் கிணறுகளிலிருந்து நீர் அள்ளுவதற்கும் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கும் மேற்கொள்ளப்பட்ட அமைதியான பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்த பின்பு தமது அடிப்படை உரிமைகளை வெல்வதற்கான பல்வேறு போராட்டங்களை நடத்தியுள்ளனர். இப் போராட்டங்களின் போது அவர்கள் பாரிய இழப்புக்களைச் சந்தித்துள்ளனர்.

சாதி அமைப்பையும் அதற்கெதிரான போராட்டங்களையும் பற்றிய இந்த நூலில் எட்டு அத்தியாயங்கள் உள்ளன. முதலாவது அத்தியாயம் சாதி அமைப்பின் தோற்றமும் விருத்தியும் பற்றியது. வேறுபாடுகளையும் சமனின்மைகளையும் தோற்றுவித்த சமூகப் பின்னணியின் சித்தரிப்பும் அவை எவ்வாறு வலுப்பெற்றன என்பதும் பெருமளவான சான்றுகளுடன் வழங்கப்பட்டிருப்பதால் சாதி அமைப்பின் வரலாற்றை அறிய விரும்பும் எவருக்கும் அவை பெறுமதி வாய்ந்தவை.

"இலங்கையிற் சாதி அமைப்பின் இறுக்கம்" எனும் தலைப்பிலான இரண்டாவது அத்தியாயம் வடக்கு, கிழக்கு மாகாணங்களிற் சாதி அமைப்பு எவ்வாறு செயற்படுகின்றது என்று விவரிப்பதுடன் குறிப்பாக வடமாகாணத்தில் எவ்வாறு 'தீண்டாமை' கொடிய செயற்பாட்டிற்கு வழி

www.padippakam.com



கோலியது எனவுஞ் சித்திரிக்கிறது,

தமிழர் மீது சாதி அமைப்பின் தாக்கம் பற்றிப் பேசும் அடுத்த அத்தியாயம் பொருளியல் அரசியல், மதம், கல்வி, பண்பாடு ஆகிய துறைகளில் அதன் பாதிப்பை உசாவுகிறது. நான்காவது அத்தியாயம் கொலனிய யுகத்திலிருந்து சுதந்திரம் வரையிலான காலத்தில் சாதி அமைப்புக்கு எதிரான போராட்டங்களைப் பதிவு செய்கிறது. தமிழ்த் தலைவர்கட்கு இடம் அளிக்காத ஸ்ரீ.ல.சு.க ஆட்சியின் போது தாழ்த் தப்பட்ட சாதியினரின் முயற்சிகட்குச் சிறிது ஆறுதல் கிடைக்கிறது.

ஆறாம், ஏழாம் அத்தியாயங்கள் 1966 ஒக்ற்றோபர் எழுச்சியையும் அதைத் தொடர்ந்த கோயில் நுழைவு தேநீர்க்கடை நுழைவுப் போராட்டங்களையும் பற்றிப் பேசுகின்றன. இக் கால இடைவெளியில் ஒரு வெகுசன இயக்கத்தின் அரசியல் தலைமையின் கீழ்த் தாழ்த்தப்பட்ட சாதியினர் சாதி அமைப்பின் அத்திவாரங்களை நடுங்கவைத்த பல போராட்டங்களைத் தொடுத்தனர்.

இந்த அத்தியாயங்களில் ஒரு பிரசாரத்தொனியையும் உணர்ச்சி வேகத்தையும் உணரமுடிகிறது. 'சரியான' என்ற சொல் அடிக்கடி பயன்பட்டமையும் சில இடங்களில் ஏறத்தாழ நேரடியான வர்ணனையும் இருப்பது நூலாசிரியர்கள் இப் போராட்டங்களில் நேரடியாகவே பங்கு பற்றினர் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றன.

இறுதி அத்தியாயம் கடந்தகால வரலாற்றிலிருந்து கற்று எதிர்கால விடுதலைப் போராட்டங்களிற் பயன்படுத்தக் கூடிய பாடங்களைத் தொகுத்துக் கூறுகிறது. 1970க்குப் பின்பான நிலைமைகளைப் பற்றிய ஒரு சிறு குறிப்பும் சாதி அமைப்பிற்கெதிரான போராட்டத்தின் முக்கியமான கட்டங்களை அட்டவணைப்படுத்தும் ஒரு பின்னிணைப்பும் உள்ளன.

'மக்களாட்சி' மலர்ந்துள்ள தென்று பெருமை பேசும் ஒரு காலத்தில் நாற்பது ஆண்டுகளாகத் "தமிழர் தலை நிமிர்ந்து நிற்க வேண்டும்" என்ற சுலோகத்தைக் கூறி வந்த தமிழ்த் தலைவர்கள், தமிழரின் சனத்தொகையில் ஏறத்தாழ மூன்றிலொரு பங்கினர் தமது தலைகளை நிமிர்த்த இயலாதபடி தடுப்பதற்குத் துணைபோய் உள்ளனர். எனவே அவர்கள் பிரச்சனையைச் சந்தர்ப்பவாத நோக்கில் அணுகினார்கள் என்பதுடன் சாதி அமைப்பை இல்லாதொழிக்க வேண்டும் என்று மனமார விரும்பவில்லை என்கிற முடிவுக்கு வருவதைத் தவிர்க்க

www.padippakam.com



இயலாது.

தாழ்த்தப்பட்ட சாதியினர் கூடத் தம்மிடையே சில சமயம் உயர்வு – தாழ்வு பாராட்டுவது நகை முரணானது. சில சாதிகள் தத் தமது சாதிகட்குரிய தனித்தனி ஸ்தாபனங்களை நிறுவித் தமது சாதிக்கு ஒரு பெருமிதமான வரலாறு உண்டென்று பிரகடனஞ் செய்ய முயலுவதும் நகை முரணானது.

பதவிகளையும் வாக்குகளையும் பெற வேண்டித் தாழ்த் தப்பட்ட சாதியினர் இந்த நிலைமையைப் பயன்படுத்திக் கொள்ளுவது வெட்கக் கேடானது. அவ்வாறு தான் போராட்டங்கட்குத் தலைமை தாங்கிய தலைவர்களும் பங்குபற்றிய மக்களும் புறக்கணிக்கப்படுகிற போது தமது சுண்டு விரலைத்தன்னும் அசைக்காதவர்கள் எல்லாப் பெருமையையும் நன்மைகளையும் பெறுகின்றனர்.

"உயர் சாதியினரை" ஒடுக்கும் முதலாளிமாராகவும் தாழ்த் தப்பட்ட சாதியினரை ஒடுக்கப்படும் பாட்டாளிகளாகவும் பார்க்க முடியாது. "உயர் சாதியினர்" எனப்படுவோரிடையே சொத்துடைமை எதுவும் இல்லாத பலர் உள்ளனர். அவர்கள் தமது வறுமையையும் வழியின்மை யையும் மூடிக்கட்டுவதற்காகச் சாதி பேசுகின்றனர்.

சர்வசன வாக்குரிமை, இலவசக் கல்வி, பாடசாலைகளின் தேசியமயம், தாய்மொழிக் கல்வி, மரவரிமுறை, தவறணைமுறை என்பன வற்றின் பாதிப்புப் பற்றி இந் நூல் மேலும் விரிவாக எடுத்தாண்டிருப்பின் மேலும் நன்றாயிருந்திருக்கும்.

நூலை வாசிப்போருக்கு மேலும் பல நிகழ்வுகளும் எடுத் தாளப்பட்டிருக்க வேண்டிய விடயங்களும் நினைவுக்கு வரலாம். அவை சாதி அமைப்பையும் அதற்கெதிரான போராட்டங்களையும் பற்றி மேலும் ஆழமான ஒரு பார்வையை வழங்குவன.

மனச்சாட்சியுள்ள ஒவ்வொரு தமிழனும் வாசிக்க வேண்டிய நூல் இது.

**பேராசிரியர் சி. தில்லைநாதன்**
**19- 03- 1990 டெயிலி நியூஸ் ஆங்கில நாளிதழில் எழுதிய மதிப்புரையின் தமிழ் வடிவம்.**

# 1

## அறிமுகம்

இலங்கையில் தேசிய இனப்பிரச்சினை காரணமாக போரும் போராட்டச் சூழலும் நீடித்து வருகின்றன. இன முரண்பாடும் பேரினவாத ஒடுக்குமுறையும் அதன் அடிப்படையாகும். நமது சமூக அமைப்பில் காணப்படும் வர்க்க, இன, சாதிய, பால் முரண்பாடுகள் நான்கும் அவை சார்ந்த ஒடுக்கு முறைகளும் நிலைத்து நீடித்தவைகளாக இருந்து வருகின்றன. இவற்றில் வர்க்க முரண்பாடும் அதன் ஒடுக்கு முறையுமே அடிப்படையானதாகும். ஆனால் அதனையும் மேவிய நிலை யில் இன முரண்பாடும் பேரினவாத ஒடுக்கு முறையும் இன்று பிரதான இடத்தில் இருந்து வருகின்றது. எனவே தேசிய இனப்பிரச்சினைக்குப் போராட்டத்தின் ஊடாகவும் சமாதானப் பேச்சுவா ர்த்தை மூலமாகவும் தீர்வு காணப்படுவது தவிர்க்கவியலாத் தேவையாகிறது.

இச் சூழலில் தமிழ்த் தேசிய இனம் தம்மீது திணிக்கப்பட் டுள்ள பேரினவாத ஒடுக்கு முறையை எதிர்த்து நிற்பதற்கு ஒவ்வொரு தளத்திலும் ஐக்கியப்படுவதும் வெகுஜன அரசியல் போராட்டப் பாதையில் பயணிப்பதும் எவ்வகையிலும் நிராகரிக்கப்பட முடியாத ஒன்றாகும். அதே வேளை சமூகத்தில் நிலவி வரும் ஏனைய முரண்பாடுகளையும் அவை சார்ந்த ஒடுக்கு முறைகளையும் உரியவாறு அடையாளம் காண்பதும் அவற்றின் பிடியினின்றும் பாதிப்புகளிலிருந்தும் மக்களை விடுவிப்பது அவ சியமானதாகும்.

அந்த வகையில் சாதிய முரண்பாடு தமிழர்கள் மத்தியில் இருந்து வருவதை மறைப்பதோ அல்லது மழுப்புவதோ தவறான தொன் றாகும். சாதியம் செத்துவிட்டது என்றும் அதைப்பற்றிப் பேசுவது இன் றைய போராட்டச் சூழலுக்கு பாதகமானது என்றும் கருத்துரைப் போர் இருக்கிறார்கள். ஆனால் சாதியமும் தீண்டாமையும் முற்று முழுதாகத் தமிழர் சமூகப் பரப்பிலிருந்து ஒழிந்து விடவில்லை. நாற்பது வருடங்களுக்கு

www.padippakam.com



முன்பு சாதிய முரண்பாடும் ஒடுக்குமுறையும் தமிழர் சமூகத்திலே பிரதான முரண்பாடாகக் கூர்மையடைந்து காணப்பட்டது. அதன் அம்சங்களை வர்க்கப் போராட்ட நிலை ஊடாக ஆராய்ந்து தெளிவான கொள்கை போராட்டத் தந்திரோபாயங்கள் மூலமாக சாதிய தீண்டாமைக்கு எதிரான பலமுனைப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. மாக்சிச லெனினிச வாதிகளால் அமைப்பு வழிகளில் அன்று முன்னெடுக்கப்பட்ட வரலாற்று முக்கியத்துவம் மிக்க வெகுஜனப் போராட்டங்களால் சாதிய முரண்பாட்டின் ஒடுக்குமுறையும் அதன் தீண்டாமைப் பாகுபாட்டு நடை முறைகளும் முறியடிக்கப்பட்டன. அதன் மூலம் தாழ்த்தப்பட்ட மக்களது மறுக்கப்பட்ட அடிப்படை ஜனநாயக உரிமைகளும் சமத்துவ வாழ்வும் நிலை நிறுத்தப்பட்டன. சமூகத்தளங்களில் தாழ்த்தப்பட்ட மக்கள் இரண் டாம் தரமற்ற நிலைக்கு வரும் புதிய நிலை உருவாகியது. இருப்பினும் சாதியம் முற்றுமுழுதாக அழிந்துவிடவில்லை. சமகாலச் சமூகச் சூழலிலும் சாதியம் கருத்தியல் தளத்திலும் சிந்தனை நடைமுறை வழிகளிலும் இருந்து வரவே செய்கிறது.

சாதியம் அற்றுப் போய் விட்டது. அதன் செல்வாக்கும் பாதிப்பும் சமூக வாழ்வில் இல்லை. ஆதலினால் அதைப் பற்றிப் பேசவோ எழுதவோ தேவை இல்லை எனக் கூறுவோர் இருக்கின்றார்கள். அத்தகையவர்களை மூன்று வகையினராகக் காணமுடியும். சாதியக் கருத்தியலையும் அதன் சிந்தனை நடைமுறைகளையும் கையிழக்க விரும் பாத பழைமைவாதிகள் முதல் வகையினர். சாதியம் பற்றிப் பேசினால் தமிழர் ஐக்கியம் குலைந்து விடும் என்றும் தமிழர் விடுதலை கிடைத்த பின் அதனைச் சரிப்படுத்திக் கொள்ளலாம், இப்பொழுது அதைப் பற்றிப் பேசக்கூடாது என்று கூறுவோர் இரண்டாவது வகையினர். தாழ்த் தப்பட்ட மக்கள் மத்தியிலிருந்து கல்வி பொருளாதார பண்பாட்டு நிலை களின் ஊடாக மேனிலையாக்கம் பெற்றுக் கொண்டவர்கள் மூன்றாவது வகையினராக உள்ளனர்.

இத்தகையோரின் விருப்பு வெறுப்புக்கு அப்பால் சாதிய முரண்பாடும் அதன் சமூக ஏற்றத்தாழ்வுப் பாதிப்புகளும் சமகாலச் சமூகப் பரப்பில் இருந்து வரவே செய்கிறன. ஆயினும் சாதிய முரண்பாட்டை இன்றைய சூழலில் பிரதானப்படுத்தி பேரினவாத ஒடுக்குமுறையுடன் சமப்படுத்திக் கொள்வது எவ்வகையிலும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒன் றல்ல என்பதும் புரிந்து கொள்ளப்படல் வேண்டும். அதேவேளை சாதியக் கருத்தியலை எதிர்த்து அம்பலப்படுத்துவதும் அதன் ஏற்றத்தாழ்வு பாகு பாடு என்பனவற்றுக்கு எதிராக மக்கள் மத்தியில் செயற்படுவதும் நிராகரிக்க முடியாத ஒன்றாகும். தமிழர் சமூகத்தினுள் நிலவி வரும் இவ்

www.padippakam.com



அக முரண்பாட்டுப் பிரச்சினைக்குத் தீர்வு காண ஒவ்வொரு தளத்திலும் செயலாற்ற வேண்டும். இத்தகைய முன் முயற்சிகள் தமிழ் மக்களின் ஐக்கியத்தை மென்மேலும் வளர்க்கவும் சுய நிர்ணய உரிமை அடிப்படையிலான சுயாட்சிக் கோரிக்கையும் போராட்டமும் வலுப்பெற உதவக் கூடியனவாகும்.

பதினெட்டு ஆண்டுகளுக்கு முன் வெளிவந்த இந் நூல் இப்போது இரண்டாவது பதிப்பாக வெளிவருவது மேற்கூறிய சமூகத் தேவைக்கான ஒரு பங்களிப்பாகிறது. இலங்கையில் சாதியம் எவ்வாறு இருந்து வந்தது என்பதைப் பற்றிய நூல்கள் மிகக் குறைவானவையாகும். அதுவும் தமிழில் வெளிவந்தவை ஒன்று இரண்டாகவே இருக்க முடியும். சிற்சில ஆய்வுகள், கட்டுரைகள் நூல்களாக வந்திருப்பினும் அவை தாழ்த்தப்பட்ட மக்களின் ஆண்டாண்டுகால அடிமைத்தனம் நிறைந்த வாழ்வையும் அவற்றுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வந்த போராட்டங்களையும் முழுமையாக எடுத்துக் கூறும் வகையில் அமைந்திருக்கவில்லை. இதனைக் கவனத்தில் கொண்டே இந் நூலுக்கான முன் முயற்சி முன்பு மேற்கொள்ளப்பட்டது.

1989ம் ஆண்டில் வெளிவந்த இந்நூல் அன்று பலரது கவனத்தையும் ஈர்த்துக் கொண்டது. இலங்கையில் சாதியம் எவ்வாறு இருந்து வந்தது என்பதையும் தமிழர் சமூகத்தில் அதன் தாக்கம் எத்தகையது என்பதையும் ஒருவர் அறிந்து கொள்ள இந் நூல் ஒரு முக்கிய பங்களிப்பை வழங்கியது. அந்த வகையில் இன்றைய சூழலில் இந் நூலின் அவசியத்தையும் குறிப்பாகப் புதிய தலைமுறையினரைச் சென்றடைய வேண்டியதன் தேவை கருதியும் இவ் இரண்டாவது பதிப்பு வெளி வருவது வற்புறுத்தப்பட்டது. உள்நாட்டிலும் புலம் பெயர்ந்த நாடுகளிலும் தமிழகத்திலும் தோழர்கள் நண்பர்கள் சமூக அக்கறையாளர்கள் காட்டிய ஆர்வமும் ஒத்துழைப்புமே இப் பதிப்பின் வரவாகும்.

முதலாவது பதிப்பிற்கு கிடைத்த வரவேற்புடன் சாதகபாதக கருத்துக்களும் ஆக்க பூர்வமான விமர்சனங்களும் கிடைத்தன. அவற்றையெல்லாம் உள்வாங்கி உரிய கவனம் செலுத்தியே இப்பதிப்பு திருத் தங்களுடனும் இரண்டு அத்தியாங்களின் விரிவுடனும் வெளிவருகின்றது. தமிழர் சமூகத்தினுடைய சமகால வாழ்வையும் எதிர்கால இருப்பையும் அக்கறையுடன் நோக்கி நிற்கும் எவரும் நிச்சயம் இந் நூலைப் படிக்க வேண்டும். அதன் மூலம் நமது சமூக நோக்கு விரிவடையவும் சமூக சார்பு நிலை வளர்ச்சி காணவும் முடியும்.

படிப்பகம்

# 2

## சாதியமைப்பின் தோற்றமும் வளர்ச்சியும் அதன் இருப்பும்

வர்க்கங்களிடையேயான போராட்டங்களுடாக வர்க்க உறவுகளில் மாற்றங்கள் ஏற்படுவதாயும் புதிய வர்க்கங்களின் தோற்றம், வளர்ச்சி, அழிவு என்பதாயும் உலகின் எழுதப்பட்ட வரலாறு இயங்கி வருகின்றது. இந்த வகையில் ஆண்டான்–அடிமை, நிலவுடைமையாளன்–பண்ணையடிமை, முதலாளி– தொழிலாளி எனப் பலவேறு வர்க்கங்களை உலகு கண்டுள்ளது.

வர்க்கங்களிடையேயான இந்தப் போராட்ட வரலாற்று அனுபவங்களின் தொடர்ச்சியாக வர்க்கங்களை ஒழித்துக்கட்டிச் சமத்துவ சமூகம் படைக்கும் போராட்டத்தை உலகு இருபதாம் நூற்றாண்டில் வெற்றிகரமாக நடாத்திக்காட்டியிருந்தது. இதன் தாக்குறவில் சாதியச் சமூகம் ஒன்று சாதிகளிடையே போராட்டம் நிலவிவந்த வரலாற்றுச் செல்நெறியில் சாதிகளை ஒழித்துக் கட்டும் போர்ப்பரணியைத் தொடக்கி வைத்தது.

பழைய வர்க்கங்கள் ஒழிந்து புதியவர்க்கங்கள் தோன்றிவளர்தல் போலன்றிப் பலநூறு வருடங்கள் ஒரே வகைச் சாதிகள் நீடித்துத் தொடர்வதாகிய சாதியச் சமூகத்தைப் புரிந்துகொள்வதற்கும் சாதியொழிப்பைச் சாத்தியப்படுத்த ஏற்ற மார்க்கத்தைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளவும் வழிகாட்டுவதாக அந்தப் போர்ப்பரணி அமைந்தது.

இலங்கையின் யாழ்ப்பாணத்தில் 1966 ஒக்டோபர் 21ன் எழுச்சி ''சாதி அமைப்புத் த்கரட்டும், சமத்துவ நீதி ஓங்கட்டும்'' என விண்ணைச் சாடும் முழக்கத்துடன் அந்தப் போர்ப்பரணியைத் தொடக்கி

www.padippakam.com



வைத்தது.

சாதியம் என்பது அடிப்படையில் மக்களைப் பிளவுபடுத்தி ஒடுக்கும் செயற்பாடுகளுக்கான ஒரு கருத்தியல். அதேவேளை பிளவுண்ட குழுக்கள் வேற்றுமைக் கூறுகளைப் பேணியபடி ஒரே சமூக அமைப்பாகச் சேர்ந்து இயங்க வகைசெய்வதும் அந்தக் கருத்தியலுக்கான அடிப்படைப் பண்பாகும்.

பிளவுபடுத்தலை முறியடித்து அனைத்து மக்களையும் ஒன்றுபடுத்துவது சாதியத்தைத் தகர்ப்பதன் முன்நிபந்தனையும் முடிவான இலட்சியமும் ஆகும். சாதியுணர்வுகளை விட்டொழித்துப் புத்துலகம் படைக்கும் உணர்வுடன் அனைத்துச் சாதியினரும் ஒன்றுபட்டுப் போராடுவது சாத்தியமானதா? சாதியத்தைப் பேணும் சாதிக்கெதிராகப் போராட வேண்டும் என்கிற வகையில் ஆதிக்கச் சாதி ஏதாயினும் எதிரி நிலைக்குரியதாக இருக்குமல்லவா? அத்தகைய ஆதிக்கச் சாதிக்கு எதிராகத் தானே ஏனைய சாதிகளை ஐக்கியப்படுத்திப் போராட முடியும்?

வர்க்க ஒழிப்பில் ஆளும் அதிகார வர்க்கத்துக்கு எதிராக ஏனைய சக்திகளை ஐக்கியப்படுத்துவது போன்றதல்ல சாதியத் தகர்ப்பு. அதிகார வர்க்கமாகப் பல்வேறு சாதிகளிலிருந்தும் பிரதிநிதிகள் இருப்பதைப்போல ஒடுக்குமுறைக்குள்ளானவர்களான அனைத்துச் சாதிகளிலிருந்தும் மக்கள் உள்ளடக்கப்பட்டுள்ளார்கள். அதிகராத்துவச் சமூக அமைப்பைப் பேணும் சாதியத்தைத் தகர்க்கும் பொருட்டு வர்க்க அடிப்படையிலான பலவேறு அரசியல் காரணிகளால் ஒடுக்கு முறைக்கு ஆட்படுகிறவர்களான அனைத்துச் சாதிகளையும் சேர்ந்த மக்கள் ஒன்றிணைந்து போராட வேண்டியதாக உள்ளது.

ஏற்றத்தாழ்வான சமூக அமைப்பில் சுரண்டுவோர்க்கு உரியதாக உள்ள அதிகாரத்தைப் பேணும்பொருட்டு வடிவமைக்கப்பட்டதே சாதியம். அவ்வாறு சாதியம் தோற்றம் பெறமுன்னரே சாதிகள் தோன்றுவதற்கான அடிப்படை உருவாகிவிட்டது. நிலவிவந்த சாதிய வாழ்முறையில் வேற்றுமையில் ஒற்றுமையாக (பிளவுண்டபடியே ஒரு சமூக முறைக்குள் சேர்ந்து) இயங்கும் நிலைக்கான கருத்தியலாகச் சாதியம் தோன்றி வளர்ந்தது.

சாதியத்தை வடிவமைத்ததில் பிராமணச் சாதிக்குள்ள முதன்மைப் பங்கு உலகறிந்தது. சாதியம் தோன்றுவதற்குப் பல நூறு வருடங்களுக்கு முன்னரே பிராமணர்கள் இருந்துள்ளார்கள். சாதியம்

www.padippakam.com



வடிவம் பெறுமுன்னர் சமத்துவம் நிலவிய இனக்குழுக்களாக இருந்த ஆரியரிடையே வழிபாடு இயற்ற விரும்பிய எவரும் பிராமணராக முடிந்தது. அவர்களது பிரவேசம் கி.மு. 1500 அளவில் தொடங்கியது. அதற்கும் முன்னதாக (கி. மு 3000 அளவிலிருந்து) எழுச்சியுடனிருந்த சிந்துவெளி நாகரிகம் அப்போது அழிவு நிலயில் இருந்தது.

காலவோட்டத்தில் ஆரியர்களிடம் ஏற்பட்ட புதிய வர்க்க எழுச்சியில் சுதேசிப் பூசகர்களுடன் இணைந்து உருவான புதிய பிராம ணர்கள் ஆரியர்களினது வர்ணக் கோட்பாட்டினதும் இந்தியாவிலிருந்த வர்க்க வேறுபாட்டினதும் கலப்பிலான சாதியத்தைக் கட்டமைத்தனர். ஆரியர்களது நெகிழ்வான வர்ணபேதம் புதியசூழலில் கலப்படைந்து இறுக்கமான சாதியத்துக்கு ஏற்ற வர்ணாசிரம தர்மமாக மடைமாற்றப் பட்டது. இது வர்க்க ஏற்றத் தாழ்வுக்குரிய ஒரு கருத்தியலாக அமைந்து கொண்டது.

வர்க்க சமூக மாற்றப்போக்கில் பல ஆயிரம் சாதிகள் சமூகத் தில் நிலவுவதைக் காண முடிந்தது. நிலப்பிரபுத்துவ அமைப்பை வடிவ மைக்கும் கருத்தியலைக் கட்டமைத்ததில் கி. பி 3ஆம் நூற்றாண்டில் தொகுத்து வடிவமைக்கப்பட்ட மனு தர்ம சாத்திரத்திற்குப் பெரும்பங்குண்டு. வர்ணங்கள் தமக்குள் கலப்புற்றதனாலேயே பல ஆயிரம் சாதிகள் தோன்ற ஏதுவாயிற்று என்று மனு ஸ்மிருதி கூறியது. வர்ண தர்மத்தை மீறிக் கலந்து பிறந்த சாதிகள் இழிவானவை எனவும் மனு வலியுறுத்தியிருந்தது.

வர்ணக் கலப்புகளைத் தடுத்து வர்ண தர்மத்தைப் பேணவே பகவத் கீதை இறைவனால் வழங்கப்பட்டதாகக் கூறப்பட்டது. பகவத்கீதை கி.பி. 3-4ஆம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்டுப் பின்னர் மகாபாரத இதிகாசத்துடன் இணைக்கப்பட்டது. நிலப்பிரபுத்துவத்துக்கு ஏற்புடைய தாக வர்ணாசிரமத்தை தெய்வீக வழங்கலாகக் காட்டும் வலுவான பங்க ளிப்பாக கீதை அமைந்திருந்தது. நிலப்பிரபுத்துவத்துக்கு உடன்பாடான கடவுள் கோட்பாட்டையும் அதற்கமைவான பக்திக் கோட்பாட்டையும் வடிவமைத்திருந்ததும் கீதையே. மனு ஸ்மிருதி, பகவத்கீதை ஆகியன பண்பாட்டுத்தளத்தில் ஏற்படுத்திய வலுவான மாற்றங்களுடன் கி.பி. 4 ஆம் நூற்றாண்டிலிருந்து வட இந்தியாவில் நிலப்பிரபுத்துவம் வலுப்படத் தொடங்கியது. நிலப்பிரபுத்துவம் உறுதிப்பட்ட கி.பி 8 ஆம் நூற்றாண்டில் சங்கரர் இவற்றின் ஒழுங்கமைப்பை வடிவப்படுத்தி இந்து சமயத்தைக்

www.padippakam.com



கட்டமைத்தார்.

பகவத்கீதை வடிவமைவதற்கு முந்திய பிராமண மதத்திலிருந்து கி.பி. 4ஆம் நூற்றாண்டின் பின்னர் உருவாகி வளர்ந்த இந்து மதம் பல அம்சங்களில் வேறுபட்டது. முன்னர் பிராமணர்களின் கடவுளரும் ஏனைய சாதிகளின் குலக்கடவுளர்களும் ஒட்டுறவுகொள்ள அவசியமற்றவை. சர்வவல்லமை படைத்த ஒரு கடவுளுக்கு உட்பட்டனவாக எல்லாத் தெய்வங்களும் கட்டுப்படும் முறையில் இந்திய நிலப்பிரபுத்துவக் கட்டமைப்புக்கு உடன்பாடாகப் பரம்பொருட் கோட்பாடு கி.பி. 4 ஆம் நூற்றாண்டிலிருந்து தோன்றி வளர்வதாயிற்று.

அதற்கான முழுமுதற் பரம்பொருட் கோட்பாடாக சங்கரரின் அத்வைதம் உயர் வடிவம் பெற்றது. பலவேறு குலக்கடவுளர்களை உள்வாங்கிய ஆறு கடவுளரை ஏற்றுக்கொண்ட ஆறு மதங்களைச் சனாதன நெறிக்குரியனவாக வடிவப்படுத்தி அக் கடவுளர்களைச் சங்கரர் தனது மடத்தில் எழுந்தருளவும் செய்தார். அவையெல்லாம் மாயையுடன் இயைந்த பிரபஞ்சத்துத் தேவர்களே. அப்பழுக்கற்ற உள்பொருள் பிரம்மம் மட்டுமே எனும் சங்கரரின் அத்வைதத்தைப் போற்றிய ஸ்மார்த்த பிராமணர்கள். பிராமண மதங்கள் கடந்த ஒரு பொதுவான இந்து மதத்தை இவ்வகையில் அங்கீகரித்தனர். ஆறு சமயங்களில் நீடித்து நிலைத்த சைவம், வைணவம், சாக்தம் ஆகியன இந்தப் பரம் பொருள் கோட்பாட்டின் படி (முறையே) சிவன், விஷ்ணு, சக்தி ஆகிய கடவுளரை பரம்பொருளாகக் கொண்டு ஏனைய பிரிவினரது கடவுளரையும் சாதிகளின் கடவுளரான நாட்டார் தெய்வங்களையும் அனுசரித்துக் கொண்டனர். அந்தப் பெருஞ் சமயங்களின் பிராமணர்கள் தத்தமது பிராமண மதத்தை இவ்வகையில் இந்துமத வடிவப்படுத்திப் பரிணமிக்க வகைசெய்தனர்.

இவ்வாறு நிலப்பிரபுத்துவம் உறுதியடைந்த வேளை மனு தர்மம் பகவத்கீதை. சங்கர அத்வைதம் ஆகியன பிராமணர்க்கான ஆன்மீகத் தலைமையை வலுவடையச் செய்ததோடு. சாதிகள் ஒவ்வொன்றும் தத்தமது தொழில்களை மாறுபாடின்றிச் செய்தொழுகும் வாழ்நெறிக்குத் தெய்வ அங்கீகாரத்தை ஏற்படுத்திக் கொடுத்தன. அவ் வர்ணாசிரம நெறியைச் சமூகம் பிறழ்வின்றித் தொடர்வதற்கான கண்காணிப்பை அரசர்க்கான பணியாக்கி. அதற்கு ஏதுவாகக் கடவுளரின் மனித உருவாக அரசர்கள் விளங்குவர் என்ற கருத்தியலை பிராமண-

www.padippakam.com



அரசகுல கூட்டணி ஏற்படுத்தியது.

வர்ணங்கள் தமக்குள் கலந்து தூய்மை கெட்டு உருப் பெற்றவையே ஆயிரக்கணக்கான சாதிகள் என மனு ஸ்மிருதியில் சொல்ல ஏதுவாக முன்னர், இனக்குழு கடந்த மண உறவுகள் ஆங்காங்கே இடம்பெற்றுள்ளன. இனக்குழுக்களிடையே அகமணத்திற்கும் மேலாகப் புறமணமும் அங்கீகரிக்கப்படுவது இயல்பாயிருந்தது.

மனு ஸ்மிருதிஇ பகவத்கீதை, சங்கர அத்வைதம் ஆகியன அகமணத்தை இறுக்கமான கண்காணிப்புக்குட்படுத்தும் ஆன்மீக வழி காட்டலை கொண்ட நிலப்பிரபுத்துவ அமைப்புக்கு வசதி செய்தன. தெய்வீக அங்கீகாரம் பெற்ற அரசு வேண்டிய போது வன்முறையினூடாகச் சாதிக்கலப்பு ஏற்படாத கண்காணிப்பை மேற்கொண்டது. வழிவழி வரும் வம்சாவழித் தொழிற்படையொன்று தனது நுட்பத்திறன் மிக்க உழைப்பாற்றலை நூற்றாண்டுகளாக வளர்த்தபடி சாதியத்தின் பேரால் இவ்வகையில் நிலத்துடன் இறுகப் பிணைக்கப்பட்டது. பல்வேறு திணை களில் அந்தந்த இடத்துக்கு ஏதுவான தொழிலை மேற்கொண்டிருந்த இனக்குழுக்கள் சாதிகளாக்கப்பட்டு, அகமணப்படி அதே தொழிலை விடாது தொடர்ந்து பேணித் தனது வம்சத்தவரிடம் கையளித்து வளர்த்து வரவேண்டியதாயிற்று. மேற்குலகில் இனக்குழுக்கள் தொழில் சார்ந்த வர்க்கங்களாகப் பிளவுபட்டன. வர்க்கங்களிடையேயான போராட்ட வர லாறு அங்கே தொடர்ந்தது. இங்கே முன்னேறிய திணை அரச-ஆன்மிக ஆயுதங்களுடன் ஏனைய திணைகளின் இனக்குழுக்களைச் சாதிகளாக மாற்றிச் சுரண்டலுக்கான சமூக மாற்ற வளர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்தத் திணை மேலாண்மைச் சுரண்டல் அமைப்பும் வர்க்கச் சமூக அமைப்பும் வளர்ச்சி மாற்றங்களைப் பெற்றே வந்திருக்கின்றன.

பிராமணர், அரசுக்கான சாதி ஆகியன மட்டுமன்றி ஒவ்வொரு பெரு நிலப்பரப்பிலும் நிலப்பிரபுத்துவச் சாதிகளும் வேறாக அதிகார நிலைக்கு ரியனவாய் இருந்துள்ளன. இவ்வாறு அனைத்துப் பிரதேசங்களிலும் பிராமணர்-அரசுச் சாதிகள்-நிலப்பிரபுத்துவச் சாதிகள் என்பன சாதியத்தின் வாய்ப்பைப் பயன்படுத்தி கைவினைச் சாதிகளையும் பண்ணையடிமைச் சாதிகளையும் ஒடுக்கிவந்தனர்.

ஆங்கிலேயராட்சிக்கு முழுமையான முதலாளிய மாற்றம் வேண்டியிருக்கவில்லை. அவர்களது சுரண்டல் வெவ்வேறு தளங்களில் (உழைப்பு. மூலப் பொருட்கள். அபகரிப்பு. வரிவசூல்) மேற்கொள்ளும்

www.padippakam.com



பொருட்டு அரை குறையான நிலப்பிரபுத்துவத் தகர்ப்பை நிகழ்த்தியது. அதேவேளை மிகுந்த நுட்பத்திறனுடன் சாதியக் கட்டமைப்பைத் தமக்கு வசதியான முறையில் கையாளவும் செய்தனர். அரசுடன் வேகமாய் ஒட்டுவதே வாழ்க்கையாகக் கொண்ட நகர் சார்ந்த மேட்டுக்குடிப் பிராமணர்கள் கொலனிய எசமானர்களுக்கு நெருக்கமாகி ஆங்கிலம் கற்று அரசுப்பணிகளை வேகமாக ஆக்கிரமித்துக் கொண்டனர். தாமதமாக ஆங்கிலக் கல்விக்கு வந்த ஏனைய ஆதிக்கச் சாதியினர் உயர் கல்விக்கும் நிர்வாகப் பணிகளுக்குமாகப் பிராமணர்களுடன் மோத வேண்டியதாய் ஆயிற்று. நிலப்பிரபுத்துவ அமைப்பில் மக்கள் விரோத நிலையில் பிராமணருடன் கூட்டுச் சேர்ந்திருந்த ஆதிக்கச் சாதியினரின் மேல்தட்டு வர்க்கத்தினர் நவீன சமூகத்தில் இவ்வாறாகப் பிராமணருக்கு எதிராகப்போராட்டும் வரலாறு இருபதாம் நூற்றாண்டில் உருவானது.

ஏற்றத்தாழ்வு மிக்க சமூக அமைப்பைத் தகர்க்கத் தடையாகச் சாதியம் அமைவதை அவதானிக்க வேண்டும். நிலப்பிரபுத்துவ அமைப்பில் மேண் நிலையில் உள்ள சாதியினரில் அனைத்து மக்களிடமும் நிலங்கள் இருந்ததில்லை. சொத்து எதுவுமின்றிக் கூலி உழைப்பாளாராக உழன்றவர்கள் பலருண்டு. ஆயினும், அவர்கள் பண்ணையடிமைகளுடன் ஐக்கியப்பட்டுப் போராடியதாக வரலாறு இல்லை. மறுபுறம் தீண்டாமைக் கொடுமைக்கு உட்பட்டிருந்த ஒடுக்கப்பட்ட சாதியினரில் ஒரு சிலர் படைத்தளபதிகளாக இருந்தமைக்கான சான்றுகள் இருந்தாலும் அத்தகையவர்கள் சாதிய இழிவிலிருந்து பூரணமாக விலகியிருந்திருக்க முடியாது.

முதலாளித்துவம் இன்னும் அதிகமாய் சாதிகளுக்குள் வர்க்கப் பிளவுகளைச் சாத்தியமாக்கியுள்ளது. அதியுச்சத்தில் தம்மை நிலைநிறுத்திய பிராமணரில் பாட்டாளிகளுமுண்டு, தலித் மக்களில் பெரு முதலாளிகளும் உண்டு. ஆயினும் இன்றும் ஆதிக்கச் சமூக இருப்புக்கான வாய்ப்புகளை பிராமணர்கள் மிக அதிகமாகவே பெற்றிருக்க, அடிநிலை உழைப்பாளர்களில் 50 வீதத்தினராகத் தலித் மக்களே உள்ளனர் எனும் யதார்த்தம் உணரப்படுதல் அவசியமானது. சாதிய உணர்வு வர்க்கரீதியாக ஒன்றுபட்டுப் போராடுவதற்குத் தடையாக முன்னிறுத்தப்பட்டு வருவதைக் காண்கிறோம். வர்க்கப் பிளவுக்கான ஏற்றத்தாழ்வு திணை ரீதியான ஒடுக்கலாக அமைந்தமையே சாதியத்துக்குக் காரணியாயிற்று என்ற வகையில் வர்க்க பேதம் ஒழிக்கப்பட்டால் மட்டுமே இறுதி நிலையில்

படிப்பகம்

www.padippakam.com



சாதிகள் ஒழிக்கப்படும் எனும் யதார்த்தத்தை உணர முடியாமல் பலவகைச் சாதி உணர்வுகள் தலைவிரித்தாடுகின்றன.

ஆரிய–சுதேசிக் கலப்புடன் பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என நால்வர்ணங்கள் வடக்கில் இனங்காணப்பட்டது போலத் தென்னிந்தியாவில் இருக்கவில்லை. அக் காரணத்தால் அரசர்களாக நீண்டகாலம் இருந்த வேளாளர், நாயக்கர் போன்றோரும் தமது விவசாயத்தொடர்பு காரணமாகச் சூத்திரர்களாகவே அடையாளம் பெற்றனர். அது பற்றி அவர்கள் அலட்டிக்கொண்டதில்லை. அது மானப் பிரச்சனையாகக் கருதப்பட்டதுமில்லை. பத்தொன்பதாம் நூற்றாண்டில் உயர் நிலப்பிரபுத்துவ வேளாளரைச் சற்சூத்திரர் என வரையறுப்பது நாவலருக்குப் போதுமானதாயிருந்தது. இருபதாம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் வேளாளர்களை வைசியராக அடையாளப்படுத்துவது ஆரம்பமானது. யுத்தச் சாதியினர் தம்மைச் சத்திரியர் என அடையாளப்படுத்தும் முயற்சி பின்னர் தொடர்ந்தது. அவ்வாறே இரண்டாயிரம் ஆண்டுகளாக வணிகத் தொழில் செய்து வரும் செட்டிமார் வைசியர் எனக் கொள்ளப்பட்டனர். பிராமணர் எல்லோருமே வடஇந்தியாவிலிருந்து வந்தவர்களுமல்லர்.

இன, மத, தேசிய, சாதிய, வர்க்க, பாலின பேதங்களுடன் ஒருவருக்கு எதிராக மற்றவர் மோதுவதாக உள்ள இன்றைய மனிதர்கள் அனைவருமே ஒருதாய்வழி உருவாகி உலகு முழுவதும் பரவலடைந்தவர்களே. காலந்தோறும் இடப்பெயர்வுகளும், புதிய பகுதிகளைச் சென்றடைவதும் இடம்பெற்றே வந்துள்ளன. பற்றாக்குறை நிலவும் சூழல்களில் வளப்பங்கீட்டுக்காக மோதியபோதிலும் வாய்ப்பான நிலைகளில் ஒருதாய் மக்களாகக் கலந்து வாழவும் தவறியதில்லை. இந்த மக்களினம் ஹோமோ ஸப்பியன்ஸ் (அகச் சிந்தனை வாய்ந்த மனித இனம்) முப்பத்தையாயிரம் ஆண்டுகளின் முன்னர் ஆபிரிக்கக் கண்டத்து நாடொன்றில் தோற்றம் பெற்றனர் எனக் கருதப்படுகிறது.

நிறபேதம் இயற்கைச் சூழல் மாற்றத்தின் பேறு. வர்க்க, சாதிய, தேசிய, பாலின பேதங்கள் வரலாற்றின் குறித்த காலகட்டங்களில் தோன்றியவை– அவை தகர்ந்து முழு மனிதகுலமும் சமத்துவ வாழ்வை எட்டுவதற்கான பாதையை வகுப்பதில் முன்னைய சிந்தனை எதையும் விட மகத்தான பங்களிப்பை மார்க்சியம் நல்கியுள்ளது.

# 3

# வர்க்கப் பிரிவினைகளின் தோற்றமும் வளர்ச்சியும்

மானிடவியலாளர்கள் பொதுவாக மனிதகுல வளர்ச்சியை காட்டுமிராண்டி நிலை, அநாகரிக நிலை, நாகரிக நிலை என்ற மூன்று பிரதான சகாப்த வளர்ச்சிகளுக்கூடாகக் காட்டுவர். காட்டுமிராண்டி நிலையில் உஷ்ணப் பிரதேச அல்லது அரை உஷ்ணப் பிரதேசக் காடுகளில் வாழ்ந்த ஓரசைச் சீருள்ள பேச்சு அமையப்பெற்ற மனிதன், நெருப்பை அறிந்ததன் பின்னால் மாறுபட்ட சீதோஷ்ண நிலையில் வாழக்கூடியவனாகி இடம்பெயர்ந்தான். காட்டுமிராண்டி நிலையின் இறுதிக் கட்டத்தில் வில்லும் அம்பும் கண்டுபிடிக்கப்பட்டிருந்தது. நெருப்பையும் கைக்கோடரியையும் கொண்டு மரத்தைக் குடைந்து ஓடம் செய்வதைக்கற்றுக் கொண்டான்.

மட்பாண்டங்களை வனையத் தொடங்கியதிலிருந்து அநாகரிக நிலைக்கான வளர்ச்சியேற்பட்டது. இதன் பின்னாலான வளர்ச்சியில் கிழக்குக் கண்டங்களில் மிருகங்களை வீட்டு வளர்ப்புக்குப் பயன்படுத்தியது முக்கியத்துவம் பெற மேற்குக் கண்டங்களில் உணவுக்குரிய பயிர்களை நீர்ப்பாசனத்துடன் சாகுபடி செய்தல் பிரதான இடத்தைப் பெற்றது. உலோகங்களைப் பயன்படுத்தல் அநாகரிக நிலையின் இறுதிக் கட்டத்தில் ஏற்பட்டுவிடுகிறது. இரும்புக் கலப்பைக் கொழுவைப் பயன்படுத்தி நிலத் தை உழுது பண்படுத்துவது மேற்கில் அதிகளவு இடத்தைப் பெற்றது. கிரேக்க, ரோம நாகரிகங்களில் அடிமைகளின் தேவை இக்கட்டத் திலிருந்தே வலுப்பட்டது. மாவீரர்

www.padippakam.com



சகாப்தம் இதுவே.

ஏங்கெல்ஸ் "குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்" என்ற நூலில் குறிப்பிடுவதுபோல "காட்டுமிராண்டி நிலை-உபயோகத்துக்குத் தயாராயிருந்த இயற்கைப் பொருட்களை உபயோகிப்பதே மிகப்பெரும்பான்மையாயிருந்த ஒரு நிலை: மனிதர் உற்பத்திசெய்த பொருட்கள், பிரதானமாக இப்படி உபயோகிப்பதற்கு வசதி செய்து கொடுக்க அமைந்த கருவிகளேயாகும். அநாகரிக நிலை-கால் நடை வளர்ப்பு, நிலச்சாகுபடி பற்றிய அறிவு பெறப்பட்ட நிலை இது; மனித நடவடிக்கைகளின் மூலமாக இயற்கையின் உற்பத்தித் திறனை அதிகரிக்கச் செய்யும் வழிமுறைகள் கற்றுக்கொள்ளப்பட்ட நிலை இது. நாகரிக நிலை-இயற்கைப் பொருட்களை மேலும் பண்படுத்திக் கொள்வது பற்றியும் கம்மியத் தொழிலைப் பற்றியும்-கலையைப் பற்றியும் அறிவு பெறப்பட்ட நிலை இது".

இத்தகைய வளர்ச்சிக் கட்டங்களில் உற்பத்தித்திறன் விருத்தியடையாத நிலைவரை மனிதர் சமத்துவத்துடன் வாழ்ந்துவர முடிந்தது. மனித சக்தியைப் பயன்படுத்தி இரும்புக் கொழுவை பொருத்திய கலப்பையினால் உழுது பயிரிட்டு வாழ வழியேற்பட்ட பின்னர். போர்களில் தோற்கடிக்கப்பட்டவர்கள் பிடித்து இழுத்துவரப்பட்டு அடிமைகளாக்கப் பட்டனர். கிரேக்க, ரோம் வரலாறு இதையே காட்டும். கிழக்கு கண்டத்தின் வீட்டுவிலங்கு வளர்ப்புடனான வளர்ச்சி சிறிது வேறுபட்ட போக்கினைக் கொண்டிருப்பதை- குறிப்பாக பாரிய அளவிலே உழுது பயிரிடலும் நீர்ப்பாசனமும் விருத்திய டையும் நிலை பின்னால் ஏற்படுவதை-அவதானிக்க முடிகிறது.

இலக்கிய ஆதாரங்களைக் கொண்டும், புதைபொருளாய்வுகளாலும் கல்வெட்டுக்களைக் கொண்டும் தமிழக வரலாறு வரையறுக்கப்பட்டுள்ளது. தமிழகத்தின் ஏடறிந்த வரலாற்றின் தொடக்க காலமான சங்க காலம், எமது முதலாவது பொற்காலமாக கூறப்படுவதுண்டு. எமது நாகரிக வளர்ச்சியில் அது முனைப்பான காலம் என்பது மறுத்தற்கியலாத உண்மையேயாகும். சங்ககால இலக்கியத்தை கிரேக்க வீரயுக இலக்கியத்துடன் ஒப்பியல் ரீதியாக பேராசிரியர் க. கைலாசபதி ஆராய்ந்துள்ளார். அக்காலத்தில் பகுத்துண்டு, சமத்துவத்துடன் வாழ்ந்த பல குலங்கள் இருந்ததைக் காணலாம். அதேவேளை, வளர்ச்சியடைந்து ஏற்றத்தாழ்வுகள் ஏற்பட்டு அரசுகள் தோன்றி, அக்கம் பக்கத்துக் குலங்

www.padippakam.com



களையெல்லாம் ஆக்கிரமித்து சேர-சோழ-பாண்டியர் வளர்ந்த போக்கையும் காணலாம். சேர-சோழ-பாண்டியரது முன்னேற்றத்துக்கு ஆற்றுப் படுக்கைகளின் (சிறிய அளவிலான) சாகுபடி முறை பயன்பட்டது. உற்பத்தித்திறன் குறைந்த. இரத்த உறவு வழிப்பட்ட குலங்களை அழித்து செல்வத்தைப் பெருக்கும் அரசுக்காக வீரத்துடன் போரிடும் சகாப்தமாகையால் அது வீரயுகமானது. வீரனே சான்றோனாகக் கருதப்பட்டான். வீரத்துக்கு இழுக்கு ஏற்பட்டபோது நாணமடைந்தான். தன்னை அவமதித்தவனைக் கொன்றொழிக்கும் முனைப்பில் வீரமரணமடையவும் தயங்கவில்லை. ஆயினும் பிரதானமாக, குலங்களிடையே மாடுகளைக் கவர்வதும்- அதை தடுத்தலும் போர்க் காரணியாயிருந்தது. அரசின் தோற்றம்-வளர்ச்சியோடு நிலங்களைக் கைப்பற்றுவதற்கான போர்களே பொதுப் படையாயின.

அவ்வாறு போரிட்டு வென்றவர்கள் வென்றெடுத்த நிலங்களுக்கு அதிபதிகள் ஆயினர். அவ்வாறு நிலங்களைப் பெற்று வளர்ந்த கிழார்கள் சமுதாயத்தின் உயர்மதிப்புக்குரியராயினர்; செல்வச் செழிப்பும்-வறுமையும் எதிரெதிராயின. தமிழகத்தில் கிராமங்கள் தோறும் நிலத்துக்கு சொந்தக்காரரான கிழார்களும் உழைப்போரும் இருந்தன்ர். இளையர், பழையர், எயினர், வில்லாளர், கொங்கர், பரதவர், எல்லி, அத்தியர். வட வர், அருவர், கருநாடர், பொதுவர், சத்திய புத்திரர், கேரள புத்திரர், சோழர் என மோதிய பல இனக் குழுக்களில், தோற்கடிக்கப்பட்டோர் தாம் வாழ்ந்த இடத்தில் தொடர்ந்தும் வாழ்ந்துகொண்டே வெற்றி பெற்றோர்க்கு திறை செலுத்தப் பணிக்கப்பட்டனர். தமது உடலுழைப்பால் கிழார்களுக்கும் அரசர்க்கும் செல்வச் செழிப்பை வழங்கிய 'இழிசினர்' மடியாவினைஞராய்க் கருமமாற்றினர்; 'உயர்ந்தோர்' 'இழிசினர்' எமது சமூக அரங்கில் தோற்றம் பெற்றனர். தமிழர் சமூகம் வர்க்கங்களாகப் பிளவுபட்டது.

செல்வச் செழிப்பு, உழைப்பிலிருந்து விடுக்கப்பட்டு- உழைப்பைச் சுரண்டி வாழ்ந்து தமக்கு ஓய்வு நேரத்தைப் பெற்ற ஒரு கூட்டத்தை உருவாக்கியது. கிழார்களுக்கும், வணிகர்களுக்கும் மறுபக்கத்தில் 'கடைசியர்' சிறுகுடிகள் எனக் கைவினைஞர்கள், ஏவலர்கள் குற்றேவலர், வினைவலர், இளையர்கள், அடியார்கள், மடியாவினைஞர்கள் காணப் படுகின்றனர். ஒரு பக்கத்தில் பெட்டைக் கோழிப் பொரியலுடன் வெண்ணெய் அரிசியை உண்டு (பெரும்பாணாற்றுப்படை 254-256) சமியாக்

www.padippakam.com



குறையில் அவதிப்படுவோரும் மறுபுறத்தில் வரகரிசியை புழுக்கிய அவரை யுடன் உண்டு (பெரும்பாணா. 192-194) பசியாற வேண்டிய கடைசியரும் வாழ்ந்தனர்.

பௌத்த- சமண வருகைக்கு முன்னரே ஆரியரின் தென்னகம் நோக்கிய வருகை ஏற்பட்டிருந்தது. "கி. பி நாலாம் நூற்றாண்டளவிலே வாழ்ந்த காத்யாயன என்ற வடமொழி இலக்கண ஆசிரியர் சேர. சோழ. பாண்டிய நாடுகளைக் குறிப்பிடுகிறார். மேலும் பெருமளவு இதே காலத்தைச் சேர்ந்த மெகஸ்தனிஸ் எனும் கிரேக்க ஆசிரியர் பாண்டி நாடு பற்றிக் குறிப்பிட்டுள்ளார். எனவே இக்காலப் பகுதியளவில் அல்லது இதற்கு முன்னரே ஆரியர் தென்னந்தம் வரை அறிந்துவிட்டனர். நந்த (கி. மு. 4ம் நூற்) மௌரிய (கி.மு. 4- 2ம் நூ. வரை) சாதவாஹன (கி.மு 3- கி. பி. 3ம் நூ. வரை) பேரரசுகள் வளர்ச்சியோடு வட இந்திய தென்னிந்திய உறவுகள் மேலுமதிகரித்தன. பிராமணியம் தமிழகத்தில் முழுமையான இணக்கத்தை ஏற்படுத்த முன்பே வடக்கே பிராமணிய த்துக்கு எதிராகப் போர் கொடி ஏந்திய பௌத்தமும் சமணமும் தமிழகத்தில் செல்வாக்குப் பெற்றுவிட்டன. பிராமணர்களின் வருகை கி. மு. 4ம் நூற் றாண்டிலிருந்து இடம்பெற்ற போதிலும், அவர்கள் தென்னிந்தியச் சமூகத்தில் வலுவான தாக்குறவை ஏற்படுத்திவிட வில்லை.

அக்காலத்தே பிராமணியத்தின் செல்வாக்கின்மை காரணமாக வருணாசிரம தர்மமும் தமிழகத்தில் மேலோங்கியிருக்கவில்லை. சங்க இலக்கியத்தில் பிணஞ்சுடும் புலையர் இழிசினர் எனக் குறிப்பிடப் படுவர். "இழிபிறப்பாளன் கருங்கை சிவப்ப" துடியை அடிப்பது பற்றி புறநானூறு (புறம் 170) குறிப்பிடும். பௌத்த சமணக் காப்பியங்கள் எழுந்த சங்கமருவிய காலத்திலும் புலையர், பறையர் என்பதற்கு பொய், களவு, இழிவு, பரத்தமை, ஊன் போன்ற பொருள்கள் கையாளப்பட்டுள்ளன. ஆயினும் வருணாசிரமக் கோட்பாட்டடிப்படையில் "சூத்திரர்களாய்" எங்கு மே குறிப்பிடப்படவில்லை. அதற்கான புறநிலை யதார்த்தமும் பின்னரே ஏற்படுகிறது. இந்து மதத்தை போலன்றிச் சாதியத்தை கொள்கை அளவிற் கூட கருதாத சமணமும் பௌத்தமும் பரவலை ஒட்டி வெவ்வேறு அளவுகளுக்குத் தமிழகத்தில் நிலைபெற்றிருந்த சாதியத்துடன் சமரசம் கண்டன. இதை பிற்காலத்து கிறிஸ்துவ இஸ்லாமிய மதங்களுடன் ஒப்பிடல்தகும்.

www.padippakam.com



## பேரரசுத் தோற்றமும் பிராமணியத்தின் எழுச்சியும் சாதியமைப்பு நிறுவன வடிவம் பெறலும்

கி.பி. ஆறாம் நூற்றாண்டைத் தொடர்ந்து தமிழகத்தில் இரும்புக் கலப்பை பயன்படுத்தப்பட்டு, நிலத்தைப் பண்படுத்தும் முறையில் செழுமைப்படுத்தல் ஏற்படத் தொடங்கியது. சங்ககால இலக்கியத்தில் தச்சரின் பணியாக தேர் செய்தலும் வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடன் என்றும் காணமுடிகிறதேயன்றிக் கலப்பை பற்றி அறிய முடியவில்லை. கலப்பையைக் கொண்டும் விருத்தியடைந்து வந்த நீர்ப்பாசன முறைகளாலும் ஏற்பட்ட உற்பத்திப் பெருக்கத்தால் நிலக்கிழார்களின் செல்வாக்கு மேலோங்க ஆரம்பித்தது.

கிராமத்தை விட்டு வெளியேறக் கூடாதென்ற இறுக்கமான கட்டுப்பாடு சோழப் பேரரசின் காலத்திலேயே எழுகிறது. அதற்கான அகக் காரணியாக விவசாய உற்பத்திப் பெருக்கம் அமைகிறது. நிலப் பண்படுத்தலின் விருத்தி காரணமாகக் கலப்பை உற்பத்தியின் தேவை அதிகரிக்க தச்சர், கொல்லரின் தேவையும் அதிகரிக்கிறது. அவர்கள் சுதந்திரமாகச் செல்ல அனுமதிக்கப்படும் பட்சத்தில் ஒரு கிராமம் பாதிக்கப்படும் நிலையேற்படலாம். 1113ம் ஆண்டு (முதலாம் குலோத்துங்கன் காலத்து) புதுவைக் கல்வெட்டு கிராமத்து பட்டர், ஆசிரியர், கணக்கர், தச்சர், கொல்லர் போன்றோர் வேறு கிராமம் செல்வதைத் தடுப்பதைக் குறிக்கிறது. மீறிச் செல்வோர் "சபைக் குற்றம் புரிந்தோர் எனவும் கிராமத்தை அழித்த துரோகிகளாய்க் கொள்ளப்படுவர்" எனவும் எச்சரிக்கப்படுகின்றனர். அவ்வாறே இக் கைவினைஞர்களுக்குப் பற்றாக்குறை நிலவுகிறபோது அரசனின் அனுமதியோடு வேறு கிராமத்திலிருந்து அவர்கள் வரவழைக்கப்பட்டதையும் அறியமுடிகிறது. தொடர்ச்சியான வளர்ச்சிப் போக்குடனேயே- பாரிய விவசாயச் சாகு படியுடன்- அனைத்து உழைப் பாளர்களுக்கும் வெளியேற்றத் தடை விதிக்கப்பட்டது.

இதனைச் சாதகமாக்கும் சூழ்நிலை ஏற்கெனவே உருவாகியிருந்தது. சைவ குரவர்கள் தம்பக்கம் வெல்லப்பட்ட அரசரூடாகக் கழுவேற்றங்கள் உட்பட தண்டனைகள் மூலம் பௌத்தமும் சமணமும் தோற்கடிக்கப்பட்டு 'மேன்மைகொள்' சைவ நீதி தமிழகமெங்கும் வியாபிதமடைந்தது. பின்னர் வைணவம் தமிழகத்தில் வேரூன்றலாயிற்று. மேன்மை பெற்ற நிலப்பிரபுத்துவ வர்க்கத்துக்குப் புதிய, இறுக்கமான சமூக

www.padippakam.com



ஒழுங்கு அவசியமாகியது. கடைஞர்கள் தம் கீழ் நிலையை இயற்கை யானதாக ஏற்றுப் புலைப்பாடிகளில் அடங்கி வாழ வகை செய்யும் நெறி வேண்டப்படுகிறது. இதைப் பிராமணர் 'அமைதியான' வழியிலேயே சாதித்துவிட முடியும். இக்காரணத்தினால் பொன்விளையும் காவிரி நாட்டில் நிலமான்ய அமைப்பு முழுநிறைவானதோடேயே பிராமணர் களுக்கு மானியங்கள் வழங்கப்பட்டு அவர்களது குடியேற்றமும் ஊக்குவிக்கப்பட்டது. பிராமணியம் தமிழகத்தில் மேன்மைபெற்றது. பேராசிரியர் க. கைலாசபதி "புலைப்பாடியும் கோபுரவாசலும்" எதிரும் புதிருமாய் வளர்ந்த வரலாற்றை ஆராய்கையில் இவ்வாறு குறிப்பிடுகிறர் "வைதிக நெறியையும் வருணா சிரம தருமத்தையும் போற்றி வளர்த்த சோழ மன்னர்கள் பிராமணர்களுக்குக் கொடுத்த நிலங்கள் ஏராளம். பிரமதாயம். சர்வமானிய அக்கிரகாரம், சதுர்வேதி மங்கலம் என்பன பிராமணரது நிலவுரிமையைக் குறிப்பன. இவற்றில் சில இறையிலியாகவும் வழங்கப்பட்டவை. பிராமணர் பெரும்பான்மையாயிருந்த ஊராட்சி மன்றங்களே சபைகள் எனப்பட்டன. சாதியைப் பொறுத்தளவில் வேளாளரே சோழர் காலத்திலும் பின்னரும் உடையாராக இருந்த போதிலும், சில இடங்களில் பிராமணரது செல்வாக்குக் குறிப்பிடத்தக்க தாயிருந்தது" (**அடியும் முடியும்**. பக். 321– 2).

இக்கட்டத்துடன் நால்வர்ணப் பகுப்பு முன்னணிக்குக் கொண்டு வரப்பட்டிருக்கும் என்பதைச் சொல்லாமலே விளங்கிக் கொண்டு விடுவோம். இந்தவகைப் பகுப்பு, கன்மக்கோட்பாட்டுடனும் இணைக்கப் பட்டு இந்துப் பண்பாட்டில் மாற்றமுடியாத சாதிக் கட்டுப்பாடா க்கப்பட்ட வளர்ச்சி, நிலமான்ய அமைப்பின் அவசிய தேவையுடனும் தொடர்புடை யதாகிறது.

மநுதர்ம சாஸ்திரம் சாதி (வருணம்) குறித்து இப்படிக் கூறும்: "உலக நியதி நிலைபேறடையும் பொருட்டு நால்வர்ணத்தாருக்கும் உரிய கடமைகளைத் தனித்தனியே இறைவன் விதித்தார்.

"அந்தணர் வேதம் ஓதியும், ஓதுவித்தும், தியாகவேள்விகள் புரிந்தும், புரிவித்தும், செல்வராயின் பிறருக்கு ஈந்தும், வறிஞராயின் செல்வந்தரிடம் ஏற்றும் வாழத்தக்கவர்:

"குடியோம்புதல், கொடைகொடுத்தல், வேள்வி செய்தல், வேத பாராயணஞ் செய்வித்தல், பொருளின்பங்களில் மனத்தை அலைபாய விடாது உறுதியாய் நிற்றல் ஆகியன மன்னர் தம் கடமையாகும்.

"வணிகர்க்குப் பசுநிரைகளைக் காத்தல். தானம் கொடுத்

www.padippakam.com



தல், கடலாரம், மலையாரம், கனிப்பொருள், விளைபொருள், கூலம் இவற்றை வியாபாரஞ் செய்தல், வட்டிக்கு விடுதல், பயிர்த்தொழில் செய்தல் ஆகியவற்றை விதித்தார்.''

''ஏவலரான மக்கள் மேற்சொன்ன மூவர்க்கும் அடங்கி அழுக்காறு இன்றிப் பணிபுரிதல் ஒன்றையே தலையாய கடமையாகக் கொள்ளக்கடவரென்று; ஈதல் முதலிய நற்கருமங்களும் அவர்களுக்கு உண்டென்றும் பணித்தார்.''

''இதில் எல்லாத் தர்மங்களும், செயல்களின் குணாகுணப் பான்மைகளும், நால்வருணத்திற்கும் பண்டுதொட்டு இருந்து வந்திருக் கிற ஒழுகலாறுகளும் கூறப்பட்டுள்ளன.''

''தர்மங்களுக்கு ஆதீாரமாக இருப்பவை வேதமும், சிமிருதிகளும், தொன்றுதொட்டு வந்த ஒழுக்க மரபும், கவலையற்ற மனநிறைவும் ஆகும்.''

''வேத சிமிருதிகளில் சொல்லப்பட்ட அற முடிபுகளைத் தருக்கவியல் சார்ந்த உலகியல் அறிவைக் கொண்டு சோதித்தறிய முயல்வது கூடாது. ஏனெனில் இவையின் றிச் சீவர்களுக்குக் கடமைகள் என்பதே இல்லை.''

''இவையிரண்டையும் தனது நூலறிவினாலும் தருக்கவாதத் தனித் திறமையினாலும் சோதித்துச் சோதித்து அவமதிப்போன் யாராயினும் அவன் நாத்திகனாகவும் சமூகத்திலிருந்து விலக்கப்பட வேண்டியவனாகவும் ஆகிறான்.''

இவ்வாறு நால்வர்ணங்கள் இருந்த போதிலும் உட்பிரிவுகள் ஏராளம். 1975இல் இந்திய அரசு ''தாழ்த்தப்பட்டோர் நலன் குறித்து விசாரிக்க நியமிக்கப்பட்ட குழுக்கள் கொடுத்துள்ள அறிக்கையின் படி (மண்டல் கமிஷன்). 3750 சாதிகள், பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மலைவாழ் மக்கள் மத்தியில் இருப்பதாகப் பட்டியல் போட்டுத் தந்துள்ளன'' (தா. பாண்டியன், 'பாரதியும் சாதிகளும்' பக் 125).

ஆரிய வர்த்தம்- ஆரியர் வெற்றிகொண்டு மேலாண்மை பெற்ற பிரதேசம் தென்னிந்தியாவை உள்ளடக்கியிருக்கவில்லை. தென்னகத்தில் பெரிதும் இணக்கமுறையிலான மாற்றமே இடம் பெற்றது- ஆரியரின் முழுமையான ஆக்கிரமிப்புச் சாத்தியப்படவில்லை. முன்னரிருந்துவந்த இனக்குழுக்கள் அடக்கப்பட்டு அவர்கள் 'சூத்திரர் களாய்' ஆனபோது சாதி இலச்சினையோடு இனக்குழுப் பெயர்களைத் தாங்கி வந்ததன் விளைவே 3750 உட்சாதிப் பிரிவுகள் என தா. பாண்டியன்

www.padippakam.com



கூறுகிறர். இது வட இந்தியாவுக்கே பொருந்தக்கூடிய கூற்று. தமிழகத்தில் சங்க இலக்கியத்தில் தொழில்வழிப் பெயர் நீடித்து வந்ததைக் காண முடிகிறது. புறநடையான சில சான்றுகளும் உண்டு. தீயர் அல்லது ஈழவர் என மலையாளத்தில் அழைக்கப்படும்போது தமிழகத்தில் சாணார் என்றும் தெலுங்கில் கவுண்டர் எனவும் யாழ்ப்பாணத்தில் நளவர் எனவும் ஒரே தொழில் பிரிவினர் அழைக்கப்படுதல் கவனித்தற்குரிய அம்சமாகும். அவ்வாறே பிணஞ்சுடுந்தொழில் பறையர், புலையர்க்கு கூறப்பட்டாலும் வெட்டியார் பிணஞ்சுட்டதாயும், முத்தரையர் இனத்தார் இதே தொழிலைச் செய்ததாயும் வேறோர் கல்வெட்டில் வலையர் செய்ததாயும் சிற்சில குறிப்புக்கள் உண்டு. வேளாளரிடையேயும் பல உட்பிரிவுகள் உண்டு. ஆயினும், பொதுவாகத் தமிழகத்தில் தச்சர், சிற்பி, காரியக்காரர், கொல்லர். தட்டார், ஈழவர், பரதவர் (மீன் பிடிப்போர்), உவச்சர் (பிடாரி, மாரியம்மன், காளியம்மன் போன்ற கிராம தெய்வங்களுக்கு பூசை செய்வோர்), வண்ணார், குயவர் (வேட்கோவர், கலம் செய்வோர், மண்வினைமாக்கள், மண்மகன் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளவர்). பறையர், புலையர் எனத் தொழில் ரீதியாகவே குறிப்பிடப்பட்டு வந்தனர். சங்க காலத்து இலக்கியங்களில் காணப்பட்ட பல (தம்முள் மோதிய) இனக்குழுக்களின் பெயர்கள் சாதிப் பெயரில் நீடித்ததைக் காணமுடியவில்லை.

இத்தகைய வேறுபட்ட அம்சங்கள் ஆரியப் பண்பாட்டுக்கு வேறுபட்ட வகையிலே தமிழகத்தில் சாதியமைப்பு-வருணாசிரமக் கோட்பாட்டுத் தாக்கம் ஏற்பட்டதைக் காட்டி நிற்கின்றன.

தமிழகத்தில் சாதியத்தின் உச்ச வடிவம் விஜயநகரப் பேரரசு காலத்தில் (கி. பி. 14ம் நூ. பிற்பகுதி- 18ம் நூ. வரை) ஏற்பட்டு விடு கிறது. தெலுங்கரின் ஆட்சித் தலைமை வேற்றுமொழித் தாக்கத்தை மறுக்கும் வகையில் பிராமணரின் பங்களிப்பைப் பெற்றுக் கொண்டது. தஞ்சையிலே வேதியர்கள் மிராசுதாரர்களாயினர். சோழப் பேரரசில் வசதி படைத்த ஊரவர்களால் குடவோலை முறையில் தெரியப்பட்ட ஊர்த் தலைமைக்குப் பதிலாக நாயக்கர். பாளையக்காரர். ஆயக்காரர்கள் என்ற வரி அறவிடுவதே நோக்கமான கூட்டம் நேரடியாகவோ மறைமுகமா கவோ கிராமத் தலைமைக்கு வந்தது. அதன் விளைவாக இந்துதர்மத்தின் துணை அதிகம் வேண்டப்பட்டது. ''இம்மாற்றத்தின் தவிர்க்க முடியாத உடனிகழ்ச்சியாகத் சாதித் தருமத்திலும் கட்டுப்பாடு அதிகரித்தது. விஜயநகரப் பேரரசு வைதிக நெறியிற் செலுத்தப்பட்ட ஒன்றாகும். இந்து

www.padippakam.com



மதம் இறுதிவடிவம் பெற்றது விஜயநகரப் பேரரசு காலத்திலேயாகும். வருணாசிரம தருமமும் சாதித் தருமமும் வளையாத உறுதிப்பாடு பெற்றதும் இக்காலப் பகுதியிலேதான். மதம் அரசின் உத்தியோக பூர்வமான கருவியாயிற்று, ஆகவும் ஆளும் வர்க்கங்களின் சுரண்டல் வெளிப்படையாகவும் வரம்பற்றபதாகவும் நடைபெற்றது'' என பேராசிரியர் க. கைலாசபதி (அடியும் முடியும். பக். 309-310) குறிப்பிடுவது கவனத்திற்கு கொள்ளத் தக்கதாகும்.

இவ்வாறு சோழப் பேரரசு காலத்தில் சாதியம் நிலையூன்றத் தொடங்கி விஜய நகரப் பேரரசில் முழுவடிவம் பெற்று வந்ததினூடாகவே சாதிப் பிரிவுகளுக்கான கடமைகளும் உரிமைகளும் வரையறுத்து வைக்கப்பட்டும் வந்தது. இதனைக் கல்வெட்டுக்கள் வாயிலாயும் பட்டயங்கள் மூலமும் இலக்கியக் குறிப்புகளிலிருந்தும் அறிய முடியும்.

சோழர் காலக் கல்வெட்டொன்று குயவர் ஒரு மேலாடை அணியலாம் எனவும் கோயிலுக்குத் தானியம் வழங்கலாம் எனவும் கூறுகிறது. அவ்வாறே. கம்மாளர்கட்கு விழாக்களில் இரட்டைச் சங்கூதவும் பறைகொட்டவும் சுண்ணாம்பு பூசவும் உரிமை வழங்கப்பட்டது. பொதுவாக கணவனை இழந்த பறைச்சியர் மறுமணம் முடிக்க முடியுமேயன்றி வெள்ளைச்சீலை அணியமுடியாதாயினும், கொங்கு நாட்டில் கணவனை இழந்த பறைச்சியர் மறுமணம் முடிக்காது வெள்ளைச்சீலை உடுத்த வேண்டுமென வரையறுக்கப்பட்டிருந்தது. கொங்கு நாட்டுப் பறையர் தேவதைக் கோயில்களில் முப்பாட்டுக்காரராயும் பூசாரிகளாயுமிருந்தனர். 12ம் நூற்றாண்டுக்குரிய கோவை மாவட்ட திருமுருகன் பூண்டிக் கல்வெட்டொன்று, தருமபாலன் எனும் ஓர் பறையன் பூண்டி கோயிலுக்கு பத்து (அச்சு) பொன் கொடுத்தான் என்கிறது.

கோவை மாவட்டத்து உடுமலைப்பேட்டை வட்டத்திலுள்ள மேற்குத் தொடர்ச்சி மலையிலும் மதுரை மாவட்ட பழனி வட்டத்தில் கோடைக்கானல் மலைத்தொடரிலுமுள்ள 'புலையர்' என்ற பழஞ்சாதியினர் வேளாளரின் மாடுகளை மேய்க்கின்றனர். இவர்கள் வாழும் பகுதி 'பாடி' எனப்படுகிறது (பெரியபுராணத்து புலையர்பாடியின் சாயல்). அண்மைக் காலம் வரை இவர்களிடையே சகோதரியை மணந்து கொள்ளல் அனுமதிக்கப்பட்டு வந்திருக்கிறது. தமிழர் சமூகம் ஏடறிந்த வரலாற்றுக்கு முன்னரே விட்டொழித்த ஓர் வழக்கம். இந்தப் புலையர் தமிழராகக் கணிக்கப்படாததாற்போலும் இவர்களின் 'உரிமை' என்ற

www.padippakam.com



வகையில் நீடித்திருக்க விடப்பட்டிருக்கிறது. ஒரு சாதியினரின் நடுவே உள்ள மரபுகளை முழுச் சமூகமும் எளிதில் மாற்ற இயலாது. இது 'உயர் சாதியி னருக்கும் பொருந்தும்.

தஞ்சைப் பெருவுடையார் கோயில் 10ம் நூற்றாண்டுக் கல்வெட்டொன்று "இவ்வூர் ஈழச்சேரியும். பறைச்சேரியும் வெள்ளாண் சுடுகாடும்" என்று, வாழும்போதும் இறந்தபின் சுட்டெரிக்கும்போதும் சாதி ரீதியாக மண்ணைக் கூறுபோட்டதைக் குறிக்கும். வேறோர் கல்வெட்டு "வண்ணக்குடியார் (வண்ணார்) பிணம்போகும் பெருவழி" என்று இறந்தவன் பிணத்துக்கும் சாதிப் பாதையைக் காட்டும்.

இவ்வாறு உரிமைகள் வகுத்து வழங்கப்படுகிறபோதே ஒரு சாதியினரின் உரிமையில் இன்னோர் சாதியினர் தலையிடுவதும் தவிர்க்க முடியாமல் இருந்துவந்திருக்கும். அவ்வாறான சம்பவமொன்றை 17 நூற்றாண்டு சங்கரநாயனார் கோயில் கல்வெட்டொன்றிலிருந்து அறியமுடிகிறது. தேவேந்திர பள்ளர் திருமலைநாயக்கரிடம் தமது உரிமைகள்- வழக்கங்களைப் பறையர் அனுபவிப்பதாக முறையீடு செய்தனர். அதன் பேரில் பழைய பட்டயப்படி பறையர் பள்ளரின் முறையை மேற்கொள்ளக்கூடாது- பறையர் பள்ளரிலும் தாழ்ந்தவரே எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

இவ்வாறு உரிமைகள் மறுக்கப்பட்ட மக்கள் எப்போதுமே அமைதி பேணும் வகையில் சகிப்புத்தன்மை காட்டி வந்தனர் என்று எண்ணிவிடக்கூடாது. பல கிராமங்களிலும் அவ்வப்போது கிளர்ச்சிகள் வெடித்ததை அறிய முடிகிறது. கி.பி 13ம் நூற்றாண்டில் (பாண்டியராட்சிக் காலத்தில்) புலையர் உயர்சாதியினருடன் மோதியதைக் குறிக்கும் கல்வெட்டொன்று சிவகங்கையில் காணமுடிகிறது. 24 ஊர்களின் பறையர் உயர்சாதி இந்துக்களிடம் கூலிவேண்டிப் போரிட்டனர். அரச பிரதிநிதியாய் வந்த காங்கேயன் திருமண இறப்புக் காரியங்களில் வெகுமதி தரப்பட வேண்டுமென வலியுறுத்தினான். ஒட்டுமொத்தமாக் ஒவ்வொரு கிராம சமூகங்களும் தனித்தனியே தம்முள் பலசாதிப் பிரிவினரையும் கொண்டு தம்முள் தன்னிறைவு பெற்று இயங்கி வந்தன. அதேவேளை ஒவ்வொரு சாதிப்பிரிவினரும் இணங்கியும் பிணங்கியும், போரிட்டும் அமைதிகாத்தும் வேற்றுமைக்குள் ஒற்றுமையைப் பேணி வந்தனர். வெளியே மன்னர் குலங்கள் போரிட்டு மடிந்து புதிய புதிய பேரரசுகளும், பேரரசுகள் சின்னாபின்னமாகி உடைந்து சிற்றரசுகளாய்ச் சிதைந்தும் ஏற்பட்ட எந்த மாற்றமும் இந்த சிறிய கிராமச் சமூகத்தை உலுப்பவில்லை.

www.padippakam.com



## இந்திய தேச விடுதலையும் சாதி அமைப்பும்

ஆங்கிலேயருக்கு முந்திய ஆக்கிரமிப்பாளர்களால் இந்திய சமுதாய அமைப்பு உலுப்பப்படவில்லை. ஆங்கிலேயருக்கு முந்திய ஆக்கிரமிப்பாளர்கள் இந்திய நாகரீகத்தைவிட மேம்பட்ட நாகரிகத்தைக் கொண்டிருக்கவில்லை. ஆதலினால் அவர்கள் இந்தியப் பண்பாட்டோடு இணங்கிப் போவோராக இருந்தனர். முதலாளித்துவ நாகரிகத்தால் நவீனமயப்படுத்தப்பட்ட ஆங்கில நாகரிகமோ இந்திய நாகரிகத்திலும் மேலானதாய் முதலாளித்துவ வளர்ச்சியை எட்டியதாக இருந்தது. அவர்கள் இந்திய நாகரிகத்தோடு இணக்கங்காணும் பழைய போக்கிலிருந்து விலகி, தமக்கு அமைவாக இந்தியப் பண்பாட்டை மாற்றுவதற்கு முயன்றனர்.

இதற்கு எதிர்வினையை ராஜாராம் மோகன்ராயிடம் (1772- 1833) காண முடிந்தது. அவர் ஆங்கிலேயரிடம் கண்ட முதலாளித்துவ ஜனநாயகத்தை ஒத்ததாக இந்து நாகரீகத்தை மாற்றும் முயற்சியில் 'பிரம்மசமாஜத்தை' தோற்றுவித்தார். அதன் வாயிலாக சாதி பேதங்களைப் பாராட்டாத புதிய மத அனுஷ்டானத்தை முன் வைத்தார். பிராமணராகிய அவர் தனது பூணுலை அறுத்தெறிந்து சாதிபேதத்தை ஒழிக்கும் தனது இலட்சியத்தை வெளிப்படுத்தினார். இத்தகைய போக்கினை ஆங்கில ஆக்கிரமிப்பாளர்களும் ஆதரித்தார்கள்- அன்றைய நிலையில் அவர்கள் எதிர்நோக்கிய எதிரிகள் இந்தியாவின் ஆளும் நிலப்பிரபுத்துவமே என்பதனால் அதற்கு எதிரான புதிய கலாச்சார மாற்றங்கள் அவர்களுக்கும் வேண்டியதாயிருந்தது.

ஆனால் இந்த மார்க்கத்தில் தொடர்ச்சியான முற்போக்குப் பாத்திரத்தை ஆங்கிலேயர் வகிக்கவில்லை. 1857இன் சிப்பாய்ப் புரட்சியின் போது அதற்கு ஆதரவாய் இருந்த மன்னர்களினதும் நிலப்பிரபுக்களினதும் உச்சநிலையான எதிர்ப்புக்கு ஆங்கிலேயர் முகங்கொடுக்க வேண்டியிருந்தது. ஆயினும் அந்தச் சிப்பாய்ப் புரட்சியை தயவு தாட்சண்யமின்றி அடக்கியவர்கள், விரைவிலேயே அரை நிலப்பிரபுத்துவ அமைப்பைப் பேணும் வகையில் நிலப்பிரபுத்துவத்துடன் கூட்டமைத்து இந்திய மக்களை அடக்கிவைத்திருக்க வேண்டிய தேவையை உணர்ந்து கொண்டார்கள். தமது சுரண்டலை முழுமையாகச் செயற்படுத்த சாதியமைப்பு சிறந்த களமாயிருப்பதை ஆங்கில ஆக்கிரமிப்பாளர்கள் கண்டுகொண்டார்கள். 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து அவர்களே சாதியத்தின் காவலர்களாயினர். இதன்பின்னர் 20ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் முகிழ்த்த தேசியவாதத்தின் முற்போக்கு அணியே சாதியத்தை எதிர்த்து நிற்கும் வரலாற்றுப் பணியைக் கையேற்றது. சுதந்திரவீரர்கள் பலர் தேச விடுத

www.padippakam.com



லையுடன் சாதியமைப்பைத் தகர்த்து, சமத்துவ நெறியைக் காண விழைந் தனர். விரைவாகவே இந்த முற்போ க்கு அணியில் ஒடுக்கப்பட்ட மக்கள் இணைந்து தமது வரலாற்றுப் பணிக்கான மார்க்கத்தில் ஒரு மகத்தான பங்களிப்பை வழங்கினர். அதே வேளை சாதியச் சமூக நியதி காரணமாக இந்தியத் தேசியம் பிராமணத் தேசியமாகப் முடங்கியது. காந்தி-நேரு தலைமை அதற்கு உட்பட்ட தாராளவாத அரைப்பிராமணத் தேசியத்தை முன்னெடுத்தமையால் அடிநிலை மக்களையும் அணிதிரட்ட வல்லவர்களா யிருந்தனர். இருந்த போதிலும் பிராமணத் தேசிய மேலாண்மையை முறியடிக்கும் அவசியம் கருதிப் பெரியார், அம்பேத்கர் போன்றோர் தேசிய மறுப்பு இயக்கங்களை முன்னெடுத்தனர். அத்தகைய சூழலில் பொதுவுடைமைவாதிகளே சர்வதேச உணர்வுடன் இரட்டைத் தேசியப் பிளவின்றி இயங்கினர்.

அதேவேளை ஒடுக்கப்பட்ட மக்களை தேசவிடுதலைக் கெதிரான சக்தியாய் ஆக்க இனவாத- பிரதேசவாத சக்திகள் முயற் சித்தது முண்டு. அந்த ஏகாதிபத்திய அடிவருடிகளை நிராகரித்த முற்போ க்கு இடதுசாரி சக்திகள், தேசவிடுதலையுடன் சாதியமைப்பைத் தகர்க் கும் பணியையும் இணைத்து முன்னேறின. சுரண்டல் அமைப்பின் தொடக்கத்துடன் உயர்ந்தோரும் இழிசினரும் தோற்றம்பெற்று பாரியள வான விவசாயப் பெருக்கத்துடன் (நிலமான்ய சமுதாயத்தில்) நிலத்தோடு பிணைக்கப்பட்ட அடிமைகளாய் உழைப்பாளர்களை ஆக்கும் நோக்கு டன் சாதித் தர்மம் ஏற்றிப்போற்றப்பட்டது. சர்வதேச முதலாளித்துவமாகப் பரிணமித்த பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் மூலதனத்தின் நெருக் குதலால் தாம் முன்னேற முடியாத முட்டுக்கட்டை இடப்பட்டதால் தேசிய முதலாளித்துவ சக்திகள் உள்ளிட்ட மிகப்பெரும்பாலான சக்திகளும் அடுத்த கட்டப் பாய்ச்சலை எதிர்நோக்கி நின்றன.

முதலாவது பொற்காலத்தைப் படைக்கப் பட்டினிகிடந்த மடியாவினைஞர் பலர் கருமமாற்றினர்- தமது கண்ணை எதிர் கொண்டு வந்த ஈட்டியையும் எதிர்கொண்டு கண்ணிமைக்காமல் ஏற்று மடிந்தவர் பலர். இரண்டாவது பொற்காலமான சோழப் பேரரசில் செல்வச் செழிப்பை நல்கிய புலைப்பாடி மக்கள் அல்லற்பட்டு அயராது உழைத்ததோடு உரிமைகள் பற்றி மூச்சுவிடாத வகையில் மென்மேலும் அடிமை விலங் குகளால் இறுக்கப்பட்ட வண்ணமே எமது பண்பாட்டுச் செழுமைக்கு உரமாயினர். இனி. "பலியானவரது மண்டையோடுகளிலிருந்து மட்டுமே அமுதம் பருகும் வெறுப்பான விக்கிரகத்தை ஒத்தில்லாது" (இந்தியாவின் முதல் விடுதலைப் போர்- மார்க்ஸ்) எல்லோர்க்குமான பொற்காலத்தைப் படைக்க எழுந்த ஒடுக்கப்பட்ட மக்களின் எழுச்சி வரலாறு உரிய வர லாற்றுப் பயணத்தைத் தொடரும்.

www.padippakam.com

# 4

# இலங்கையில் சாதி அமைப்பின் இறுக்கம்

இந்தியாவில், குறிப்பாகத் தமிழகத்தில் வளர்ச்சி பெற்று வந்த சாதியமைப்பு முறை இலங்கை மீது தனது தாக்கத்தை வெளிப் படுத்திக்கொண்டது. அவ்வாறே சாதியமைப்பைத் தகர்க்கும் வரலாற்றுப் போக்கும் இந்திய சுதந்திரப் போராட்டத்துடன் தொடர்புபட்டதாய் இருந் துள்ளது. ஆயினும் இலங்கையின் பிரத்தியேக சூழ்நிலைகள் காரணமாகவும் ஸ்தூல நிலைக்கேற்ப போராட்டங்கள் வெவ்வேறு வகைப்பட்டனவாக வெளிப்பட்டதனாலும் இலங்கையிலிருந்து தனித்துவமான படிப்பினைகளைப் பெற முடிந்துள்ளது. இந்தியாவைப் போன்றே இலங்கையிலும், சுதந்திரத்துக்காக உழைத்த தேச பக்தர்கள் பலர் சாதியமைப்பைத் தகர்ப்பதிலும் ஆர்வமுடையவர்களாயிருந்தனர். அப்பணி முழுநிறைவானதாய் அமைவதற்கு சமத்துவ சமுதாய அமைப்பு அவசியம் என்ற வகையில் பொதுவுடைமைவாதிகளாலேயே அதற்கென உறுதியுடன் போராட முடிந் தது.

இந்தப் போராட்ட வரலாற்றினை- வரலாற்று அனுபவங் களைக் கற்றுக்கொள்வதற்கு முன்தேவையாக சாதியமைப்பு இலங்கையில் இருந்தவாறினையும் அதன் தோற்ற வளர்ச்சிப் போக்கினையும் விளங்கிக் கொள்வது அவசியமாகும்.

***சிங்கள மக்களிடையே சாதியம்***

இலங்கையில் சாதியமைப்பின் உக்கிரம் தமிழர் சமுதாயத் திலேயே முழு அளவில் வெளிப்பட்டிருக்கிறது. ஆயினும் சாதியம் இலங்கை

www.padippakam.com



முழுவதும் இருந்துள்ளது: இருந்து வருகிறது. சிங்கள அரச வம்சத்தினர் இந்தியாவிலிருந்து பௌத்தத் தொடர்பைப் பெற்ற சில காலத்திலேயே இந்தியாவில் பௌத்தம் வலுக்குன்ற ஆரம்பித்துவிட்டது. அப்போதுங்கூட இந்திய அரச குலங்களுடன் இலங்கை அரசர்கட்குத் தொடர்பிருந் துள்ளது. இடையிடையே இந்திய அரசர்களினால் இலங்கை ஆக்கிரமிக்கப்பட்டு ஆளப்பட்டுமிருக்கிறது. அத்தகைய ஆக்கிரமிப்பாளர்களில் தமிழகத்தில் சாதிய தர்மத்தை நிறுவன வடிவமாக ஸ்திரப்படுத்தும் முதல் நடவடிக்கைகளை முன்னெடுத்த சோழப் பேரரசினர் இலங்கை மண்ணிலும் அதன் வேர்களை ஆழப் பதித்தனர். சிங்கள அரசர்கள் பிராமணியத்துக்கு எதிராக வளர்ச்சிபெற்ற பௌத்தத்தைப் பின்பற்றியபோதிலும் சாதியத்தின் சாதக அம்சங்களைத் தமக்கு அமைவாகப் பயன்படுத்தத் தவறவில்லை. சோழராதிக்கத்தை முறியடித்த விஜயபாகு சிவனொளிபாத மலைக்குச் செல்லும் மார்க்கங்களிலும்- தங்குமடங்களிலும் சாதிரீதியான பகுப்பை வகுத்திருந்தது பற்றி அறிய முடிகிறது. இன்றும் பௌத்த மத பீடங்களில் சாதி முறை பாராட்டப்படுகின்றது. கண்டி இராச்சியத்தில் உருவாக்கப் பட்ட பிரதான பௌத்த மத பீடங்களான மல்வத்தை, அஸ்கிரிய பிரிவுகளின் மகாநாயக்கர்களாக வரும் தகுதி உயர் கொய்கம சிங்கள பௌத்தர்க ளுக்கு மட்டுமே உண்டு. பௌத்த மத நிறுவனங்கள் பல சாதி அடிப்படையில் இயங்கி வருவதை இன்றும் காண முடியும்.

அண்மைக்கால வரலாற்றிலும் சாதியத்தின் தாக்கம் வெளிப் பட்ட போக்கைக் காண முடியும். சாதியில் குறைவுபட்ட சிங்கள வேட்பாள ரான மாக்கஸ் பெர்னாண்டோவை முறியடிப்பதற்காகச் கொய்கம சிங்களத் தலைவர்கள் உயர்சாதித் தமிழரான பொன்னம்பலம் இராமநாதனை, கல்வி கற்ற இலங்கையர்க்கான சட்டசபை உறுப்பினர் போட்டிக்கு நிறுத்தி வெற்றிபெறச் செய்தமை கவனத்திற்கொள்ளத்தக்க ஓர் அம்சமாகும். இன்றுவரையும் நாட்டின் தலைவராக உயர்சாதி- மேட்டுக்குடிச் சிங்களவரே இருந்துவந்துள்ளனர். தமிழ்மக்கள் மத்தியிலான வேளாளர் போல் 'கொய்கம' சாதியினரே சிங்கள மக்கள் மத்தியில் சாதிய அதிகாரம் மிக்கோராய் இருந்து வருகிறார்கள். சாதி குறைந்த கரையோரச் சிங்களவரான ஆர். பிரேமதாச ஜனாதிபதியாக முடிந்தமை உயர்சாதிச் சிங்களத் தலைமை எதிர் நோக்கிய தவிர்க்கவியலாத சிக்கலின் சந்தர்ப்ப சூழல் காரணமானதாகும். கட்சியே

www.padippakam.com



விரும்பாது ஏற்ற நிர்ப்பந்தம் என்றே கூறலாம். அதே பிரேமதாச ஜனாதிபதியாக நீடிக்க முடியாது அகால மரணம் அடைந்த போது சிங்கள மேட்டுக்குடி உயர்சாதியினர் உள்ளார்ந்த குதூகலத்தையும் சாதிய நிம்மதியையும் கொண்டனர். ஓரளவுக்குத் தீண்டாமைக் கொடுமை இருந்து வந்த போதிலும் பாரிய அளவில் சிங் கள மக்களிடையே பொது இடங்களில் அது வெளிக்காட்டப்பட்டதில்லை. இருப்பினும் பௌத்த மதச் சடங்குகளிலும் பௌத்த திருமணங்களிலும் வெவ்வேறு அளவுகளில் மறைமுகமாக சாதிய-தீண்டாமை நடைமுறைகள் இருக்கச் செய்கின்றன.

கொய்கம. பத்கம. வகும்புர. கராவ. துராவ. சலாகம, ஹீனா. பெரவ. நவந்தன்ன ஆகியவை சிங்கள மக்களிடையே காணப்படும் சாதிகளுள் சில. பௌத்தபிக்கு ஒருவரால் 15ஆம் நூற்றாண்டில் படைக்கப்பட்ட 'ஜனவம்ச' எனும் நூல் சிங்களவரிடையிலான சாதிகள் பற்றிக் கூறுகின்றது. சிங்கள மக்களிடையேயான சாதியப்படி நிலையில் ரொடியா சாதியானது சமூகத்தினின்று முற்றாக விலக்கி வைக்கப்பட்டு இழி நிலையிலுள்ள மக்களைக் கொண்டதாக்கப்பட்டது. பிற சாதியின ரிடையே நிலம் கல்வி பண்பாடு போன்றவற்றில் அடி நிலைச் சாதிகளான பக்கம, ஹின்ன, பெரவ போன்ற சமூகத்தினர் இன்னமும் பின் தங்கியவர்க ளாகவே இருந்து வருகின்றனர். நீதி நிகந்துவ, ருவன்மல் நிகந்துவ ஆகிய இரு நூல்கள் ஆரியர்களது நால்வர்ணங்களை விளக்கி அரசியல் நிர்வகிப்புக்குச் சாதிப் பகுப்பின் அவசியம் பற்றியும் எடுத்துக்கூறியுள்ளன (இவை குறித்து அ.இ. முகம்மது சமீம் தமது "ஒரு சிறுபான்மைச் சமூகத்தின் பிரச்சனைகள்" எனும் நூலில் விளக்கியுள்ளார்). காலகதியில் பௌத்த மத பீடம் வர்ண பேதத்தையும் சாதியக் கருத்தியலையும் நிலப்பிர புத்துவ அமைப்புக்கு அமைவாக உள்வாங்கிக் கொண்டமையை இது காட்டுவதாக உள்ளது.

### கிழக்கிலங்கையில் சாதியம்

சைவ சமயத்தவர்களான கிழக்கு மாகாணத் தமிழர்களிடம் சாதியமைப்பு நிலவியபோதிலும் அதன் இறுக்கம் அதிகளவில் இல்லை. யாழ்ப்பாண இராச்சியம் போன்று தனியரசு கிழக்கில் இருக்கவில்லை. கிழக்கு மாகாணம் பெரும்பாலும் சிங்கள மன்னர்கட்கும்- கண்டிராச்சி யத்திற்கும் உட்பட்டு இருந்து வந்திருக்கிறது. சைவக் கோயில்களை மையமாகக்கொண்ட குடியேற்றங்கள் வெவ்வேறு காலகட்டங்களில் இந்தி

www.padippakam.com



யாவிலிருந்து வந்த மக்கள் தொகுதியினர் இங்குள்ள மக்களோடு இணைந்து ஏற்படுத்திய போதும் சாதியமைப்பை அனுசரித்தே அமைக்கப்பட்டிருந்தன. பெரிய கோயில்களில் இன்னுங்கூட சாதி ரீதியாகத் திருவிழாக்கள் பகுக்கப்பட்டுள்ளனவாயினும் ஆதிக்குடிகளின் சிறு தெய்வ வழிபாடே தொடர்ந்தும் ஆதிக்கம் பெற்றுவந்தது. பிராமணியத்தின் தாக்கம் பாரிய அளவில் இல்லாததோடு பெரும்பாலான கோயில்களில் வெவ்வேறு சாதியினர் பூசகர்களாயிருந்தும் வருகின்றனர். அத்துடன் தாழ்த்தப்பட்ட மக்கள் சுயாதீனமாக விவசாயம் செய்து வாழக்கூடிய அளவுக்கு காடுகளை அழித்து விவசாய நிலங்களைப் பெற முடிந்துள்ளது. மட்டக்களப்பில் யாழ்ப்பாண வேளாளர் ஆதிக்கம் போலன்றி முக்குவரே (முற்குகர்) நில ஆதிக்கம்பெற்ற மேலாண்மை மிக்க சமூக பிரிவினராயு ள்ளனர்.

இந்திய நிலப்பரப்பிலிருந்து கிறிஸ்து சகாப்தத்திற்கு முன்பும் பின்பும் வந்து குடியமர்ந்தவர்கள் அதற்கு முந்திய ஆதிச் சமூகங்களுடனும் கலப்புற்றனர். முற்குகர் (முக்குவர்) மட்டக்களப்பை மையமாகக் கொண்டு அதிக எண்ணிக்கையினராகவும் பெருமளவு நிலங்களுக்குரியவர்களாகவும் ஆகினர். இதனால் அவர்கள் சமூக அந்தஸ்த்தில் உயர்வாக மட்டுமன்றி அதிகாரம் மிக்கவர்களாகவும் ஆகிக் கொண்டனர். அதேவேளை வேளார்கள் என்போர் வந்து குடியமர்ந்தனராயினும் முற்குகரின் நிலங்களைப் பெற்று அவர்களோடும் அவர்களது அதிகாரத்தோடும் இணங்கிப் போக வேண்டியவராகினர். இதனால் வேளாளர் உச்ச நிலை ஆதிக்க சாதியாக கிழக்கில் வர முடியவில்லை. அங்கே முற்குகர்களுக்கு அடுத்த நிலையி லேயே வேளாளர் இருந்தனர். கலிங்க மாகோன் ஆட்சிக் காலத்தில் மட்டக்களப்பில் வகுக்கப்பட்ட சாதிய வரையறைகள்; உரிமைகள் கடமை கள் பற்றி ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டுவர். அதன் தொடர்ச்சியை 1927ல் பிரித்தானிய ஆட்சியினர் எடுத்த சாதிக் கணக்கெடுப்பு எடுத்துக் காட்டும்.

1. முற்குகர் (முக்குவர்)
2. வேளாளர்
3. கரையார்
4. சீர்பாதர்
5. கோவிலார்
6. முதலிகள் (செங்குந்தர்)
7. செட்டிகள்
8. பள்ளர்
9. பறையர்
10. திமிலர்
11. கோவியர்
12. தெட்டி
13. மீன்தூக்கி
14. சாயக்காரர்

www.padippakam.com



15. தட்டார்
16. தனக்காரர்
17. வாணிபர்
18. பண்டாரம்
19. பண்டாரப்பிள்ளை
20. வேடவேளாளர்
21. குயவர்
22. நளவர் (நம்பிகள்)
23. வண்ணார்
24. சாணார்
25. அந்தணர்
26. சாண்டார்
27. வன்னியர்
28. ஆண்டிகள்
29. சிற்பிகள்
30. தச்சர்
31. தவசிகள்
32. கொல்லர்
33. அம்பட்டர்

இவ்வாறு சாதிகள் அமைந்திருந்த போதிலும் வடக்கிற் போன்ற படி நிலை இறக்கமும் தீண்டாமைக் கொடுமையும் கிழக்கில் பாரிய அளவில் இருக்கவில்லை. ஆயினும் சாதியமைப்புக்கேயுரிய ஏற்றத் தாழ்வுகளும் உரிமை மறுப்புக்களும் அங்கும் இருந்து வந்திருந்தன. மட்டக்களப்பில் 'வசந்தன் கூத்து' உயர் சாதியினருக்கே உரியதாய் இருந்து வந்தது. 'மகுடிக் கூத்து' தாழ்ந்த சாதியினருக்கு உரியதாய் இருந்து வந்தது. 'பறை மேளக் கூத்து' பறையர்க்கு உரியதாய் இருந்தது. சில காலத்துக்கு முன்னர், தாழ்ந்த சாதியினர் 'வசந்தன் கூத்து' ஆடமுயன்றபோது ஆடவிடாமல் உயர்சாதியினரால் தடுக்கப்பட்டனர். முற்றாகவே தடுக்கமுடியாத நிலையில் வேஷம் போடாமல் ஆட வேண்டும் எனப் பணிக்கப்பட்டனர்.

மேலும் திருமணங்கள், பிறப்பு, இறப்புச் சடங்குகளில் சாதிய அடிமை குடிமை முறைகளின் எச்சங்கள் ஆங்காங்கே பின்பற்றப்படுவது மறுக்க முடியாத ஒன்றாகும். சவரத் தொழிலாளர்களைக் குடிமைத் தொழில் செய்யுமாறு நிர்ப்பந்தம் செய்தமையும் பறையை தமிழரின் பழம் பெரும கலை என்க கூறி அதனைப் பறையர் சாதியினரே தொடர்ந்தும் பாதுகாத்து முன்னெடுக்க வேண்டும் எனக் கருத்தியல் வற்புறுத்தல் செய்தமையும் அண்மைக்கால உதாரணங்களாகும். சாதிய தீண்டாமையை எதிர்த்த போராட்டங்கள் அவ்வப்போது மட்டக்களப்பில் இடம் பெற்றும் வந்துள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

மட்டக்களப்பில் சமூக ஆதிக்கம் மிக்கவர்களாய் விளங்கிய முக்குவரின் (முற்குகர்) சமூக மேலாண்மை ஐரோப்பிய ஆக்கிரமிப்பாளர்களால் அங்கீகரிக்கப்பட்டு. 'முக்குவர் சட்டத்தின்' வாயிலாக உறுதிப்படுத்தப்பட்டது. முக்குவருக்கு ஏனைய சாதிப்பிரிவினர் தொண்டூழியம்

www.padippakam.com



செய்வோராயிருந்தனர். விசேட நிகழ்வுகளில் (சடங்குகளில்) மாதுவர் அமுது சமைப்பர். கோயிலார் சந்தனம் அரைப்பர் பண்டாரம் சந்தனம் தாம்பூலம் பகிர்வர். பண்டாரப்பிள்ளை வீடு வீதி கூட்டிச் சமையற் கலம் மினுக்கி, தண்ணீர் அள்ளலும், எச்சிலிலை எடுத்தெறிதலும், வள்ளுவர்க்கு இராசபறை எடுத்துக் கையிற் கொடுத்தலும் அலங்காரம் செய்தலும் எனும் பணிகளும் உரியன. குசவர் குடம் முதலிய மட்பாண்டம் கொண்டு வருவர், கொல்லர் கோடரி, கத்தி முதலிய இரும்பாயுதங்கள் கொண்டுவருவர். முதலிகள் நூல், தீபச்சீலை கொண்டுவருவர்: வாணிபர் எண்ணெ கொண்டுவந்து தலைக்கிடலும் தீபத்துக்கிடலும் ஆகிய தேவைகளைக் கவனிப்பர்; நம்பிகள் தீவட்டி எடுப்பர். வண்ணார் துகில் தூசி நீக்கிக் கொண்டு வருவர்; அம்பட்டர் சவரம் செய்வர்; சாணார் தெங்குப்பாளை குருத்து வெட்டுவர்: பள்ளர் நன்மைக்குப் பாணி கொண்டுவருவர்; தீமைக்குப் பிரேதமெரிக்க விறகு வெட்டுவதோடு சுடலையைச் செப்பனிடுவர்; பறையர், பறை மேளம் மீட்டல், தீமைக்குப் பாடைகட்டலும்– பிரேதமெரித்தலும் என்ற கடமைகளுக்கு உரியவர்: கோவியர் பிரேதம் காவுவர். தவசிகள் பூமாலை கட்டுவதோடு– பந்தல் முதலிய விதானங்கள் சோடிப்பர்; கடையர் சுண்ணாம்பு கொண்டு வருவர் என்றவாறு, சமூக ஒழுங்குமுறைகளாய்ச் சாதிப்பிரிவினரின் கடமைகள் வகுக்கப்பட்டிருந்தன. முக்குவர் ஏற்றம் பெற்றது அவர்கள் நிலத்தில் பெற்ற ஆதிக்கத்தினாலேயே. மட்டக்களப்பில் முக்குவருக்குரிய இந்த உயர் அந்தஸ்த்துக் காரணமாக அவர்கள் தம்மை யாழ்ப்பாண முக்குவரிலிருந்து வேறுபடுத்தியே பார்க்கின்றனர். மட்டக்களப்பின் ஆதிக்கத்தைப் பெற்ற இந்த முக்குவர் சாதியவாதத்தை வரித்துக்கொள்ளாமை ஆய்வுக்குரிய ஒன்று. மட்டக்களப்பு சமூக உருவாக்கத்தில் 13ஆம் நூற்றாண்டின் கலிங்க மாகோனுக்கு மிகுந்த முக்கியத்துவமுண்டு. இவன் பிராமணியத்தை நிராகரித்து அப்போது கன்னடத்தில் செல்வாக்குப் பெற்ற வீரசைவத்தை வரித்துக் கொண்டு அதனையே மட்டக்களப்பு சமூகத்துக்கானதாகப் பிரயோகித்தான் என்பது கவனிப்புக்குரியது. (இது குறித்த பேராசிரியர் சி. பத்மநாதன் ஆய்வுகள் மனங்கொள்ளத்தக்கன).

## முஸ்லீம்கள் மத்தியில் சாதியம்

முஸ்லீம் மக்களின் ஒட்டுறவினால் கிழக்கில் இந்துமதப் பிரிவினரிடம் சாதியமைப்பின் தாக்கம் தளர்ச்சியடைந்தது போன்றே. மறுவினையாக முஸ்லீம்களும் சாதியத்தின் தீண்டாமை உணர்வை– அது

www.padippakam.com



தன்னகத்தே பேணிவைத்திருந்த குறைந்த அளவிலேயே ஆயினும்–பெற்றுக்கொண்டிருந்தனர். 'இழிந்த தொழில்களை' செய்வோரின் வதிவிடங்களைப் புறம்போக்கானதாய் மதிக்கும் பண்பு முஸ்லீம்களில் 'உயர்ந்தோர்' மத்தியில் இருப்பதை இன்றுங் கூடக் காணலாம். வடக்கில் முஸ்லீம்கள் மத்தியில் சாதியம் அதன் சுய வடிவத்தில் காண முடியாததாகினும் கருத்தியல் செல்வாக்கு வெவ்வேறு வழிகளில் சாதியக் கண்ணோட்டம் சார்ந்து நீடித்து வந்திருக்கிறது. ஒரு உதாரணத்தைக் குறிப்பிடலாம். ஒரு முஸ்லீம் இளைஞனோ யுவதியோ ஒரு தாழ்த்தப்பட்ட எதிர்ப் பாலினத்தாரைக் காதலித்தால் அதனை மதத்தின் காரணமாக ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். ஆனால் ஒரு உயர்சாதியினர் தொடர்பாக இடம் பெற்றால் அவரைத் தமது மதத்திற்கு மாற்றுவதில் சிரமம் இருக்கமாட்டாது. இது அடிப்படையில் சாதிய உளவியல் சார்ந்த ஒன்றேயாகும். மற்றொரு உதாரணம் யாழ்ப்பாண முஸ்லீம் வட்டாரத்தில் உயர்ந்ததெரு என்றும் குறைவானோர் தெரு என்றும் இருந்து வருகின்றது. அவ்வாறே பொம்மை வெளி வாழ் முஸ்லீம் மக்களை இவ் உயர்ந்த தெருக்களின் முஸ்லீம்கள் சமமாக ஏற்றுக் கொள்வதில்லை. திருமண உறவுகளை அனுமதிப்பதும் இல்லை. இங்கே வர்க்கம் என்பதே பிரதான நிலைப்பாடாகினும் தமிழர் மத்தியிலான வாழ்வு முறையால் சாதியப் பார்வையானது வெவ்வேறு வகைகளில் வெளிப்பாடடைவதை அங்கு அவதானிக்க இயலும். முஸ்லீம் மக்கள் மத்தியிலான இவ் உயர்வு தாழ்வு நிலையை இடம் பெயர்ந்து முகாம்கள் அமைக்கப்பட்டு அகதிகளாக இருந்து வரும் சூழலிலும் காண முடிகின்றது.

### மலையகத் தமிழர்கள் மத்தியில் சாதியம்

இலங்கைக்கு இந்திய வம்சாவழித் தமிழர்கள் கொண்டு வரப்பட்டு ஒன்றே முக்கால் நூற்றாண்டுகட்கு மேலாகி விட்டது. தமது இன மொழி மதப் பண்பாட்டம்சங்களைப் பேணிப் பாதுகாத்து வந்தமை போன்றே மலையகத் தமிழர்கள் தம்முடன் கொண்டு வந்த சாதியத்தையும் கைவிடாது கட்டிக் காத்து வந்துள்ளனர். இலங்கையின் மத்திய மலைப் பிரதேசங்களில் தேயிலை. ரப்பர் உற்பத்தியின் உழைப்புச் சுரண்டலுக்காகக் கொண்டுவரப்பட்ட இம் மக்கள் முற்றிலும் புதிய புவியியல் சூழலில் குடியமர்த்தப்பட்டனர். தென் இந்தியாவின் தென் மாவட்டங்களில் ஏற்பட்ட கொடுமையான பஞ்சத்தையொட்டிய காலப்பகுதியிலேயே இவர்கள் பிரித்தானிய கொலனியவாதிகளின் முகவர்களான கங்காணிமாரால் ஏமாற்றிக்

www.padippakam.com



கூட்டிவரப்பட்டனர். இத்தகைய மக்களில் ஏகப்பெரும்பான்மையினர் சாதிய அடி நிலையில் வைக்கப்பட்டிருந்த உழைக்கும் மக்களாகவே இருந்தனர். இம் மக்களின் சாதிய வர்க்க நிலையினை நன்கு அவதானித்தே பிரித்தானிய கொலனியவாதிகள் தமது சுரண்டலுக்குரிய தூரநோக்குடன் தொழிற்படையாக இம் மக்களை இங்கு கொண்டு வந்தனர்.

இம் மக்களின் வியர்வை, கண்ணீர், இரத்தம் மட்டுமன்றி உயிர் இழப்புகளாலும் உருவாக்கப்பட்ட பெருந் தோட்ட தேயிலை, ரப்பர் உற்பத்திகளில் அவர்கள் நீடித்த உழைப்புச் சுரண்டலுக்காகக் குடியமர்த்தப்பட்டனர். அவர்கட்குரிய குடியிருப்புக்களாக "லயன் காம் பராக்கள்" எனப்படும் ஒரே கூரையின் கீழான இருபுறமும் வரிசையாகக் கட்டப்பட்ட 8x 10 – 10x 12 அடி நீள அகலம் கொண்ட அறைகள் மலையகத் தோட்டங்களில் அமைக்கப்பட்டன. இத்தகைய 'லயங்களில்' தொழிலாளர்கள் குடியமர்த்தப்பட்ட போது முற்றிலும் சாதிய அடையாள அடிப்படையே பின்பற்றப்பட்டது. மலையக மக்களில் தொண்ணூறு வீதத் தினர் தாழ்த்தப்பட்ட மக்களாகவும் பத்து வீதமானவர்கள் உயர்த்தப்பட்ட சாதியினராகவும் இருந்தனர். லயன் குடியிருப்புகள் சாதி வாரியாக வழங் கப்பட்டன. பிரதான பிரிப்பாக மேட்டு லயம், பணிய லயம் என்று வகுக்கப் பட்டது. மேட்டு லயங்களில் உயர்த்தப்பட்ட சாதிகளைச் சேர்ந்தோர் குடியமர்த்தப்பட்டனர். அம் மேட்டு லயத்திலேயே பிரதான கோவில்

| குடியானவர் சாதியினர் – (உயர்சாதியினர்) | | தாழ்த்தப்பட்ட சாதியினர் |
|---|---|---|
| வேளாளர் 'மொட்டை வேளாளர், சோழிய வேளாளர்இ, சைவ வேளாளர் | ஆறு நாட்டு வேளாளர் | பள்ளர்<br>பறையர்<br>சக்கிலியர்<br>வண்ணார்<br>தமிழ் வண்ணார்<br>ரெட்டி வண்ணார்<br>தொட்டி வண்ணார்<br>அம்பட்டர் |
| கள்ளர்<br>மறவர்<br>அகம்படியார் | முக்குலத்தோர் (தேவர்) | |
| செட்டிமார்<br>ரெட்டிமார்<br>நாயுடு<br>முத்துராஜா<br>நாடார் | இவர்கள் எண்ணிக்கையில் மிகமிகக் குறைந்தவர்கள் | |

www.padippakam.com



அமைந்திருக்கும். அங்கு பிராமணர்கள் அன்றி பூசாரிகளே பூசகர்களாக இருந்தனர். அத்தகையோர் உயர்த்தப்பட்டோரா கவே இருந்தனர். இக் கோவில்களின் நிர்வாகம், திருவிழா' போன்றவற்றை உயர்த்தப்பட்டவர்களே தமது கைகளில் வைத்திருந்தனர்.

இவ்விடத்திலே மலையக மக்களிடையேயான சாதிகள் பற்றிச் சற்று விரிவாகப் பார்ப்பது அவசியம். தென் இந்தியச் சாதிகளின் தொடர்ச்சி இம் மக்களிடையே இருந்து வந்த அதேவேளை. அது இலங்கையின் மலையகச் சூழலுக்கு ஏற்றவாறு சமூக வாழ்வுடன் தனித்து வப் போக்கைக் கொண்டிருந்தது. இங்கு குடியானவர் சாதி என்பது உயர்சாதியினர் என்றும் ஏனையோர் குறைந்த சாதியினர் எனவும் பகுப்பு முறை இருந்து வந்துள்ளது.

மலையகத் தமிழ் மக்களிடையே காணப்படும் மேற்படி சாதிய அமைப்பின் விசேடித்த அம்சம் யாதெனில் அவர்களது மொத்தச் சனத்தொகையில் 90 வீதத்தினர் தாழ்த்தப்பட்ட மக்களாவர். அதிலும் குறிப்பாகப் பறையர் சாதி மக்கள் 70 வீதத்தினராகவும் ஏனையோர் 20 வீதத்தினராகவும் இருக்கின்றனர். தாழ்த்தப்பட்ட மக்களில் ஏகப் பெரும்பான்மையினர் தொழிலாளர்களாகவே இருந்து வந்துள்ளனர். அதே வேளை கிறிஸ்தவ மதத்தைத் தழுவி ஆங்கிலக் கல்வியை ஓரளவிற்குப் பெற்று தோட்ட ங்களில் சிறு சிறு உத்தியோகங்கள் பெற்றவர்களில் கணிசமானோர் பறையர் சாதியினரிடையே இருந்து வந்தவர்களாவர். இதன் தொடர்ச்சி இன்று வரை நீடித்து, உயர்கல்வி உயர் பதவிகள் எனக் காணப்படு கின்றன. எண்ணிக்கையிலும் கல்வி உத்தியோக பதவி வாய்ப்புகளிலும் அவர்கள் முன்னிலை வகிப்பதால் அவர்களிடையே ''மேல்நிலையாக்கக் கண்ணோட்டம்'' உள்ஞர இருந்து வருவதை அவதானிக்க முடியும்.

மேலும், தோட்டங்களில் கங்காணிமார், பெரிய கங்காணிமார் பதவிகள் குடியானவர்கள் எனக் கொள்ளப்படும் உயர் சாதியினருக்கு உரியதாகவே இருந்து வந்துள்ளது. அதேவேளை, அந்தந்தச் சாதித் தொழிலாளர்கள் மத்தியில் வேலை வாங்கும் பொருட்டு பிற்காலங்களில் கங்காணிப் பதவிகள் தாழ்த்தப்பட்ட மக்களிடையேயும் வழங்கப்பட்டு வந்துள்ளன. ஏனைய சிறு உத்தியோகஸ்தர்களாக ஆங்காங்கே தாழ்த்தப்பட்ட மக்களில், குறிப்பாக கிறிஸ்தவ மதம் மாறியவர்களுக்கு வழங்கப் பட்டும் வந்திருக்கிறது.

படிப்பகம்

www.padippakam.com



மேலும் மலையக மக்களில் பத்து வீதத்தினரான முன் கூறப்பட்ட உயர்த்தப்பட்ட குடியான சாதியினரின் சமூக ஆதிக்கம் ஆரம்பம் முதல் இருந்து வந்திருக்கிறது. அவர்களது சாதிய வெறித்தனமான நடைமுறைகளால் ஆங்காங்கே சாதிய மோதல்கள் அவ்வப்போது இடம் பெற்றும் வந்துள்ளன. இம் மோதல்களில் குறிப்பாக பள்ளர் சாதியினர் எதிர்ப்புப் போராட்ட குணாம்சத்துடன் பல இடங்களில் குடியான சாதியினருடன் போராடியுள்ளனர். இக் குடியான சாதியினரில் மிகக் குறைந்த தொகையினர் தொழிலாளர்களாக உள்ள அதே வேளை ஏனையோர் வியாபாரிகளாக. கங்காணிகளாக. பெரிய கங்காணிகளாக. கணக்கப்பிள்ளைகளாக எழுதுவினைஞர்களாக மற்றும் ஏனைய உத்தியோகத்தர் களாகவும் மட்டுமன்றிக் குறிப்பிட்ட கால கட்டத்தின் பின் சிறிய தோட்டங்களின் சொந்தக்காரர்களாகவும் இருந்து வந்துள்ளனர். இவர்கள் தமது சாதிய அடையாளங்களையும் ஆதிக்கச் செயற்பாடுகளையும் ஒருபோதும் கையிழக்காது பேணிக் காத்து வந்துள்ளனர். சில காலத்திற்கு முன்பு வரை இவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களைச் சாதிப் பெயர் கூறி அழைப்பதும் லயங்களை சாதி அடையாளத்துடன் குறிப்பிடுவதும் நடைமுறையில் இருந்து வந்துள்ளது. குடியான சாதியினரிடம் ஆதிக்க நிலைக் கண்ணோட்டம் நிலைத்து நீடித்து வந்த அதேவேளை ஏகப்பெரும்பான்மையினராகத் தாழ்த்தப்பட்ட மக்கள் இருந்த போதிலும் அவர்களிடம் சாதிய அடிமைத்தனத்துடன் கூடிய தாழ் நிலைக் கண்ணோட்டச்சிக்கல் இருந்தும் வந்துள்ளது. இது சாதியக் கருத்தியல் க்கட்டமைப்பின் முழுமைக்கு உட்பட்ட ஒன்றேயாகும்.

மேலும் மலையகத்தின் சாதியமைப்பில் அடிமை குடிமை முறையானது இலங்கைத் தமிழர்கள் மத்தியில் அமைந்திருப்பது போன்று அமைந்திருக்கவில்லை. ஆயினும் வண்ணார், அம்பட்டர் ஆகியோர் பிறப்பு, இறப்பு. திருமணச் சடங்குகள் வைபவங்களில் சில நடைமுறைகளை அவர்களுக்குரிய சாதிய குடிமை அடையாளங்களுடன் செய்து வருமாறு நிர்ப்பந்திக்கப்பட்டு வந்துள்ளனர். அதிலும் குடியான சாதியினருக்குரிய வண்ணார் அம்பட்டர் வேறாகவும் தாழ்த்தப்பட்டோருக்கான வண்ணார் அம்பட்டர் வேறாகவும் இருந்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். அதேவேளை. எல்லோரும் எங்கும் சமத்துவமாக உணவு அருந்தும் நிலை இருக்கவில்லை. சாதி பார்த்தே பந்தியில் இருந்து உணவு அருந்தும் வழமை தொடரப்பட்டு வந்துள்ளது. அவ்வாறே திருமணங்களும் சாதிய

www.padippakam.com



வரையறைகளுக்கு உள்ளேயே இருந்து வந்துள்ளன. குடியானவர்–தாழ்த்தப்பட்டவர் காதல் திருமணங்கள் இடம் பெறும் விதிவிலக்கான சந்தர்ப்பங்களில் குடியான சாதியினர் தமது மகனையோ மகளையோ தம்முடன் சேர்த்துக் கொள்வதில்லை. அவர்களை தாழ்த்தப்பட்ட சாதிப் பெற்றோர் தம்முடன் அரவணைத்துக் கொள்ளும் நடைமுறையே இருந்து வந்துள்ளது.

மலையகத்தில் மாரியம்மன் வழிபாடு பிரதான இடத்தில் இருந்து வருகின்றது. அதனை விட முருகன், பிள்ளையார் கோவில்கள் நகரங்களில் இருந்து வருகின்றன. இக் கோவில்களின் ஆதிக்கம் குடியான சாதியினர் எனப்படும் உயர்த்தப்பட்டவர்களிடமே உள்ளது. திருவிழாக் காலங்களில் பூசைகள், வழிபாடுகளில் தாழ்த்தப்பட்ட சாதி மக்கள் தவிர்க்கப்படுவார்கள். கும்பம் தூக்குதல், சுவாமி காவுதல் போன்றவற்றில் குடியான சாதியினரே முன்னின்று செயற்படுவர். ஏனையோரை அச்செயற்பாடுகளுக்கு அனுமதிக்க மாட்டார்கள். அதேவேளை, வடபுலத்தில் நடைமுறையில் இருந்து வந்தமை போன்று கோவில்களில் மட்டுமன்றி தேனீர்க்கடைகள், உணவகங்களில் தீண்டாமை இருந்ததில்லை.

மலையகத்தில் மேலும் மதுரைவீரன், முனியாண்டி, காளியம்மன் போன்ற நாட்டார் வழிபாடு குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் இருந்து வருகின்றது. அதற்கும் அப்பால் மாரியம்மன், காளியம்மன், மதுரைவீரன் போன்ற குலதெய்வங்களை அம் மக்கள் தமது லயன்களில் உள்ள வீடுகளில் வைத்து வழிபட்டும் வருகின்றனர்.

மலையக மக்களிடையேயான தொழிற்சங்க அரசியல் தளங்களிலே அங்குள்ள குடியான சாதியினரின் ஆதிக்கமே அன்றிலிருந்து இன்று வரை நீடித்து வந்திருக்கிறது. அதற்கான அடிப்படையாக ஆதிக்க சாதி நிலைப்பாடும் சொத்து சுகபோக வாய்ப்புகளும் இணைந்திருந்து வந்துள்ளமை நோக்குதற்குரியதாகும். தென் இந்தியத் தொண்டைமான் பரம்பரையில் இருந்து வந்த சௌமியமூர்த்தி தொண்டமானும் அவருக்கு பின் அவரது பேரன் ஆறுமுகம் தொண்டமானும் தொடர்ந்து தொழிற்சங்க அரசியல் குடும்ப ஆதிக்கம் பெற்றவர்களாகவே இருந்து வருகின்றனர். இவர்களது ஆதிக்கத்திற்குத் தானே மாற்று என்று கூறித் தொழிற்சங்க அரசியல் அரங்கிற்கு வந்த பெ. சந்திரசேகரனும் ஆதிக்க சாதி அரசியலே நடாத்தி வருகின்றார். இவர்களது சாதி அடிப்படை குடியான உயர்சாதியா

www.padippakam.com



கவும் வர்க்க நிலைப்பாடு சொத்து சுகம் கொண்டதாகவும் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும். மலையக மக்களில் ஏகப் பெரும்பான்மையோர் தொழிலாளர்களாகவும் தாழ்த்தப்பட்ட மக்களாகவும் இருக்கும் அதே வேளை மிகச் சிறுபான்மையினரான ஆதிக்க சாதியினரும் உயர் வர்க்கத்தினருமே தொழிற்சங்க அரசியல் அதி உயர் ஆதிக்க நிலையில் இருந்து வருகின்றமை நோக்கப்பட வேண்டியதாகும்.

இத்தகைய ஆதிக்க தொழிற்சங்க அரசியல் தலைமைகள், சொத்து சுக நிலையிலும் கல்வி உத்தியோக ரீதியிலும் வளர்ச்சி பெற்று மேன் நிலையாக்கம் பெற்று வந்த தாழ்த்தப்பட்டோர் சிலரை தம்முடன் வைத்துக் கொண்டுள்ளனர். அவர்கள் மூலம் தொழிற்சங்க அங்கத்துவத்தையும் தேர்தல்களுக்கான வாக்கு வங்கியையும் தக்க வைத்து வந்துள்ளனர். இத்தகையவர்கள் சாதிய அடிமைத்தனப் பணிவுடனேயே அவ் ஆதிக்க தொழிற்சங்க அரசியல் தலைமைகளுடன் இருந்து கொண்டு சுயநல ஈடேற்றங்களைப் பெற்றும் வருகின்றனர்.

அதேவேளை, மலையக மக்கள் மத்தியில் மாக்சிச லெனினிச வாதிகளாலும் இடதுசாரிகளினாலுமே சாதியம் கடந்த தொழிற்சங்க அரசியல் இயக்கங்களை வர்க்கப் போராட்ட அடிப்படையில் முன்னெடுக்க முடிகின்றது என்பது யதார்த்தமாக உள்ளது. ஆனால் தலித்தியம் பேசும் சிலராலோ, மலையகத் தமிழ்த் தேசியம் பேசி தமது உயர்சாதிய ஆதிக்கத்தையும் உயர்வர்க்க நிலையையும் பேணுவோ ராலோ சாதியம் கடந்து நிற்க முடிவதில்லை என்பதையும் நடைமுறையில் காண முடிகின்றது.

மலையக மக்களிடையே சாதியம் பாரியளவில் இல்லை என்று மேலெழுந்தவாரியாகக் கூறுவோர் உண்டு. அதனை மறுத்து அங்குள்ள சாதியத்தைச் சுட்டிக் காட்டவே மேற்படி அம்சம் சுட்டிக்காட்டப் பட்டது. ஆனால் இது பற்றிய விரிவான ஆய்வுப் பார்வை அவசியமானதாகும். அதனை எதிர்காலத்தில் தனியாக நோக்க முடியும்.

### வடபுலத்தில் சாதியத்தின் தாக்கம்

வடபுலத்தில் 10ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் காலத்திற்குக் காலம் தமது அடிமை குடிமைகளுடன் வந்து குடியேறிய வேளாளர்களினாலேயே யாழ்ப்பாண தனி இராச்சியம் ஸ்தாபிக்கப்பட்டது. அவர்கள் இந்தியாவில் சாதியம் இறுக்கம் பெற்ற காலத்துக் கருத்தியல் சிந்தனை கொண்டவர்களாய் குடிபெயர்ந்து யாழ்ப்பாணம் வந்தவர்கள். பின்னரும்

www.padippakam.com



என்றென்றைக்கும் பேணி வளர்க்க ஏதுவாக, 'ஆரியச் சக்கரவர்த்திகள்' வரிசையில் அரச பரம்பரையைக் கொணர்ந்து கட்டி வளர்த்தனர். இவர்களின் வருகைக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் தமிழர்களும் சிங்களவர்களும் வாழ்ந்து வந்தனர். சைவத்தமிழ் ஆட்சி நிலைபேறடைய அதன்கீழ்த் தொடர்ந்தும் நீடித்திருக்க முடியாத பௌத்த சிங்களவர்கள் தெற்கு நோக்கிப் புலம்பெயர்ந்தனர் (பத்தாம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தில் பரவலாகக் காணப்பட்ட பௌத்த விகாரைகளும் கல்வெட்டுகளும்–கிடைநிலை அகழ்வாய்வினால் அறியப்பட்டவை–பௌத்த மக்கள் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த சுவடுகளாய் விளங்குகின்றன. குடா நாட்டு பௌத்தர்கள் எல்லோரும் சிங்களவர்களாக இருந்திருக்க அவசியமில்லை. தமிழகத்தில் பாண்டிநாட்டில் மாணிக்கவாசகர் காலத்தில் பௌத்தம் மேவி இருந்தது. அரசன் முன் நடந்த விவாதத்தில் ஈழத்திலிருந்து புத்த துறவிகள் சென்றதாகக் கூறப்படுகின்றது. மேலும் குடாநாட்டு புத்த ஸ்தூபிகள் தென்னிலங்கையில் இருப்பது போன்ற பெரியவையல்ல. அகழ்வாய்வில் அக்காலத்தை ஆராயும் கிடைநிலை ஆராய்வைத் தமிழர் விரும்பாதிருப்பதற்கு நியாயமான காரணமுண்டு. ஏறக்குறைய ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்திய வதிவிடத்தைத் தனது பேரின வெறிக்குத் தீனியாக்கும் பேரினவாத ஒடுக்குமுறை அரசின் வரலாற்றாய்வுகளைத் தமிழ் மக்கள் எவ்வாறு விரும்ப முடியும்? அவ்வாறே பேரின வெறியின் சரித்திரப் புரட்டுகளால் சிங்களவர் இரண்டாயிரத்தைநூறு ஆண்டுகளைக் கடந்த நிலைக்குத்து ஆய்வுகளை மேற்கொள்வதை வெறுக்கிறார்கள். பௌத்தத்தின் வருகைக்கு முன்னே, திராவிடப் பண்பாட்டில் வளர்ந்த மக்களின் இருக்கையை சிங்களப் பகுதிகளில் நிலைக்குத்து அகழ்வாய்வுகளால் காணமுடிந்ததே இதன் காரணமாகும். 'ஆரிய' மயக்கங்களும் தமிழரின் ஆக்கிரமிப்பே சிங்கள மக்கள் முகங்கொடுக்கிற ஒரே பிரச்சினை என்ற வரலாற்றுத் திரிபுகளும் சிங்கள மக்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்தியிருப்பதும் தவிர்க்க முடியாததே. இத்தகைய ஒரு பார்வை வரலாற்றாய்வர்கள் சிலரிடையே தற்போது மாற்றம் பெற்று வருகின்றது. இருப்பினும் இன வெறி வென்றடக்கப்பட்ட பின்னரே தமிழ் மக்கள் கிடைநிலை அகழ்வாய்வுகளையும் சிங்கள மக்கள் நிலைக்குத்து அகழ்வாய்வுகளையும் மகிழ்வோடு ஆதரித்து இலங்கையின் உண்மையான வரலாற்றை வெளிக்கொணர ஆர்வம் காட்டுவர்.

இவ்வாறு தொடர்ச்சியாக வெவ்வேறு காலங்களில் தத்தமது

www.padippakam.com



அடிமை குடிமைகளுடன் யாழ்ப்பாணத்தின் வெவ்வேறு பகுதிகளில் வேளாளர்கள் குடியேறியிருக்கிறார்கள். மதரீதியாக பிராமணர்களின் மேல் நிலை அனுமதிக்கப்பட்டபோதிலும் சமூக ரீதியாக வேளாளரே ஆதிக்கம் பெற்ற சக்தியாய் யாழ்ப்பாணத்தில் தொடர்ந்திருந்து வருகின்றனர். அவர்களுக்கு அடிமைகள் தேவைப்பட்ட போது காலத்துக்குக்காலம் இந்தியாவிலிருந்து விலைக்கு அடிமைகளைப் பெறும் நிலை இருந்திருக்கிறது. 1694-1696 இல் 3589 அடிமைகள் கொண்டுவந்து விற்கப்பட்டனர். இவ்வாறு விலைக்கு வாங்கப்பட்ட அடிமைகள் எந்தச் சுதந்திரமும் அற்றவர்களாய் வீட்டுச் சேவக முறைக்கு உட்பட்டிருந்துள்ளார்கள். விலைக்கு வாங்கிய இந்த அடிமைகளை ஒல்லாந்து ஆட்சியினருக்குத் தாம் செய்யவேண்டிய இராஜகாரியத்துக்கும் அனுப்பியுள்ளார்கள். இவர்கள் 'அடிமைகள்' என்றே அழைக்கப்பட்டனர். இவர்களை விட கிராமத்தில் தத்தமது குடும்பத்தோடு வாழும் தாழ்த்தப்பட்ட மக்களும் வேளாளரின் சிறைக்குடிகளாயே இருந்துள்ளனர். 1824 இன் குடிசன மதிப்பொன்று யாழ்ப்பாணத்தில் கோவிய-நளவ-பள்ள சிறைகள் 15,341 பேர் எனவும் பறங்கிச் சிறைகள் 18 பேர் எனவும் கம்பனிச் சிறைகள் 78 பேர் எனவும் காட்டுகிறது. இச் சிறைக்குடிகளை வேளாள நயினார்கள் 'அடிமைக் குட்டிகள்' என்றே 'செல்லமாக' அழைத்துக்கொள்வர். அத்தகைய 'அடிமைக் குட்டிகளில்' பிற நயினாரோ அவரது ஆட்களோ கைவைத்தால் தமக்கேற்பட்ட அவமானம் எனக்கருதி அவர் துடிப்பர்.

போத்துக்கேயரோ ஒல்லாந்தரோ அடிமை வியாபாரத்தையும் சாதியமைப்பையும் எந்தவகை மாற்றமுமின்றி அப்படியே பின்பற்றி வந்துள்ளார்கள். 'பறங்கிச் சிறை' 'கம்பனிச் சிறை' என்பன சாதியத்தால் அவர்கள் பெற்ற ஆதாயத்தின் வெளிப்பாடே. இவ்வாறு கம்பனிச் சிறைகளானோர் சாயத்தொழில், வெடிமருந்துத் தொழில்களுடன் தொடர்பு கொண்டதால் புடைவைத் தொழில் கிணறு வெட்டுந் தொழில் முதலியவற்றின் மூலம் புதியவகைத் தொழில்களில் ஈடுபடவும் பொருளாதார விருத்தியை ஏற்படுத்தவும் சுயாதீனமடையவும் தலைப்பட்டனர். இவர்களிடம் சாதியக் கட்டுக்கோப்புக்கு எதிரான உணர்வு மிக அதிகளவில் முளை விட்டு கிளர்ச்சி மனோபாவத்தை உருவாக்கியது.

இத்தகைய சூழ்நிலையும் ஆங்கிலேயர் 'அடிமை ஒழிப்புச் சட்டம்' உருவாக்கக் காரணமாயினும். பிரதானமாக அவர்கள் தமது முதலாளித்துவ உறவுகளைச் சிறிய அளவில் ஏற்படுத்தி சுதந்திரமான

www.padippakam.com



கூலிகளை உருவாக்குவதன் மூலம் சுரண்டலை விரிவுபடுத்த முயன்ற தனாலேயே 'ஜனநாயக பாரம்பரியத்தை' தோற்றுவிக்கும் வகையில் அடிமை ஒழிப்புச் சட்டத்தை ஏற்படுத்தினர். ஆங்கில ஆக்கிரமிப்பாளர்கள் ஆரம்பத்தில் தமது 'ஜனநாயகப் பாரம்பரியத்தை' வெளிக்காட்டியபோதி லும் விரைவாகவே தமது கொள்கையை மாற்றி, சாதி ஏற்றத்தாழ்வுகளைப் பேணும் வகையில் அரை நிலப்பிரபுத்துவ அமைப்பைத் தமது கொலனியக் கோட்பாட்டின் பின்களமாக்கிக் கொண்டார்கள். இந்த வகையிலே அவர்களது 'அடிமை ஒழிப்பு' முழுமையற்றதாய் அமைந்தது.

### அடிமை குடிமை முறையின் இறுக்கம்

எவ்வாறாயினும் சகலதரப்பு இலங்கையர்களிடமும் அடிமை குடிமை முறையின் பாதிப்பு இருந்தே வந்தது, இன்றும் இருந்து வருகி றது. இலங்கையில் அடிமை வியாபாரம் இருந்த காலத்துக்குச் சிறிது முன்னரே தென்னிந்தியாவிலும் அடிமை வியாபாரம் தோற்றம் பெற்றிரு ந்தது.

தமது சுயாதீனத்தை முற்றிலும் இழந்த அடிமைகள் பற்றிய தகவலை தமிழகத்தில் சோழப்பேரரசு காலத்திலிருந்தே காணமுடிகிறது. கி.பி. 948 இல் அடிமைப் பெண்களை கோயிலுக்குக் கொடுத்தது பற்றிய முதற் கல்வெட்டுத் தமிழகத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. பிந்திய கல் வெட்டு கி.பி. 1568 இற்குரியது. இடையே பல கல்வெட்டுக்கள் தமிழக த்தின் 'அடிமைகள்' பற்றிய தகவல்களைத் தருகின்றன. இவ்வாறு அடிமைகளாவது பெரும்பாலும் பொருளாதார ரீதியாகத் தொடர்ந்து சுயமாக வாழ முடியாமை காரணமாகும். கடன் அடைக்க முடியாதோர் அடிமைகளாக்கப்பட்டனர். சிலர் தம்மைத்தாமே அடிமைகளாய் விற்றிருக் கிறார்கள். தனது முழுச் சந்ததிகளையே அடிமைகளாய் விற்ற சந்தர்ப்ப ங்கள் உண்டு. (இதில் உரிமை கொண்டாடிக் கொத்தடிமைகளை வைத்திருக்கும் வழக்கம் இன்றைக்கும் இந்தியாவில் உண்டு). 18ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த தாயுமானவர். (1706-44), குடும்பத்தோடு அடிமையாவதைக் குறிக்கும். 'கொத்தடிமை' என்னும் சொல்லை முதன் முதலில் பாடலில் பயன்படுத்தியுள்ளார். 'சித்தந்தெளிந்து சிவமானோர் எல்லோர்க்குங் 'கொத்தடிமை'யான 'குடி' நான் பராபரமே" என்னும் அவருடைய பராபரக் கண்ணியில் (148) குடும்பத்தோடு அடிமை யாவது என்னுங் கருத்தைக் 'குடி' என்னும் சொல் குறித்தது. மேலும் குடி என்பது குலம் பரம்பரை என்று அறியப்படுத்துகிறது. குடியும் குடித்த னமும்

www.padippakam.com



என்று வரும் போது மட்டும் குடும்பத்தைக் குறிக்கும். மற்றப்படி குடிகொடுத்த என்பதில் குடி குடும்பத்தை விட விரிவானது. 1818 இல் கன்னட நாட்டில் 82,000 அடிமைகளும் மலபாரில் 1,00.000 அடிமைகளும் இருந்ததைக் குறிக்கும் கணிப்பீடொன்று உண்டு. அடிமைச் சட்டம் இந்தியாவில் 1829இல் நீக்கப்பட்டது. பின்னரும் 1834இல் திருவாங்கூரிலே அடிமைச் சந்தை 'பகிரங்கமாய்' இயங்கியிருக்கிறது. 1978 இலும் 'கொத்தடிமை நீக்கம்' என்ற சட்டம் ஒன்றைக் கொண்டுவரவேண்டியிருந்தது. வர்க்கங்களை ஒழிக்கும் வெகுஜனப் புரட்சியுடனேயே இதற்கான இறுதிச் 'சட்ட ஆக்கம்' (சட்டம் போடும் தேவையே இல்லாது போதல்) ஏற்படும்போலும்?

இத்தகைய அடிமைகள் விவகாரம் ஒருவகையில் சாதி முறைக்குப் புறம்பானதுங் கூட. கி.பி. 1201 இல் ஏற்பட்ட பஞ்சத்தில் பலரும் அடிமைகளாகியுள்ளனர். இதில் பல சாதிப்பிரிவினரும் அடங்குவர். பிராமணர்களில் ஒருபகுதியினர் கூட அடிமைகள் ஆகியுள்ளதைக் கல்வெட்டுக்களில் இருந்து அறியமுடியும்– இலக்கிய ரீதியான ஆதாரமாக சுந்தரமூர்த்தி நாயனார் கதையினைக் கொள்ளலாம். ஆயினும் பொதுவாகவே இத்தகைய பஞ்சங்களால் ஏதுமற்ற தாழ்த்தப்பட்ட மக்களே பெரிதும் பாதிக்கப்பட்டனர் என்பதால் அவர்களே பெரும்பகுதியான 'அடிமை வியாபாரப் பொருட்களாய்' இருந்துள்ளனர்.

சிறைக்குடிகள் அடிமைகள் போலல்லாது சுயமாகக் குடும்பம் நடத்தும் 'சுதந்திரர்களாய்' வெளித்தோற்றத்துக்குக் காணப்படினும், நிலத்துண்டுகளை விற்கும்போது அக் குடிமைகளும் சேர்த்தே (பொருட்களைப் போலக் கணிக்கப்பட்டு) விற்கப்பட்டனர். ஒரு உயர் ஆதிக்க வேளாளனின் அந்தஸ்த்து அவனது அடிமை குடிமைகளை வைத்தே பெரிதும் கணிக்கப்பட்டு வந்திருக்கிறது. அந்த வகையிலே ஒருவனுக்குச் சொந்தமான கால்நடைகள் போலவே தாழ்த்தப்பட்ட மக்களான சிறைக் குடிகளும் கணிக்கப்பட்டிருக்கிறார்கள். வேறு ஊர்களில் உயர்சாதி வேளாளர் திருமணம் செய்யும் போது குறிப்பிட்ட குடும்பங்களுக்கு அடிமை குடிமைகள் இருக்கின்றனவா என்பது முக்கியமானதாகும். அதனை வெளிப்படுத்தும் வகையில் திருமணச் சடங்கில் இரு வீட்டு வண்ணார் அம்பட்டர் இருப்பது அவசியமாகும் என்ற நடைமுறை நீடித்து வந்துள்ளது.

சிறைக்குடிகளில் வீட்டினுள் சென்று வேளாளனைத் தொட்டுச் சேவகம் புரிவோர் ஒருபகுதியினர். இவர்களில் கோவியர் யாழ்ப்பா

www.padippakam.com



ணத்தில் முக்கிய பங்கு வகிப்போராவர். அவ்வாறே வீடுகளுக்குள்ளும், கோயில்களுக்குள்ளும் சென்று சேவகம் புரிய வேண்டியவர்களாக வண்ணார் இருந்தனர். இதன் காரணமாக கோவியரும் வண்ணாரும் சாதியப் படி நிலையில் தாழ்த்தப்பட்டோருக்கு சற்று மேலடுக்கில் வைக்கப்பட்ட னர். அதேவேளை அடிமை குடிமை வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டு பாகுபாட்டுடன் நடாத்தப்பட்டனர். பள்ளர், நளவர், பறையர், அம்பட் டர், துரும்பர், மற்றும் உப சாதியினர், 'பஞ்சமர்' எனும் பெயரில் வீட்டுக்கு வெளியே வைக்கப்பட்டனர். இவர்களில் அம்பட்டர் தொட்டுச் சேவகம் செய்யும் தேவையிருந்த போதிலும் அவர்கள் வீட்டுக்கு வெளியே வைத்துக் கொள்ளப்பட்டனர். விசேட சடங்குகளில் சிறைக்குடிகளின் பணிகள் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தன. அதன்படி கோவியர் சாவீட்டிற்கான இழவு அறிவித்தல், சமையல் வேலை செய்தல், பிரேதம் காவுதல் போன்ற கட மைகளுக்குரியவர், கோவியப் பெண்கள், சாவீட்டிற்கு வரும் பெண்க ளோடு மாரடித்து அழவேண்டும். கோவியக் குடிகளில் 'குடிமை அதிகா ரம்' பெற்ற ஒருவன் முன்னிலையில் நின்று ஏனைய சிறைக்குடிகள் அனைவரதும் ஊழியங்களையும் கவனிக்கவேண்டும். வண்ணார் பந்தலுக்கு வெள்ளை கட்டல், நில பாவாடை விரித்தல், மாற்றுத்துணி கொடுத்தல் போன்ற பணிகளுக்குரியவர். அம்பட்டர் தீச்சட்டி காவிப் பொரி எறிவர். பள்ளர் பிரேதம் எரித்தற்கான விறகுகளைப் பிரேத ஊர் வலத்தின் முன்னே சுமந்து செல்வர். (இது 'கட்டை குத்தி காவுதல்' எனப்படும்). பறையர் பறைமேளம் அடிப்பதோடு பிரேதத்தை எரிப்பர். நளவர் இளநீர், தென்னங்குருத்து வெட்டுவர்.

யாழ்ப்பாணத்தில் தொமஸ் வன்றீ எனும் ஒல்லாந்து கொமா ண்டர் 1697ல் எழுதிய அறிக்கையொன்றில் ஒவ்வொரு சாதிப் பிரிவினரும் செய்ய வேண்டிய 'இராஜகாரியத்தைக்' குறித்திருந்தார். அதில் நாற்பதிற்கு மேற்பட்ட சாதிகள் பற்றிக் குறிப்பிடப்பட்டிருந்தது.

| | | |
|---|---|---|
| பிராமணர் | வாணிபர் | பரவர் |
| வேளாளர் | சாயக்காரர் | முதலி |
| மடப்பள்ளிவேளாளர் | கொல்லர் | நம்பி |
| மாதுவர் | தட்டார் | சாணார் |
| கோயிலார் | தச்சர் | நாடார் |
| அகம்படியார் | சிற்பர் | பண்டாரம் |

www.padippakam.com



| | | |
|---|---|---|
| தவசிகள் | கன்னார் | பண்டாரப்பிள்ளை |
| செட்டி | கம்மாளர் | வண்ணார் |
| சாண்டார் | முக்குவர் | அம்பட்டர் |
| கோவியர் | கரையார் | குசவர் |
| தனக்காரர் | திமிலர் | கடையர் |
| கைக்குளவர் | செம்படவர் | நளவர் |
| துரும்பர் | வலையர் | பள்ளர் |
| பரதேசிகள் | பல்லிவிலிகள் | பறையர் |
| வன்னியர் | வேடர் | சீர்பாதக்காரர் |

தாழ்த்தப்பட்ட மக்களான பஞ்சமர்களுக்குப் பல உரிமைகள் மறுக்கப் பட்டிருந்தன.

அவற்றில் முக்கியமானவை:-

1. மேலங்கி அணியக் கூடாது.
2. கணுக்கால் வரைக்குந் துண்டு (வேட்டி) கட்டக்கூடாது.
3. தோளில் துண்டு (சால்வை) போடக்கூடாது.
4. பெண்கள் மேற்சட்டை போடக்கூடாது.
5. தாவணி போடக்கூடாது.
6. வீதிகளிலும் பொது இடங்களிலும் கண்டபடி நடமாடக்கூடாது. குறிப் பிட்ட வீதிகளில் முற்றாகவே நடமாடுதல் தடைசெய்யப்பட்டது. ஏனையவற் றிலும். தமது வருகையை உணர்த்தும் வகையில் காவோலை இழுத்துச் செல்ல வேண்டும்.
7. குடிசைகள் அமைப்பதில் உள்ள கட்டுப்பாடுகளை அனுசரித்தே 'வீடுகள்' கட்டவேண்டும்.
8. நகைகள் அணியக்கூடாது.
9. திருமணத்தில் தாலிகட்டக் கூடாது.
10. விசேட சடங்குகளின் போது வெள்ளைகட்டக் கூடாது.
11. உயர்சாதியினரின் பெயர்களை வைக்கக் கூடாது.
12. பிரேதங்களை தகனம் செய்யாது புதைக்கவேண்டும்.
13. உயர்சாதியினரின் சுடலைகளுக்குள் புதைக்கக்கூடாது.
14. நன்மை தீமைகளில் வாத்தியங்கள் பயன்படுத்தக்கூடாது.
15. உயர்சாதியினரின் குளங்களைப் பாவிக்கக்கூடாது.
16. குடை பிடிக்கக்கூடாது.
17. பாதணிகள் அணியக் கூடாது.

www.padippakam.com



அதற்கெதிரான போராட்டங்களும்

18. கல்வி கற்க கூடாது.

19. உயர்சாதியினரின் தெய்வங்களை தமது கோயில்களில் பிரதிஷ்டை செய்யக்கூடாது.

20. உயர்சாதியினரின் கோயிலுக்குள் செல்லக்கூடாது.

21. கோயிலுக்கு தேங்காய் அடிக்கக்கூடாது.

22. தேனீர்க் கடைகள் உணவகங்களுக்குள் செல்லக் கூடாது.

23. பொதுக்கிணறுகளில் தண்ணீர் அள்ளக்கூடாது.

24. சைக்கிள் மோட்டார் கார் போன்ற வாகனங்களில் பிரயாணம் செய்யக் கூடாது. அவற்றை செலுத்தவும் கூடாது.

25. பஸ் வண்டிகளில் சமனாக ஆசனங்களில் உட்காரக்கூடாது.

26. பிற்காலங்களில் பாடசாலைகளில் அனுமதியிருந்தபோதும் ஆசனங்களில் உட்காரக் கூடாது.

இவ்வாறு நால்வர்ண சாதியினருக்கு அப்பாலான ஐந்தாவது நிலைக்குள்ளான பஞ்சமர்களுக்கு (தாழ்த்தப்பட்ட மக்களுக்கு) விதிக்கப் பட்ட தீண்டாமை அம்சங்கள் ஏனைய சிறைகளுக்கு முழுமையாக இல்லையாயினும், அவர்கட்கும் உரிமை வரையறை செய்யப்பட்டே இருந்தது. ஒவ்வொரு சாதியினருக்கும் கோயில்களில் வணங்க வேண்டிய தெய்வங்களும் வேறுபட்டிருந்தன. எடுத்துக்காட்டாக. சில சாதியினருக்கு வகுத்தொதுக்கப்பட்ட கடவுளரது பட்டியலைப் பார்க்கலாம்:-

கோவியர் – ஐயனார்
நளவர் – கூட்டத்தார்
பள்ளர் – அண்ணன்மார்
பறையர் – வல்லியக்கன்
வண்ணார் – பெரியதம்பிரான்
அம்பட்டர் – வயிரவர்
மடப்பள்ளி – பிள்ளையார்
தச்சர், தட்டார், கொல்லர், கன்னார், கம்மாளர் – காளி
முதலி, கரையார், முக்குவர், சிவியார் – பத்திரகாளி

இவ்வாறு சாதி ரீதியாக வேறுபடும் கடவுள்கள் கிறிஸ்தவத்தைத் தழுவியோரிடமும் பாதிப்பையேற்படுத்தியிருந்தது. கத்தோலிக்கர் மட்டுமே உள்ள ஊர்களிலுங்கூடச் சாதி ரீதியாக வெவ்வேறு தேவாலயங்கள் அமைக்கப்பட்டன.

சைவ வேளாளர்களே சிவனைத் தமது கோயில்களில் பிரதிஷ்டை செய்ய முடியும். யாழ்ப்பாணத்தில் பள்ளர் வணங்கும்

www.padippakam.com



அண்ணன் மார் வணக்கம் இந்தியாவில் கொங்கு நாட்டில் வேளாளரிடமே தொடங்கியிருந்தது. சோழராட்சிக் காலத்தில கொங்குநாட்டில் குடியேறிய வேளாளர், சுதேசிகளாயிருந்த வேடர்களுடன் கடுஞ்சமரை எதிர்நோக்கினர். அத்த கைய சமரில் வேளாளத் தலைவர்களான பொன் னர்-சங்கர் என் போர் 'வீரமரணம்' அடைந்த பின், காலப்போக்கில் வேடரும் வேளாளரும் சமாதானமாக வாழும்போது வேடர்களும் 'அண்ணன்மார்களை' தமது நடுகல் வரிசையில் சேர்த்து கிராமக் கடவுளர்களாய் வணங்கினர். அவ்வாறே வேடர்களின் நடுகல் வணக்க வீரத் தெய்வங்களுக்கும் வேளாளர் தமது கோயில்களில் ஓரிடங் கொடுத்திருந்தனர். இன்று பள்ளர்களின் விசேட தெய்வமாக 'அண்ணன்மார்' விளங்குவது ஆராயப்படவேண்டிய விடயமாகும். (மலையகத்தில் பொன்னர்-சங்கர் கூத்து பாரம்பரியக் கலையாக இன்றும் இருந்து வருகிறது).

இவ்வாறு வகுக்கப்பட்டுள்ள கடமைகளிலும் உரிமைக் கட்டுப்பாடுகளிலும் பிறழ்வு காணப்படும்போது தயவு தாட்சண்யமின்றி தண்டனைகளும் இருந்து வந்துள்ளன. சிறைக்குடி ஒருவன் இவற்றை மீறுவது அறியப்படின் அவன் ஆதிக்க வேளாளரின் வீட்டுக்கு அழைக்கப் பட்டு மரத்தில் கட்டிவைக்கப்பட்டு சவுக்கால் அடிக்கப்படுவான் (வீட்டுக்கு அனுப்பும் போது எண்ணெய்-தானியங்கள் கொடுத்துவிடுவார்கள். நயினாரிடமிருந்து எண்ணெய் தானியங்கள் கிடைப்பதால் இத் தண்டனை யை ஒரு கொடுமையாக சிறைக்குடி கருதாத நிலையும் இருந்து வந்தது). சிறைக்குடிகளை தமது விசேட சடங்குகளின் போது வேளாளர் காட்டிக் கொள்வதில் பெருமை கொள்வர். திருமணப் பந்தல்களில் எதிரும் புதிருமாய் இருபகுதிச் சிறைக்குடிகளும் வைக்கப்பட்டிருப்பர். எதிர்மறையாக நயினாருக்கு கீழாக இருப்பதைச் சிறைக் குடிகள் பெருமையாகக் கருதும் நிலைமையும் இருந்து வந்திருக்கிறது.

மட்டக்களப்பில் முக்குவர் சட்டத்தின் வாயிலாக சாதிய தர்மத்தைப் பேணிப் பாதுகாத்தது போன்றே யாழ்ப்பாணத்திலும் தேச வழமைச் சட்டத்தின் மூலமாக சாதியத்தை இறுக்கமானதாய் ஒல்லாந்தர் பேணி வைத்துக்கொண்டனர். 'அடிமைகள் ஒழிப்புச் சட்டத்தை' கொண்டு வந்த ஆங்கிலேயரும் இச் சட்டங்களைச் சில பல விடயங்களில் ஏற்றுக் கொண்டிருந்தனர். இன்றுவரையும் இச்சட்டங்கள் இருந்து வருகின்றன.

www.padippakam.com



ஒரு சிறுபான்மைத் தேசிய இனம் என்ற வகையில் தேச வழமைச் சட்டம் சிற்சில விடயங்களில் அனுமதிக்கப்படுதல் அவசியமாயினும் பெண்ண டக்குமுறை அம்சம் முற்றாகக் களைந்தெறியப்படவேண்டியது என்பது கவனத்திற்குரியதாகும்.

இவ்விடத்தில் தேசவழமைச் சட்டத்தின் நான்காவது பிரிவானது சாதியொடுக்கு முறையை நியாயப்படுத்திப் பாதுகாப்பதைக் காணமுடியும். அவ் அம்சம் ஆலயப் பிரவேசப் போராட்டத்தின் போது சட்டவாதத்திற்கு வந்ததாயினும் 1957இல் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சமூகக் குறைபாடுகள் ஒழிப்புச் சட்டத்தின் வாயிலாக அதன் வலுக்குறைக்கப்பட்டது. இங்கே பாராளுமன்றச் சட்டமே வலுக்கூடியதாயினும் அதனை நடைமுறைப்படுத்துவதற்கு வெகுஜன எழுச்சியோடான போராட்டம் அவசியமாய் இருந்ததென்பது (இதனைப் பின்னால் பார்ப்போம்) கவனத்திற்குரிய அம்சமாகும்.

“தனது அடிமைத் தனத்தை உணர்ந்து கொண்டு. அதனைத் தகர்த்தெறிய ஆயுதமேந்திப் போராட முனையும்போது ஒருவன் தனது அடிமைத்தனத்தின் அரைப்பங்கைத் தகர்த்துவிடுவான். அவனே ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றிச் சுரண்டலை முற்றாக அழித்தொழிக்கும் போது அடிமைத்தனம் பூண்டோடு ஒழிக்கப்பட்டுவிடும்” என்ற மாமேதை லெனின் வார்த்தைகள் சர்வ தேசப் பாட்டாளி வர்க்கத்தின் செயல்பூர்வ மான தத்துவமாகிய சகாப்தம் இது. தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியிலேயே பெருந்தொகையான தொழிலாளர்கள் உள்ளனர். கிராமங்களில் தனிப் பட்டிருந்த உழைப்பாளர்களான தாழ்த்தப்பட்ட மக்கள் நவீன தொழில்துறையுடன் தொடர்புகொண்ட தமது சகாக்களான பாட்டாளி வர்க்கத்தினருடன் உறவு வைத்துக்கொண்டிருந்தனர். தாழ்த்தப்பட்ட வகுப்பினர் நல அறிக்கை (இந்திய அரசு 1975) ஏறத்தாழ இந்தியாவின் மூன்றில் ஒரு பங்கினரான தாழ்த்தப்பட்ட மக்கள் (இருபது கோடி மக்கள்) பெரிதும் நிலமற்ற கூலி விவசாயிகளாகவே இருக்கின்றனர் என்றும் இவர்களில் உடல் உழைப்புக்கேற்ற வயது வந்தவர்களில் அதாவது ஏறத்தாழப் 10 வயதிலிருந்து நிலத்திலே உழைப்பவர் தொகை 95 சதவீதம் என்றும் இந்தியாவிலுள்ள நிலமற்ற கூலி விவசாயிகளின் தொகையில் 70 சதவீதத்திற்கும் மேற்பட்டவர்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்கள் என்றும் கூறுகிறது. இந்த விகிதாசாரம் அதிக வேறுபாடின்றி யாழ்ப்பாணத்துக்கும் பொருந்தக்கூடியதே. இத்தகைய தாக்கமான சமூக சக்தி தமது சாதிய

www.padippakam.com



வர்க்க நிலையை உணர்ந்து உரியவாறு முன்னோக்கிச் செல்வதை யாராலும் தடுக்கவியலாது.

யாழ்ப்பாணத்தின் கடல் வளத்தையும், கற்பகதருவாகிய பனை வளத்தையும் ஆராய்ந்து இந்த மண்ணின் அபிவிருத்தியை மேம்படுத்த முயலும்போது 'சாதி முத்திரை' குத்தப்பட்டுவிடுமென்றால் படித்த தாழ்த்தப்பட்ட அல்லது உயர்த்தப்பட்ட இளம் தலைமுறையினர் முன்வருவார்களா? இது காரணமாகத் தீண்டாமையும் சாதியமைப்பும் தகர்க்கப்படுவது தமது அடுத்த கட்ட வளர்ச்சிக்கு உடனடியாக அவசியமானது என்ற உணர்வு மாக்ஸிஸவாதிகளிடம் மட்டுமன்றி ஜனநாயக சக்திகளிட மும் ஏற்படலாயிற்று.

சாதியமைப்பைத் தகர்ப்பதற்குரிய ஆரம்ப நிலைகளுக்கான சமூக-பொருளாதார நிலைமைகள் புறநிலை ரீதியாகக் கனிந்து வந்தன. ஆயினும் எமது சமூகத்தில் புரையோடி நாற்றமெடுத்த அந்த சாதியமைப்பின் இறுக்கம் மிகத் தாக்கமான எதிர்ப்பைக் காட்டிநின்றது. இக் காரண த்தினால், சாதியமைப்பைத் தகர்க்கும் தொடக்க நிலைப் போராட்ட வரலாற்றுக்கான கால கட்டத்தில் சாதியத்தின் தாக்கம் எவ்வாறிருந்தது என்பதைப் புரிந்து கொள்வது அவசியமானதாகும்.

● ● ●

# 5

# இலங்கைத் தமிழர்கள் மத்தியில் சாதியும் தீண்டாமையும்

இந்தியாவிற் சாதியம் தோற்றம் பெற்று வளர்ச்சியடைந்தமை பற்றியும் அதன் விரிவு எவ்வாறு அமைந்து கொண்டது என்பதையும் முன்னைய அத்தியாயங்களிலும் காண முடிந்தது. அத்தகைய சாதியம் இலங்கையில் குறிப்பாகத் தமிழர்கள் மத்தியில் எந்தளவிற்கு ஆழவேர் பதித்துக் கொண்டது என்பதை இவ் அத்தியாயத்தில் விரிவாகக் காண முற்படுவோம்.

இலங்கையில் வாழ்ந்து வந்த ஆதிக்குடியினருடன் இந்தியாவில் இருந்து காலத்திற்கு காலம் வந்த குடிபெயர்ச்சியாளர்கள் கலந்தும் தனித்தும் வாழ்ந்து வந்துள்ளனர். கடந்த மூவாயிரம் ஆண்டுகால வரலாற்றில் தமிழ், சிங்கள முஸ்லிம், மலையகத் தமிழ் மக்களின் வரலாற்று வாழ்வியல் தொடர்ச்சியானது இவ்வாறே அமைந்து கொண்டது. இத்தகைய வரலாற்றுச் சூழலிலேயே வடக்கு கிழக்கு தமிழர்களின் பாரம்பரிய வாழ்விடங்களாகி தொடர்ச்சியான பிரதேசங்களாக விருத்தி பெற்றும் வந்தன. இத்தகைய தமிழர்களின் வரலாற்று வளர்ச்சியில் சாதியம் பிரிக்க முடியாத ஒரு அமைப்பாக நீடித்து வந்திருக்கிறது. இலங்கையில் சாதியத்தையும் தீண்டாமையையும் எடுத்து நோக்கும் போது தமிழர்கள் மத்தியில் குறிப்பாக வடக்கில் இறுக்கமுடையதாகவும் கிழக்கில் நெகிழ்ச்சியுடையதாகவும் இருந்து வந்திருக்கிறது. அதேவேளை சிங்கள மக்கள் மத்தியிலும் மலையகத் தமிழர்களிடையேயும் வெவ்வேறு அளவுகளில் அது இருந்து வந்தமை பற்றி முன் அத்தியாயங்களில் பார்த்தோம்.

www.padippakam.com



இந்திய பெரு நிலப்பரப்பிலிருந்து இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட சாதிய அமைப்பானது கருத்தியல் அடிப்படையிலும் சிந்தனை, செயற்பாட்டு வழிகளிலும் ஒன்றாகவே இருந்தது. அதேவேளை இலங்கையின் விசேட சூழலுக்கு ஏற்ப சாதியமும் தீண்டாமையும் முன்னெடுக்கப்பட்டன.

இந்தியாவில் பிராமணியமே சாதியத்தின் மூலாதாரமாக அமைந்தது. பிராமணர்களே சாதிய தீண்டாமையின் உச்ச நிலைப் பாதுகாப்பாளர்களாகவும் வழி நடாத்தி முன்னெடுப்பவர்களாகவும் இருந்தனர். ஆனால் இலங்கையில் பிராமணர்களின் உச்ச நிலையின் இடத்தை உயர் வேளாளர்களே பெற்றனர். தமிழர்கள் மத்தியில் சைவ வேளாளர்களும் சிங்களவர்களிடையே "கொய்கம" சாதியினரும் சாதியத்தின் பாதுகாவலர்களாக இருந்து ஆதிக்கம் செலுத்தி வந்தனர். வர்க்க ரீதியில் சொத்து, சுகம் அதிகாரம் படைத்த நிலவுடைமையாளர்களாக அவர்களே விளங்கினர் என்பது அடிப்படையானதாகும்.

இலங்கைத் தமிழர்களிடையே குறிப்பாக வடபுலத்து தமிழர்களிடையே, அமைந்திருந்த சாதியப் படிநிலையினை இந்தியச் சூழலில் காணப்படுவது போன்ற ஒரு கூர்ங்கோண வடிவில் காண இயலும். உச்ச நிலையில் ஆதிக்க உயர் வேளாளர் இருந்தனர். அவர்களுக்கு அடுத்ததாக எண்ணிக்கையில் குறைவான பிராமணர்கள் இருந்தனர். அடுத்தடுத்த படி நிலையில் பலதர நிலை வேளாளர்கள் எனப்படுவோரும் அவர்களை ஒத்தவர்களும் இருந்தனர். உடல் உழைப்பில் ஈடுபடும் சிறு நில குத்தகை விவசாயிகளான வேளாளர்கள் கணிசமானவர்களாவர். ஆனால் சாதிய ரீதியில் அவர்கள் உயர்வானவர்களாகவே கொள்ளப்படுவர். இவர்கள் அனைவரையும் உயர் சாதியினர் என்ற வகைக்குள் உள்ளடக்கிக் கொள்ள முடியும். இவர்களுடைய எண்ணிக்கையைத் தமிழர் சனத் தொகையில் சுமார் முப்பந்தைந்து வீதமானவர்களாகக் கொள்ள முடியும்.

அடுத்த படிநிலை, கைவினைச் சாதிகளாக இருந்து சேவைகள் வழங்குவோராகக் கொள்ளப்படும் மக்களைக் கொண்டதாகும். இவர்களே இடைநிலைச் சாதியினர் என்று கூறப்படுவோராவர். உலோக. மர. மண் மற்றும் கட்டிட வேலை செய்வோர் சுயமாகத் தொழில் செய்வோர். கோவில் தொண்டு புரிவோர் போன்றவர்கள் இடை நிலைச் சாதிகளாகக் கொள்ளக் கூடியவர்கள்.

www.padippakam.com



ஆரம்பத்தில் கோவியர் சாதியானது அடிமைச் சாதியாக கணிக்கப்பட்ட போதிலும் காலப்போக்கில் அச்சாதி இடை நிலைச் சாதிய வரம்பிற்குள் இணைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். இவ் இடைநிலைச் சாதிகள் யாவும் படிநிலையில் ஒன்றன் கீழ் ஒன்றாக இருந்து வருமாறு வகுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக் கதாகும். இவர்களை உயர்வேளாள ஆதிக்கத்திற்கான தொண்டூழியச் சாதிகளாகவே கொள்ள முடியும். இவ் இடைநிலைச் சாதியினரின் எண்ணிக்கை முப்பத்தைந்து வீதத்தினராகக் கொள்ள முடியும். இதற்கு அடுத்த நிலையில் அதாவது அடி நிலைச் சாதிகளாக தாழ்த்தப்பட்ட சாதிகளைச் சேர்ந்த மக்களைக் காண இயலும். பஞ்சமர் என்பதன் அர்த்தம் நான்கு வர்ணங்களுக்கு வெளியே உள்ள ஐந்தாவது பிரிவினரான தாழ்த்தப்பட்ட தீண்டப்படாத சாதிகளைச் சேர்ந்த பள்ளர் ,நளவர், பறையர், வண்ணார், அம்பட்டர், துரும்பர், சக்கிலியப், பறையர் என்போர் பஞ்சமராகக் கருதப்பட்டனர். ஆனால் உயர் வேளாள ஆதிக்க சக்திகளின் நேரடிக் குடிமைகளாக இருக்க வேண்டிய தேவையின் பொருட்டு வண்ணார், அம்பட்டர் சாதியினர் சில சலுகைகளுக்கு உரிமை கொண்டிருந்தனர். இருப்பினும் சாராம்சத்தில் அவர்களும் தாழ்த்தப்பட்டோர் என்ற வரையறைக்குள் உள்ளவர்களேயாவர். இவ்வாறான தாழ்த்தப்பட்ட மக்களின் எண்ணிக்கை சுமார் முப்பது வீதத்தை உள்ளடக்குவதாகும். இங்கே கவனிக்கப்பட வேண்டியது யாதெனில் இந்தியாவைப் போன்று இலங்கையில் சாதியப் படிநிலையில் உள்ள மக்கள் பற்றிய அரசாங்கப் புள்ளி விபரம் எதுவும் கிடையாது. அரசியல் அமைப்பிலோ அன்றி அரசாங்க ஆவணங்களிலோ சாதிகள் பற்றித் துல்லியமாகக் குறிப்பிடுவதோ கணக்கிடுவதோ அதன் அடிப்படையில் அரசியல் பொருளாதார கல்வி உத்தியோக வாய்ப்புகளில் சலுகை வழங்கப்படுவதோ ஒருபோதும் இருந்ததில்லை. இந்தியாவில் இப்பொழுதும் நடைமுறையில் இருந்து வரும் தாழ்த்தப்பட்டோர் பிற்படுத்தப்பட்டோர் அதிகம் பிற்படுத்தப்பட்டோர் போன்ற பகுப்பும் இடஒதுக்கீடும் சலுகைகளும் இங்கு இருந்ததில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். பிறப்பு இறப்பு திருமணம் போன்றவற்றுக்கான அரசாங்க ஆவணங்களில் தொழில் கேட்கப்படும். அதனால் அத் தொழில் களில் இருந்து சாதிகளை அடையாளம் காணக் கூடியதாக இருந்தது. அவ்வாறே பெயர்களின் மூலமும் பெருமளவிற்குத் தாழ்த்தப்பட்ட மக்களை அடையாளம் காணமுடிந்தது. இந்த நிலை இப்பொழுது இல்லா விடினும்

www.padippakam.com



பழைய ஆவணங்களில் வெளிப்படுவதைக் காணலாம். இந்நிலை சாதகபாதக அம்சங்களைக் கொண்டதாகவே இருந்து வந்துள்ளது.

எனவே தாழ்த்தப்பட்ட மக்கள் பொருளாதார, அரசியல், கல்வி, தொழில் வாய்ப்புகள் மறுக்கப்பட்டு பண்பாட்டம்சங்கள் சமத்துவ மாகப் பின்பற்றப்படுவது நிராகரிக்கப்பட்ட சூழலிலேயே தாழ்த்தப்பட்டவர் கள் அல்லது பஞ்சமர்கள் என்ற பட்டை நாமத்துடன் ஆண்டாண்டு காலமாக சாதியத்தால் ஒடுக்கப்பட்டு வந்தனர். இன்றுங் கூட அவற்றின் நேரடி, மறைமுகத் தாக்கங்களிலும் பாதிப்புகளிலும் இருந்து விடுபட முடியாத நிலை தொடர்கின்றது. இவற்றை சற்று விரிவாக நோக்குவது தேவை யானதாகும்.

வடபுலம் இயற்கை அமைப்பில் வரண்ட பிரதேசமும் வானம் பார்த்த விவசாயப் பூமியுமாகும். நிலத்தடி நீர் மூலமான விவசாயம் படிப்படி யாக வளர்ந்து வந்தது. வடக்கின் விவசாய உற்பத்தியில் தாழ்த்தப்பட்ட மக்களே கூலி விவசாயிகளாகவும் குத்தகை விவசாயிகளாகவும் இருந்து வருகின்றனர். கூலி விவசாயிகளில் பெண்கள் பிரதான பாத்திரம் வகித்து வந்துள்ளனர். ஆனால் அவர்களுக்குரிய நாட்கூலி மிகக் குறைவான வையாகும். ஆண்களுக்கு வழங்கப்படும் நாட்கூலியின் நான்கின் ஒரு பகுதியே பெண்களுக்கு வழங்கப்படுகின்றது. இவ்வாறு தாழ்த்தப்பட்ட பெண்களின் உழைப்பு, சாதி–வர்க்கம்–பெண் என்ற மூன்று நிலைகளில் சுரண்டி அபகரிக்கப்பட்டு வந்த நிலை நீடித்து நிலைக்கின்றது.

வன்னிப் பிரதேசத்தில் குளங்களின் மூலமான நீர்ப்பாசன முறையும் விரிவு பெற்றது. இவற்றில் கூலி விவசாயிகளாக தாழ்த்தப்பட்ட மக்களே அமைந்தனர். வன்னிப் பிரதேசங்களில் அரச காணிகள் வழங் கப்பட்டு விவசாயக் குடியேற்றத் திட்டங்கள் வந்த வேளைகளில் உயர்சாதி வேளாள அதிகாரிகளினால் தாழ்த்தப்பட்ட மக்கள் அடையாளம் காணப் பட்டு புறக்கணிக்கப்பட்ட நிலை அறுபதுகள் வரை நீடித்தது. பின்பு மிகக்குறைவாக வழங்கப்பட்ட குடியேற்றத் திட்ட நிலங்களிலும் சாதிய அடையாளங்கள் பேணப்பட்டன.

வடக்கின் அடையாளமாகக் கொள்ளப்படுவது வடபுலத்து "கற்பகதரு"வான பனை வளமாகும். இதனுடன் தென்னைமர வளர்ச்சியும் வடக்கில் உண்டு. இப் பனை தென்னை வளங்களில் உழைப்போராக உள்ளவர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் பிரிவைச் சேர்ந்தோர்ரேயாவர்.

www.padippakam.com



இத் தென்னை பனை என்பனவற்றிலிருந்து கள் இறக்கு தலையும் ஏனைய தெங்கு பனை உற்பத்திகளைக் குடிசைக் கைத்தொழில் களாகச் செய்து விற்பனையாக்குவதிலும் தாழ்த்தப்பட்ட மக்களில் இர ண்டு சாதி அடையாளம் கொண்டோரே ஈடுபட்டு வந்துள்ளனர். ஏனைய உடலுழைப்பு சம்பந்தப்பட்ட தொழில்களில் ஈடுபட்டு வந்துள்ள போதிலும் அவர்களது பிறப்பின் அடிப்படையிலான மரமேறும் சாதிய அடையாளமே தொடர்ந்து பேணப்பட்டு வந்துள்ளது.

தாழ்த்தப்பட்ட மக்களின் பொருளாதார நிலை மிகத் தாழ்ந்த நிலையில் இருந்து வந்த சூழலில் அவர்களிடையே வறுமையும் அறியா மையும் ஏனையோரை விட அதிகமான நிலையிலேயே இருந்து வந்தது. உடலுழைப்பில் முதல்தர நிலையில் இருந்து வந்த அம் மக்களின் உழைப்பு வர்க்க சாதிய நிலைகளில் சுரண்டி அபகரிக்கப்பட்டு வந்த நிலை தமிழர்கள் மத்தியில் நீடித்து நிலைத்து வந்தமையை வரலாறு எடுத்துக் கூறும்.

## பொருளாதார நிலை

தாழ்த்தப்பட்ட மக்களின் பொருளாதார நிலையை நோக் கின் அது மிகவும் மோசமானதொன்றாகவே இருந்து வந்துள்ளது. நிலப்பிர புத்துவத்தின் கீழும் அதன் பின்வந்த அந்நியராட்சிக் காலத்திலும் 'சுதந்திர த்தின்' பின்பும் கூட அதிகளவு பொருளாதாரச் சுரண்டலுக்கு ஆளாகிய மக்கள் பிரிவினராகத் தாழ்த்தப்பட்ட மக்கள் தமிழர்களிடையே இருந்து வந்துள்ளனர். அதற்கு முக்கியமான காரணி அவர்களுக்கு நிலம் இல்லா மையேயாகும். இம் மக்கள் எப்பொழுதும் நிலவுடைமையாளர்களின் நிலங்களில் குடியமர்த்தப்பட்டு அவர்களுக்கே தொண்டூழியம் செய்வோராக இருக்கச் செய்யப்பட்டனர். அடிமை குடிமை முறைகளினால் பிணைக் கப்பட்ட வண்ணார், அம்பட்டர், பள்ளர், நளவர், பறையர் என்போரிற் பள்ளர் நளவர் பறையர் அடிமைச் சாதிகளாக வைக்கப்பட்டனர். அவர்களுக்கு நிலங்கள் வழங்கப்படவில்லை. குடியிருத்தப்பட்டனர். ஆனால் குடிமைச் சாதியினரான வண்ணார், அம்பட்டர் என்போருக்கு குடியிருப்பதற்கு ஓரளவு நிலம் வழங்கப்பட்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது. அவ்வாறு குடிநிலம் பெற்றதாலும். மட்டுப்படுத்தப்பட்ட நிலம் வாங்க உரிமை பெற்றிருந்ததாலும், அத்துடன் உயர்குடியினரின் தேவையின் பொருட்டு சில சலுகைகளைக் கொண்டிருந்ததாலும் ஏனைய தாழ்த்தப்பட்ட

www.padippakam.com



மக்களை விடத் தாம் சற்று உயர்வான சாதியினர் என்ற கருத்து நிலையில் இவ்விரு சாதியினரும் இருந்து வந்துள்ளமையைக் காணலாம். எனினும் மொத்தத்தில் சாதி அடக்கு முறையின் அம்சங்களுக்கும். தீண்டா மைக்கும் இவ்விரு சாதியினரும் ஆளாகியே வந்துள்ளனர். இவ்விட த்தில் மற்றுமொரு அம்சம் நோக்குதற்கு உரியது. அதாவது அடிமை குடிமை வேலைகளில் பங்குபற்றும் பிரதான சாதியினரான கோவியர்கள் தாழ்த்தப்பட்டோர் என்ற வரம்பிற்குள் சேர்க்கப்படாது இருந்த போதிலும் அவர்களுக்கும் நிலம் வழங்கப்படாதுள்ளதைக் காணலாம். அவர்கள் உயர்குடியினரின் நிலங்களிலேயே குடியமர்த்தப்பட்டு வீட்டுத் தொண்டூழிய மும் விவசாயமும் செய்விக்கப்பட்டதைப் பெரும்பாலும் காணமுடிகிறது. கூலி குத்தகை விவசாயிகளாகவும் அவர்கள் இருந்து வந்தனர். அவர்களது வாழ்நிலை ஏறத்தாழத் தாழ்த்தப்பட்ட மக்களின் தரத்திற்கு இருந்து வந்த போதிலும் அவர்கள் உயர் வேளாள ஆதிக் கத்தின் கரங்களாகப் பயன்படுத்தப்பட்டனர். இவர்கள் உயர் வேளாளர் களை "அண்ணை" என்று விளித்தே அழைப்பர். 'தம்பி' 'ஏனாக்கும்' என்று வண்ணார் அம்பட்டர் அழைப்பர். ஏனைய தாழ்த்தப்பட்ட மக்கள் 'நயினார்' 'கமக் காரன்', "கமக்காரிச்சி", "நயினாத்தி" என்றவாறு மிகப் பணிந்து அழைப்பர். பிற்காலத்திலேயே ஐயா, அம்மா என்றழைக்கும் நடைமுறை வந்தது.

நிலப்பிரபுத்துவத்துக்குப் பிந்திய அந்நியர் ஆட்சிக் காலத்தில் குறிப்பாக நிலங்களுக்கான தோம்புகள், உறுதிகள் உருவாக்கத்தின் போது தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நிலம் வழங்கப்படவில்லை. அவர்கள் குடியிருந்த நிலங்களுக்கும் விவசாய உற்பத்தி நிலங்களுக்கும் உயர்சாதி வேளாளர்களே சொந்தக்காரர்களாகினர். இதையிட்டு அந்நியர்கள் எவ்வித சலனமும் கொள்ளவில்லை. அவர்கள் உயர்சாதி நிலச் சொந்தக்காரர்க ளுடன் மிகவும் நெருக்கமாக ஐக்கியப்பட்டிருந்தனர். அக் காலத்தில் அரச அதிகாரிகளான உடையார், மணியகாரன், விதானை. நொத்தாரிசு, முதலியார். பிறப்பு இறப்பு பதிவாளர் போன்ற பதவிகளும் ஏனைய சிறப்புப் பட்டங்களும் இவ் உயர்சாதி வேளாளர்களுக்கே வழங்கப்பட்டமை குறிப் பிடத்தக்கதாகும். அதனால் நிலத்தின் ஆதிக்கம் தொடர்ந்தும் அவர்களின் கைகளிலேயே இருந்து வந்தது. உறுதிகளுக்குள் அகப்படாத முடிக்குரிய அல்லது அரசுக்குரிய தரிசு நிலங்களும் அவற்றின் பிற்காலப் பயன்பாடு கருதி படிப்படியாக மேற்கூறிய

www.padippakam.com



அரச அதிகாரிகளினாலும் அவர்களது சந்ததியினராலும் அபகரிக்கப் பட்டுள்ளமையைக் காணமுடியும். அண்மைக்காலங்களில் கூட வடபுலத்து செம்மண் பிரதேசத்தினதும் ஏனைய பகுதிகளினதும் அரச நிலங்கள் விதானைமார், கிராமசேவையாளர்கள் இன்னும் பிற உயர் வேளாள அதிகாரிகளினால் திட்டமிட்ட வழிகளில் வேறு வேறு பெயர்களில் போலி உறுதிகள் மூலம் ஆட்சி பிடிக்கப்பட்டு சொந்தமாக்கப்பட்டு வந்த நடைமுறைகளைக் காணலாம்.

ஆதலால் தாழ்த்தப்பட்ட தமிழ் மக்களின் பின்தங்கிய பொரு ளாதார நிலைக்கான அடிப்படைக் காரணங்களில் பிரதானமானது அவர்க ளுக்கு நிலம் இல்லாதிருந்தமையாகும். அதேவேளை நிலச்சொந்தக்காரர் களின் வயல்கள் தோட்டங்களில் இம் மக்கள் அரை குறைச் சாப்பாட்டுடன் அல்லது சிறு அளவு கூலியாக நெல்லும் பிற உணவுப் பொருட்களும் வழங்கப் பெறுவதன் மூலம் வேலைவாங்கப்பட்டனர். உடல் உழைப்பாளி களான இம் மக்களின் கடும் உழைப்பால் விளைவிக்கப்பட்ட நெல்லும் ஏனைய விளைபொருட்களும் உயர்சாதி நிலச் சொந்தக்கார்களின் வீடுக ளுக்குச் சென்றடையத் தாழ்த்தப்பட்ட அம் மக்கள் பட்டினியில் கொட்டில் குடிசைகளில் வாழவிடப்பட்டனர். அத்துடன் நிலச்சொந்தக்காரர்களின் தயவில் வாழ்வதான ஒரு அடிமைத்தனமான சிந்தனை உணர்வும் அம்மக் களிடையே ஊட்டி வளர்க்கப்பட்டது "நயினார்" அல்லது "கமக்கார னின்" நிலம், அவர்களின் "மரந்தடி," அவர்களை "எதிர்த்து வாழமுடி யாது" என்ற வகையான அடிமைத்தன வாழ்க்கை முறைமை இந்த நூற்றாண்டின் நடுப்பகுதி வரை தாழ்த்தப்பட்ட மக்களின் மத்தியில் நிலவி வந்ததைக் காணமுடியும்.

தாழ்த்தப்பட்ட மக்களில் பள்ளர் நளவர் ஆகிய இரு சாதியி னரும் சீவல் தொழிலை மேற்கொண்டு வந்தனர். அத்தொழிலுக்கான பனை, தென்னை மரங்கள் நிலவுடைமையாளர்களின் ஆதிக்கத்தில் இருந்து வந்ததால் அத்தொழிலானது எவ்வித சுதந்திரமோ போதிய வருமானமோ அற்றதாகவே இருந்தது. 1936ம் ஆண்டுக்குப் பின்பே வடபகுதியில் மரவரிமுறை நடைமுறைக்கு வந்ததன் மூலம் சீவல் தொழிலா னது ஓரளவிற்கு சுய வருமானம் பெறும் தொழிலாக மாறியது.

தாழ்த்தப்பட்ட மக்கள் அரசாங்க உத்தியோகங்களை, வியா பார முயற்சிகளைஇ இன்னும் பிற பொருளாதார வளர்ச்சிக்கான முயற்சி களை மேற்கொள்ள முடியாது சாதிய ஆதிக்கத்தால் தடுக்கப்பட்டே

www.padippakam.com



வந்தனர். அதனை மீற முனைந்தோர் ஒடுக்கப்பட்டனர். கடந்த நூற்றாண்டின் முப்பதுகள் வரை சாதிய வர்க்க பொருளாதாரப் பிடிக்குள் அகப்பட்டு மீட்சியற்று நசிந்து வாழ்ந்து வந்தமையே அம் மக்களுடைய வரலாறாகும். தாழ்த்தப்பட்ட மக்கள் நிலம் வாங்க முடியாது. தாம் நினைத்தபடி வீடுகட்ட முடியாது. கிணறு வெட்டக்கூடாது. தாம் பரம்பரையாகச் செய்துவந்த தொழிலை மாற்றி வேறு தொழிலோ அன்றி ஒரு வியாபார முயற்சியோ செய்ய முடியாது. எதையும் உயர்சாதி வேளாளர் எனப்பட்ட நிலவுடைமையாளர்களின் அனுமதியுடனேயே செய்தல் வேண்டும் என்ற நிர்ப்பந்த அடக்குமுறையின் கீழேயே வாழ்ந்து வந்தனர்.

## அரசியல் ஒடுக்குமுறை

'அரசு என்பது ஒரு வர்க்கத்தை மற்றொரு வர்க்கம் ஒடுக்குவதற்கான கருவியாகும்' என்னும் அடிப்படையில் நிலவுடைமைக் காலத்தின் ஆட்சி அதிகாரத்தின் கீழ் உழைக்கும் வர்க்கமான விவசாயிகளும் கைவினையாளர்களும் அரசியல் ஒடுக்கு முறைக்கு உள்ளான வர்க்கத்தினராகவே இருந்து வந்துள்ளனர். அத்தகைய உழைக்கும் வர்க்கத்தினரான தாழ்த்தப்பட்ட மக்கள் சாதிய வர்க்க நிலையின் ஊடான அரசியல் ஒடுக்கு முறைக்கும் உள்ளாகியே வந்தனர். பின் வந்த கொலனிய ஆதிக்கத்தின் கீழும் அரசியல் உரிமைகள் அற்றவர்களாகவே இருந்து வந்தனர். பொருளாதார கல்வி பண்பாட்டம்சங்களில் தாழ்த்தப்பட்ட மக்கள் எவ்வாறு எவற்றையும் பெறமுடியாத நிலையில் இருந்தார்களோ அவ்வாறே அரசியலிலும் எவ்வித சம்மந்தமுமற்றவர்களாக நடாத்தப்பட்டனர். அரசியல் ஒடுக்கல் என்பது பல்வேறு வடிவங்களில் நேரடியாக நடைமுறைப்படுத்தப்பட்ட ஒன்றாக இருந்து வந்துள்ளது.

கொலனிய காலத்தின் இறுதிக் கூறுகளிலே இடம் பெற்ற அரசியல் சீர்திருத்தங்களில் ஒன்றான சர்வசன வாக்குரிமை 1931ம் ஆண்டு நடைமுறைக்கு வந்தது. அதன் அடிப்படையில் தேர்தல்கள் இடம் பெற ஆரம்பித்தன. அத்தகைய தேர்தல்களில் தாழ்த்தப்பட்ட மக்களின் வாக்குகள் தேவைப்பட்டன. அப்போது கூட ஜனநாயக ரீதியில் அம் மக்களிடம் சென்று வாக்குகள் கேட்கப்படவில்லை. சாதிய ஆதிக்க ஆணையிடுதலின் படி வாக்கிடுமாறே நிர்ப்பந்திக்கப்பட்டனர். அவர்களது விருப்பத்திற்கு மாறாக வாக்களித்திருக்க முடியாது. தவறிய பட்சத்தில் தாக்குதல்கள் வீடெரிப்புகள் தொழில் நாசங்கள் செய்யப்பட்டன. இத்தகைய அடக்குமுறைகளுக்கு எதிரான அரசியல் வழிப்புணர்வானது நாற்ப

www.padippakam.com



துகளின் ஆரம்பத்துடனேயே அம் மக்கள் மத்தியில் வளர்ச்சி பெற ஆரம்பமானது. அதற்கு முன்பு ஆங்காங்கே அரும்பி வந்த சாதிய தீண்டாமைக்கு எதிரான சமூக உணர்வானது நாற்பதுகளின் இடதுசாரி இயக்கத்தின் அறிமுகத்துடனேயே அரசியல் உணர்வாகவும் இயக்கமாகவும் வளர்ச்சிகாண ஆரம்பித்தது. இது பற்றி மேல் வரும் பக்கங்களில் விரிவாகக் காணமுடியும்.

## தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மறுக்கப்பட்ட கல்வி

நிலவுடைமைக் காலத்தின் வர்ணாச்சிரம தர்மத்தின் அடிப்படையிலான கல்வி பொதுவாகவே உழைக்கும் மக்களுக்கு மறுக்கப்பட்ட ஒன்றாக இருந்து வந்தது. அந் நிலையில் தாழ்த்தப்பட்டவர்களான பஞ்சம மக்களுக்கு நினைத்துக் கூடப் பார்க்க முடியாத ஒன்றாகவே கல்வி இருந்து வந்தது. இந் நிலை இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்துடன் சிறிய மாற்றம் காணத் தொடங்கியது. இருப்பினும் ஐம்பதுகளுக்குப் பின்பே தாழ்த்தப்பட்ட மக்களுக்கான கல்வியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்படத் தொடங்கியது. தாழ்த்தப்பட்ட மக்கள் மட்டுமன்றி சாதியப் படிநிலையில் இடைநிலைச் சாதிகளாக இருத்தப்பட்ட மக்களாலும் கூடக் கல்வியைப் பெற முடியவில்லை. அந்தளவிற்கு கல்வியில் அன்றைய உயர்வேளாள ஆதிக்கம் இறுக்கமானதாக இருந்து வந்தது.

இலங்கையில் 1844ல் பிரித்தானிய ஆட்சியாளர்கள் அடிமை ஒழிப்புச் சட்டத்தை கொண்டு வந்தனர். அதனால் குறிப்பிடத்தக்க பாரிய மாற்றங்கள் எதுவும் சாதிய அடிமைத்தனத்தில் இடம் பெறவில்லை. அதேவேளை தேசவழமைச் சட்டம் என்பதன் கீழ் தொடர்ந்தும் சாதியம் இறுக்கமாகப் பின்பற்றப்பட்டு வந்தது. ஏற்கனவே போர்த்துக்கேயர் ஒல்லாந்தர் ஆட்சிகளின் கீழ் இயங்கிய கிறிஸ்தவ மிஷனரித் தேவாலயங்களும் மிஷனரிப்பாடசாலைகளும் தாழ்த்தப்பட்ட மக்களை குறிப்பிடத்தக்க அளவுக்கு கூட உள்வாங்கவில்லை. பின் வந்த பிரித்தானிய ஆட்சி நிர்வாகத்தின் கீழ் தாழ்த்தப்பட்ட மக்களில் சிறு தொகையினருக்கு ஆங்காங்கே மிஷனரிப்பாடசாலைகளில் அனுமதி வழங்கப்பட்டது. அவ்வாறு சேர்க்கப்பட்ட தாழ்த்தப்பட்ட மாணவர்கள் உயர்சாதி மாணவர்களுடன் சமமானவர்களாக நடாத்தப்படவில்லை. காற்சட்டை மேற்சட்டை அணிந்து செல்லவோ ஒரே விதமான ஆசனங்களில் அமர்ந்து கல்வி கற்கவோ இடமளிக்கப்படவில்லை. வெறும் துண்டுத் துணி உடுத்தியும் நிலத்திலிருந்துமே அவர்கள் கல்வி கற்றனர். கிணற்றிலிருந்த

www.padippakam.com



நீர் அள்ளிக் குடிக்கவோ சமமாக இருந்து உணவு அருந்தவோ முடியாது. எதிலும் இம் மாணவர்கள் வேறானவர்களாகவே நடாத்தப்பட்டனர். அவ்வாறே சில பாடசாலைகளில் அறிமுகப்படுத்தப்பட்ட விடுதிகளில் தங்கியிருந்து படிக்கவும் அனுமதிக்கப் படவில்லை.

இம் மிஷனரிப் பாடசாலைகளின் அதிபர்களாக ஆசிரியர்களாக இருந்தவர்கள் உயர் வேளாளர்களான சாதி ஆதிக்கவாதிகளாகவே இருந்தனர். அதனால் அவர்களது கல்வி கற்பிக்கும் கண்ணோட்டமும் சாதியத்தின் வாயிலாகவே அமைந்திருந்தது. தாழ்த்தப்பட்ட மாணவர்களை நோக்கி சாதிக்குரிய தொழில்களை இழிவுபடுத்திக் கூறுவதும் திட்டுவதும் அவர்களுக்கு சுவாரசியமானதாகவும் பொழுது போக்காகவும் இருந்து வந்தது. கல்வி கற்க ஆர்வமிருந்தும் இவற்றைப் பொறுக்கமாட்டாத பல தாழ்த்தப்பட்ட மாணவர்கள் ஒரு சில ஆரம்ப வகுப்புகளுக்குப் பின் பாடசாலைகளுக்குச் செல்வதை நிறுத்திக் கொள்வது இயல்பாகவே இடம் பெற்று வந்தது.

இத்தகைய சூழலிலும் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்துடன் மாணவர்கள் ஆங்காங்கே மிஷனரிப் பாடசாலைகளில் எழுத வாசிக்கக் கூடிய ஆரம்பக் கல்வியைப் பெற முயன்றனர். அவர்களில் சிலர் ஆங்கிலக் கல்வியைக் கற்றுக் கொள்ள பெரு முயற்சி செய்தனர். கிறிஸ்தவ தேவாலயங்களில் குருமார்களாகவும் அமெரிக்க மிஷனரிகளின் நிர்வாகிகளாகவும் இருந்து வந்தவர்களின் வீடுகளில் வேலையாட்களாக தாழ்த்தப்பட்டவர்களே இருந்து வந்தனர். அதேவேளை சில தாழ்த்தப்பட்டவர்கள் கிறிஸ்தவ மதத்தைத் தழுவியும் கொண்டனர். அத்தகையவர்களின் பிள்ளைகள் கல்வி வசதியைப் பெற சில கிறிஸ்தவ குருமார்களும் சில பாடசாலை அதிபர்களும் உதவினர் என்பது குறிப்பிடப்பட வேண்டியதாகும்.

இவ்வாறு தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் இருந்து முதன் முதலில் மிஷனரிப் பாடசாலைக் கல்வி பெற்று பிற்காலத்தில் அம் மக்களின் விமோசனத்திற்காக செயற்பட்ட மூவரைக் குறிப்பிட முடியும். அவர்கள் தெல்லிப்பளையின் யோவல் போல். வட்டுக்கோட்டை எஸ். ஆர். ஜேக்கப் (காந்தி). ஏ. பி. இராஜேந்திரா ஆகியோராவர். யோவல் போல் தெல்லிப்பளையில் மிஷனரிப் பாடசாலைக் கல்வி கற்று சிறிது காலம் ஆசிரியராகப் பணிபுரிந்தவர். ஆங்கிலத்திலும் போதிய கல்வியறிவு பெற்றவர். அவர் ஆசிரியத் தொழிலில் மேலே செல்லாதவாறு உயர் சாதி ஆதிக்க வாதிகள்

www.padippakam.com



திட்டமிட்ட நெருக்கடி கொடுத்ததன் காரணமாக அத் தொழிலை உதறி எறிந்து விட்டு கட்டிட ஒப்பந்தகாரராகி ஓரளவு வசதியானவராகியும் கொண்டார். அவர் தாழ்த்தப்பட்ட மக்களின் முதலாவது அமைப்பை உருவாக்கிச் சாதியத்திற்கும் தீண்டாமைக்கும் எதிராகத் தீரத்துடன் செயலாற்றி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

வட்டுக்கோட்டையில் உருவாக்கப்பட்டிருந்த பிரசித்தி பெற்ற அமெரிக்க மிஷனரிப் பாடசாலையான யாழ்ப்பாணக் கல்லூரியில் 1910ம் ஆண்டில் எஸ்.ஆர். ஜேக்கப் என்ற தாழ்த்தப்பட்ட மாணவன் சேர்க்கப் பட்டான். அம் மாணவனின் தந்தை அம் மிஷனில் ஒரு வேலையாளாக இருந்தமையினால் அதன் மூலம் தனது மகனுக்கு அனுமதி பெற முடிந்தது. அவ்வேளை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் அதிபராக பிக்னல் பாதிரியார் கடமையாற்றி வந்தார். ஜேக்கப் என்ற அத் தாழ்த்தப்பட்ட மாணவன் சேர்க்கப்பட்டமையை எதிர்த்து அக் கல் லூரியில் கல்வி கற்று வந்த உயர்த்தப்பட்ட சாதிய மாணவர்கள் அனைவரும் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வெளிநடப்புச் செய்தனர். ஆனால் ''சேர்க்கப் பட்ட தாழ்த்தப்பட்ட மாணவன் தனி ஒருவனாகப் பாடசாலையில் படிக்கும் வரை தொடர்ந்து பாடசாலையை நடாத்துவேன்'' எனக் கூறி நின்ற அதிபரின் உறுதியான நிலைப்பாட்டால் உயர்த்தப்பட்ட சாதிய மாணவர்கள் மீண்டும் கல்வியைத் தொடர பாடசாலைக்கு வரவேண்டியதாயிற்று. இம் மாணவன் தான் பிற்காலத்தில் கதர் ஆடை அணிந்து சாதிய தீண்டாமைக்கு எதிராகக் குரல் கொடுத்து நின்று போராடிய எஸ்.ஆர். ஜேக்கப் ஆவார். இவரது செயல்களால் காந்தி என்று மக்களால் அழைக்கப்படலானார்.

ஏ.பி. இராஜேந்திரா என்பவர் மிஷனரிக் கல்வி கற்று அர சாங்க உத்தியோகத்தில் இணைந்து உயர் நிலை அதிகாரியாக வளர்ச்சி கண்டவர். இவரது கல்வி உத்தியோக சேவை காரணமாக 1941ல் பிரித்தானிய ஆட்சி நிர்வாகம் அவருக்கு முதலியார் பட்டத்தை வழங்கியது. அது அந்நிய கொலனியவாதிகள் தமது அடிமை விசுவாசிகளுக்கு வழங்கி வந்த பட்டமாகும். இருப்பினும். அதுவரை தமிழ் சிங்கள உயர் வேளாள மேட்டுக்குடியினருக்கு வழங்கப்பட்டு வந்த முதலியார் பட்டம் ஒரு கல்வி கற்ற தாழ்த்தப்பட்டவருக்கு வழங்கப்பட்டமை ஒரு விதி விலக்காகும். ஆனால் அத்தகைய முதலியார் பட்டத்தால் எதுவும் ஆகவில்லை என்பது நோக்குதற்குரியதாகும். இதே ஏ.பி. இராஜேந்திரா ''சுதந்திரத்திற்குப்'' பின் வந்த டி.எஸ். சேனநாயக்கா அரசினால் செனட் சபை உறுப்பின

www.padippakam.com



ராகவும் நியமிக்கப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இங்கே சுட்டிக் காட்டப்பட வேண்டிய முக்கிய விடயம் யாதெனில் தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியிலிருந்து ஆங்கிலக் கல்வியைப் பெற்ற மேலே குறிப்பிடப்பட்ட மூவரும் கிறிஸ்தவ மதம் தழுவிய குடும்பங்களைச் சேர்ந்தவர்களாக இருந்தனர் என்பதாகும். பிரித்தானியரின் ஆட்சிக் காலத்தின் பத்தொன்ப தாம் நூற்றாண்டின் நடுக் கூற்றிலே நல்லூர் ஆறுமுக நாவலர் (1822-1879) வடபுலத்துத் தமிழர் மத்தியில் அரங்கிற்கு வருகிறார். நாவலர் தமிழ்க் கல்வி அறிவும் ஆங்கில புலமைத்துவமும் கொண்ட உயர் சைவ வேளாளர் சாதியைச் சேர்ந்தவர். இவர் சைவத்தையும் தமிழையும் வளர்க்க வேண்டும் என்ற எண்ணக் கருவை முழுமைப்படுத்தி நடைமுறையாக்க முனைந்தார். அந்நிய மதத்தின் வருகையாலும் மிஷனரிக் கல்வியாலும் ஆங்கில மோகத்தாலும் தமிழ் மொழியும் சைவமும் ஏனைய பண்பாட் டம்சங்கங்களும் உருக்குலைந்து போவதை எதிர்த்துச் செயற்படலானார். ஆனால் அவரது செயற்பாட்டில் முழுமையான கொலனிய ஆதிக்க எதிர்ப்பு இருக்கவில்லை. சைவத்தையும் தமிழையும் பாதுகாப்பது என்னும் எல்லைக்குள்ளேயே நாவலரால் நிற்க முடிந்தது. அன்றைய கொலனிய சூழலில் அதனை ஒரு அந்நிய மத கலாசார எதிர்ப்பு அம்சமாக மட்டுமே காண இயலும். அவ்வாறு நாவலர் முன்னெடுத்த சைவம் தமிழ் இரண்டிற் குமான இயக்கத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் உள்ளடக்கப்படவில்லை. அவர்களைப் பஞ்சமர்களாகப் புறம் தள்ளி வைத்து வந்ததுடன் தான் வெளியிட்ட கருத்துக்களிலும் வெளியீடுகளிலும் சாதிய சனாதனத்தை வற்புறுத்தி வந்தார். கல்வித்துறையில் சைவத் தமிழ்ப் பாடசாலைகளை மிஷனரிப் பாடசாலைகளுக்கு எதிராக நிறுவும் பணியினை நாவலர் முன்னெடுத்தார். 1848ல் யாழ். வண்ணார் பண்ணையில் சைவப்பிரகாச வித்தியாசாலையை சைவத்தமிழ்ப் பாடசாலையாக நாவலர் தொடக்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து வடபுலத்தின் பல்வேறு கிராமங்களிலும் நாவலர் வழியில் சைவத் தமிழ்ப் பாடசாலைகள் தோற்றுவிக்கப்பட்டன. இவற்றை நிறுவியவர்கள் அனைவரும் அந்தந்த ஊர்களின் நிலவுடைமை ஆதிக்கம் கொண்ட மேட்டுக்குடி சைவ உயர் வேளாளர்களாகவே இருந்தனர். நாவலரும் அவரது அடியொற்றி வந்த சைவ பரிபாலன சபையினரும் தாம் நிறுவிய பாடசாலைகளில் தாழ்த்தப்பட்ட மாணவர் களுக்கு அனுமதி மறுத்தே வந்தனர். 1888ல் நாவலரின் உறவினர்களும் மாணவர்களுமான சைவ உயர் வேளாளர்கள் ஒன்றிணைந்து

www.padippakam.com



யாழ்ப்பாணத்தில் சைவ பரிபாலன சபையை நிறுவிச் சகல சைவத்தமிழ் பாடசாலைகளையும் வழி நடத்தலாயினர். இவ்வாறான பாடசாலைகளின் தொகை 1900ம் ஆண்டில் நாற்பத்தைந்தாகக் காணப்பட்டது. இவற்றில் ஒரு பாடசாலையில் தானும் அவ்வேளை தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு அனுமதி கிடைக்கவில்லை என்பது கவனிக்கத்தக்கதாகும்.

இத்தகைய வடபுலத்து கல்விச் சூழலிலேயே வடமராட்சியின் வதிரிக் கிராமத்தில் ஒரு சைவத் தமிழ்ப் பாடசாலையைத் தாழ்த்தப்பட்ட மக்களின் பிள்ளைகளுக்காக ஆரம்பிக்கும் எண்ணக் கரு உருவாகியது. அது செயலுருவம் பெற்று 1917ம் ஆண்டு தேவரையாளி சைவ வித்தியாசாலையாக உருப்பெற்றது. இதன் உருவாக்கத்தில் தாழ்த்தப்பட்ட தமிழ்ச் சைவராகத் தன்னைப் புனரமைத்துக் கொண்ட க. சூரன் என்பவரும் அவரோடு இணைந்தவர்களும் முன்னின்று உழைத்தனர். இவ்வாறு தாழ்த்தப்பட்டவர்களுக்கான ஒரு பாடசாலை தோற்றுவிப்பதற்குச் சூரனுக்கு ஆக்கமும் ஊக்கமும் வழிகாட்டலும் வழங்கியவர் மணியகாரராக இருந்த கரவெட்டி சிற்றம்பல முதலியார் என்று சிலரால் விதந்துரைக்கப்படுகிறது. அவ்வாறு சூரனைத் தாழ்த்தப்பட்ட மக்களுக்குரிய தனிச் சைவப் பாடசாலை உருவாக்கத் தூண்டி அதற்கு உதவி செய்தமை தாழ்த்தப்பட்ட மாணவர்களின் கல்வி மீது சிற்றம்பல முதலியாரது அனுதாபம் என்று கூறி விட முடியாது. அக்காலத்தில் இதே சிற்றம்பல முதலியார் முன்னின்று கரவெட்டியில் உருவாக்கிய உயர்வேளாள சைவத் தமிழ்ப் பாடசாலைகளில் தாழ்த்தப்பட்ட மாணவர்கள் கல்வி கற்பதைத் தடுத்துத் திசை திருப்பி விடுவதே அவரது நோக்கமாகும். இந்த உண்மையை உயர்வேளாள சாதி ஆதிக்கத்துடன் சமரசம் காண்போர் காண்பதில்லை. எவ்வாறாயினும் தேவரையாளி சைவத் தமிழ்ப் பாடசாலை பல்வேறு சிரமங்கள் மத்தியில் நிலைத்து அரசாங்க உதவி பெற்று வளர்ச்சி கண்டு காலப்போக்கில் அப் பிரதேசத் தாழ்த்தப் பட்ட மாணவர்களின் கல்விக்கு தோள் கொடுத்தமை குறிப்பிடத்தக்க ஒன்றாகும். ஆனால் அப்பாடசாலையில் தாழ்த்தப்பட்ட மாணவர்கள் தவிர்ந்த வேறு உயர்சாதி மாணவர்கள் அனுமதி பெறுவதில்லை என்பது குறிப்பிடத்தக்க நடைமுறையாக இருந்து வந்தது. இப் பாடசாலையால் கல்வியும் உத்தியோகமும் பெற்று தம்மை மேன் நிலையாக்கத்திற்கு உள்ளாக்கிக் கொண்ட ஒரு பகுதியினர் ''தேவரையாளிச் சமூகத்தினர்'' எனக் கூறி அப்பிரதேசத்தின் உழைக்கும் சாதாரண தாழ்த்தப்பட்ட மக்களிடமிருந்து

படிப்பகம்

www.padippakam.com



தம்மை வேறுபடுத்திக் கொள்வதையும் காண முடிந்தது.

மேலும் இவர்கள் கல்வி. பொருளாதார பண்பாட்டு மேன் நிலையாக்கம் பெறுவதன் மூலம் தாழ்த்தப்பட்ட மக்கள் சாதிய தீண்டாமை நிலைகளில் இருந்து விடுபடலாம் என்ற சுய ஈடேற்ற சமரசக் கருத்தை யும் கொண்டிருந்தனர். இக் கருத்து நிலை தமிழரசுக் கட்சியின் சைவ கிறிஸ்தவ வேளாள அரசியல் தலைமைத்துவத்திற்கு ஒத்திசைவான ஒன்றாகவே அமைந்து கொண்டது.

காலத்தின் நிர்ப்பந்தம் காரணமாக மேலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கான தனிச் சைவப் பாடசாலைகள் சில ஆங்காங்கே உருவாகின. வதிரி போன்று, நல்லூர் அரியாலையில் ஒரு பாடசாலை நந்தனாரின் பெயரில் உருவாக்கப்பட்டது. இதனை சைவ பரிபாலன சபையே மேற்பார்வை செய்தும் வந்தது. அப் பாடசாலையின் ஆசிரியர்கள் மாண வர்கள் யாவருமே தாழ்த்தப்பட்டவர்களாகவே இருந்தனர். இவ்வாறான சில பாடசாலைகள் வடபுலத்தில் உயர்சாதிய ஆதிக்க சக்திகளால் நடாத் தப்பட்டமைக்கு அடிப்படை காரணம் தாழ்த்தப்பட்ட மாணவர்களை சைவ வேளாள ஆதிக்கப் பாடசாலைகளில் அனுமதிக்கக் கூடாது என்பதாகவே இருந்தது. இந் நிலையில் சிறு அளவு மாற்றம் இருபதுகளின் நடுக் கூறிலே இடம் பெற ஆரம்பித்தது. சைவ பரிபாலன சபையும் இந்து கல்விச் சபையும் (Hindu Board of Education) தத்தமது பாடசாலைகளில் தாழ்த்தப்பட்ட மக்களின் பிள்ளைகளை அனுமதிக்க வேண்டிய தாயிற்று.

வடக்கில் நாவலர் வழிவந்த சைவ வேளாளக் கல்வி ஆதிக் கம் நிலை பெற்ற அதேவேளை அது கிழக்கின் விசேட சூழலுக்கு பொருந்துவதாக அமையவில்லை. அங்கு தேச வழமைக்குப் பதிலாக முக்குவ (முற்குகர்) வழமையே ஆதிக்கம் பெற்றிருந்தது. அதனாற் கிழக்கிற் சாதியம் நெகிழ்ச்சியுடையதாகவும் தீண்டாமை என்பது கொடு மைகளுக்கு உரியதாகவும் இருக்கவில்லை. இத்தகைய பின்னணியில் சுவாமி விபுலானந்தரின் தலைமையிலான இராமகிருஷ்ண மிசன் பாட சாலைகள் சாதியத்தை முன்னிறுத்தாதும் சமய வேறுபாடு பாராட்டாதும் சகல மாணவர்களுக்கும் கல்வியை வழங்கின. இது வடக்குடன் ஒப்பிடும் போது வேறுபட்டதாகவும் முற்போக்கானதாகவும் அமைந்திருந் தது.

தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பாடசாலைக் கல்வி மறுக்கப் பட்டு வந்த சூழலிலும் அவர்களிடையே உழைப்பு அனுபவத்தின் வாயிலாக வும் கேள்வி ஞானம் மூலமாகவும் அறிவு பெற்றவர்கள் இருந்து வந்தனர்.

www.padippakam.com



நாட்டு வைத்தியம். கைவைத்தியம். பார்வை பார்த்தல், மற்றும் சோதிடம். தொழிற்திறன்கள் போன்றவற்றில் முன்னேறியவர்களாக அவர்கள் இருந்து வந்துள்ளனர். மிஷனரிப் பாடசாலைகளில் எழுதவும் வாசிக்கவும் கற்றுக் கொண்ட குறிப்பிடத்தக்கவர்கள் தத்தமது கிராமங்களில் மக்களுக்கு அறிவுரை கூறி உதவுபவர்களாகவும் வழிகாட்டுவோராகவும் இருந்து வந்துள்ளமையை ஆங்காங்கே காணமுடியும்.

தமிழர்களிடையே கிறிஸ்தவ மதத்தையும் மிஷனரிக் கல்வியையும் புகுத்திய போது ஏற்கனவே இருந்து வந்த சாதி அமைப்பு-தீண்டாமை என்பனவற்றையும் உள்வாங்கி அவற்றுக்கு இசைவாகவே அந்நிய ஆட்சியினர் தம்மை நிலைப்படுத்திக் கொண்டனர். ஆதிக்க சாதிகளைச் சேர்ந்த தமிழர்களைத் தம்வசம் வைத்திருப்பதிலேயே ஆட்சிபீடத்தில் இருந்து வந்த அந்நியர் கவனம் உடையவர்களாக இருந்து வந்தனர். அதேவேளை தாழ்த்தப்பட்ட மக்களிடையேயும் தமது மத கலாசார அம்சங்களைப் புகுத்தி சீர்திருத்த நடவடிக்கைகள் என்ற பெயரில் தம் செல்வாக்கை நிலை நிறுத்த முயன்றனராயினும், அவை யாவும் தேசவழமையின் ஒரு அம்சமான தமிழர்களின் பாரம்பரிய சாதி அமைப்பிற்கு உட்பட்ட வழிமுறைகளிலேயே முன்னெடுக்கப்பட்டதையுங் காணமுடியும். இருப்பினும் மிஷனரிப் பாதிரிமார்களிடையேயும் கல்விமான்களிடையேயும் சில மனிதாபிமானம் படைத்தோர் இருக்கவே செய்தனர். அத்தகையவர்கள் தாம் பதவி வகித்த பாடசாலைகளில் தம்மால் முடிந்தளவிற்கு தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு அனுமதியளித்துக் கல்வி வழங்கச் சந்தர்ப்பம் வழங்கினர் என்பது நினைவு கூரத்தக்கதாகும். அவ்வாறான சில மனிதாபிமான தமிழ் ஆசிரியர்கள் உயர்த்தப்பட்ட சாதியினரின் மத்தியில் இலை மறைகாயாக இருந்து வந்தமையை மறுப்பதற்கில்லை.

1930 களில் பாட்சாலைகளில் சம ஆசனம், சம போசனம் என்ற சட்டத்தை அன்றைய அரசினர் கொண்டு வந்தபோது அதற்குத் தமிழர்களிடையே இருந்த சாதியவாதிகள் பலத்த எதிர்ப்புத் தெரிவித்தனர். சுமார் 15 பாடசாலைகள் வரை சாதிவெறியர்களினால் தீவைத்து எரிக்கப் பட்டன. துன்னாலை புத்தூர் உரும்பிராய் ஆகிய இடங்களில் பொலீஸ் தங்கியிருந்து உயர்வேளாளரின் எதிர்ப்பைச் சமாளிக்க வேண்டியதாயிற்று. 1932ல் சைவபரிபாலன சபையும் இந்து கல்வி சபையும் சைவத்தமிழ் பாடசாலைகளில் தாழ்த்தப்பட்ட பிள்ளைகளை அனுமதித்து

www.padippakam.com



சமஆசனம் சமபோசனத்திற்கு ஆதரவு கொடுக்க வேண்டும் என பாடசாலை முகாமைத்துவங்களைக் கேட்டுக் கொண்டன. அரசாங்கத்தின் வற்புறுத்தலாலேயே அவ்வாறு தீர்மானிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. ஆனால் பல பாடசாலைகளின் முகாமையாளர்கள் இதற்கு மறுப்புத் தெரிவித்தனர். உயர் சாதி மாணவர்கள் பாடசாலைகளைப் பகிஷ்கரித்தனர். சிறுப்பிட்டியில் அமைந்திருந்த ஒரு சைவப் பாடசாலை யின் முகாமையாளரும் ஆசிரியர்களும் தாழ்த்தப்பட்ட மாணவர்களை அச்சுறுத்தி அவமானப்படுத்தினர். இது பற்றி முறைப்பாடு செய்யப்பட்ட தையடுத்து அன்றைய அரசாங்க அதிபரும் பாடசாலைகளின் பரிசோதகரும் இதற்குரிய விசாரணை நடாத்திய பின் அப்பாடசாலைக்குரிய அரசாங்க உதவிப் பதிவை ரத்துச் செய்து விட்டனர். இவ்வாறு சம ஆசனம் சமபோசனச் சட்டம் வந்த போதிலும் அதன் நடைமுறைப் பிரயோகம் மிக அருந்தலாகவே இடம் பெற்று வந்தமை குறிப்பிடத்தக்கதாகும். அன்று தாழ்த்தப்பட்ட ஒரு சிலர் ஆசிரியர்களானபோது அவர்களுக்கு தமிழ் இந்துப் பாடசாலைகளில் கல்வி கற்பிக்க அனுமதி கிடைக்கவில்லை. மிஷனரிப் பாடசாலைகளிலும் தாழ்த்தப்பட்டோருக்கான பாடசாலைகளிலும் நியமனம் கிடைத்தது. அவ் ஆசிரியர்கள் ஆசிரிய பயிற்சி கலாசாலைகளுக்கு அனுமதிக்கப்படவில்லை. இன்றுங் கூடச் சில பாடசாலைகளில் மிக நுணுக்கமாகச் செயற்பட்டு தாழ்த்தப்பட்ட ஆசிரியர்களை கல்வி கற்பிக்கவிடாது தடுக்கும் போக்கு மிக இரகசியமாகவும் நாசுக்காகவும் கையாளப்பட்டு வருவதை உன்னிப்பாகக் கவனித்தால் மட்டுமே கண்டு கொள்ள முடியும்.

தமிழர் சமூகத்தின் கல்வி மேம்பாடு அல்லது அதன் அபரிமித வளர்ச்சி பற்றி எல்லாம் புகழப்படும் அதேவேளை சாதி அமைப்பின் கொடூரத்தால் அதே தமிழர் சமூகத்தின் மத்தியில் வாழ்ந்து வந்த மூன்றில் ஒரு பங்கினரான தாழ்த்தப்பட்ட தமிழ் மக்களின் கல்வி வளர்ச்சியானது திட்டமிட்டே மறுக்கப்பட்டு வந்தது என்ற உண்மையை பகிரங்கமாக ஏற்றுக் கொள்வதற்கு இன்றும் தமிழரிடையேயுள்ள பல கல்விப் புலமைசார் பேராசிரியர்களும் ஆய்வாளர்களும் தயக்கம் காட்டுவது விசனத்திற்குரிய தாகும்.

இவ்வாறு தாழ்த்தப்பட்ட மக்களின் கல்வி வளர்ச்சி நத்தை வேகத்தில் நடந்தாலும் அதற்கு உதவியவற்றுள் மிஷனரிக் கல்விக் கூடங் களில் கிடைத்த அற்ப சொற்ப அனுமதி. அங்கே சம ஆசனம் சமபோசனம்

www.padippakam.com



சட்டமாக வந்தமை, இலவசக் கல்வியின் அறிமுகம். 1956க்குப் பின்பு தாழ்த்தப்பட்ட மக்களின் கல்விவளர்ச்சியை மையமாக வைத்து உருவாக்கப்பட்ட அரசாங்கப் பாடசாலைகளின் வளர்ச்சி, பாடசாலைகள் தேசியமயம், தாய்மொழிக் கல்வியின் அறிமுகம் போன்றவற்றைக் குறிப்பிட முடியும். இவை அத்தனை ஊடாகவும் தாழ்த்தப் பட்ட மக்கள் தமது மிகக் குறைந்தளவு கல்வி வளர்ச்சிக்காகப் பெரும் தடைகளைத் தாண்டும் போராட்டங்களைக் கடந்தே வந்துள்ளனர். உதாரணமாக புத்தூரில் நிலவுடைமை ஆதிக்கம் கொண்ட மழவராயர் குடும்பத்தினரால் தோற்று விக்கப்பட்ட் பாடசாலையான ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரியில் பாடசாலை களை அரசாங்கம் பொறுப்பேற்றுப் பதினைந்து ஆண்டுகளு க்குப் பின்பே தாழ்த்தப்பட்ட பிள்ளைகளுக்கு கதவுகள் திறக்கப்பட்டனவென்றால் கல்வித் துறையில் தாழ்த்தப்பட்ட மக்கள் எவ்வளவிற்கு திட்டமிட்டே புறக்கணித்து அடக்கப்பட்டு வந்தனர் என்பதைத் தெரிந்து கொள்ள முடியும். இன்று அப் பாடசாலையில் குறிப்பிட்டளவு தொகையான தாழ்த்தப்பட்ட மாணவர்கள் கல்வி பெறுகின்ற போதும் தாழ்த்தப்பட்ட ஆசிரியர்கள் ஒருவர் அல்லது இருவராகவே உள்ளனர். அத்தகையோர் அங்கு வருவதை நிருவாகத்தினர் மிகவும் கவனமாகத் தவிர்த்துக் கொள்ளு வதை இன்றும் அவதானிக்கலாம்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கல்வி மறுக்கப்பட்டு வந்ததால் உருவாகிய சமூகத்தாக்கம் மிகப் பாரியதொன்றாக இன்றும் நிலவி வரு கின்றது. அதன் இடைவெளி மிகவும் இலகுவான வழிகளில் நிரப்பப்பட முடியாத ஒன்றாகவே விளங்குகின்றது. ஏனெனில் எத்தகைய சாதி அமைப்பும் தீண்டாமையும் அவர்களின் கல்வி வளர்ச்சிக்கு குறுக்கே நின்று தடைபோட்டதோ அதே அமைப்பு முறை இன்றும் புதிய புதிய வடிவங்களில் தடைகளை விதித்த வண்ணமே இருக்கின்றன. அன்று வெளிப்படையாக இடம்பெற்றவை இன்று மறைமுகமாகவும் இரகசியமாகவும் இடம்பெறுகின்றன. இதை விரும்பாத நல்லெண்ணம் படைத்த சக்திகள் கல்வித்துறையில் இத்தடைகளை அகற்றவும் அரசின் உதவிகளைப் பயன்படுத்தி அம்மக்களுக்கு கல்வி அறிவு வழங்கவும் முன்வந்த போதிலும் சாதி அமைப்பின் சூழல் அவர்களது சேவைகளையும் முயற்சிகளையும் தடுக்க முயலுகின்றது. கல்வி அறிவு கிடைக்காததினால் ஏற்பட்ட தாக்கத்தை முற்றுமுழுதாகப் போக்குவதற்கு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு முழுமையான ஒரு சமுதாயமாற்றமே உண்மையான அத்திவாரமாகவும்

www.padippakam.com



தீர்வாகவும் அமைய முடியும். அதுவே சமுதாயப் புறக்கணிப்பு என்ற முழுமையான தாக்கத்தினை மாற்றி அமைக்க உரிய வழிமுறையாகும். அது அரசியல் பொருளாதார சமூகப் பண்பாட்டம்சங்களின் விடுதலை யுடன் இணையப் பெற்றவையாகும்.

## மத, பண்பாட்டுத் தாக்கம்

தாழ்த்தப்பட்ட தமிழர்களிற் பெரும்பான்மையினர் அன்றும் இன்றும் இந்துக்களாகவே வாழ்ந்து வருகின்றனர். மத மாற்றத்திற்கான மிஷனரிமார்களின் பலத்த பிரச்சாரத்தின் மத்தியிலும் வேளாள ஆதிக்கத்தின் நிராகரிப்பின் கீழும் ஏகப்பெரும்பான்மையான தாழ்த்தப் பட்ட தமிழர்கள் தொடர்ந்தும் இந்துக்களாகவே வாழ்ந்து வந்தனர். அவர்கள் தம்மை இந்துக்கள் அல்லது சைவ சமயத்தவர்கள் என்று கூறிக்கொண்டு வாழ்ந்தபோதிலும் அம்மத நடைமுறைகள் அம்மக்க ளுக்கு இரண்டாந்தர நிலையையும் அவமானம் மிக்க புறக்கணிப்புக்களை யுமே வழங்கியது. இந்துக் கோவில்களுக்குள் அவர்கள் அனுமதிக்கப்பட வில்லை. கோவில் வெளிமண்டபத்தில் இருந்து பல மீற்றர் தூரத்திலேயே நிறுத்தி வைக்கப்பட்டனர். திருவிழாக் காலங்களில் வெளிவீதியில் இடம்பெறும் திருவிழா நிகழ்ச்சிகளின் போது தாழ்த்தப்பட்டவர்களுக் கென தனியான இடம் ஒதுக்குப்புறமாக ஒதுக்கி அதைச் சுற்றி கயிறுகள் கட்டி அக் கயிற்று அடைப்புக்குள்ளேயே அம் மக்கள் இருக்க விடப்பட்ட னர். அவ்வாறு ஒதுக்கப்பட்ட இடங்களுக்கு "பஞ்சமர்கள் இருக்கும் இடம்" எனப் பெயர்ப்பலகைகளும் எழுதிக் கட்டப்பட்டிருக்கும்.

இவ்வாறு இந்துக் கோவில்களில் இருந்து புறக்கணித்து ஒதுக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட தமிழ் மக்கள் தமது வீடுகளில் இடம் பெறும் நன்மை தீமைகளின் போது எவ்வித இந்துக் கிரிகைகளையும் செய்யக் கூடாது எனத் தடுக்கப்பட்டனர். பிராமணர்களோ அன்றி வேறு எவருமே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இந்து மதக் கிரிகைகள் செய்ய அனுமதிக்கப்பட வில்லை.

தாழ்த்தப்பட்டோருக்கான தெய்வங்களும் அவ்வாறே வகு க்கப்பட்டன. அத்தெய்வங்களை கல்லாகவும். இரும்புச் சூலங்களாகவும் மரநிழல்களில் மட்டும் வைத்து வணங்க அனுமதிக்கப்பட்டனர். புளியடி வைரவர். வேம்படி அண்ணமார். ஆலடி அம்மன் போன்ற கோயில்களை இன்றும் காணலாம். அங்கே மிருக வேள்விகள் நடத்துமாறும் உருவேற்ற ஆட்டங்கள் வலுப்படுமாறும் நடைமுறைகள் ஊக்குவிக்கப்பட்டன. அதே

www.padippakam.com



வேளை தாழ்த்தப்பட்ட மக்கள் குல தெய்வ வழிபாட்டுச்சடங்குகளையும் முறைமைகளையும் தமக்குரிய நம்பிக்கைகளுடன் முன்னெடுத்தனர். நாட்டார் பாடல்கள் மூலமான கூத்துக்கள், கரகம், காவடி, கம்படி போன்றவற்றைப் பாதுகாத்து முன்னெடுத்தனர். தமிழர்களின் பாரம்பரிய இசையென வெறுமனே தமிழ் இனப்புகழ்ச் சிக்காகக் கூறப்படும் பறை அடிப்பதைத் தாழ்த்தப்பட்ட மக்களின் ஒரு பிரிவினரான பறையர்களே பேணிப் பாதுகாத்து வந்துள்ளனர். நாட்டார் இசையை வளர்த்து வந்தவர் களும் தாழ்த்தப்பட்ட மக்களேயாவர். காத்தவராயன், அரிச்சந்திர மயான காண்டம், நந்தனார் போன்ற நாட்டுக் கூத்துக்களை மிகச் சிறப்பாக நடாத்துவதில் தாழ்த்தப்பட்ட மக்களிடையேயான அண்ணாவிமாரும் இசை நாடகக் கலைஞர்களும் இருந்து வந்துள்ளனர். தாழ்த்தப்பட்ட மக்களிடையே நிலவிய அறியாமையையும் மூட நம்பிக்கைகளையும் பயன்படுத்திய உயர்சாதி நிலவுடமையாளர்கள் இந்து மதத்தின் 'உயரிய புனித கிரிகைகளுக்கோ' அல்லது அதன் செயல் முறைகளுக்கோ தாழ்த்தப்பட்டவர்கள் தகுதியற்றவர்கள் என ஒதுக்கி மென்மேலும் புறக் கணித்து வந்தனர். இத்தகைய போக்கு ஒரு சிலரின் விருப்பு வெறுப்பினால் இடம் பெற்றவை அல்ல. இந்துமதக் கருத்தியலின் அடிப்படையிலேயே யாவும் முன்னெடுக்கப்பட்டன. இப் பிராமணியக் கருத்தியலானது ஈழத் தமிழர் மத்தியில் குறிப்பாக வடபுலத்தில் வேளாள ஆதிக்கக் கருத்தியலாக நிறுவன வடிவிலே நாவலரினால் முன்னெடுக்கப்பட்டது.

கொலனிய சக்திகளின் மொழி, மத, கலாசார ஊடுருவல் களை எதிர்த்து ஆறுமுகநாவலர் தனது காலத்தில் தமிழுக்கும் சைவத் திற்கும் அளப்பரிய தொண்டாற்றிச் சென்றார் என்பது துலக்கப்படும் அதேவேளை தமிழர் சமூகத்திலே பெரும் பிளவாக இருந்து வந்த சாதி அமைப்பை நியாயப்படுத்தி சாதியாசாரத்தை வற்புறுத்திச் சென்றார் என்பதும் மறைக்கக் கூடியதொன்றல்ல. இலங்கையில் இந்து மதத்தினரி டையே ஏற்பட்ட மறுமலர்ச்சிக்கு ஆறுமுகநாவலர் முன்னோடியாகத் திகழ்ந்தார் என்பது ஐயத்திற்கு இடமற்றதாகும். அதேவேளை. அந்த மறுமலர்ச்சியில் இந்துக்களிடையே தொடரப்பட்டு வந்த சாதிஅமைப்பு முறையை ஏற்றுப் பாதுகாக்க மிக மும்முரமாக இயங்கி வழிவகுத்தவர் ஆறுமுக நாவலர் என்பது எவ்வகையிலும் மறுக்கப்பட முடியாத ஒன் றாகும்.

இந்துமதமும் அதன் ஒரு பிரிவான சைவ சமயமும் எவ்வ

www.padippakam.com



ளவிற்கு பக்திமார்க்கம் பற்றிப் பேசிய போதிலும் அதன் நடைமுறை வாழ்விலே ஒரு பிரிவினரான தாழ்த்தப்பட்ட மக்களை புறக்கணித்து ஒதுக்கி அநீதிகள் கொடுமைகள் விளைவித்து வந்திருக்கிறது. அத்தகைய மதத்துடன் பின்னிப் பிணைந்து வளர்ந்து வந்த தமிழர் பண்பாடு தாழ்த் தப்பட்ட மக்களை நிட்டூரம் செய்தே வந்தது.

தாழ்த்தப்பட்ட மக்கள் என அழைக்கப்படும் மக்கள் உயர்த் தப்பட்டோர் பின்பற்றும் கலாசார நடைமுறைகளைப் பின்பற்ற அறவே அனுமதிக்கப்படவில்லை. நடை உடை பாவனை என்று சொல்லப்படும் எதிலும் அவர்கள் சமத்துவமாக நடந்து கொள்ள அனுமதிக்கப்படவில்லை. அத்தகைய நடைமுறைகளை மீறிய ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவர்க ளின் மீது கொடிய அடக்குமுறை ஏவப்பட்டது. பெண்கள் மேற்சட்டை அணிய முற்பட்ட போதும், ஆண்கள் சேட்டும் கால்முட்ட வேட்டியும் அணிந்த போது, செருப்பு குடை பாவித்தபோது சைக்கிள், மோட்டார் கார் பிரயாணம் மேற்கொள்ள எத்தனித்தபோது எல்லாம் சாதி வெறியர்களின் தாக்குதல்களுக்கு உள்ளாகினர். திருமண வீடுகளில் வெள்ளை கட்டியதற் காக, மேளம் அடித்ததற்காக இன்னும் பிற கலாசார நடைமுறைகளை உயர்சாதித் தமிழர்கள்போல் கைக்கொள்ள முயன்ற சந்தர்ப்பங்களில் எல்லாம் தாழ்த்தப்பட்ட மக்கள் பெரும் அடக்கு முறைகளையே எதிர் நோக்கினர். எங்கெங்கு உயர்சாதி நிலவுடைமையாளர்களின் ஆதிக்கம் கொடிகட்டிப் பறந்ததோ அங்கெல்லாம் தாழ்த்தப்பட்ட மக்கள் கூனிக் குறுகி வாய்பேச இயலாத மந்தைக் கூட்டங்கள்போல் இரண்டாந்தர நிலையில் "அதுகள்" என்ற அஃறிணைச் சுட்டுமொழியுடன் ஆண்ட பரம்பரையினரால் அடக்கி ஆளப்பட்டனர்.

உதாரணத்திற்கு பின்வரும் வரலாற்றுச் சம்பவத்தை சுட்டிக் காட்டலாம். 1910ல் புத்தூர் சிறுப்பிட்டிக் கிராமத்தில் பருத்தித்துறை பிர தான வீதியில் வசித்துவந்த வண்ணார் சாதியினரான ஒரு குடும்பம் ஒரு கல்வீடு கட்டுவதற்குத் தீர்மானித்தது. அதற்கான ஆரம்பகட்டுமானப் பணிகள் செய்யத் தொடங்கியதும் அதை அறிந்த அவ் ஊர் உயர் வேளாள ஆதிக்க சாதியினர் சிலர் திரண்டு வந்து "வண்ணார் கல்வீடு கட்ட முடியாது. அதுவும் பிரதான வீதியில் கட்டுவதா?" என்று மிரட்டித் தடுக்க முற்பட்டனர். அவ்வேளை அக் குடும்பத்தின் ஆறுபிள்ளைகளின் தாயானவள் கையில் உலக்கையை எடுத்து தனது படலையில் நின்றவாறு "துணிவிருந்தால் வாருங்கடா. நாங்கள் வீடு கட்டித்தான் தீருவோம்.

படிப்பகம்

www.padippakam.com



முடிந்தால் செய்கிறதைச் செய்யுங்கோடா'' எனப் பெண் சிங்கமாக கர்ச்சித்து நின்றார். சாதி ஆதிக்கவாதிகள் பின்வாங்கிச் சென்றனர். அப்பகுதியின் முதலாவது கல்வீடு சாதிய ஆதிக்கத்தை எதிர்த்து எழுந்த துடன் அதனைத் தொடர்ந்து பக்கத்திலும் அவ் அயலிலும் பல கல்வீடுகள் கட்டப்பட்டன. அதன் பின் அவ் வீதியால் செல்லும் குறிப்பிட்ட உயர் சாதிவாதிகள் சிலர் அக் கல் வீட்டுப் பக்கம் திரும்பிப் பார்க்காது மறுபக்கம் பார்த்துச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தனர் என்பதும் குறிப்பிடத் தக்கதாகும்.

இவ்வாறு வேறு சில கிராமங்களில் கட்டிய வீடுகள் இடித்துத் தள்ளப்பட்டன. தமது குடிசையைச் சற்று விரிவுபடுத்தி வீட்டு வடிவில் அமைத்தமைக்காக அல்லது ஓடுவேய்ந்ததற்காக எரிக்கப்பட்ட வீடுகள் அநேகம் உண்டு.

தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் இருந்து ஒரு ஆணோ அன்றி பெண்ணோ உயர்சாதித் தமிழர்கள் மத்தியில் திருமணம் செய்வதை நினைத்துக்கூடப் பார்க்க முடியாது. இன்றைய தமிழ் சிங்கள ஆங்கில இதழ்களில் வெளிவரும் திருமண விளம்பரங்களில் இந்து உயர் வேளாளர் குடும்பத்தைச் சேர்ந்த பெண்ணுக்கு அல்லது ஆணுக்கு என்றே காணப் படுகிறது. இது சாதிய அக மணத் திருமண முறைமையின் தீவிரத்தை இப்பொழுதும் எடுத்துக் காட்டுவதாகவே உள்ளது. மேலும் தெரிந்தோ தெரியாமலோ தாழ்த்தப்பட்டவர்கள் யாராவது உயர்சாதியினர் மத்தியில் காதலித்துவிட்டால் அல்லது ஆணோ பெண்ணோ சோரம் போவது கண்டுபிடிக்கப்பட்டுவிட்டால் அதுவே தாழ்த்தப்பட்ட மக்களின் குடிசைகள் எரிவதற்கும் தொழில்கள் நாசமாக்கப்படுவதற்கும் இரகசிய பரகசியக் கொலைகள் இடம் பெறுவதற்கும் காரணமாகிவிடும். இற்றைக்கு நான்கு தசாப்தங்களுக்கு முன்பு ஒரு தாழ்த்தப்பட்ட இளைஞன் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டு அநாதரவான இடத்தில் போடப்பட்டிரு ந்தால் அந்த மர்மத்தின் பின்னால் சாதிய அடிப்படையிலான பாலுறவோ அன்றி காதல் பிரச்சினையோ மறைந்திருந்தே தீரும். இவ் அடிப்படையில் இடம் பெற்ற சம்பவங்களை தமிழர் வரலாற்றில் அநேகமாக ஒவ்வொரு பிரதேசத்திலும் பகிரங்கமாகவும் இரகசியமாகவும் மக்கள் இப்பொழுதும் பேசிக்கொள்வர். சாதி அமைப்பின் மூலம் தாழ்த்தப்பட்ட மக்கள் பெற்ற தாக்கங்களில் மேற்கூறிய அம்சங்களும் இருந்தே வந்துள்ளன. இச் சம்பவங்கள் பற்றி நாவலராசிரியர் கே. டானியல் தனது முதலாவது

படிப்பகம்

www.padippakam.com



நாவலான பஞ்சமரிலும் அவ் வரிசையில் வந்த பிற நாவல்களிலும் விரிவாக எடுத்துக் கூறியுள்ளமை நோக்குதற் குரியதாகும். இவற்றைச் சாதிய-வர்க்க அடிப்படையில் நோக்க வேண்டுமே அன்றி குறுகிய சாதிவாத பாலியல் வக்கிர நோக்கிலோ அல்லது பழிவாங்கும் அடிப்படையிலோ அணுகக் கூடாது என்பது கவனத்திற்குரி யதாகும்.

மேற்கூறிய வழிகளிலான அடக்குமுறைகளை ஆங்காங்கே தாழ்த்தப்பட்ட மக்களிடையே இருந்த சிலர் எதிர்த்துப் போராடி வந்திருக்கிறார்கள். அதனாற் பெரும் 'சாதிக் கலவரங்கள்' என்ற பெயரில் போராட்டங்களும் காலத்திற்குக் காலம் இடம் பெற்றிருக்கின்றன. இருந்தாலும் அவை தானெழுந்தவாரியானவையே அன்றி அமைப்பு வாயிலாக ஒழுங்கமைப்புக்கு உட்பட்டவையாக இருக்கவில்லை. உதாரணமாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலே சுழிபுரத்தில் தாழ்த்தப்பட்ட ஒருவரது வீட்டில் திருமண வைபவத்திற்கு வெள்ளை கட்டியதற்காக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிராக ஒரு பெரும் வன்முறையே இடம் பெற்றிருப்பதைச் செவி வழித் தகவலாக அறிய முடிகிறது. அதில் வைரவன், செல்லன் ஆகிய இரு தாழ்த்தப்பட்ட சகோதரர்கள் இணைந்து சாதி வெறியர்களுக்கு எதிராகப் போராடி அவர்களைப் பின்வாங்கச் செய்தார்கள். அதேபோல் தெல்லிப்பளையில் சாதி வெறியர்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் அவ்வூர்த் தாழ்த்தப்பட்ட மக்கள் சித்தன் என்பவரின் தலைமையில் அவ்வவ்வேளைகளிற் போராடி வந்துள்ளனர். இச் சித்தன் என்பவர் உயர்சாதியினரின் கோவிலில் சென்று தானே தேங்காய் அடித்து சாதி வழக்கத்தை மீறிய சம்பவம் இடம்பெற்றது. உயர் சாதியினரின் மரணவீட்டில் இத் தாழ்த்தப்பட்ட சித்தனைப் பற்றி உயர்சாதிப் பெண்கள் ஒப்பாரி இயற்றிப் பாடிய பாடலை தெல்லிப்பளையில் உள்ள வயது சென்ற தாழ்த்தப்பட்ட மக்கள் இன்றும் ஞாபகம் கொள்வர். "நரி புகுந்து உலாவாத நந்தவனச் சோலையிலே நளச் சித்தன் வந்து நகரை அழித்துவிட்டான் புலி புகுந்து உலாவாத பூங்காவனச் சோலையிலே பொல்லாத சித்தன் வந்து பொல்லாங்கு செய்துவிட்டான்." இவ்வாறு ஒவ்வொரு இடங்களிலும் இத்தகைய எதிர்ப்பாளர்கள் இருந்து வந்துள் ளமை குறிப்பிடத்தக்கதாகும். இத்தகைய தனிநபர் எதிர்ப்பாளர்களது எதிர்ப்பானது மேற்கூறப்பட்ட பண்பாட்டு நடைமுறைகளைத் தாமும் சுதந்திரமாகப் பின்பற்ற முயன்ற வேளைகளிலேயே முனைப்புப் பெற்றுக் கலவரங்களாக வடிவம் பெற்றிருக்கின்றன. மேலும் உயர் வேளாளச்

சாதிவெறியர்களுக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்குமிடையிலான மோதல்கள் வடபுலத்தில் ஆங்காங்கே இடம் பெற்று வந்துள்ளன. 1914ல் பள்ளர்-நளவர் வரணியிலும். தச்சர் பண்டத்தரிப்பிலும். தட்டார் தனக்காரக்குறிச்சியிலும். பள்ளர் கெருடாவிலிலும் வேளாளரை எதிர்த்து மோதல்களில் ஈடுபட்டுள்ளனர். 1922ல் பள்ளர் உரும்பிராயிலும். வண்ணார். சிவியார்தெருவிலும். வேளாள சாதி வெறியர்களுடன் மோதியுள்ளனர். 1926ல் நளவர் மூளாயில் வேளாளரை எதிர்த்துப் போராடியுள்ளனர். இவற்றில் பெரும்பாலானவை பிரேதங்களை ஒரே சுடலையில் சமத்துவமாக எரிக்க முற்பட்டதன் விளைவானவையாகும்.

மேலும் தாழ்த்தப்பட்ட மக்களை விரைவாக இனம் காணத்தக்கதாகவும். அவர்களை இரண்டாம் தரமாகக் கணித்து நடாத் தவும் அவர்கள் வாழ்ந்த ஊர்கள் அச் சாதிகளின் பெயர் கொண்டே அழைக்கப்பட்டன. இதில் தாழ்த்தப்பட்டவர்கள் என்ற வரம்பிற்கு அப்பாற் பட்ட இடைச் சாதிகளைச் சேர்ந்தோர் வாழ்ந்து வந்த ஊர்களும் சாதிப் பெயர் சொல்லியே அழைக்கப்பட்டன. பறைய தெரு, பள்ள திக்கு, நளவ திக்கு, வண்ணாகடவை, கொல்லங்கடவை, அம்பட்டன் புலம், தச்சன் தோப்பு, சிவியா தெரு, தட்டா தெரு, சேணியர் தெரு, வண்ணா ர்பண்ணை, வண்ணாத்தி பாலம் போன்று ஏராளமான பெயர்கள் நடை முறையில் இருந்தன. இப்பொழுதும் இருந்துவருகின்றன. காணிகளின் உறுதிகளில் காணப்படும் சக்கிலியவத்தை, வண்ணான் காடு, பறைய புலம், அம்பட்டவத்தை பறைச்சிபுலம் போன்ற பெயர்கள் பல. சாதி அடிப் படையிலேயே பதிவு பெற்றிருப்பதைக் காணலாம். அவ்வாறே மாடுகளை அடையாளம் காண்பதற்காக குறி சுடும் போது அந்தந்தச் சாதியினருக்கு உரிய அடையாளங்களையே தத்தமது மாடுகளுக்கு இடவேண்டும் என்பது கட்டாயமான நடைமுறையாக இருந்து வந்திருக்கிறது.

மேலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பெயர்கள் இடப்பட்ட முறை ஆடு மாடுகளுக்கு கறுவல், சிவலை. கொடிச்சிவாலன், சுட்டியன், செங்காரி. மாவெள்ளை, நரையன். மறையன் போன்ற பெயர்கள் வைத்து கொள்வது போன்றதாகும். அதேவிதமாகவே தாழ்த்தப்பட்ட மக்களையும் நிறம். உருவமைப்பு போன்றவற்றின் அடிப்படையில் பெயர்வைத்து அழைக் கும் நடைமுறை கடந்த ஐம்பதுகள் வரை இருந்து வந்திருக்கின்றது. உதாரணத்திற்குச் சில பெயர்கள்: கறுவல், சிவலை. வெள்ளையன். எல்லுப்போலை, கட்டையன், நெடுத்தான். பெரியான். சடையன். இத்தினி.

www.padippakam.com



சிகப்பி, கறுப்பி, குட்டான், சடைச்சி போன்று பெயர்கள் இருந்து வந்ததைக் காணமுடியும்.

உயர்சாதியினர் வைத்துக் கொள்ளும் பெயர்களை தாழ்த் தப்பட்ட மக்கள் வைத்துக் கொள்ள உயர்சாதி வேளாளர் இணங்க வில்லை. மேலும் அவர்களே பிறப்பு இறப்புப் பதிவுகாரரர் பதவிகளில் இருந்து வந்ததினால் அவர்கள் தாம் விரும்பிய பெயர்களையே தாழ்த்தப் பட்ட மக்களுக்கு இட்டனர். ஒரு தாழ்த்தப்பட்ட குடும்பத்தில் குழந்தை பிறந்ததும் பிறப்பு பதிவுகாரரிடம் சென்று ஆணோ பெண்ணோ என்பதை மட்டுமே கூறவேண்டும். பெயர், தொழில், முகவரி எல்லாமே பதிவுகாரரர் தனது விருப்பப்படி பதிந்து கொள்வார். அவ்வாறு பதிவு செய்வதற்குச் செல்லும் ஒரு தாழ்த்தப்பட்டவர் அன்று முழுவதும் அப்பதிவுகாரரர் வீட்டில் சகல தொண்டு துரவு வேலைகளைச் செய்தே தீரவேண்டும். அக் கொடுமையாற் பலர் தமது பிள்ளைகளுக்கு பிறப்புப் பதிவினைச் செய்யாதுவிட்ட சந்தர்ப்பங்கள் பல இடங்களில் ஏற்பட்டிருந்தன. ஆணோ பெண்ணோ என்பதை அரைகுறையாகக் கேட்டு பால் மாறிப் பதிவு செய்யும் வேளைகளில்கூட அவ் உயர்சாதிப் பதிவுக்காரரர் மிகவும் கவனமாக இருந்து தாழ்த்தப்பட்டோருக்கான பெயர்களில் ஒன்றையே எழுதிக் கொள்வார். சிலர் தாம் விரும்பிய பெயர்களைக் கூறினால் அப்பெயரின் பின்னால் பதிவுக்காரரர் ஆண்களுக்கு முடிவுச் சொல்லாக 'ன்' சேர்த்துக் கொள்வார். பெண்களுக்கு 'ள்' 'னி' போன்றனவும் போட்டுக்கொள்வர் உதாரணத்திற்கு சில பெயர்களைப் பார்க்கலாம்..

| தாழ்த்தப்பட்டோர் | உயர்த்தப்பட்டோர் |
|---|---|
| கந்தன் | கந்தையாபிள்ளை |
| வேலன் | வேலுப்பிள்ளை |
| பொன்னன் | பொன்னம்பலம் |
| நல்லான் | நல்லதம்பி |
| கதிரன் | கதிரவேற்பிள்ளை |
| பூதன் | பூதப்பிள்ளை |
| செல்லன் | செல்லத்தம்பி |
| மயிலன் | மயில்வாகனம் |
| மாணிக்கன் | மாணிக்கவாசகர் |
| வைரவன் | வைரவநாதர் |
| நாகன் | நாகநாதர் |

www.padippakam.com



| | |
|---|---|
| பெரியான் | பெரியதம்பி |
| கந்தி | கனகாம்பிகை |
| பூதி | பொன்னம்மா நாச்சியார் |
| பொன்னி | பொன்னாச்சிப்பிள்ளை |
| செல்லி | செல்வநாயகி |
| வள்ளி | வள்ளிநாச்சியார் |
| தெய்வி | தெய்வானைப்பிள்ளை |
| பாறி | பார்வதியம்மா |

தனியாகச் சாதிப் பெயர் பதியப் படாததால் பிறப்பு இறப்பு திருமணப் பதிவுப் பத்திரங்க்ளில் இடம் பெறும் பெயர்களையும் தொழில்களையும் கொண்டு அவர்களின் சாதியைக் கண்டு கொள்ள இயலுமான நடைமுறை இருந்து வந்திருக்கிறது. தொழில் பற்றிய பத்தியை நிரப்புகையில் மரமேறி, கள் இறக்கி, மயிர் வெட்டி, புடவை வெளுப்பு, மரவேலை, கூலி, இரும்பு வேலை எனப் பதிவாளர் எழுதுவதை உதாரணமாகக் கூறலாம். இத் தொழில் பெயர்கள் காரணமாகச் சாதி அடையாளம் தெரிவதால் இன்றைய சூழலில் அப் பிறப்பு இறப்பு திருமணப் பத்திரங்களை வைத்து தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் இருந்து வந்த இளைஞர்கள் யுவதிகள் அவதியுறுவதையும் ஆதங்கப்படுவதையும் இப்போதுங் காணமுடிகின்றது.

இவ்வாறு தாழ்த்தப்பட்ட தமிழர்கள் சகல வழிகளிலும் வேறுபடுத்தப்பட்டு குறிப்பிட்ட வரையறைக்குள் மட்டுப்படுத்தப்பட்டனர். இவர்களின் மீது இழைக்கப்பட்ட சாதி அடக்குமுறைகளும் தீண்டாமை நடைமுறைகளும் ஆபிரிக்க கறுப்பின மக்களை அடிமைகளாக்கி அவர்களைப் புறக்கணித்து பாகுபாடு காட்டி வந்த ஐரோப்பிய அமெரிக்க வெள்ளை நிறவெறியர்களின் செயல்களுக்கு எந்த வகையிலும் குறையாத ஒன்றாகவே இருந்து வந்தது.

தமிழர்களின் மத்தியில் கத்தோலிக்க மதம் பரப்பப்பட்டபோது தாழ்த்தப்பட்ட மக்களில் ஒரு சிறு பகுதியினரும் மதம் மாறிக்கொண்டனர். சாதி அமைப்பு ஏற்படுத்திய இன்னல்கள் தீரவும், கல்வி, வேலை வாய்ப்பு, சமூக முன்னேற்றம் என்பவற்றுக்கு இம் மதமாற்றம் உதவும் என்ற நம்பிக்கையில் அவ்வாறு சில தாழ்த்தப்பட்ட மக்கள் மதம் மாறினர். கிறி ஸ்தவ மிஷனரிமார்கள் தமது கொலனிய ஆட்சியின் நீடிப்பிற்காகத் தாழ்த் தப்பட்ட மக்களையும் தம்பக்கத்தில் வைத்திருக்கும்

www.padippakam.com



நோக்கில் அவர்களுக்கு தமது மதத்தின் மூலம் 'சேவை' ஆற்றுவதற்கு முன்வந்தனர். அத்தகைய மிஷனரிமார்களினால் சாதி அமைப்பின் எல்லைகளைத் தாண்டவோ அல்லது தீண்டாமையின் கொடுமைகளை எதிர்த்து நிற்கவோ முடியவில்லை. எவ்வாறு இந்துமதக் கோவில்கள் சாதி அடிப்படையில் தாழ்த்தப்பட்ட மக்களை நடத்தி வந்தனவோ அவ்வாறே கிறிஸ்தவக் கோவில்களிலும் விடயங்கள் இடம்பெற்றன. ஒவ்வோர் சாதியினருக்கும் ஏற்றவகையில் கிறிஸ்தவக் கோயில்களும் தரம் பிரித்து உருவாக்க ப்பட்டன. கரையோர மக்கள் வணங்கிவரும் கத்தோலிக்க புனிதர்களுக்கும் உயர் வேளாளர்கள் வணங்கிவரும் புனிதர்களுக்கு மிடையில் வித்தியாசங்கள் உள்ளுர இருந்து வருவதை எத்தகைய கிறிஸ்தவ ஆகம நியாயங்களும் மறைத்துவிடமுடியாது. உதாரணங்களை க் குறித்தல் அவசியம். சென் ஜோசப்- வேளாளர்; சென் ஜேம்ஸ்- இடைச் சாதியினர், சென் பற்றிக்- பள்ளர் இவற்றின் அடிப்படை சாதியம்-தீண் டாமை என்பது பகிரங்க இரகசியமாகும். கிறிஸ்தவ மதம் எவ்வளவிற்கு இந்துமதத்தை விடச் சமத்துவம் பேசியபோதிலும் சாதிமுறையைத் தாண்ட முடியாத அதன் அவலத்தைச் சமூக நடைமுறை எடுத்துக்காட்டுவதை காண முடிகிறது. கத்தோலிக்க மத குருவான சுவாமி ஞானப்பிரகாசர் தாழ்த்தப்பட்ட மக்களின் பொருளாதார கல்வி சமூக முன்னேற்றத்திற்காக மத மாற்றத்தை முன்னெடுத்து 37 தேவாலயங்களை உருவாக்கினார். ஒன்று மட்டுமே வேளாளருக்கானதாக இருந்தது. மிகுதி 36 தேவால யங்களில் 12 நளவருக்கும், 10 பள்ளருக்கும், 4 துரும்பருக்கும், 4 கலவன் சாதியினருக்கும், 3 பொதுவானதாகவும், 1 கைக்குளருக்கும், 2 பறையருக்கும் என அமைந்திருந்தன. வெளிப்பார்வைக்கு சமத்துவமும், தாராளப் போக்கும் ஆண்டவன் தேவாலயத்தில் அனைவரும் சமம் என்றவிதமான தோற்றமும் காணப்படினும் உட்சென்று பார்த்தால் அங்கு சாதியினதும்-தீண்டாமையினதும் அம்சங்கள் நிலைத்திருப்பதைக் காணமுடியும். கிறிஸ்தவத் தேவாலயங்களில் உள்ள இருக்கைகளில் வித்தியாசம் காட்டப்பட்டன. உயர் வேளாள கிறிஸ்தவர்கள் பாவிக்கும் ஆசனங்களைத் தாழ்த்தப்பட்ட கிறிஸ்தவர்கள் பாவிக்க முடியாது. இந்துக் கோவில்களில் வெளி வீதிகளில் கட்டப்பட்டிருக்கும் "கயிறுகள்" கிறிஸ்தவக் தேவாலயங்களில் உள் மண்டபங்களில் கட்டப்பட்டிருந்தன என்றால் எவ்வளவிற்கு சாதி அமைப்பின் தாக்கம் கிறிஸ்தவ மதத்தின் மத்தியில் ஊடுருவி இருந்தது என்பதைக் காண முடியும். இவ்வாறு தேவாலயங்களில் சாதி ரீதியான பிணக்குகளும் பிரச்சனைகளும்

படிப்பகம்

www.padippakam.com



காலத்திற்குக் காலம் தோன்றி முரண்பாடுகளாகி மோதல்களாகவும் இடம் பெற்றுள்ளன. கிறிஸ்தவம் எவ்வாறு சாதியத்தை உள்வாங்கித் தீண்டாமை பாராட்டியது என்பதை நாவலாசிரியர் கே. டானியல் எழுதிய "கானல்" நாவல் நன்கு சித்திரிக்கின்றது.

உதராணத்திற்கு இளவாலையில் அமைந்துள்ள பெரிய தேவாலயமான பரிசுத்த அன்னம்மாள் ஆலயத்தில் திருமண வைபவத்திற்குப் பாவிக்கப்படும் 'முட்டு' என்ற இருக்கையை தாழ்த்தப்பட்ட மக்கள் சமத்துவமாகப் பாவிக்க முற்பட்டபோது கிறிஸ்தவ தமிழ்ச் சாதிவாதிகளும் சாதி வெறியர்களும் பெரும் அட்டகாசம் புரிந்து அம் மக்கள் மீது தாக்குதல்கள் தொடுத்தனர். அதேபோல் "காணிக்கைப்" பொருட்கள் செலுத்துவதிலும், திருச்சொரூபத்தைத் தூக்குவதிலும் சாதி அடிப்படையில் தாழ்த்தப்பட்ட மக்கள் புறக்கணிக்கப்பட்டனர். இப் புறக்கணிப்பையும் மீறி திருச்சொரூபத்தை தாழ்த்தப்பட்ட மக்கள் தூக்க முற்பட்டபோது சாதிவெறியர்கள் பொலீஸ் படையை வைத்துத் தாக்கிக் கைது செய்த சம்பவம் இடம் பெற்றது. அவ் ஆலயத்தில் சாதி தீண்டாமை நிலவுவதைத் தடுத்துத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சமத்துவத்தை வழங்கவேண்டிய கத்தோலிக்க கிறிஸ்தவத் தலைமைப் பீடமும் ஆயரும் அவ்வாறு செய்யவில்லை. பதிலுக்குத் தாழ்த்தப்பட்டவர்களும் ஏனைய இடை நிலைச் சாதியினரும் வணங்கும் வகையில் இளவாலை மக்குவிலில் யூதா சததேயூ ஆலயம் கட்டப்பட்டது. அதன் பின் கோடாலிக் காடு பகுதியில் சதா சகாய மாதா ஆலயம் தனியே தாழ்த்தப்பட்ட மக்களுக்கான தாகக் கட்டப்பட்டது. இத்தகைய நடவடிக்கைகள் கிறிஸ்தவ மதத்தின் மூலமும் சாதியம் பாதுகாக்கப்பட்டு வரும் போக்கைத் தெளிவாக வெளிக்காட்டி நிற்கின்றது. இளவாலை புனித அன்னம்மாள் ஆலயத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் சாதி ரீதியில் புறக்கணிக்கப்பட்ட செயற்பாடுகளும் புதிய ஆலயங்களை நிறுவுதலும் அறுபதுகளின் நடுக் கூற்றிலே ஆலயப் பிரவேசப் போராட்டங்கள் இடம் பெற்ற சமகாலத்தில் நடைபெற்றவை என்பது குறிப்பிடத்தக்கதாகும். கிறிஸ்தவ மதமும் அதன் தலைமைப் பீடமும் தமிழர்கள் மத்தியில் நிலவும் சாதி முறைமையை எவ்வாறு கையாண்டு வருகின்றன என்பதற்கு இதைவிட வேறு உதாரணம் தேவை இல்லை. இளவாலையில் மட்டுமன்றித் தமிழர் சமூகம் வாழ்ந்து வரும் பல இடங்களிலும் அமைந்துள்ள கிறிஸ்தவத் தேவாலயங்களில் உயர்சாதியினருடன் சமத்துவமாக தாழ்த்தப்பட்ட மக்கள் தமது திருமணச் சடங்கையோ அன்றி மரணச் சடங்கையோ நடத்த முடியாத நடைமுறை இன்றும்

www.padippakam.com



பகிரங்கமாகவும் இரகசியமாகவும் இருந்து வருகின்றன. அதேபோல் கிறிஸ்தவ மதத்தின் அதி உயர் குருப்பட்டத்தைப் பெறும் தகுதி இன்றுவரை உயர்குடி வேளாளர்களுக்கு மட்டுமே உரியதொன்றாக இருந்து வருவதையும் காணலாம். வடபுலத்தின் கத்தோலிக்க திருச்சபையின் ஆயராகவும் மெதடிஸ்த சபையின் தலைவராகவும் வரும் தகுதி உயர் வேளாளர்களுக்கு மட்டுமே உரியதாகும். தாழ்த்தப்பட்டவர்கள் மத்தியிலிருந்து கத்தோலிக்க, மெதடிஸ்த ஆலயங்களில் குருப்பட்டம் பெற்ற சிலர் இருந்த போதிலும் அவர்களுக்கு உரிய எல்லை எது என்பது மிகவும் கறாராகக் கடைப்பிடிக்கப்படும். மேலெழுந்தவாரியான பார்வைக்கு கிறிஸ்தவ மத நடைமுறைகள் சமத்துவ சட்டதிட்டம் போல் தென்படினும் உள்ளார்ந்த அணுகு முறையானது சாதியக் கருத்தியல் தழுவியதாகவே இருந்து வருகின்றது.

இத்தகைய கிறிஸ்தவ உயர்சாதி வேளாளர்கள் எனப்படுவோர் அந்நியராட்சிக் காலத்தில் மதம் மாறி அதன் மூலம் அதிக சலுகைகளைப் பெற்று தமது அந்தஸ்தினை உயர்த்திக் கொண்டவர்களாவர். கல்வி, உத்தியோகம், பதவிகள், பட்டங்கள் போன்றவற்றால் இவர்கள் தமிழர்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்ற சமூகப் பிரிவினராக விளங்கி வந்தனர். தமிழர்களின் அரசியல் வாழ்விலும் இவர்களின் ஆதிக்கம் தாக்கமான பாத்திரத்தை வகித்து வந்தது. நாட்டின் அரசியல் தளத்தில் பிற்போக்கு கிறிஸ்தவப் பின்னணி எவ்வாறு செயற்பட்டு வந்ததோ அதே நிலை தமிழர்களிடையேயும் நிலவி வந்தமை குறித்து நோக்க வேண்டியதாகும். அவ்வாறே சிங்கள மக்கள் மத்தியிலும் பௌத்த கிறிஸ்தவ கொய்கம (வேளாள) ஆதிக்கம் அரசியலில் இன்றுவரை நீடித்து நிலை பெற்று வந்திருக்கிறது.

சைவசமயப் பண்பாடும் கிறிஸ்தவ மதப் பண்பாடும் வேறு வேறானவை என்று கூறப்பட்டாலும் இலங்கையில் குறிப்பாக இலங்கைத் தமிழர்கள் மத்தியில் சைவ கிறிஸ்தவ உயர்வேளாள ஆதிக்கப் பண்பாடாகவே இருந்து வந்தது என்ற உண்மையை எவ்வகையிலும் மறுக்க முடியாது. இந்த சைவ கிறிஸ்தவ வேளாள ஆதிக்கம் என்பது பண்பாட்டுத் தளத்தில் மட்டுமன்றி அரசியல் அரங்கிலும் வெளிப்படையாக செல்வாக்குச் செலுத்தி வரும் போக்கை இன்றுவரை அடையாளம் காணலாம்.

தமிழர்களுடைய பண்பாட்டு வாழ்விலே ஊறிப்போன பிரிக்கமுடியாத ஒரு அம்சமாக சாதி முறையானது நிரந்தர இடத்தைப்

www.padippakam.com



பெற்று வந்திருக் கின்றது. இதன் சமுதாயத் தாக்கம் மிகவும் வலுவுள்ளதாக மட்டுமன்றி சமூக முன்னேற்றத்திற்கான பாரிய தடையாகவும் அன்றிலிருந்து இன்று வரை இருந்து வருகின்றது.

## சாதியப்படி நிலையும் சாதியக் கண்ணோட்டமும்

இந்தியாவிலும் இலங்கையிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த சாதியமைப்பினது படி நிலையில் மேலிருந்து ஒன்றன் கீழ் ஒன்றாக சாதிகள் இருத்தப்பட்டு வந்த நிலையினை முன்னமே பார்க்க முடிந்தது. அத்தகைய படிநிலைச் சாதிகள் தமக்கு மேலே உள்ள சாதியினரை உயர்வானவர்களாகவும் கீழே இருப்பவர்களைக் குறைவானவர்களாக வும் நோக்கும் கண்ணோட்டமானது சாதியக் கருத்தியலின் அடிப்படையிலான தாகும். இத்தகைய சாதியக் கண்ணோட்டமானது இலங்கையில் குறிப்பாகத் தமிழர்கள் மத்தியில் நீடித்து வந்ததுடன், சகலவற்றையும் அதன் ஊடாகவே நோக்குகிற சாதியச் சமூகப் பார்வையாகப் பின்பற்றப்பட்டும் வருகின்றமையையும் அவதானிக்க முடியும்.

ஒரு தமிழரை மற்றொரு தமிழர் சந்தித்து அறிமுகமாகும் சந்தர்ப்பத்தில் முதலில் ஒவ்வொருவரும் அறிந்து கொள்ள முன் நிற்பது அவர் எந்தச் சாதியைச் சேர்ந்தவர் என்பதையேயாகும். அதனை நேரடியாகக் கேட்காது ஊர், திசை, வீதி, ஒழுங்கை என்பனவற்றின் மூலமாக அவரது சாதியைக் கண்டு பிடித்து விடும் திறன் குறிப்பாக ஆதிக்க சாதியினருக் குரியாதாக இருந்து வந்திருக்கிறது. உடனடியாக ஒருவரது சாதி அடை யாளத்தைக் கண்டு பிடிக்க முடியாது விட்டாலும் அதில் அக்கறையாக இருந்து விசாரித்து அறிந்து கொள்வதில் நிம்மதி காணும் குணம் தமிழர்களின் தனிக் குணம் என்றும் கூறப்படுவது உண்டு. புலம் பெயர்ந்த சூழலிலும் இந்தத் தனிக் குணம் அறுந்து போய் விடவில்லை.

தமது உயர் சாதிய நிலையின் ஊடாக ஏனையவர்களைக் குறைந்தவர்களாக நோக்கும் பார்வை காரணமாகச் சாதாரண சிங்கள முஸ்லீம் மலையக மக்களையும் தரங்குறைந்தவர்களாகக் காணும் போக்கு வடபுலத்தின் உயர்சாதிய மேட்டுக்குடி ஆதிக்க சாதியினரிடையே இருந்து வந்துள்ளது. இத்தகைய தமிழர் பழைமைவாத ஆதிக்கப் போக்குக்குச் சாதியக் கருத்தியல் கண்ணோட்டமே அடிப்படையானதாகும்.

இவ்வாறான சாதியப் படிநிலையும் சாதிக்குள் சாதி பார்க்கும் குறுகிய சாதியப் பார்வையும் பிராமணியம் வகுத்தளித்த சாதிய-

www.padippakam.com



தீண்டாமைக் கருத்தியல் சிந்தனாமுறையானது சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளாகத் தலைமுறை தலைமுறையாகப் பின்பற்றப்பட்டு சாதிய உளவியலாக இன்றும் இறுக்கம் உடையதாகக் காணப்படுகின்றது.

இலங்கையில் தமிழர்கள் மத்தியில், குறிப்பாக வடபுலத்து தமிழர்கள் மத்தியில், சாதி அமைப்பின் அத்தனை அம்சங்களும் தீண்டாமையுடன் கூடிய ஒன்றாக முன்னெடுக்கப்பட்டு வந்திருக்கின்றன. இத்தகைய நிலையானது குறிப்பான இரண்டு சமூக நிகழ்வுப் போக்குகளால் அற்றுப் போய் விட்டது. அல்லது அதன் சாதியத் தீவிரத்தை இழந்து விட்டது என்று கூறப்படுவதைக் கேட்கின்றோம். ஒன்று வெளி நாடுகளுக்கு புலம் பெயர்ந்து பெரும் தொகையினரான தமிழர்கள் வாழ்ந்து வருதல். இரண்டாவது, தமிழ் மக்கள் மத்தியில் இரண்டு தசாப்தங்களுக்கு மேல் இடம் பெற்று வரும் ஆயுதம் தாங்கிய போராட்டச் சூழல். ஆனால் இவை இரண்டினாலும் தமிழர்கள் மத்தியிலான குறிப்பாக வடபுலத்து தமிழர்களிடையே சாதியம் எந்தளவுக்கு மாற்றம் பெற்றுள்ளது என்பது ஆழ்ந்து நோக்கப்பட வேண்டியதாகும்.

சாதி அமைப்பினது பாரிய தாக்கம் சாதியப் படிநிலையில் மட்டுமன்றிச் சாதிக்குள் சாதி பார்க்கும் அடிநிலை வரை ஊறி உறுதி பெற்றுள்ளதைக் காணலாம். இச் சாதிக்குள் சாதி பார்க்கும் முறையை உயர்சாதியினர் எனப்படுவோரிடமும் தாழ்த்தப்பட்டவர்களிடமும் தாராளமாகக் காணமுடியும். வேளாளர்கள் என்று ஒரே கிராமத்தில் இருப்பவர்களிடம் பல்வேறு தரங்களைக் கொண்டவர்கள் இருப்பார்கள். உயர்வேளாளர் தமது தரத்திற்கு அடுத்த தரத்தில் உள்ள வேளாளர் என்போரின் வீடுகளில் உணவு அருந்தவோ திருமணம் செய்யவோ மாட்டார்கள். உதாரணமாகத் தமிழ் வளர்த்த தாமோதரனார் என்று இன்றுவரை இலங்கையிலும் தமிழ் நாட்டிலும் புகழப்படும் சி.வை. தாமோதரம்பிள்ளை தனது சொந்த ஊரான சிறுப்பிட்டியில் போற்றப்படவோ நினைவு கூரப் படுவதோ இல்லை. அவரது குடும்பம் கிறிஸ்தவ மதத்தை தழுவிய காரணத்தை விட மூன்றாம் தரநிலைச் சாதாரண வேளாளர் குடும்பத்தில் இருந்து வந்தவர் என்பதே அடிப்படையான காரணமாகும். சி.வை. தமோதரம்பிள்ளை புத்தூர் சிறுப்பிட்டியின் நிலவுடைமை ஆதிக்கம் கொண்ட வேளாளர் குடும்பத்தில் இருந்து வந்தவர் அல்ல. புத்தூர் மழவராயர் கந்தையா என்பவரை விட சி.வை.தா. தமிழ் மொழிக்கும் தமிழர் பரப்புக்கும் பெரும் பங்களிப்பு செய்தவர். ஆனால் அவரது குடும்பம் சாதாரண உழைக்கும் வேளாளர் குடும்பமாகும். அதனலேயே அவரது

www.padippakam.com



குடும்ப மூதாதையர் கிறிஸ்தவம் தழுவி ஆங்கில உயர்கல்வி பெற்றனர். சாள்ஸ் வின்ஸ்லோ என்று பெயர் சூட்டப்பட்ட அவர் தனது தாயாரின் ஊரான சிறுப்பிட்டியின் முதல் எழுத்தையும் தந்தையின் பெயரான வைரவ நாதர் என்பதனைச் சேர்த்து சி.வை. தமோதரம்பிள்ளை என மாற்றி வெளிப்படுத்தினார். அத்தகைய தமிழுக்கு தொண்டு செய்தவரான சி.வை. தா சொந்த ஊரில் போற்றப்படவோ நினைவு கூரப்படவோ இல்லை என்றால் அதற்கான காரணம் சாதியப் படிநிலையில் அவர் தரம் குறைந்த வேளாளர் என்பதேயாகும்.

இதே நிலை தாழ்த்தப்பட்ட மக்களிடையேயும் காணப்படு கின் றது. தாழ்த்தப்பட்ட சாதியினர் எனக் குறிப்பிடப்படுவோர் மத்தியில் யார் உயர்வு யார் தாழ்வு என்ற நிலை நிலவுகிறது. அதுமட்டு மன்றிச் சில குடிமை வேலைகள் கூட இவர்கள் மத்தியில் இடம்பெறுவதைக் காண முடியும். ஒரே கிராமத்தில் வசிக்கும் ஒரே சாதியினர் தம்மி டையே ஒரு பகுதியினரைச் சாதியில் குறைந்தவர்கள் எனக் குறிப்பிட்டு தமது வைபவங் களில் சமத்துவமாக நடத்தாத நிலையை இன்றும் நிறையக் காண முடியும். பொருளாதாரம் கல்வி போன்றவற்றால் மேன் நிலையாக்கம் பெற்ற தாழ்த்தப்பட்ட சாதிகளைச் சேர்ந்த சில குடும்பங்கள் ஒரே சாதியைச் சேர்ந்த சாதாரண குடும்பங்களை ஊர் குறிச்சி கூறிக் குறைந்தவர்களாக ஒதுக்கி வைத்து வருவதும் சாதியப் படிநிலைப் பார்வை கொண்ட கண்ணோட்டமேயாகும். தாழ்த்தப்பட்ட மக்களின் பிரதிநிதியாக உடுப்பிட் டித் தொகுதியில் 1977ல் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பாகத் தேர்ந் தெடுக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரி. இராஜலிங்கம் தனது அதே சாதியைச் சேர்ந்த அல்வாய் வடக்குப் பகுதி மக்களின் திருமண வைபவத் தில் சென்று செம்பு தண்ணீர் எடுத்துச் சமத்துவமாகப் பந்தியில் இருந்து சாப்பிட முடியாதவர் என்ற குற்றச் சாட்டுக்கு ஆளானவர் என்பதில் இருந்து தாழ்த்தப்பட்ட மக்களிடையே கூட சாதி அமைப்பின் படி நிலைத் தாக்கம் நடைமுறை வாழ்வில் எவ்வளவிற்கு விரவி நிற்கின்றது என்பதைக் காணமுடிகின்றது. ஆதலால் சாதியக் கருத்தியலின் தாக்கம் என்பது உயர் சாதியினர்-தாழ்த்தப்பட்டவர்கள் என்ற அடிப்படையில் மட்டுமன்றிச் சகல சாதியினரிடமும் வெவ்வேறு அளவுகளில் படிந்து நின்று தாக்கத்தினை ஏற்படுத்தி வந்துள்ளமையைக் காண முடியும். ஆனால் தமிழர்களின் சமூக வாழ்வில் உயர்சாதி- தாழ்த்தப்பட்டோர் என்ற அடிப்படையிலான சாதி அமைப்பும் தீண்டாமையுமே முரண்பாடும் ஒடுக்கு முறையும் நிறைந்த தாக இருந்துவந்துள்ளது.

www.padippakam.com

# 6

# கொலனிய காலத்திலிருந்து சுதந்திரம் வரை

சாதி அமைப்பின் தோற்றம், வளர்ச்சி, இருப்பு அதன் இறுக்கம், தாக்கம் என்பன பற்றி முன் அத்தியாயங்களிலே விரிவாகக் கண்டோம். இங்கே சாதிக் கொடுமைக்கும் அதன் விளைவான தீண்டாமைக்கும் எதிரான கருத்துக்கள், அமைப்புகள், போராட்டங்கள், அவற்றின் படிமுறை வளர்ச்சி என்பன எவ்வாறு விருத்திபெற்று வந்தன என்பதைக் கவனிப் போம்.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப ஆண்டுகள் உலகின் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் பேரெழுச்சிகளினூடே ஆரம்பமாகியது. மேற்குலகில் ஏகாதிபத்திய முதலாளிய சுரண்டல் அமைப்பு முறைகளுக்கு எதிராகப் பாட்டாளி வர்க்கம் கோட்பாட்டு ரீதியில் புரட்சிக் களத்திலே வீரநடை பயின்று கொண்டிருந்தது. கிழக்குலகில் கொலனிய ஆதிக்கத்திற்கு எதிரான எழுச்சிகள் வேகம் பெற ஆரம்பித்தன. ஆசியாவின் பெரும் தேசங்களான சீனா, இந்தியா போன்ற நாடுகளில் அந்நிய ஆதிக்க நுகத் தடிகளைத் தூக்கி எறியும் தேசிய இயக்கங்கள் வெடித்தெழுந்து வேகம் பெறலாயின. இத்தகைய எழுச்சிகளின் தாக்கம் இலங்கையிலும் எதிரொலித்தது. குறிப்பாக இந்திய தேசிய இயக்கத்தின் செல்வாக்கு இலங்கை மக்களிடையே அதிக கவனத்தை ஈர்த்தது. இலங்கை மக்கள் தமது இன, மொழி, மத, பண்பாட்டு அம்சங்களினூடே கொலனிய ஆதிக்கத்திற்கு எதிரான கருத்து நிலைகளைத் தோற்றுவித்து அரசியல் சீர்திருத்தங் களைக் கோரும் தேசிய இயக்க அமைப்புக்களை உருவாக்கி முன்னெடுக்க முனைந்தனர். அம் முயற்சிகளின் வெற்றி தோல்விகளையோ அன்றி

www.padippakam.com



சாதக பாதக அம்சங்களையோ அவற்றின் வர்க்க சாராம்சங்களையோ விரித்து நோக்குதற்கு இது உரிய சந்தர்ப்பம் அன்று.

இருபதாம் நூற்றாண்டின் முதல் இரு தசாப்தங்களை எடுத்து நோக்கும் போது தமிழர் சமூகத்தின் மத்தியில் அரசியல் சமூக கலாசார விழிப்புணர்வானது அப்போது வளர்ச்சியடைய ஆரம்பித்தது. அதேவேளை அவர்கள் மத்தியில் சாதி அடக்கு முறை தீண்டாமைக் கொடுமைகளினால் அழுக்கப்பட்ட நிலையில் இருந்து வந்த தாழ்த்தப்பட்ட மக்கள் என அழைக்கப்படும் மக்களிடையே விழிப்புணர்வு துளிர் விட ஆரம்பித்தது. இருப்பினும் தாழ்த்தப்பட்ட மக்களை சாதி அமைப்பின் இறுக்கம் அடக்கி ஒடுக்கி வைத்திருக்கும் சூழ்நிலையே நிலவியது. அதேவேளை தமிழ்த் தேசியம் என்பது நாவலர் காலத்தில் கருக்கொண்டு பொன்னம்பலம் இராமநாதன் அருணாசலம் சகோதரர்களால் முன்னெடுக்கப்பட்டு ஆரம்ப வளர்ச்சி கண்டது. அத்தகைய தேசியம் தாழ்த்தப்பட்ட மக்களை உள்ளடக்காத மேட்டுக்குடி உயர்வர்க்கத் தமிழ்த் தேசியமாகவே முன் சென்றது. அதனை ஒட்டியே தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பக் கூறிலே சாதிய தீண்டாமைக்கு எதிரான விழிப்புணர்வும் முன்னோக்கிய செயலுணர்வும் தோன்ற ஆரம்பித் தது.

1910ம் ஆண்டுகளின் பிற்பகுதியிலே யாழ்ப்பாணத்தில் தொழிலாளர் நலன் காக்கும் நோக்குடன் பெயர் குறிப்பிடக்கூடிய முதலாவது அமைப்பு உருவாக்கப்பட்டது. அதன் பெயர் வட இலங்கைத் தொழிலாளர் சங்கம் என்பதாகும். கொழும்பு மாநகரில் தொழிலாளர்களின் தொழிற்சங்க நடவடிக்கைகளின் உந்துதலே இவ் வட இலங்கை தொழிலாளர் சங்கம் உருவாகக் காரணமாக அமைந்தது எனலாம். இச்சங்கத்தை ஏ.பி. தம்பையா, ஏ.கே. செல்லையா ஆகிய இருவருமே முன்னின்று உருவாக்கினர். இவ் இருவரில் முன்னவர் உயர்த்தப்பட்டோர் சாதியில் இருந்து வந்த சமூக, தொழிற்சங்க அக்கறை கொண்ட முற்போக்காளர். பின்னவர் தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் இருந்துவந்த ஒரு சமூக நலன் விரும்பியாவார். இவர்கள் இச் சங்கத்தை ஆரம்பித்த வேளை சுருட்டுத் தொழிலாளர்கள். வண்டித் தொழிலாளர்கள், மீன்பிடித் தொழிலா ளர்கள், சீவல் தொழிலாளர்கள் சலவைத் தொழிலாளர்கள் என்போர் அதில் அங்கம் வகித்தனர். இத் தொழிலாளர் சங்கத்தின் சார்பாக 'சமர சவாதி' என்னும் பெயரில் ஒரு பத்திரிகை வெளியிடப்பட்டது. பத்திரிகையின் இரண்டு

www.padippakam.com



பக்கம் தமிழிலும் இரண்டு பக்கம் ஆங்கிலத்திலும் வெளிவந் தது. ஆனால் இச் சங்கம் நீண்ட காலம் நிலைத்திருக்க முடியவில்லை. சாதி அமைப்பின் இறுக்கம் சாதி-தொழில் ரீதியில் அங்கத்தவர்களைப் பிளவடைய வைத்தது. இறுதியில் அச்சங்கத்தில் எஞ்சியவர்கள் சீவல் தொழிலாளர்கள் மட்டுமே. அத்துடன் அச்சங்கத்தின் செயற்பாடு நின்று வி ட்டது. இருந்த போதிலும் வட இலங்கையின் முதலாவது தொழிலாளர் அமைப்பு என்ற வகையில் அதன் முயற்சிகளும், செயற்பாடுகளும் வரவேற் கத்தக்க முற்போக்கு அம்சங்களைக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தாகும்.

1920-ம் ஆண்டுகளின் முற்பகுதியில் தமிழர் சமூகத்தில் தேசிய உணர்வும் தாய் நாட்டுப் பற்றும், முற்போக்கான சமூகப் பார்வையும் எதிர்காலத்தைப் பற்றிய தூரசிந்தனையும் கொண்ட கல்விகற்ற இளை ஞர்கள் சிலர் அரசியல் களத்திலே பிரவேசித்தனர். அத்தகையவர்களை ஒன்றிணைத்து அமைப்பு ரீதியில் முன்னெடுத்ததில் முதன்மையானவர் கள் எஸ்.எச். ஹன்டி பேரின்பநாயகம் ஸி. சுப்பிரமணியம் (ஒறேற்றர்) ஆகிய இருவருமாவர். இவர்களினதும் ஏனைய நெருங்கிய நண்பர்களின தும் இடைவிடாத முயற்சியினாலேயே யாழ்ப்பாண மாணவர் காங்கிரஸ் என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. இவ் அமைப்பின் பெயர் பின்பு யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் என்பதாக மாற்றம் பெற்றது. உயர் கல்வி நோக்கி முன்சென்ற சமூக உணர்வு மிக்க மாணவர்கள் பலர் இம் மாணவர் அமைப்பை உருவாக்குவதில் முன்னின்றனர். இத்தகையோரில் கிறிஸ்தவ. சைவ உயர்த்தப்பட்ட சாதிக் குடும்பங்களில் இருந்து வந்தவர் கள் ஒன்றிணைந்திருந்தனர் என்பது கவனத்திற்குரியதாகும்.

தமிழர் சமூகத்தின் வரலாற்றில் வடபுலத்தை மையமாகக் கொண்ட இந்த யாழ்ப்பாண வாலிபர் காங்கிரசுக்கு என்றும் அழியாத புகழ் உண்டு. ஏனெனில் தமிழர்கள் மத்தியில் தேசப்பற்று, தேசிய உணர்வு, மொழி. பண்பாடு போன்றவற்றில் முற்போக்கான சமூகப் பார்வைத் தெளிவும். சாதிய தீண்டாமைக்கு எதிரான நடைமுறைச் சாத்தியமான செயற்பாடும் இருந்தன. இதனால் யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் ஒரு முற்போக்கான பாத்திரத்தைக் கொண்டிருந்தது.

1924-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 29ம். 30ம், 31ம் திகதிகளில் யாழ்ப்பாணம் றிஜ்வே மண்டபத்தில் நடைபெற்ற வாலிபர் காங்கிரசின் முதலாவது மாநாடு நிறைவேற்றிய பத்துத் தீர்மானங்களில் மூன்றாவது தீர்மானமாக அமைந்திருந்தது தமிழர்கள் மத்தியில்

www.padippakam.com



நடைமுறைப்படுத்தப் பட்டு வரும் தீண்டாமைக்கு எதிரான கண்டனக் குரலாகும். அதை ஒழிப்பதற்கு காங்கிரஸ் ஆக்கபூர்வமான நடவடிக்கை களை செயற்படுத்த வேண்டும் என அத்தீர்மானம் வலியுறுத்தியது. இத்தீர்மானத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றுவதில் எஸ்.எச். ஹண்டி பேரின்பநாயகம் ஸி. சுப்பிரமணியம் போன்றோர் முக்கியமானோராக இருந்தனர். இத்தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டதும் அதை விரும்பாத வி. குமாரசாமி என்பவர் மாநாட்டுப் பிரதிநிதிகளைப் பார்த்து உங்களால் தாழ்த்தப்பட்டவர்களின் வீடுகளில் உணவருந்தி தேனீர் குடிக்க முடியுமா எனச் சவால் விடுத்தார். திரு. ஹண்டி பேரின்பநாயகமும் அவருடன் இணைந்த நண்பர்கள் சிலரும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் துப்பரவுத் தொழில் செய்து வந்த தாழ்த்தப்பட்டவர்களின் வீடுகளுக்குச் சென்று தேனீர் சிற்றூண்டி அருந்தி தீண்டாமைத் திமிர் கொண்டோரின் மேற்படி சவாலை முறியடித்தனர் என்றும் அறிய முடிகிறது.

வருடாவருடம் நடைபெற்று வந்த வாலிபர் காங்கிரஸ் மாநாடுகளில் தீண்டாமைக்கு எதிரான கருத்துக்களும் தீர்மானங்களும் பிரதான இடத்தைப் பெற்றிருந்தன. இதற்குக் காரணம் வாலிபர் காங்கிர சின் இளைஞர்கள் இந்திய தேசிய இயக்கத்தின் தீவிரக் கருத்துக்களால் கவரப்பட்டிருந்தமையும் பரந்த கல்வி அறிவைப் பெற்றிருந்தமையுமேயா கும். விவேகானந்தர், காந்தி, பாரதி போன்றோரது கொலனிய எதிர்ப்புக் கருத்துக்களும் சமூக சீர்திருத்த சிந்தனைகளும் இவ் இளைஞர்களை அதிக அளவு ஆட்கொண்டிருந்தன என்பதும் நோக்குதற்குரியதாகும்.

1927-ம் ஆண்டு கார்த்திகையில் காந்தி இலங்கைக்கு வந்தார். வாலிபர் காங்கிரஸ் அவரை யாழ்ப்பாணம் அழைத்திருந்தது. காந்திக்கு யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் வரவேற்புக் கொடுப்பதற் கான தயாரிப்புக் கூட்டங்களை வாலிபர் காங்கிரஸ் தலைவர்கள் நடாத்தி வந்தார்கள். சில இடங்களில் நடைபெற்ற கூட்டங்களில் சாதி வெறியர்கள் தலையிட்டு காந்திக்கு வரவேற்புக் கொடுக்கும் அதேவேளை தாழ்த்தப் பட்ட மக்களுக்கு அதில் சமத்துவம் கொடுக்கக்கூடாது என வாதிட்டனர். வடமராட்சி துன்னாலையில் ஒரு பாடசாலையில் இவ்வித தயாரிப்புக் கூட்டத்தில் தர்க்கம் வந்தபோது 'தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சமத்துவம் வழங்காது பாகுபாடு காட்டப்படுமானால் காந்தியை வரவேற்பதிலோ அல்லது அவருக்கு கௌரவம் வழங்குவதிலோ எவ்வித அர்த்தமும்

www.padippakam.com



இல்லை' எனக் கூறி சாதி வெறியர்களின் நிலைப்பாட்டை வாலிபர் காங்கிரஸ் தலைவர்கள் நிராகரித்துவிட்டனர். தெல்லிப்பளையில் காந்தியை வரவேற்பதற்கென அமைக்கப்பட்ட வரவேற்புப் பந்தலை இரவோடு இரவாக சாதி வெறியர் எரித்து நாசப்படுத்தினர். இத்தனைக்கும் மத்தியிலும் 26-11-1927ல் யாழ். முற்ற வெளியில் காந்தி வரவேற்கப்பட்டார். வரவேற்புக் கூட்ட மேடையில் தாழ்த்தப்பட்ட மக்களின் பிரதிநிதிகளும் இடம்பெற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்விதமாக காந்தியின் யாழ்ப்பாண வருகையானது தேசிய உணர்வு மேலோங்குவதற்கு வழிவகுத்தது போன்று தீண்டாமைக்கு எதிரான ஒருவகை உத்வேகத்தையும் இளைஞர்களிடையே ஏற்படுத்தியது. அதேபோல் மிஷனரிக் கல்வி கற்ற ஒரு சில தாழ்த்தப்பட்ட இளைஞர்களிடமும் யாழ்ப்பாண வாலிபர் காங்கிரசின் நடவடிக்கைகள் புதிய தாக்கத்தை ஏற்படுத்தி நின்றன.

1929ம் ஆண்டு சித்திரை மாதத்தில் காங்கேசன்துறையில் விசேடமாக அமைக்கப்பட்ட மாநாட்டுப் பந்தலில் வாலிபர் காங்கிரசின் ஐந்தாவது மாநாடு நடைபெற்றது. இம் மாநாட்டிற்கு இந்தியாவிலிருந்து வருகைதந்த 'தமிழ்த்தென்றல்' வி. கல்யாணசுந்தர முதலியார் தலைமை தாங்கினார். இம் மாநாட்டில் தாழ்த்தப்பட்ட மக்களின் பிரதிநிதிகள் சுதந்திரமாகவும் சமத்துவமாகவும் பங்கு கொண்டனர். முன்பு இரண்டு முறை கீரிமலை வைத்திலிங்கம் மடத்தில் மேற்படி மாநாடுகள் நடைபெற்றபோது மண்டபச் சொந்தக்காரர்கள் சாதிப் பிரச்சினை கிளப்பி இருந்தனர். ஆனால் இம் மாநாட்டில் சம ஆசனம், சம போசனம் என்ற வாலிபர் காங்கிரசின் உறுதியான நடவடிக்கை வெற்றிகரமாக மேற்கொள் ளப்பட்டது. இது பற்றி 13-4-1929ல் டெயிலி நியூஸ் பத்திரிகை எழுது கையில் "யாழ்ப்பாணத்தில் புரட்சிகர நடவடிக்கை" என வர்ணித்திருந் தது. இந்த மாநாட்டின் இறுதியில் தெரிவு செய்யப்பட்ட நிர்வாகக் குழுவில் தாழ்த்தப்பட்டவரும் சமூக நலன் விரும்பியும் கல்வி கற்ற இளைஞருமான யோவல் போல் தெரிவு செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தீண்டாமைக்கு எதிரான வாலிபர் காங்கிரசின் தொடர் தீர்மானங்களும், நடவடிக்கைகளும் குறிப்பாக காங்கேசன்துறையில் இடம் பெற்ற மாநாட்டு நடைமுறைகளும் சாதிவாதிகளையும் இந்து வேதாகமவாதிகளையும் ஆத்திரமடையச் செய்தன. அதன் பிரதிபலிப்பை

www.padippakam.com



1930-ம் ஆண்டு சித்திரையில் திருநெல்வேலியில் நடைபெற்ற காங்கிரசின் ஆறாவது மாநாட்டில் காண முடிந்தது. திருநெல்வேலியில் இந்து பயிற்சிப் பாடசாலையில் மாநாடு நடைபெற்றது. சாதி வெறியர்கள் வேதாகமச் சங்கத்தின் தலைமையில் ஒன்றுகூடி மேற்படி மாநாட்டை குழப்ப முயற்சிகள் செய்தனர். பாடசாலையின் கிணற்றில் அழுக்குகள் அள்ளிப் போடப்பட்டன. அயலில் உள்ள கிணற்று வாளிகள் அகற்றப் பட்டன. பாடசாலைக்குள் உள்ள பாதைகள் கற்கள் முட்கள் போட்டு மூடப்பட் டன. மாநாட்டுக்கு தலைமை தாங்க வந்த சைவப் பெரியார் எஸ். சிவபாதசுந்தரத்தின் மோட்டார் கார் மறிக்கப்பட்டு கல்லெறி நடத்தப் பட்டது. இவற்றுக்கு மத்தியிலும் சிறிது தாமத்தின் பின் மாநாடு சிவபாத சுந்தரம் தலைமையில் ஆரம்பமாகி ஸி. சுப்பிரமணியம் (ஒறேற்றர்) வரவேற் புரை நிகழ்த்துகையில் மாநாட்டு மண்டபத்திற்கு கல்லெறியும் கூக்குரல் களும் வந்தன. பாடசாலைக்கு தீமூட்டும் முயற்சிகளும் இடம் பெற்றன. சாதிவெறியர்களின் அட்டகாசம் காரணமாக மாநாடு யாழ் நகரத்தின் றிஜ்வே மண்டபத்திற்கு மாற்றப்பட்டது. ஸி. சுப்பிரமணியம் தனது வரவேற்பு ரையில் பாடசாலைகளில் சாதி, இனம், மதம், சம்பந்தமான பாகுபாடுகள் காட்டப்படுவதற்கு எதிராக அரசாங்கம் எடுத்துவரும் நடவடிக்கைக ளுக்கு முழு ஆதரவும் நன்றியும் தெரிவித்துப் பேசினார்.

தமிழர் சமூகத்தின் மத்தியில் நிலவி வந்த அவமானகரமான தீண்டாமை என்ற பரிகசிக்கத்தக்க முறைமீது தேசிய உணர்வும், சமூகப் பற்றும் கொண்டவர்கள் என்னும் அடிப்படையில் துணிந்து முதன் முதலாக கைவைத்து எதிர்த்ததில் வாலிபர் காங்கிரசின் தலைவர்களுக்கு இருந்த துணிவையும் முக்கியத்துவத்தையும் எவ்வகையிலும் குறைத்து மதிப்பிட முடியாது. வாலிபர் காங்கிரசும் அதன் தலைவர்களும் எடுத்த முயற்சிகளும் பிரச்சாரங்களும் தமிழர்கள் மத்தியில் அன்று சாதிய தீண்டாமைக்கு எதிரான ஒரு கருத்து நிலை வளர்வதற்கான அடித்தளத்தை உருவா க்கியது என்பதில் இரு வேறு கருத்துகளுக்கு இடமிருக்க முடியாது. அத்துடன் 1930ம் ஆண்டில் மிஷனரிப் பாடசாலைகளில் தாழ்த்தப்பட்ட சமூக மாணவர்களுக்கு சம ஆசனம் சம போசனம் மறுக்கப்பட்டு வந்த நிலையை நீக்கும் சமஆசன சமபோசனச் சட்டத்தை அரசாங்கம் கொண்டு வருவதற்கு உந்துதல் கொடுப்பதிலும் வாலிபர் காங்கிரசினர் முக்கிய பங்களித்தனர். ஹன்டி பேரின்பநாயகம். ஒறேற்றர் ஸி. சுப்பிரமணிய்ம் போன்ற வாலிபர் காங்கிரஸ் தலைவர்கள் தீண்டாமைக்கு எதிராக மிகவும்

www.padippakam.com



கடுமையான சூழ்நிலைகளிலும் விட்டுக்கொடாது செயலாற்றிவந்த நடவடிக்கைகளே தாழ்த்தப்பட்ட மக்களின் அடுத்த கட்ட விழிப்புணர்வுகளுக்கும் போராட்டங்களுக்கும் ஆரம்ப விதைகளாக அமைந்தன என்பது மறுப்பதற்குரிய ஒன்றல்ல என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## தாழ்த்தப்பட்டோரின் முதலாவது அமைப்பின் தோற்றம்

யாழ்ப்பாண வாலிபர் காங்கிரசின் தீண்டாமைக்கு எதிரான முனைப்புமிக்க நடவடிக்கைகளின் மத்தியிலேயே தாழ்த்தப்பட்ட மக்களைப் பிரநிதித்துவம் செய்யும் தனியான அமைப்பு முதன் முதலாக வடபுலத்தில் ஆரம்பிக்கப்பட்டது. அதுவே ஒடுக்கப்படும் தமிழ் ஊழியர் சங்கம் என்பதாக 16-7-1927ல் தோற்றம் பெற்றது. இச் சங்கம் ஒரு கிறிஸ்தவப் பின்னணியில் தோற்றுவிக்கப்பட்ட போதிலும் தாழ்த்தப்பட்ட மக்கள் எதிர்நோக்கிய தீண்டாமைப் பாகுபாட்டை எதிர்ப்பதிலும் அம் மக்களின் முன்னேற்றத்திற்கு சேவை செய்ய வேண்டும் என்பதிலும் அக்கறை கொண்ட சங்கமாக அது அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். அதன் தலைவராக கல்வி பெற்ற உயர்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த கிறிஸ்தவரும் தாழ்த்தப்பட்ட மக்களின் துயரநிலை மீது அதிக அனுதாபம் கொண்டவருமான நெவின்ஸ் செல்லத்துரை என்பவர் இருந்தார். அதன் இணைச் செயலாளர்களாக தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த மிஷனரிக் கல்வி கற்ற இளைஞர்களான யோவேல் போல், டி. ஜேம்ஸ் ஆகிய இருவரும் இருந்தனர்.

தாழ்த்தப்பட்ட மக்களின் நலன்களுக்காக உருவாக்கப்பட்ட இச் சங்கத்தை இயக்குவதில் யோவேல் போல் முக்கிய பங்காற்றினார். தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் ஓரளவு வசதிபடைத்த கிறிஸ்தவக் குடும்பத்தில் பிறந்தவர் யோவேல் போல். ஆனால் அவர் பள்ளிக்கூடத்திலும் வெளியிலும் மாணவப் பராயத்தில் சாதிக்கொடுமையின் கோரத்தனங்களால் பாதிக்கப்பட்டவர். தான் அனுபவித்த அக் கொடுமைகளையும் அம் மக்கள் பட்ட துயரங்களையும் அவர் தமது வாழ்நாட்களின் இறுதிக் கட்டம் வரை மறந்ததில்லை. அவரது குடும்ப வசதி காரணமாகவும், கிறிஸ்தவப் பின்னணி ஊடாகவும் தகுதியான கல்வி பெற்றிருந்தார். மிஷனரியினரின் ஒத்துழைப்புடன் அவர் கட்டிட ஒப்பந்தகாரராக தொழில் பார்த்து அதனால் ஓரளவு வசதியாகவும் வாழ்ந்தார். தன் வசதியான நிலையை தாழ்த்தப்பட்ட மக்களின் விமோசனத்திற்காகப் பயன்படுத்தினார். யோவேல் போல் 'ஜனதர்ம போதினி' என்ற வாராந்தப் பத்திரிகையையும் நடாத்தி வந்தார்.

www.padippakam.com



இச் சங்கம் ஆரம்பிக்கப்பட்ட சில மாதங்களில் காந்தியின் யாழ்ப்பாண விஜயம் இடம்பெற்றது. தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் அமைக்கப்பட்ட காந்தி வரவேற்புப் பந்தல் சாதிவெறியர்களால் தீக்கிரையாக்கப்பட்டபோது யோவேல் போல் முன்நின்று அதே இடத்தில் மீண்டும் பந்தல் அமைத்து காந்திக்கு வரவேற்பும் அளிப்பதில் முக்கிய பங்காற்றினார். ஒடுக்கப்படும் தமிழர் ஊழியர் சங்கம் உருவாகியபோது எதிர் கொண்ட முக்கிய பிரச்சினை பாடசாலைகளில் சம ஆசனம் சம போசனம் என்ற பிரச்சினையாகும். அதாவது அன்றைய நிலையில் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு கல்வி கற்க அனுமதி அளிக்கப்பட்ட மிஷனரிக் கல்விக்கூடங்களில் உயர் சாதி மாணவர்களுடன் தாழ்த்தப்பட்ட மாணவர்கள் ஒரேவிதமான ஆசனங்களில் இருந்து படிக்க முடியாது. அதே போற் பாடசாலைகளிலும் விடுதிகளிலும் சமமாக இருந்து உணவு அருந்த முடியாது. தண்ணீர் குடிப்பது, உடைகள் அணிவது வரை தாழ்த்தப்பட்ட மாணவர்கள் பாகுபாட்டிற்கும் இரண்டாம் தர நிலைக்கும் உள்ளானார்கள்.

1928-ம் ஆண்டில் சம ஆசனம் சம போசனம் இயக்கத்தை உடுவில் பெண்கள் பாடசாலையில் நெவின்ஸ் செல்லத்துரை, ஹன்டி பேரின்பநாயகம், வண. பிக்னெல் பாதிரியார், வண. மத்யூஸ் சுவாமிகள். டாக்டர் ஜேம்ஸ், ஸி. பொன்னம்பலம், எஸ்.டபிள்யூ. மகாதேவா மற்றும் பலர் ஒன்றுகூடி முன்னெடுத்தனர். இவ் இயக்கத்தை யோவேல் போல் அவர்களும் ஒடுக்கப்படும் தமிழ் ஊழியர் சங்கமுமே முன்நின்று நடாத்தியது. இதைப் பொறுக்க முடியாத சாதி வெறியர்கள் யோவேல் போல், எஸ்.ஆர், ஜேக்கப் ஆகியோரைச் சுட்டுக்கொல்ல முயன்றனர். அம்முயற்சி முன்கூட்டியே அறியப்பட்டதனால் தாழ்த்தப்பட்ட இளைஞர்களால் மிகச் சாதூரியமாக அது முறியடிக்கப்பட்டது.

ஒரு புறத்தில் ஒடுக்கப்படும் தமிழ் ஊழியர் சங்கமும் யோவேல் போல் அவர்களும் சம ஆசனம் சம போசனத்திற்கான இயக்கத்தை நடத்திக்கொண்டிருக்க மறுபுறத்தில் அன்றைய சைவ வேளாளத் தமிழர்களின் தலைவராக இலங்கையின் உயர் கல்வியாளனாக நிலப்பிரபுத்துவத்தின் பிரதிநிதியுமாக விளங்கிவந்த சேர் பொன்னம்பலம் இராமநாதன் தலைமையில் சம ஆசனம் சமபோசனத்திற்கு எதிரான நடைமுறைகள் முடுக்கிவிடப்பட்டன. 1928ம் ஆண்டில் சேர் பொன். இராமநாதன் 79 கிராமச் சங்கப் பிரதிநிதிகளுடன் அன்றைய வெள்ளைக்காரத் தேசாதிபதியைச் சந்தித்து சாதி அமைப்பு முறையிலான பாடசாலை நடைமுறை

www.padippakam.com



களை வலியுறுத்தினார். தேசவழமையின்படி தமிழர்களின் பாரம்பரியம் காப்பாற்றப்படுவது அவசியம் என வாதம் புரிந்தார். அதே வேளை இப்பிரச்சினை தொடர்பாக யோவேல் போல் அவர்கள் இரு முறை தேசாதிபதியைச் சந்தித்து சம ஆசனம் சம போசனம் சட்டத்தைப் பாடசாலைகளில் அமுலாக்கும்படி வற்புறுத்திக் கேட்டுக்கொண்டார்.

4-11-1929ல் நூற்றிமுப்பத்தொரு "சைவப் பெரியார்கள்" யாழ்ப்பாணம் றோயல் தியேட்டரில் இந்துமகாசபையின் தலைமையில் ஒன்றுகூடிக் கோப்பாய் அரசினர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையை "உயர் சாதியினர்" என்போரது தனிக் கலாசாலையாக ஆக்குமாறு தேசாதிபதிக்கு மனுச் செய்தனர். இவ் விடயத்திலும் யோவேல் போல் தேசாதிபதியை 12-11-1929 அன்று நேரில் சந்தித்து இந்து மகாசபையின் இக்கோரிக்கை ஒடுக்கப்படும் தாழ்த்தப்பட்ட மக்களை எதிர்காலத்தில் மோசமாகப் பாதிக்கும் என்பதை எடுத்து விளக்கி அம்மனுவிற்கு ஆதரவு வழங்க வேண்டாம் என வலியுறுத்தினார்.

சம ஆசனம் சம போசனம் விவகாரத்தில் சேர். பொன். இராமநாதன் எவ்வாறு சைவவேளாள ஆதிக்கப் பிற்போக்குப் பாத்திரம் வகித்தாரோ அவ்வாறு டொனமூர் ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியம் அளிக்கும் போதும் சாதி அமைப்பு முறையினைப் பாதுகாத்து வாதிட்டார். தேச வழமையை வலியுறுத்தியும் சர்வசன வாக்குரிமை தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வழங்கப்படக்கூடாது எனவும் படித்தவர்களுக்கு மட்டுமே வாக்குரிமை வழங்கப்பட வேண்டும் எனவும் சாட்சியம் அளித்தார். இதன் மூலம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மட்டுமன்றி இடை நிலைச் சாதியினரான மக்களுக்கும் ஏனைய கல்வி பெறாத உழைக்கும் உயர்த்தப்பட்டோர் என்போரின் ஒரு பகுதியினருக்கும் வாக்குரிமை வழங்கப்படுவதை பொன்னம்பலம் இராமநாதன் மறுத்து நின்றார். அவ்வாறே யாழ்ப்பாணத் திற்கான புகையிரதம் விடப்பட்டபோது தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தனிப்பிரிவுப் பெட்டிகள் ஒதுக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை அதே இராமநாதன் வற் புறுத்தினார் என்று அறிய முடிகிறது. அவரது இத்தகைய நிலைப்பாடு தமிழர் வரலாற்றில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிரான சைவ வேளாள ஆதிக்கத்தின் செயற்பாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்தி நின்றது.

இவரது இந் நிலைப்பாட்டை மறுத்து யோவேல் போல் தாழ்த்தப்பட்ட மக்களின் சார்பாக அவர்கள் எதிர்நோக்கும்

www.padippakam.com



பிரச்சினைகளை டொனமூர் ஆணைக்குழு முன்னிலையில் எடுத்து விளக்கினார். தாழ்த்தப் பட்ட மக்கள் சாதி அமைப்பு முறையினால் படும் அவல நிலையையும் அதைப் பாதுகாத்து நிற்கும் தேசவழமைச் சட்டத்தைப் பற்றியும் படித்தவர்களுக்கு மட்டும் வாக்குரிமை போன்ற கருத்துக்களையும் நிராகரித்துச் சாட்சியம் அளித்தார். அதேபோல் சர்வஜன வாக்குரிமை தாழ்த்தப்பட்ட மக்களின் விமோசனத்திற்கு பயன்தரத்தக்கது என்றும் வலியுறுத்தினார். இதன் தாக்கத்தை டொனமூர் ஆணைக்குழுவினர் வெளியிட்ட தமது அறிக்கையில் உரிய இடங்களில் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

டொனமூர் ஆணைக்குழுவின் அறிக்கையின் அடிப்படையில் 1930ம் ஆண்டு சமஆசனம் சம போசனம் சட்டமாக்கப்பட்டது. இதைப் பொறுக்க முடியாத சாதிவெறியர்கள் வடபகுதியில் பதினைந்து பாடசாலைகளைத் தீ வைத்து எரித்தனர். சமஆசன முறையை அமுல்படுத்தாத பாடசாலைகள் தாழ்த்தப்பட்ட மக்களால் தீவைக்கப்பட்டன என்ற விதமான பல பொய் வழக்குகள் தாழ்த்தப்பட்ட மக்கள் சிலர் மீது தாக்கல் செய்யப்பட்டன.

தமிழர் சமூகத்தின் மத்தியில் வாழ்ந்த தாழ்த்தப்பட்ட மக்களின் அடக்குமுறை நிறைந்த வரலாற்றில் ஆயிரத்தொளாயிரத்து இருபதாம் ஆண்டுகள் மிக முக்கியத்துவமுடைய ஆண்டுகளாகும். குறிப்பாகக் கூறின் யாழ்ப்பாண வாலிபர் காங்கிரசின் சாதிய தீண்டாமைக்கு எதிரான கருத்துக்களும் செயற்பாடுகளும், தாழ்த்தப்பட்ட மக்கள் சார்பான முதலாவது அமைப்பு உருவாகியதும் அதன் நடவடிக்கைகளும். டொனமூர் ஆணைக்குழுவின் அறிக்கையும்- பாடசாலைகளில் சம ஆசனம் சம போசனத்திற்கான சட்டம் உருவாக்கப்பட்டமையும் இருபதுகளில் இடம் பெற்ற முக்கியத்துவ முடைய நிகழ்வுகளாகும்.

## 1930களின் செயற்பாடுகள்

1930களின் ஆரம்பத்துடன் தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் ஆங்காங்கே விழிப்புணர்வு கொண்ட சிறு சிறு அளவிலான சமூகச் சங்கங்கள் தோன்ற ஆரம்பித்தன. இச்சங்கங்களின் தோற்றத்திற்கு இருபதுகளில் இடம்பெற்ற நிகழ்வுகள் உந்துதலைக் கொடுத்தன. தமிழ்ப் பிரபுத்துவ பழமைவாத அமைப்பின் பிரதிநியாக விளங்கிய சேர் பொன். இராமநாதன் சர்வசன வாக்குரிமைக்கு எதிராக டொனமூர் ஆணைக்குழு முன் அளித்த சாட்சியத்தையும் மீறி சர்வசன வாக்குரிமை

www.padippakam.com



1931ல் நடைமுறைக்கு வந்தது. டொனமூர் ஆணைக்குழு சர்வசன வாக்குரிமையை வழங்கிய போதிலும் அதன் நோக்கம் அற்ப சொற்ப சலுகைகளுடன் இலங்கையைத் தொடர்ந்தும் பிரித்தானிய கொலனியப் பிடியின் கீழ் வைத்திருப்பதையே நோக்காகக் கொண்டிருந்தது. எனவே டொனமூர் ஆணைக்குழுவின் அறிக்கையானது முழு இலங்கை மக்களினதும் முழு மையான சுதந்திர வேட்கையையும் தேசிய அபிலாஷைகளையும் பூர்த்தி செய்யவில்லை என்று கூறி சர்வசன வாக்குரிமை அடிப்படையில் 1931ல் இடம் பெற்ற முதலாவது சட்ட சபைத் தேர்தலை யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் பகிஷ்கரித்தது. இப் பகிஷ்கரிப்பு கொலனியத்திற்கு எதிரான ஒரு பலத்த அடி என்பதில் எவ்வித சந்தேகமும் இருக்க முடியாது. இப் பகிஷ்கரிப்புக்கும் தாழ்த்தப்பட்ட மக்களின் பிரதிநிதிகள் வற்புறுத்திய சர்வசன வாக்குரிமை வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைக்கும் இடையில் எவ்வித முரண்பாடும் இருக்கவில்லை என்பது இவ்விடத்தில் சுட்டிக்காட் டப்படவேண்டிய ஒன்றாகும். யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் சர்வசன வாக்குரிமையை ஒருபோதும் எதிர்க்கவில்லை. சர்வசன வாக்குரிமை யானது முதலாளிய அமைப்பு முறையினைப் பாதுகாக்கும் வகையி லான ஒரு கருவியாகவே கொண்டுவரப்பட்டது. அதேவேளை சாதி ஒடுக்கு முறையினால் அடக்கப்பட்டு சமூகத்தில் புறக்கணிக்கப்பட்ட நிலையில் வாழ்ந்துவந்த தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அன்றைய நிலையில் சர்வசன வாக்குரிமை ஒரு பற்றுக் கோலாக அமைந்தமையை நிராகரிக்க முடியாது. சர்வசன வாக்குரிமையை தாழ்த்தப்பட்ட மக்கள் தேர்தல் காலங்களில் தமக்குரிய ஒரு ஜனநாயக சமத்துவ உரிமையாகப் பாவிக்க முற்பட்டனராயினும் அதன் மூலம் முழுமையான பலாபலன்களைப் பெற் றார்கள் என்று கூறிவிட முடியாது. அவ்வாறே அனைத்து உழைக்கும் மக் களுக்கும் அதனால் எவ்வித பயனும் ஏற்படவில்லை என்பதும் மனம் கொள்ளத்தக்கதாகும்.

மேற் கூறப்பட்ட நிகழ்வுப்போக்குகளின் ஊடாக ஆங்காங்கே தாழ்த்தப்பட்ட மக்களிடையே விழிப்புணர்வு வளர்ச்சி பெற ஆரம்பித்தது. அதன் வெளிப்பாடுகள் சாதிய தீண்டாமைக்கு எதிரான மீறல்கள் என்ற வடிவில் இடம் பெறத்தொடங்கின. உதாரணமாக 31-8-1931ல் சங்கானையில் சுடலைச் சம்பவம் ஒன்று நடைபெற்றது. அன்றுவரை பொதுச் சுடலையில் தாழ்த்தப்பட்ட மக்கள் தமது பிரேதங்களைப் புதைப்பதற்கு மட்டுமே அனுமதி இருந்து வந்தது. அவர்கள்

www.padippakam.com



உயர்த்தப்பட்ட சாதியினர் போன்று எரிப்பதற்கோ ஏனைய தகனக் கிரிகைகளை நடத்துவதற்கோ அனுமதிக்கப்படுவதில்லை. எனவே இத்தகைய சாதிய வழக்கத்தை மீறி ஒரு பிரேதத்தை எரிக்க முற்பட்டபோது சாதிவெறியர்களுக்கும் தாழ்த்தப் பட்ட மக்களுக்கும் இடையில் பெரும் மோதல் மூண்டது. இதனை அறிந்து அப்பொழுது யாழ் பொலீஸ் அதிகாரியாக இருந்த வெள்ளைக்கார அதிகாரி குதிரை வண்டியில் அவ்விடத்திற்கு வந்து மோதலை நிறுத்தி பிரேதத்தை எரிக்க அனுமதி கொடுத்தபோது சாதி வெறியர்கள் தொடர்ந்தும் தாக்குதல் தொடுக்க முற்பட்டனர். அவ்வேளை அப் பொலிஸ் அதிகாரி தனது கைத்துப்பாக்கியால் சுடவே ஒரு சாதிவெறியன் அவ்விடத்தில் கொல்லப்பட்டான். அச் சம்பவத்திற்குப் பின் சங்கானைச் சுடலையில் தாழ்த்தப்பட்ட மக்களின் பிரேதங்கள் எரிக்கப்பட்டு வந்தாலும் அவர்களுக்கு தனியான இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. மேலும் 1933ல் கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்த பறையர் ஒருவர் புங்குடுதீவில் சப்பாத்து அணிந்து சென்றமை காரணமாக வேளாளச் சாதிவெறியர்கள் அவர்களது வீடுகளை எரித்து தாக்கினார்கள். அம் மோதலில் தாழ்த்தப்பட்ட மக்கள் சிலர் கொல்லப்பட்டதுடன் படுகாயங்கள் பட்டனர். இதுபோன்ற குறிப்பான சம்பவங்கள் ஆங்காங்கே தோன்ற ஆரம்பித்தன. ஆனால் இவை அனைத் தும் ஒரு முகப்படுத்தப்பட்ட அமைப்பின் கீழான போராட்டங்களாக முன்னெடுக்கப்பட்டன என்று கூறி விட முடியாது. இவ்வாறான தனித் தனிப் போராட்டங்களும் சம்பவங்களும் ஐக்கியப்பட்ட தாழ்த்தப்பட்ட கிராமங்கள் குறிப்பாக சிறு அளவு நிலங்களைச் சொந்தமாகக் கொண்டிருந்த பகுதிகளிலேயே இடம்பெற்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும். அதே வேளை உயர்சாதியினர் மத்தியில் உள்ள ஓரிரு நல்லெண்ணம் கொண்ட சிலரும் ஆங்காங்கே இதுபோன்ற நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கி வந்துள்ளனர் என்பதும் நோக்குதற்குரியது.

1933ம் ஆண்டில் வடஇலங்கை கள் இறக்கும் தொழிலாளர் சங்கம் உருவாக்கப்பட்டது. தவறணைக் குத்தகை முறையின் கீழ் கள் இறக்கும் தாழ்த்தப்பட்ட மக்கள் பட்ட கஷ்டங்களைப் போக்கி அவர்களுக்கு நிவாரணம் வழங்குவதே இச்சங்கத்தின் நோக்கமாக இருந்தது. இச் சங்கத்தை ஏ.வி. தம்பையாவும் வேறு சிலரும் இணைந்தே உருவாக்கினர். இச் சங்கமும் இதுபோன்ற ஏனைய சில சங்கங்களும் தாழ்த்தப்பட்ட மக்களின் மோசமான பொருளாதார நிலை பற்றி அக்கறை கொண்

www.padippakam.com



டன. அதே ஆண்டில் யாழ். அந்தோனியார் கூட்ட மண்டபத்தில் ஏ.பி. இராஜேந்திரா தலைமையில் தாழ்த்தப்பட்ட மக்களின் நலன்கள் பற்றிய ஒரு கூட்டம் நடைபெற்றது. இராசேந்திரா தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் கல்வி பெற்ற கல்வியாளராகக் காணப்பட்டார். அரசாங்க சேவையில் ஆற்றிய பணிக்காக அன்றைய ஆங்கில அரசு இவருக்கு முதலியார் பட்டத்தை வழங்கியமையும், பின்பு யூ.என்.பி செனட்டராக நியமித்தமை பற்றியும் ஏலவே கூறப்பட்டிருந்தது. இவர் தாழ்த்தப்பட்ட மக்கள் பற்றிய ஓரளவு சமூக அக்கறையைக் கொண்டிருந்தார்.

மேலும் 1936ம் ஆண்டில் சட்டசபை உறுப்பினராக இருந்த எஸ். நடேசன் வட பகுதிக்கு மரவரி முறை வேண்டும் என்ற தீர்மானத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றினார். 1936ல் பரீட்சார்த்தமாக காங்கேசன்துறையில் அமுல்படுத்தப்பட்ட மரவரி முறையானது வெற்றி அளிக்கவே 1937ல் வட பகுதி எங்கும் இம்முறை அமுல்படுத்தப்பட்டது. கள்ளு எடுக்கும் பனை தென்னைக்கு வரி செலுத்தி அவற்றின் சொந்தக்காரர்களுக்குப் போகக் குத்தகை வழங்கி கள் இறக்கும் தொழிலாளர்கள் சீவல் தொழிலைச் சுதந்திரமாகச் செய்தனர். இத்தகைய மரவரிமுறை தாழ்த்தப்பட்ட மக்களின் பொருளாதாரத்தில் ஓரளவு மாற்றத்தையும் முன்னேற்றத்தையும் ஏற்படுத்தியது.

இக் காலகட்டத்திலேயே இலங்கையின் முதல் இடதுசாரி இயக்கமான லங்கா சமசமாஜக் கட்சி வடபகுதிக்கு அறிமுகமாக்கப்பட்டது. 1937ல் இக்கட்சியின் செயற்பாடுகள் ஆங்காங்கே ஆரம்பமாகின. பருத்தித்துறை சி. தர்மகுலசிங்கம் (ஜெயம்) சமசமஜாக் கட்சியின் வடபகுதித் தலைவராக இருந்து செயற்பட்டு வந்தார். அவர் ஒரு சட்டவாதியாக இருந்ததுடன் வடபகுதித் தொழிலாளர்கள் மத்தியில் தொழிற்சங்க இயக்கத்தை உருவாக்குவதில் முன்னின்றவர். அதேவேளை சாதிய தீண்டாமைக்கு எதிராக செயற்படுவதிலும் உறுதியாக இருந்து வந்தார். இக் காலகட்டத்தில் யாழ்ப்பாண வாலிபர் காங்கிரசின் மேடைகளில் தெற்கின் இளம் இடதுசாரித் தலைவர்களின் பேச்சுக்கள் தாராளமாக இடம்பெற்றன. அவ்வேளை தொழிலாளர்களின் அணிசேர்ப்புடன் தீண்டாமைக்கு எதிரான குரல்கள் ஓங்கி ஒலிக்க ஆரம்பித்தன.

முப்பதுகளின் பிற்பகுதியில் தாழ்த்தப்பட்ட மக்களிடையே விழிப்புணர்வின் தன்மையானது அடுத்த வளர்ச்சிக் கட்டத்தை அடைந்திருந்தது. அவர்கள் மத்தியில் கல்வி அறிவு பெற்றவர்கள்

www.padippakam.com



ஓரளவுக்கு வெளிவந்தனர். சிலர் ஆசிரியர்களாகவும் வேறு சிலர் சிறு அரசாங்கத் தொழில் பார்ப்போரா கவும் காணப்பட்டனர். ஆனால் இத்தகையோரின் தொகையானது மிகக் குறைவானதாகும். தமது மக்கள் அனுபவித்து வரும் இழிநிலையை மாற்றவேண்டும் என்ற மன உறுதி மென்மேலும் இக்கல்வி அறிவு பெற்ற இளைஞர்களிடையே வலுவடைந்தது. அதன் அடிப்படையில் அவ்வப் பிரதேசங்களில் சமூகச் சங்கங்கள் மற்றும் வாசிகசாலைகள் போன்றன தோற்றுவிக்கப்பட வேண்டும் என்ற சிந்தனைப் போக்கு வளர ஆரம்பித்தது.

1931ம் ஆண்டில் இலங்கையில் வயது வந்த அனைவருக்கும் வாக்குரிமை வழங்கப்பட்ட போதிலும் அதன் கீழ் இடம் பெற்ற தேர்தல்களில் வேட்பாளர்களாக தாழ்த்தப்பட்டவர்கள் நிற்க முடியவில்லை. அத்தகைய முயற்சிகளில் ஈடுபட்டோரை சாதிவாதிகள் அச்சுறுத்தி அதிலிருந்து பின் வாங்க வைத்தனர். தேர்தலில் வேட்பாளராக நிற்பது என்பது உயர்த்தப்பட்டோருக்கான விடயம், நாங்கள் அப்படி நிற்பது பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும் என்ற அறியாமையும் பயமும் அதே தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் இருந்து வந்தது. தங்களது பலத்தின் தன்மையைத் தாமே அறியாத நிலை இருந்து வந்தது. இது மக்களின் தவறல்ல. அவர்களுக்கு நம்பிக்கை தரக் கூடிய அரசியல் கருத்துக்களும் வழிகாட்டிகளும் இல்லாமையே அதற்கு அடிப்படையானதாகும். இந் நிலையை இடதுசாரிக் கருத்துக்களும் அதன் தலைமைகளுமே துணிவுடன் மாற்றியமைத்தன.

அதன் காரணமாக ஆங்காங்கே இடம் பெற்ற கிராம சபைத் தேர்தல்களில் வேட்பாளர்கள் துணிவுடன் நிற்கும் நிலை நாற்பது களின் நடுக் கூற்றில் தோன்றியது. அவ்வாறு நின்றவர்கள் சாதிய ஒடுக்குமுறைக்கு எதிரான நிலைப்பாட்டில் தமது துணிவையும் மீறல் நடவடிக்கைகளையும் வெளிப்படுத்திக் காட்டினர். நாற்பதுகளின் நடுக்கூறிலே இடம் பெற்ற கிராம சபைத் தேர்தல்களின் கடும் போட்டிக்கும் எதிர்ப்புக்கும் மத்தியில் சில தாழ்த்தப்பட்ட சமூக வேட்பாளர்கள் வெற்றி பெற்றனர். வடமராட்சி கட்டைவேலி கிராமசபைக்கு வட அல்வாய் க. முருகேசுவும் வலிமேற்கு சங்கானை கிராம சபைக்கு பொன்னரும் தென்மராட்சி பளை கிராம சபைக்கு செல்லையாவும் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களது வெற்றி அப் பிரதேசங்களின் தாழ்த்தப்பட்ட மக்களது ஐக்கியத்திற்கும் துணிவிற்கும் கிடைத்த வெற்றிகளாக அமைந்திருந்தமை அன்றைய

www.padippakam.com



சூழலில் வைத்து நோக்குதற்குரிய ஒன்றாகும்.

முப்பதுகளைத் தொகுத்துப் பார்க்கும் போது தாழ்த்தப்பட்ட மக்களின் விழிப்புணர்வை முன்னோக்கித் தள்ளியதில் கீழ்வருவனவற்றை முக்கிய விடயங்கள் எனக் கொள்ளலாம். சம ஆசனம் சம போசனம் சட்டமாக்கப்பட்டமை, சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்டமை, மரவரி முறை அமுலுக்கு வந்தமை, இடதுசாரி இயக்க கருத்துக்களும் தொழிலாளர் இயக்க ஆரம்ப நடவடிக்கைகளும் தோன்றியமை போன்றவற்றுடன் தாழ்த்தப்பட்ட மக்களிடையே கல்வி அறிவு பெற்ற பகுதியினர் தமது மக்களின் துயர்துடைக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் குறிப்பிடத்தக்க முன் முயற்சிகள் மேற்கொண்டமை பற்றியும் குறிப்பிடலாம்.

1940களின் ஆரம்பத்திலேயே ஆங்காங்கே தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் பல்வேறு பெயர்களில் சமூக முன்னேற்றத்திற்கான சங்கங்கள் உருவாக ஆரம்பித்தன. ஏற்கனவே 1934ல் யாழ்ப்பாணம் ஆரிய குளம் பலாலி வீதியில் நன்னெறி போதிக்கும் சங்கமாக ஆரம்பித்து செயற்பட்டு வந்த ஒரு அமைப்பு 1-4-1941ல் சன்மார்க்க ஐக்கிய வாலிபர் சங்கம் என்ற பெயருடன் அமையப் பெற்றது. இச் சங்கம் ஆனைப்பந்தி, சேணியர்தெரு, வண்ணார்பண்ணை முதலிய இடங்களில் உள்ள தாழ்த்தப் பட்ட மக்களின் சமூக நலன் கருதி செயற்பட்டு வந்தது.

இதே காலப் பகுதியில் சற்று முன்பின்னாகப் பல இடங்களிலும் பல்வேறு பெயர்களில் தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியிலான சங்கங்கள் இயங்கி வந்தன. நல்லூரிமை ஊழியர் சங்கம், சமூக ஒற்றுமை வாலிபர் சங்கம், ஹரிஜன வாலிபர் சங்கம், வட இலங்கை தொழிலாளர் சங்கம், தொழிலாளர் முன்னேற்றச் சங்கம், வடமராட்சி சமூக சேவா சங்கம் முன்பு கூறிய யோவேல் போல் அவர்களால் இயக்கப் பெற்ற ஒடுக்கப்படும் தமிழர் ஊழியர் சங்கம், அளவெட்டி சமூக சீர்திருத்த மகாசபை, தெல்லிப் பளை வாலிபர் ஐக்கிய சங்கம் போன்றவை குறிப்பிடத்தக்க அமைப்புக ளாகத் திகழ்ந்தன. இவற்றை விட வேறும் சிறு அளவிலான சமூக முன் னேற்றச் சங்கங்களும் சனசமூக நிலையங்களும் தாழ்த்தப்பட்ட மக்களி டையே ஆங்காங்கே இருந்திருக்கின்றன என்பதைச் செவிவழி வாயிலாக அறிய முடிகின்றது.

படிப்பகம்

www.padippakam.com



## சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் தோற்றம்

1942ம் ஆண்டு ஐப்பசி மாதம் 31-ம் திகதி யாழ்நகரில் அமைந்த சன்மார்க்க ஐக்கிய வாலிபர் சங்கத்தின் மாதாந்தப் பொதுக்கூட்டத்தில் ஒரு முக்கியமான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதாவது வடஇலங்கையில் உள்ள சகல தாழ்த்தப்பட்ட மக்களின் நலன் கருதி உழைப்பதற்கு ஏற்ற தாழ்த்தப்பட்ட மக்களை அங்கத்தவர்களாகக் கொண்ட ஒரு அமைப்பை உருவாக்க வேண்டும் என்பதே அத்தீர்மான மாகும். இத்தீர்மானத்தில் அடிப்படையில் எஸ்.ஆர். ஜேக்கப் (காந்தி), அ. அந்தோனிமுத்து, ஞா. நல்லையா, வ.டே. கணபதிப்பிள்ளை, மு.சி. சுப்பிரமணியம், மி. பொன்னுத்துரை, ஆ.ம. செல்லத்துரை, வ. அரியக்குட்டி, எம்.ஏ.சி. பென்சமின், ம. சின்னப்பு ஆகிய பத்துப் பெயர்களின் கையொப்பங்களுடன் மகாசபை ஆரம்பித்தற்கான ஆலோசனைக் கூட்ட அழைப்பிதழ் வெளிவந்தது. 7-11-1942ல் சன்மார்க்க ஐக்கிய வாலிபர் சங்க மண்டபத்தில் ஆரம்பக் கூட்டம் நடைபெற்றது. இக் கூட்டத்தில் வடஇலங்கை பூராவும் உள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவரையும் ஒன்றிணைக்கக் கூடிய ஒரு அமைப்பு உருவாக்கப்படுவதற்கான முடிவு செய்யப்பட்டது. அத் தீர்மானத்தையொட்டி 21-11-42 எஸ்.ஆர். ஜேக்கப், ஆ.ம. செல்லத்துரை, வி.ஜே. அரியகுட்டி ஆகிய மூவரின் கையொப்பத்துடன் "நல்மனம் உள்ளவர்களுக்கு ஒருவார்த்தை" என்னும் தலைப்புடன் அமைப்பின் நோக்கம் பற்றிய ஒரு துண்டுப் பிரசுரம் வெளியிடப்பட்டது. 24-4-43ல் வடஇலங்கை ஒடுக்கப்படும் தமிழர் மாநாடு யாழ்ப்பாணம் சென்ஸ் சார்ள்ஸ் மண்டபத்தில் நடைபெற்றது. இம் மாநாடு தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவரையும் ஒன்றினைக்கும் நோக்கத்தையும் அம் மக்களின் விமோசனத்திற்காக உழைக்கும் உறுதியையும் எடுத்துக்கொண்டது. அம் மாநாட்டிலேயே வட இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபை என்ற பெயரும் தேர்ந்தெடுக்கப்பட்டது. மகாசபையின் முதலாவது தலை வராக டொனமூர் ஆணைக்குழு முன் தாழ்த்தப்பட்ட மக்களின் நலன் களை முன்வைத்து சாட்சியம் அளித்தவரும் முதலாவது தாழ்த்தப்பட்ட மக்களின் அமைப்பை உருவாக்கியவருமான யோவேல் போல் தெரிவு செய்யப்பட்டார்.

29-4-1943ல் ரைம்ஸ் ஒவ் சிலோன் (Times Of Ceylon) பத்திரிகை "தாழ்த்தப்பட்ட மக்களுக்கான புதிய மகாசபை" (For Oppressed Tamils New Mahasbah) என்னும் தலைப்புடன் செய்தி

www.padippakam.com



வெளியிட்டது. அதேபோல் 30-4-1943ல் தினகரன் பத்திரிகையும் மேற்படி மகாசபை பற்றித் தெரிவித்தது.

இவ் வட இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகா சபையை 1944ல் சோல்பரி ஆணைக்குழு இலங்கைக்கு வருகை தருவதற்கு முன்பு அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபையாக மாற்ற வேண்டும் என்ற முடிவு மேற்கொள்ளப்பட்டது. இதற்காக எஸ்.ஆர். ஜேக்கப் மற்றும் இரு உறுப்பினர்களும் திருகோணமலை, மட்டக்களப்பு சென்று அங்கும் கூட்டங்களை நடாத்தி உறுப்பினர்களைச் சேர்த்துக் கொண்டனர். அத்துடன் அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபை எனப் பெயர் மாற்றம் நடை பெற்றது.

24-9-1944ல் சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் இரண்டாவது மாநாடு யாழ்ப்பாண நகர மண்டபத்தில் நடைபெற்றது. இம் மாநாட்டிற்கு தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் கல்வியாளராக விளங்கிய ஏ.பி. இராஜேந்திரா தலைமை தாங்கினார். இம் மாநாடு தாழ்த்தப்பட்ட மாணவர்களின் கல்வி நிலை, ஆசிரிய பயிற்சி கலாசாலைத் தெரிவு, சிறு உத்தியோகங்களுக்கான வாய்ப்பு போன்றவற்றை முதன்மைப்படுத்தின. அத்துடன் 40, 000த்திற்கு மேற்பட்ட சீவல் தொழிலாளர்களின் நலன்கள் முன்னேற்றப்படவும் பாதுகாக்கப்படவும் பனைவளம் குடிசைக் கைத் தொழில் போன்றவற்றுக்கான ஒருசபை அமைக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் மாநாடு வலியுறுத்தியது. மேலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தனித்தொகுதி ஒதுக்கியோ அன்றி நியமனத்தின் மூலமோ (தமிழர்களின் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கினரான தாழ்த்தப்பட்ட மக்களுக்கு) பிரதிநிதித்துவம் கோரியும் குரல் கொடுக்கப்பட்டது. அதேவேளை இலவசக் கல்வித்திட்டத்திற்கான அறிக்கையை இம் மாநாடு ஆதரித்து வரவேற்றது.

சிறுபான்மைத் தமிழர் மகாசபையானது தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவரையும் பிரதிநிதித்துவம் செய்யும் ஒரு அமைப்பு என்ற நிலை உருவாக ஆரம்பித்தது. அன்று மகாசபையின் கொள்கைகளும் நோக்கங்களும் செயற்பாடுகளும், பெருமளவும் மகஜர்கள், வேண்டுகோள்கள், வலியுறுத்தல்கள், நன்னெறி ஒழுக்கங்கள் பற்றிய பிரசாரம் என்பன மூலம் வெளிப்பட்டுப் பொருளாதார கல்வித் துறைகளில் முன்னேற்றம் காணவேண்டும் என்ற அவாவினையே வெளிப்படுத்தின. சாதி அமைப்பினதும் தீண்டாமையினதும் அப்பட்டமான கொடுமைகளுக்கு எதிரான

www.padippakam.com



நேரடிப் போராட்டங்களைத் திட்டமிட்டு முன்னெடுப்பதற்கான நிலையில் அன்று மகாசபை இருக்கவில்லை. காரணம் அதன் அன்றைய தலைவர்கள் படித்த பகுதியினராகவே இருந்தனர். சலுகை அடிப்படையிலான முன்னேற்றத்தையே குறியாகக் கொண்டிருந்தனர். மகாசபையின் பல்வேறு நிலையிலும் உள்ளவர்களில் மிதவாதக் கருத்துடையோரே அதிகம். அக் காலகட்டத்தில் தான் இடதுசாரிக் கருத்துக்கள் வடபகுதிக்கு அறிமுகப்படுத்தப்பட்டிருந்தன. மகா சபைக்குள் இருந்த ஒரு சிலர் மத்தியில் இடதுசாரிக் கருத்துகள் சிறிது தாக்கத்தை ஏற்படுத்தி வந்தன.

1944ல் மகாசபையின் இரண்டாவது மாநாடு முடிந்திருந்த வேளையில் யாழ்ப்பாண நகரத்தில் முக்கியமான சம்பவம் ஒன்று இடம் பெற்றது. யாழ் நகரில் அமைந்துள்ள வில்லூன்றிச் சுடலையில் அன்று வரை தாழ்த்தப்பட்ட மக்கள் சாதிய வழமைப்படி தமது பிரேதங்களைத் தனியான இடத்தில் புதைத்து வந்தனர். சாதி அடிப்படையிலான அவ் வழக்கத்தை மீறி ஆரியர்குளம்–பலாலி வீதியைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட மக்கள் ஒரு வயோதிபப் பெண்ணின் பிரேதத்தை வில்லூன்றிச் சுடலையில் எரித்தார்கள். இச் செயலானது உயர் வேளாள ஆதிக்கவாதிகளை ஆத்திரமடையச் செய்தது. அதனால் அன்று இரவு பிரேதத்தை சுடலையில் எரித்துக்கொண்டு நின்ற தாழ்த்தப்பட்ட சிலர் மீது சாதிவெறியர்கள் மறைந்திருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இத் துப்பாக்கிச் சூட்டில் முதலி சின்னத்தம்பி என்பவர் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டார். மேலும் இருவர் காயமடைந்தனர். இச் சம்பவம் முழு வடபுலத்தின் தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியிலும் கடும் எதிர்ப்பையும் ஆத்திர உணர்வையும் தோற்றுவித்தது.

முதலி சின்னத்தம்பியின் கொலைச் சம்பவமானது மகா சபையையும் அதன் செயற்பாட்டையும் வேகப்படுத்தியது. இக் கொலை வழக்கில், கொல்லப்பட்ட தாழ்த்தப்பட்டவரான முதலி சின்னத்தம்பி சார்பாக நீதி மன்றத்தில் வாதிட உயர்த்தப்பட்ட சாதி வழக்கறிஞர்கள் முன்வரவில்லை. எவரும் வாதிடக் கூடாது என்றும் தம்முள் முடிவு செய்திருந்தனர். ஆனால் இந் நிலையினை உடைத்துக் கொண்டு உயர்த்தப்பட்ட சாதியினர் மத்தியிலிருந்த அன்றைய வடபகுதியின் சமசமாஜக் கட்சியின் தலைவர்களான சி. தர்மகுலசிங்கம். வி. சிற்றம்பலம் ஆகிய இருவரும் துணிவுடன் முன் வந்து தாழ்த்தப்பட்ட மக்களின் பக்கம் நின்று கொல்லப்பட்ட முதலி சின்னத்தம்பியின் சார்பாக வாதிட்டனர்

www.padippakam.com



என்பது குறிப்பிடத்தக்கதாகும். இவ்விடத்திலே மற்றுமோர் சம்பவத்தையும் குறிப்பிட வேண்டும். சுன்னாகத்தில் வேளாள ஆதிக்கவாதிகளுக்கு எதிரான வழக்குகள் இரண்டில் அதே சமசமாஜக் கட்சியின் தலைவர்களில் ஒருவ ரான கொல்வின் ஆர்.டி. சில்வா இலவசமாக ஆஜராகி இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

2-9-1945ல் மகாசபையின் மூன்றாவது மாநாடு நடைபெற்றது. தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் கல்வி பெற்றவரும் வழக்கறிஞருமான ஜே.டி. ஆசீர்வாதம் தலைமையில் நடைபெற்ற இம் மாநாட்டில் முன்பு மகாசபையினால் கோரப்பட்ட விஷேச பிரதிநிதித்துவத்தை வலியுறுத்தியும் தாழ்த்தப்பட்ட மக்களின் பொருளாதாரக் கஷ்டங்களை விசாரிக்க ஒரு தனி ஆணைக் குழு நியமிக்கக் கோரியும், சகல உள்ளூராட்சி சபைகளிலும் பிரதிநிதித்துவம் கிடைக்கக் கூடிய வகையில் வட்டாரங்கள் பிரிக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது. கல்விப் பிரச்சினையில் முஸ்லீம் மக்களுக்கு அளித்த சிறப்புச் சலுகையை தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் வழங்கக் கோரியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இக் காலகட்டத்திலேயே இலங்கையில் இலவசக் கல்வி முறை நடைமுறைக்குச் கொண்டுவரப்பட்டது.

1945ல் கம்யூனிஸ்ட் கட்சி தனது வேலைமுறையை வட பகுதிக்கு விஸ்தரித்துக் கொண்டது. தோழர் மு. கார்த்திகேசன் முதன் முதலாக கம்யூனிஸ்ட்கட்சியை யாழ்ப்பாணத்தில் அறிமுகப்படுத்தினார். அவருடன் எம்.சி. சுப்பிரமணியம், அ. ராமசாமி ஐயர், கே. குலவீரசிங் கம், டாக்டர் சு.வே. சீனிவாசகம், ஆர்.ஆர். பூபாலசிங்கம், எம். ஏ. காதர், ஏ.கே. கந்தையா க. மகாலிங்கம் போன்றோர் இணைந்து ஆரம்ப உறுப்பினர்களாகி கட்சிப் பணிகளை முன்னெடுத்தனர். ஏற்கனவே சம சமாஜக் கட்சியினர் முன்னெடுத்த இடதுசாரிக் கருத்துக்கள் ஆங்கா ங்கே வடபகுதியில் அறிமுகமாகி செயற்பட்டு வந்தன. அதே வேளை கம்யூனிஸ்ட் கட்சியின் தோற்றத்துடன் மாக்சிச லெனினிசக் கருத்துக்கள் விரிவடைய ஆரம்பித்தன. அவை குறிப்பாகச் சமூகத்தின் அடக்கி ஒடுக்கப்பட்ட நிலையில் வாழ்ந்து கொண்டிருந்த தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் அதிக தாக்கத்தினை ஏற்படுத்தியமை இயல்பானதொன்றேயாகும். அன்று மகாசபைக்குள் பல்வேறு அரசியல், சமூக கருத்துக்கள் கொண்டவர்கள் இணைந்திருந்தனர். அவர்களில் கம்யூனிஸ்டுகளும் இருக்கவே செய்தனர். அவர்களில் எம்.சி. சுப்பிரமணியம், கே. டானியல், டொமினிக்

www.padippakam.com



ஜீவா. கே. பசுபதி. என். கே. ரகுநாதன். மு. முத்தையா. க. இராசையா போன்றவர்களைக் குறிப்பிடலாம். இவ்வாறு நாற்பதுகளின் பிற்கூறில் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் கருத்துக்கள் அதிகரித்த அளவில் தாழ்த்தப்பட்ட மக்களிடையே வேகமாகப் பரவ ஆரம்பித்தன.

தாழ்த்தப்பட்ட மக்களின் ஆதரவோடு கம்யூனிஸ்ட் சமசமாஜக் கட்சிகளின் சார்பாக உள்ளூராட்சித் தேர்தல்களில் அபேட்சகர்கள் போட்டியிட்டனர். மு. கார்த்திகேசன், டாக்டர் சு.வே. சீனிவாசகம், எஸ். ஜெயசிங்கம் சி. தர்மகுலசிங்கம், பொ. நாகலிங்கம். அ. விசுவநாதன். துரைராஜசிங்கம் போன்றவர்கள் வடபகுதி ஆரம்ப தேர்தல் களத்தில் பிரபல்யம் மிக்க கம்யூனிஸ்ட் - சமசமாஜ இடதுசாரித் தலைவர்களாக வருவதற்கு தாழ்த்தப்பட்ட மக்களின் ஆதரவு அடிப்படையானதாக அமைந்திருந்தது. அம்மக்கள் இவ் இடதுசாரியினரை பெருமளவிற்கு ஆதரித்து நின்றமைக்கு காரணம் அவர்கள் சாதி-தீண்டாமை விடயங்களிலும் தாழ்த்தப்பட்ட மக்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகளிலும் தாம் பின்பற்றிய மாக்சிச இடதுசாரிக் கொள்கைகளுக்கு ஏற்ப நடந்துகொண்டமையேயாகும்.

கொலனிய ஆட்சியின் கீழ் 1945ல் இலங்கை அரசியல் திட்டத்தில் சீர்திருத்தம் செய்வதற்காக பிரித்தானியாவிலிருந்து சோல்பரி ஆணைக்குழு இலங்கைக்கு வந்தது. இந்த ஆணைக்குழு முன்னிலையில் தாழ்த்தப்பட்ட மக்கள் சார்பாக சாட்சியம் அளிக்க வேண்டும் என மகாசபை விரும்பியது. அவ்வேளை ஜீ.ஜீ. பொன்னம்பலம் அவ்வாறு தனியான சாட்சியம் வழங்க வேண்டாம் என வலியுறுத்தி மகாசபையிடம் கேட்டுக் கொண்டார். இது சம்பந்தமான ஒரு கூட்டம் மகாசபையால் யாழ். அந்தோனியார் கூட்ட மண்டபத்தில் கூட்டப்பட்டு அதில் பொன்னம்பலமும் கலந்து கொண்டார். தாழ்த்தப்பட்ட மக்களின் நிலம், கல்வி, தொழில், தீண்டாமை போன்ற பிரச்சினைகள் சம்பந்தமாக பொன்னம்பலம் அளிக்கும் சாட்சியத்தில் விடயங்கள் இடம்பெற்றால் மகாசபை தனியே சாட்சியம் அளிப்பதைக் கைவிடும் எனக் கூறப்பட்டது. ஆனால் அவ்வாறு விடயங்கள் இடம் பெறுவதை பொன்னம்பலம் ஏற்றுக்கொள்ளவில்லை. தமிழர் சமூகத்தில் சாதிய அடிப்படையில் தாழ்த்தப்பட்ட தமிழர்கள் இருந்து வருவதை மறைக்கவே சைவ வேளாள ஆதிக்கத்தின் அரசியல் பிரதிநிதியான ஜீ.ஜீ. பொன்னம்பலம் முன்னின்றார். தமிழர்கள் மத்தியில் ஒற்றுமை இருப்பதாகக் காட்டிக்கொள்வதற்கு தான் மட்டும் ஏகப் பிரதிநிதியாகச்

www.padippakam.com



சென்று சாட்சியம் அளிப்பதையே அவர் வற்புறுத்தினார். இதனை மறுத்து சோல்பரி ஆணைக்குழு முன்னிலையில் டி. ஜேம்ஸ், ஜே.டி. ஆசீர்வாதம், செல்வி.எம்.வி. ஹட்கின்ஸ் ஆகியோர் மகாசபை சார்பில் தனியான ஒரு சாட்சியத்தை அளித்தனர். அச் சாட்சியம் தாழ்த்தப்பட்ட மக்கள் அனுப வித்து வந்த அவல வாழ்வை விபரமாக எடுத்துக் காட்டியது. அத்துடன் சோல்பரி ஆணைக்குழுவினர் வடபகுதிக்கு வரும் போது தாழ்த்தப்பட்ட மக்களின் நிலையை நேரில் கண்டறியவும் ஒப்புக்கொண்டனர். இவ்விடயம் இரகசியமாக வைக்கப்பட்டிருந்தது.

விபரங்களை நேரில் கண்டறியும் பொருட்டு சோல்பரி ஆணைக்குழு வடபுலத்திற்கு தமது பயணத்தை மேற்கொண்டது. அன்றைய சட்டசபையின் பருத்தித்துறைப் பிரதிநிதியான ஜீ.ஜீ. பொன்னம் பலம் தலைமையில் நெல்லியடி பருத்தித்துறைப் பகுதிகளில் சோல்பரி குழுவினருக்கு பெரும் வரவேற்பு அளித்தனர். நெல்லியடி வரவேற்பு முடிந்ததும் சோல்பரியை ஜீ.ஜீ. பொன்னம்பலம் பருத்தித்துறைக்கு அழைத் துச் சென்ற அதேசமயம் ஆணைக்குழுவின் இதர மூன்று உறுப்பினர் களான றீஸ், பறோஸ், ஸ்மித் ஆகியோரை மகாசபைப் பிரதிநிகள் கரவெட் டியில் உள்ள கன்பொல்லைக் கிராமத்திற்கு முன்கூட்டியே இரகசிய மாகத் திட்டமிட்டிருந்தபடி அழைத்துச் சென்று தாழ்த்தப்பட்ட மக்களின் அவல நிலையை நேரில் காண்பித்தனர். அங்கு இவர்கள் மோட்டார் கார்களில் சென்றபோது அப்பகுதி மக்கள் ஓடி ஒளியவே முற்பட்டனர். அதற்குக் காரணம் சாதி வெறியர்கள் வழமை போல் தாக்க வருகிறார்கள் என்ற அச்சமேயாகும். கன்பொல்லைக் கிராம மக்களின் குடிசைகளுக் குள் சென்று நிமிர்ந்து நிற்கமுடியாத அளவுக்கு அவை சிறு குடிசைகளா கவே அமைந்திருந்தன. அக்குடிசைகளுக்கு சுவர் வைக்கவோ அல்லது மறைப்புகள் கட்டி வைக்கவோகூட உயர்சாதி வெறியர்கள் அனுமதித்தி ருக்கவில்லை என்ற விபரம் உட்பட வர்ணிக்க முடியாத சாதி அடக்கு முறைகள் சோல்பரி ஆணைக்குழு உறுப்பினர்கட்கு நேரில் எடுத்து விளக்கப்பட்டன.

ஆணைக்குழு உறுப்பினர்களைத் திடீரென தாழ்த்தப்பட்ட மக்களின் கிராமத்துக்கு அழைத்துச் சென்றதால் சாதி வெறியர்கள் ஆத்திரமடைந்தனர். அவர்களை அங்கு அழைத்துச் சென்ற மகாசபைப் பிரதிநிகளான எம்.சி. சுப்பிரமணியம். வ.டே. கணபதிப்பிள்ளை. டி. ஜேம்ஸ் ஆகியோர் நெல்லியடிச் சந்திக்கு வந்தபோது சாதி வெறியர்களால்

www.padippakam.com



வழிமறிக்கப்பட்டு தாக்க முயற்சிகள் செய்யப்பட்டன. தற்செயலாக அவ் விடம் பொலிஸ் வந்தமையாலும் வேறு சில நண்பர்களின் உதவியாலும் பலமான தாக்குதலில் இருந்து அவர்கள் தப்பித்துக் கொண்டனர்.

இவ்வாறு மகாசபையினர் சோல்பரி ஆணைக்குழுவுக்கு தாழ்த்தப்பட்ட மக்களின் நிலையை சாட்சியமாகவும் நேரிலும் எடுத்துக் காட்டியும் ஆணைக்குழு வரைந்த அரசியல் சாசனத்தில் அம்மக்கள் பற்றி எந்தவொரு சிறு அம்சமும் இடம் பெறவில்லை. ஜீ.ஜீ. பொன்னம்பலம் போன்ற மேட்டுக்குடிப் பிரதிநிதிகளின் சாட்சியங்கள் மட்டுமே அவர்களின் காதுகளில் ஏறின. அதாவது தமிழர்களின் பழமைவாதப் பாரம்பரியத்தைப் பாதுகாத்து வந்த சாதியத்தையும் தேசவழமையையும் சோல்பரி ஆணைக் குழுவால் மீற முடியாது போனமை தற்செயலானதொன்றல்ல: பிரித்தா னிய கொலனியவாதிகளுக்கும் இந் நாட்டின் மேட்டுக்குடி சாதி ஆதிக்க வாதிகளுக்குமிடையில் இருந்து வந்த உள்ளார்ந்த பிணைப்பையே இந் நிகழ்வு எடுத்துகாட்டியது.

மேற்படி சோல்பரி அரசியல் திட்டத்தின்கீழ் முதலாவது பாராளுமன்றத்திற்கான தேர்தல் 1947ல் இடம்பெற்றது. இத்தேர்தலில் ஜீ.ஜீ. பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரசும், யூ.என்.பி. கட்சியும் பிரதான கட்சிகளாக தமிழர்கள் மத்தியில் போட்டியிட் டன. இத்தேர்தலில் சில தொகுதிகளில் இடதுசாரிக்கட்சிக ளும் போட்டி யிட்டன. தாழ்த்தப்பட்ட மக்களின் அமைப்பான சிறுபான்மைத் தமிழர் மகாசபை யாருக்கும் வேலை செய்வதில்லை எனத் தீர்மானம் எடுத்தது. ஆனால் அதன் முக்கியஸ்தர்கள் சிலர் பகிரங்கமாகவே யூ. என். பிக்கு வேலை செய்தனர். அதன் உள்நோக்கம் புதிய பாராளுமன்றத்துக்குப் பின் உருவாகும் மேல் சபையான செனட் சபையில் நியமனம் பெறுவதேயாகும். அவ்வாறே 1947ல் தேர்தலுக்குப்பின் முதலியார் ஏ. பி. இராஜேந்திரா ஆட்சிக்கு வந்த யூ. என். பி யினால் செனட்டராக்கப்பட்டார். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பிரதிநிதித்துவம் வழங்க வேண்டும் என்ற அடிப்படையில் அன்றி. மிகவும் விசுவாசமான அரசாங்க ஊழியரும் கல்விபெற்ற நம்பிக்கைக்குரிய யூ. என். பி. விசுவாசியும் என்ற அடிப்படையிலேயே அவருக்கு செனட்டர் பதவி வழங்கப்பட்டது.

1948ல் இலங்கைக்கு "சுதந்திரம்" பிரித்தானிய ஏகாதிபத் தியவாதிகளினால் வழங்கப்பட்டது. அதை இலங்கையின் சொத்துடைய மேட்டுக்குடி வர்க்கத்தின் பிரதிநிதிகள் கையேற்றுக் கொண்டனர். தமது

www.padippakam.com



பொருளாதார அடிப்படை நலன்களுக்கு குந்தகம் ஏற்படாமைக்கும். பிரித்தானிய முதலாளிய அரசியல் அமைப்பு முறையைத் தொடர்வதற்கும் உரிய உத்தரவாதத்தைப் பெற்றுக்கொண்டே இலங்கையின் உயர் வர்க்கத்தினரின் கைகளில் "சுதந்திரம்" ஒப்படைக்கப்பட்டது. இச் சுதந் திரத்தால் இலங்கையின் தொழிலாளி வர்க்கமோ ஏனைய உழைக்கும் மக்களோ எந்தவித பலாபலன்களையும் பெற்றுக்கொள்ளவில்லை. குறிப்பாக இச் சுதந்திரத்திற்குப் பின்பே இலங்கையின் ஆகக்கூடிய எண்ணிக்கையைக் கொண்டதும் பெருந் தோட்ட தேயிலை ரப்பர் உற்பத்தித் துறையின் தொழிலாளர் வர்க்கமாகத் திகழ்ந்து கொண்டிருந்த இந்திய வம்சாவழித் தோட்டத் தொழிலாளர்களின் குடியுரிமை வாக்கு ரிமை பறிக்கப்பட்டு நாடற்றவர்கள் என்ற நிலைக்கு ஆளாக்கப்பட்டனர். இந்நிலை வர்க்க இனத்துவ அடிப்படையில் அன்றைய டி.எஸ். சேனநா யக்கா தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியினால் தூர நோக்கின் அடிப்படையில் இழைக்கப்பட்ட மாபெரும் அநீதியாக அமை ந்தது. இலங் கையின் இன முரண்பாடு முற்றி மோதலாக உருவெடுப்பதற்கான அடிப் படைகளையும் அச் 'சுதந்திரம்' கொண்டிருந்தது. அதேபோல் சிங்கள உழைக்கும் வர்க்கத்தைப் பொறுத்த வரையிலும் சுதந்திரம் பெயரள விலான தொன்றாகவே அமைந்தது. இலங்கையின் சிங்கள-தமிழ்-முஸ்லீம் உயர் மேட்டுக்குடி வர்க்கத் தினருக்கு வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்துவதற்கு அச் சுதந்திரம் வழிவகுத்த அதேவேளை சாதாரண மக்களுக்கு அது ஒரு புதிய வகை விலங்காகவே அமைந்தது. அந்த வகையில் தாழ்த்தப்பட்ட மக்களின் அடிநிலை வாழ்வு மாற்றத்திற்கு சுதந்திரம் என்பது எதையும் வழங்கிவிடவில்லை. தமிழர்கள் மத்தியில் காலாதிகாலமாக சொத்து சுக வாழ்வில் திளைத்துத் தாழ்த்தப்பட்ட மக்களை அடக்கி ஆண்டு வந்தவர்களே பிரித்தானியர் வழங்கிய சுதந்திரத்தாற் பயன் அடைந்தனர். அந்த ஆண்டபரம்பரையினர் அதைத் தகுந்த முறையில் பயன்படுத்தியுங் கொண்டனர். அதேவேளை தென்னிலங்கையில் இடம்பெற்றுவந்த தொழிலாளி வர்க்க இயக்கங்களும் போராட்டங்களும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு புதுவகை உணர்வையும் உந்துதலையும் நம்பிக்கையையும் அளித்து வந்தன. சாதிய வர்க்க அடிப்படையில் தாங்கள் அடக்கி சுரண்டப்படுவதை படிப்படியாக உணர்ந்து கொள்ளும் நிலை வளர்ச்சி கண்டது.

சிறுபான்மைத் தமிழர் மகாசபையானது தாழ்த்தப்பட்ட

www.padippakam.com



மக்களை தனியான அமைப்பு ரீதியில் ஐக்கியப்படுத்தி வந்த அதேவேளை சீர்திருத்த நடவடிக்கைகளை ஒரு மிதவாதப் போக்கிலேயே அணுகி வந்தது. மகாசபைக்குள் இருந்துவந்த கம்யூனிஸ்ட்டுக்கள் இடையிடையே இயக்கத்தை வேகப்படுத்த முயன்றனராயினும் மிதவாத சீர்திருத்தப் போக்குகளே மேலோங்கி இருந்தன என்பதை மறுப்பதற்கில்லை.

மகாசபையின் சாதகமான வளர்ச்சியுடன் உள்ளூரப் பாதக அம்சங்களும் வளர்ச்சி பெற்று வந்தன. சாதி அடையாளங்களினால் முரண்படும் நிலை மகாசபையில் வெளிப்பாடடையத் தொடங்கியது. தாழ்த்தப்பட்ட சாதியினரில் படி நிலை உயர்வு தாழ்வு பற்றிய எண்ணக் கருத்தும் எண்ணிக்கையில் எந்தச் சாதியினர் கூடியவர்கள் குறைந்த வர்கள் என்பதும் வளரலாயிற்று. இதனால் மகாசபையின் தலைமைப் பதவிகளுக்கு மேற்கூறிய கண்ணோட்டத்தில் தெரிவுகளும் இடம்பெற் றமை மறைப்பதற்கு உகந்தவை அல்ல.

அடுத்த தீமையான போக்கு என்னவெனில் ஓரளவு கல்வி அறிவு பெற்று அரச உத்தியோகங்கள் பெற்றவர்களின் ஆதிக்கம் மகா சபைக்குள் அதிகரித்து வந்தமையால் பதவிகள், பட்டங்கள், தேர்தல்களில் அபேட்சகர்களாக நிற்றல் போன்றவற்றின் மீது மோகம் ஏற்பட்டு வளர ஆரம்பித்தமையாகும். இதனாற் பாராளுமன்ற நியமனம், செனட்டர் பதவி போன்றவற்றைக் குறி வைத்து சில மகாசபைத் தலைவர்கள் செயற்பட ஆரம்பித்தனர். அதனால் மகாசபைக்குள் பிளவுகளும் ஏற்பட வழி பிறந்தது. இதுபற்றி மேல் வரும் அத்தியாயங்களில் விரிவாகப் பார்க்க முடியும். இருபதாம் நூற்றாண்டின் முதல் ஐம்பதாண்டு காலத்தில் சாதிய தீண்டாமைக்கு எதிரான கருத்துக்களும் செயற்பாடுகளும் குறைந்த வேகத்தில் வளர்ச்சிபெற்று வந்தனவாயினும் அமைப்பு ரீதியில் ஒன்றுசேர்வதிலும், கல்வி பொருளாதாரத் துறைகளில் மட்டுப்படுத்தப்பட்ட எல்லைகளுக்குள் சிறிதளவு வளர்ச்சிகள் ஏற்படவும் முடிந்தமை குறிப்பிடத்தக்கதாகும். அதேவேளை நாட்டின் அரசியல் பொருளாதார சமூக விடயங்களில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளும் புதிய நிலைமைகளுக்குத் தாழ்த்தப்பட்ட மக்கள் ஈர்க்கப்பட்டும் வந்தனர். யாழ்ப்பாண நகரத்தை மையமாகக் கொண்ட இவ்வித தாக்கங்கள் சிறுநகரங்களையும் கிராமங்களையும் படிப்படியாகச் சென்றடையும் போக்குகள் விருத்திபெற ஆரம்பித்தன.

● ● ●

www.padippakam.com

# 7

# ஐம்பதுகளில் இருந்து அறுபத்தியாறு ஒக்ரோபர் வரை

*கடந்த நூற்றாண்டின் முதல் ஐம்பது ஆண்டுகளை எடுத்து நோக்கும் போது தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியிலான பன்முக வளர்ச்சி என்பது குறைந்த வேகத்திலேயே இடம் பெற்று வந்தது. கல்வி வசதியும், உத்தியோக வாய்ப்புக்களும் பெற்றிருந்த மிகச் சிறு பகுதியினர் மட்டுமே ஆரம்ப வளர்ச்சிப் படியில் இருந்தனர். அதேவேளை சாதிய தீண்டாமைக்கு எதிரான கருத்துக்கள் வளர்வதற்கும் அதன் அடிப்படையில் அமைப்புகள் உருவாக்குவதற்கும். சீர்திருத்தச் சலுகைகளுக்குமான கோரிக்கைகள் முன்வைக்கப்படுவதற்கும் இக்காலப் பகுதியில் பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டு அவை முன்னேற்றம் கண்டன. இவை கல்வி கற்ற அரசியல் சமூக நலன் நாடி நின்ற சக்திகளாலும் அமைப்புக்களாலுமே முன்னெடுக்கப்பட்டன.*

*பாடசாலைகளில் சமஆசனம்-சமபோசனம், சர்வசன வாக்குரிமை, மரவரிமுறை, இலவசக் கல்வி, முதலாவது பாராளுமன்றத் தேர்தல், தென்இலங்கையில் வளர்ச்சி பெற்றுவந்த இடதுசாரித் தொழிற் சங்க இயக்கங்கள் என்பன தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்வில் சில வகைத் தாக்கங்களை ஏற்படுத்தின. அதேவேளை இடதுசாரிக் கருத்துக் களின் வேகமான வீச்சினால் தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் இளம் சக்திகள் சமூக-அரசியல் உணர்வோடு முன்னுக்கு வரக்கூடிய புதிய சூழல் நாற்பதுகளின் பிற்பகுதியிலேயே உருவானது.*

*மேற்கூறியவற்றின் ஒட்டு மொத்தமான விளைவுகள் ஐம்பது*

www.padippakam.com



களின் ஆரம்பத்துடன் புதியதோர் வேகம் பெறத் தொடங்கியது. 1947ல் கொழும்பு மாநகரில் இடம்பெற்ற பொதுவேலை நிறுத்தமும் அதில் அரசாங்க லிகிதரான கந்தசாமி பொலீஸ் துப்பாக்கிச் சூட்டிற்குப் பலியான நிகழ்ச்சியும் பொதுவாகவே இலங்கையின் உழைக்கும் மக்கள் மத்தியில் இடதுசாரி அரசியல் தொழிற்சங்க சிந்தனைப் போக்குகளை மேலும் வலுவடைய வைத்தன. அதன் வேகமான வளர்ச்சியை 1953ல் யூ.என்.பி. அரசுக்கு எதிராக இடம்பெற்ற வரலாற்று புகழ்மிக்க ஹர்த்தால் போராட்டம் துலாம்பரமாக்கியது. ஹர்த்தாலின் தாக்கத்தால் உந்தப்பட்ட உழைக்கும் மக்கள் மேலும் அரசியல் விழிப்புணர்வுக்கு உள்ளாகினர். ஹர்த்தாலைத் தொடர்ந்த ஆண்டுகளில் தாழ்த்தப்பட்ட மக்களின் அமைப்பான சிறுபான்மைத் தமிழர் மகாசபை தமது நடவடிக்கைகளை மேலும் முன்தள்ளி முனைப்பாக்கியது.

நாற்பதுகளிலேயே திட்டமிடப்பட்ட நாடு தழுவிய விவசாயக் குடியேற்றங்கள் ஐம்பதுகளின் ஆரம்பத்துடன் அன்றைய யூ.என்.பி. அரசினால் முழு அளவில் நடைமுறைப்படுத்தப்பட்டது. இத் திட்டமிட்ட குடியேற்றக் கொள்கையின் ஒரு பகுதியாகவே கிழக்கு மாகாணத்தினதும் வடக்கு மாகாணத்தினதும் தமிழர்களின் பாரம்பரிய பிரதேசங்கள் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்திற்குள் கொண்டுவரப்பட்டன என்பது நினைவுபடுத்தலுக்குரியதாகும்.

இத்தகைய திட்டமிட்ட குடியேற்றம் என்பதன் கீழ் வடபகுதியின் நிலமற்ற மக்களுக்கு நிலம் கிடைப்பதற்கான சந்தர்ப்பம் உருவாகியது. வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், மாவட்டங்களில் பெரிய சிறிய குளங்கள் அமைந்துள்ள பகுதிகளை சுற்றியுள்ள காடுகளை விவசாய நிலங்களாகவும் குடியிருப்பு பகுதிகளாகவும் பகிர்ந்தளிக்கும் நடைமுறையை அரசாங்கம் செயற்படுத்தியது. இவ்வாறான குடியேற்றத் திட்டங்களில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கணிசமான காணிகள் வழங்கப்பட வேண்டும் எனச் சிறுபான்மைத் தமிழர் மகாசபை அரசாங்கத்தை வற்புறுத்தியது. **19-5-1955ல்** அன்றைய காணி அமைச்சரை மகாசபை சார்பாக ஜே.டி. ஆசீர்வாதம். ஜி. நல்லையா ஆகியோர் பேட்டி கண்டு தமது மக்களுக்கு குடியேற்றத்திட்டங்களில் காணிகள் வழங்கப்படவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினர். காணி அமைச்சரும் இக் கோரிக்கைக்கு கவனம் செலுத்துவதாக வாக்குறுதி அளித்தார். அன்றைய குடியேற்றங்களில் தாழ்த்தப்பட்ட மக்களில் குறிப்பி

www.padippakam.com



டத்தக்க அளவினருக்கு காணிகள் வழங்கப்பட்டன. அவ்வாறான ஆரம்ப காலக் குடியேற்றக் காணிகள் சாதிய அடிப்படையிலேயே பகிர்ந்தளிக்கப் பட்டன. அன்று அவ்வாறு வழங்கிய குடியேற்றப் பகுதிகளை இன்று பார்க்கும்போது அதில் இருப்பவர்கள் எந்தெந்தச் சாதிகளைச் சேர்ந்த வர்கள் என்பதை இலகுவாகவே சுட்டிக்காட்டக்கூடியதாக இருக்கும். இதற்கு முக்கிய காரணம் அக்காணிப் பங்கீட்டை நடாத்திய உயர் அர சாங்க அதிகாரிகளாக இருந்தவர்கள் வேளாள ஆதிக்கம் மிக்க குடும்பங்க ளைச் சேர்ந்தோரேயாவர். அதனால் வளமற்ற நிலங்கள், குளங்களுக்குத் தூர உள்ள நிலங்கள், பிரதான வீதிகளுக்கு தூர உள்ள நிலங்கள் என்ற உள்ளார்ந்த பாகுபாட்டு அடிப்படையில் விசாயத்திற்கான காணிகள் வழங்கப்பட்டன என்பது மறைப்பதற்கு இயலுமான ஒன்றல்ல. ஆனால் அறுபதுகளின் ஆரம்பத்தில் உருவாக்கப்பட்ட படித்த இளைஞர்களுக் கான குடியேற்றத் திட்டங்களில் இந் நிலை ஓரளவு மாற்றம் பெற்றிருந் தமை குறிப்பிடத்தக்கதாகும்.

தாழ்த்தப்பட்ட மக்கள் சாதி ஒடுக்குமுறையையும் அதன் விளைவான தீண்டாமையையும் அனுபவித்து வந்தனராயினும் 20ம் நூற்றாண்டின் முதல் ஐம்பது ஆண்டுகளிலும் இவற்றுக்கெதிரான முழுமை யான போராட்டங்களை பரந்தளவில் முன்னெடுக்கப்படவில்லை. சாதி அடக்கு முறையின் அடிப்படையாக உள்ள அடிமை குடிமை முறைகளு க்கு எதிராகவோ அன்றி பொது இடங்களில் மிகவும் அநாகரிகமான முறையில் கடைப்பிடிக்கப்படும் தீண்டாமைக்கு எதிராகவோ திட்டமிட்ட இயக்கங்கள் எதுவும் நடத்தப்படவில்லை. கல்விக் கூடங்களில் சம ஆசனம் சம போசனம் என்ற பாகுபாடற்ற சமத்துவத்தைச் சட்டத்தின் மூலம் ஒரு சலுகையாக மட்டுமே பெற முடிந்தது. அதுகூடத் தாழ்த்தப்பட்ட மாணவர்களை அனுமதித்த மிஷனரிப் பாடசாலைகளில் மட்டுமே அரைகுறையாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. சைவத் தமிழ்ப் பாடசாலைகளில் தாழ்த்தப்பட்ட பிள்ளைகள் காலடி எடுத்து வைத்த நிகழ்வுகள் மிக அருந்தலாகவே இடம் பெற்றன. அங்கும் அவர்கள் மிகவும் மோசமாகவே நடத்தப்பட்டனர்.

எனவே தீண்டாமை தழுவி நிற்கக் கூடிய சகல துறைகளி லும் அதற்கு எதிரான நிலைப்பாட்டைக் கொள்ளவேண்டும் என்ற முடிவுக்கு **31-8-1955ல்** நடைபெற்ற மகாசபையின் **12வது** மாநாட்டிலே தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இம்மாநாட்டில்

www.padippakam.com



வரவேற்புரை நிகழ்த் திய ஆ.ம. செல்லத்துரை தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மறுக்கப்படும் உரிமை களையும் தீண்டாமை நடைமுறைகளையும் தனது உரையில் பட்டிய லிட்டுக் காட்டினார்.

1. கோவில்களுக்குள் செல்ல முடியாது.
2. தேனீர்க் கடைகளுக்குள் செல்ல முடியாது.
3. போசனசாலைகளுக்குள் புகமுடியாது.
4. சலூன்களில் மயிர் வெட்ட முடியாது.
5. சலவைத் தொழில் நிலையங்களில் உடைகள் கழுவ முடியாது.
6. பல பாடசாலைகளில் கல்வி கற்க முடியாது.
7. சைவப் பாடசாலைகளில் கல்வி கற்பிக்க முடியாது.
8. சில சுடலைகளில் பிரேதம் எரிக்க முடியாது.
9. சில கிராமங்களில் பெண்கள் சேலை. மேற்சட்டை உடுக்க முடியாது.
10. சில கிராமங்களில் பெண்கள் தாலி கட்ட முடியாது.
11. சில கிராமங்களில் செருப்பு போட முடியாது.
12. பொதுக் கிணறுகளில் தண்ணீர் அள்ளிக் குடிக்க முடியாது.
13. கொண்டாட்டங்களுக்கு மேளம் அடிக்க முடியாது.
14. தாம் விரும்பியவருக்கு வாக்குப் போட முடியாது.

இவ்வாறு அன்றுள்ள சாதிய–தீண்டாமை நடைமுறைகளை எடுத்துக் காட்டிய இம் மாநாடு தீண்டாமைக்கு எதிராக உறுதியான சட்டம் கொண்டு வரப்பட வேண்டும் என வலியுறுத்தியது. சாதிவெறியர் களின் பக்கம் பொலீசார் நின்று வருவதைச் சுட்டிக்காட்டி சாதியம் தானாகவே ஒழிந்தவிடும் என்று கூறுவது மிகவும் மோசமான ஏமாற்று என்றும் அம் மாநாடு எடுத்துக் காட்டியது. கல்வி, பொருளாதார, நிலமின் மை, பாராளுமன்ற பிரதிநித்துவம், செனட்சபைப் பிரதிநிதித்துவம், வீட்டுக் குடியேற்றம், கமத்தொழில் பிரதேசங்களில் குடியேற்றப்படுதல் போன்றன முன்வைக்கப்பட்டன. மேலும் ஆசிரிய நியமனம், கடனுதவி, மரவரி முறை க்கு உத்தரவாதம் போன்ற பிரச்சினைகள் பற்றிய தீர்மானங்களும் அங்கு நிறைவேற்றப்பட்டன.

12-6-56ல் "உயர்சாதியினருக்கு வேண்டுகோள்" என்ற தலைப்பில் மகாசபை ஒரு துண்டுப் பிரசுரத்தை வெளியிட்டது. சத்தியாக் கிரகத்தின் மூலம் தீண்டாமைப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும் என்றும் அதற்கு இதுவே உரிய தருணம் என்றும் கூறி ஜி. நல்லையா.

www.padippakam.com



ஆ.கணபதிநாதன் ஆகிய இருவரும் மகாசபைக்கு அளித்த அறிக்கையின் அடிப்படையிலேயே இத்துண்டுப் பிரசுரம் வெளியிடப்பட்டது.

இத் துண்டுப்பிரசுரம் கல்வி கற்ற இந்துக்களிடையேயும் நல்லெண்ணம் கொண்ட உயர்த்தப்பட்டோர் மத்தியிலும் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியது. அதன் விளைவாக அத்துண்டுப் பிரசுரம் வெளிவந்த சில நாட்களில் ஸி. குமாரசுவாமியைத் தலைவராகவும் (முன்னாள் இலங்கையின் இந்தியத் தூதுவர்) உயர் நீதிமன்ற நீதிபதிகளான ஸ்ரீஸ்கந்தராஜா, சிவபாதசுந்தரம் ஆகிய இருவரையும் இணைச் செயலாளர்களாகவும் கொண்ட சபை ஒன்று நிறுவப்பட்டது. அதன் பெயர் ''ஆலயப் பிரவேச உரிமை அளிக்கும் சபை'' என்பதாகும்.

சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் வேண்டுகோளினாலும் நல்லெண்ணம் கொண்டவர்கள் அமைத்த ஆலயப் பிரவேச உரிமை அளிக்கும் சபையின் முயற்சியாலும் 9-7-1956 அன்று பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தசாமி கோவில், யாழ். பெருமாள் கோவில், வண்ணை சிவன் கோவில் ஆகிய கோவில்களில் ஐந்து அங்கத்தவர்களைக் கொண்ட மகாசபைப் பிரதிநிதிகள் ஆலயப் பிரவேசம் செய்தனர். அன்று அதிகாலையில் சூரிய உதயத்திற்கு முன்பாக அவசர அவசரமாக ஆலயப் பிரவேசம் நடைபெற்றது. பெயரளவில் இடம் பெற்ற அவ் ஆலயப் பிரவேசம் உடன் பலன் அளிக்காதுவிட்டாலும் எதிர்கால ஆலயப் பிரவேச இயக்கத்திற்கு ஒரு ஆரம்பப் புள்ளியாக அமைந்து கொண்டது. அத்துடன் நல்லூர் போன்ற பிரசித்தி பெற்ற ஆலயத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கதவுகள் திறக்கப்பட்ட செய்தி தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிர்கால நம்பிக்கையையும் உயர்த்தப்பட்ட சாதிய ஆதிக்க சக்திகளுக்கு கசப்பையும் ஏற்படுத்தியது. அதேவேளை யாழ் நகரத்தில் உள்ள பிரபலமான கோவில்கள் சிலவற் றைத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு திறந்து விட்டால் சகல இடங்களிலும் சமாதானமாகவே சமத்துவத்திற்காக ஆலயங்கள் திறக்கப்படும் எனச் சிலர் மனப்பால் குடித்தனராயினும் அவ்வாறு எதுவும் நடை பெறவில்லை. அதற்குப் பதிலாக சாதி ஆதிக்கவாதிகளும் சாதி வெறியர்களும் தமது நிலைப்பாட்டை மேலும் இறுக்கமாக்கிக் கொண்டனர். இவ் ஆலயப் பிரவேசம் இடம் பெற்ற அன்றிரவு நல்லூர் கோவில் மண்டபத்தில் சமைத்த மாமிச உணவுகள் மதுபானம் போன்றவற்றைப் பரப்பி வைத்து சாதி ஆதிக்க வாதிகள் தமது சாதிவெறி எதிர்ப்பைத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். இருப்பினும் ஒரு

www.padippakam.com



அடையாள ஆலயப் பிரவேசமாக இடம் பெற்ற மேற்படி யாழ் நகரக் கோவில்களில் சமத்துவ நிலை முழு மையாக ஏற்பட நீண்டகாலம் எடுத்தது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கைத் தமிழர்களின் வரலாற்றில் ஐம்பதுகளின் ஆரம் பத்துடன் அரசியல் உத்வேகம் அதிகரிக்கத் தொடங்கியது. அகில இல ங்கை தமிழ்க் காங்கிரஸில் இருந்து ஏற்கனவே எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தலைமையில் பிளவடைந்தவர்கள் இலங்கைத் தமிழரசுக் கட்சியை ஆரம்பித்தனர். இக் கட்சியினர் சைவ–கிறிஸ்தவ உயர் வேளாளப் பின்ன ணியில் உயர் மத்தியதர வர்க்கத் தமிழர்களின் அபிலாஷைகளைப் பிரதிபலிப்பவர்களாகவே இருந்தனர். வெளித்தோற்றத்தில் தமிழர்களின் இன மொழி, மத. கலாச்சாரக் கோரிக்கைகளுக்காகப் போராடுபவர்கள் போலக் காட்சி அளித்தனர். தீவிர இன. மத. மொழி முழக்கங்களுடன் தென்னிந்திய திராவிட இயக்கப் பாணியில் கட்சியை இயக்க முனைந் தனர். இவர்களுக்கு தமிழர்கள் மத்தியில் உள்ள கணிசமான வாக்கு எண்ணிக்கையைக் கொண்ட தாழ்த்தப்பட்ட மக்களை தம் பக்கம் திருப்பும் நோக்கும் தேவையும் குறிப்பானதொன்றாக இருந்தது. அது சாத்தியப்படக் கூடியது என்பதையும் அவர்கள் நம்பினர். காரணம் ஜீ.ஜீ. பொன்னம்பலமும் அவரது தமிழ் காங்கிரசும் தாழ்த்தப்பட்ட மக்களையோ அல்லது அவர்களது பிரச்சனைகளையோ ஒரு பொருட்டாக ஒரு போதும் மதித் ததே கிடையாது. சைவ வேளாள மேட்டுக்குடி ஆதிக்கப் பிரதிநிதியான ஜீ.ஜீ. பொன்னம்பலம் ஏற்கனவே சோல்பரி ஆணைக்குழு முன் சாட்சியம் அளிக்கும்போது தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எவ்வித பிரச்சனையும் இல்லையென்றும். பதவி ஆசை காரணமாகவே மகா சபையினர் தனியான சாட்சியம் அளித்துப் பொய் கூறினர் என்றும் வாதிட்டவர். இவருக்கு முந்திய தமிழ்த் தலைவரான சேர் பொன் இராமநாதன் எந்தளவிற்கு தாழ்த்தப்பட்ட மக்களை கீழ்த்தரமாக மதித்தாரோ அதே வழியையே ஜீ.ஜீ. பொன்னம்பலமும் பின்பற்றினார். இதனால் தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் ஏற்பட்டிருந்த எதிர்ப்பை தமக்கு சாதகமாக்கிக் கொள்ள தமிழரசுக் கட்சியினர் முயன்றனர். சாதி–தீண்டாமைப் பிரச்சினையில் தமிழரசுக் கட்சியினர் திராவிடர் இயக்கப் பாணியிலும் காந்தியக் கொள் கைகளைப் பிரதிபண்ணியும் சொல்லளவில் தீண்டாமைக்கு எதிராகப் பிரசாரம் செய்ய முற்பட்டனர்.

இவர்களது நடவடிக்கைகளும் கருத்துகளும் தாழ்த்தப்பட்ட

www.padippakam.com



மக்களிடையே கல்வி வசதி பெற்ற ஆசிரியர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள் மற்றும் மரவரி முறையால் பல தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தி சீவல் தொழில் நடத்தி கள்ளு வியாபாரத்தில் முன்னேறிய வசதி படைத்த சிலரிடையேயும் ஒரு வித கவனத்தை ஈர்த்தன. ஆசிரிய நியமனம், ஆசிரிய இடமாற்றம், உத்தியோக நியமனம், பதவி உயர்வு, வேறும் பட்டங்கள், பதவிகள் என்பனவற்றை நோக்காகக் கொண்டு மேனிலையாக்கம் நோக்கி நின்ற பிரிவினர் தமிழரசுக் கட்சியை நாடிச் செல்ல முனைந்தனர். அதன் மூலம் தம்மளவில் மேலும் ஆதாயங்களையும் சுய வளர்ச்சிகளையும் தேடிக் கொண்டனர்.

இவ்வாறானவர்களின் சுயநல நடவடிக்கைகளால் தாழ்த்தப்பட்ட மக்களின் நம்பிக்கைக்குரிய பெரும் அமைப்பாக இருந்து வந்த சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் மத்தியில் பிளவு ஏற்படலாயிற்று. இப்பிளவு **9-6-57ல்** நடைபெற்ற மகாசபையின் **14வது** மாநாட்டுடன் முழுமை பெற்றது. அம் மாநாட்டிற்கு அழைக்கப்பட்ட அன்றைய பண்டார நாயக்கா அரசாங்கத்தின் உதவித் தொழில் மந்திரி எம்.பி.டி சொய்சா யாழ்ப்பாணம் வந்தபோது தமிழரசுக் கட்சியினர் கறுப்புக்கொடி காட்டி, பறைமேளம் அடித்து அவரை அம் மாநாட்டில் கலந்து கொள்ளவிடாது தடுத்தனர். (எப்பொழுதும் யூ.என்.பி தலைவர்களுக்கு சாமரை வீசி அவர்கள் வடக்குக்கு வரும்போது எல்லாம் செங்கம்பளம் விரித்து வரவேற்று உபசரிப்பதும், பண்டாரநாயக்கா ஆட்சியின் தலைவர்களைக் கறுப்புக் கொடி காட்டி எதிர்ப்பதும் தமிழரசுக் கட்சியினரது வழமையான வர்க்க அரசியல் நிலைப்பாடாக இருந்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.) இச் சம்பவத்தால் மகாசபையில் கருத்து வேறுபாடுகள் அதிகரித்துப் பிளவு ஏற்பட்டது. மகாசபையில் இருந்து பிளவுபட்டோர் பிரிந்து சென்று மக்கள் முன்னேற்ற மன்றம் என்ற அமைப்பை உருவாக்கினர். இவ் அமைப்பு ஏறத்தாழத் தமிழரசுக் கட்சியின் எடுப்பார் கைப்பிள்ளையாகவே செயற்பட்டது. அதன் ஊடாகத் தமிழரசுக் கட்சியின் உதவியோடு அவர்கள் சலுகைகள், உத்தியோகங்கள், பதவிகள், பட்டங்கள் பெறலாயினர். இத்தகைய பதவிகள், பட்டங்கள், உத்தியோக உயர்வுகள் சமூக நலனின் ரீதியில் அன்றி சுயநல அடிப்படையிலும் கட்சிச் செல்வாக்கை தாழ்த்தப்பட்ட மக்களிடையே நிலைநிறுத்தும் நோக்குடனுமே பயன்படுத்தப்பட்டன. இதனால் குறிப்பிட்ட ஒரு சிலரின் வர்க்க சமூக அந்தஸ்துக்களில் வர்க்க வளர்ச்சி காணப்பட்டது. அத்தகையவர்கள் உள்ளூராட்சித் தேர்தல்களில்

www.padippakam.com



போட்டியிட்டு உறுப்பினர்களாகினர். யாழ். மாநாகரசபைக்குத் தெரிவாகி உதவி மேயர் பதவி பெறும் அளவுக்கு தமிழரசுக்கட்சி வாய்ப்பளித்தது. ஜி. நல்லையாவை தமிழரசுக்கட்சி தனது வாக்குச் செல்வாக்கால் சமசமாஜக் கட்சியின் உதவியுடன் செனட்சபை உறுப்பினராக்கியது. இவற்றைச் சற்று ஆழமாகப் பார்க்கும் போது தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் உருவாகி வந்த ஒரு வசதி படைத்த வர்க்கப் பிரிவைச் சேர்ந்தவர்களைத் தம்முடன் இணைத்துக் கொள்வதன் மூலம் முழுத் தாழ்த்தப்பட்ட மக்களையும் திசை திருப்பி தமது வாக்கு வங்கியை உறுதிப்படுத்த தமிழரசுக்கட்சி முனைந்து நின்றது என்று கூறுவதே உண்மையாகும்.

இவ்வாறு தமிழரசுக்கட்சி தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் தமது வர்க்க நிலைக்கு ஏற்ப ஒரு பிரிவினரைத் தேடிக்கொண்ட போதிலும் உரிமை மறுக்கப்பட்ட சாதாரண தாழ்த்தப்பட்ட மக்களின் ஆதரவைப் பெற்றது என்று சொல்லிவிட முடியாது. காரணம் தமிழரசுக் கட்சியினரின் தொகுதிகளில் அவர்களது தலைவர்களதும் பிரமுகர்களதும் கோவில்களோ தேனீர்கடைகளோ சமத்துவமாக திறந்துவிடப்படவில்லை என்பதைத் தாழ்த்தப்பட்ட மக்கள் நடைமுறையில் கண்டு கொள்ளக் கூடியதாகவே இருந்து வந்தது.

1956ல் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்காவின் தலைமையில் அமைந்த மக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் முன்னைய யூ.என்.பி. யை விட வித்தியாசமான வழிகளில் செயற்பட ஆரம்பித்தது. பதவிக்கு வருவதற்காக இனவாதத்தை ஒரு கருவியாகவும். பதவிக்கு வந்தபின் தனிச் சிங்களச் சட்டத்தை நிறைவேற்றி தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்கு விரோதமாகவும் செயற்பட்ட பாரிய இனவாதத் தவறினை பண்டாரநாயக்கா இழைத்தார். அதற்குப் பரிகாரமாக பண்டா-செல்வா உடன்படிக்கையை உருவாக்கிய போதிலும் யூ.என்.பி, தமிழரசு மற்றும் இனவாதிகளினதும் ஒத்துழைப்பின்மையாலும் தீவிர எதிர்ப்பினாலும் அதைக் கைவிடவும் நேர்ந்தது. தமிழரசுக் கட்சி ஸ்ரீ எதிர்ப்பு நடத்தியதைவிட ஒப்பந்தம் கிழிபட வசதியாக அதிகம் செய்யவில்லை. இவ் விடயம் தவிர்ந்த பொருளாதார, அரசியல், கல்வி. கலாசாரத்துறைகளில் விதேசியப் போக்கை எதிர்த்து நின்ற தேசிய உணர்வானது ஓங்குவதற்கு அன்றைய பண்டாரநாயக்க அரசாங்கம் காரணமாக அமைந்தது. தேசிய பொருளாதாரம், தேசியக்கல்வி, தேசிய மொழிகளில் உயர்கல்வி, தேசிய கலாசார முன்னுரிமை

www.padippakam.com



தேசியமயக்கொள்கைகள் போன்றன அறிமுகப்படுத்தப்பட்டன. யூஎன்.பி பின்பற்றிய விதேசிய சார்பு தரகு முதலாளித்துவக் கொள்கைகளுக்குப் பதிலாக தேசிய முதலாளித்துவக் கொள்கைகள் முன்னெழுந்து செயற்பட ஆரம்பித்தன.

இத்தகைய மாற்றங்கள் இலங்கையின் பல்வேறு வர்க்கப் பிரிவினர் மத்தியிலும் இனமொழி சமூகங்கள் மத்தியிலும் பலவகைத் தாக்கங்களை உருவாக்கின. அந்த வகையில் தீண்டாமைப் பாகு பாட்டினால் பாதிக்கப்பட்டிருந்த தாழ்த்தப்பட்ட மக்கள் மேலும் விழிப் படைந்து தமது சமூக பொருளாதார கல்வி நிலைகளில் அதிக கோரிக்கைகளை வற் புறுத்தக் கூடிய புதிய சூழல்கள் தோற்றம் பெற்றன. அத்துடன் முன்னர் ஆட்சியில் இருந்த யூ. என். பி யானது உயர்வேளாள மேட்டுக்குடி ஆதிக்க தமிழ் அரசியல் தலைவர்களின் சொற்களுக்கு மதிப்புக் கொடுத்து சாதிய வர்க்க ரீதியில் உறவாடி வந்ததினால் இடதுசாரிகளினது ஆதரவைப் பெற்ற சிறீலங்கா சுதந்திரக் கட்சியிடம் இருந்து தாழ்த்தப்பட்ட மக்கள் அதிகம் எதிர்பார்த்து நின்றமை இயல்பானதொன்றேயாகும். இதற்கு சான்று பகர்வது போல் அமைந்த ஒரு நிகழ்ச்சியே 1957ல் நிறைவேற்றப்பட்ட சமூகக் குறைபாடுகள் ஒழிப்புச் சட்டமாகும்.

இவ்விடத்தில் சமூகக் குறைபாடுகள் ஒழிப்புச் சட்டம் பற்றியும் அது நிறைவேற்றப்பட்ட தன்மை பற்றியும் சிறிது நோக்குவது பயன் தருவதாகும். அதாவது சாதி-தீண்டாமைக் கொடுமைகள் பற்றி ஒரு விசேட ஆணைக்குழு விசாரணை நடத்தவேண்டும் என்பதையும் அதன் அடிப்படையில் ஒரு தாக்கமான சட்டம் கொண்டு வரப்பட வேண்டும் எனவும் சிறுபான்மைத் தமிழர் மகாசபை ஆரம்பகாலம் தொட்டே அரசாங்கத்தை மீண்டும் மீண்டும் வற்புறுத்தி வந்தது. அவ்வற்புறுத்தலை சுதந்திரத்துக்கு முந்திய கொலனிய ஆட்சியினரோ அல்லது பிந்திய யூ.என்.பி. ஆட்சியினரோ கவனத்துக்கு எடுத்துக் கொள்ளவில்லை. காரணம் அவ் ஆட்சியாளர்கள் உயர்சாதிய ஆதிக்கத் தமிழர்களின் சாதிக் கொடுமைகளுக்கு விரோதமாகச் செல்லும் விருப்பின்றி இருந்த மையேயாகும். அதற்குக் காரணம் வர்க்க சாதிய அடிப்படையில் சிங்கள ஆளும் வர்க்க தலைமைகளும் தமிழர் மேட்டுக்குடி அரசியல் தலைமை களும் ஐக்கியப்பட்டிருந்தமையாகும். இவ் இருதரப்பினரும் கொலனிய ஏகாதிபத்திய சக்திகளுக்கு நம்பிக்கைக்குரிய விசுவாசிகளாக விளங்கி

www.padippakam.com



வந்தமை குறிப்பிடத்தக்கதாகும். ஆனால் 1956ல் முதல் தடவையாக யூ.என்.பி பாரளுமன்ற அரசியல் அரங்கில் தோற்கடிக்கப்பட்டது. எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்காவின் தலைமையில் மக்கள் ஐக்கிய முன்னணி அரசு பதவிக்கு வந்தது. அதேவேளை தமிழர்கள் மத்தியில் தமிழரசுக்கட்சி தமிழ்க் காங்கிரசை விட அதிக் இடங்களில் வெற்றிபெற்று பாராளுமன்றத்திற்கும் சென்றிருந்தது.

இந்நிலையில் அன்றைய அரசாங்கம் மகாசபையின் நீண்டநாள் கோரிக்கையான சாதி-தீண்டாமைக்கு எதிரான சட்டம் ஒன்றைக் கொண்டு வந்து நிறைவேற்றக்கூடிய சூழ்நிலை நிலவியது. எனவே அவ்வாறான நிலை ஏற்படுமானால் தமக்குப் பாதகமான ஒன்றாக அமைந்து விடும் என்பதால் அதற்கு முன்பாகவே தமிழரசுக்கட்சி தானே சமூகக் குறைபாடுகள் ஒழிப்புச் சட்டவரைபை முன்மொழிந்து தனியார் சட்டப் பிரேரணையாகப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தது. அன்றைய திருகோணமலைப் பாரளுமன்ற உறுப்பினர் ந. இ. இராஜவரோதயம் முன்மொழிய கோப்பாய் தொகுதி உறுப்பினரான கு. வன்னியசிங்கம் வழிமொழிந்தார்.

அரசாங்கத்தின் பூரண ஆதரவுடன் சமூகக் குறைபாடுகள் சட்டம் 13-4-57ல் நிறைவேற்றப்பட்டது. இலங்கையின் வரலாற்றில் தமிழர்கள் மத்தியில் பெரும் கொடுமையாக இருந்து வந்த சாதிய தீண்டாமைக்கு எதிரான சட்டம் என்ற வகையில் சமூகக் குறைபாடுகள் ஒழிப்புச் சட்டம் முக்கியத்துவம் பெற்ற அதே வேளை அச் சட்டம் மிக வும் பலவீனமானதொன்றாகவே அமைந்திருந்தது. அதன் பலவீனத் தன்மைக்கு அதைச் சட்டவரைவாகக் கொண்டு வந்த தமிழரசுக் கட்சியினரே காரணமாவர். ஏனெனில் சாதிய ஆதிக்கத்தின் மீது தாக்கம் விளைவிக்கக் கூடியதும் சாதிவெறியர்களைக் கடுமையாகத் தண்டிக்கக் கூடியதுமான வலிமை அச் சட்டத்திற்கு இருக்கவில்லை. அதாவது ஒருவர் சாதி ரீதியில் மற்றொருவருக்கு எதிராக பொது இடங்களில் பாகுபாடு காட்டியமை நீதிமன்றத்தில் நிரூபிக்கப்படும் பட்சத்தில் அவ்வாறான ஒருவருக்கு ஆறு மாதத்திற்கு மேற்படாத சிறைத் தண்டனையும். நூறு ரூபாவிற்கு மேற்படாத அபராதமும் விதிக்கவே மேற்படி சட்டம் இடமளித்தது. உண்மையில் அன்று தமிழரசுக் கட்சியினருக்கு தேவைப்பட்டது தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் பாராளுமன்ற வாக்குகளைப் பெறுவதற்கு மட்டும் போதுமான பெயரளவிலான ஒரு

www.padippakam.com



சட்டமே அன்றி வேறொன்றும் இல்லை. ஏனெனில் இச் சட்டத்தை சாதி ஆதிக்கவாதிகளும் சாதி வெறியர்களும் சிறு தூசாகக் கூட மதிக்க வில்லை. அது மட்டுமின்றி இதே சட்டம் பதினான்கு ஆண்டுகளுக்குப் பின் (வெகுஜனப் போராட்டங்களிற்குப் பின்பாக) பாராளுமன்றத்தில் **14-2-1972ல்** திருத்தப்பட்ட போது ஆறுமாதச் சிறைத் தண்டனையானது மூன்று வருடங்களாகவும், நூறு ரூபா அபராதம் மூவாயிரம் ரூபாவாகவும் மாற்றப்பட்டதில் இருந்து ஏற்கெனவே நிறைவேற்றப்பட்ட சட்டத்தின் போதாமையைப் புரிந்து கொள்ள முடியும். அதாவது சமூகக் குறைபா டுகள் ஒழிப்புச் சட்டம் உயர்த்தப்பட்டோர் மத்தியில் தாக்கத்தை ஏற்படுத்தாத விதத்திலும், தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் ஒரு கண்துடைப்பாகவும் தமிழரசுக் கட்சியால் முன்மொழியப்பட்டு நிறைவேற்றப்பட்டது,

**1956ம்** ஆண்டு காலப்பகுதியில் தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் முன்னேற்றம் அடைந்தவர்களின் ஒரு பகுதியினர் தமிழரசுக் கட்சியின் பின்னால் நின்றனர். இடதுசாரிக் கருத்துக்களை ஆதரித்தவர்களும், நடுநிலைப் போக்கில் நின்று சமூக முன்னேற்றத்தைக் கருதியவர்களும் தொடர்ந்தும் மகாசபையோடு இணைந்து நின்றனர். இக் கால கட்டத்தில் மகாசபையின் ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவரான எம்.சி. சுப்பிரமணியம் மகாசபையின் தலைவராக தெரிவு செய்யப்பட்டார். எம்.சி. அவர்கள் மகாசபையின் ஆரம்ப உறுப்பினர் மட்டுமன்றி வடபகு தியில் மு. கார்த்திகேசன் அவர்களோடு இணைந்து கம்யூனிஸ்ட் கட்சியை முதன் முதலாக அறிமுகப்படுத்தியவர்களில் ஒருவர். எம்.சி. சுப்பிரமணியம் மிகவும் கஷ்டப்பட்ட தாழ்த்தப்பட்ட குடும்பத்தில் இருந்து வந்தவர். ஆங்கிலக் கல்வியில் மெற்றிக்குலேசன் வரை படித்து சித்தி பெற்றவர். இளமைக்காலம் தொட்டு திராவிடக் கருத்துக்களால் கவரப்பட்டுப்பின் மாக்சிசவாதியாகி மிகத்துடிப்புடன் செயலாற்றி வந்த ஒருவர். தன் இள மைக் காலத்தை தாழ்த்தப்பட்ட மக்களின் விமோசனத்திற்காக அர்ப்ப ணித்து செயலாற்றி வந்தவர்.

இவ்வாறு தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் உருவாகிய இடதுசாரி-தமிழரசு ஆகிய இரு சார்பு நடவடிக்கைகள் ஐம்பதுகளின் பிற்பகுதியில் பகிரங்கமாகவே எதிர்முனைப்பட்டதைக் காணமுடியும். **1-10-1957ல்** செனட் சபைக்கு பாராளுமன்றத்தில் தெரிவு இடம்பெற்றது. மகா சபையின் சார்பில் எம். சி. சுப்பிரமணியத்தின் பெயரை அரசாங்கம் சிபார்சு செய்து தெரிவுக்காக நிறுத்தியது. எதிர்ப்புறத்திலே

www.padippakam.com



ஜி. நல்லையாவை தமிழரசுக் கட்சி நிறுத்தியது. அரசாங்கக் கட்சியும். இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியும் எம்.சி. யை ஆதரித்தன. தமிழரசுக் கட்சி சமசமாஜ கட்சியின் உதவியோடு திரு. ஜி. நல்லையாவை ஆதரித்தது. (அக் காலத்தில் சமசமாஜ-கம்யூனிஸ்ட் கட்சிகளிடையே கடுமையானவாத ப்பிரதிவாதங்களும் கொள்கை நிலைப்பாட்டு வேறுபாடு களும் இருந்து வந்தன. மேலும் வடபகுதியில் கம்யூனிஸ்ட் கட்சி வளர்வ தைத் தடுக்க தமிழ சுக் கட்சிக்கு ஆதரவு கொடுப்பது சமசமாஜ ட்ரொஸ் கிச நிலைப்பாட்டிற்கு ஏற்றதாகவும் இருந்தது.) எம்.சி. சுப்பிரமணியம் தோல்வி அடைந்தார். ஜி. நல்லையா செனட்டரானார். இச் சம்பவத்தை ஒரு பகடைக் காயாக வைத்து தமிழரசுக் கட்சி தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் தமது சைவ கிறிஸ்தவ வேளாள ஆதிக்க அரசியல் சதுரங்க விளையாட்டை நடாத்தி வந்தது.

**1956-60ம்** ஆண்டு காலப்பகுதியில் மகாசபை தாழ்த்தப் பட்ட மக்கள் சார்பாக பல்வேறு நடவடிக்கைகளில் பரவலாக ஈடுபட்டது. இக்காலப் பகுதியை மகாசபையின் உச்சக்கட்டம் என்று கூறலாம். பலதடவைகள் அரசாங்கத் தலைவர்களையும் அதிகாரிகளையும் கட்சிக ளின் தலைவர்களையும் சமூக நிலைத் தலைவர்களையும் மகாசபை சந்தித்துத் தாழ்த்தப்பட்ட மக்கள் அனுபவித்துவரும் துன்பங்களை எடுத்து விளக்கி அவற்றிற்கு நிவாரணம் கோரி வந்தது.

கல்வித் துறையில் தொடர்ந்து வரும் பாகுபாடுகளும் புறக்கணிப்புக்களும் சுட்டிக் காட்டப்பட்டன. ஆசிரிய பயிற்சிக் கலாசாலை களில் அதிகளவு ஆசிரிய மாணவர்களைச் சேர்க்கும் விசேஷ வாய்ப்பினை மகாசபை சாதித்தது. சுமார் ஐம்பது மாணவர் வரை தேர்ந்தெடுக்கப்பட் டனர். 22 பேர் பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் அனுமதி பெற்றனர். ஏனையோர் மற்றைய ஆசிரியப் பயிற்சிக் கலாசாலைகளில் அனுமதி பெற்றனர். மேலும் தாழ்த்தப்பட்ட மக்களின் கிராமங்களில் பாடசாலைகளை நிறுவ வேண்டும் என்ற கோரிக்கை மகாசபையினால் முன்வைக்கப்பட்டது. அதன் அடிப்படையில் முதன் முதலாக வசாவிளா னைச் சேர்ந்த குட்டியப்புலம் கிராமத்தில் தமிழ்க் கலவன் பாட சாலை உருவாக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து கட்டுவன்புலம், கரவெட்டி, மட்டு வில். இமையாணன், புலோலி, மந்துவில் கிராமங்களிலும் பாடசாலைகள் தாழ்த்தப்பட்ட மாணவர்களின் கல்வி வளர்ச்சியை மையமாக வைத்து திறக்கப்பட்டன. இவ்வாறு திறக்கப்பட்ட பாடசாலைகளை மக்கள்

www.padippakam.com



அழைக்கும்போது "மகாசபைப் பாடசாலைகள்" எனக் குறிப்பிடுவது நடைமுறையாயிற்று. வடபுலத்தில் இப் பாடசாலைகளின் மொத்த எண்ணிக்கை 19 ஆகும். காணிப் பங்கீட்டில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கிளிநொச்சி பிரதேசத்தில் அரசாங்கக் காணிகளைப் பெற்றுக் கொடுப்பதிலும் மகாசபை முன்முயற்சி எடுத்தது.

இக் காலகட்டத்தில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் செயற்பாடுகள் மகாசபையின் நடவடிக்கைகளுக்கு பெரும் ஊக்கமும் ஒத்துழைப்பும் வழங்குவதாக அமைந்திருந்தது. குறிப்பாகத் தோழர் பொன். கந்தையாவின் பங்களிப்பு தாழ்த்தப்பட்ட மக்களால் என்றும் ஏற்றிப்போற்றத் தக்கவாறு அமைந்திருந்தது. அவர் சொல்லிலும் செயலிலும் தாழ்த்தப்பட்ட மக்களினதும். உழைக்கும் மக்களினதும் நலன்களில் அதிக அக்கறை காட்டியவர். தோழர் பொன். கந்தையா **1956ல்** பருத்தித்துறைத் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டார். கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதிநிதியாகத் தேர்தலில் போட்டியிட்டு அவர் வெற்றி பெற்றார் என்றால் அவரது சேவை சாதாரண உழைக்கும் மக்கள் மத்தியிலும் குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியிலும் எவ்வளவு தாக்கமானதாக இருந்தது என்பதைத் தெரிந்து கொள்ள முடியும். தேர்தல் வெற்றி என்ற குறுகிய நோக்கிற்காக தனது கொள்கைகளை யோ அன்றித் தாழ்த்தப்பட்ட மக்கள் மீது கொண்டிருந்த அக்கறைகளை யோ ஒருபோதும் அவர் விட்டுக் கொடுத்ததில்லை. தனது பாராளுமன்றப் பதவியின் மூலம் அன்றைய சிறுபான்மைத் தமிழர் மகாசபைக்கும் அதன் மூலம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் ஆற்றிய சேவை அளப்பரியதாகும். சாதி வெறியும், தீண்டாமைக் கொடுமைகளும் மலிந்திருந்த அந்த நாட்களில் குறிப்பாக வடமராட்சிப் பகுதிகளில் துணிவோடு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சேவை செய்தவர் தோழர் கந்தையா. மகாசபை பாடசாலை களை முன்னெடுப்பதற்கும், கல்வி வசதிகளைப் பின்தங்கிய தாழ்த்தப்பட்ட மக்களின் பிரதேசங்களில் விருத்தி செய்யவும் அம்மக்கள் மத்தியில் இருந்து ஆசிரியர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் இன்னும் பிறதுறைகளிலும் தோழர் பொன். கந்தையா ஆற்றிய பணிகள் பிரமிக்கத் தக்கவையாகும். அவரின் நாமத்தை இன்றும் வடமராட்சிப் பகுதிக் கிராமங்களில் பசுமை நினைவோடு மக்கள் நினைவு கூர்வதை அவதானிக்க முடியும். அது மட்டுமன்றி தாழ்த்தப்பட்ட மக்களின் நலன்களை ஆதரித்து நிற்கக்கூடிய

www.padippakam.com



உயர்த்தப்பட்டோர் மத்தியிலிருந்து முற்போக்காளர் பலரை பொன். கந்தையா உருவாக்கி இருந்தமை அவரது இலட்சிய ஆளுமையை எடுத்துக்காட்டியது. தோழர் பொன். கந்தையா பாராளுமன்றத்திற் குள்ளும் வெளியிலும் தாழ்த்தப்பட்ட மக்களின் அவல நிலை வாழ்வு மாற றப்பட வேண்டும் என்பதற்காகப் போராடிவந்த ஒரு நேர்மையான கம்யூனிஸ்ட் என்பதை இன்றைய இளம் தலைமுறையினர் தெரிந்திருப்பது அவசிய மாகும். தோழர் பொன். கந்தையா ஒரு கம்யூனிஸ்ட் என்ற வகையில் தாழ்த்தப்பட்ட மக்களின் பிரச்சினைகளை மட்டுமன்றி முழுத்தமிழர்களுக் கும் எதிராக இன ஒடுக்குமுறை முன் தள்ளப்பட்ட ஆரம்ப நாட்களில் அதற்கெதிராக உறுதியாகக் குரல் கொடுத்து நின்றவர் என்பதும் நினைவு கொள்ளப்பட வேண்டியதாகும்.

மேலும் மகாசபையினர் தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் சத்தியப்பிரமாண ஆணையாளர் பதவிகள் வழங்கப்பட வேண்டுமென அன்றைய உள்நாட்டு அமைச்சரைச் சந்தித்து கேட்டுக் கொண்டனர். அமைச்சர் அவ் வேண்டுகோளை ஏற்று ஜே. ஞானப்பிரகாசம் (இளைப் பாறிய புகையிரத நிலைய அதிபர்) எம்.எஸ். சீனித்தம்பி, இ.வி. செல்வ ரட்ணம், எஸ். ஜேம்ஸ் (மட்டக்களப்பு நகரசபை உபதலைவர்) ஆகியோ ருக்கு மேற்படி பதவிகள் வழங்கப்பட்டன. தாழ்த்தப்பட்டோர் என்ற வகையில் முதன் முதலாக இப்பதவிகள் மேற்கூறியோருக்கு வழங்கப்பட் டமை குறிப்பிடத்தக்க நிகழ்வாகும்.

இதே பதவி வழங்கல் அடிப்படையில் இரண்டாவது தடவை யாக எஸ். அப்புத்துரை (மானிப்பாய்) கே. தவசிப்பிள்ளை (மட்டுவில்). எஸ்.ஆர். ஜேக்கப் (உடுவில்) எம். ஆறுமுகம் (வேலணை). என்.ரி. செல்ல த்துரை (யாழ்ப்பாணம்) ஆகிய ஐவரும் சத்தியப்பிரமாண ஆணையாளர் களாக நியமனம் பெற்றனர். யோவேல் போல் சமாதான நீதிபதியாக நியமனம் பெற்றார். இச்சந்தர்ப்பத்தில் வேலணையில் நடைபெற்ற ஒரு சம்பவம் கவனத்திற்குரியதாகும். மேற்கூறிய சத்தியப்பிரமாண ஆணையா ளர்கள் பதவி நியமனத்திற்கு அவ்வப்பகுதி விதானைமார்களின் சிபாரிசு தேவையானதாகும். இவ்வாறு வேலணையைச் சேர்ந்த எம். ஆறுமுகம் என்பவருக்கு அப்பகுதிச் சாதி வெறியரான விதானை சிபாரிசு செய்ய மறுத்துவிட்டார். அன்றைய பருத்தித்துறை பாராளுமன்ற உறுப்பினரான கம்யூனிஸ்ட் கட்சித் தோழர் பொன். கந்தையாவும் இப் பிரச்சினையை அரசாங்க அதிபரின் கவனத்திற்குக் கொண்டு வந்தார். அரசாங்க அதிபர்

www.padippakam.com



மேற்படி விதானையை அழைத்து தோழர் கந்தையாவும் உடன் இருக்க ஏன் ஆறுமுகத்திற்கு சிபாரிசுக் கடிதம் கொடுக்கவில்லை என்று வினா வினார். அதற்கு அவ்விதானை, ஆறுமுகம் மரமேறுபவர் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர் என்பதற்காகவே சிபாரிசு செய் யவில்லை என்று பகிரங்கமாகவும் திமிர்த்தனமாகவும் பதில் கூறினார். அப்பொழுது தோழர் பொன். கந்தையா மிகவும் ஆத்திரமடைந்து இதை விடக் கேவலமான முறை எங்கிருக்கிறது எனக் கேள்வி எழுப்பினார். அவரை அரசாங்க அதிபர் ஸ்ரீ காந்தா அமைதிப்படுத்தி அவ்விடத்தில் வைத்தே சிபாரிசுக் கடிதத்தைப் பெற்று மேற்படி நியமனத்தை வழங்கினார்.

**20-10-1958** மகாசபை தேனீர்க்கடைப் பிரவேசப் போராட்டத்திற்கான அறைகூவல் பிரசுரத்தில் **தலைவர்** எம்.சி. சுப்பிரமணியம், இணைச் செயலாளர்கள் இ.வே. செல்வரட்ணம், க. பசுபதி ஆகியோர் கையெழுத்திட்டிருந்தனர். அத்துண்டுப் பிரசுரத்தில் **மார்கழி 13ம் திகதிக்கு** முன்பு சகல தேனீர்க் கடைகளும் **தாழ்த்தப்பட்ட** மக்களுக்கு சமத்துவ மாகத் திறந்துவிடப்பட வேண்டும் என்றும் தவறின் அன்றைய தினம் யாழ் நகரத் தேனீர்க் கடைகளின் முன் சத்தியாக்கிரகம் நடத்தப்படும் என்றும் அதன் பின் ஏனைய நகரங்கள் கிராமங்களுக்கும் விரிவுபடுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி மகாசபையின் அறைகூவல் வடபகுதியில் சாதி ஆதிக்கம் கொண்டவர்களுக்கும் அவர்களது அரசியல் கட்சிகள் சமூக அமைப்புகளிடையேயும் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தியது. மகாச பையின் நடவடிக்கைகளுக்கு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி உறுதியான ஆதரவைத் தெரிவித்து வழிகாட்டி நின்றது.

மேற்படி மகாசபையின் அறை கூவலை ஏற்று முதன் முத லாக யாழ்ப்பாண நகரின் ஆரியகுளம் சந்தியில் மலையாள வம்சாவழியின ரான கோவிந்தபிள்ளை என்பவர் தனது தேனீர்க் கடையை தாழ்த்தப் பட்ட மக்களுக்கு சமத்துவமாகத் திறந்து விட முன்வந்தார். எம்.சி. சுப்பிரமணியம் தலைமையில் மேற்படி தேனீர்க்கடைப் பிரவேசம் சுமுகமான முறையில் நடந்தது. இதைத் தொடர்ந்து மற்றொரு மலையாள வம் சாவழியினரான சங்கரன் நகர மத்தியில் இருந்த தனது சுபாஸ் கபே என்ற தேனீர்-உணவகத்தில் சமத்துவம் கொடுக்க முன்வந்தார்.

இந்நிலையில் தமிழரசுக் கட்சி சகல தேனீர்க் கடை உரிமை யாளர்களையும் அழைத்து மாநாடு நடாத்தி சமத்துவமாகத் திறந்து

www.padippakam.com



விடும்படி வேண்டிக்கொண்டது. சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த அ. விசுவநாதன் யாழ் மாநகரசபையில் தீர்மானம் கொண்டு வந்தார். அது நிறைவேறியது. வை.சி.சி.கு. தேனீர்க்கடையும் யாழ். புகையிரத நிலையம் முன்பான கடைகள் உட்படப் பல தேனீர்க் கடைகளும் உணவகங்களும் ஒன்றன் பின் ஒன்றாக சமத்துவத்திற்குத் திறந்து விடப்பட்டன.

**7-12-1958ல்** யாழ். ஸ்ரான்லி (இன்றைய கனகரத்தினம் மகா வித்தியாலயம்) கல்லூரியில் திரு. எம்.சி. சுப்பிரமணியம் தலைமையில் சர்வகட்சி மாநாடு நடைபெற்றது. இம் மாநாட்டில் தமிழ்க் காங்கிரஸ் தவிர்ந்த சகல கட்சிகளும் கலந்துகொண்டன. மகாசபை முன்வைத்த சத்தியாக்கிரகத்திற்கு அவசியம் இல்லை என்றும் சூழ்நிலை சாதகமாக மாறிவருவதாகவும் சுட்டிக் காட்டப்பட்டது. எனவே **மார்கழி 13ம்** திகதியை சிறுபான்மைத் தமிழர் தினமாகக் கொண்டாடுவது என்றும் அன்று யாழ் நகரத்தில் கூட்டம் நடத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டது. இக் கூட்டத்தில் ஹன்டி பேரின்பநாயகம், எஸ்.கே. வேலாயுதபிள்ளை, டாக்டர் வி.ரி. பசுபதி, முன்னாள் செனட்டர் பி. நாகலிங்கம், அ.அமிர்தலிங்கம், வ. பொன்னம்பலம் முதலியோர் உரையாற்றினர். தாழ்த்தப்பட்ட மக்கள் நகரத்தின் தேனீர்க்கடைகளில் தமிழர் வரலாற்றில் முதல் தடவையாக **1958ன்** இறுதி மாதத்தில் சமத்துவம் பெற்றனர். அச் சமத்துவம் என்பது கூட உடனடியாகப் பயன் தந்ததாகக் கூற முடியாது. உள்ளார்ந்த பாகுபாடுகள் வேண்டாவெறுப்பு மற்றும் மனத்தடைகளுடனேயே தாழ்த்தப்பட்டோர் என அடையாளம் காணப்பட்டோர் நடாத்தப்பட்டனர். எனவே அச் சமத்துவம் முழுமை பெற மேலும் போராட வேண்டியே இருந்தது. அதேவேளை யாழ். நகரம் தவிர்ந்த ஏனைய சிறு நகரங்களிலோ, கிராமங்களிலோ நிலைமைகள் பழைய நிலையிலேயே இருந்தன.

இவ்விடத்திலே ஒரு முக்கிய விடயத்தைச் சுட்டிக்காட்டுவது அவசியமாகிறது. யாழ்ப்பாண நகரம் இலங்கையின் பிரதான நகரங்களில் ஒன்றாகும். கொலனியவாதிகள் தமக்கு ஏற்றவாறு இந் நகரத்தை நிர்மாணித்திருந்தனர். சுதந்திரத்திற்குப் பின்னான காலத்தில் இந் நகரம் மேலும் முக்கியத்துவம் பெற்றதுடன் குறிப்பிடத்தக்க முதலாளித்துவ அம்சங்களை வளர்ச்சியாகவும் கொண்டிருந்தது. எனவே அந்த வளர்ச்சிக்கு ஏற்றவாறு நகர பொருளாதார கல்வி பண்பாட்டம்சங்களில் மாற்றங்கள் உருவாகி வந்தன. அவற்றின் நடுவே தீண்டாமை என்பது ஒரு

www.padippakam.com



கரும்புள்ளியாக இருப்பதை கல்வி கற்றோர் விரும்பவில்லை. அதனாலேயே யாழ் நகரின் மத்தியில் அமைந்திருந்த பிரதான கோவில்களிலும் அதனைத் தொடர்ந்து நகர தேனீர்க்கடை- உணவகங்களிலும் தீண்டாமை தொடர்வதை கல்வி பெற்ற உயர் சாதிய கனவான்கள் விரும்பவில்லை. இது அவர்களது முதலாளித்துவ சிந்தனைக்கு உட்பட்ட நல்லெண்ணமாகவே வெளிப்பட்டது.

ஆனால் சிறு நகரங்களை உள்ளடக்கிய கிராமங்களில் நிலவுடைமைக் கருத்தியல் சிந்தனை இருந்து வந்தது. ஆதலினாலேயே அறுபதுகளில் சங்கானை நெல்லியடி கொடிகாமம் அச்சுவேலி போன்ற சிறு நகரங்களில் தேனீர்கடைப் போராட்டங்களையும் மாவிட்டபுரம், பன்றித்தலைச்சி அம்மன் போன்ற கிராமப் பெருங் கோவில்களிலும் கடுமையான போராட்டங்களை நடாத்தி நிலவுடைமை ஆதிக்கத்தை உடைக்க வேண்டிய நிலை ஏற்பட்டது, இதன் அடிப்படையிலேயே வடபுலத்தின் சாதிய தீண்டாமைக்கு எதிரான போராட்டங்களின் வளர்ச்சியைக் காண முடியும்.

மகாசபையின் மேற்படி நடவடிக்கைகளின் போது அதன் முக்கிய தலைவர்களாக எம்.சி. சுப்பிரமணியம், இ.வி. செல்வரட்னம், க.பசுபதி, கே. டானியல், வேதநாயகம் போல், சி.ஈ. குணரட்ணம், டி. ஜேம்ஸ் போன்றோர் பிரதான செயற்பாட்டாளர்களாக இருந்தனர். இவர்க ளின் ஊக்கம் மிக்க செயற்பாடுகள் அன்றைய சந்தர்ப்பத்தில் முக்கியத்துவம் மிக்க பங்களிப்பாக விளங்கியது.

**1960 மார்ச்** மாதத் தோர்தலில் யூ.என்.பி வென்றது. ஆனால் பெரும்பான்மை போதாது. **எனவே 1960ம் ஆண்டு ஜூன் மாதம்** இடம்பெற்ற தேர்தலில் மீண்டும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சிக்கு வந்தது. முன்னைய தடவை போல் பல சலுகைகளை மகாசபை அவ் அரசாங்கத்தின் மூலம் எதிர்பார்த்தது. பதினொரு மகாசபைப் பாடசாலைகளையும் அவற்றில் கல்வி கற்பித்த 1990 ஆசிரியர்களையும் அரசு முழுமையாகப் பொறுப்பேற்றுக் கொண்டது. **1961ல்** மீண்டும் எம். சி. சுப்பிரமணியம் செனட் சபைக்குச் செல்ல அரசாங்கத்தினூடாக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதிலும் அவரால் வெற்றி பெற இயலவில்லை.

ஒரு புறத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கான சில உரிமைகளையும் சலுகைகளையும் மகாசபை பெருமளவு சமாதான வழிகளில் பெற்று வந்த அதேவேளை மறுபுறத்தில் சாதி ஆதிக்கவாதிகளும் சாதி

வெறியர்களும் ஒன்றிணைந்து தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிராகக் கொடுமைகள் புரிந்து வந்தமை தொடரவே செய்தது. இவர்கள் தாழ்த்தப் பட்ட மக்களுக்கு எதிராக இழைத்து வந்த கொடூரங்களை ஒவ்வொரு கிராமத்திலும் காணக்கூடியதாக இருந்தன. அவற்றை மகாசபை அம்பலப் படுத்தி அரசாங்க பொலீஸ் உதவிகோரி நின்றதே தவிர அவர்களை எதிர்த்து அமைப்பு ரீதியான போராட்டம் எதுவும் அக்காலங்களில் முன் னெடுக்கப்படவில்லை. சில கிராமங்களில் தானெழுந்தவாரியாக எதிர்ப் புணர்வு, ஐக்கியம், பலம் என்பவற்றின் அடிப்படையில் மக்களில் சிலர் போராடி இருப்பினும் அவை அமைப்பு வழியிலான சமூக அரசியல் வடிவங் களைப் பெறவில்லை. அதற்கு அடிப்படைக் காரணம் போராட்ட வழிமுறை யில் சரியான அரசியல் தலைமைத்துவம் கொடுக்கப்படவில்லை என்பதே யாகும்.

அன்று மகாசபையின் பின்னால் கம்யூனிஸ்ட் கட்சியே முக் கிய ஆலோசனை சக்தியாக இருந்து வந்தது. கம்யூனிஸ்ட் கட்சி அன்று தாழ்த்தப்பட்ட மக்களின் வர்க்க நிலை, சமூக அந்தஸ்து மறுக்கப்பட்ட உரிமைகள் என்பனவற்றின் மீது அதிக அக்கறை காட்டி வந்தது. இது மற்றெல்லா அரசியல் கட்சிகளையும் விட ஒப்பீட்டளவில் பெரும் வித் தியாசத்தைக் கொண்டிருந்ததும் உண்மையே. ஆனால் அப்பிரச்சி னையை அணுகிய முறை சீர்திருத்தவாத பாராளுமன்ற கண்ணோட்டத் திலேயே அமைந்திருந்தது. அதாவது தேர்தல்களை மையமாகக் கொண்ட அரசியல் வேலை முறைகளால் வாக்குகளைப் பெறுவதில் அதிகம் கவனம் செலுத்தவேண்டிய நிலையில் அன்றைய கம்யூனிஸ்ட் கட்சி இருந்தது. உயர்த்தப்பட்டோர் என்போரிடத்திலும் தேர்தலுக்கான வாக்குகளை எதிர்பார்த்த காரணத்தால் தாழ்த்தப்பட்ட மக்களை ஒரு நிதானமான போராட்டத்தில் வழிநடத்த முடியாத நிலையிலேயே அன்றைய கம்யூனிஸ்ட் கட்சி இருந்து வந்தது. இத்தகைய உள்ளார்ந்த அரசியல் பலவீனமே மகாசபையின் தீவிரமற்ற அல்லது நேரடிப் போராட்டமற்ற மிதவாத செயற்பாட்டிற்கு அடிப்படைக் காரணமாக அமைந்திருந்தது.

இருந்தாலும் மகாசபை ஒன்றே அக் காலகட்டத்தின் சகல தாழ்த்தப்பட்ட மக்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் பலம்மிக்க அமைப்பாக இருந்துவந்தது. அதில் கம்யூனிஸ்டுக்கள். சமூக அக்கறையாளர்கள், காந்தியவாதிகள் மற்றும் சீர்திருத்தக் கருத்துக்கள் கொண்டோர் அங்கம் பெற்றிருந்தனர். இருந்தபோதும்

www.padippakam.com



தமிழரசுக்கட்சியினர் மகாசபையை கம்யூனிஸ்ட் மகாசபை என்றே வர்ணித்து வந்தனர். அவ்வாறு பிரசாரம் செய்வதன் மூலம் தமக்காக வக்காலத்து வாங்கும் விசுவாச சக்திகளை தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் ஒன்றிணைக்க முயன்றனராயினும் அவர்களால் அதில் வெற்றிபெற இயலவில்லை.

**1962ம்** ஆண்டு முற்பகுதியில் தாழ்த்தப்பட்ட மக்களின் பிரச்சினைகளை உள்ளடக்கிய பத்தாண்டுத் திட்டம் ஒன்று மகாசபையால் தயாரிக்கப்பட்டது. அத்திட்டம் அரசாங்கத்திற்கும் ஏனைய அமைப்புகளுக் கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் சகல அரசியற் கட்சிகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டது.

அதே ஆண்டு நடுப்பகுதியில் கரவெட்டி கிழக்கு கிராமத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கெதிரான தாக்குதல்கள் தொடுக்கப்பட்டன. அப்பகுதி கிராம முன்னேற்றச் சங்கத்தில் அங்கத்துவம் கோரித் தாழ்த்தப்பட்ட மக்களில் சிலர் மனுச் செய்ததே அத் தாக்குதல்களுக்கான பிரதான காரணியாகும். 'அந்தளவுக்கு நீங்கள் வந்திட்டியளோடா' என் பதே சாதி வெறியர்களின் பிரதான கேள்வியாக இருந்தது. சாதிவெறிய ர்கள் தொடுத்த தாக்குதல்களுக்குப் பொலிஸ் ஆதரவளித்து கண்டும் காணாததுபோல் நடந்துகொண்டது. தாழ்த்தப்பட்ட மக்களின் வீடுகள் சில எரிக்கப்பட்டன. பலர் மிகமோசமாகத் தாக்கப்பட்டு இரத்தக் காயங்களு டன் கவலைக்கிடமான முறையில் இருந்தனர். அதேவேளை கரவெட்டி கிழக்கு தாழ்த்தப்பட்ட மக்கள் சாதி வெறியர்களை எதிர்த்து நிற்பதில் முடிந்தளவிற்கு தமது ஐக்கியத்தையும் பலத்தையும் காட்டி நின்றனர். மகாசபையின் முக்கிய உறுப்பினரான ஆசிரியர் எம். செல்லத்தம்பி கடுமை யான தாக்குதல்களுக்கு உட்பட்டுக் காயமடைந்தார். பத்துக்கும் அதிகமா னோர் குற்றஞ்சாட்டப்பட்டுக் கைதுசெய்யப்பட்டனர். அதில் மகாசபை உறுப்பினர் ஆ. தில்லையம்பலமும் ஒருவராவர்.

இவ்வாறு கரவெட்டியில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிராக இடம்பெற்ற தாக்குதல்களைச் சாட்டாக வைத்து தாழ்த்தப்பட்ட மக்களி டையே மதமாற்றம் செய்விக்கும் புதியதோர் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அதன் ஒரு அம்சமாகப் பின் வரும் பௌத்த பாடசாலைகள் வடபுலத்தில் உருவாக்கப்பட்டன. கரவெட்டி- ஸ்ரீ நாரதா வித்தியாலயம், புத்தூர்- பன்யாசீக வித்தியாலயம், அல்வாய்- சேமகே வித்தியாலயம். அச்சுவேலி- ஸ்ரீ விபசீ வித்தியாலயம் என்பன

www.padippakam.com



உருவாக்கப்பட்டன. பூநகரியிலும் ஒரு பாடசாலை உருவாக்கப்பட்டது. இதனை வட இலங்கை பௌத்த சங் கமே செயற்படுத்தியது.

இப்பாடசாலைகளில் ஆசிரியர்கள் ஆரம்பத்தில் இலவசமாகவே கல்வி கற்பித்தனர். அவர்கள் எதிர்காலத்தில் அரசாங்கம் அப் பாடசாலைகளைப் பொறுப்பேற்கும்போது அரசாங்க ஆசிரியர்களாக அங்கீகரிக்கப்படுவார்கள் என்ற நம்பிக்கையில் கஷ்டங்களின் மத்தியிலும் கல்வி கற்பித்து வந்தனர். இவ் வட இலங்கை பௌத்த சங்கத்தின் தலைவரான மானிப்பாய் ஆசிரியர் வைரமுத்து தன்னையும் பௌத்தராக மதம் மாற்றிக் கொண்டு கூடியளவு சலுகைகளை தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் பின்தங்கிய கிராமங்களில் மதமாற்ற நடவடிக்கைகளைச் செய்தும் வந்தார். 100 மாணவர்களைச் சேர்த்து தென்னிலங்கைக்கு அனுப்பி உயர் கல்விக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அவ்வாறு அனுப்பப்பட்ட மாணவர்கள் அங்கு உள்ள சூழ்நிலைகளுக்குத் தாக்குப்பிடிக்க முடியாது சிறிது காலத்தில் திரும்பவேண்டி ஏற்பட்டது. இருப்பினும் வைரமுத்து ஆசிரியர் தலைமையிலான பௌத்த சங்கம் தனது செயற்பாட்டைத் தொடர்ந்தது. ஆனால் எதிர்பார்த்த அளவுக்கு அதனால் பலாபலன்களைப் பெற முடியவில்லை.

இவ்வாறு பௌத்த சங்கம் உருவாக்கப்பட்டமையை அல்லது மதமாற்ற நடவடிக்கைகளை கம்யூனிஸ்ட் கட்சியோ அல்லது மகாசபையோ சரியான நடவடிக்கையென ஒருபோதும் ஏற்றுக்கொள்ளவில்லை. உரிமை மறுக்கப்படும், இரண்டாம் தரமாக நடாத்தப்படும் தாழ்த்தப்பட்ட மக்கள் மதம் மாறுவதால் சாதிய தீண்டாமைப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது என்பதே அவர்களது நிலைப்பாடாக இருந்து வந்தது.

இப் பௌத்த மதமாற்ற முயற்சி வடபகுதியில் உள்ள சாதிவா திகள் சாதிவெறியர்கள் மத்தியில் கடும் கோபத்தைக் கிளப்பிய போதிலும் தங்களது தீண்டாமை நடவடிக்கைகளின் விளைவாகவே இந்நிலை தோன்றியது என்று சுட்டிக்காட்டப்பட்டபோது அவர்கள் மௌனஞ் சாதித்தனர். அதேவேளை நல்லெண்ணம் கொண்ட சில இந்துமதப் பெரியார்கள் என்போர் உண்மையிலேயே தமது இயலாமைக்கு வருந்த வேண்டிய நிலை உருவாகியது.

வடபுலத்தில் மேற்படி பௌத்த சங்கம் உதயமாவதற்கு முன்பே வடமராட்சி அல்வாய்க் கிராமத்தில் தாழ்த்தப்பட்ட மக்களில் ஒரு

படிப்பகம்

www.padippakam.com



பகுதியினர் ஆசிரியர் க. முருகேசு தலைமையில் பௌத்த மதத்திற்கு மாறிய சம்பவம் இடம் பெற்றது. **27-05-1953ல்** "எல்லோரும் வாருங்கள்! புத்த மதமே நமக்குக் கதி அளிக்கும்!!" என்னும் தலைப்பில் அத்துண்டுப் பிரசுரம் அமைந்திருந்தது. அல்வாய் முத்துமாரியம்மன் ஆலயத்தில் தாழ்த் தப்பட்ட மக்கள் அனுமதிக்கப்படாத சூழலிலேயே மேற்படி பௌத்த மத மாற்றம் இடம் பெற்றது. டாக்டர் அம்பேத்கரைப் பின்பற்றித் தாழ்த்தப் பட்ட மக்கள் பௌத்தர்களாக மாறுவதையே மேற்படி முயற்சி எடுத்துக் காட்டியது. இதற்கு தலைமை தாங்கிய ஆசிரியர் முருகேசு மஞ்சள் ஆடை அணியுமாறும் பௌத்த நடைமுறைகளைப் பின்பற்றுமாறும் அழைப்பு விடுத்தார். தனது இல்லத்திற்கு "சித்தாத்தரகம்" எனவும் பெயர் வைத்துக் கொண்டார். தாழ்த்தப்பட்ட மக்களை இத்தகைய முயற்சிகளுக்கு இட்டுச் சென்றமைக்கான காரணம் அவர்கள் மத்தியில் நிலவி வந்த சாதிய ஒடுக்குமுறையும் தீண்டாமையுமேயாகும்.

புத்தூரில் பெரும் சொத்துடைமை பெற்ற மழவராயரின் பாடசாலையான ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரியில் தாழ்த்தப்பட்ட மாணவர்கள் அனுமதிக்கப்படாத நிலையே நீடித்து வந்தது. அரசாங்கம் பாடசாலைகளைத் தேசியமயமாக்கிப் பதினைந்து ஆண்டுகளுக்குப் பின்பே அதாவது **1976லேயே** அங்கு அனுமதி கிடைத்தது. இச் சூழலிலே புத்தூரில் பௌத்த பாடசாலை **1964ல்** உருவாக்கப்பட்டமை நியாயப்படுத்தப்பட்டது. இதற்கு மறுப்பாகச் செய்திருக்க வேண்டிய நடவடிக்கை ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரியில் தாழ்த்தப்பட்ட மாணவர்களை உடன் அனுமதித்திருக்க வேண்டும். அப்படிச் செய்திருந்தால் உடனடியாகவே புத்தூரில் உருவாக்கப்பட்ட பௌத்த பாடசாலையை மூடியிருக்க முடியும். ஆனால் அவ்வாறு செய்ய எவரும் முன்வரவில்லை. அதற்குப் பதிலாக அன்றைய தமிழரசுக் கட்சியின் கோப்பாய் தொகுதி பாராளுமன்ற உறுப்பினராக இருந்த சி. கதிரவேலுப்பிள்ளையால் புத்தூர் கிழக்கில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஸ்ரீ முருகன் தமிழ்ப் பாடசாலை என்ற ஒன்றை ஆரம்பித்துவைத்த வேடிக்கை மிக்க வேலையைத்தான் செய்யமுடிந்தது. சாதிய, தீண்டாமைப் பிரச்சனையில் தமிழசுக்கட்சியினரின் இரட்டை வேடத்திற்கு இதைவிட வேறு உதாரணம் தேவையில்லை.

**1962ம்** ஆண்டு நடுப்பகுதியில் சாதி வேறுபாடு தீண்டாமை என்பனவற்றை ஒழிப்பதற்கான பல்வேறு சமூக அமைப்புக்களை கட்சிக

www.padippakam.com



ளைச் சேர்ந்தோரை ஒன்றுகூட்டிய ஒரு அமைப்பில் மகாசபை சார்பாக எம்.சி. சுப்பிரமணியம், கே. டானியல். கவிஞர் கே. பசுபதி ஆகியோர் அங்கம் வகித்தனர். இதே காலப்பகுதியில் சாதிக்கொடுமைகளை ஒழிப் பதற்கு ஒரு தனியான விசாரணைக் குழு நியமிக்கும்படி வேண்டுகோள் விடப்பட்டது. இக்குழு நியமிப்பது சம்பந்தமாக அன்றைய செனற்சபை உறுப்பினர் ஆனந்த தசநாயக்காவை மகாசபை சார்பில் திருவாளர்கள் கே. டானியல், இ.வே. செல்வரட்ணம், கே. பசுபதி ஆகியோர் நேரில் சந்தித்து விரிவான விளக்கத்தை அளித்தனர். அதன் அடிப்படையில் செனட் சபையில் ஆனந்த தசநாயக்கா ஒரு பிரேரனை கொண்டு வந்தபோது அது ஏகமனதாக நிறைவேறியது. ஆனால் அவ்வாறான ஒரு விசாரணைக் குழு என்றுமே நியமிக்கப்படவில்லை. இதற்குக் காரணம் "கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றி மூத்த குடித்" தமிழர்களின் பிரதிநிதிகளான தமிழ்த் தலைவர்களின் மறைமுக செயற்பாடேயாகும். ஏனெனில் அவ்வாறன ஒரு விசாரனைக் குழு நியமிக்கப்பட்டால் சாதியத்தையும் தீண்டாமையும் அதனால் பாதிக்கப்பட்ட மக்களையும் பற்றிய ஏராளம் உண்மைகள் வெளிக்கொண்டுவரப் பட்டுவிடும் என்ற அச்சமே அடிப்படையானதாகும்.

**1964ம்** ஆண்டில் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சிக்குள் அரசியல்-சிந்தாந்த-நடைமுறைப் பிரச்சினைகளில் தீர்த்துக்கொள்ள முடியாத அளவுக்கு பிளவு ஏற்பட்டது. பீற்றர் கெனமன், எஸ்.ஏ. விக்கிரம சிங்ஹ முதலியோர் சமாதானப் பாராளுமன்றப் பாதையை வலியுறுத்தினர். புரட்சிகரப் போராட்டப் பாதை காலங்கடந்தது எனக் கூறி நின்ற க்ருஷ்சோவ் தலைமையிலான சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் திரிபுவாத மார்க்கத்திற்கு ஆதரவு வழங்கினர். அதேவேளை நா. சண்முகதாசன், பிரேம்லால் குமாரசிறி போன்றோர் தலைமையில் புரட்சிகரப் பாதை முன்னெடுக்கப்படுவது வலியுறுத்தப்பட்டது. இப் புரட்சிகர மார்க்கத்தை நிலைப்படுத்தி சீனக் கம்யூனிஸ்ட் கட்சி முன்னெடுத்து வந்த தர்க்கங்க ளையும் தத்துவார்த்த நிலைப்பாட்டையும் இவர்கள் ஆதரித்தனர். இவ்விரு பிரிவினரும் ஈற்றில் பிளவடைந்து இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகளாயினர். இக்கட்சிகளின் சர்வதேச சார்பு நிலையைப் பிரசாரப்படுத்திய பத்திரி கைகள் 'சோவியத் சார்பு' 'சீன சார்பு' என்ற நாமத்தையும் சூட்டிவிட்டன.

சிறுபான்மைத் தமிழர் மகாசபையில் இருந்து வந்த கம்யூனிஸ்டுக்கள் இவ்வாறு இரண்டாகப் பிளவடைந்ததால் நடுநிலையாக

www.padippakam.com



இருந்த பலர் ஒதுங்கிக் கொண்டனர். எம்.சி. சுப்பிரமணியமும் அவரைச் சார்ந்தோரும் மகாசபையை "சோவியத் சார்பு" நிலையில் வைத்திருக்கவே முனைந்தனர். இதனால் "சீன சார்பு" எனப்பட்டவர்கள் மகாசபையை விட்டு வெளியேறினர். அவர்களில் முக்கியமானவர்களாக கே. டானியல், க. பசுபதி, என்.கே. ரகுநாதன், மா. செல்லத்தம்பி, கே. தங்கவடிவேல், மு. முத்தையா, வ. சின்னத்தம்பி, வே. கதிர்காமு, ஆ. தில்லையம்பலம் போன்றோர் இருந்தனர். ஆதரவு நிலையில் இருந்த இளைஞர்கள் பலர் மகாசபைக்கான தமது ஆதரவை நிறுத்தினர்.

மேற்படி கட்சியின் பிளவிலும் அதன் பிரதிபலிப்பான மகாசபைப் பிளவிலும் அதிகளவிலான இளம் சக்திகள் மேற்கூறிய "சீன சார்பு" பக்கமே அணிதிரண்டனர் என்பது முக்கியமானதாகும். அதற்கு முக்கியமான காரணம் புரட்சிகரக் கொள்கையும் தீவிர அரசியல் நிலைப் பாடுகளுமேயாகும். மகாசபையை விட்டு வெளியேறியவர்கள் உடனடியாக தனி அமைப்பு ஒன்றை தோற்றுவிக்கவில்லை. புரட்சிகரக் கருத்துக்களு டன் செயற்பட முன்வந்த கம்யூனிஸ்ட் கட்சியே அதற்குக் காரணமாகும். அதாவது தாழ்த்தப்பட்ட மக்கள் அடிப்படையில் வர்க்க ரீதியான சக்தி என்பதையும் அவர்களது பிரச்சினைகளுக்கான போராட்டத்தைக் கட் சியே முன்னெடுத்துச் செல்லவேண்டும் என்ற நோக்கமும் கருத்தும் அவ்வேளை வலுப்பெற்று வந்தது. இந்த நோக்கத்தின் வெளிப்பாடு **1963ம்** ஆண்டில் கட்சி பிளவடைவதற்கு முன்பே இடம்பெற்றது. **1963ம்** ஆண்டு நடுப்பகுதியில் நீர்வேலிக் கிராமத்தில் சாதிவெறியர்கள் தாழ்த்தப்பட்ட மக்களின் வீடுகளுக்கு தீவைத்து பலரைத் தாக்கிக் காயம் விளைவித்திருந்தனர். அதற்கு எதிராக மகாசபை வெறும் அறிக்கை யோடும் மகஜரோடும் மட்டுமே நின்றது. இதற்கு எதிராக ஒரு ஊர்வ லத்தை யாழ். நகரில் ஒழுங்குபடுத்துவதில் அன்றைய கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கம் முன்னணியில் நின்றது. அவ் ஊர்வலத்திற்கான முடிவை எடுப் பதிலும் அதை வெற்றிகரமாக நடத்துவதிலும் அன்றைய வாலிப இயக்க த்தின் வடபிரதேசச் செயலாளராக இருந்த தோழர் கே.ஏ. சுப்பிரமணியம் முக்கிய பாத்திரம் வகித்தார். அன்றைய கட்சித் தலைவர்கள் பலர் இவ் ஊர்வலத்தில் கலந்து கொள்ளவில்லை. காரணம் அரசியல் கருத்து வேறுபாடு மட்டுமன்றி சாதியப் பிரச்சினைக்குத் தனி ஊர்வலமும் தனிக் கூட்டமும் அவசியம் இல்லை என்ற சந்தர்ப்பவாத நிலைப்பாடுமாகும். யாழ் நகரத்தில் இடம் பெற்ற இக் கண்டன ஊர்வலத்திற்கு தோழர் டாக்டர்.

படிப்பகம்

www.padippakam.com



அதற்கெதிரான போராட்டங்களும்

சு.வே. சீனிவாசகம், கே.ஏ. சுப்பிரமணியம், எஸ். தர்மராசா மற்றும் வாலிபர் இயக்க தலைமை உறுப்பினர்கள் தலைமை தாங்கினர். நீர்வேலியில் தாழ்த்தப்பட்ட மக்கள் தாக்கப்பட்டமைக்கு எதிரான பகிரங்கக் கண்டனத்தை வெளிப்படுத்திய அவ் ஊர்வலம் கூட்டம் வெற்றிகரமாக அமைந்தது. அதில் கலந்து கொண்ட பெருந் தொகையான இளைஞர்கள் உணர்வும் உத்வேகமும் கொண்டவர்களாகினர். பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிதியும் ஏனைய பொருட்களும் சேகரித்து வழங்கினர். இந் நிகழ்வானது கட்சி பிளவடையும் சூழலில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. 1964ல் கட்சி பிளவு அடைந்தது.

1965ம் ஆண்டு காலப்பகுதியில் தாழ்த்தப்பட்ட மக்களிடையே மகாசபையை விடப் பல வேறு அமைப்புகளும் இருந்தும் வந்தன. மக்கள் முன்னேற்ற மன்றம், திருவள்ளுவர் மகாசபை, அருந்ததியர் சங்கம், சலவைத் தொழிலாளர் சங்கம், சிகை அலங்கரிப்பாளர் சங்கம் இன்னும் பிற அமைப்புக்கள் செயற்பட்டன. இவை பெருமளவிற்குத் தனித்தனிச் சாதிய அமைப்புகளாகவே இருந்தன.

இவற்றை ஒன்றிணைத்துச் சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணி என்ற பெயரில் பொது அமைப்பாகச் செயற்பட முடிவு செய்யப் பட்டது. இதில் கட்சி பேதம் இன்றி செயற்பட்டு இவ் ஐக்கிய முன்னணி மூலம் தாழ்த்தப்பட்ட மக்களின் பிரச்சினைகள் பற்றியும் அவை வென்றெடுக்கப்பட வேண்டியதன் அவசியத்தைப் பற்றியும் ஆராயப்பட்டது. இம் முன்னணியில் எம்.சி. சுப்பிரமணியம், ஜி. நல்லையா போன்றோர் முன் நிலையில் இருந்து செயல்பட்டனர். அதே வேளை மகாசபையை விட்டு வெளியேறியோர் அதில் முக்கிய பங்கு கொள்ளாவிடினும் அம் முன்னணியின் செயற்பாட்டை எதிர்க்கவோ மறுக்கவோ இல்லை. அவர்கள் கட்சியின் ஊடான வேலைகளை முன்னெடுப்பதிலேயே முன்னின்றனர்.

அதன் அடிப்படையில் 1966ம் ஆண்டு முற்பகுதியில் மேற்படி ஐக்கிய முன்னணி அச்சுவேலியில் உள்ள நல்லதம்பியின் திரை அரங்கில் ஒரு மாநாட்டை நடாத்தியது. இம் மாநாட்டிற்கு சகல அரசியல் கட்சிகளும் பிரமுகர்களும் அழைக்கப்பட்டனர். அவர்கள் முன்னிலையில் தாழ்த்தப்பட்ட மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் முன்வைக்கப்பட்டன. முக்கியமாகத் தேனீர்க் கடைகள், உணவகங்கள் ஆலயங்கள் மற்றும் பொது இடங்களில் தாழ்த்தப்பட்ட மக்கள் சமத்துவமின்றி

படிப்பகம்

www.padippakam.com



இரண்டாந்தரமாக நடத்தப்படுவது நிறுத்தப்பட்டு சமத்துவமாக நடத்தப்படுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனக் கோரிக்கை விடப்பட்டது. இதற்காகத் தாம் சத்தியாக்கிரகம் போன்ற அகிம்சை நடவடிக்கைகளில் இறங்கப்போவதாகக் கூறிச் சற்றுக் கடுந்தொனியில் உரைகள் இடம் பெற்றன. அம் மாநாட்டுக்குத் தமிழரசு, தமிழ் காங்கிரஸ் கட்சிகளின் சார்பில் கலந்துகொண்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் மூன்று மாதகால அவகாசம் கோரினர். அக்காலத்திற்குள் தாம் அதற்கு நடவடிக்கைகள் எடுப்பதாகவும் வாக்குறுதி அளித்தனர். இடதுசாரிக் கட்சிகளைச் சேர்ந்தோர் தமது பூரண ஆதரவைத் தெரிவித்தனர். அம் மாநாட்டில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் (''சீன சார்பு'') சார்பில் தோழர்கள் கே.ஏ. சுப்பிர மணியம் வீ.ஏ. கந்தசாமி ஆகிய இருவரும் கலந்து கொண்டனர். வீ.ஏ. கந்தசாமி அம்மாநாட்டில் பேசுகையில் ''தாழ்த்தப்பட்ட மக்கள் ஒரு புரட்சிகரமான போராட்டத்தின் மூலம் தமது உரிமைகளை வென் றெடுக்க முடியுமே தவிர வேறு சமாதான மார்க்கங்களில் எதையும் சாதிக்க முடியாது'' என வலியுறுத்தினார். ''அதேவேளை கம்யூனிஸ்ட் கட்சியின ரான நாம் எத்தகைய போராட்டம் முன்னெடுக்கப்பட்டாலும் அதற்குப் பூரண ஆதரவும் பங்களிப்பும் வழங்குவோம்'' என்றும் பலத்த வரவேற்பிற்கிடையே கட்சியின் நிலைப்பாட்டை முன்வைத்தார்.

இதன் பின்னர் தமிழ்த் தலைவர்கள் அச்சுவேலி மாநாட்டில் கேட்டுக் கொண்ட மூன்று மாத கால அவகாசம் முடிந்தது. எதுவுமே நடைபெறவில்லை. மீண்டும் மூன்று மாதம் தவணை கேட்கப்பட்டது. அன்றைய தமிழ்த் தலைவர்கள் எனப்பட்டவர்கள் அனைவரும் உயர் வேளாளர்களாக மட்டுமன்றிச் சட்ட வழக்குரைஞர்களாகவும் இருந்தனர். அதனால் அவர்களுக்கு தவணை கேட்பது பழக்கப்பட்ட ஒன்றாகவும் விடயத்தை இழுத்தடித்துச் செல்வது ஒரு யுக்தியாகவும் இருந்து வந்தது. இவ் விடயத்திலும் அவர்கள் மீண்டும் மீண்டும் தவணை கேட்டனர். மித வாதத் தலைவர்களான சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணியினர் தவணை கொடுக்க இசைந்தனர். மேற்கூறிய இரண்டாம் தவணைக் கால அவகாசமும் முடிந்தது. குறிப்பிடக் கூடிய எதுவுமே நடைபெறவில்லை. அரசாங்க அதிபர், பொலிஸ் அதிபர் ஆகியோர் இரண்டொரு தடவை கோவில் தர்மகர்த்தாக்களை யாழ் செயலகத்திற்கு அழைத்து மாநாடு நடாத்திச் சமாதானமாகக் கோவில்களைத் திறந்து விடும்படி கேட்டுக்

www.padippakam.com



கொண்ட போதிலும் எதுவும் நடக்கவில்லை. எம்.சி. சுப்பிரமணியமும் மற்றும் நான்கு பேரும் யாழ். கச்சேரி வாசலில் சாகும் வரை உண்ணாவிரதம் எனக் கூறி இருந்தனர். அன்று பிற்பகலில் அரசாங்க அதிபர் வாய்மூல வாக்குறுதி அளித்ததன் பேரில் அவர்கள் உண்ணா விரதத்தைக் கைவிட்டனர். அதன் பின் இணுவில் கந்தசாமி கோவிலில் இருந்து ஒரு மௌன ஊர்வலம் இடம்பெற்றதுடன் விடயங்கள் உறக்க நிலைக்கு வந்தன. இத்தகைய சூழ்நிலை சாதிய ஆதிக்க சக்திகளையும் சாதி வெறியர்களையும் உயர்சாதிய ஆலய தேனீர்கடை உணவக உரிமையாளர்களையும் உற்சாகப்படுத்தியது.

இத்தகையோரின் உற்சாகத்திற்கு மற்றொரு காரணம் ஐக்கிய தேசியக் கட்சி **1965ல்** பதவிக்கு வந்திருந்தமையாகும். அதுமட்டுமன்றி தமிழரசுக் கட்சியானது அவ் அரசாங்கத்தில் பங்குகொண்டு மு.திருச்செல்வம் உள்ளூராட்சி அமைச்சர் பதவியையும் பெற்றிருந்தார். வழமையாக யூ.என்.பி. பதவியில் இருக்கும் போது தமிழ்த் தலைவர்களும், தமிழ்ப் பிற்போக்காளர்களும், சாதிவெறியர்களும் மிகவும் உற்சாகமடைந்து கொள்வது வழக்கமானதொன்றேயாகும். அவ்வாறே **1965ம்** ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி- தமிழரசுக் கட்சி அரசாங்கத்தின் வரவோடு அவர்கள் மேலும் உற்சாகம் பெற்றிருந்தனர்.

அதேவேளை சிறிலங்கா சுதந்திரக் கட்சிக் காலத்தில் உற்சாகம் பெற்று சலுகைகள் பதவிகள், பட்டங்கள், உத்தியோக வாய்ப்புகள் பெற்று வந்த சிறுபான்மைத் தமிழர் மகாசபையும் அதன் தலைவர்களும் நம்பிக்கையற்றுச் செயல் இழந்து காணப்பட்டனர். இந்நிலையில் அச்சுவேலி மாநாட்டு முடிவுகளும், கோரிக்கைகளும் வெறும் கடதாசி வசனங்களாகி மூலையில் முடங்கிக் கிடந்தன. தமிழ்த் தலைவர்கள் உயர் சாதிய வர்க்க நிலைக்கு ஏற்ப தமது கையாலாகாத்தனத்தை வெளிப்படுத் தினர். இத்தகைய ஒரு சூழலிலேயே **1966ம் ஆண்டு ஒக்ரோபர் 21 எழுச்சியை** இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி "சீன சார்பு" புரட்சிகர எழுச்சியா கத் தொடக்கி வைக்க முடிவு செய்தது. இது காலத்தின் கனிவாகவும் தேவையாகவும் அமைந்து கொண்டது,

● ● ●

# 8

## 1966 ஒக்ரோபர் 21 எழுச்சியும் போராட்டங்களும்

அறுபதாம் ஆண்டுகள் சர்வதேச ரீதியாகப் பெரும் எழுச்சிகளும் போராட்டங்களும் முன்னெழுந்து நின்ற தசாப்த காலமாகும். ஆசியாவிலே அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு எதிராக நேரடிப் போராட்டத்தில் வியட்நாம், லாவோஸ், கம்போடிய மக்கள் புயலென எழுந்து நின்று போராடினர். அதன் அதிர்வுகள் ஏனைய ஆசிய நாடுகளில் மட்டுமன்றி உலகம் பூராவும் எதிரொலித்தன. ஆபிரிக்க நாடுகளில் கொலனியத்திற்கும் நிறவெறிக்கும் எதிரான மக்கள் போராட்டங்கள் வீறுடன் முன்னேறிச் சென்றன. லத்தீன் அமெரிக்க நாடுகளில் விடுதலைப் போராட்டங்கள் வலுவடைந்தன. அமெரிக்காவில் வெள்ளை நிறவெறிக்கு எதிராக கறுப்பின நீக்ரோ மக்கள் என்றுமில்லாத அளவுக்கு போராட்டச் சுவாலையை உருவாக்கினர். ஐரோப்பிய நாடுகளில் தொழிலாளர்களும் மாணவர்களும் முதலாளியத்தின் விளைவுகளுக்கு எதிராக வேலை நிறுத்தங்களிலும் ஆர்ப்பாட்டங்களிலும் ஈடுபட்டு வந்தனர். இதே காலப் பகுதியில் தான் சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தில் புரட்சிகர கருத்துக்களுக்கும் நவீன திரிபுவாதக் கருத்துக்களுக்கு மிடையிலான வாதப்பிரதிவாதங்கள் உச்ச நிலையை அடைந்தன. அதைத் தொடர்ந்து மக்கள் சீனாவில்

www.padippakam.com



மாபெரும் பாட்டாளிவர்க்க கலாசாரப் புரட்சி இடம்பெற்றது. இந்தியாவில் நக்சல்பாரிப் போராட்டம் வெடித்தெழுந்தது.

இத்தகைய சர்வதேச எழுச்சிகளினதும் போராட்டங்களினதும் தாக்கம் இலங்கையிலும் எதிரொலித்தது. தென்னிலங்கையில் தொழிலாளர்களின் வேலை நிறுத்தப் போராட்டங்களுடன் பல்கலைக்கழக மாணவர்களின் எழுச்சி மிக்க போராட்டங்கள் முன்சென்றன. மலையகத்தில் தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் புரட்சிகரக் கருத்துக்கள் பரவி வர்க்கப் போராட்டப் பாதையில் நம்பிக்கை வைத்துப் பலர் தொழிற் சங்க ரீதியில் அணிதிரண்டு புரட்சிகரமான வேலை நிறுத்தப்ப போராட்டங் களில் ஈடுபட்டும் வந்தனர்.

அதேவேளை வடபகுதியில் ஐந்து லட்சத்திற்கு மேற்பட்ட எண்ணிக்கையைக் கொண்ட தாழ்த்தப்பட்ட மக்கள் சாதிய தீண்டாமைக் கொடுமைகளை எதிர்த்துத் தமது ஜனநாயக மனித உரிமைகளைக் கோரி சமத்துவத்திற்காக தலைநிமிர்ந்து போராட்டப் பாதையில் வழிநடக்க முன் வந்தனர். ''எங்கு அடக்குமுறை உண்டோ அங்கு போராட்டங்கள் உண்டு. எங்கு போராட்டங்கள் உண்டோ அங்கு தியாகங்களும் உண்டு. ஆனால் அநாவசியமான தியாகங்களைத் தவிர்த்துக்கொள்ளல் வேண்டும்.'' எனத் தோழர் மாஓ சேதுங் முன்வைத்த புரட்சிகரப் போராட்டப் பாதை யில் ஆண்டாண்டு கால சாதி அடக்கு முறையின் கீழ் அழுந்திக் கிட ந்த தாழ்த்தப்பட்ட மக்கள் கிளர்ந்தெழத் தயாராகினர்.

இவ்வேளை வடபகுதியில் இயங்கிவந்த கம்யூனிஸ்ட் கட்சிகளின் நிலைபற்றி தெளிவுகொள்வது அவசியமாகும். 1964ல் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியில் பிளவு ஏற்பட்டது. இப் பிளவு வடபகுதியிலும் இடம்பெற்றது. பாராளுமன்றப் பாதையை முற்றுமுழுதாக ஏற்றுக் கொண்ட பீற்றர் கெனமன்– விக்கிரமசிங்ஹ தலைமையிலான ''சோவியத் சார்பு'' கம்யூனிஸ்ட் கட்சியின் செல்வாக்கு யாழ்ப்பணத்தில் குறைவாகவே காணப்பட்டது. அதன் பக்கத்தில் அ. வைத்திலிங்கம், ஐ.ஆர். அரியரத்தினம், வ. பொன்னம்பலம், எம்.சி. சுப்பிரமணியம் எஸ். ஜெயசிங்கம், பொன். குமாரசுவாமி. எஸ். விஜயானந்தன் ஆகியோர் இருந்தனர். இவர்கள் சமாதானப் பாதையில் பாராளுமன்றப் பதவிகளைப் பெறுதலையும் சலுகை அரசியலையும் வற்புறுத்தி வந்தனர். மறுபக்கத்தில் சமுதாய மாற்றத்தையும் அதற்கான புரட்சிகரப் போராட்டங்களின் நடைமுறை அவசியத்தையும் 'சீனசார்பு' கம்யூனிஸ்ட் கட்சியானது

www.padippakam.com



முன்வைத்து வந்தது. அதன் புரட்சிகரக் கொள்கைகள் ஒடுக்கப்பட்ட மக்களிடையேயும் இளம் தலைமுறையினரிடையேயும் பலத்த ஆதரவைத் தோற்றுவித்திருந்தது. இக்கட்சியின் பக்கத்தில் மு. கார்த்திகேசன்இ டாக்டர் சு.வே. சீனிவாசகம். கே.ஏ. சுப்பிரமணியம், வீ.ஏ. கந்தசாமி, கே. டானியல், எம். குமாரசுவாமி, வராத்து ப்பளை வ. சின்னத்தம்பி, எம். செல்லத்தம்பிஇ நீர்வைப் பொன்னையன், இ. கா. சூடாமணி, மு. முத்தையா, எம். பி. செல்வரட்ணம், எஸ். சிவலிங்கம், (மான்) ந. முத்தையா. எஸ். ஜனகன் எம். சின்னையா போன்ற தலைமைக் குழுவினர் இருந்தனர். இக் கட்சிதான் தமிழர்களிடை யேயான தாழ்த்தப்பட்ட மக்கள் அனுபவித்து வந்த சாதிய தீண்டாமை ஒடுக்குமுறையினைப் புரட்சிகரப் போராட்டங்கள் மூலம் எதிர்த்து முறியடித்து ஒரு வரலாற்றுத் திருப்பு முனையை ஏற்படுத்தி வைத்தது.

அன்றுவரை தாழ்த்தப்பட்ட மக்கள் சார்பாக முன்வைக்கப் பட்ட ஜனநாயக சமத்துவக் கோரிக்கைகளை வென்றெடுப்பது என்பது பகற்கனவாகவே இருந்து வந்தது. சில சலுகைகள், பெயரளவிலான உரிமைகள் என்பன ஆங்காங்கே சிறு அளவில் பெறப்பட்டனவே தவிர, முழுமையாக அம் மக்களின் சமத்துவமும் ஏனைய ஜனநாயக உரிமைகளும் மறுக்கப்பட்டே வந்தன. **1966ம் ஆண்டு** முற்பகுதிவரை எடுக்கப்பட்ட முயற்சிகள் எதுவும் முழுமையாகக் கைகூடவில்லை. தாழ்த்தப்பட்ட மக்களின் சமூகத் தலைவர்கள் எனப்பட்டவர்களும் அவர்களின் அமைப்புகளும் செயலிழந்த நிலையிற் காணப்பட்டனர். அதேவேளை யூ.என்.பியின் வருகையால் மேலும் உற்சாகமடைந்த சாதி ஆதிக்கவாதிகளும் சாதிவெறிப் பிற்போக்குவாதிகளும் தமது நிலைகளை வலுப்படுத்துவதில் மும்முரம் காட்டத் தொடங்கினர்.

இத்தகைய 1966ம் ஆண்டுச் சூழலில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் (சீன சார்பு என அழைக்கப்பட்ட கட்சி) மத்திய குழுவில் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டவாறு தாழ்த்தப்பட்ட மக்களின் பிரச்சினைகளைப் போராட்டப் பாதையில் முன்னெடுத்துச் செல்லும் வேலைமுறை பற்றிய விவாதத்தை கட்சியின் வடபிரதேசக் கமிட்டி விவாதத்திற்கு எடுத்தது. அதே காலத்தில் வலிகாமம் மேற்கில் பொன்னாலைக் கிராமத்தில் வாழ்ந்து வந்த தாழ்த்தப்பட்ட மக்கள் எதிர்நோக்கிய தண்ணீர்ப் பிரச்சினையை கட்சியின் வலி மேற்குக் கிளை ஒரு வேலையாக முன்னெடுத்து வந்தது. பொன்னாலைக் கிராமம் உவர்

www.padippakam.com



நீர் கொண்ட பகுதியாகும். ஆதலால் சற்று தொலைவில் இருந்து நன்நீர் குழாய் மூலம் குடிநீராக அப்பகுதிக்கு அரசாங்கத்தால் விநியோகிக்கப்பட்டு வந்தது. அத்தகைய குழாய் நீர் விநியோகம் உயர்த்தப்பட்ட சாதியினர் வசித்து வந்த பகுதிகளுடன் நிறுத்தப்பட்டிருந் தது. எனவே பொன்னாலையின் தாழ்த்தப்பட்ட மக்கள் தமது பகுதிக்கு மேற்படி நன்னீர் குழாய் மூலம் வழங்கப்பட வேண்டும் என்பதை அரசாங்க நிறுவனங்கள் ஊடாக வற்புறுத்தினர். ஆனால் தமது அயலில் ஆண்டாண்டு காலமாக வாழ்ந்து வந்த தமிழ் மக்களின் ஒரு பகுதியினரான தாழ்த்தப்பட்ட மக்களுக்கு குடிநீர் வழங்கப்படுவதை சாதி ஆதிக்கவாதிகள் நிராகரித்து எதிர்த்தனர். இதுவே பிரச்சினையின் அடிப்படையாகும். இக் குடிநீர் வழங்கல் பிரச்சினையில் பொன்னாலை மக்கள் சார்பாகக் கட்சி எடுத்த கடும் முயற்சிகளினால் அரசாங்கம் அக் குழாய் நீரை நீடித்து வழங்கத் தயராக இருந்தபோதிலும் அவ்வூர்ச் சாதி வெறியர்கள் குடிநீர் வழங்க மறுப்புத் தெரிவித்து பலாத்கார நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இது ஒரு போராட்டமாகவே எழுந்தது. சாதிவெறியர்களும் அவர்கள் பக்கத்தில் பொலிசும் பொன்னாலைப் பகுதி தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிராக இருந்து செயற்பட்டனர்.

பொன்னாலைப் பகுதித் தாழ்த்தப்பட்ட மக்கள் மிகவும் தாழ்ந்த வாழ்க்கைத் தரம் கொண்ட மக்கள், கல்வியிலும் பொருளாதாரத்திலும் நீண்ட காலமாக அடக்கப்பட்டு வந்தவர்கள். எனவே அவர்களுக்கு குடி நீர் மறுக்கப்படும் அநீதியை தட்டிக் கேட்டு அந் நீரைப் பெற்றுக் கொடுக்க அவர்கள் மூலமாகவே ஒரு மக்கள் போராட்டத்தை நடத்தக் கட்சியின் வலி மேற்குக் கிளை தீர்மானித்தது. பொன்னாலைத் தண்ணீர்ப் போராட்டம் ஒரு பரீட்சார்த்தமான போராட்டமாகவும் பல பயனுள்ள படிப்பினைகளைத் தந்த போராட்டமாகவும் இருந்தது. இப்போராட்டத்தை நிதானமாக முன்னெடுப்பதில் தோழர் கே.ஏ. சுப்பிரமணியம் (மணியம்) உயரிய பங்களிப்பினை ஆற்றியிருந்தார்.

இப்போராட்டத்தில் பங்கு கொண்ட மக்களும், கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்களும் சாதிவெறியர்களின் தாக்குதல்களுக்கும் பொலீஸ் அடக்கு முறைகளுக்கும் ஆளாகினர். சில முன்னணித் தோழர்களை இல்லாதொழிக்கவும் சாதி வெறியர்கள் முயன்றனர். இப் பொன்னாலைப் போராட்டத்திற்குச் சங்கானைப் பகுதி மக்களும் தோழர்களும் ஆதரவு கொடுத்துப் பக்கபலமாக இருந்தனர். பிறபோக்குச் சாதிவெறியர்களும்

www.padippakam.com



பொலிசும் எவ்வளவு அடக்குமுறைகளைக் கையாண்ட போதிலும் அம் மக்களையும் அவர்களது நியாயமான கோரிக்கையான குழாய் மூலம் குடிநீர் பெறும் போராட்டத்தையும் தோற்கடிக்க முடியவில்லை. இறுதியில் பொன்னாலைப் பகுதித் தாழ்த்தப்பட்ட மக்கள் குழாய் மூலமான குடிநீரைப் பெற்று தமது விடாப்பிடியான போராட்டத்தில் வெற்றி பெற்றனர்.

அப் போராட்டமும் அதன் வெற்றியும் சிறந்த நடைமுறைப் படிப்பினையையும் அனுபவத்தையும் போதித்தன. அதே வேளை தாழ்த்தப் பட்ட மக்களை தமது உரிமைகளுக்கு அரசையும் அதிகாரிகளையும் தமிழ்த் தலைவர்களையும் எதிர்பார்த்து நின்று எதையும் சாதிக்க முடியாது என்ற நடைமுறை உண்மையையும் அப் போராட்டம் எடுத்துக் காட்டியது. அதே போல் வெறும் மனுக்களையும், மன்றாட்டக் கடிதங்களையும் அனுப்புவதுடன் மட்டும் நின்று வந்த தாழ்த்தப்பட்ட மக்களின் அமைப்புக ளையும் அதன் தலைவர்களையும் நம்பிப் பயன் இல்லை என்பதையும் அப் போராட்டம் துலாம்பரமாக்கியது.

அதனால் கம்யூனிஸ்ட் கட்சி சரியான தலைமையைக் கொடுத்து தாழ்த்தப்பட்ட மக்களை அணிதிரட்டி போராட்டங்களை நிதானமாக முன்னெடுத்தால் இறுதி வெற்றி மக்களுக்கே என்ற நம்பிக்கை கட்சியின் வடபிரதேசத் கமிட்டிக்குள் மேலும் முழுமை பெற்றது. ஆதலால் தாழ்த்தப்பட்ட மக்களை எதிர்நோக்கும் சாதிய தீண்டாமைக்கு எதிரான போராட்ட இயக்கத்தை கட்சியின் தலைமையில் தொடக்கிவை க்கும் வகையில் ஒரு ஆர்ப்பாட்ட ஊர்வலத்தையும் பொதுக் கூட்டத்தையும் நடாத்தவேண்டும் என்ற தீர்மானம் கட்சியின் வட பிரதேசக் குழுவில் முடிவாக்கப்பட்டது.

இடதுசாரிச் சக்திகளுக்கு ஆதரவானதும் விவசாயிகளி னது நகரமாகவும் இருந்து வந்த சுன்னாகத்தில் இருந்து ஊர்வலத்தை ஆரம்பித்து யாழ்ப்பாணம் வரை நடாத்தி யாழ் முற்றவெளியில் பொதுக் கூட்டத்தை நடத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டது. அதற்கான திகதி **1966ம் ஆண்டு ஒக்ரோபர் 21** என முடிவு செய்யப்பட்டது. இதற்குரிய சட்டரீதியான அனுமதி பொலிசிடம் கோரப்பட்டது. ஆனால் மேற்படி ஊர்வலம் நடாத்த அனுமதி மறுக்கப்பட்டது. குழப்பம் வரும் எனக் காரணம் காட்டி ஊர்வல அனுமதி மறுக்கப்பட்டது. இந்த மறுப்பின் பின்னால் சாதி ஆதிக்கவாதிகளும் சில தமிழ் அரசியல் தலைவர்களும் இருந்தனர்.

ஆனால் கட்சி ஊர்வலத்தை குறித்த திகதியில் சுன்னாகத்

www.padippakam.com



தில் இருந்து நடத்துவதற்கு ஏற்ற சகல தயாரிப்புகளையும் செய்தது. ஒக்ரோபர் 21ம் திகதியன்று வடபுலத்தின் சகல பகுதிகளில் இருந்தும் கட்சி வாலிபர் இயக்கத்தை சேர்ந்த உறுப்பினர்களும் ஆதரவாளர்களும், பொது மக்களும் சுன்னாகம் சந்தை வளாகத்தில் ஒன்று கூடினர். சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் இவ் ஊர்வலத்திற்காகத் திரண்டிருந்தனர். ஊர்வலத்தின் முன்னணியில் ''சாதி அமைப்புத் தகரட்டும். சமத்துவ நீதி ஓங்கட்டும்'' என்ற செம்பதாகை கம்பீரமாக நிமிர்ந்து நின்றது. சுன்னாகம் சந்தை வளாகத்திலிருந்து ஊர்வலம் யாழ்ப்பாணத்தை நோக்கி ஆரம்பிக்க தயார்ப்படுத்தப்பட்டுக் கொண்டிருந்தவேளை, இவ் ஊர்வலத்தைத் தடுத்துத் தாக்கிக் கலைப்பதற்கு பொலிஸ் படைசுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் தயாராகிக் கொண்டிருந்தது. இவ் இரு முனைத் தயாரிப்புக்களும் சாதிய அமைப்பு முறையின் மீது ஒரு போராட்டத்தைத் தொடுக்க முனைந்த புரட்சிகர சக்திகளுக்கும் அதனைத் தடுத்துச் சாதிய அமைப்பையும் தமிழர் பழைமைவாதத்தையும் பாதுகாக்க நிற்கும் பிற்போக்கு சக்திகளுக்குமிடையிலான ஒரு பலப்பரீட்சையின் தொடக்கத்தையே சுட்டிக்காட்டி நின்றது. ஒரு புறம் சாதிய ஒடுக்குமுறைக்கு எதிரான மக்களும் புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியும் மறுபுறம் சாதிய ஆதிக்க சக்திகளும் அரசாங்கமும் அரசு யந்திரத்தின் பொலீஸ் படையும் என்ற நிலை தெளிவாகவும் வெளிப்படையாகவும் காணப்பட்டது.

சந்தை வளாகத்தில் தயாராகிக் கொண்டிருந்த ஊர்வலத்தின் சில அம்சங்கள் கூர்ந்து அவதானிக்கத் தக்கனவாகும். ஒன்று, சாதி அமைப்புக்கும் தீண்டாமைக்கும் எதிராகத் திரண்டிருந்த அவ்வூர்வலத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் மட்டும் என்ற நிலை இருக்கவில்லை. கட்சியையும் வாலிபர் இயக்கத்தையும் சுற்றி அணிதிர ண்டிருந்த அத்தனை புரட்சிகர வர்க்க சக்திகளும் ஒருங்கிணைந்திரு ந்தன. இரண்டாவது, குறிப்பிட்ட வயதினரான இளைஞர்கள் மட்டும் என்ற நிலை இருக்கவில்லை. இளைஞர்கள், மாணவர்கள் தொட்டுத் தொழிலாளர்கள் விவசாயிகள் உட்பட வயதானவர்கள் வரை கலந்து கொண்டனர். மூன்றாவது, பொலீஸ் தடையைத் துச்சமாக மதித்து தடையை மீறி ஊர்வலத்தை நடத்துவதில் மக்கள் ஓர்மமாக இருந்தனர். நான்காவது, இவ் ஊர்வலத்தைப் புரட்சிகரமாக நடாத்தி இறுக்கமடைந்திருக்கும் கொடிய சாதி-தீண்டாமை அமைப்பின் மீது மோதி எழுவது என்ற மனோதிடம் ஊர்வலத்தில் திரண்டிருந்தோரிடம்

www.padippakam.com



மேலோங்கி இருந்தது.

அன்றைய தினம் பி. ப. 5 மணியளவில் சுன்னாகம் சந்தை வளாகத்திலிருந்து **"சாதி அமைப்புத் தகரட்டும் சமத்துவ நீதி ஓங்கட்டும்"** என்னும் செம்பதாகை உயர்ந்து நிற்க அதன் கீழ் எழுச்சி மிக்க அவ்வூர்வலம் புரட்சிகர முழக்கங்களுடன் புறப்பட்டு யாழ் நகர் நோக்கி பிரதான வீதியால் முன்னேறியது. ஊர்வலத்தின் முன்னணியில் கட்சியின் தலைமைத் தோழர்களான **கே. ஏ. சுப்பிரமணியம், டாக்டர் சு.வே. சீனிவாசகம், வீ.ஏ. கந்தசாமி, கே. டானியல், டி.டி. பெரேரா, இ.கா. சூடாமணி,** இவர்களுடன் **தோழர் எஸ்.ரி.என். நாகரட்ணமும்** முன்னணியில் சென்று கொண்டிருந்தனர். அடுத்து வாலிபர் இயக்கத்தின் வடபிரதேச தலைமைக் குழுத் தோழர்களான **சி.கா. செந்திவேல், எம்.ஏ.சி. இக்பால், நா. யோகேந்திரநாதன், கு. சிவராஜா, கி. சிவஞானம், த. குணரட்ணம், சி. நவரட்ணம், பி. பசுபதி, த. தருமலிங்கம், ப. கிருஷ்ணன்** போன்றோர் சென்றனர். அவர்களைத் தொடர்ந்து ஆயிரத்திற்கு மேற்பட்டோர் அணியணியாக முன்னோக்கிச் சென்றனர்.

சாதியமைப்பையும் தீண்டாமையையும் எதிர்த்த புரட்சிகர முழக்கங்கள் அப்பகுதி முழுவதையும் அதிர வைத்தன. பிரதான வீதியில் அமைந்திருந்த சுன்னாகம் பொலீஸ் நிலையத்தை அண்மித்ததும் வீதிக்குக் குறுக்கே அணிவகுத்து நின்ற போலீஸ் படை ஊர்வலத்தைத் தடுத்து அதன் மீது தாக்குதலைத் தொடுத்தது. குண்டாந்தடிகள் துப்பாக்கிப் பிடிகள் என்பனவற்றால் ஊர்வலத்தினர் தாக்கப்பட்டனர். தலைமை தாங்கிச் சென்ற தோழர்களின் தலைகளில் இருந்து இரத்தம் பீறிட்டுக் கொண்டிருந்தது. சில தோழர்களின் மேற்சட்டைகள் கிழித்தெறியப் பட்டன. பதிலுக்கு ஊர்வலத்தின் பின் பக்கத்தில் இருந்து போலீசாரை நோக்கி சரமாரியாக கற்கள் வீசப்பட்டன. போலீஸ் நிலையத்தின் முன்றல் சுமார் இருபது நிமிடங்கள் வரை போர்க்களம் போன்று காட்சியளித்தது. இரத்தம் வழிந்தோட தோழர்கள் கே.ஏ. சுப்பிரமணியம், வீ.ஏ. கந்தசாமி, இ.கா. சூடாமணி ஆகியோரைப் போலீஸ் அதிகாரிகள் இழுத்துச் சென்று போலீஸ் நிலையத்தில் அடைத்து வைத்தனர்.

இத்தனைக்குப் பின்பும் அடி காயங்கள் பட்ட நிலையிலும் ஊர்வலத்தில் திரண்டோர் கலைந்து செல்ல மறுத்து யாழ் நகர் நோக்கி செல்வதற்காக போலீசாருடன் கடுமையான வாக்குவாதத்தில் ஈடுபட்

www.padippakam.com



டிருந்தனர். மீண்டும் ஒரு மோதலுக்கான சூழல் உருவாகி வருவதைக் கண்ட போலீஸ் உயர் அதிகாரிகள் முழக்கங்கள் இன்றி யாழ். நகர் நோக்கிச் செல்ல அனுமதிக்கும் நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகினர். ஊர்வலம் மாலை ஆறரை மணிக்கு யாழ் நகரை வந்தடைந்தது. ஊர்வலம் முடியும் தறுவாயில் மக்கள் கூட்டம் மூன்று மடங்காகி இருந்தது. நகரின் எல்லையை அடைந்த போது மீண்டும் முழக்கங்கள் எழுப்பப்பட்டன. அதனைப் பொலீஸ் படையால் தடுக்க முடியவில்லை. புரட்சிகர உணர்வும் கலந்து கொண்டோரின் எண்ணிக்கையும் அதிகரித்திருந்தமையே காரணமாகும். யாழ் முற்றவெளியில் அமைக்கப்பட்டிருந்த மேடையில் தோழர் **சு.வே. சீனிவாசகம்** தலைமையில் கொட்டும் மழையிலும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. கட்சியின் பொதுச்செயலாளர் **தோழர் நா. சண்முகதாசன், கே. டானியல், சி.கா. செந்திவேல்** ஆகிய மூவரும் உரையாற்றினர். "தமிழ் மக்கள் மத்தியில் ஆண்டாண்டு காலமாக சாதி அடக்குமுறையின் கீழ் அடிமை குடிமைகளாகவும் தீண்டத்தகா தவர்களாகவும் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டு வந்த தாழ்த்தப்பட்ட மக்கள் தமது உரிமைகளை வென்றெடுக்க புரட்சிகரப் போராட்டப் பாதையைத் தேர்ந்தெடுக்க வேண் டும். ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தை கொடுக்கும் நிலையை மாற்றி அடித்தால் திருப்பி அடிக்கும் நிலையைத் தாழ்த்தப்பட்ட மக்கள் எடுக்க வேண்டும். அப்பொழுதுதான் சாதியத்தை எதிர்த்துத் தீண்டாமையை ஒழிக்க முடியும். அதற்கான போராட்டங்க ளைத் தாழ்த்தப்பட்ட மக்கள் முன்னெடுப்பதற்குப் புரட்சிகரக் கம்யூனிஸ்ட் கட்சி வழிகாட்டித் தலைமை தாங்கும்" இவ்வாறு கட்சியின் சார்பாக பொதுச் செயலாளர் தோழர் நா. சண்முகதாசன் தனது உரையில் அறைகூவல் விடுத்திருந்தார்.

பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்ட தலைமைத் தோழர்கள் மூவரும் அன்று முற்றவெளிக் கூட்டம் முடிவடைந்த பின்பு இரவு 12 மணியளவில் அடிகாயங்களுக்கு எவ்வித சிகிச்சையும் வழங்கப்படாத நிலையில் விடுவிக்கப்பட்டனர்.

அன்று சாதியத்திற்கு எதிரான சுன்னாகம் ஊர்வலத்தின் மீது வீழ்ந்த பொலீஸ் அடியானது "பிட்டுக்கு மண் சுமந்த சிவன் மீது பட்ட அடி சீவராசிகள் அனைத்தின் மீதும் வீழ்ந்த அடியாகிக் கொண்டது" என்ற புராணக் கதைகளில் வருவது போன்று தமிழர்கள் மத்தியில் சாதிய அடக்குறையின் கீழ் வாழ்ந்து வந்த தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவர் மீதும்

www.padippakam.com



மட்டுமன்றி அடித்தவர்கள் மீதும் வீழ்ந்த அடியாகிக் கொண்டது. இனிமேலும் சாதிய ஒடுக்கு முறையையும் தீண்டாமைக் கொடுமைகளையும் பொறுக்க முடியாது. எனவே எமது உரிமைகளைப் போராட்டங்கள் மூலம் வென்றெடுப்பதுதான் ஒரே வழி என்ற நிலைக்கு தாழ்த்தப்பட்ட மக்கள், குறிப்பாக இளைய தலைமுறையினர் வருவதற்கு 1966 ஒக்ரோபர் 21 எழுச்சி ஒரு உறுதியான திசை காட்டியாக அமைந்தது.

**சாதிய எதிர்ப்புப் போராட்டத்தின் அரசியல் மார்க்கம்**

ஒக்ரோபர் 21 எழுச்சியினால் மக்கள் உணர்வு பெற்றுக் கொண்டிருந்த வேளையில் சாதி அடக்குமுறைக்கும் தீண்டாமைக்கும் எதிரான போராட்டத்திற்கான அரசியல் மார்க்கமும் தந்திரோபாயங்களும் வகுக்கப்பட வேண்டிய நடைமுறைக் கொள்கைப் பிரச்சினை முன்னெழுந்தது. சாதிப் பிரச்சினை அடிப்படையில் வர்க்கப் பிரச்சினை என்பது தெளிவாகி இருந்த போதிலும் நடைமுறையில் அதை முன்னெடுத்துச் செல்வதில் கட்சிக்குள் பெரும் விவாதம் எழுந்தது. கட்சியின் அன்றைய பொதுச் செயலாளர் தோழர் நா. சண்முகதாசன் முன்வைத்த நடைமுறை அணுகுமுறை சம்மந்தமாகவே மேற்படி விவாதம் எழுந்தது. அதன் அடிப்படையில் தலைமைத் தோழர்கள் உட்படச் சில தோழர்கள் முன்வைத்த சில கருத்துக்கள் கொள்கை, நடைமுறை ரீதியில் தவறானவையாக இருந்தன. சாதி அடக்கு முறைக்கு ஆளாக்கப்பட்ட மக்கள் தமக்கு இழைக்கப்படும் பிற்போக்குப் பலாத்காரத்திற்கு எதிராகப் புரட்சிகர பலாத்காரத்தை பாவிக்க வேண்டும் எனத் தோழர்கள் முன்வைத்த கொள்கை சரியானதென ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. ஆனால் அப் பலாத்காரம் யாருக்கு எதிராக என்பது தெளிவு படுத்தப்படவில்லை. உதாரணமாக, அமெரிக்க கறுப்பு ஆபிரிக்க நீக்ரோ மக்கள் வெள்ளையர்களுக்கு எதிராகப் பாவித்து வந்த வரைமுறையற்ற பலாத்காரத்தை ஒத்ததாக இருக்க வேண்டும் என்பதையே அத் தவறான கருத்து வற்புறுத்தியது. அதாவது தீவிர கறுப்பின நீக்ரோ வாதிகள் வெள்ளையர்களைக கண்ட கண்ட இடங்களில் தாக்குவதும் பெற்றோல் குண்டுகள் வீசுவதும் கொழுத்துவதும் போன்ற உதாரணம் சில தலைமைத் தோழர்களால் எடுத்துக் காட்டப்பட்டது. இது அடிப்படையில் தீவிர கறுப்பினவாதம் ஆகும். அதேபோன்று தீவிர சாதிவாதத்தைத் தூண்டக்கூடிய அபாயத்திற்கே இட்டுச் செல்லக்கூடியதொன்று என்பது அவ்வேளை சிலரால் விளங்கிக்கொள்ள முடியவில்லை. முழக்கங்களாயினும் கொள்கை

www.padippakam.com



களாயினும் வெறுமனே அதிதீவிரத் தன்மை வாய்ந்தவையாக இருந்தால் மட்டும் புரட்சிகரமாகாது. அவை சமூக யதார்த்த நடை முறைக்குப் பொருந்துபவையாகவும் இருக்க வேண்டும். மேலும் அத்தகைய மார்க் கங்கள் தூரநோக்கின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட மக்களின் இறுதி விடுதலைப் பாதைக்கு வழி காட்டுவதாயும் அமைய வேண்டும். குறுகிய சாதிவாதத்தைத் தூண்டுவதும் அதன் வேகத்தில் சில தீவிர பலாத்கார நடவடிக்கைகள் ஆற்றப்படுவதும் சுலபமானது. ஆனால் மொத்தத்தில் அத்தகைய நடவடிக்கைகளின் மூலம் அம் மக்களுக்கும் முழுச் சமூகத்திற்கும் தொழிலாளி வர்க்கப் புரட்சி மார்க்கத்திற்கும் ஏற்படக் கூடிய அபாயங்களும் அழிவுகளும் பற்றிக் கவனத்தில் கொள்வது பிரதான மாகும். எனவே அன்றைய சூழலில் முன்வைக்கப்பட்ட மேற்படி தவறான அரசியல் அணுகுமுறையை எதிர்க்க வேண்டிய தேவை கட்சிக்குள் உள்ள சில தலைமைத் தோழர்களுக்கு ஏற்பட்டது. அந்த அணுகுமுறையில் இருந்த தவறான நிலைப்பாடுகள் பற்றி விவாதிக்கப்பட்டு அவை நிராகரிக்கப்பட்டன. அவ் விவாதத்தின் அடிப்படையில் சாதிய தீண்டாமைக்கு எதிரான போராட்டங்களை வடபுலத்தில் முன்னெடுத்த கட்சியின் மத்திய குழுவும் பிரதேசக்குழுவும் இணைந்து விவாதித்து முடிவெடுத்துச் செயற்படுவதன் அவசியம் வலியுறுத்தப்பட்டது.

இவ்வாறு சாதிய அடக்குமுறைக்கு எதிரான போராட்ட மார்க்கம் பற்றி முன்வைக்கப்பட்ட தவறான அரசியல் மார்க்கத்திற்குப் பதிலாக பின்னர் முன்வைக்கப்பட்ட சரியான வெகுஜனப் புரட்சிகர அரசியல் மார்க்கம் தொடர் விவாதங்களுக்குப் பின் கட்சியால் அங்கீகரிக்கப் பட்டது. மேற்படி விவாதத்தில் வர்க்கப்போராட்ட அடிப்படையில் சாதிய-தீண்டாமைப் போராட்டங்களை முன்னெடுப்பது பற்றி தோழர் கே. ஏ. சுப்பிரமணியமும் ஏனைய தோழர்களும் முன் வைத்த கருத்துக்கள் நிதானமான தூர நோக்குடையதாக அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்க தாகும். தமிழர் சமூக அமைப்பைப் பொறுத்தவரையில் நிலப்பிரபுத்துவ சாதி ஆதிக்க சக்திகளும் அதை உறுதிப்படுத்தி முன்னெடுக்க முயலும் சாதிவெறியர்களுமே தாழ்த்தப்பட்ட மக்களின் விரோதிகளாக இருக்க முடியுமே தவிர சகல உயர்சாதியினரும் விரோதிகள் அல்லர். உயர்சாதியினர் எல்லோரும் எதிர்க்கப்பட்டால் அல்லது தீவிர பலாத்காரத் திற்கு உட்படுத்தப்பட்டால் தாழ்த்தப்பட்ட மக்களின் நியாயமான போராட்டம் குறுகித் தனிமைப்படுத்தப்பட்டு இறுதியில் படுதோல்வி அடை

www.padippakam.com



வதுடன் அம் மக்கள் அதிக அழிவுகளையும் தாங்க முடியாத இழப்புக் களையும் தேடிக்கொள்ள வேண்டிய சூழல் ஏற்படும். எனவே சாதி ஆதிக்கத் திமிர் கொண்ட சொத்துடையவர்களையும் அவர்களின் கையாட்களாகச் செயற்பட்டு வரும் சாதி வெறியர்களையும் மட்டும் தனிமைப்படுத்தி இனங்கண்டு அவர்களையே தமது எதிரிகளாகத் தாழ்த்தப்பட்ட மக்கள் கொள்ளவேண்டும். அதேவேளை தாழ்த்தப்பட்ட மக்கள் தமது போராட்டங்களுடன் உயர்த்தப்பட்டோர் மத்தியில் உள்ள ஜனநாயக முற்போக்கு, நல்லெண்ணம் கொண்டவர்களையும் வர்க்க ரீதியில் ஐக்கியப் படக் கூடிய உழைக்கும் வர்க்க மக்களையும் ஐக்கியப்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற சரியான மார்க்கம் கட்சிக்குள் முடிவாக்கப்பட்டது.

ஆதலால் ஒக்ரோபர் 21 எழுச்சியைத் தொடர்ந்து கட்சிக் குள் உருவாகிய அரசியல் மார்க்கப் பிரச்சினையில் எதிரிகள் யார்? நண்பர்கள் யார்? என்பது வர்க்கப் போராட்ட அடிப்படையில் வரையறுக்கப் பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதுவே வரப்போகும் போராட்டங்களில் நிதானமான வெகுஜனப் புரட்சிகர மார்க்கம் பின்பற்றப்படுவதற்கு அடிப்ப டையான கொள்கை நிலைப்பாடாக அமைந்த பிரதான விடயமாகும்.

புரட்சிகரக் கம்யூனிஸ்ட் கட்சிக்குள் இவ்வாறு சரியான மார்க்கம் வகுக்கப்பட்டுக் கொண்டிருந்த வேளையில் சமாதான பாராளு மன்றப் பாதையை மேற்கொண்ட விக்கிரமசிங்ஹ-கெனமன் திரிபுவாத கம்யூனிஸ்ட் கட்சியினர் புரட்சிகர வெகுஜனப் போராட்டத்திற்கு குறுக்கே தம்மை நிறுத்திக்கொண்டு தங்களைத் தாங்களே அம்பலப்படு த்திக் கொண்டனர். தாழ்த்தப்பட்ட மக்கள் புரட்சிகரப் போராட்டத்தில் ஈடுபட் டால் அவர்களது "பொருளாதாரம் அழிந்துவிடும்" "இதுவரை பெற்ற உரிமைகளும் தாழ்த்தப்பட்ட மக்கள் இழந்து விடுவர்" "இரத்தம் சிந்தி உரிமைகளைப் பெறமுடியாது" "பலாத்காரப் பாதை தவறானது" என் றெல்லாம் பிரச்சாரம் செய்தனர். பல சந்தர்ப்பங்களில் எதிரிகளுக்கு உதவும் வகையில் செயற்பட்டும் வந்தனர். இது அவர்களது பாராளுமன்றப் பாதையையும் அதற்கான சந்தர்ப்பவாத அரசியல் சீரழிவு மார்க்கத்தையும் குறித்து நின்றது.

### மக்கள் மத்தியில் எழுச்சியின் தாக்கம்

**1966**ம் ஆண்டு ஒக்ரோபர் 21 எழுச்சியைத் தொடர்ந்து சாதி அடக்கு முறைக்கு எதிரான அதன் அரசியல் மார்க்கம் பற்றியும்

www.padippakam.com



தாழ்த்தப்பட்ட மக்கள் தமது உரிமைகளை வென்றெடுக்க புரட்சிகரப் போராட்டங்களில் ஈடுபட வேண்டியதன் அவசியம் பற்றியும் பலமான பிரச்சாரம் மக்கள் மத்தியில் செய்யப்பட்டன. ஒக்ரோபர் 21ஐத் தொடர்ந்து கிராமங்களிலும் நகரங்களிலும் சிறிய பெரிய கூட்டங்களும் கருத்தரங்குகளும் அரசியல் வகுப்புக்களும் தொடர்ந்து இடம் பெற்று வந்தன.

ஒக்ரோபர் 21ம் திகதி ஊர்வலம் தாக்கப்பட்டதைக் கண்டித்தும், சாதி அடக்கு முறையை எதிர்த்தும் மீண்டும் சுன்னாகத்தில் பிரமாண்டமான பொதுக் கூட்டம் கட்சியினால் ஒழுங்கு செய்யப்பட்டது. அக் கூட்டத்திற்கு யாழ்ப்பாணத்தில் இருந்து ஊர்வலம் செல்வதற்கு அனுமதி கோரப்பட்டது. ஆனால் அவ் ஊர்வலத்திற்கு அனுமதி மீண்டும் மறுக்கப்பட்டது. இருந்தும் ஊர்வலம் நடத்தப்படும் என்று கட்சி அறிவித்திருந்தது. ஆனால் ஊர்வலம் நடத்துவதில்லை என்றே உள்ஞர கட்சி முடிவு செய்து கொண்டதாயினும் அதை வெளிவிடவில்லை. ஒக்ரோபர் 21 போல் ஊர்வலம் நடைபெறும் என நம்பிய பொலிஸ் படையினர் அதை ஆரம்பிக்க விடாது தடுப்பதற்காக வெளிப்பிரதேசங்களில் இருந்து பெரும் தொகையான பொலிசாரையும் சாதாரண உடைப் பொலீசாரையும் யாழ்ப்பாணத்தில் குவித்து ஊர்வலம் தொடங்கும் இடத்தைச் சல்லடை போட்டுத் தேடிக் கொண்டிருந்தனர். ஊர்வலம் நடைபெறாது விடவே அவர்கள் ஏமாற்றம் அடைய நேரிட்டது. கூட்டம் பல்லாயிரக் கணக்கான மக்களுடன் சுன்னாகம் சந்தை வளாகத்தில் **26-11-1966** அன்று நடைபெற்றது. தோழர் கே.ஏ. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற அக் கூட்டத்தில் தோழர்கள் நா. சண்முகதாசன், எஸ்.டி பண்டார நாயக்கா (அவ்வேளை அவர் புரட்சிகர கம்யூனிஸ்ட்கட்சியில் இணைந் திருந்தார்). வீ.ஏ. கந்தசாமி, கே. டானியல், சுபைர் இளங்கீரன், நீர்வைப் பொன்னையன், சி.கா. செந்திவேல் உட்படப் பலர் உரையாற்றினர்.

இக் கண்டனக் கூட்டத்தைத் தொடர்ந்து **1966ம்** ஆண்டு பிற்பகுதியிலும் **67ம்** ஆண்டு முற்பகுதியிலும் பிரமாண்டமான ஊர்வலங்களும் பொதுக்கூட்டங்களும் வடபகுதி பூராகவும் நடைபெற்றன. சுன்னாகத் தில் இருந்து ஆரம்பித்த ஊர்வலத்திற் சென்றோர் வலிகாமம் மேற்கில் சங்கானையில் பெரும் கூட்டத்தை நடத்தினர். வலிகாமம் கிழக்கில் ஆவரங்காலில் இருந்து ஒரு ஊர்வலத்தில் சென்றோர் அச்சுவேலியில் கூட்டம் நடத்தினர். அதேபோல் தென்மராட்சியில் நுணாவிலில் இருந்து ஆரம்பித்து சாவகச்சேரி ஊடாக ஊர்வலத்திற்

www.padippakam.com



சென்றோர் மட்டுவிலில் கூட்டத்தை நடத்தினர். வடமராட்சியில் துன்னாலையில் இருந்து ஆரம்பித்து ஊர்வலமாக நெல்லியடி ஊடாகப் பருத்தித்துறைக்குச் சென்றோர் அங்கு கடற்கரையிற் பிரமாண்டமான கூட்டத்தை நடத்தினர். இந் நான்கு பெரும் ஊர்வலங்களும் பிரமாண்டமான கூட்டங்களும் குடாநாட்டில் நிலவிவந்த சாதியக் கருத்து நிலையில் பெரும் பிரச்சாரத் தாக்கத்தை முன்னெடுத்தன. இவற்றில் கலந்து கொண்ட சாதாரண தாழ்த்தப்பட்ட உழைக்கும் மக்களும் இளைஞர்- யுவதிகளும் மாணவர்களும் அரசியல் போராட்ட உணர்வு பெற்றனர். ஒரு போராட்டக்களத்தை நோக்கி உந்தித் தள்ளப்பட்டனர். ஒரு நியாயமான வெகுஜனப் போராட்டத்தின் அவசியமும் அதற்கான சரியான கொள்கையும் இப் பிரச்சார இயக்கத்தின் மூலம் மக்களுக்குத் தெளிவுபடுத்தப்பட்டது. தாழ்த்தப்பட்டமக்கள் தன் உணர்வு பெற்றுக் கொள்கை ரீதியில் அணிதிரளும் தமது மார்க்கத்தைத் தேர்ந்து கொள்ளவும் முடிந்தது. அதேவேளை உயர்த்தப்பட்டோர் எனப்படும் மக்களில் பெரும்பான்மையோர் தாழ்த்தப்பட்ட மக்கள் முன்வைத்துள்ள விடயங்களின் நியாயத்தன்மையை அங்கீகரிக்கும் ஆரம்ப நிலை தோன்றியது. அதேவேளை சாதி வெறிப் பிற்போக்கு வாதிகள் தமது எதிர்ப் புரட்சிகர பலாத்காரத்தை வலுப்படுத்துவதில் முனைந்து நின்று செயற்பட்டனர்.

1967ம் ஆண்டு இடம்பெற்ற கட்சியின் மே தினம் மிகப் பிரமாண்டமான ஒன்றாக அமைந்தது. அரசியல் நிலையிலும் சாதி அடக்கு முறைக்கு எதிரான பிரச்சார இயக்கத்திலும் அம் மே தினம் பாரிய தாக்கத்தினை வெளிப்படுத்தியிருந்தது.

எந்த ஒரு போராட்டத்திலும் மக்களின் பங்குபற்றலும் அவர்களின் எழுச்சியுமே அடிப்படையானது. அவ்வாறு மக்களை எழுச்சி கொள்ளச் செய்யவேண்டுமானால் அம் மக்கள் கொள்கை ரீதியிலும் இலட்சிய ரீதியிலும் அமைப்பு ரீதியிலும் அணிதிரட்டப்படல் வேண்டும். அதற்கெனக் கொள்கை ரீதியான கருத்துக்கள் விளங்கிக் கொள்ளப் படுவது அவசியம். அத்தகைய ஒரு பலமான பிரச்சார இயக்கத்தை வடபகுதியில் கம்யூனிஸ்ட் கட்சி ஒக்ரோபர் எழுச்சியைத் தொடர்ந்து புரட்சிகர வழிகளில் வேகமாக நடாத்தி வந்தது. இது சகல கிராமங்களையும் நகரங்களையும் ஊடறுத்துச் சென்று தாழ்த்தப்பட்ட மக்களிடையே பலமான உணர்வு நிலைத் தாக்கத்தை ஏற்படுத்தியது. தங்களைப் பிணைத் திருக்கும் சாதி அடக்குமுறை தீண்டாமை என்ற அடிமை விலங்கை

www.padippakam.com



உடைத்தெறிய வேண்டிய காலகட்டம் வந்துள்ளது என்ற நிலையை மக்கள் உணர்ந்து கொள்ளவும் அதற்கான போராட்டப் பாதையில் அணி வகுக்கவுமான ஒரு அடித்தளம் தோற்றுவிக்கப்பட்டது.

## ஆலய, தேநீர்க்கடைப் போராட்டங்கள்

1967ம் ஆண்டு நடுப்பகுதியில் சாதி அடக்குமுறைக்கும் தீண்டாமைக்கும் எதிராக நடைமுறைப் போராட்டங்களை எவ்வாறு ஆரம்பிப்பது என்ற பிரச்சினை கட்சியின் முன்னால் எழுந்தது. தேநீர்க் கடைகளிலும் ஆலயங்களிலும் இருந்தே போராட்டம் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்று கட்சி தீர்மானித்தது. இவ்வாறு வரையறுத்துத் தீர்மானிக்க ஒரு காரணமும் இருந்தது. ஏனெனில் சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் கீழ் இயங்கி வந்தவர்கள் இக்காலத்தில் கிராமங்களில் சலூன், சலவைத் தொழில் நிலையங்களில் முதலில் சமத்துவத்தை நிலைநாட்ட முற்பட்டுக் கொண்டனர். இதனைக் கட்சி எதிர்த்தது. உண்மையில் சாதி அடக்கு முறையினதும் தீண்டாமையினதும் பிரதான மையங்களாகப் பெரும் ஆலயங்கள், பிரதான தேநீர்க்கடைகள், உணவகங்கள் என்பனவே திகழ்கின்றன. அவற்றைச் சுற்றியே சாதிவெறிப் பிற்போக்குவாதிகள் அணிதிரண்டுள்ளனர் என்பதே யதார்த்தமாக இருந்தது. ஆதலால் பலமான அந்த மையங்களில் சமத்துவத்திற்கான போராட்டத்தைத் தொடுத்து வெற்றி பெறுவதே பிரதானமானது. அத்தகைய போராட்டம் வெற்றி பெறுங் கட்டத்தில் சலூன், சலவை நிலையங்கள் போன்றவை தாமாகவே சமத்துவ நிலையை வந்தடையமுடியும் என்பதையே கட்சி வற்புறுத்தியது. அவ்வாறின்றி சலூன், சலவை நிலையங்களில் மோதுவது பலமான எதிரி எங்கோ இருக்க உரிமைகள் பல மறுக்கப்பட்டு உயர் சாதிவாதிகளின் தயவில் தொழில் புரியும் சலவை, சலூன் தொழிலாளர்களுடன் மோத முனைவது தவறான தந்திரோபாயம் மட்டுமின்றி ஐக்கியப்பட வேண்டிய சக்திகளைப் பகைத்து தம்மை தாமே பலவீனப்படுத்திக் கொள்வதாகவே அமையும் என்பதை கட்சி சுட்டிக்காட்டி நின்றது. இது சாதிய ஒடுக்கு முறையின் முரண்பாட்டின் தன்மையையும் போராட்டத் தந்திரோபாயத்தினையும் தெளிவாக வரையறுத்துக் காட்டியது.

எனவே தமது போராட்ட முழக்கமாக **"அடிமை குடிமை முறை ஒழியட்டும், ஆலய தேநீர்க்கடைப் பிரவேசம் தொடரட்டும்"** என்ற சரியான கொள்கை நிலைப்பாட்டை கட்சி முன்னெடுத்தது. இப்பிர

www.padippakam.com



தான முழக்கம் பல்லாயிரக் கணக்கான சுவரொட்டிகள் துண்டுப் பிரசு ரங்கள் மூலம் குடாநாடு முழுவதும் பரப்பப்பட்டது.

இதன் அடிப்படையில் 1967ம் ஆண்டு நடுப்பகுதியில் உரும்பிராயில் உள்ள தேநீர்க்கடைகளில் வாலிபர் இயக்கம் சார்பாக அவ்வூர் தாழ்த்தப்பட்ட இளைஞர்களும் மக்களும் தேநீக்கடைப் பிரவேசத் தைச் செய்தனர். மக்கள் சக்தியின் வலிமையாலும், இளைஞர்களின் உறுதியான நிதானமான நடைமுறையாலும் உரும்பிராய் தேநீர்க் கடைப் பிரவேசத்தின் போது குழப்பமோ எதிர் நடவடிக்கைகளோ ஏற்படவில்லை. அங்கு சில கடைகளில் சமத்துவமாகத் தேநீர் வழங்கப்பட்டது. சில கடைகள் பூட்டப்பட்டன. அத்துடன் கோவில் பொதுக்கிணற்றிலும் தண்ணீர் அள்ளி தமது சமத்துவத்தை இளைஞர்கள் நிலைநாட்டினர். ஆனால் இவற்றைத் தொடர்ந்து உரும்பிராயில் எவ்விதமான மோதல்களும் வெடிக்கவில்லை. மக்கள் போராட்டசக்தி மேலோங்கி நின்றதே இதற்குக் காரணமாகும். அதேவேளை அவ்வூர் சாதிவெறியர்கள் கடும் கோபமடைந்திருந்த போதிலும் அவர்களால் உரும்பிராய் பகுதி மக்களின் ஐக்கியத்தின் முன் எதுவும் செய்ய இயலவில்லை.

### சங்கானை தேநீர்க்கடைப் பிரவேசம்

அடுத்த பரீட்சைக்களமாகச் சங்கானைப் பிரதேசத்தில் தேநீர்க் கடைப்பிரவேசத்தை நடத்துவதென கட்சி தீர்மானித்தது. சங்கானையில் கட்சியின் சார்பான தயாரிப்புக் கூட்டம் நடைபெற்றது. தேநீர்க்கடைப் பிரவேசத்தின் போது கடைப்பிடிக்கப்படவேண்டிய வழி முறைகள் போன்றன விவாதிக்கப்பட்டன. **05-08-1967ல்** தேநீர்க்க டைப் பிரவேசத்திற்கான திகதி தீர்மானிக்கப்பட்டது.

குறித்த தினத்தில் சங்கானை நகரத்தில் உள்ள தேநீர்க் கடைகளில் தாழ்த்தப்பட்ட அவ் ஊர் இளைஞர்கள் ஒவ்வொரு தேநீர்க் கடையிலும் சென்று அங்குள்ள வாங்கு கதிரைகளில் அமர்ந்து தேநீர் தரும்படி கேட்டனர். பெரும் தொகையாகவோ அன்றி அமர்க்களத்தை ஏற்படுத்தும் படியாகவோ எவரும் நடந்து கொள்ளவில்லை. மூவர் நால்வர் மட்டுமே ஒவ்வொரு கடைக்குள்ளும் சென்று சமத்துவ நிலை கேட்டனர். ஏனையோர் வெளியே பார்வையாளர்களாக நின்றனர். ஓரிரு கடைகளில் தேனீர் கொடுத்தனர். சில கடைகளில் தண்ணீர் கொதிக்கவில்லை என்றனர். சிலர் கொடுக்கவே மறுத்தனர். மறுத்தவர்களோடு "ஏன் கொடுக்கக் கூடாது" "நாமும் தமிழர்கள் தானே" "இவ் ஊர்க்காரர்கள்

www.padippakam.com



தானே'' எனக் கேட்டனர். இதனால் தர்க்கங்கள் ஏற்பட்டன. தேனீர்க் கடைப் பிரவேசத்தில் ஈடுபட்ட அனைவருமே அவ்வூர் மக்களேயாவர். எனவே அவர்களுக்கு சமத்துவமாகத் தேநீர் கொடுக்க மறுப்பதற்கு எத்தகைய நியாயத்தையும் சாதியவாதிகளால் முன்வைக்க முடியவில்லை. இருந்தும் ஒரு தேநீர்க்கடைச் சொந்தக்காரர், தனது கடையில் தேநீர் தரும்படி வந்து பலாத்காரம் செய்ததாகவும் பொருட்களுக்கு சேதம் விளைவித்ததாகவும் பொலிஸில் பொய் முறைப்பாடு செய்தார். உடனடியாகவே இரு இளைஞர்களைப் பொலிஸ் விசாரணைக்காக அழைத்துச் சென்றது. சங்கானை பொலீஸ் நிலையத்திற்கு சென்ற போராளிகள் அங்கும் தமது நியாயத்திற்காக தர்க்கம் செய்யவேண்டி ஏற்பட்டது. இதில் தோழர் (மான்) நா. முத்தையா தலையிட்டு வாதாடிய பின் பொலீஸ் வாக்குமூலத்தைப் பெற்றுக்கொண்டு அவ்விருவரையும் விடுவித்தது.

இவ்வாறு தேநீர்க்கடைகளில் சமத்துவம் கேட்கும் நிலைக்கு சங்கானைப் பகுதியில் தாழ்த்தப்பட்ட மக்கள் முன்வந்த நிலையை சாதிவெறியர்களினால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. அன்று இரவே இத் தேநீர்க்கடைப் பிரவேசத்திற்கு ஆதரவு கொடுத்த உயர்த்தப்பட்ட சமூக கம்யூனிஸ்ட் தோழரான சங்கானைப் பட்டின சபையின் முன்னாள் தலைவர் **(மான்) நா. முத்தையாவின்** வீட்டைத் தாக்கினர். பொலிசின் பூரண ஒத்துழைப்போடு அடுத்தடுத்த நாட்களில் சங்கானைப் பகுதியின் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிரான தீவிர தாக்குதல்கள் தொடுக்கப் பட்டன. குறிப்பாக நிச்சாமம் கிராமம் குறிவைத்துத் தாக்கப்பட்டது. **07-08-1967** இரவு அக் கிராமத்தின் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து தாக்குதல்களும் வீடெரிப்புகளும் இடம்பெற்றன. இவை முழுக்க முழுக்க பொலிஸ் உதவியுடனேயே செய்யப்பட்டன. ஐம்பது பேர் வரை காயப் பட்டனர். பல வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. நிராயுதபாணிகளான தாழ்த்தப்பட்ட மக்கள் மீது ஏவப்பட்ட இச் சாதிய ஒடுக்குமுறையின் வன்முறையானது அம் மக்களை அடிபணிய வைக்கலாம் என வீண்தன மாக நம்ப வைத்தது. தாக்குதலில் இறங்கிய எதிரியைப் பின்வாங்கச் செய்யவும், அழிவுகளைப் பெருமளவில் தவிர்த்துக்கொள்ளவும் சத்தம் எழுப்புவதற்கு வயல்கள் தோட்டங்களில் பயன்படுத்தப்படும் கோடலி வெடிகளை வெடிக்கச் செய்து நிச்சாம கிராம இளைஞர்கள், மக்கள் சாதிவெறியர்களைப் பின்வாங்கச் செய்தனர்.

www.padippakam.com



சாதிவெறியர்களின் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்தவர்களில் **சின்னர் கார்த்திகேசு** (வயது 55) 12-8-67ல் மரணமடைந்தார். அவர் ஒக்ரோபர் 21 எழுச்சி காட்டிய போராட்டப் பாதையில் முதலாவது தியாகி ஆகினார். சுன்னாக எழுச்சி ஊர்வலத்தில் பங்குபற்றி இருந்த சின்னர் கார்த்திகேசு அதே உத்வேக உணர்வுடன் தன் உயிரைத் தியாகம் செய்தார். பல இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். இளைஞர்கள் இருவர் பலத்த வாள் வெட்டிற்கு உட்பட்டனர். சாதிவெறியர்கள் பொலீசாருடன் இணைந்து அட்டூழியம் செய்தமை அதிகரித்துக் கொண்டிருந்தது. கைது செய்தல், அடித்துத் துன்புறுத்தல், சித்திரவதைகள், சலம் பருக்குதல் என்பன சங்கானைப் பொலீஸ் நிலையத்தில் நடைபெற்றன. நிச்சாமம் கிராமத்தில் துப்பாக்கியுடன் வந்த பொலீஸ் படை அட்டகாசம் செய்தபோது ஒரு நடுத்தர வயதுப் பெண் ஒரு பொலீஸ்காரனின் கைகளில் இருந்த துப்பாக்கியை பறித்தெடுத்து "உங்களது துப்பாக்கிக்குப் பயந்து யாரும் பின்வாங்கப்போவதில்லை" எனக் கூறிய சம்பவம் மக்கள் போராட்டத்தின் உறுதியையும் பலத்தையும் எடுத்துக் காட்டியது.

**1967ல்** நடுப்பகுதியில் ஆரம்பித்த சங்கானைப் போராட்டம் **1968ம்** ஆண்டிலும் தொடர்ந்து சென்றது. ஒரு புறத்தில் சாதிவெறியர்களும் அவர்களுக்கு ஆதரவாக பொலீஸ் அடக்கு முறை யந்திரமும் செயற்பட்டது. சங்கானை பொலிஸ் நிலையத்தில் சார்ஜண்டாக சாதி வெறித் தமிழனான தாமோதரம்பிள்ளை என்பவன் இருந்தான். சாதி வெறியனாகவும் கம்யூனிஸ்ட் விரோதியாகவும் அவன் இருந்து வந்ததனால் சாதி வெறியர்களுக்கு பக்கபலமாக பொலீஸ் அமைந்திருந்தது. மறுபுறத்தில் சங்கானையின் தாழ்த்தப்பட்ட மக்களும் அவர்களின் பக்கம் புரட்சிகரக் கம்யூனிஸ்ட் கட்சியும் இருந்தது.

சாதிஅடக்கு முறைக்கும் தீண்டாமைக்கும் எதிரான போராட்டத்தில் சங்கானைப் பகுதி மக்கள் பிரமிக்கத்தக்க மன உறுதியையும் எதிர்த்துப் போரிடும் திறனையும் வெளிக்காட்டினர். தங்களைத் தற்காத்து எதிரியின் தாக்குதல்களை முறியடிப்பதில் தமது அனுபவத்தைத் தொகுத்து முன்னெடுத்தனர். ஆரம்பத்தில் மிகப்பெரிய சக்திபோல் தோற்றமளித்த சாதி வெறியர்களும் பிற்போக்கு வாதிகளும் படிப்படியாகத் தோல்வியைத் தழுவிக்கொண்டு வந்தனர்.

**1968ம்** ஆண்டு மாசி மாதத்தில் போராட்டத்தின்

www.padippakam.com



உச்சக்கட்டத்தில் **வன்னியன் குமரேசு** என்ற தாழ்த்தப்பட்ட போராளி சாதிவெறியர்களின் துப்பாக்கிச் சூட்டிற்குப் பலியாகினார். நிச்சாமம் மக்கள் சாதி அடக்குமுறைக்கு எதிரான போராட்டத்தில் இரண்டாவது தியாகியையும் இழந்தனர். போராட்டத்தில் வீர மரணமடைந்த குமரேசுவின் பிரேதத்தை தமது வழமையான பாதையால் மயானத்திற்கு எடுத்துச் சென்றபோது அப் பிரேத ஊர்வலத்தின் மீது சாதிவெறியர்கள் பொலிஸ் உதவியுடன் மறைந்திருந்து தாக்குதல் தொடுத்தனர். பிரேத ஊர்வலத்தின் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் முப்பத்திரண்டு பேர்வரை காயமடைந்தனர். அவ் ஊர்வலத்தின் முன்னணியில் சென்றுகொண்டிருந்த **தோழர்கள் கே. டானியல், சி.கா. செந்திவேல், எஸ்.ரி.என். நாகரட்ணம்** ஆகியோர் மயிரிழையில் உயிர்தப்பினர். பிரேத ஊர்வலத்தை துப்பாக்கிகள் கொண்டு தாக்கிய அச் சாதி வெறிக்கும்பல் மேலும் முன்னேறித் தாக்க விடாது போராளிகள் எதிர்த்தாக்குதலைத் தொடுத்துப் பின்வாங்கச் செய்தனர். ஏதாவது குறுக்குப் பாதைகளால் அப் பிரேதத்தைக் கொண்டு சென்று தகனம் செய்யும்படி சங்கானைப் பொலீஸ் தரப்பில் ஆலோசனை கூறப்பட்டது. அதற்கு நிச்சாமம் மக்கள் மறுத்துவிட்டனர். தமது வழமையான பாதையை மாற்ற முடியாது என்றும் திரும்பவும் அதே பாதையால் பிரேதத்தை எடுத்துச் செல்வதெனவும் முடிவு செய்து அதற்கான பாதுகாப்பு நடவடிக்கையிலும் ஈடுபட்டனர். காங்கேசன்துறை உதவிப் பொலீஸ் அதிபர் தலைமையில் வந்த பொலீஸ் படை எதுவும் செய்ய முடியாது இரவு 10 மணியளவில் அதே பாதையால் பிரேதத்தை எடுத்துச் செல்ல சம்மதித்து பாதுகாப்பும் கொடுக்க வேண்டி ஏற்பட்டது. பெரும் தொகையான மக்கள் எதற்கும் தயாரான நிலையில் மீண்டும் பிரேத ஊர்வலத்தை நடாத்தித் தகனம் செய்தனர். பிரேத ஊர்வலத்தின் மீதான மேற்படி அநாகரிகத் தாக்குதல் சாதிவெறியர்களின் கோரத்தனத்தை முழுத் தமிழர்கள் முன்பும் அம்பலமாக்கியது. அதே வேளை முழுத் தாழ்த்தப்பட்ட மக்களையும் மேலும் எழுச்சி பெற வைத்தது.

சாதிவெறியர்களின் துப்பாக்கிகளுக்கு மக்கள் மத்தியிலிருந்து இருவர் இரையாக்கப்பட்ட அதேவேளை. சாதிவெறியர்களின் பக்கத்தில். தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதான சாதி வெறியர்கள் திட்டமிட்டு அழிக்கப்பட்டனர். இவ் அழிப்பு நடவடிக்கை வெறும் மேலெழுந்தவாரியானவை அல்ல. சாதி வெறிக்கு மூல காரணமானவர்களாகவும்

www.padippakam.com



மக்களுக்கு எதிரான தாக்குதல்களுக்கு சூத்திரதாரிகளாகவும் இருந்து வந்த முக்கிய புள்ளிகளே அவ்வாறு குறிவைத்து அழிக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

சங்கானைப் பகுதியில் பிரிவு பிரிவாக வாழ்ந்து வந்த தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவரும் தனி ஒரு சக்தியாக ஐக்கியப்பட்டனர். அவர்களின் முன்னணியிலே நிச்சாமம் மக்கள் இருந்தனர். அவர்களுக்குக் கம்யூனிஸ்ட் கட்சியின் சரியான வழிகாட்டலும் தலைமையும் இருந்தது. அத்துடன் நல்லெண்ணம் கொண்ட உயர் சமூக மக்களின் பலமான ஆதரவும் இருந்தது. ஆதலால் போராட்டம் மக்கள் போராட்டமாக வேகமடைந்தது. விட்டுக்கொடுக்காத, சரணடையாத பாதையில் சங்கானைப் போராட்டம் முன்னேறிக் கொண்டிருந்தது. சங்கானைப் போராட்டத்தின் செம்மைமிக்க தீப்பொறிகள் வடபகுதி எங்கும் பற்றிப் பரவ ஆரம்பித்தன. சிறுபொறி பெருங் காட்டுத் தீயை உருவாக்கும் என்பது போல் அடக்கப்பட்ட மக்கள் தமது நியாயமான உரிமைகளுக்காக கிளர்ந்தெழுந்து போராட்டங்களை ஆரம்பித்தனர். அவ்வாறு கிளர்ந்தெழுந்த மக்களை ஒழுங்குபடுத்திக் கொள்கை, அமைப்பு, நடைமுறைத் தந்திரோபாயம் ஆகிய வழிகளில் தலைமை வழங்கும் பொறுப்புக்கும் புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியும் அதன் வட பிரதேசக் குழுவும் தோள்கொடுத்து நின்றன.

## தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் தோற்றம்

இச் சந்தர்ப்பத்திலேயே சாதி அடக்குமுறையையும் தீண்டாமையையும் எதிர்க்கும் அனைத்துச் சக்திகளையும் ஐக்கியப்படுத்தக் கூடிய ஒரு பரந்த ஐக்கியமுன்னணி அமைப்பின் அவசியத்தைக் கட்சி உணர்ந்தது. கம்யூனிஸ்டுகளும் அல்லாதவர்களும் தீண்டாமையை எதிர்க்கும் ஜனநாயக முற்போக்கு நல்லெண்ணம் படைத்தவர்களும் ஒருங்கே இணைந்து செயற்படக் கூடிய ஒரு அமைப்பின் அவசியம் நடைமுறை ரீதியாகவே தேவைப்பட்டது. அத் தேவையில் இருந்து உருவாக்கப்பட்டதே தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கமாகும். அடிப்படையில் சாதி ஒடுக்கு முறையை எதிர்த்துத் தீண்டாமைக்கு எதிரான போராட்ட இயக்கத்தை முன்னெடுப்பதற்கான ஒரு பரந்த ஐக்கிய முன்னணி அமைப்பாகவே தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் தோற்றுவிக்கப்பட்டது.

இச் சந்தர்ப்பத்தில் ஏற்கனவே தாழ்த்தப்பட்ட மக்கள்

www.padippakam.com



மத்தியில் உருவாக்கப்பட்டிருந்த அமைப்புகளுக்கும் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்திற்கும் இடையில் உள்ள அடிப்படையான வேறுபாட்டினைக் கண்டுகொள்வது அவசியமாகும். முன்னைய அமைப்புகளில் சிறுபான்மைத் தமிழர் மகாசபை உட்பட அனைத்திலும் தாழ்த்தப்பட்ட மக்கள் (குறிப்பிட்ட சில சாதியினர்) மட்டுமே இணைந்திருந்தனர். அத்துடன் எந்தச் சாதியினர் தலைவராக வருவது, யார் எண்ணிக்கையில் கூடியவர்கள் என்ற அடிப்படையிலும் சில சந்தர்ப்பங்களில் யார் உயர்ந்தவர்கள் யார் தாழ்ந்தவர்கள் என்ற அடிப்படையிலும் கூடச் சாதியப்படிநிலைப் பிரச்சினைகள் அந்த அமைப்புகளில் தலைதூக்கியமை இரகசியமான ஒன்றல்ல. ஆனால் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் மட்டுமன்றி உயர்த்தப்பட்டோர் மத்தியிலிருந்து உழைக்கும் வர்க்க நிலையிலும் உணர்விலும் அரசியல் வளர்ச்சி பெற்றவர்களும், தீண்டாமையை எதிர்க்கும் அனைத்துப் பிரிவினரும் இடம்பெற்றனர். முஸ்லிம் மக்களும், சிங்கள மக்களும் அதில் அங்கம் பெற்று தமது பங்களிப்பை உரிய வேளைகளில் வழங்கினர் என்றால் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் குறிக்கோள் எவ்வளவிற்குப் பரந்த அடிப் படையில் உருவாக்கப்பட்டது என்பதைப் புரிந்துகொள்ள முடியும். அக்காலகட்டத்தில் யாழ்ப்பாண முஸ்லீம் வட்டாரத்தில் புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி பலமுடையதாக விளங்கியது. கட்சி, வாலிபர் இயக்க நடவடிக்கைகளில் முஸ்லீம் இளைஞர்கள் வர்க்க உணர்வுடனும் கம்யூனிச இலட்சிய வேட்கையுடனும் பங்கு கொண்டு வந்தனர். சாதிய தீண்டாமை எதிர்ப்பு போராட்டத்தில் அவர்கள் முன்னணியில் இருந்தும் வந்தனர். அக்காலத்தில் தோழர் **சுபைர் இளங்கீரன்** தொழிலாளி பத்திரிகையின் ஆசிரியராக இருந்தார். அவர் அடிக்கடி யாழ்ப்பாணம் வந்து சாதிய எதிர்ப்பும் கூட்டங்களிலும் கருத்தரங்குகளிலும் பங்கு பற்றி வந்தார். தோழர்கள் **எம்.ஏ.சி. இக்பால், சலீம், காதர், அஸீஸ், கன்சூர், றசீன், கமால்** போன்ற தோழர்கள் இப் போராட்டங்களின் போது முன்னணியில் இருந்து செயற்பட்டு வந்தனர். தமக்குரிய அமைப்பு ரீதியான பொறுப்புகளையும் பங்களிப்புகளையும் அவர்கள் வழங்கி வந்தமை குறிப்பிடத்தக்கதாகும். மேலும் உதாரணத்திற்கு ஒரு சம்பவத்தைக் குறிப்பிடலாம். சங்கானைப் போராட்டத்தின் உச்சகட்டத்தில் கட்சியின் கொழும்புத் தலைமைக் காரியாலயத்தில் இருந்து பத்தாயிரம் துண்டுப்பிரசுரங்களை யாழ்ப்பாணத்திற்கு புகையிரதம் மூலம் தோழர் எஸ்.

www.padippakam.com



சிவதாசன் எடுத்து வந்தார். இதனை முன்கூட்டியே இரகசியப் பொலீஸ் மூலம் அறிந்த யாழ்ப்பாணப் பொலிசார் யாழ். புகையிரத நிலையத்தில் காத்திருந்து அத் துண்டுப் பிரசுரங்கள் முழுவதையும் கைப்பற்றி அத் தோழரையும் கைது செய்து பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைத்தனர். இச் செய்தி உடன் கொழும்புத் தலைமையகத்திற்கு அறிவிக்கப்பட்டது. இரண்டு நாள் கழித்து அதே துண்டுப் பிரசுரம் பத் தாயிரம் அச்சிடப்பட்டு யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்டு வடபகுதி பூராவும் விநியோகிக் கப்பட்டது. இப் பத்தாயிரம் துண்டுப் பிரசுரங்களையும் யாழ்ப்பாணத்திற்கு தம்முடன் எடுத்து வந்தவர்கள் பதினைந்து பௌத்த பிக்குகள் ஆவர். அவ் வேளை கட்சியின் ஆதரவாளர்களாக இருந்த அம் முற்போக்கு பௌத்த பிக்குமார் கள் அவ்வாறு செய்து கொண்டதுடன் சங்கானைக்கும் ஏனைய இடங்களுக்கும் சென்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதலும் அனுதாப மும் தெரிவித்துத் தமது ஆதரவையும் வெளிப்படுத்தினர். இது போன்ற பல குறிப்பிடத்தக்க சம்பவங்கள் போராட்டத்திற்கு ஆதரவாக இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கதாக அமைந்தது.

சங்கானைப் போராட்டம் உச்சகட்டத்தில் இருந்த **1967ம்** ஆண்டு பிற்பகுதியில் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் உருவா க்கப்பட்டது. அதை உருவாக்கி வழிநடத்திய முழுப் பொறுப்பும் கட்சியின் வடபிரதேசக் குழுவிடமே இருந்தது. 1966ம் ஆண்டு ஒக்ரோபர் எழுச் சியின் ஓராண்டு நினைவு நாளிலே அதாவது **21-10-1967ல்** யாழ்ப்பா ணம் மாநகர சபை மண்டபத்தில் சங்கானைப் போராட்டத்தின் முதல் தியாகியான சின்னர் கார்த்திகேசுவின் பெயரிலான அரங்கில் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் முதலாவது மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டில் வெகுஜன இயக்கத்தின் தலைவராக **எஸ்.ரி.என். நாகரட்ணம்** தெரிவு செய்யப்பட்டார். இணைச் செயலாளர்களாக **அல்வாய் சி. கணேசன், மட்டுவில் எம். சின்னையா** ஆகியோர் தெரிவு செய்யப்பட்ட னர். உப தலைவர்களாக **டாக்டர் சு.வே சீனிவாசகம், கே.ஏ. சுப்பிரமணியம்,** நா. முத்தையா (மான்) ஆகியோ ரும் அமைப்பாளராக **கே. டானியலும்** தெரிவு செய்யப்பட்டனர். இம் மாநாட்டில் பொதுச் சபையும் செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டன. இக் குழுக்களில் முக்கிய செயற்பாட்டாளர்களாக வடபுலத்தின் சகல பகுதிகளில் இருந்தும் பரந்தளவில் இடம் பெற்றனர். தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட **எஸ்.ரி.என். நாகரட்ணம்** சுன்னாகத்தைச் சேர்ந்தவர். முன் பக்கங்களிற் குறிப்பிட்ட

www.padippakam.com



யோவல் போல் போன்று ஓரளவிற்கு வசதி பெற்ற குடும்பத்திலிருந்து வந்தவர். யாழ் சென். பற்றிக்ஸ் கல்லூரியில் உயர்வகுப்பு வரை ஆங்கிலக் கல்வி பயின்றவர். இளவயதிலிருந்தே சமூக அக்கறையும் சாதி ஒடுக்கு முறைக்கு எதிரான நிலைப்பாட்டில் தீவிரம் கொண்டவராகவும் திகழ்ந்தவர். அதனால் இளமைக்காலம் முதல் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆதர வாளராகவும் இருந்து வந்தார். அவர் புடைவை வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த வர். ஒக்ரோபர் 21 எழுச்சியில் பங்கு கொண்டு பொலீஸ் தாக்குத லுக்கும் ஆளானவர். வெகுஜன இயக்கத் தலைமைத்துவத்தை தனது சுய நலத் திற்கோ பேர் புகழுக்கோ பட்டம் பதவிகளுக்கோ பயன்படுத்தாத ஒரு நேர்மையான போராளியாகத் தலைமை தாங்கி நின்றவர். சங்கானை மாவிட்டபுரம் போராட்டக்களங்களில் சக போராளிகளால் மயிரிழையில் உயிர் பாதுகாக்கப்பட்டவர். சமாதானப் பேச்சுவார்த்தைகளில் உறுதியான நிலை நின்று எவ்வகையிலும் விட்டுக் கொடுக்காத நிலைப்பாட்டை கடைப்பிடித்து போராட்டங்களுக்கு வலுச்சேர்ப்பதில் கூட்டு நடைமுறை களைப் பின்பற்றியவர். அவர் ஒருபோதும் கட்சி உறுப்பினராகியதில்லை. ஆனாற் கட்சியின் தலைமையுடனும் போராளிகளுடனும் ஊழியர்களுட னும் இணைந்து நின்று கட்சியின் வழிகாட்டலை நம்பிக்கையுடனும் பொறுப்புணர்வுடனும் முன்னெடுத்த தோழராக செயற்பட்டு வந்தமை அவருக்குரிய சிறப்பு என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தினது இம் முதலாவது மாநாட்டில் வடபகுதி பூராவும் ஆலய. தேநீர்க்கடைப் பிரவேச இயக்கத்தைப் பரவலாக முன்னெடுப்பது என நிறைவேற்றப்பட்ட தீர்மா னத்திற்கு அமைவாகத் தென்மராட்சிப் பகுதியில் மக்கள் அணிதிரண்டு. முதலில் சாவகச்சேரி, கொடிகாமம் ஆகிய இரண்டு நகரங்களிலும் தேனீர்க் கடைப் பிரவேசத்தில் ஈடுபட்டனர். இவ் இயக்கத்தில் மட்டுவில். மந்துவில் பகுதி மக்களும் இளைஞர்களும் முன்னணிப் பாத்திரம் வகித்தனர். சாவகச்சேரி தேநீர்க் கடைப் பிரவேசம் அசம்பாவிதங்கள் இன்றி இடம் பெற்ற போதிலும். கொடிகாமம் தேநீர்க் கடைப்பிரவேசம் சிறிய அசம்பாவிதத்துடன் முடிவுற்றது. ஆனால் கொடிகாமம் சாதிவெறியர்களுக்கு இத் தேநீர்க்கடைப் பிரவேசம் பொறுக்க முடியாத ஒன்றாகியது. அவர்கள் ஆயுதபாணிகளாக மந்துவில் பகுதித் தாழ்த்தப்பட்ட மக்கள் மீது தமது தாக்குதல்களைத் தொடுத்தனர். எல்லாப் பகுதிகளும் போல் தென்மராட்சியும் சாதி அடக்குமுறைக்கும்

www.padippakam.com



தீண்டாமைக்கும் பெயர்பெற்ற இடமாகும். அதற்கு உதாரணமாக அங்கு நிகழ்ந்த ஒரு சம்பவத்தைக் குறிப்பிடலாம்.

வருடாவருடம் அப்பகுதியில் மாட்டுவண்டிச் சவாரி இடம் பெறுவது வழக்கம். ஒரு முறை இச் சவாரிப் போட்டி இடம்பெற்றது. அவ்வேளை அத்தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தவர் உயர் வேளாள ஆதிக்க மேட்டுக்குடியைச் சேர்ந்தவரும் தமிழ்க் காங்கிரஸ் கட்சியைப் பிரதிநிதித்துவம் செய்தவருமான வி. குமாரசாமி ஆவார். அவரை அன்றைய மாட்டுவண்டிச் சவாரிப் போட்டிக்கு பிரதம விருந்தின ராக அழைத்திருந்தனர். அவரும் அங்கு வந்திருந்தார். மாட்டுச்சவாரி போட்டி முடிவடைந்ததும் முதலாவதாக வெற்றிபெற்று வந்த மாட்டு வண்டி செலுத்திய நபருக்கு மாலை அணிவித்து கௌரவிக்கப்படுவது நடைமுறை வழக்கம். ஆனால் அன்றைய பிரதம விருந்தினரான பாராளுமன்ற உறுப்பினர் தான் அணிவிக்க வேண்டிய மாலையை மாட்டுக்கே அணிவித்தார். மாட்டுவண்டியைச் செலுத்தி வந்த நபர் ஒரு தாழ்த்தப்பட்ட வர் என்பதே அவ்வாறான செயலுக்குக் காரணமாகும். இச் செயலுக்கு ஒரு விளக்கமும் கொடுக்கப்பட்டது. அதாவது வெற்றிபெற்றது மாடுகளே யாகும். எனவே மாட்டுக்கு மாலை அணிவித்தது சரியானதே என்பதாகும். உயர்சாதிய ஆதிக்கம் தாழ்த்தப்பட்ட மக்களை மாடுகளிலும் பார்க்க கீழ் நிலையில் வைத்து நடாத்தி வந்தமையை மேற்படி சம்பவத்தின் மூலம் காணக் கூடியதாக இருந்தது.

இத்தகைய மந்துவில் பகுதியில் தான் சாதிவெறியர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் மீது வெறிகொண்ட தாக்குதல்களை மேற்கொண்ட னர். அவர்களுக்குப் பொலிஸ் மட்டுமன்றி அன்றைய பாராளுமன்ற உறுப்பினராக இருந்த வீ.என். நவரத்தினம் போன்றோரும் பச்சைக்கொடி காட்டினர். ஆனால் அத்தகைய தமிழரசுக் கட்சியினருக்கு சேவகம் செய்யத் தாழ்த்தப்பட்டவர்கள் மத்தியில் இருந்து கல்வியின் மூலம் மேல் நிலையாக்கம் பெற்ற ஒரு பகுதியினரும் இருக்கவே செய்தனர். அவர்கள் போராட்டத்தின் போது உள் ஒன்றும் புறம் ஒன்றும் வைத்துச் செயற்பட்டு வந்தனர். இவற்றை எல்லாம் மீறியே மந்துவில் போராட்டம் மக்கள் மூலம் முன் சென்றது.

அதாவது இப் போராட்டங்களின் கொள்கை ரீதியான. அமைப்பு ரீதியான உள்ளார்ந்த தன்மையைப் புரிந்துகொள்ள முடியாத சாதிவெறியர்களும் பிற்போக்குவாதிகளும் இப் போராட்டங்களில்

www.padippakam.com



முன்னிற்கும் போராளிகள் சிலரை அழித்து விட்டால் தமது சாதிய ஆதிக்கத்தை நிலை நிறுத்தி விடலாம் என்று வீண்தனமாக நம்பினர். ஆனால் ஆண்டாண்டு காலமாக அடிமைத்தனங்களுடன் நடத்தப்பட்டு வந்த தாழ்த்தப்பட்ட மக்கள் போராட்டத்தில் உயிர்த் தியாகம் செய்யத் தயங்காத புதிய வரலாறு படைக்கத் தயாராகிக் கொண்டனர்.

**14-2-1968**ல் மந்துவில் மக்களின் போராட்டக் களத்தில் முன்நிலைப் போராளியாக இருந்த **எஸ். இரத்தினம்** சாதி வெறியர்களினால் வழிமறிக்கப்பட்டு கோழைத்தனமாகவும் கோரத்தன கொல்லப்பட்டார். போராளி இரத்தினத்தின் படுகொலை மந்துவில். மட்டுவில் பிரதேச மக்களை மட்டுமன்றி முழுத் தாழ்த்தப்பட்ட மக்களையும் மேலும் உந்தித்தள்ளி போராட்டப் புயலில் கிளர்ந்தெழ வைத்தது. அதன் பிரதிபலிப்பாக அப் பகுதியிற் சாதிவெறியர்களும் உயிர் இழப்புகளைச் சந்திக்க நேர்ந்தது. அதன் காரணமாக மந்துவில் கிராமத்தின் மக்கள் சிலர் மீது வழக்குகள் போடப்பட்டன. கொலைக் குற்றச்சாட்டில் போராளிகளான **செல்லத்துரை, ஆறுமுகம்** ஆகிய இருவரும் விளக்கமறியலில் நீண்ட நாட்கள் வைக்கப்பட்டனர். நீதிமன்ற விசாரணையின் இறுதியில் அவர்கள் விடுதலை பெற்றனர். இருப்பினும் சாதிவெறியர்கள் மக்கள் போராட்டத்தின் முன்னால் நின்று பிடிக்க முடியாது பின்வாங்கினர். அன்றைய போராட்டத்தில் மந்துவில் பகுதி மக்கள் காட்டிய போராட்ட ஐக்கியமும் புரட்சிகர உணர்வுகளும் இலகுவில் மறக்கக் கூடியவை அல்ல. போராட்டக் களத்திலும் சிறையிலும் மந்துவில், மட்டுவில் போராளிகள் செய்த தியாகம் எதுவுமே வீண்போகவில்லை. அன்றைய உறுதிமிக்க போராட்டமே கொடிகாமம், சாவகச்சேரி உள்ளிட்ட தென்மராட்சிப் பகுதிகளின் தேநீர்க்கடைகள் உணவகங்களில் தாழ்த்தப்பட்ட மக்கள் சமத்துவ த்தை பெற்றுக்கொள்ள காரணமாகியது.

சங்கானைப் போராட்டத்தின் மற்றொரு தீப்பொறி வலிகிழக்குப் பிரதேசமான அச்சுவேலியில் வீழ்ந்தது. அச்சுவேலி தேநீர்க்கடைகளில் அப் பிரதேச தாழ்த்தப்பட்ட மக்கள் தமது சமத்துவத்தை நிலைநாட்ட முற்பட்டனர். அதேபோல் உலவிக்குளம் பிள்ளையார் கோவிலிலும் ஆலயப் பிரவேசம் செய்யக் களமிறங்கினர். இதனால் ஆத்திர மடைந்த சாதிவெறியர்கள் தமது கைவரிசையைக் காட்டி உரிமை கோரிய மக்களை அடக்கி விடலாம் என நினைத்துச் செயற்பட்டனர். சாதிவெறிச் சண்டியர்கள் ஆங்காங்கே தோன்றினர். அச்சுவேலியில் சாதி வெறியர்களு க்கெதி ரான

www.padippakam.com



போராட்டத் தயாரிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த வேளை ச. **அரியரட்ணம்** என்ற இளம் போராளி வெடிவிபத்தில் தன்னைத் தியாகி யாக்கிக் கொண்டார். இச்சம்பவம் சாதி வெறியர்களையும் பிற்போக்குவாதி களையும் கிலிகொள்ளச் செய்தது. மக்களின் நீதியான கோரிக்கைகளின் முன்னால், அவர்களது நியாயமான போராட்டத்தின் மத்தியில் சாதிவெறியர்களினால் நின்றுபிடிக்க முடியவில்லை. சாதிவெறிச் சண்டியர்கள் பின்வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டது. பிரதான சாதி வெறியன் அச்சுவேலிப் பகுதியில் அழித்தொழிக்கப்பட்டான். அச்சுவேலிப் போராட்டத்தில் பத்தமேனி அச்சுவேலி தெற்கு வடக்கு பகுதிகளின் தாழ்த்தப்பட்ட மக்கள் ஐக்கியப்பட்டிருந்தனர்.

**1968ம்** ஆண்டு காலப்பகுதி வடபகுதியின் தேனீர்க் கடைப் பிரவேச ஆலயப் பிரவேச இயக்கத்தின் வேகம் மிக்க காலகட்டமாகும். சங்கானைப் போராட்டம் இரண்டாவது ஆண்டிலும் தொடர்ந்து கொண் டே இருந்தது. சங்கனைப் பகுதி மக்கள் பலமுனைப் பாதிப்புக்களின் மத்தியிலும் போராட்டத்தை முன்னெடுத்த வண்ணமே இருந்தனர். ஒரு கட்டத்தில் இரண்டு வாரத்திற்கு மேல் வெளித்தொடர்புகள் எதுவு மற்ற நிலையில் நிச்சாமம் கிராமம் சாதிவெறியர்களினால் சுற்றி வளைக்கப் பட்டிருந்தது. போதாக்குறைக்கு நிச்சாமத்தில் பொலீஸ் நிலையம் அமைக் கப்பட்டது. அந்தளவிற்கு நிச்சாம மக்கள் சாதிவெறியர் களுக்கும் பொலீசிற் கும் சிம்ம சொப்பனமாக விளங்கினர். நிச்சாம மக்கள் உணவுப் பொருட்க ளைப் பெறமுடியவில்லை. அவர்களது பகுதியில் அவ் வேளை ப.நோ. கூட்டுறவுச் சங்கம் இருக்கவில்லை. இந்நிலையில் மக்கள் பட்டினியிலும் எதிரிக்கு அடிபணியாது உறுதியாகவே இருந்தனர். வயலில் இருந்த குளத்து மீனும் தோட்டங்களில் இருந்த காய்கறிகளுமே அவர்களுக்கு ஆகாரமாக இருந்தன. இருந்தும் அவர்கள் போராட்டத்தைக் கையிழக்கவில்லை. அப் போராட்டக் காலத்தில் பல இடதுசாரிப் புத்திஜீவிகளும் இலக்கியப் படைப்பாளிகளும் சங்கானைக்கும் அதன் மையப்பகுதியாக விளங்கிய நிச்சாமத்திற்கும் சென்று அம் மக்களின் ஐக்கியத்தையும் உறுதிப் பாட்டையும் நேரில் கண்டனர். அம் மக்களுக்கு தமது ஆதரவு ஒருமைப் பாட்டை தெரிவித்த னர். தென்னிலங்கையில் இருந்தும் சமூக அரசியல் பிரமுகர்கள் வந்து சென்றனர். அவர்களில் ஒருவரான மட்டக்களப்பைச் சேர்ந்த **கவிஞர் சுபத்திரன்** தனது காலத்தால் அழியாத ஒரு கவிதையால் அன்றைய

www.padippakam.com



சங்கானைப் போராட்ட நிலையினைப் படம் பிடித்துக் காட்டினார். அது ஒரு வரலாற்று ஆவணப் பதிவாகியது. அக் கவிதையினை இங்கு முழுமையாகத் தருவது பயன் தருவதாகும்.

## சங்கானைக்கென் வணக்கம்!

சங்கானைக் கென் வணக்கம்
சரித்திரத்தில் உன் நாமம்
மங்காது யாழகத்து
மண்ணிற் பலகாலம்
செங்குருதிக் கடல் குடித்துச்
செழித்த மதத்திற்குள்
வெங்கொடுமைச் சாக்காடாய்
வீற்றிருந்த சாதியினைச்
சங்காரம் செய்யத்
தளைத்தெழுந்து நிற்கின்ற
சங்கானைக் கென் வணக்கம்!

கோயிலெனும் கோட்டைக்குள்
கொதிக்கும் கொடுமைகளை
நாயினிலும் மிக்க
நன்றிப் பெருக்கோடு
வாயிலிலே நின்று
வாழ்த்தும் பெரும் சாதி
நாய்கள் வாலை
நறுக்கி எழுந்தாய்
சங்கையிலே நீ யானை

www.padippakam.com



சங்கானை- அந்தச்
சங்கானைக் கென் வணக்கம்!

எச்சாமம் வந்து
எதிரி நுழைந்தாலும்
நிச்சாமக் கண்கள்
நெருப்பெறிந்து நீறாக்கும்!

குச்சுக் குடிசைக்குள்
கொலுவிருக்கும் கோபத்தை
மெச்சுகிறேன்! சங்கானை
மண்ணுள் மலர்ந்த
மற்ற வியட்நாமே! உன்
குச்சுக் குடிசைக்குள்
கொலுவிருக்கும் கோபத்தை
மெச்சுகிறேன்! மெச்சுகிறேன்!!

எண்ணத்திற்கு கோடி
ஏற்றம் தருகின்றாய்
புண்ணுற்ற நெஞ்சுக்குள்
புதுமை நுழைக்கின்றாய்
கண்ணில் எதிர்காலம்
காட்டி நிலைக்கின்றாய்
உன்னை எனக்கு
உறவாக்கி வைத்தவனை
என்னென்பேன்!
என்னென்பேன்!!

படிப்பகம்

www.padippakam.com



அதற்கெதிரான போராட்டங்களும்

ஐந்து பெரும் கண்டத்தும்
எழுந்து வரும் பூகம்பம்
தந்தவனாம் மாஓவின்
சிந்தனையால் உன் நாமம்
செகமெல்லாம் ஒலிக்கட்டும்
செங்கொடியின் வீடே
சிறுமை உடைத்தெறியும்
சிங்கத்தின் நெஞ்சே!
செய்தேன் உனக்கு
வணக்கம்!

சுபத்திரன்

தொழிலாளி வார இதழ் 17-07-1968.

இவ்வாறு புரட்சிகர மக்கள் போராட்டம் ஒன்றின் அளவற்ற பலத்தைச் சங்கானையிலே காணமுடிந்தது. அதேவேளை கொலைக் குற்றச்சாட்டுக்கள் உட்பட பல்வேறு குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி விளக்க மறியல் சிறையில் பல தோழர்களை அடைத்தனர். சங்கானைப் போராட்டம் காரணமாக சுமார் 80 வழக்குகள் தொடுக்கப்பட்டிருந்தன. **தோழர் பா. பசுபதி, வ. சின்னத்தம்பி** ஆகிய இருவரிலும் கொலைக் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. அவ்வேளை **தோழர் பசுபதி** சங்கானை பட்டின சபையின் ஒரு உறுப்பினராக இருந்து வந்தார். அவர் நீண்ட நாட்களுக்கு விளக்கமறியலில் இருந்ததால் பட்டினசபை உறுப்பினர் பதவியும் இல்லாமல் போனது. **தோழர் பசுபதி** தனது இளமைக் காலம் தொட்டு கம்யூனிஸ்ட் கட்சியுடன் இணைந்து செயற்பட்டு வந்த ஒரு போராளியாவார். 1966 ஒக்ரோபர் 21 எழுச்சியின் ஊடாக கட்சி வெகுஜன இயக்கம் ஆகியவற்றை முன்னெடுக்கும் முன்னணிப் போராளியாக அர்ப்பணிப்புடன் போராடி வந்த ஒரு தோழராவர். இவ்விருவரினதும் வழக்கு விசாரணை கொழும்பு உயர் நீதிமன்றத்தில் சிங்களம் பேசும் யூரி சபை முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. பிரபல வழக்கறிஞர் வனம் ராஜரட்ணம் சந்தேக நபர்கள் சார்பாக வாதாடி னார்.

www.padippakam.com



விசாரணை முடிவில் இருவரும் நிரபராதிகள் என தீர்ப்பு வழங்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர். யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற கொலை வழக்குகளில் சிங்கள யூரி சபை இருக்க வேண்டுமெனத் தாழ்த்தப்பட்ட சந்தேக நபர்கள் விண்ணப்பித்த படியால் யூரர்கள் நியமிக்கப்பட்டனர். தமிழ் யூரி சபையினர் உயர் சாதியினராகவே இருப்பர் என்பதாலேயே இவ்வாறு கேட்க நேர்ந்தது.

இவ்வேளை வட்டுக்கோட்டையின் பாராளுமன்றப் பிரதிநிதியாகத் தமிழரசுத் தளபதி என வர்ணிக்கப்பட்ட அமிர்தலிங்கம் இருந்தார். பாராளுமன்றத்தில் யூ.என்.பி அரசாங்கத் தரப்பில் வீற்றிருந்த இந்தத் தமிழரசுக் கனவான்களைப் பார்த்து முற்போக்குச் சிங்கள பாராளுமன்றப் பிரதிநிதிகள் கேள்விக் கணைகள் தொடுத்தனர். இவ்வாறு தாழ்த்தப்பட்ட மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு ஆதரவு தெரிவித்து அவர்களுக்காகப் பாராளுமன்றத்தில் அடிக்கடி குரல் கொடுத்து வந்தவர் அன்றைய கம்பஹா பாராளுமன்ற பிரதிநிதியான **திரு. எஸ்.டி. பண்டாரநாயக்கா** ஆவார். 1966ம் ஆண்டு ஒக்ரோபர் 21 எழுச்சியின் போது இடம் பெற்ற காட்டுமிராண்டித்தனமான பொலீஸ் தாக்குதல் பற்றி எஸ்.டி. பண்டாரநாயக்கா பாராளுமன்றத்தில் கேள்வி கேட்டார். பதிலளித்த பிரதமர் டட்லி சேனநாயக்க அமைதிக்குப் பங்கம் ஏற்படும் என்பதால் ஊர்வல அனுமதி மறுக்கப்பட்டது என்றும் சட்டத்தை மீறியதால் பொலிஸ் நடவடிக்கையில் இறங்கியது என்றும் பதில் தரப்பட்டது. இவ்வாறு பல நிலைகளிலும் அன்று அவர் அப்போராட்டத்திற்கு அளித்த ஆதரவும் பங்களிப்பும் நன்றியுடன் என்றும் நினைவுகூரத்தக்கன. அவர் சங்கானையிலும் மற்றும் இடங்களிலும் பாதிக்கப்பட்ட மக்களை நேரிற் சென்று சந்தித்து ஆறுதல் கூறுவதிலும் பாராளுமன்றத்தில் உண்மைகளை எடுத்துக்காட்டி அம்பலப்படுத்துவதிலும் தாழ்த்தப்பட்ட மக்களின் போராட்ட நியாயத்தை வற்புறுத்துவதிலும் முன்னின்றவர்.

அதேவேளை தனது வட்டுக்கோட்டைத் தொகுதியில் தன் வீட்டிலிருந்து இரண்டு மைல்களுக்குள் இருந்த சங்கானையில் இடம் பெற்ற போராட்டம் பற்றியும் அங்கு தாழ்த்தப்பட்ட மக்கள் தாக்கப்பட்டுக் கொல்லப்பட்டமை வீடுகள் எரிக்கப்பட்டமை பற்றியும் பாராளுமன்றத்தில் அமிர்தலிங்கத்திடம் கேட்கப்பட்ட போது அப்படி எதுவுமே அங்கு நடக்கவில்லை என்று பொய் கூறிய சந்தர்ப்பம் வரலாற்றில் மறக்கப்பட முடியாதது. மற்றொரு சந்தர்ப்பத்தில் "சங்கானையில் நடப்பது சாதியப் போராட்

www.padippakam.com



டம் அல்ல. வியட்னாம் போராட்டம்'' எனவும் ''சங்கானைப் போராட்டம் அல்ல ''சங்காய்ப் போராட்டம்'' எனவும் வக்கிரத்துடன் கிண்டல் செய்தவரும் அதே அமிர்தலிங்கமாவார். இது தமிழரசுக் கட்சியினதும் அதன் தலைவர்களினதும் சுயரூபத்தை வெளிப்படுத்த உதவியது. அதேவேளை திரு. சி. கதிரவேற்பிள்ளை ஓரிரு சந்தர்பங்களில் ஆலயப் பிரவேச வழக்குகளில் தோன்றி சட்டரீதியில் எவரும் ஆலயப் பிரவேசம் செய்வதைத் தடுக்கமுடியாது என வாதிட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இது ஒரு வகையில் தாங்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் இருந்து தனிமைப்படாது இருக்க உதவும் என்ற வகையிலான ஒரு விதமான கண்துடைப்பாகவே இருந்தது.

மேலும் 1968ம் ஆண்டு இரண்டு பிரசித்தி பெற்ற ஆலயங்களை ஆலயப் பிரவேசப் போராட்டத்திற்காக வெகுஜன இயக்கம் தேர்தெடுத்தது. ஒன்று மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயம், இது தென்மராட்சியில் அமைந்த பிரசித்தி பெற்ற ஒரு ஆலயமாகும். இரண்டாவது வலி வடக்கு மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலாகும். தமிழரசுக் கட்சியின் தலைவரான திரு. எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தின் தொகுதியில் அமைந்திருந்த இக் கோவிலின் உரிமையாளராக விளங்கிய துரைசாமிக் குருக்களின் குடும்பத்தினர் அவ்வேளை தமிழரசுக் கட்சியின் பிரதான ஆதரவாளர்களாக விளங்கியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. தமிழ்க் காங்கிரஸ் கட்சியில் இருந்து செல்வநாயகமும் வன்னியசிங்கமும் வெளியேறிய பின் இதே மாவிட்டபுரம் கோவில் மண்டபத்தில் தான் தமது முதற் கூட்டத்தை நடாத்தினர் என்றும் அறிய முடிகிறது.

## சாவகச்சேரி- மட்டுவில் ஆலயப் பிரவேசம்

1968ம் ஆண்டு பங்குனி மாதத்தில் ஒரு மாதம் நீடிக்கும் பொங்கல் திருவிழாக் காலத்தின் போது மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்தில் ஆலயப் பிரவேசப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இப் போராட்டத்தைத் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கமே முன்னின்று நடத்தியது. ஒரு சைவ ஆலயத்தில் நடந்து கொள்ளக் கூடிய சகல வழிமுறைகளுக்கும் உட்பட்டே இயக்கம் முன்னெடுக்கப்பட்டது. மாற்று மதத்தைச் சேர்ந்தவர்களோ, அல்லது கட்சியின் தலைவர்களோ நேரடியாக ஆலயப் பிரவேசத்தில் சம்பந்தப்படவில்லை. தவறான பிரச்சாரங்கள் மூலமாக ஆலயப் பிரவேச இயக்கத்தைப் பிற்போக்கு சக்திகள் தனிமைப்படுத்தித், திசைதிருப்பி முறியடிக்கலாம் என்பதால் அதற்கு இடம்

www.padippakam.com



தராத வகையிலேயே போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அடுத்து ஒரு முக்கியமான நடைமுறைப் பிரச்சினையை கட்சியும், வெகுஜன இயக்கமும் மிகவும் தெளிவாக்கிக் கொண்டன. அதாவது, ஒரு தேநீர்க் கடையிலோ அல்லது ஆலயத்திலோ சமத்துவத் துக்கான ஒரு போராட்டம் முன்னெடுக்கப்படும் போது அதே இடத்தைச் சேர்ந்த உரிமை மறுக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள் முன்னணிப் பாத்திரம் வகிக்க வேண்டும். அவர்களின் தேவைகளில் இருந்து இயக்கம் முன்னெ டுக்கப்படுவதன் வாயிலாகவே தொடர்ந்தும் அச் சமத்துவ உரிமைகளை மக்கள் நிலைநிறுத்தி அனுபவிக்க முடியும் என்ற கொள்கை திடமாகக் கடைப்பிடிக்கப்பட்டது. அதற்குப் பதிலாக சம்பந்தப்பட்ட இடத்திற்கு தொடர்பில்லாதவர்களைத் திடீரெனக் கொண்டு வந்து அவசர அவசரமாக ஏதோ பெயரளவிலான பிரவேசத்தையும் சமத்துவத்தையும் செயற்படுத்து வது அர்த்தமற்றது என்பது தெளிவாகி இருந்தது. அல்லது ஆயுத பாணிகளான சில இளைஞர்களைக் கொண்டு ஆலய உரிமையாளர்க ளைப் பயமுறுத்தி அச்ச உணர்வினால் மட்டும் ஓரிரு நாட்களுக்கு சமத்துவத்தை ஏற்படுத்தும் வழிமுறைகளைக் கட்சி திடமாக நிராகரித்தது. மக்கள் சக்தியை அணிதிரட்டி அவர்களின் தேவைகளில் இருந்து அவர்களாலேயே போராட்டங்கள் முன்னெடுக்கப்படுவதே நடைமுறைப்படுத்தப்பட்டது. முதலில் அத்தகைய நிலையை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதற்குரிய பிரச்சாரம் பல வடிவங்களில் மேற்கொள்ளப்பட்டன. ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள்- பொதுக்கூட்டங்கள், கருத்தரங்குகள், அரசியல் வகுப்புக்கள் அமைப்பு ரீதியான ஒழுங்குகள், போராட்ட வழிமுறைகள் யாவும் மக்கள் மத்தி யில் தொடர்ந்து முன்னெடு க்கப்பட்டன. அதனால் மக்கள் உணர்வும் உத்வேகமும் பெற்று தமது. முழுமையான பங்களிப்பை வழங்க முன்வந்தனர். அவற்றை கட்சியும் வெகுஜன இயக்கமும் வழிகாட்டி தலைமை கொடுத்து வழிநடாத்திச் சென்றன.

அதேபோல் பலாத்காரத்தைப் பொறுத்த வரையிலும் கட்சி தெளிவாகவே இருந்தது. நாம் சாதிவெறியர்களின் பிற்போக்கு பலாத்காரத்திற்கு எதிராக தற்காப்பு-புரட்சிகர பலாத்காரத்தை மட்டுமே பாவிப்பது என்பதில் தெளிவாகவும் திடமாகவும் இருக்க முடிந்தது. எமக்கு ஆதரவு தரக்கூடிய உயர்த்தப்பட்ட சமூக மக்கள் விரக்தியுற்று எதிர் நிலைக்குச் செல்லக்கூடிய வகையில் கண்மூடித்தனமான பலாத்காரத்தை

www.padippakam.com



எவர் மீதும் பாவிக்க முயலவில்லை. அத்துடன் ஒரு சாதாரண பூசகரான பிராமணனை அவமானப்படுத்துவது அல்லது ஒரு சாதி வெறியனின் சொந்தக்கார்களைத் தாக்குவது குறிப்பிட்ட உயர்த்தப்பட்ட சமூகத்தவர்களை சாதி சொல்லித் தாக்க முற்படுவது போன்ற பழிக்குப்பழி வாங்கும் குறுகிய சாதிய வக்கிர நடவடிக்கைகளைப் பற்றிக் கட்சி மிகவும் விழிப்பாகக் கண்காணித்து வந்தது. கட்சி அமைப்பிற்கு அப்பால் இத்தகைய நடவடிக்கைகளைச் சிலர் தனிப்பட்ட முறையில் முன்னெடுக்க முயன்ற வேளை களில் அவை கட்சியினாற் கண்டுபிடிக்கப்பட்டுத் தடுத்து நிறுத்தப்பட்டன. அத்தகையோருக்கு அவற்றின் எதிர்விளைவுகள் போராட்டத்தை பலவீனப் படுத்தும் என்பது விளங்க வைக்கப்பட்டது.

இத்தகைய ஒரு திட்டமிட்ட தெளிவான போராட்டச் சூழலில் மட்டுவில் அம்மன் கோவில் ஆலயப்பிரவேச இயக்கம் 1968 பங்குனியில் முன்னெடுக்கப்பட்டது. இதில் பிரதான பாத்திரத்தை வகித்தவர்கள் மட்டுவில் மானாவளைக் கிராம மக்களும் மந்துவில் மக்களுமாவர். மட்டுவில் மக்கள் முற்று முழுதான பங்களிப்பைப் பல வழிகளிலும் வழங்கி வடபகுதியின் ஏனைய பகுதி மக்களின் பங்குபற்றலுடனும் போராட்டத்தை முன்னெடுத்த வேளை ஆலய தர்மகர்த்தாக்கள் செய்த கீழ்த்தரமான வேலைகளை அறிந்து நாடே வெட்கமடைந்தது. கோவில் பூட்டப்பட்டது. பொங்கல்கள் யாவும் நிறுத்தப்பட்டன. தண்ணீர் எடுக்கும் கேணி சுற்றிவரக் கம்பிவேலி போட்டு அடைக்கப்பட்டது. கோவிற் கிணறுகள் அழுக்குகள் போட்டு நிரப்பப்பட்டன. இவை போதாதென்று பொலீஸ் படை குவிக்கப்பட்டு சாதி வெறியர்களுக்குப் பாதுகாப்பும் வழங்கப்பட்டது. மறுபுறத்திலே ஆலயப் பிரவேசத்தை நடாத்தி தமது சமத்துவத்தை நிலைநாட்ட தாழ்த்தப்பட்ட மக்கள் வெகுஜன இயக்கத்தின் தலைமையில் ஆயிரக்கணக்கில் அணிதிரண்டு நின்றனர். பெண்கள் இளைஞர் யுவதிகள் வயதானோர் ஆகிய பல தரப்பட்ட மக்களும் இப் போராட்டத்தில் கலந்துகொண்டு தமது வெகுஜன எழுச்சியின் தன்மையை நிலை நிறுத்தினர். ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமைகளிலேயே மட்டுவில் போராட்டம் இடம்பெற்றுவந்தது. ஒரு கட்டத்தில் மக்கள் தண்ணீர்க் கேணியைச் சுற்றி அடிக்கப்பட்டிருந்த கம்பி வேலியை வெட்டி எறிந்து தண்ணீர் எடுக்க முனைந்த போது பொலீஸ் தலையிட்டு தடுக்க முனைந்தது. சாதிவெறியர்களின் தடைகளுக்குப் பக்கபலமாக இருந்து பாதுகாப்புக் கொடுப்பதிலேயே பொலீஸ் கண்ணும் கருத்துமாக இருந்து

www.padippakam.com



வேலி அகற்றச் சென்ற வெகுஜன இயக்கத்தின் இணைச் செயலாளர்களில் ஒருவரான **எம். சின்னையாவையும், கே. சுப்பையாவையும்** (அவர்களது சொந்த இடம் மட்டுவில்) பொலீஸ் தடுத்துத் தாக்கிக் கைது செய்தது. இதைப் பொறுக்க முடியாத மக்கள் சாதி வெறியர்களையும் பொலீசாரையும் நோக்கி தமது எதிர் நடவடிக்கையில் இறங்கினர். ஆற்றாத் தனத்தில் தடியடியும் கண்ணீர்ப் புகைப் பிரயோகமும் மக்கள் மீது ஏவப்பட்டது. இவ்வமளியின் நடுவே பலத்த சத்தங்களுடன் நாட்டு வெடிகுண்டுகள் வெடித்தன. சிலர் படுகாயங்கள் அடைந்தனர். போராடிய மக்களில் நான்கு பேர்வரை விளக்க மறியலில் வைக்கப்பட்டனர். ஆலயப் பிரவேசத்தில் ஈடுபட்ட **செல்லக்கிளி** என்ற இளம் பெண் ஒருவரே பொங்கல் பானைக்குள் மறைத்து வைத்து கைக்குண்டுகளை வீசியதாக பொலீசார் அப் பெண்ணைக் கைது செய்ய வடபகுதி பூராகவும் சல்லடை போட்டுத் தேடி வந்தனர். இருப்பினும் அவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை பொலீசால் நிரூபிக்க முடியவில்லை. மேலும் பல வழக்குகள் மட்டுவில் போராளிகள் மீது சாவகச்சேரி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டன. தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்க செயற்குழு உறுப்பினர் **கே. சுப்பையா** மீது பல வழக்குகள் தொடுக்கப்பட்டன. அவையாவும் இறுதியில் தள்ளுபடியாகின. இவ்வாறு அன்றைய சாதி அடக்கு முறைக்கு எதிரான போராட்ட இயக்கம் ஒடுக்கப்பட்ட மக்களிடையே பெரும் உந்துதல் பெற மட்டுவில் ஆலயப் பிரவேசப் போராட்டம் வழிவகுத்தது. அதேவேளை சாதி வெறியர்களையும் சாதி அமைப்பைப் பாதுகாக்க நின்ற ஆலய தர்மகர்த்தாக்களையும் இப்போராட்டம் கதிகலங்க வைத்தது. அந்நேரம் தமிழரசுக் கட்சியின் சாவகச்சேரி பாராளுமன்ற உறுப்பினராக இருந்தவர் வீ.என். நவரத்தினம் என்பதும் அவர் உள்ளூர சாதியாதிக்கவாதிகள் பக்கமும் வெளியில் நடுநிலையாளன் போலவும் நடந்து கொண்டார். அவர் ஒரு போதும் இவ்வாலயப் பிரவேசப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தது கிடையாது. அதேவேளை நல்லெண்ணம் கொண்ட பலர் தத்தமது ஆதரவை வெவ்வேறு நிலைகளில் வெளிப்படுத்தி வந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

### மாவிட்டபுரம் ஆலயப் பிரவேசப் போராட்டம்

**1968**ம் ஆண்டில் மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயப் பிரவேசப் போராட்டத்தைத் தொடர்ந்து மாவிட்டபுரம் கந்தசுவாமி

www.padippakam.com



கோவில் ஆலயப் பிரவேசத்திற்கான இயக்கத்தை தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் ஆரம்பித்தது. ஆனி மாதத்தில் இடம் பெறவிருந்த கொடியேற்றத்திற்கு முன்பே பல மாநாடுகளை பொலீஸ் அதிபர், அரசாங்க அதிபர் ஆகியோர் நடத்தினார்கள். அவற்றால் உரிய பயன் எதுவுமே கிடைக்கவில்லை.

இச்சந்தர்ப்பத்தில் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் காங்கேசன்துறைக் கிளையின் சார்பாக **சி. சிதம்பரி, பூ. சின்னராசா** ஆகியோர் கையெழுத்திட்டு மாவை ஆதீன கார்த்தாவிற்கு ஆலயப் பிரவேசம் பற்றிய கடிதத்தை அனுப்பினார்கள். அதன் பிரதிகள் அரசாங்க பொலீஸ் அதிகாரிகளுக்கும் அனுப்பப்பட்டன. ஆலயக் கதவுகளைத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு திறந்து விடும்படி அக் கடிதத்தில் கேட்கப்பட்டி ருந்தது. அதேவேளை தமிழர் சமூகத்தில் இருந்து வந்த நல்லெண்ணம் கொண்ட சகலரும் மாவை ஆலயத்தின் கதவுகள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு திறந்து விடப்படுவதற்கு ஆதரவு நல்கும்படியும் கோரப்பட்டது.

ஆலயப் பிரவேசத்திற்கான இவ் வேண்டுகோள் சாதிய ஆதிக்கவாதிகள் மத்தியில் பீதியை ஏற்படுத்தியது. 'சைவ ஆகமத்திற்கு ஆபத்து' என்றும் 'ஆலயப் புனிதத்திற்கு அச்சுறுத்தல்' என்றும் கூறி அத்தகையோர் ஒன்றுகூடித் தாழ்த்தப்பட்ட மக்களின் சமத்துவத்திற்கு எதிராக அணி சேர்ந்தனர். அரசாங்க, பொலீஸ் அதிபர்கள் இணைந்து நடத்திய கூட்டத்தில் ஆலயப்பிரவேசத்திற்குத் தனது மூர்க்கத்தனமான எதிர்ப்பை மாவை ஆதீன தர்மகர்த்தாவான துரைச்சாமிக் குருக்கள் தெரிவித்தார். எக்கட்டத்திலும் ஆலயத்தைத் திறந்துவிடப்போவதில்லை என உறுதி எடுத்துக் கொண்டார். தனக்குத் துணையாக முன்னாள் வவுனியாப் பாராளுமன்ற உறுப்பினரும் கல்வியாளரும் சட்டவாதியுமான **(Q.C.)** ஸி. சுந்தரலிங்கத்தை அணைத்துக் கொண்டார். 'பிடிவாதக்காரர்' 'தோற்கடிக்கப்படமுடியாதவர்' என்று கூறப்படுபவரும் 'அடங்காத்தமிழன்' என்று பெயர் சூட்டப்பட்டவருமான ஸி. சுந்தரலிங்கம் ஆணவத்துடன் தன்னை இவ்வாலயப் பிரவேசப் போராட்டத்தில் பிணைத்துக் கொண்டார். யானை சேற்றில் மாட்டிக் கொண்டு கால்களைப் புதைத்து நிற்பது போல் தாழ்த்தப்பட்ட மக்களின் நியாயமான ஆலயப் பிரவேசப் போராட்டத்தின் குறுக்கே துரைச்சாமிக் குருக்களும் சுந்தரலிங்கமும் தங்களை நிறுத்திக் கொண்டனர். வடபகுதியின் சகல சாதி ஆதிக்கவாதி

படிப்பகம்

www.padippakam.com



களும் சாதிவெறியர்களும் தமது பிரதிநிதியாகச் சுந்தரலிங்கத்தை மாவிட்டபுரத்தில் முன் நிறுத்திக் கொண்டனர்.

1968ம் ஆண்டு மாவிட்டபுரம் கொடியேற்றத்துடன் ஆலயப் பிரவேச இயக்கத்திற்கான பிரச்சாரமும் வேகமடைந்தது. அன்றைய வடபகுதி பொலீஸ் அதிபரும் பிற்காலத்தில் பிரதிப் பொலீஸ் மா அதிபராக கடமை புரிந்தவருமான ஆர். சுந்தரலிங்கம் மாவிட்டபுரம் ஆலயப் பிரவேச இயக்கத்தில் இருபகுதியினருக்கு மிடையே நடுநிலை வகிப்பவர் போல் நின்றார். ஆனால் நடைமுறையில் ஆலய தர்மகர்த்தாக்களுக்கும் சாதி ஆதிக்கவாதிகளுக்கும் உதவிய சந்தர்ப்பங்களே அதிகம். ஏனெனில் அவரும் ஒரு உயர்சாதிய ஆதிக்க வேளாளராகவே இருந்தார். இருந்தும் மக்கள் எழுச்சிக்கு மேலால் அவரால் செல்ல முடியாது திணற வேண்டியே இருந்தது.

மாவிட்டபுரம் ஆலயப் பிரவேசம் பற்றிச் கூட்டப்பட்ட மாநாடுகளில் ஒருவர் இருவராகச் சென்றால் ஆலயப் பிரவேசம் சுலபமாக முடிந்து விடும் என்றும் கூட்டம் கூட்டமாகச் செல்வதாலேதான் பிரச்சினை சிக்கலாகும் என்றும் பொலீஸ் அதிபர் ஆலோசனை கூறினார். இதற்கு தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் எதிர்ப்புத் தெரிவித்தது. இது ஒரு தந்திரமான தடுப்பு நடவடிக்கை எனச் சுட்டிக் காட்டியது. உண்மையில் சமத்துவமாக ஆலயத்தை திறந்து விடுவதானால் பெருந் தொகையில் கொள்ளக்கூடிய இடவசதி உள்ள ஒரு பெரும் ஆலயத்தில் ஒருவர் இருவர் மட்டும் செல்வது என்ற பேச்சு மிகவும் கபடத்தனமானது என்பது புரியக்கூடியதே என்பதை அம் மாநாடுகளில் கலந்து கொண்ட வெகுஜன இயக்கப் பிரதிநிதிகள் ஆணித்தரமாக எடுத்துக் கூறினர். இச் சந்தர்ப்பங்களில் வெகுஜன இயக்கத்தின் தலைவராக இருந்த எஸ்.ரி.என். நாகரத்தினம் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு வளைந்து கொடுக்காமலும் பொலீஸின் மறைமுக மிரட்டலுக்கு அடிபணியாதும் உறுதியாக மக்கள் சார்பாக எடுத்த முடிவை எதிர்த்தரப்பினருக்கு வலியுறுத்தி வெகுஜன இயக்கத்தின் குரலைச் சரியாகவே பிரதிபலித்து வந்தமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

ஆலயப் பிரவேசத்திற்கு தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் தலைமையில் மக்கள் அணிதிரண்டனர். கொடியேற்ற நாள் அன்று கோபுரவாசல் வெளி மண்டபத்தில் தடைகள் போடப்பட்டன. உள்ளே கதவுகள் திறந்து இருந்தன. ஆலயப் பிரவேச இயக்கத்தைத்

www.padippakam.com



தடுப்பதில் சுந்தரலிங்கமும் அவரைச் சுற்றிச் சாதிவெறியர்களும் நின்றிருந்த னர். வெளியில் மக்கள் வெறுந்தரையில் இருந்தனர். தாங்கள் போராட்டம் நடத்தும் இடம் ஆலயம் என்பதைத் தெரிந்து கொண்டும் மிகவும் கவன மாகவே போராட்ட வழிமுறைகளைக் கையாண்டனர். ஆலயத்திற்குள் செல்லக் கூடியவாறான ஒழுங்கு முறையில் ஆலயப் பிரவேசத்திற்கு மக்கள் வந்திருந்தனர். வேற்று மதத்தைச் சேர்ந்தோரோ பலாத்கார நடவடிக்கைகளோ இன்றி மக்கள் தமது நியாயமான சமத்துவ உரிமை யைக் கோரியே நின்றனர். ஒவ்வொரு நாளும் உரிமை கோரிய மக்களின் எண்ணிக்கை கூடியே வந்தது. மக்கள் வெளியில் கூடி நின்ற இடத்திற்கு சாதிவெறியர் நீர் இறைத்துச் சேறாக்கி இருந்தார்கள். தடைகளைத் தாண்டி உள்ளே செல்ல முனைந்தோர் தாக்கப்பட்டனர். ஒரு சந்தர்ப்பத் தில் சுவாமிக்குப் பிடித்து வந்த தீப்பந்தத்தால் காங்கேச ன்துறை வெகுஜன இயக்க நடவடிக்கையாளர் **ஆ. கந்தையா** சுட்டுக் காயப்படுத்தப் பட் டார். இவற்றையும் தாண்டிக் கோவிலுக்குள் வெகுஜன இயக்கத்தின் இணைச் செயலாளர்களில் ஒருவரான மட்டுவில் **எம். சின்னையா** பிரவேசம் செய்து உள் மண்டபத்தில் உட்கார்ந்து கொண்டார். உடனே சுந்தரலிங்கமும் அவரது கையாட்களும் சின்னையாவைத் தடுத்து தாக்கிப் பலாத்காரமாக இழுத்து வந்து வெளியேற்றினர். சின்னையா சுந்தரலிங்கத்திற்கு எதிராகப் பொலிசில் செய்த முறைப்பாட்டின் கீழ் மல்லாகம் நீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. 1957ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சமூகக் குறைபாடுகள் ஒழிப்பு சட்டத்தின் கீழ் தொடரப்பட்ட அவ் வழக்கில் சுந்தரலிங்கம் குற்றவாளியாகக் காணப் பட்டு ஐம்பது ரூபா குற்றப் பணம் தீர்ப்பாகியது. அத் தீர்ப்பை எதிர்த்து ஸி. சுந்தரலிங்கம் அன்றைய லண்டன் பிரிவு கவுன்சிலுக்கு மனுத்தாக்கல் செய்தார். ஆனால் அங்கும் அவருக்கு தோல்வியே கிடைத்தது. மல்லாகம் நீதி மன்றத் தீர்ப்பை பிரிவு கவுன்சில் ஏற்றுக் கொண்டது. சாதி-தீண்டாமைக்கு எதிராக இயற்றப்பட்ட மிகவும் பலவீனமான ஒரு சட்டம் கூட தன் சக்தியை நிரூபிக்க பத்து ஆண்டுகள் காத்துக் கிடக்க வேண்டி இருந்தது. அது மட்டுமன்றி அச் சட்டத்தை நடைமுறைப்படுத்த மக்கள் போராட்டத்தாலேயே சாத்தியமானது. அதாவது சட்டங்களுக்கும் மேலாக மக்கள் போராட்டங்களும் எழுச்சிகளுமே சக்தி மிக்கவை என்பதையே நாம் நடைமுறையிற் காணக்கூடியதாக இருந்தது. இச் சம்பவம் பிரச்சார ரீதியிலும் நடைமுறை

www.padippakam.com



ரீதியிலும் சாதிவாதிகள், சாதி வெறியர்கள் மத்தியிற் பெருந் தாக்கத்தையும் சலசலப்பையும் ஏற்படுத்தியது. இக் கட்டத்திலேயே வெகுஜன இயக்கத்தின் மற்றொரு செயலாளரான **அல்வாய் சி. கணேசன்** மாவிட்டபுரத்தில் வழிபாட்டிற்குச் சென்று கொண்டிருந்த போது சாதி வெறியர்களால் வழிமறித்துத். தாக்கப்பட்டார். மாவிட்டபுர ஆலயப் பிரவேச போராட்ட காலத்தில் (ஒரு மாதம்) கோவில் வீதியில் ஒரு தற்காலிக பொலீஸ் நிலையம் இயங்கிவந்தது. சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்டி அமைதி காக்கவே அப் பொலிஸ் நிலையம் இயங்குவதாகக் கூறப்பட்டது. ஆனால் ஆதீனகர்த்தாவும் சாதிவெறியர்களும் சுதந்திரமாகச் செயற்பட்டனர். கணேசன் கோவில் வீதியில் வைத்தே கடுமையாகத் தாக்கப்பட்டார். படுகாயமடைந்த அவர் யாழ் மருத்துவம னையில் சிகிச்சை பெற்றதுடன் தன்னையும் வழிபட விடாது தடுத்ததாக சுந்தரலிங்கம் மீது வழக்கும் தொடர்ந்திருந்தார். இவ் ஆலயப் பிரவேச வழக்கில் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த திரு. சி. கதிரவேற்பிள்ளை தடுக்கப்பட்ட தாழ்த்தப்பட்டோருக்காக ஆஜராகி வாதிட்டார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். சட்டத்தொழில் என்ற பேரில் சாதிய வாதிகளுக்குச் சமாதானம் சொல்லவும் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக வாதாடினோம் என்று அம் மக்களை நம்பச் செய்யவும் வசதியாகக் கதிரவேற்பிள்ளை மிகவும் தந்திரமாக நடந்து கொண்டார்.

மாவிட்டபுரம் ஆலயப் பிரவேசப் போராட்டமானது தமிழர் மத்தியில் ஆண்டாண்டு காலமாக முன்னெடுக்கப்பட்டு, ஆனால் உள்ஊர நாற்றமெடுத்து வந்த சாதிமுறையையும் தீண்டாமையையும் வெளி உலகுக்கு எடுத்துக் காட்டியது. தமிழர்களில் நீதி நியாயத்தையும் ஜனநாயகத்தையும் சமத்துவத்தையும் விரும்பும் கணிசமானோரின் மனச்சாட்சியை அது உலுப்பியது. அதனால் மாவிட்டபுரம் ஆலயப் பிரவேசப் போராட்டம் அதிகமானோரைத் தாழ்த்தப்பட்ட மக்களின் பக்கம் நிற்கவை த்தது. நிலப்பிரபுத்துவ பிற்போக்குத்தனங்களில் ஊறித் திளைத்து சாதியத்தை விட்டுக்கொடுக்க மறுத்த மிகவும் குறைந்த பகுதியினர் சாதிவெறியர்களுக்கு உற்சாகம் கொடுத்து உதவி வந்தனர். தமிழ்த் தலைவர்களைப் பொறுத்தவரை ஜி.ஜி. பொன்னம்பலம் போன்றோர் பிற்போக்கின் பக்கம் பகிரங்கமாகவே நின்றனர். தமிழரசுக் கட்சியினர் விழுங்கவும் முடியாது கக்கவும் முடியாது மௌனம் காத்தனர். ''ஈழத்துக் காந்தி'' எனவும் ''தந்தை'' எனவும் பெயர் சூட்டி அழைக்கப்பட்டு வந்த

www.padippakam.com



எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தனது தொகுதியில் நடைபெற்று வந்த அப் பிரசித்தி பெற்ற ஆலயப் பிரவேசப் போராட்டம் பற்றி ஒரு வார்த்தை தானும் பேசவில்லை. அதேவேளை அமிர்தலிங்கம் போன்றோர் கம்யூனிச விரோத பிரசாரங்களில் தீவிரமாக ஈடுபட்டு வந்தனர். தாழ்த்தப்பட்ட மக்களைச் "சீனசார்பு கம்யூனிஸ்டுகள்" தூண்டிவருகிறார்கள் என்ற அபாண்டத்தை கக்கினாரே தவிர. அம் மக்கள் முன்வைத்த நியாயமான கோரிக்கைகளைப் பற்றிப் பேச மறுத்தனர்.

அதேவேளை தென்னிலங்கையின் நேர்மையான இடது சாரி முற்போக்கு புத்தி ஜீவிகள் மாவிட்டபுர ஆலயப் பிரவேசப் போராட்டத்திற்கு தமது முழு ஆதரவைப் பல்வேறு வழிகளிலும் தெரிவித்தன. சமசமாஜக் கட்சியில் இருந்து பிரிந்து இயங்கிய முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எட்மண்ட் சமரக்கொடி தமது யாழ்ப்பாண உறுப்பினரான எஸ். பொன்னு த்துரையுடன் ஒரு நாள் போராட்டத்தில் கலந்து கொண்டமை குறிப்பிட த்தக்கதாகும்.

இவ்வாறான சூழலிற் சிறுபான்மைத் தமிழர் மகாசபையைச் சேர்ந்தவர்களும் அவர்களுக்குப் பின் நின்று இயங்கிய பாராளுமன்றக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களும் சேர்ந்து தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கமும் புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியும். முன்னெடுத்த போராட்ட ங்களை மழுங்கடிக்கப் பல்வேறு முயற்சிகளைச் செய்தனர். பல சந்தர்ப்பங்களில் பொலீஸ் படையோடு சேர்ந்து நின்று அவர்களுக்கும் சாதிவெறியர்களுக்கும் உதவும் வகையிலான அறிக்கைகள் விட்டும் பேச்சுக்கள் நடாத்தியும் வந்தனர். இத்தவறான நிலைப்பாட்டை தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் ஏற்கனவே செல்வாக்குப் பெற்றிருந்த எம்.சி. சுப்பிரமணியம், ஜி. நல்லையா போன்றோர் முன்னெடுத்தனர். மாவிட்டபுரத்தில் எழுந்த வெகுஜன எழுச்சியினால் சாதிவெறியர்களும், பிற்போக்குவாதிகளும்– பொலீசும் ஒரு புறமாக நின்று செயற்பட்ட போது மேற்கூறிய தலைவர்கள் தங்களை அச் சக்திகளுடன் சமரசப்படுத்தி வந்தனர். மாவிட்டபுரத்தில் பிரதான திருவிழா நாளில் பெருந்தொகையில் தாழ்த்தப்பட்ட மக்கள் திரண்டு ஆலயப்பிரவேசப் போராட்டத்திற்கு தயார்ப டுத்திக்கொண்டிருந்த வேளை அந் நாளுக்கு முதல் நாள் எம்.சி. சுப்பிரமணியம் பத்திரிகைகளில் தானும் வேறு சிலரும் மாவிட்டபுரம் ஆலயத்தினுள் எவ்வித எதிர்ப்பும் இன்றிச் சென்று வந்ததாகவும் ஒருவர் இருவர் சென்றால் பிரச்சினை இல்லை என்றும் பத்திரிகைகளில் அறிக்கை

படிப்பகம்

www.padippakam.com



வெளியிட்டார். அவ்வறிக்கையானது மறு நாள் நடைபெற உள்ள வெகுஜன இயக்கத்தின் தலைமையிலான ஆலயப் பிரவேசப் போராட்டத்தை முறியடிப்பதையே நோக்காகக் கொண்டிருந்தது. அவ் அறிக்கை வெளிவந்ததும் ஆலய தருமகர்த்தா அதனை மறுத்து அப்படி எவரும் கோவிலுக்குள் வரவில்லை எனக் கூறி மறுப்பறிக்கை வெளி யிட்டார். எம்.சி. அப்படிச் சென்றாரா இல்லையா என்பதை விட அவ் அறிக்கை விடச் செய்தமை அன்றைய வடபகுதி பொலீஸ் தலைமைப் பீடத்தின் சதிகார வேலையாகும். இதற்கு எம்.சி. சுப்பிரமணியம் துணை போனதன் மூலம் தனக்குத் தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் இருந்து வந்த நல்ல பெயரையும் தானே கெடுத்துக் கொண்டார். அது மட்டுமன்றி அரசியல் கருத்து வேறுபாட்டு வன்மத்திற்காக அன்றைய கெனமன் கம்யூனிஸ்ட் கட்சியினர் பொலிசுக்கு வெவ்வேறு வகையில் உதவி வந்தனர் என்பது மறுக்க முடியாதது. சங்கானை. கொடிகாமம், அச்சுவேலி போன்ற இடங்களில் தேநீர்க்கடைப் பிரவேசப் போராட்டங் களின் போது பொலீஸ் பல சமாதான மகாநாடு களை நடத்தியது. அம் மாநாடுகளின் நோக்கம் மோதலை நிறத்த வேண்டும் என்ற கோரிக்கையை மட்டுமே கொண்டிரு ந்ததே அன்றிச் சமத்துவமாகத் தேநீர் வழங்கப்பட வேண்டும் என்பதற்காகவல்ல. இதனால் வெகுஜன இயக்கமும் கம்யூனிஸ்ட் கட்சியும் இத்தகைய சமாதான மாநாடுகளைப் பகிஷ்கரித்தன. அச் சந்தர்ப்பங்களில் எம்.சி. சுப்பிரமணியம், ஜி. நல்லையா போன்றவர்களே தாழ்த்தப்பட்ட மக்களின் சார்பாக இம் மாநாடுகளிற் கலந்து கொண்டனர். தமிழரசுக்கட்சியின் கையாட்களாகச் செயற்பட்டவர்களின் மத்தியில் உள்ள வசதி படைத்த சில பிரமுகர்களும் பொலீசுக்கு ஆதரவாகச் செயற்பட்டு வந்தனர்.

இவர்கள் குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் இருதரப்பு மோதல்கள் நிறுத்தப்பட வேண்டும் என்று பொலீஸ் முன்வைத்த கோரிக்கைக்கு இணங்கி அப்போராட்டத்தில் ஈடுபட்டு வந்த போராளிகள் பலரின் பெயர் பட்டியல்களைப் பொலீசுக்குக் கையளித்ததுடன் அவர்களது வாகனங்களில் ஏறிக் கிராமங்களும் சென்று போராட்டத்திற் சம்மந்தப்பட்டவர்களையும் அவர்களுக்கு ஆதரவானவர்களையும் காட்டிக் கொடுத்த சம்பவங்களும் இடம்பெற்றிருந்தன.

சமாதான மாநாடுகளைப் பற்றி வெகுஜன இயக்கம் பின்பற்றிய கொள்கை என்னவெனில் போராட்டம் முடிவுக்கு வர வேண்

www.padippakam.com



டுமானால் எக் கோரிக்கைகளை முன் வைத்து போராட்டம் ஆரம்பித்ததோ அவற்றிற்கான ஜனநாயக சமத்துவ உரிமைகள் வழங்கப்பட்டால் மட்டுமே போராட்டத்திற்கான அவசியம் அகன்று மோதல்கள் முடிவுக்கு வந்து சமாதானம் நிலவ முடியும் என்பதேயாகும்.

மாவிட்டபுரம் போராட்டத்தை முறியடிக்கப் பல்வேறு முயற்சிகள் செய்யப்பட்டன. சுன்னாகத்தைச் சேர்ந்த வர்த்தகரும் சைவ அனுஸ்ட்டான சபையின் தலைவருமான சிவலிங்கம் என்பவர் தாழ்த்தப்பட்டவர்களுக்கு கோவிலுக்குள் செல்லும் உரிமை இல்லை என்றும் சைவ ஆகமத்தில் அவ்வாறு விதிக்கப்பட்டிருப்பதாகவும் துண்டுப் பிரசுரம் அடித்து ஆலயப் பிரவேசப் போராட்டத்திற்கு எதிராக துரைச்சாமிக் குருக்கள். ஸி. சுந்தரலிங்கம் ஆகியோருடன் அணிசேர்ந்து சாதி ஆதிக்க வாதிகளையும் சாதி வெறியர்களையும் உருவேற்றி வந்தார். இவர்களது இப் பிற்போக்குச் செயற்பாடுகள் ஒவ்வொன்றும் தாழ்த்தப்பட்ட மக்களை வெகுஜனப் போராட்டத்தில் மேலும் உறுதியாக அணிவகுத்து நிற்கச் செய்தது.

மாவிட்டபுரத்தில் 1968ம் ஆண்டின் கொடியேற்ற நாள் தொட்டு இறுதி நாள் திருவிழா குறிக்கப்பட்ட காலம் வரை (25 நாட்கள்) வெகுஜன எழுச்சியும் போராட்டமும் நடந்து கொண்டே இருந்தது. திருவிழாக் காலத்தின் இறுதி நாட்களில் போராட்டம் உச்சக் கட்டத்தை அடைந்தது. கொடியேற்றப்பட்டு திருவிழா நடைபெற்ற போதிலும் உள் வீதியிலேயே திருவிழாச் சடங்குகளும் சுவாமி வலமும் இடம் பெற்றன. மிகவும் தேர்ந்தெடுக்கப்பட்ட தொண்டர்களே உள்ளே இருந்து சுவாமி தூக்குதல் போன்ற கருமங்களைச் செய்து வந்தனர். அவர்கள் அனைவரும் ஆதீன கர்த்தாவிற்கு அறிமுகமான உயர்சாதியினரே ஆவர். அப்படியிருந்தும் போராட்ட உச்சக்கட்டத்தின் மத்தியில் கோவிலுக்குள் ஆதி மூலத்தருகே பாரிய சத்தத்துடன் குண்டு ஒன்று வெடித்து கட்டிடம் சேதமடைந்தது. ஆனால் எவ்வாறு அக் குண்டு உள்ளுக்குள் கொண்டு செல்லப்பட்டது என்பதோ யார் அதை வெடிக்க வைத்தார்கள் என்பதோ இன்று வரை கண்டுபிடிக்கப்படவில்லை. தொண்டர்களில் தொண்டராக இருந்த ஒருவனே மேற்படி குண்டை உள்ளே கொண்டு சென்று உரிய நேரத்தில் வெடிக்க வைத்தான் என்றே பேசிக்கொள்ளப்பட்டது.

மாவிட்டபுரப் போராட்டம் பல்வேறு பட்ட அம்சங்களை வெளிக் கொணர்ந்தது. வெளிப்பார்வைக்கு சைவ ஆலயம், புனிதம்

www.padippakam.com



என்றெல்லாம் கூறிக்கொண்டு தாழ்த்தப்பட்ட மக்களின் சமத்துவத்தை மறுத்த அதே ஆலயத்தில் புனிதத்திற்கு நேர்விரோதமான செயல்கள் அனைத்தையும் சாதிவாதிகளும் அவர்களது சண்டியர்களும் செய்து வந்தனர். ஆயுதங்கள் மதுபானங்கள் உள் இருந்ததை பொலிசாரே உறுதிப்படுத்தும் அளவுக்கு நிலைமைகள் இருந்தன. மறுபுறத்திலே உரிமைகோரி நின்ற மக்கள் மிகவும் நிதானமாக வும் கட்டுப்பாடாகவும் தமது போராட்டத்தை முன்னெடுத்தனர்.

ஒரு புறத்தில் சமத்துவத்தையும் தமது ஜனநாயக உரிமை களையும் கோரி நின்ற தாழ்த்தப்பட்ட மக்களும் அவர்களுக்கு தலைமை வழங்கி நின்ற தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் தலைமையும் இருந்தனர். மறுபுறத்தில் 'அடங்காத் தமிழன்' ஸி. சுந்தரலிங்கத்தின் தலைமையில் சாதிய ஆதிக்கவாதிகளும் அவர்களின் பாதுகாவலர்களும் சாதிவெறிக் குண்டர்களும் இருந்தனர். இடையே சட்டத்தையும் ஒழுங் கையும் பாதுகாக்க நிறுத்தப்பட்டிருப்பதாகக் கூறப்பட்ட பொலீஸ் படையிலி ருந்தது. அதன் தலைமை அதிகாரிகள் தமிழர்களாக இருந்தனர். அவர்கள் அனைவரும் உயர்த்தப்பட்ட சாதியக் குடும்பங்களில் இருந்து வந்தவர்களாகவே இருந்தனர். ஏனெனில் பொலிஸ் படையில் உயர் அதிகாரிகளாக எந்தவொரு தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவர்களும் வர முடிந்ததில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். இந் நிலையில் மாவிட்ட புரம் போராட்டத்தில் பொலீஸ் படை எவ்வாறு "சட்டம் ஒழுங்கு" "நீதி நியாயத்தை" "நடுநிலையாக" வழங்கி இருக்கும் என்பதை ஊகிக்க முடியும்.

இச் சந்தர்ப்பத்தில் மாவிட்டபுரப் போராட்டம் பற்றி திருகோ ணமலையின் கவிஞரான **எஸ். வில்வராஜ் (திருகோணமலைக் கவிராயர்)** நேரடியாக அப்போராட்டத்தில் கலந்து கொண்டபோது அவ்விடத்தில் வைத்தே ஒரு கவிதை வடித்தார். அக் கவிதை பின்பு இசையமைத்து பல ஆலயப் பிரவேசப் பிரச்சார மேடைகளில் பாடப்பட்ட துடன் மக்கள் மத்தியிலும் பிரபலம் பெற்றது.

மாவிட்ட புரத்திலோர் மந்தி- நின்று
மடைச் சேட்டை புரியுது வாசலில் குந்தி
ஆள்விட்டுத் தடுப்பதோ சிந்தி- இந்த
அடுக்காத செயல் கண்டு சிரிக்குது சந்தி

(மாவிட்ட)

www.padippakam.com



*கந்தனைச் சிறை வைத்தான் துரையன்- அங்கே*
*காவலில் நின்று தடுக்கின்றான் நரையன்*
*அந்தோ "என் முருகா" நீ சிறையோ- இந்த*
*அகந்தையைப் பார்த்துப் பொறுப்பதும் முறையோ*

*(மாவிட்ட)*

*"பார்ப்பனப்" பயலுக்குப் பயமோ- நீயும்*
*பாதம் துடைத்திடும் சுந்தரின் வயமோ*
*போர்ப்பறை கேட்குது "கந்தா" - எங்கள்*
*பொற்கரம் ஆயுதம் ஏந்துமே நொந்தால்*

*(மாவிட்ட)*

*பொறுமைக்குத் திரி வைத்தல் சரியோ- எங்கள்*
*போர்க்கள உரு கண்டு பரிகாசம் விதியோ*
*ஒருமைக்குக் குழி வெட்டும் மனிதா- உந்தன்*
*சிறுமைக்குச் சிதையிட்டுச் சேர்ந்தெங்கும் எழடா!*

*எஸ். வில்வராஜ்*

*(06-09-1968 தொழிலாளி) வார இதழ்*

போராட்ட நாட்களில் ஒரு சந்தர்ப்பத்தில் சாதிவெறியர்கள் நேரடியான பலாத்காரத்தில் இறங்கி ஆலயப் பிரவேசத்திற்காக மண்டபத்தில் கூடி இருந்த ஆயிரம் பேர்வரையான பக்தர்களைத் தாக்க முற்பட்டனர். அவர்களது நோக்கம் அவ்விடத்தில் ஒரு இரத்தக்களரியை ஏற்படுத்திப் போராட்டத்தை வன்முறையானது என்ற ஒரு தோற்றத்தை ஏற்படுத்துவதாகவே அமைந்திருந்தது. வெகுஜன இயக்கத்தின் தலைவராகப் போராடும் மக்களின் முன்னிலையில் நின்ற தோழர் எஸ்.ரி.என். நாகரத்தினத்தின் உயிருக்கு உலை வைக்க அவர்கள் முற்பட்டனர். ஆலயப் பிரவேசத்திற்காக அமைதியுடன் நின்ற மக்கள் சாதிவெறியர்கள் அவிழ்த்து விட்ட பலாத்காரத்தை உரியபடி முறியடித்தனர். வெகுஜன இயக்கத் தலைவரையும் ஏனைய முன்னணித் தலைவர்களையும் பாதுகாத்துச் சாதிவெறியரைப் பின்வாங்கச் செய்தனர். இவ்வாறு

www.padippakam.com



சாதிவெறியர்களை எதிர்த்து அவர்கள் பிரயோகித்த பலாத்காரத்தை முறியடிப்பதில் போராளிகளான பா. **பசுபதி, கு. சிவராசா, சி. நவரத்தினம், த. தருமலிங்கம், சி. சின்னராசா, சி. நல்லப்பு, சி.** நடராசா போன்ற தோழர்கள் முன்னின்றனர்.

அதன் பின்பு தேர்த் திருவிழா முதல் நாளன்று இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் மாவிட்டபுர ஆலய முன்பாகத் திரண்டிருந்தனர். வெகுஜன இயக்கத் தலைவர் **எஸ். ரி. என்.** நாகரட்ணம் **உபதலைவர் கே. கிருஸ்ணபிள்ளை செயற்குழு உறுப்பினர். என். கே. ரகுநாதன் இணைச் செயலாளர்கள் எம். சின்னையா- சி. கணேசன்** ஆகியோர் அணி திரண்டிருந்த மக்களை மிகவும் கட்டுப்பாடாக வைத்திருப்பதில் தலைமை நின்றனர். கோவிலின் முன் புற பரந்த வெளியில் கொழுத்தும் வெயிலையும் பொருட்படுத்தாது மக்கள் வெறுந்தரையில் அமர்ந்திருந்தனர். மக்களது ஐக்கியத்தையும் தலைமையின் விட்டுக்கொடுக்காத உறுதியான நிலைப்பாட்டையும் கண்டு சாதி ஆதிக்க வெறியர்களும் பொலீஸ் படையும் திகைப்புற்றுக் காணப்பட்டனர். இடையிடையே பொலீஸ் உயர் அதிகாரிகள் வெகுஜன இயக்கத் தலைவர்களுடன் தர்க்கம் புரிந்தும் வந்தனர். இறுதிக் கட்டத்தில் ஒரு தலைப்பட்சமாகப் போராட்டத்தைக் கைவிடச் செய்யும் தமது முடிவைப் பொலீஸ் அதிபர் ஆர். சுந்தரலிங்கம் தெரிவித்தார். அதை மறுத்து வெகுஜன இயக்கத் தலைவர் எஸ்.ரி.என். நாகரத்தினம் போராட்டத்தை இறுதி வரை நடத்துவதை வலியுத்தினார். அதற்கு மக்கள் கரகோஷம் செய்து போராட்டத்தைத் தொடருவோம் என்றனர். அவ்வேளை பொலீஸ் படைக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. ஆலயத்தில் சமத்துவ உரிமை கோரி நின்ற தாழ்த்தப்பட்ட மக்களின் மீது பொலீஸாரால் தடியடியும், கண்ணீர்ப் புகைப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டன. அவர்களுடன் இணைந்து சாதிவெறியர்களும் மக்கள் மீது தாக்குதல் நடத்தினர். நிராயுதபாணிகளாகவும் ஆலயத்தில் சமத்துவம் கோரியும் நின்ற மக்கள் மீது நடத்தப்பட்ட அவ் அநாகரீகத் தாக்குதல் தமிழர்களின் போலித்தனப் பாரம்பரியத்திற்குத் தீராத அவமானத்தைத் தேடிக் கொடுத்தது. தலைமை தாங்கிய தோழர்கள், போராட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் காயங்கள் பட்டு இரத்தம் சொரிந்தனர். அதேவேளை வெகுஜன இயக்கப் போராளிகள் திருப்பித் தாக்கி மக்களைப் பாதுகாத்துக் கொண்டனர். இவ்விதமான குழப்பச் சூழலில் திடீரென ஆலயத்தின் பிரதான தேர்

www.padippakam.com



தீப்பற்றி எரிய ஆரம்பித்தது. இதற்கு எவ்வாறு தீ மூட்டப்பட்டது என்பதோ யார் மூட்டினார்கள் என்பதோ மிக மர்மமாகவே இருந்தது. வெகுஜன இயக்க த்திற்கும் அத் தீ மூட்டலுக்கும் எவ்வித சம்பந்தமும் இருக்க வில்லை. ஆனால் பொலீசும் ஆதீனகர்த்தாவும் இணைந்து வெகுஜன இயக்கத் தலைவர் **எஸ்.ரி.என். நாகரத்தினத்தையும்** இயக்க உறுப்பினர் **சி. மகேஸ்வர னையும்** தேர் எரிப்பில் சம்பந்தப்படுத்தி மாவட்ட நீதிமன்றத்தில் நிறுத்தியது. புனை யப்பட்ட அவ் வழக்கு போதிய சாட்சியங்கள் இன்றி முடிவில் தள்ளுபடி செய்யப்பட்டது.

அறுபத்தியெட்டாம் ஆண்டு மாவிட்டபுரத்தில் நடைபெற்ற ஒரு மாதகால தொடர் போராட்டத்தினால் துரைசாமிக் குருக்களும் அவருக்கு உறுதுணையாக நின்ற 'அடங்காத்தமிழன்' ஸி. சுந்தரலி ங்கமும் அவர்களைச் சுற்றி நின்ற வடபகுதியின் சாதிய ஆதிக்கம் கொண்டவர்களும் நிலை குலைந்து போனார்கள். கோவில் கதவுகள் இழுத்து மூடப்பட்டன. ஒரு வருடத் திருவிழாவின் போது கிடைக்கக் கூடிய பல லட்ச ரூபாய் வருமானம் கிடைக்காமல் போனது. திருவிழா காலத்தில் மட்டுமன்றி சாதாரண நாட்களில் இடம் பெற்று வந்த அன்றாட பூசைகள் கிரிகைகள் எதற்கும் கோவில் கதவுகள் திறக்கப்படவில்லை. அடுத்த வருடமும் கோவில் கொடியேற்றம் என்ற பேச்சு இன்றி மூடப் பட்டே இருந்தது. அதே வேளை கோவில் திறந்து கொடியேற்றம் இடம் பெற்றால் மீண்டும் ஆலயப் பிரவேசப் போராட்டத்திற்கு வெகுஜன இயக்கமும் தாழ்த்தப்பட்ட மக்களும் தயாராக இருந்தனர். 1969 யூலையில் மாவை ஆலயப் பிரவேசத்திற்கான அறிக்கையை வெளியிட்டது. ஆனால் கோவில் கொடியேற்றப்படவுமில்லை திறக்கப்படவுமில்லை. 1970ம் ஆண்டுக்குப் பின் மாவிட்டபுரம் ஆலயம் சமத்துவமாகத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு திறந்துவிடப்பட்டது.

வடபகுதியின் பிரசித்தி பெற்றதும் நிலப்பிரபுத்துவ நடை முறைகளில் மிக இறுக்கமானதுமான மாவிட்டபுரத்தில் 1968ல் இடம் பெற்ற ஆலயப் பிரவேச போராட்டம் முழுத் தமிழர் சமுதாயத்திலும் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தியது. சாதி-தீண்டாமைக் கோட்டை மீது நேரடித் தாக்குதலைத் தொடுத்தது. இனிமேல் சாதியின் பேரால் தமது சமத்துவத்தை யாரும் தடுக்க முடியாது என்ற நிலைக்கு தாழ்த்தப் பட்ட மக்கள் எழுந்து நின்றனர். சாதி- தீண்டாமை பாராட்டியவர்கள் இனிமேலும் சமத்துவத்தை மறுத்துத் தடுத்து நிறுத்துவது இயலாத

www.padippakam.com



காரியம் என்ற நிலையும் வளரலாயிற்று.

அதே வேளை ஒரு மாத காலமாக விட்டுக் கொடுக்காத மாவிட்டபுரம் ஆலயப் பிரவேசப் போராட்டம் தென்னிலங்கையில் பாராளுமன்றம் முதல் சாதாரண மக்கள் வரை பிரபலம் பெற்றதுடன் தாழ்த்தப்பட்ட மக்களின் நியாயமான கோரிக்கைக்கு ஆதரவு பெருகிவரும் சூழல் வளர்ந்து காணப்பட்டது. அவ்வாறே கிழக்கிலும் மலை யகத்திலும் இவ் ஆலயப் பிரவேசப் போராட்டம் பெரும் ஆதரவையும் ஒத்துழைப்பையும் பெற்றிருந்தது. அங்கெல்லாம் ஆதரவுக் கூட்டங்கள் நடைபெற்றதுடன் நேரடியாகப் பலர் அப்பிரதேசங்களில் இருந்து வந்து போராட்ட இயக்கங்க ளில் கலந்தும் கொண்டனர்.

அத்துடன் அன்றைய பீக்கிங் வானொலியின் தமிழ்ச் சேவை ஒலிபரப்பு மாவிட்டபுர ஆலயப் பிரவேசப் போராட்டத்தை ஆதரித்தும் சாதிய அமைப்பை அம்பலப்படுத்தியும் செய்திகளையும் விவரணங்களையும் வெளியிட்டு வந்தது. இதனால் சாதிய ஆதிக்க மேட்டுக்குடியினர் கொதிப்படைந்தனர். அதனைச் சீனச் சதி எனச் சினந்தனர். அன்றைய ஐ.தே.க. அரசாங்கத்தின் தமிழரசுக் கட்சி அமைச்சர் மு. திருச்செல்வம் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்திக் கொண்டார். தங்களால் நடைமுறைப்படுத்தப்படும் சாதிய தீண்டாமைக் கொடுமைகளைக் கண்டு சுய வெட்கமடையவோ அவமானம் கொள்ளவோ அதனை எதிர்த்த போராட்டத்திற்கு ஆதரவு தெரிவுக்கவோ முடியாத அவர்கள் பீக்கிங் வானொலியில் செய்தி வெளிவந்த்தையிட்டு அழுகுரல் வைத்து கொண்டனர்.

1968ம் ஆண்டின் மாவிட்டபுரத்தின் ஆலயப் பிரவேசப் போராட்டத்தின் தாக்கம் வடபகுதியின் ஏனைய பகுதிகளில் உள்ள பிரசித்திபெற்ற ஆலயங்களின் கதவுகளையும் திறக்கச் செய்தது. தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்தில் ஏற்கனவே ஆலயப் பிரவேசம் சம்பந்தமான வழக்கொன்று நடைபெற்றிருந்தது. இருந்தும் 1969ம் ஆண்டின் கொடியேற்றத்துடனேயே தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் ஆலயப் பிரவேச முயற்சியால் கதவுகள் திறக்கப்பட்டு சமத்துவ வழிபாடு ஏற்பட்டது. இதே போன்றே மற்றொரு பிரசித்திபெற்ற ஆலயமான வல்லிபுரக் கோவிலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு திறந்துவிடப்பட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

அதே வேளை வடமராட்சி உட்படக் குடாநாட்டின் வேறுஞ்

www.padippakam.com



சில பகுதிகளிலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கதவுகளை அடைத்து நின்ற நடுத்தர சிறிய ஆலயங்கள் இருந்தன. அவற்றில் சில படிப்படியாக மக்களின் பலமுனை அழுத்தங்கள் முன் முயற்சிகள் காரணமாகத் திறந்து விடப் பட்டன. அதேவேளை இன்று வரை முழுமையாகத் திறந்து விடப்படாத சில ஆலயங்கள் இருந்து வருகின்ற உண்மையை எவரும் மறுத்து நிற்க முடியாது. தமிழ்ச் சமுதாயத்தில் சாதி-தீண்டாமையை எதிர்த்துத் தொடர்ந்து போராட வேண்டியதன் அவசியத்தையும் தமிழர் விடுதலையின் நீண்ட காலப் போராட்டத்தில் அதனை ஒரு அம்சமாகக் கொள்ள வேண்டியதன் தேவையையுமே அது வலியுறுத்தி நிற்கின்றது. இது பற்றி இறுதி அத்தியாயங்களில் காண்போம்.

## நெல்லியடி தேநீர்க்கடைப் பிரவேசப் போராட்டம்

1967ல் ஆரம்பித்த சங்கானைத் தேநீர்க்கடைப் பிரவேசப் போராட்டம் கடுமையானதும் விட்டுக் கொடுக்காததுமான இரண்டரை வருடப் போராட்டத்தின் பின் 1969ம் ஆண்டு இறுதியில் முடிவுக்கு வந்தது. சகல தேநீர்க் கடைகளிலும் சமத்துவமாக தேநீர் வழங்க கடைச் சொந்தக்காரர்கள் முன்வந்தனர். இதற்கான சமாதானப் பேச்சுவார்த்தை சங்கானையிலேயே இடம் பெற்றது. 1970 ஜனவரியில் சங்கானை பட்டின சபையின் தலைவர் சி. வைரமுத்து ஒரு பகிரங்க அறிக்கை விடுத்து சகல தேனீர்க்கடைகள் உணவகங்களில் சமத்துவம் கடைப்பிடிக்கப்படும் எனச் சுட்டிக்காட்டினார். உயிர்த்தியாகங்களும் இரத்தமும் வியர்வையும் கொண்ட மக்கள் போராட்டம் சமத்துவ ஜனநாயக உரிமையைத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வென்றெடுத்து நிலைநாட்டியது. இப்போராட்டமும் அதன் அனுபவங்களும் இறுதியில் அடைந்த வெற்றியும் மென் மேலும் வட பகுதி எங்கும் சமத்துவத்திற்கான ஜனநாயக உணர்வுகளை தாழ்த்தப்பட்ட மக்களிடையே வலுப்படச் செய்தது.

கரவெட்டிப் பகுதி சாதி- தீண்டாமைக்கு பெயர் பெற்ற பரந்த கிராமமாகும். ஆண்டபரம்பரையில் வந்த சித்தமணியம் உடையார் குடும்பம் கரவெட்டியில் ஆதிக்கம் செலுத்தி வந்தது. அந்தப் பரம்பரையில் வந்தவரே தமிழ்க் காங்கிரசிலும் பின் தமிழர் விடுதலைக் கூட்டணியிலும் முன்னின்ற மு. சிவசிதம்பரம் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இக் குடும்ப ஆதிக்கம் அரசியலில் தமிழ் காங்கிரசின் செல்வாக்குப் பகுதியாகவும் விளங்கியது. இப்பகுதியின் தாழ்த்தப்பட்ட மக்கள் கம்யூனிஸ்ட் கட்சியை ஆதரித்து வந்தவர்கள். அவர்களது உறுதியான ஆதரவுடன் தான் 1956ம்

www.padippakam.com



ஆண்டில் தோழர் பொன். கந்தையா பருத்தித்துறைத் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார். அவர் தாழ்த்தப்பட்ட மக்களை சொல்லாலும் செயலாலும் நேசித்து அம் மக்களின் வாழ்வு மலர்வதற்காகத் தனது சக்தி முழுவதையும் பயன்படுத்தி வந்தவர். அப்படி இருந்துங் கூட அவர் காலத்தில் அப்பகுதி ஆலயங்க ளிலோ அன்றி தேநீர்க் கடைகளிலோ சமத்துவத்தை நிலைநாட்டிக் கொள்ள முடியவில்லை. அதற்குக் காரணம் அன்றைய கம்யூனிஸ்ட் கட்சியின் பாராளுமன்றத்தை நோக்கிய கொள்கையும் வேலை முறையு மேயாகும். அதே வேளை சாதிய ஆதிக்கம் கொண்டவர்களின் இறுக்க மான பிடியும் வலுவுள்ளதாகவே இருந்து வந்தது.

ஆனால் 1966ம் ஆண்டின் பின் நிலைமைகள் மாற்றமடைந் திருந்தன. பாராளுமன்றப் பாதையால் அன்றிப் போராட்டப் பாதையால் தான் சமத்துவத்தை நிலை நாட்ட முடியும் என்ற நடைமுறை அனுபவங் கள் கரவெட்டி-நெல்லியடிப் பிரதேச தாழ்த்தப்பட்ட மக்களிடையே வலுவ டைந்து வந்தது. அவ்வேளை உடுப்பிட்டித் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராக திரு. மு. சிவசிதம்பரம் இருந்தார். அவரிடம் நெல்லியடி தேநீர்க்கடைகளை சமத்துவமாகத் திறந்து விடும்படி பல தடவைகள் கோரிக்கை விடப்பட்டது. ஆனால் எதுவும் நடக்கவில்லை. அதேபோல் அவரது சொந்தக் கோவில் உட்படப் பல ஆலயங்களும் திறந்து விடப்பட வில்லை என்பதும் நோக்கத்தக்கதாகும்.

ஒரு முறை நெல்லியடி தேநீர்க் கடைகளைச் சமத்துவ மாகத் திறந்து வைக்க தான் முன் வருவதாகக் கூறி அதற்குரிய நாளும் குறித்தொதுக்கப்பட்டது. பாராளுமன்ற உறுப்பினர் சிவசிதம்பரத்தி னால் தாழ்த்தப்பட்ட மக்கள் அங்கு அழைத்துச் செல்லப்பட்ட போது ஒரு கடைதானும் திறந்திருக்கவில்லை. மக்கள் ஏமாற்றமடைந்தனர். சிவசிதம்பரம் தான் என்ன செய்வது எனக்கூறி கையை விரித்துக் கொண்டார். ஆனால் இந்த நாடகத்தின் பின்னால் மறைந்திருந்த உண்மையை மக்கள் புரிந்து கொண்டனர்.

இந் நிலையிலேயே கட்சி, வெகுஜன இயக்கம் என்பனவற் றின் தலைமையில் கரவெட்டி-நெல்லியடியில் உள்ள தேநீர்க் கடைகளில் சமத்துவமாக தேநீர் கேட்டு தாழ்த்தப்பட்ட மக்கள் பிரவேசம் செய்தனர். இதனால் கரவெட்டி பகுதியின் சாதிவெறியர்கள் அங்குள்ள வசதிபடைத்த சாதியவாதிகள் தலைமையில் அணிதிரண்டனர். இப் போராட்டத்திற்கு

www.padippakam.com



கன்பொல்லைக் கிராம மக்கள் அச்சாணியாகத் திகழ்ந்தனர். அவர்களுக்கு ஆதரவாக ஏனைய கிராமங்களின் தாழ்த்தப்பட்ட மக்களும் ஏனையோரும் ஆதரவு வழங்கினர். குறிப்பாக நெல்லியடிப் பகுதியின் உயர்த்தப்பட்ட சாதி இளைஞர்கள் தேநீர்க்கடைப் பிரவேசத்திற்கு ஆதரவாக நின்றனர். அவர்கள் மத்தியிலிருந்த கம்யூனிஸ்ட் இளைஞர்கள் கன்பொல்லை மக்களுடன் தோளோடு தோள்நின்று போராட்டத்தை முன்னோக்கி வழிநடத்த உதவினர். அதற்கு அடிப்படைக் காரணம் அவ்வேளை நெல்லியடிப் பகுதியில் கம்யூனிஸ்ட் கட்சி வாலிபர் இயக்கத்தின் புரட்சிகரமான செல்வாக்கு அதிகளவில் இருந்தமையேயாகும்.

கன்பொல்லை மக்கள் ஐக்கியத்துடனும் புரட்சிகர கம்யூனிஸ்ட்கட்சி, வெகுஜன இயக்கம் என்பனவற்றின் வழிகாட்டலில் போராட்டத்தில் முன்னேறினர். சாதி வெறியர்கள் அக் கிராமத்தில் புகுந்து தாக்க முற்பட்ட பல சந்தர்ப்பங்களில் அவர்களை அம் மக்கள் தமது புரட்சிகரத் தாக்குதல்களால் புறமுதுகு காட்டி ஓட வைத்தனர். ஒரு காலத்தில் சாதி ஆதிக்க வாதிகளிடம் அடிக்குமேல் அடிவாங்கி கைகட்டி வாய் பொத்தி நின்ற கன்பொல்லையின் தாழ்த்தப்பட்ட மக்கள் தமது உழைக்கும் கரங்களை உயர்த்தி அடிக்கு அடி திருப்பிக் கொடுத்து நின்றனர். சாதாரண உழைக்கும் மக்களிடையே உள்ளடங்கி இருக்கும் போர்க்குணத்தையும் அடிமைத்தனத்திற்கு எதிராகப் போராடவேண்டும் என்ற புரட்சிகர உணர்வையும் கன்பொல்லை மக்களிடையே நடைமுறையில் காணமுடிந்தது. பாராளுமன்றத்தாலோ மத மாற்றத்தாலோ அல்லது சாதியச் சங்கங்களாலோ சாதிக்க முடியாதவற்றைப் புரட்சிகரப் போராட்டத்தால் வெற்றி கொள்ள முடியும் என்ற நடைமுறை உண்மையில் மக்கள் உறுதியாக முன் சென்றனர். கரவெட்டியின் சாதி ஆதிக்கவாதிகள் வடபகுதி பூராவிலும் இருந்து சாதி வெறியர்களை ஒன்று சேர்த்து அச் சண்டியர்களைக் கன்பொல்லை மக்களுக்கு எதிராக நிறுத்திய போதிலும் அவர்களின் போராட்டத்தை அடக்கிவிட முடியவில்லை. போராட்ட உச்ச கட்டத்தின் போது போராளிகளான மூன்று இளைஞர்கள் நாட்டு வெடிகுண்டு தயாரிப்பின் போது ஏற்பட்ட விபத்தில் ஒரே இடத்தில் கொல்லப்பட்ட சம்பவம் கன்பொல்லைக் கிராமத்தில் இடம் பெற்றது. **சி. வேலும்மயிலும் மா. சீவரட்ணம், க. செல்வராசா** ஆகிய மூன்று தோழர்கள் தியாகிகளாயினர். வேறும் பலர் படுகாயமடைந்தனர்.

அம் மூன்று தியாகிகளின் உடல்கள் கன்பொல்லைக்

www.padippakam.com



கிராமத்தின் பாடசாலையில் பொது மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. பெரும் தொகையான மக்கள் அஞ்சலி செலுத்தினர். புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக தோழர்கள் சி.கா. செந்திவேல், எம்.ஏ.சி. இக்பால், தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் தலைவர் தோழர் எஸ்.ரி.என். நாகரத்தினம் ஏனைய வெகுஜன இயக்கத் தோழர்களும் அஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றினர். அதிபர் ராஜரட்ணம் உட்பட பலர் அஞ்சலி உரையாற்றினர். மேலும் பல்வேறு அமைப்புகள் சார்பாகவும் பிரதிநிதிகள் அனுதாபம் தெரிவித்தனர். அம் மூவரினது இழப்பானது போராட்டத்தைத் தொடர்ந்து உறுதியாக முன்னெடுக்கும் புரட்சிகர ஓர்மத்தை அக்கிராம மக்களிடையே மேலும் வளர்த்து நின்றது. இந்நிகழ்வு ஒரு புறத்தில் இழப்பாகவும் மறுபுறத்தில் சாதிவெறியர்களைக் கிலி கொள்ளச் செய்து அவர்களை பின் வாங்கச் செய்ததாகவும் அமைந்தது. இச் சம்பவத்தின் பின்பும் கன்பொல்லைப் பகுதி மக்கள் ஓய்ந்து விடவில்லை. தியாகியான 23 வயதுடைய ஒரு இளம் போராளி மந்திகை மருத்துவ மனையில் உயிருக்காகப் போராடிக் கொண்ட இறுதி நேரத்திலும் **"தோழர்களே! எச்சந்தர்ப்பத்திலும் பின் வாங்கிவிட வேண்டாம். எமது மக்களுக் கான உரிமைகள் கிடைக்கும் வரை தொடர்ந்து முன்னேறுங்கள்"** என்ற வார்த்தைகளுடனேயே உயிர்துறந்தார். அவரது வேண்டுகோ ளைக் கன்பொல்லை இளைஞர்கள், மக்கள் தொடர்ந்தும் முன்னெடுத்த னர். கன்பொல்லையில் எஸ். சிவகுரு ஆ. தங்கராசா, சிவபாதம், இரத்தினம், பரமு, செல்லக்கிளி, வேலுப்பிள்ளை போன்றோர் போராட்ட முன்னணியா ளர்களாக விளங்கினர்.

ஒரு கட்டத்தில் அக் கிராமம் சாதிவெறியர்களால் பொலீஸ் உதவியுடன் சுற்றி வளைக்கப்பட்டது. தொழில்களுக்காக வெளியே வரமுடியாதவாறு முற்றுகை இடப்பட்டது. அங்கு செல்பவர்கள் குறிப்பாகக் கம்யூனிஸ்ட் கட்சியினதும் வெகுஜன இயக்கத்தினதும் தலைவர்கள், ஊழியர்கள் ஆகியோரே. அவர்கள் மறைமுக வழிகளிலேயே அங்கு சென்று வந்தமை கண்காணிக்கப்பட்டது. உணவிற்கு மக்கள் கஷ்டப்பட்ட னர். அவ்வேளை உணவுப் பொருட்களைச் சேகரித்து நெல்லியடிப் பிரதேச கம்யூனிஸ்ட் இளைஞர்கள் அக் கிராமத்திற்குள் எடுத்துச் சென்ற னர். தயாரித்த உணவும் வழங்கினர். கரையோரக் கிராமமான பொலிகண்டி யின் கம்யூனிஸ்ட் இளைஞர்கள் மீன் வகை களைச் சேகரித்து கொண்டு சென்று விநியோகித்தனர். ஒரு வாரத்தின் பின் தொழில்களுக்காக

www.padippakam.com



அக்கிராம மக்கள் வெளியே வருவதற்கு ஆதரவாகவும் உதவியாகவும் நெல்லியடி இளைஞர்கள் பக்கபலமாக நின்றனர். அவர்கள் கரவெட்டியின் சாதிவெறியர்களுடன் மோதுவதற்கு தயாராகித் தயாரிப்புடன் இருந்தனர். இதில் தோழர்கள் கு.சிவராஜா, கி. சிவஞானம் ஆகியோர் தலைமையில் இளைஞர்கள் வழங்கிய புரட்சிகரப் பங்களிப்பு என்றும் நினைவு கூரத்தக்கதாகும்.

இதே காலத்தில் கரவெட்டி கிழக்கில் உள்ள பெரிய ஆலயமான யாக்கரைப் பிள்ளையார் ஆலயத்தில் கரவெட்டி கிழக்கு வளர்மதிக் கிராமத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட மக்கள் ஆலயப் பிரவேசம் செய்த போது அதைப் பொறுக்க மாட்டாது சாதிவெறியர்கள் அப் பகுதி மக்களின் மீது தாக்குதல்கள் தொடுத்தனர். இப்போராட்டத்தில் கரவெட்டி கிழக்கைச் சேர்ந்த மு. **கந்தவனம்** என்ற இளம் போராளி அதிகாலை வேளை குளக்கரை ஒன்றில் வைத்துச் சாதி வெறியர்களினால் குத்திக் கொல்லப்பட்டார். இதே கரவெட்டி கிழக்கு ஏற்கனவேயும் போராட்டத்தின் போது முன்னின்ற கிராமமாகும். கம்யூனிஸ்ட் கட்சி செல்வாக்குடைய இக் கிராம மக்கள் வெகுஜன இயக்கத்தில் முன்னணியில் இருந்து செயற்பட்டு வந்தனர். எம். செல்லத்தம்பி, கே. தம்பிமுத்து, எஸ். தில்லையம்பலம், எஸ். ஆழ்வாப்பிள்ளை போன்ற கட்சி வெகுஜன இயக்க உறுப்பினர்கள் கிராமத்தையும் மக்களையும் ஐக்கியப்படுத்தி வந்தனர். வடமராட்சியின் கரவெட்டி நெல்லியடிப் பகுதியில் சாதி அடக்கு முறைக்கு எதிரான போராட்டத்தில் நான்கு இளந் தோழர்கள் தமது இன்னுயிர்களைத் தியாகம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது.

இப் போராட்டம் இடம் பெற்ற வேளையில் தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் கல்வி உத்தியோக, பொருளாதார வசதிகள் பெற்ற சிலர் ஒதுங்கி நின்று கொண்டு "இவை எல்லாம் தேவையில்லாத வேலைகள்" என்று பிரசாரம் செய்தார்கள் என்பது குறிப்பிடப்பட வேண்டியதொன்றாகும். "ஏன் அவர்களுடைய கோவிலுக்குத் தான் போக வேண்டுமா" என்றும் "கடையில் ஏன் தேனீர் குடிக்க வேண்டும். வீட்டில் குடிக்கலாந் தானே?" என்றெல்லாம் போராட்டத்தில் இருந்து தூர விலகி நின்று கொண்டார்கள். இத்தகையோர் வடமராட்சியின் தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் கல்வி. பொருளாதாரத் துறைகளில் மேனிலையாக்கம் பெற்ற பிரிவினராவர். இவர்கள் அரசியல் ரீதியில் தமிழரசுக் கட்சியின்

www.padippakam.com



ஆதரவாளர்கள். போராட்டங்கள் முடிவுற்று வெற்றிகள் பெறப்பட்ட பின் உருவாகிய புதிய சூழல்களில் ஏற்பட்ட சமத்துவ வாய்ப்புகள் வசதிகளைப் பெறுவதில் இத்தகையோர் முன் நிற்கவே செய்தனர். அதேவேளை பாராளுமன்ற கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த சிலர் போராட்டம் பற்றி விமர்சனங்களையும் வேண்டா வெறுப்பு நியாயங்களையும் பேசி வந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## போராட்டங்களும் கலை இலக்கியங்களும்

போராட்டங்களின் போது பிறப்பெடுக்கும் கலை இலக்கியங்கள் தொடர்ந்தும் போராட்டங்களுக்கும் அவற்றில் ஈடுபடும் மக்களுக்கும் சேவை செய்யக் கூடிய ஆற்றல் கொண்டவை என்பதை 1966ம் ஆண்டு ஒக்ரோபர் 21 எழுச்சியும் அதன் பாதையிலான போராட்டங்களும் துல்லியமாக எடுத்துக் காட்டின. அதேவேளை ஆற்றல் மிக்க எழுத்தாளர்களையும் கலைஞர்களையும் அப் போராட்டம் வரலாற்று அரங்கிற்கு கொண்டு வந்தது. ஏற்கனவே இருந்து வந்தவர்களைச் செழுமைப்படுத்தி துலங்கச் செய்து நிலை நிறுத்தியது. அத்துடன் முற்போக்குப் பேசி வந்த சிலர் தமது பாராளுமன்ற சந்தர்ப்பவாத அரசியல் நிலைப்பாடு காரணமாக துணிவாகவோ அல்லது தெளிவாகவோ தமது ஆற்றலை வெளிப்படுத்தி எழுத முடியாதவர்களாகிச் சமரச எழுத்துக்களையே பிரசவிப்பவர்களாக விளங்கினர். சில பேராசிரியப் புத்திஜீவிகள் இப் போராட் டத்தைப் பலாத்காரமானது என்ற வியாக்கியானத்துடன் அமைதி யடைந்த தோடு மட்டுமன்றி எதிர்நிலை விமர்சனங்களையும் முன்வைத்தனர். அதேவேளை இப் போராட்டத்தின் வர்க்க அடிப்படையையும் புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி முன்வைத்த வெகுஜனப் போராட்டப் பாதையையும் பல எழுத்தாளர்களும் கலை இலக்கியவாதிகளும் புத்திஜீவிகளும் ஏற்றுச் செயற்பட்டனர். இவ்விடத்திலே ஒரு முக்கிய விடயத்தைக் குறிப்பிட்டுத் தெளிவுபடுத்த வேண்டும். மேற்குறித்த எழுத்தாளர்கள். கலை இலக்கிய வாதிகள் புத்திஜீவிகள் மத்தியில் தாழ்த்தப்பட்ட உயர்த்தப்பட்ட என்ற சாதிய அடையாளத்திற்கு அப்பாலான நிலைப்பாட்டையே காணமுடிந்தது. வர்க்கப் போராட்டத்தின் அடிப்படையில் சாதிய. தீண்டாமை எதிர்ப்புப் போராட்டத்தை அங்கீகரித்து அதற்குத் தமது பங்களிப்பை வழங்கினர். அதன் அடிப்படை மாக்சிச லெனினிச உலகக் கண்ணோட்டத்தை உள்வாங்கி நின்றமையேயாகும். இதனைக் குறிப்பிட வேண்டிய அவசியம் யாதெனில் தமிழகத்தில் முன்வைக்கப்பட்டு தனி ஒரு கோட்பாடாக

www.padippakam.com



வளரமுடியாமல் தனிநபர்களின் சுய வளர்ச்சிக்கு உதவி வந்துள்ள குறுகிய சாதிவாத தலித்தியத்தை இங்கும் வாய்பாடாகவும் வழிமுறையாகவும் முன்வைக்க சிலர் எடுத்துக் கொண்ட முயற்சி பயன்தராமல் போனதன் பின்னணியை எடுத்துக் கூறுவதற்கேயாகும்.

தமிழகத்தில் தலித்தியம் பற்றிப் பேசப்படுவதற்கு முன்பே இலங்கையில் வர்க்கப் போராட்ட அடிப்படையிலான சாதிய-தீண்டாமைக்கு எதிரான போராட்டம் பாராளுமன்ற சந்தர்ப்பவாதக் கண்ணோட்டத்திற்கும் அப்பாலான புரட்சிகர வெகுஜனப் போராட்ட அடிப்படையில் முன் சென்று வெற்றி பெற்றுக் கொண்டது.

1966ம் ஆண்டு காலகட்டத்தில் இப் போராட்டத்துடன் தம்மை இணைத்து நின்ற முக்கியமான எழுத்தாளர்கள், கலை இலக்கியவாதிகள், கலைஞர்களின் பட்டியலை இங்கு தருவது பயன்தருவதாகும். பேராசிரியர் க. கைலாசபதிஇ பேராசிரியர் சி. தில்லைநாதன், செ. கணேசலிங்கன், சுபைர் இளங்கீரன். இ. முருகையன், சில்லையூர் செல்வராஜன், கே. டானியல், இளைய பத்தமநாதன், நீர்வைப் பொன்னையன், செ. கதிர்காமநாதன், பெனடிக்ற் பாலன். என்.கே. ரகுநாதன், கே. தங்கவடிவேல், எஸ். ஜி. கணேசவேல், செ. யோகநாதன், சுபத்திரன், சி. மௌனகுரு, இ.செ. கந்தசாமி, புதுவை இரத்தினதுரை, க. தணிகாசலம், செல்வ பத்மநாதன், இ. சிவானந்தன், கே. பவானந்தன், நந்தினி சேவியர், இராஜா தருமராஜா எஸ். முத்துலிங்கம், கே.ஆர். டேவிட், எஸ், கனகரட்ணம், க. இரத்தினம், கு. சிவராஜா, அண்ணாவியார் கணபதிப்பிள்ளை, எஸ். சிவபாதம், ஆ. தங்கராசா, நா. யோகேந்திரநாதன், ஷெல்லிதாசன், எம். செல்லத்தம்பி. முருகு இரத்தினம், நவிண்டில் சிவராசா. சோதி, முருகு கந்தராசா, எஸ். வில்வராஜ் போன்றவர்களைக் குறிப்பிட்டுக் கூற முடியும். இவர்களிடையேயான சாதிய அடையாளம் எவ்வகையிலும் முதன்மை பெறாது அதனைக் கடந்த நிலையில் இப்போராட்டத்தின் பங்காளிகளாகி தத்தம் கலை இலக்கிய ஆற்றல்களை வெளிப்படுத்தி நின்றமை அவசியம் சுட்டிக்காட்டப்பட வேண்டிய தொன்றாகும்.

அந்த வகையில் தாக்கம் மிக்க சிறுகதைகள்இ கவிதைகள், குறுநாவல்கள், நாவல்கள் கட்டுரைகள் விமர்சனங்கள் உருவாகின. அவை தாழ்த்தப்பட்ட மக்களின் போராட்டங்களை ஆதரித்து பெரும் பிரசார சாதனமாகி மக்கள் மத்தியில் விழிப்புணர்வு தோன்றி வளர உதவின. "ஆற்றல் மிகு கரத்தில் ஆயுதங்கள் ஏந்துவதே மாற்றத்திற்கான வழி

www.padippakam.com



மாற்று வழி ஏதுமில்லை" என்ற எஸ். ஜி. கணேசவேலின் கவிதை அடிகள் அப்போராட்ட சூழலில் போராடும் மக்களுக்கு உணர்வையும் உந்துத லையும் வழங்கி நின்றது. அதேபோல் நாடகங்களும் தோன்றலாயின. சாதி அரக்கனைச் சாய்த்த கதை மட்டக்களப்பில் சி. மௌனகுருவினால் உருவாக்கப்பட்டுச் "சங்காரம்" என்ற நாடகமாக மேடையேற்றப்பட் டது. இந் நாடகத்தில் மட்டக்களப்பின் இளம் கலைஞர்கள் ஆர்வத்துடன் பங்கு கொண்டு அதனை வெற்றிபெறச் செய்தனர். கொழும்பில் இ. முருகையனின் "கடூழியம்" மேடை ஏறியது. அதில் கொழும்பு வாழ் கலைஞர்கள் பங்கு பற்றினர். இவை சாதிய வர்க்க அடக்குமுறைகளை வர்க்கப் போராட்டப் பார்வையில் வெளிப்படுத்தும் நாடகங்களாக விளங் கின. அதேவேளை வடபகுதியில் சாதி-தீண்டாமைக்கு எதிரான நேரடி நாடகமாக என்.கே. ரகுநாதனின் மூலக் கதையைக் கொண்ட கந்தன் கருணை நாடகத்தை நெல்லியடி அம்பலத்தாடிகள் அமைப்பு, சிறப்பான மரபு வழி நாடகப் பாணியில் நவீனமாக உருவாக்கி மக்கள் மத்தியில் அரங்கேற்றினர். காத்தவராயன் கூத்து மெட்டில் அண்ணாவியார் சி. கணபதிப்பிள்ளையின் வழிகாட்டலுடன் இளைய பத்மநாதனின் நெறிப்படுத் தலில் உருவாகியது. இந்நாடகம் வடபகுதியின் போராட்டக்களத்தில் பெரிய தோர் கலை ஆயுதமாகப் பயன்பட்டது. கிராமங் கிராமமாக இந் நாடகம் மேடையேற்றப்பட்ட வேளைகளில் பல்லாயிரக்கணக்கான மக்கள் ஆவலோடு பார்த்து ரசித்தது மட்டுமன்றிப் போராட்ட உணர்வு பெறக் கூடி யதாகவும் அமைந்து இருந்தது. அதே நாடகத்தைச் சங்கானையிலும் பண்டத்தரிப்பில் சாந்தை என்ற கிராமத்திலும் பின் புத்தூரிலும் மக்கள் தாங்களாகவே நடித்துவரவும் செய்தனர். கொழும்பில் அம்பலத்தாடிகளின் கந்தன் கருணை நாடகம் லயனல் வெண்ட் அரங்கில் மேடை ஏறியது குறிப்பிடத்தக்கதாகும். அவ் வேளை அந்நாடகத்தின் உருவமும் உள்ளடக் கமும் சிறப்பாக இணையப் பெற்றதன் காரணமாக கொழும்பில் இப் போராட்டங்களுக்கு முழு ஆதரவை வழங்கி நின்ற தமிழ்ப் புத்திஜீவிகளின் முன் முயற்சியால் நடிகர் ஒன்றியத்தின் சார்பாக மேலும் மெருகூட்டப்பட்டுக் கந்தன் கருணை நாடக அரங்கக் கல்லூரியினால் கொழும்பிலும் பின்னர் யாழ்ப்பாணத்திலும் மேடையேற்றப்பட்டது. இவ்வாறு அப் போராட்ட காலங்களினூடாக பல்வேறு வகைப்பட்ட இளம் தலைமுறை எழுத்தாளர்கள் தத்தமது ஆற்றல்களை கலை இலக்கியத் துறையில் செழுமைப்படுத்தி முன்னெடுக்கும் வாய்ப்புக்கள் வளர்ந்தன. அக் காலகட்டத்தில் காலம்

www.padippakam.com



சென்ற பேராசிரியர் க. கைலாசபதி அன்றைய கலை இலக்கிய எழுச்சியின் போக்கை ஆற்றுப்படுத்துவதிலும் அரசியல் போராட்டப் பாதை க்கு ஆற்ற வேண்டிய பங்களிப்பை வலியுறு த்தி வழிகாட்டிய்திலும் அளித்த பங்களிப்பு பாரியதொன்றாகும். அதேபோல் மற்றும் பல எழுத்தாளர்கள், கவிஞர்கள். கலைஞர்கள், கட்டுரையாளர்களின் பங்களிப்புக்கள் அக் காலப்போராட்ட இயக்கத்துடன் இறுகப் பிணைந்திருந்தவையும் கனதியானவையும் ஆகும்.

1969ல் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தினால் ஓவியக் கண்காட்சி ஒன்று யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்டது. யாழ்-நகர மண்டபத்தில் தீ.ஒ.வெ. இயக்கத்தின் இரண்டாவது மாநாட்டையொட்டி அவ் ஓவியக் கண்காட்சி இடம் பெற்றது. தாழ்த்தப்பட்ட மக்கள் ஆண்டாண்டு காலமாக அனுபவித்து வந்த சாதி-தீண்டாமைக் கொடு மைகளைத் தத்ரூபமாக அவ் ஓவியங்கள் வெளிப்படுத்தின. அம் மக்கள் மத்தியில் இருந்து வந்த கலைஞர்களும் அப் போராட்டத்தை ஆதரித்து நின்ற கலைஞர்களுமே அவ் ஓவியங்களை உயிர்த்துடிப்புடன் வரைந்திருந்தனர். இவ் ஓவியங்களை உருவாக்குவதில் ஆசிரியர் கே. தங்கவடிவேல், ஆசிரியர் என்.கே. ரகுநாதன் உட்படப் பலர் ஆற்றிய பங்களிப்பு சிறப்பானதாகும். அம்மாநாட்டில் இவ் ஓவியக் கண்காட்சியைப் பார்வையிட்ட தென்னிலங்கைப் பிரதிநிதிகள் கொழும்பில் அக் கண்காட்சி யை நடத்த ஆர்வம் கொண்டனர். கொழும்பில் ஏற்கனவே தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்க கிளை உருவாக்கப்பட்டு வடபுலத்துப் போராட்டங்களுக்கு பலவழிகளிலும் ஒத்துழைப்பும் ஆதரவும் வழங்கி வந்தது. அதில் தமிழ் சிங்கள முஸ்லீம் புத்திஜீவிகள் இணைந்திருந்தனர். இக் கிளை பலவேறு கூட்டங்கள் கருத்தரங்குகளை நடாத்தியும் வந்தது. அதன் தலைவராக சட்டவாதியான குமாரலிங்கம் இருந்து ஆர்வத்துடன் செயற் பட்டார். மேற்படி வெகுஜன இயக்கத்தின் கொழும்புக் கிளை 1969 மார்ச் 17ம், 18ம், 19ம் திகதிகளில் கொழும்பு லயனல் வென்ட் கலா மண்டபத்தில் இவ் ஓவியக் கண்காட்சியை நடாத்தியது. நீண்டகால இடதுசாரி இயக்கத்தொடர்பு உடையவரும் கலை இலக்கியத்தில் மிக ஈடுபாடு கொண்டவருமான செனட்டர் ரெஜி பெரேரா இவ் ஓவியக் கண்காட்சியைத் திறந்து வைத்தமை குறிப்பிடத்தக்கதாகும். இவ் ஓவியக் கண்காட்சியானது வடபகுதி தாழ்த்தப்பட்ட மக்கள் சாதி-தீண்டாமையால் அடக்கப்படும் அவல வாழ்வைத் தென்னிலங்கை மக்கள் மத்தியில் அம் பலப்படுத்தி அம் மக்களின் நியாயமான போராட்டத்திற்கான ஆதரவையும்

படிப்பகம்

www.padippakam.com



பெற உதவியது. அதே வேளை வடக்கிலே நிலவும் சாதியத்தைப் போர்த்தி மூடித் தமிழ் தமிழ் என்று உரத்துக்கூறிக் கொண்டு தமது உயர்வர்க்க மேட்டுக்குடி அந்தஸ்த்தைப் பாதுகாத்து வந்த தமிழ்ச் சீமான்களையும் சீமாட்டிகளையும் அவ் ஓவியக் கண்காட்சியானது தலைகுனிய வைத்தது.

கட்சிக்கும் தீ.ஒ.வெ. இயக்கத்திற்கும் அப்பால் பரந்தளவில் இப்போராட்டம் எழுத்தாளர்களையும் கலைஞர்களையும் உணர்வு கொள்ள வைத்தது. மகாகவியின் "தேரும் திங்களும்" கவிதை, ஆனந்தராஜாவின் "இருட்டில் குருட்டாட்டம்" நாடகம் எனப் பலமுயற்சிகள் வெளிவந்தன.

மேலும் இக் கால கட்டத்தில் மேற்குறிப்பிட்ட நிலைப்பாட்டிற்கு அப்பாலான எழுத்தாளர்கள் சாதியத்தையும் தீண்டாமையையும் நிராகரித்து அம்பலப்படுத்தி எழுதி வந்திருக்கிறார்கள். அவர்களில் பாராளுமன்ற கம்யூனிஸ்ட் கட்சி சார்பான முற்போக்கு எழுத்தாளர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் வெகுஜனப் போராட்டங்களையும் அதற்குத்தலைமை தாங்கிய புரட்சிகர கம்யூட்னிஸ்ட் கட்சியின் நிலைப்பாட்டையும் ஏற்றுக் கொள்ளாதவர்களாக இருந்தனர். டொமினிக் ஜீவா, தெணியான், அகஸ்தியர், பிரேம்ஜி போன்றவர்களை குறிப்பிடலாம். இவர்களுடனேயே பேராசிரியர் கா. சிவத்தம்பியும் இணைந்து நின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இவர்களை விட சீர்திருத்த மனிதாபிமான நோக்கிலும் காந்திய நிலைப்பாட்டிலும் இருந்து சாதியத்தை அம்பலப்படுத்தி சிறு கதைகள், கவிதைகள், நாவல்கள் எழுதி வந்த எழுத்தாளர்கள் சகல பிரதேசங்களிலும் இருந்து வந்தனர்.

மக்களின் நியாயமான போராட்டங்களும் அவற்றுக்கான கம்யூனிஸ்ட்டுகளின் சரியான தலைமையும் தோல்வி காணாது முன்னேறும் என்பதையும் அவற்றின் ஊடே மக்களுக்கான கலை இலக்கிய வடிவங்களும் தோன்றி வளர்ந்து மீண்டும் மக்களுக்கும் அவர்களது போராட்டங்களுக்கும் சேவை செய்யமுடியும் என்பதற்கும் அன்றைய கலை இலக்கிய வடிவங்களின் தோற்றமும் வளர்ச்சியும் பங்களிப்பும் நடைமுறைச் சான்றுகளாகி வரலாற்றுப் பதிவுகளாயின.

## போராட்டங்களும் அவற்றின் தாக்கங்களும்

**1966**ம் ஆண்டு ஒக்ரோபர் 21 எழுச்சி உருவாக்கிய போராட்டங்கள் தமிழர் சமுதாயத்தில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தியது போன்று முழு நாட்டின் மீதும் பல்வேறுவித எதிரொலிகளைத் தோற்று

www.padippakam.com



வித்தது. இப் போராட்டங்கள் அகிம்சை, சாத்வீகம், மனமாற்றம். சமாதான பாராளுமன்றப் பாதை போன்ற திரைகளின் முன்னால் பரப்பப் பட்டு வந்த கட்டுக் கதைகளையெல்லாம் தகர்த்தெறியும் ஓர் புதிய சிந்தனைச் சூழலையும் செயற்பாட்டு முயற்சிகளையும் தொடக்கி வைத்தது.

இலங்கைத் தமிழர்களின் நீண்ட வரலாற்றில் சாதியமும் தீண்டாமையும் வகித்து வந்த பிற்போக்குப் பாத்திரத்தின் மீது தொடுக்கப்பட்ட இப் போராட்டம் தமிழ்த் தேசிய இனத்தின் மத்தியில் ஒரு வரலாற்றுத் திருப்பு முனையைத் தோற்றுவித்தது. ஆலயங்கள், தேநீர்க் கடைகள், உணவகங்கள் மற்றும் பொது இடங்களில் அன்றுவரை பின்பற்றப்பட்டு வந்த சாதிய தீண்டாமை முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. தமிழர்கள் மத்தியில் இரண்டு தமிழர்கள் என்ற நிலை பொது இடங்களில் அகற்றப்பட்டது. தொடுக்கப்பட்ட போராட்டங்கள் அனைத்தும் அவற்றின் இலக்குகளை ஜனநாயக சமத்துவ வெற்றிகளாகச் சென்றடைந்தன. அதேவேளை, அவற்றின் தாக்கங்கள் நாடு முழுவதிலும் பரவிச் சென்றன. இது போன்ற ஒரு புரட்சிகர வெகுஜனப் போராட்டம் தமிழர் சமூகப் பரப்பில் மட்டுமன்றி நாட்டின் ஏனைய பகுதிகளிலும் நீண்ட போராட்டமாக முன்பு இடம் பெற்றதில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஆண்டாண்டு காலமாக அடக்கி ஒடுக்கப்பட்டு வந்த தாழ்த்தப்பட்ட மக்கள் வரலாற்றில் முதல் தடவையாக ஒழுங்கு படுத்தப் பட்ட அமைப்பு வடிவிலான விட்டுக்கொடுக்காத புரட்சிகரப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இப் போராட்டங்கள் சாதியத்தையும் தீண்டாமையையும் குறிவைத்து முன்னெடுக்கப்பட்டதாயினும் அதன் அடிப்படை மாக்சிச லெனினிச உலக நோக்கில் அமைந்த வர்க்கப் போராட்டத்தையே மையமாகக் கொண்டிருந்தது. இதனை கீழ் வருமாறு பகுத்துப் பார்க்க முடியும்.

1- புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை

2- சாதியம், தீண்டாமை பற்றிய தெளிவான கண்ணோட்டம்

3- போராட்ட மார்க்கம் பற்றிய வரையறுப்பு

4- எதிரி யார்? நண்பர் யார்? என்பதைத் தெளிவாக வரையறுத்துக் கொண்டமை.

5- ஐக்கிய முன்னணி அமைப்பாக தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தை முன்னெடுத்தமை

6- சட்ட ரீதியானதும் சட்ட மறுப்பானதுமான போராட்டங்களை

www.padippakam.com



ஒன்றுடனொன்று இணைத்து முன்னெடுத்துச் சென்றமை.

7- ஆயுத வழிமுறைகளை மிகவும் கட்டுப்பாடான முறையில் கையாண்டமை.

8- போராட்டங்களைத் தாழ்த்தப்பட்ட மக்களின் தனித்த குறுகிய சாதிவாதப் போராட்டமாகவன்றி நாட்டினதும் அனைத்துத் தமிழ் மக்க ளினதும் பிரச்சினைகளுடன் ஒன்றிணையச் செய்ததன் மூலம் பெரும்பான்மையான மக்களின் ஆதரவைப் பெற்றமை.

இப் போராட்டங்கள் உக்கிரமடைந்த அதே 1966-71 காலப் பகுதியில் வடபுலத்தில் ஏனைய போராட்ட இயக்கங்களையும் கம்யூனிஸ்ட் கட்சி முன்னெடுத்து வந்தது. 1965-70ல் யூ.என்.பி. அரசு தமிழரசுக் கட்சியையும் தனது பங்காளனாகக் கொண்டு ஆட்சி நடத்தி வந்தது. வடபகுதியில் இருவாரங்கட்கு மேலாக நடைபெற்ற வடபகுதி இ.போ.ச. தொழிலாளர்களின் வேலைநிறுத்தப் போராட்டம், கம்யூனிஸ்ட் கட்சியின் தொழிற் சங்கம் முன்னின்று ஏனைய தொழிற் சங்கங்களையும் இணைத்து நடத்தியதன் மூலம் வெற்றிகரமாக முடிவுற்றது. மில்க்வைற் தொழிலாளர் போராட்டம் உச்சத்திற்கு சென்று தமிழ் முதலாளியத்தின் நிலப்பிரபுத்துவம் கலந்த அசிங்கமான தோற்றத்தை தமிழ்த் தொழிலாளர்கள் அனைவருக்கும் அம்பலமாக்கியது. அரசு யந்திரத்தின் ஒரு அம்சமான பொலீஸ் படையும், தமிழுக்காகப் போராடுபவர்களாகக் காட்டிக் கொண்ட தமிழரசுத் தலைவர்களும் தொழிலாளர் பக்கமா அன்றி முதலாளியின் பக்கமா என்பதை மில்க்வைற் தொழிலாளர் போராட்டம் தெளிவாக அடையாளம் காட்டி நின்றது. வல்லை நெசவாலைத் தொழிலாளர் தமது வேலைநிறுத்தப் போராட்டத்தில் பொலீசுடன் மோதினர். அம் மோதலில் தனது துப்பாக்கியை இழந்த ஒரு பொலீஸ் சார்ஜன்ட் தற்கொலை செய்து கொள்ளும் அளவுக்கு அப் போராட்டம் வடபகுதித் தொழிலாளர்கள் மத்தியில் ஒரு உத்வேகத்தைக் கொடுத்தது. காங்கேசன்துறை சீமெந்து ஆலையிலும். பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை யிலும் தொழிலாளர்கள் தொழிற்சங்கப் போராட்டங்களில் ஈடுபட்டனர். அதே காலப்பகுதியில் கிளிநொச்சி. வன்னிப் பிரதேசங்களில் விவசாயி கள் விவசாய சங்கங்களில் அணிதிரண்டு அரசின் நில. நீர் நிர்வாக அநீதிகளுக்கு எதிராகப் போராட்டங்களில் ஈடுபட்டனர். மாணவர்கள் ''சியவச'' என்ற பெயரில் பாடசாலைகளில் திணித்த லொத்தர் முறைக்கும் ஏனைய மாணவ விரோதக் கொள்கைகளுக்கும் எதிராக கிளர்ந் தெழுந்தனர். இவற்றில் புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியின் மாணவர் இயக்கம்

படிப்பகம்

www.padippakam.com



முன்னணிப் பாத்திரத்தை வகித்தது. "தீ" என்னும் மாணவர் பத்திரிகையும் வெளிவந்தது. இக் காலத்தில் அமெரிக்க ஏகாதிபத்திய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் வடபுலத்தில் அடிக்கடி நிகழ்ந்து வந்தன. வியட்நாம் மீதான அமெரிக்க ஆக்கிரமிப்பை எதிர்த்த செயற்பாடுகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டன. ஏகாதிபத்திய எதிர்ப்பு மக்களிடையே பரப்பப்பட்டது. ஒரு கட்டத்தில் யாழ்ப்பாணம் வந்த அமெரிக்க உயர் ஸ்தானிகர் கூழ் முட்டை எறி ஆர்ப்பாட்டத்தால் ஓட ஓட விரட்டப்பட்டார். இவ்வாறு சாதி ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டங்கள் நிகழ்ந்த சமகாலத்தில் தொழிலாளர்கள் விவசாயிகள் மாணவர்கள் புத்திஜீவிகளைக் கொண்ட பல்வேறுபட்ட போராட்ட இயக்கங்களும் கம்யூனிஸ்ட் கட்சியினால் முன்னெடுக்கப்பட்டன. இவற்றில் கலந்து கொண்ட தொழிலாளர்கள், விவசாயிகள், மாணவர்கள்இ புத்திஜீவிகள் சகலரும் சாதிய நிலைக்கு அப்பால் வர்க்க சக்திகளாக அணிதிரண்டனர் என்பது இவ்விடத்தில் அழுத்திக் கூறப்பட வேண்டிய தொன்றாகும். இவை யாவற்றினதும் உச்ச நிலையாக 1969ம் ஆண்டு யூ.என்.பி அரசு விதித்த தடையையும் மீறி யாழ்ப்பாணத்தில் மேதினம் புரட்சிகரமான ஆர்ப்பாட்ட ஊர்வலமாக நடத்தப்பட்டது. ஆயிரக் கணக்கில் மக்கள் கலந்து கொண்ட இவ் ஊர்வலம் பொலீசுடனான மோதலில் இரத்த சாட்சியத்துடன் பதிவுபெற்றது. இவற்றை இச் சந்தர்ப்ப த்தில் குறிப்பிட வேண்டிய அவசியம் என்னவெனில் ஒரு உண்மையான புரட்சிகர வெகுஜன எழுச்சி தோற்றுவிக்கப்பட்டு வர்க்கப் போராட்ட அடிப்படையில் தெளிவான கொள் கையுடன் உறுதியான தலைமைத்து வத்துடன் முன்னெடுக்கப்படும் போது சாதி, இனம், மொழி, பிரதேசம் போன்ற குறுகிய எல்லைகள் தகர்க்கப்படும் என்ற நடைமுறை உண்மை யைச் சுட்டிக்காட்டுவதற்கேயாகும்.

இப் போராட்டங்களையும் வெற்றியையும் தொடர்ந்தே 1971ல் தெற்கிலே இளைஞர்களின் ஏப்பிரல் கிளர்ச்சி வெடித்தெழுந்தது. அதனை ஜே.வி.பி. றோகண விஜேவீரா தலைமையில் முன்னெடுத்தது. ஆனால் தவறான கொள்கை தந்திரோபாயம் பின்பற்றப்பட்டதினால் படுதோல்வி கண்டு பல்லாயிரக்கணக்கான இளைஞர் யுவதிகளும் மக்க ளும் பலியாகினர். வெறுமனே ஆயுதம் தூக்கினால் எல்லாம் வெற்றியாகி விடாது என்பதற்கு இரண்டு தடவையும் தோல்வியடைந்த ஜே.வி.பி. யின் கிளர்ச்சிகள் சாட்சிகளாகும். வர்க்கப் போராட்ட அடிப்படை இன்றி இளைஞர் யுவதிகளை மட்டும் அணிதிரட்டி சிறு முதலாளித்துவத் தலை

www.padippakam.com



மையால் முன்னெடுக்கப்பட்டதே ஜே.வி.பி கிளர்ச்சியாகும். அதுவே அதன் தோல்விக்கான காரணமுமாகும்.

மேலும் 1966ம் ஆண்டு ஒக்ரோபர் 21 எழுச்சி தொடக்கி வைத்த போராட்டங்களும் அவற்றின் வெற்றிகளும் தமிழ் இளைஞர்கள் மத்தியில் ஒரு புதிய சிந்தனைச் சூழலை உருவாக்கியதை அவதானிக்க லாம். அவர்கள் அப் போராட்டங்களின் முழுமையான அம்சங்களை உள்வாங்கி கையேற்பதற்குப் பதிலாக ஓரிரு அம்சங்களை மட்டுமே தமதாக்கிக் கொண்டனர். தமிழ் மக்களின் பிரச்சனைகளுக்கு ஆயுதப் போராட்டம் தான் ஒரே வழி என்பதை ஏற்றுக் கொண்ட அவ் இளைஞர்கள் தாழ்த்தப்பட்ட மக்களின் புரட்சிகரப் போராட்டங்களில் முன்வைக்கப்பட்ட ஏனைய பிரதானமான அம்சங்களை உதறித்தள்ளினார்கள். கொள்கை. நடைமுறைத் தந்திரோபாயங்கள், அமைப்பு வடிவம் வெகுஜனப் போராட்டம். ஐக்கிய முன்னணி கட்டுதல் என்பனவற்றுக்கும் மேலாக எதிரி யார்? நண்பர் யார்? என்பதை வரையறுத்தல் போன்றவை யாவும் மிகவும் குருட்டுத்தனமான முறையில் இளைஞர் இயக்கங்களால் நிராகரிக்கப்பட்டன. அதன் விளைவுகள் இன்று தமிழர் விடுதலைப் போராட்டத்தின் பாதக அம்சங்களாக மாறி இருப்பதை யாவரும் அனுபவ ரீதியாக உணரும் நிலை தோன்றியுள்ளது. தாழ்த்தப்பட்ட மக்களின் போராட்டம் வர்க்க அடிப்படைகளைக் கொண்டிருந்ததால் சாதனைகளும் வெற்றிகளும் சாதிக்கப்படக் கூடியவையாக விளங்கின. ஆனால் தமிழ் இளைஞர்கள் வெறுமனே ஆயுதங்களை மட்டும் நம்பி ஏனையவற்றில் குறுகிய தேசியவாத அடிப்படையில் கொள்கைகளை உருவாக்கி அவற்றை நடைமுறைப்படுத்த முயன்றதால் சாதனைகளைவிட வேதனைகளும் ஆக்கங்களை விஞ்சி அழிவுகளும் மேலோங்குமாறான ஒரு சூழலே உருவாகியுள்ளமையைக் காண முடிகின்றது. ஐந்து ஆண்டுகள் வரை மாக்சிச லெனினிச வழிமுறைகளில் வர்க்கப் போராட்ட அடிப்படையில் இடம் பெற்ற தாழ்த்தப்பட்ட மக்களின் போராட்டங்களையும் அதன் சாதனைகளையும். தமிழர் விடுதலைக்கென்று இளைஞர் இயக்கங்களால் முன்னெடுத்து வரப்பட்டு இருபது ஆண்டுகளுக்கு மேலாக நடைபெற்று வரும் போராட்டங்களையும் அவற்றின் சாதக பாதகங்களையும் நேர்மை யான வழிகளில் ஒப்பிட்டு ஆராய்ந்து சரியான முடிவுகளுக்கு வருவது அவசியம்.

இச் சந்தர்ப்பத்தில் தாழ்த்தப்பட்ட மக்களின் எழுச்சி உருவாக்கிய மற்றொரு தாக்கத்தினை கருத்திற் கொள்வது அவசியமாகும். அன்று எழுந்து வந்த புரட்சிகரப் பேரலையானது தமிழர்

www.padippakam.com



பழமைவாதத்திற்கு அடிகொடுத்த அதேவேளை தமிழ் மக்கள் மத்தியில் தமிழ்த் தலைவர்களால் வளர்க்கப்பட்டு வந்த குறுகிய தேசியவாத உணர்வுகள் மழுங்கடிக்கப்பட்டு வர்க்க அடிப்படையிலான முற்போக்கு உணர்வுகள் வளர்ந்து செல்லக் கூடிய வாய்ப்புகள் இக்காலப் பகுதியில் அதிகரித்து வந்தன. தமிழ்த் தலைவர்களின் பழைமைவாத நிலைப்பாடும் ஏகாதிபத்திய சார்பு நிலையும். யூ.என்.பியுடனான நேச உறவும் அவர்களின் சுயரூபத்தை அம்பலமாக்கி நின்றன. இவர்களது பிற்போக்கு நிலைப்பாட்டை தாழ்த்தப்பட்ட மக்களின் போராட்டங்கள் நன்றாக வெளிச்சமிட்டுக் காட்டிய அதே வேளை அத்தலைவர்களும் தமது மக்கள் விரோத நிலைப்பாட்டைக் கூச்சம் எதுவுமின்றி நிலை நிறுத்திக் காட்டினர். அவர்களது பிற்போக்கு நிலைப்பாட்டையும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிரான செயற்பாடுகளை யும் மக்கள் எடை போட்டு தமது எதிர்ப்பைத் தெரிவிக்க 1970ம் ஆண்டுப் பொதுத் தேர்தல் ஒரு சந்தர்ப்பமாகியது. புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி தேர்தலைப் பகிஷ்கரித்து நின்றது. வெகுஜனப் போராட்டங்களால் உருவாகிய மக்கள் ஆதரவை அது வாக்கு வங்கியாக மாற்ற முனைய வில்லை. 1970ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் வட்டுக்கோட்டைத் தொகுதியில் (சங்கானைப் போராட்டம் நிகழ்ந்த தொகுதி) தமிழரசுத் "தளபதி" என வர்ணிக்கப்பட்ட அ. அமிர்தலிங்கம் தோல்வி அடைய நேரிட்டது. அதே போல் உடுப்பிட்டிச் "சிங்கம்" என அழைக்கப்பட்ட தமிழ் காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான மு. சிவசிதம்பரம் உடுப்பிட்டித் தொகுதியில் (கரவெட்டி- கன்பொல்லைப் போராட்டம் நடைபெற்ற தொகுதி) படுதோல்வி கண்டார். அன்றுவரை மேற்படி தொகுதிகளில் தோற்கடிக்கப்பட முடியாதவர்கள் என்று மார்புதட்டி நின்ற இவ்விரு தலைவர்களும் தாழ்த்தப்பட்ட மக்களின் போராட்டங்களுக்குக் குறுக்கே நின்று தத்தமது தொகுதிகளை இழந்து கொண்டனர். அதுமட்டுமன்றி அடுத்து நடைபெற்ற 1977ம் ஆண்டு தேர்தலில் தத்தமது தோல்விகண்ட தொகுதிகளை விட்டு வெளியேறி காங்கேசன்துறையில் அமிர்தலிங்கமும் நல்லூரில் சிவசிதம்பரமும் நிற்கவேண்டிய நிலையையும் அவர்கள் தேடிக் கொண்டனர்.

அன்று 70ம் ஆண்டு தேர்தலில் வட்டுக்கோட்டையிலும் உடுப்பிட்டியிலும் ஏற்பட்ட பாராளுமன்றத் தோல்வி தமிழ்த் தலைவர்களிடையே பெரும் அதிர்ச்சியைத் தோற்றுவித்தது. அத்துடன் தமிழ்த் தலைமையிடம் இளைஞர்கள் பெரும் அதிருப்தியைக் காட்ட முற்பட்டனர். மேலும். தாழ்த்தப்பட்ட மக்களின் புரட்சிகரப் போராட்டப் பேரலையைக் கண்டு தமிழர் பழமைவாதிகளும் அவர்களது அரசியல் பிரதிநிதிகளான

www.padippakam.com



தமிழ்த் தலைவர்களும் கிலி கொண்டவர்களாகக் காணப்பட்டனர். தாழ்த்தப்பட்ட மக்களின் போராட்டமானது கம்யூனிஸ்ட் கட்சியின் கரங்களுக்குச் சென்றடைந்தது போன்று தமிழர் விடுதலைப் போராட்டமும் விரைவாகவே மாக்சிச லெனினிச புரட்சிகர சக்திகளின் வழிகாட்டுதலுக்கு உட்பட்டு விடுமோ என்று அச்சம் கொண்டனர். எனவே தமது உயர்வர்க்கத் தலைமையை தமிழர் மீது திணித்து புரட்சிகர சக்திகளின் வளர்ச்சியை தடைப்படுத்துவதற்கும் அதிருப்தி அடைந்த தமிழ் இளைஞர்களை புரட்சிகரப் பக்கம் அணிதிரளவிடாது திசைதிருப்பி குறுகிய தேசியவாதத்தை முன்னெடுப்பவர்களாக மாற்றவும் தமிழ்த் தலைவர்கள் முடிவு செய்தார்கள். இத்தகைய சூழலையும் தலைமைகளையும் அமெரிக்க, இந்திய ஆளும் வர்க்க சக்திகள் தமக்கு ஏற்ற விதமாகப் பயன்படுத்த முற்பட்டனர். தமிழர்கள் மத்தியில் உருவாகி வந்த புரட்சிகர எழுச்சி ஏகாதிபத்திய எதிர்ப்பாகவும் வர்க்க அடிப்படையிலான போராட்ட மார்க்க மாகவும் விரிவு பெற்றுச் செல்வதைத் தடுப்பதில் இவர்கள் எல்லோரும் ஒன்றிணைந்து பிற்போக்கு நிலைப்பாட்டை தூர நோக்கில் வகுத்துச் செயலாற்ற முன் வந்தனர். அதன் வெளிப்பாடே வட்டுக்கோட்டையில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பிறப்பும் **தமிழ் ஈழக்** கோரிக்கையின் பிரகடனமுமாகும். இதன் மூலம் தமிழ்த் தலைவர்கள் எதிர்பார்த்த மோசமான பிற்போக்கு விருப்பங்கள் நிலைப்பாடுகள் நிறைவேறியமை உண்மையேயாகும். ஆனால் அதன் கொடிய விளைவுகளுக்கு அவர்களாலேயே தாக்குப் பிடிக்கமுடியாது போனமை மட்டுமன்றி இறுதியில் தம்மையே பலிகொடுக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கும் அவர்கள் தள்ளப்பட்ட னர். தமது சொந்த மேட்டுக்குடி உயர் வர்க்க நோக்கங்களுக்காக அந்நிய ஏகாதிபத்திய பிராந்திய மேலாதிக்க சக்திகளின் அரவணைப்புடன் அவர்கள் முன்னெடுத்த செயற்பாடுகள் யாவும் தமிழ்த் தேசிய இனம் முழுவதை யுமே சின்னாபின்னப் படுத்துவதற்கான மிகப்பெரிய வரலாற்றுத் தவறுக ளையும் துரோகங்களையும் இழைக்க வைத்தன. இத்தகைய தமிழ்த் தலைவர்களைத் தமிழர் வரலாறு என்றுமே மன்னிக்க மாட்டாது. மாறாகச் சபித்தவண்ணமே இருக்கும்.

அதேவேளை தேசிய இனப் பிரச்சினைக்குரிய சரியான கொள்கையை முன்வைத்து தமிழர் விடுதலைப் போராட்டத்திற்கு வழி சமைத்திருக்க வேண்டிய புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியின் அன்றைய தலைமை தனது தவறுகளால் தன்னைத்தானே சீரழித்துக் கொண்டது. கட்சியின் குறிப்பாக வடபகுதித் தலைமையின் தீர்க்கமான மாக்ஸிச லெனினிச விவேகத்துடன் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்கள் வெற்றி

www.padippakam.com



பெற்ற அதேவேளை. கட்சித் தலைமை அதிதீவிர ஒரு முனைப் பாதையில் தவறுகளை இழைத்து வந்ததுடன் அவற்றைத் திருத்திக் கொள்ள விடாப்பிடியாக மறுத்தும் வந்தது. தமிழர் ஒரு தேசிய இனம் இல்லை என்ற புத்தகவாத இயங்கியல் மறுப்பு நிலைப்பாட்டின் காரணமாகச் சுய நிர்ணய உரிமை பற்றிய ஒரு தெளிவான நிலைப்பாட்டிற்கு அன்று வர இயலவில்லை. இத்தகைய தவறு தமிழ் இளைஞர்களை இலகுவாகவே தேசிய வாதத்தின் பக்கம் சென்றடையச் செய்தது.

ஆனால் 1978ல் பழைய கட்சியிலிருந்து தோழர் கே.ஏ. சுப்பிரமணியம் சி.கா. செந்திவேல் ஆகியோர் தலைமையில் தோற்றம் பெற்ற இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) ஏற்கனவே இழைக்கப்பட்ட மேற்படி தவறுகளைத் திருத்திச் சரியான பாதையை முன்னெடுத்தது. அதுவே இன்றைய புதிய- ஜனநாயகக் கட்சியாக நீடித்து நிலைத்து வந்துள்ளது. தேசிய இனப் பிரச்சினைக்கான கொள்கை போராட்டம் தீர்வு என்பனவற்றுக்கு 1966ம் ஆண்டு ஒக்ரோபர் 21 எழுச்சி காட்டிய பாதையில் கிடைத்த நடைமுறை அனுபவங்கள் பட்டறிவுகள் போன்றவற்றை வரலாற்று முன்னுதாரணமாகக் கொண்டே புதிய- ஜனநாயக கட்சி சுயநிர்ணய அடிப்படையிலான சுயாட்சி அமைப்பிற்கான கொள்கை யை வகுத்து முன்னெடுத்து வருகின்றது. அன்றைய போராட்டங்களில் நேரடிப் பங்கு கொண்டு அர்ப்பணிப்புடன் செயற்பட்டுத் தியாகங்களை ஏற்று தியாகத் தழும்புகளையும் புரட்சிகர அனுபவங்களையும் பெற்றுக் கொண்ட நேர்மையான தோழர்கள் அனைவரும் இக் கட்சியிலேயே தொடர்ந்தும் இருந்து வருகின்றமை குறிப்பிடக் கூடியதாகும். பல வயது முதிர்ந்த தோழர்கள் ஒருவர் பின் ஒருவராக அண்மைய காலங்களில் மறைந்துள்ளனர். புதிய இளந் தலைமுறையினருக்கான வெகுஜனப் புரட்சிகரப் போராட்ட முன்னு தாரணத்துடன் ஒரு கலங்கரை விளக்கமாக 1966 ஒக்ரோபர் 21 எழுச்சியும் அதன் வழியிலான போராட்டங்களுமே இன்று வரை இருந்து வருகின்றது. 20ம் நூற்றாண்டின் இலங்கையின் விடுதலைப்போராட்ட வரலாற்றில் வெற்றிபெற்ற போராட்டமாக சாதிய தீண்டாமைக்கெதிரான போராட்டத்தை முன்னிறுத்தல் மிகச் சரியான தாகும்.

தாழ்த்தப்பட்ட மக்களின் வரலாற்றில் அவர்களை விழிப்புற வைத்து அவர்களைப் பிணைத்திருந்த சாதிய-தீண்டாமை விலங்கை உடைத்தெறியச் செய்த அப் புரட்சிகரப் போராட்டத்துக்கு அன்றைய புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி தலைமை கொடுத்தது. அக் கட்சியினர் குறிப்பாக வடபுலத்து தலைமைத் தோழர்களில் இருந்து ஊழியர்கள் மட்டம்

www.padippakam.com



வரை எவ்வித பிரதியுபகாரத்தையும் மக்களிடம் இருந்து எதிர்பார்த்து நிற்க வில்லை. வெகுஜன இயக்கத்தின் நேர்மையான தலைமைத் தோழர்கள் சலுகைகளையோ பட்டம் பதவிகளையோ நாடிச் சென்றதும் இல்லை. கம்யூனிஸ்ட்டுகளுக்குரிய வரலாற்றுக் கடமையை மக்களுக்கான சமூக மாற்றத்திற்குரிய விடுதலை நோக்கிலேயே முன்னெடுத்தனர். அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களுக்கான போராட்டங்களை இலட்சிய தாகத்துடன் முன்னெடுத்தனர். அதேவேளை போராட்டங்களுக்கு குறுக்கே தங்களை நிறுத்திக்கொண்ட சில அமைப்புகளும் அதன் தலைவர்களும் போராட்டங்களினால் விளைந்த பலாபலன்களைத் தமது சுயதேவைக்குப் பயன்படுத்திக் கொண்டனர். இப்போராட்டங்களின் வெற்றியுடன் 1970ம் ஆண்டில் பதவிக்குவந்த சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசில் பாராளுமன்ற இடதுசாரிகள் பங்குகொண்டு அமைச்சர் பதவிகளையும் பெற்றுக் கொண்டனர். வட பகுதியில் இருந்து எம்.சி. சுப்பிரமணியத்தை நியமன எம்.பியாக தாழ்த்தப்பட்ட மக்கள் சார்பில் நியமிப்பதாகக் கூறி நியமனம் வழங்கப்பட்டது. அவரைத் தொடர்ந்து அவ்வழியில் சிலர் பட்டங்கள், பதவிகள், சலுகைகள் என்பனவற்றைப் பெற்று தம்மையும் தம்மைச் சூழ உள்ளவர்களையும் நன்கு வளப்படுத்திக் கொண்டனர். ஆனால் உக்கிரமான வெகுஜனப் போராட்டங்களின் தவிர்க்க முடியாத தாக்கத்தினால் அவ் ஐக்கிய முன்னணி அரசு மிக விரைவாக ஏற்கனவே பண்டாரநாயக்கா அரசினால் கொண்டுவரப் பட்ட பலவீனமான சமூகக் குறைபாடுகள் ஒழிப்புச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வந்தது. ஏற்கனவே அச் சட்டத்தில் காணப்பட்ட ஆறு மாதகால சிறைத்தண்டனை என்பது மூன்று வருடங்களாகவும், அபாராதத் தொகை நூறு ரூபாவிலிருந்து இரண்டாயிரம் ரூபாவாகவும் திருத்தம் பெற்றது. இவ்விடயத்தில் மற்றொரு அம்சத்தையும் குறிப்பிட்டாக வேண்டும். தாழ்த்தப்பட்ட மக்களைச் சமபந்தி போசனம், சமத்துவ சலவை சவரம், கலப்புத் திருமணம் போன்ற மேலெழுந்த வாரியான நிலைப்பாடுக ளால் ஏமாற்றி அவர்களின் வாக்குகளைப் பெற்றுவந்த தமிழரசுக் கட்சியா னது முற்று முழுதாகத் தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் அம்பலமாகி இருந்தது. ஏற்கனவே தாழ்த்தப்பட்ட மக்களின் வாக்குகளைப் பெற்றுக் கொள்ளவும் அவர்களைத் தம் பக்கம் வைத்திருக்கவும் ஜி. நல்லையா என்பவரை செனட்டராக்கி வைத்திருந்தமை பற்றி முன்பக்கங்களில் கூறப்பட்டது. அவ்வாறே 1977ம் ஆண்டுத் தேர்தலில் தமது உயர்வர்க்கத் தலை மையோடு ஒத்துழைக்கக் கூடிய விசுவாசியான மேல் நிலையாக்கம் பெற்ற தாழ்த்தப்பட்டவரான திரு.ரீ. இராஜலிங்கத்தை உடுப்பிட்டித்தொகு தியில்

www.padippakam.com



நிறுத்தினார்கள். அவர் அத்தொகுதியில் வெற்றியும் பெற்றார். இவ்வாறு தமிழர் விடுதலைக்கூட்டணி செயற்படவேண்டிய நிர்ப்பந்தத்தை யும் தாழ்த்தப்பட்ட மக்கள் நடத்திய போராட்டங்கள் தான் ஏற்படுத்தின என்பது கவனத்திற்குரியதாகும். எம்.சி. சுப்பிரமணியம், 1970லும் ரீ. இராஜலிங்கம் 1977லும் பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தாழ்த்தப்பட்ட மக்களின் பிரதிநிதிகள் என்ற வெறும் நாமத்துடனேயே பதவி வகித்தனர். ஆனால் அவர்களால் தாழ்த்தப் பட்ட மக்களின் பொருளா தார அரசியல் சமூக வாழ்வில் எவ்வித மாற்றங்களையும் கொண்டுவர முடியவில்லை. அதேவேளை தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் கல்வி பொருளாதார நிலைகளில் மேல்நிலையாக்கம் நோக்கி நின்ற சிலருக்கும் தம்மைச் சூழவுள்ள உற்றார் உறவினர்களுக்கும் இந்த இரு பாராளுமன்ற உறுப்பி னர்களும் வாய்ப்பு வசதிகளை வழங்கிக் கொண்டனர். அவற்றுக்கும் மேலாக ஏதாவது செய்யப்பட்டிருப்பின் அவை மிக அற்பமானவையேயா கும். ஆனால் தாழ்த்தப்பட்ட மக்களின் குறிப்பிட்ட உரிமைகளும் அவற்றுக் கான வெற்றிகளும் பாராளுமன்றத்தால் அல்லாமல் புரட்சிகரப் போராட்டங் களினாலேயே பெறப்பட்டன. போராட்டங்களில் ஈடுபட்ட மக்களோ தலை வர்களோ தொண்டர்களோ சாதாரண வாழ்வையே தொடர்ந்தனர். தியாகங்கள், இழப்புகளுக்குப் பின்பு தாழ்த்தப்பட்ட மக்கள் பெற்ற சமத்துவத்திற்கான ஜனநாயக வெற்றிகள் இறுதியானவையோ முழுமையானவை யோ அல்ல. இந்நாட்டின் சமூக மாற்றத்திற்கான புரட்சிகரப் போராட்டத் தில் தொடர்ந்தும் இணைந்து நின்று அதனை முன்னெடுத்துச் செல்வதா லேயே தாழ்த்தப்பட்ட மக்கள் எதிர்நோக்கும் அடிப்படைப் பிரச்சினைகள் தீர்க்கப் பட முடியும்.

1966ம் ஆண்டு ஒக்ரோபர் 21 எழுச்சியும் அது உருவாக்கிய போராட்டங்களின் பாரிய தாக்கங்களும் தாழ்த்தப்பட்ட மக்களின் சமூக பொருளாதார. அரசியல். பண்பாட்டுத் துறைகளில் ஏற்பட்ட மாற்றங்களும் அதேபோல் முழுத் தமிழர் சமூகத்திலும் அவை ஏற்படுத்திய சிந்தனை வீச்சுக்களும் செயற்பாட்டுத்திறன்களும் பற்றி மேலும் விரிவான ஆய்வுகள் எதிர்காலத்தில் பயன் உள்ள விதத்தில் முன்னெடுக்கப்படல் வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com

# 9

## 1970களில் தொடர்ந்த போராட்டங்கள்

*1966-1971 ஏப்ரல் வரையான நானன்கரை ஆண்டுகளில் சாதிய தீண்டாமைக்கு எதிராக வடபுலத்தில் இடம் பெற்ற நேரடிப் போராட்டங்கள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தோல்வியடையவில்லை. அதன் காரணமாகப் பிரசித்தி பெற்ற பெரும் ஆலயங்களும் சகல சிறு நகரங்களையுஞ் சேர்ந்த தேநீர்கடைகள், உணவகங்கள் என்பனவும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சமத்துவத்தையும் ஜனநாயக உரிமைகளையும் வழங்க வேண்டியதாயிற்று. அவ்வாறே சலவை, சலூன் நிலையங்களிலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு காட்டி வரப்பட்ட பாகுபாடுகளும் மறுப்புகளும் முடிவுக்கு வந்தன. மேலும் பல கிராமப் புறங்களிலும் இச் சமத்துவத்திற்கான கோரிக்கைகளும் அதற்கான அவ்வப்போதைய எதிர்ப்பும் போராட் டங்களும் இடம் பெற்றன. அவற்றை அவ்வப்பகுதி மக்களும் சமூகத் தலைவர்கள் அக்கறையாளர்கள் முன்னெடுத்தனர். உதாரணத்திற்கு சில ஆலயங்களைக் கூறமுடியும். பொலிகண்டி கந்தவனக் (கந்தசாமி) கோவிலுக்குள் தேவரையாளி இந்துக் கல்லூரி அதிபர் மூ. சி. சீனித்தம்பி வழிகாட்டலில் அப்பகுதி மக்கள் மறுக்கப்பட்ட உரிமையை ஆலயப்பிர வேசம் மூலம் நிலை நாட்டினர். அவ்வாறே அல்வாய் முத்துமாரி அம் மன் ஆலயத்தில் கடுமையான சாதியக் கட்டுப்பாடு நிலவி வந்தது. தெணியான் அவரது நண்பர்கள் தலைமையில் மக்கள் அவ் ஆலயத்தில் எதிர்ப்புகள் மத்தியில் பிரவேசம் செய்து சமத்துவ வழிபாட்டு உரிமையை நிலை நாட்டினர். மேலும் புங்குடுதீவில் மு. தளையசிங்கமும் அவரது நண்பர்களும் இணைந்து சாதிய வேறுபாட்டை மறுத்து ஆலயப்*

www.padippakam.com



பிரவேசத் திற்கான சத்தியாக்கிரகம் நடாத்தினர். அதனைச் சாதிவெறியர்கள் தாக்கி கலந்து கொண்டோருக்கு படுகாயங்கள் விளை வித்தனர். இறுதியில் அவ் ஆலயமும் திறந்துவிடப்பட்டது. இவற்றுக்கான உந்துதலையும் துணிவையும் நம்பிக்கையையும் ஏற்கனவே இடம் பெற்ற வெகுஜனப் போராட்டங்கள் வழங்கியிருந்தன. குறிப்பாக மாவிட்டபுரம், பன்றித் தலைச்சி அம்மன் ஆலயப் போராட்டங்களே ஏனைய ஆலயங்களின் கதவுகள் திறக்கக் காரணமாக அமைந்தன.

சாதியத்திற்கும் தீண்டாமைக்கும் எதிரான போராட்டம் என்பது வரையறுக்கப்பட்ட காலப்பகுதிக்குள் இடம் பெற்று முடியக் கூடிய ஒன்றல்ல. சமூக மாற்றத்திற்கான நீண்ட காலப் போராட்டத்திலும் அதன் வெற்றிக்குப் பின்பும் கூட சாதியத்தை எதிர்த்த பல முனைத் தாக்குதல்கள் இடம் பெறவே செய்யும் என்பது விளங்கிக் கொள்ளக் கூடியதேயாகும். அந்தவகையில் 1971ம் ஆண்டு இடம் பெற்ற ஜே.வி.பி. யினரின் ஏப்ரல் கிளர்ச்சியைத் தொடர்ந்து புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி கடுமையான அரசாங்க அடக்கு முறைக்கு உள்ளாகியது. அன்றைய பொதுச் செயலாளர் நா. சண்முகதாசன், சமல், டி சில்வா, காந்தி அபே யசேகர, ஹிக்கொட தர்மசேன உட்பட பல தோழர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர். பல முழுநேர ஊழியர்கள் பல்வேறு கெடுபிடிகளுக்கும் தேடுதல்களுக்கும் உள்ளாக்கப்பட்டனர்.

அந்தவகையில் ஏற்கனவே புரட்சிகர வெகுஜனப் போராட்டங்கள் இடம் பெற்று வந்த வடபுலத்தில் கட்சியின் தலைமைத் தோழர்க ளைக் கைது செய்து சிறைகளில் அடைக்கும் முயற்சிகள் முடுக்கி விடப்பட்டன. முன் கூட்டியே இத்தகைய ஒரு நிலைக்கு முகம் கொடுக்க வேண்டிவரும் என்ற முன்னேற்பாட்டினால் முக்கியத் தோழர்கள் தலைமறைவாகிக் கொண்டனர். தோழர்கள் கே. ஏ. சுப்பிரமணியம், வீ.ஏ. கந்தசாமி, சி.கா. செந்திவேல், எம்.ஏ.சி. இக்பால், இ.கா. சூடாமணி போன்றோர் தலைமறைவாகிக் கொண்டனர். வெகுஜன இயக்கத் தலைவரான தோழர் எஸ்.ரி.என். நாகரட்ணமும் தலைமறை வாகிக் கொண்டார். வடபுலத்தின் பல்வேறு பிரதேசங்களில் செயற்பட்டு வந்த கட்சியின் செயற்பாட்டாளர்கள் பல்வேறு நிலைகளிலும் தலைமறைவு வாழ்வை மேற்கொள்ள வேண்டியதாயிற்று. சுமார் ஒரு வருடத்திற்கு மேல் இந்நிலை நீடித்தது. இத்தகைய தலைமறைவுச் சூழலில் போரா ட்டங்களில் ஈடுபட்டுவந்த தாழ்த்தப்பட்ட மக்களும் கிராமங்களும்

படிப்பகம்

www.padippakam.com



தமது கட்சித் தோழர்களையும் வெகுஜன இயக்கத் தலைவர்களையும் மிக அவதானத்துடனும் அக்கறையுடனும் பாதுகாத்து வந்தமை மக்களின் புரட்சிகர நடைமுறையாக அமைந்திருந்தது. அதேவேளை தோழர் கே. டானியல் ஒருவரை மட்டுமே பொலீசினால் கைது செய்து சிறையில் அடைக்க முடிந்தது. சில பொலீஸ் அதிகாரிகள் வழங்கிய பொய் வாக்குறுதியை நம்பியதால் ஏற்பட்ட எதிர் விளைவாகவே டானியல் எட்டு மாதங்களுக்கு மேல் சிறையில் இருக்க வேண்டியேற்பட்டது.

மேற்கூறிய காலகட்டத்தில் ஏற்பட்ட அடக்குமுறைகளினூடாகவும். அதற்கு முன்பு இடம்பெற்ற செழுமையான போராட்ட அனுபவங்களினூடாகவும் பலமடைந்து முன்செல்லவேண்டிய கட்சி அமைப்பு 1972ல் பெரும் பிளவு அடைந்து துர்ப்பாக்கிய நிலைக்கு உள்ளானது. அத்தகைய ஒரு பிளவை முன்தள்ளுவதில் கட்சிக்குள் இருந்த தவறான சக்திகள் மட்டுமன்றி ஐக்கிய முன்னணி அரசாங்கமும் அதில் அங்கம் பெற்ற பாராளுமன்ற இடதுசாரியினரும் கட்சியை சீர்குலைத்து சின்னாபின்னப் படுத்துவதற்கு அச் சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்திக் கொண்டனர். இருப்பினும் வடபுலத்தில் அப் பிளவு பெரும் பாதிப்பை ஏற்படுத்தவில்லை. தொடர்ந்து கட்சியும் வெகுஜன இயக்கமும் சாதிய தீண்டாமைக்கு எதிரான இயக்கங்களையும் ஆங்காங்கே உருவாகிய போராட்டங்களையும் முன்னெடுப்பதற்கு தலைமையையும் வழிகாட்டல்களையும் வழங்கி வந்தன.

1974ல் சங்கானையில் மீண்டும் ஓர் போராட்டம் இடம்பெற்றது. நிலச் சொந்தக்காரர்களுக்கும் குத்தகையாளருக்குமிடையிலான முரண்பாடு நிலச் சொந்தக்காரர்களின் கபடத்தனமான செயற்பாடுகளால் திசைமாற்றப்பட்டு. தவிர்த்துக்கொள்ள வேண்டிய போராட்டத்தைத் தவிர்க்கமுடியாத ஒன்றாக முன்னெடுக்கவேண்டியதாயிற்று. இப் போராட்டத்தில் பொலீஸ் யந்திரம் தனது பழைய ஆற்றாத்தனத்திற்கு பழி வாங்குவதற்குப் புதிய சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொண்டது. இப்போராட்டத்தின் ஒரு கட்டத்தில் இரவு நேரத்தில் நிச்சாமம் கிராமத்தில் புகுந்த பொலீஸ் குழுவை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் இடம் பெற்றது. சில பொலிசார் காயமடையவும் அதிகாரி ஒருவர் படுகாயம் அடையவும் நேரிட்டது. அதனைத் தொடர்ந்து நிச்சாமத்தில் பொலீஸ் அட்டூழியங்கள் இரண்டாவது தடவையாக கட்டவிழ்த்து விடப்பட்டன.

அந் நிலப் போராட்டத்தில் முன்னின்ற கட்சித் தோழர்கள்

www.padippakam.com



பலர் பொலீஸ் தாக்குதல்களுக்கு உள்ளாகினர். அவர்களது வீடுகள் உடைக்கப்பட்டன. தோழர்கள் **த. தருமுலிங்கம் சி. பழனிராசா** ஆகியோர் உட்பட நால்வர் மீது பொலிசார் கொலைக் குற்றம் சுமத்தி பல மாதங்கள் சிறையில் அடைத்திருந்தனர். நீதிமன்ற விசாரணையில் அவர்கள் நிரபராதிகளாக விடுதலை பெற்றனர். ஒரு உச்ச கட்டத்தில் கட்சித் தோழர் **க. நல்லப்பு** பொலிசரால் சுட்டுக்கொல்லபட்டார். ஏற்கனவே இடம் பெற்ற போராட்டத்தில் முன் நின்று தீரத்துடன் போராடிய தோழர் நல்லப்பு தனது இளம் வயதிலே தியாகியானார். இது கட்சிக்கு பெரும் இழப்பாகவும் சாதிவாதிகளுக்கும் பொலீசிற்கும் குதூகலமாகவும் அமைந்தது. அந் நிலப் போராட்டத்தில் இறுதி வெற்றி கிட்டியது.

**1975ம்** ஆண்டில் கோப்பாய்-இருபாலை கிழக்கு கிராமத்தில் அங்குள்ள சனசமூக நிலையத்தில் சில தாழ்த்தப்பட்ட இளைஞர்கள் சமத்துவமாக நடத்தப்படாததால் ஒரு போராட்டம் வெடித்தது. இப் போராட்டம் ஏனையவற்றை விட வித்தியாச இயல்பு கொண்டதாக அமைந்திருந்தது. உயர்த்தப்பட்டோர் மத்தியிலேயே மேற்படி பாரதி சன சமூக நிலையம் அமைந்திருந்தது. அதன் நிர்வாகிகளில் பெரும்பாலானோர் கம்யூனிஸ்ட் கட்சி அணிகளில் இருந்து பல்வேறு போராட்டங்களிலும் பங்கு கொண்டு வந்தவர்களாவர். எனவே சனசமூக நிலையத்தில் அதே ஊரைச்சேர்ந்த தாழ்த்தப்பட்ட மக்களையும் இணைத்து சமத்துவமாக நடாத்தி ஏனைய கிராமத்தவர்களுக்கு முன்மாதிரியாக செயற்படுவதில் கண்ணும் கருத்துமாக இருந்து வந்தனர். தாழ்த்தப்பட்ட இளைஞர்களும் மக்களும் அவ் உயர்த்தப்பட்ட இளைஞர்களோடும் அவர்கள் சார்ந்திருந்த கம்யூனிஸ்ட் கட்சியோடும் தோளோடு தோள் சேர்ந்து இயங்கினர். வர்க்க ரீதியிலும் முற்போக்கு சமூக நோக்கிலும் இயங்கிவந்த இந்த உறுதியான புதிய போக்கை விரல்விட்டு எண்ணக்கூடிய சில சாதியவாதிகளால் உள்வாங்கிக் கொள்ள முடியவில்லை. அச் சமத்துவ நிலையைக் குழப்பும் நோக்குடன் இருபாலை கிழக்கு கம்யூனிஸ்ட் இளைஞர்கள் மீது திட்டமிட்ட தாக்குதல் தொடுக்கப்பட்டது. சாதிவெறிச் சண்டியர்கள் இணைந்து நடாத்திய அத் தாக்குதல் உரிய முறைப்படி முறியடிக்கப்பட்டு அவர்களின் முகத்தில் கரி பூசப்பட்டது. இச் சம்பவத்தைச் சாட்டாகவைத்து பொலீஸ் தனது பக்கசார்பு நடவடிக்கையில் இறங்கியது. **தோழர் க. தணிகாசலம்** உட்பட ஏழு தோழர்கள் சிறையில் அடைக்கப் பட்டனர். இதில் குறிப்பிடக்கூடிய தென்னவெனில் சாதி-தீண்டாமைக்கு

www.padippakam.com



எதிரானதும் சனசமூக நிலைய சமத்துவத்திற்குமான அப் போராட்டத்தில் முன்னணியில் நின்றவர்களும் சிறையில் அடைக்கப்பட்டவர்களும் உயர்த்தப்பட்ட சாதிகளைச் சேர்ந்த இளைஞர்களேயாவர். அப் போராட் டத்தை கட்சியே முன்னெடுத்தது. அதன் மூலம் அப் பிரதேசச் சாதி ஆதிக்கவாதிகளும் சாதிவெறியவர்களும் பின்வாங்க வேண்டி யவர்களானா ர்கள்.

1978ம் ஆண்டில் மாதகல் கோடாலிக்காடு கிராமத்தில் சாதி வெறியர்கள் புகுந்து பெரும் அட்டகாசத்தில் ஈடுபட்டனர். மக்கள் தாக்கப்பட்டனர் வீடுகள் சேதமாக்கப்பட்டன, பயிர்கள் அழிக்கவும் பட்டன. இருந்தும் அப்பகுதி மக்கள் ஒன்றுபட்டுச் சாதிவெறியர்களை எதிர்த்துப் போரிட்டனர். அப் போராட்டத்தில் இரண்டு சாதிவெறியர்கள் உயிர் இழக்க நேரிட்டது. மக்கள் பக்கத்தில் பத்துப் பேர் கொலைச் சந்தேக நபர்களாக விளக்கமறியலில் அடைக்கப்பட்டனர். அப் பகுதித் தாழ்த்தப்பட்ட மக்களின் பக்கத்தில் கம்யூனிஸ்ட் கட்சி உறுதியாக இருந்து வந்ததால் மக்கள் ஐக்கியப்பட்டு போராட்ட உணர்வுடன் முன்சென்றனர். கட்சியின் அயராத முயற்சியால் அவ் வழக்கிலிருந்து பத்துத் தோழர்களும் மீட்கப் பட்டனர்.

1978ம் ஆண்டில் தென்மராட்சி கொடிகாமத்திற்கு அண்மித்த ஒரு கிராமத்தில் அங்குள்ள பொதுக் குளம் ஒன்றில் குளிக்க முற்பட்ட தாழ்த்தப்பட்ட இளைஞர் சிலர் சாதி வெறியர்களால் தாக்கப் பட்டனர். இதிற் சம்பந்தப்பட்ட ஒரு தாழ்த்தப்பட்டவர் கள்ளு இறக்க தென்னைமரத்தில் ஏறியவேளை அவர் மரத்தில் இருக்கக்கூடிய தாகவே சாதிவெறியர்கள் தென்னைமரத்தை தறித்து வீழ்த்தினர். மரத்துடன் வீழ்ந்த அத் தாழ்த்தப்பட்டவரை கோடரி கொண்டு வெட்டிக்கொன்ற காட்டுமிராண்டிச் சம்பவமும் வடபகுதியில் இடம்பெற்றது. இதே காலத்தில் உடுப்பிட்டியில் சாதியின் பெயரால் மக்கள் தாக்கப்பட்டு படுகாயங்களுக்கு ஆளாக்கப்பட்டனர். அவ்வேளை பாராளுமன்ற உறுப்பினராகத் தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த ஒரு தாழ்த்தப்பட்டவர் இருந்தார் என்பது குறிப்பிடக் கூடியதாகும்.

1981ல் சாவகச்சேரித் தொகுதியின் எழுதுமட்டுவாள் கிராமத்தில் சாதிவெறியர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் மீது பெரும் அட்டூழியங்களைப் புரிந்தனர். அவர்களது வீடுகள் தீ வைத்துக் கொழுத் தப்பட்டன. பலர் படுகாயங்களுக்கு உள்ளானார்கள். அவர்களது ஆடுமா

www.padippakam.com



டுகள் கூடச் சாதிவெறியர்களின் வெறித்தனத்திற்கு தப்பவில்லை. இருபத்தைந்துக்கு மேற்பட்ட ஆடுமாடுகள் வெட்டிக் கொல்லப்பட்டன. அக்கிராமத்தில் வாழ்ந்த சகல தாழ்த்தப்பட்ட மக்களும் இடம் பெயர்ந்து அகதிகளாக வெவ்வேறு தூரக் கிராமங்களுக்குச் சென்று தஞ்சமடைந்தனர். இதே சமகாலத்தில்தான் யாழ்ப்பாணப் பொதுச் சந்தை, சுன்னாகம் சந்தை என்பன அரச பயங்கரவாதத்தின் பேரினவாதத் தீக்கு இரையாகின என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். ஒரே நேரத்தில் வடபுலத்து தமிழர்கள் மத்தியில் சாதிவெறித் தீயும் பேரினவாத ஒடுக்குமுறைத் தீயும் சுவாலை விட்டு எரிந்த காட்சிகள் சாதிய இன ஒடுக்குமுறைகளின் கோரத்தனங்களை எடுத்துக் காட்டி நின்றன்.

**1979ல்** புத்தூர் மேற்கு வேம்பிராய் கிராமத்தில் வாழ்ந்து வந்த தாழ்த்தப்பட்ட மக்கள் மீது சாதிவெறிகொண்ட உயர்த்தப்பட்டோர் தாக்குதல் தொடுத்தனர். தமது நீண்டகால அடக்கு முறையையும் அப்பகுதித் தாழ்த்தப்பட்ட மக்கள் மீதான சாதி-தீண்டாமை ஆதிக்கப் பிடிப்பையும் இறுக்கி வைத்திருக்க இடையிடையே தாக்குதல்களை நடாத்தித் தம்மீதான "பயபக்தியை" நீடித்து வைத்திருக்கும் நோக்குடனேயே மேற்படி தாக்குதல் நடாத்தப்பட்டது. அத் தாக்குதலை முன்பு போல பொறுத்து கொள்ளாத வேம்பிராய்க் கிராம மக்கள் எதிர்த்தா க்குதல் நடாத்தி முறியடித்ததுடன் தொடர்ந்தும் சரியான நிதானமான போராட்டப் பாதையில் தமது எதிர் காலத்தை முன்னெடுக்கவும் முன் வந்தனர். இவ் வேளையிலேயே இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) பின்னர் புதிய- ஜனநாயக கட்சி அங்கு சென்று அக் கிராமத்துடன் தொடர்பாகி இணைந்து கொண்டது. கட்சியின் உரிய வழிகாட்டலுடன் இளைஞர்கள், மக்கள் அணிதிரட்டப்பட்னர். ஐக்கியமும் கட்டுப்பாடும் நிதானப்போக்கும் முன்னெடுக்கப்பட்டு அரசியலில் அமைப்பு வழியாகவும் வெகுஜன ரீதியாகவும் அக் கிராமம் சொந்தக் கால்களில் எழுந்து நிற்க ஆரம்பித்தது. எதற்கெடுத்தாலும் "கமக்காரனையும்" "நயினார்மார்களையும்" எதிர்பார்த்து நின்ற பழையகதையைப் புதிய தலைமுறையினர் மாற்றி எழுத ஆரம்பித்தனர். அன்றுவரை ஆண்டாண்டு காலமாக மழவராயர் குடும்பமும் அவர்களைச் சார்ந்தவர்களும் தமது நிலவுடைமை ஆதிக்கத்தால் வேம்பிராய் (கலைமதிக் கிராமம்) மக்களை அடக்கி வந்த நடைமுறை தலைகீழாகப் புரட்டப்பட்டு நீதி நியாயம் கேட்டு நிற்கும் புதிய வரலாறு ஆரம்பிக்கப்பட்டது. நானூற்றி ஐம்பதுக்கு மேற்பட்ட

www.padippakam.com



குடும்பங்களைக் கொண்ட அக் கிராம மக்கள் தமது அன்றாடத் தேவைகளுக்கு சென்று வருவதற்கோ வாகனங்கள் செல்வதற்கோ ஒரு பொதுப் பாதை இருக்கவில்லை. ஒற்றையடிப் பாதையே பயன்படு த்தப்பட்டது. அகலமான ஒரு பொதுப்பாதை திறக்கப்படுவதை ஆண்ட பரம்பரையினர் விடாப் பிடியாக மறுத்து வந்தனர். ஆனால் மக்கள் ஐக்கி யப்பட்டதன் வாயிலாக சரியான அரசியல் அணிதிரட்டலும் வழிகாட்டலும் கிடைத்ததன் மூலமும் உறுதியான தலைமை ஏற்பட்டதன் காரணமாகவும் மக்கள் ஒன்று திரண்டு தாமாகவே தமக்கான பொதுப்பாதையைத் திறந்தனர். அது ஒரு போராட்டமாகவும் அமைந்தது. அப் பாதையை உருவாக்கும் போராட்டத்தின் முன்னே நில ஆதிக்கம் கொண்ட சாதிவாத சக்திகளால் எவ்வகையிலும் நின்றுபிடிக்க முடிய வில்லை. பொலீஸ் கெடுபிடிகளாலும் அப் போராட்டத்தைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. ஆண்டாண்டு காலமாக மறுக்கப்பட்டு வந்த பொதுப்பாதை மக்கள் போராட்டத்தால் திறக்கப்பட்டது. கிராமத்தின் நடுப்பகுதியின் ஊடாக பிரதான வீதிகளைச் சென்றடையும் வகையில் அமைக்கப்பட்ட புதிய பாதை பல நிலவுடைமையாளர்களின் நிலங்களை ஊடறுத்தே போடப்பட்டது. வழமை போன்று நிலவுடைமையாளர்கள் பொலீஸ் உதவியுடன் அதை தடுக்க முயன்றனர். கட்சியின் தலைமைத் தோழர் **கா. கதிர்காமநாதன் (செல்வம்)** கைது செய்யப்பட்டார். பல தோழர்கள் பொலீஸ் அடக்குமுறைக்கு உள்ளாகினர். தோழர் செல்வத்தின் தாயார் **இலட்சுமியைப்** பொலீஸ் கைது செய்து சுன்னாகம் பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைத்திருந்தது. இறுதியில் அப் பொதுப் பாதை ஒரு இரவிலும் ஒரு பகலிலுமாகப் போட்டு முடிக்கப் பட்டது. ஒன்றரை கி.மீ. நீளமான அப்பாதை அமைப்பதில் பல நூற்றுக்கும் மேற் பட்ட இளைஞர்கள் யுவதிகள், ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் எல்லாரும் பங்கு கொண்டிருந்தனர். அப் பாதை கிராமத்திற்கான பாதையாக மட்டு மன்றிச் சாதிய தீண்டாமைக்கு எதிரான புதிய போராட்டப் பாதையாகவும் அமைந்து கொண்டது. இன்றும் அப் பாதை கலைமதிக் கிராம மக்களின் ஐக்கியத்திற்கும் சாதிய வாதிகளுக்கு எதிரான போராட்டத்தின் அடையாளச் சின்னமாகவும் இருந்து வருகின்றது. அப் போராட்டம் ஏற்படுத்திய ஐக்கியமும் போராட்ட உணர்வும் அக் கிராம மக்களின் மிகமிகப் பின் தங்கிய நிலைமைகளில் பல்வேறுவித மாற்றங்களுக்கும் முன்னேற்றங்களுக்கும் வழி ஏற்படுத்தி நின்றது. அதே வேளை அங்குள்ள கலைமதி சன சமூக நிலையத்தின் ஊடான வெகுஜன வேலைகளும்

www.padippakam.com



மிகவும் நிதானமான வழிகளில் முன்னெடுக்கப் பட்டு வந்தன. அதன் மூலம் கலைமதிக் கிராமம் பல்வேறுபட்ட விடயங்களில் முன்னோக்கிச் சென்றதுடன் வலி கிழக்குப் பிரதேசத்தின் பின் தங்கிய தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்ந்து வந்த கிராமங்களுக்கு ஒரு முன்மாதிரியை யும் காட்டி நின்றது.

1966ம் ஆண்டு ஒக்ரோபர் 21 எழுச்சியும் அதன் போராட்டங்களும் முன்னெடுக்கப்பட்ட காலகட்டத்திற்குப் பின் இன்றும் அதன் செழுமைமிக்க அனுபவங்களின் அடிப்படையில் புத்தூர் கலைமதிக் கிராமம் பின்தங்கிய தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் கிராமங்களுக்கும் மட்டுமன்றி தமிழ் மக்களின் எதிர்கால விடுதலைக்குமே முன்னுதாரண மிக்க அம்சங்கள் பலவற்றை உள்ளடக்கிய ஒரு ஐக்கியப்பட்ட கிராமமாகத் திகழ்ந்து வருகின்றது. இது ''மக்களே, மக்கள் மட்டுமே வரலாற்றின் உந்து சக்தி'' என்ற வரலாற்றின் நிதர்சனத்தை வெளிப்படுத்தி நிற்கிறது.

**1982ல்** புன்னாலைக்கட்டுவன் ஈவினைக்கிராமத்தில் சாதிவெறியின் கோரத்தனத்திற்கு இரண்டு தாழ்த்தப்பட்டவர்கள் பலியானார்கள். சாதிமுறையினாலும் தீண்டாமையினாலும் எமது மக்கள் ஏன் அடக்கப்படவேண்டும் என்ற கேள்வியை எழுப்பிப் போராட்ட உணர்வு கொண்டு அவற்றுக்கு எதிராகத் துணிந்து செயற்பட்டுவந்த ஒரு இ.போ.ச. சாரதியான **வெள்ளையன் அண்ணாசாமி** இரவுநேரம் சாதி வெறிப் பிசாசுகளால் வழிமறிக்கப்பட்டு கண்டதுண்டமாக வெட்டப்பட்டு கைகால்கள் வெவ்வேறாக்கப்பட்டு கொலைசெய்யப்பட்ட அநாகரீகமான கொடூரச் சம்பவம் இடம் பெற்றது. இக்கோரக் கொலையைத் தொடர்ந்து அக் கொடுமையை எதிர்த்து அக்கிராம மக்கள் கொதித் தெழுந்தனர். இதற்கு முன்னணியில் இருந்த இளைஞன் **தங்கராசா இராஜசேகரம்** என்பவரை அடையாளம் தெரியாத வகையில் கடத்திச் சென்று கொலை செய்த சாதி வெறியர்கள் அவரது முகம் எரிக்கப்பட்ட நிலையில் தூர இடம் ஒன்றில் போட்டுச் சென்ற மிருகத்தனமும் இடம் பெற்றது. இன்றைய காலகட்டத்தின் பேரினவாத ஒடுக்கு முறைச் சூழ லோடும் இடம் பெற்றுவரும் அனர்த்தங்களோடும் ஒப்பிடும்போது இச் சாதி வெறிச் சம்பவங்கள் சாதாரண சம்பவங்கள் போன்று தோன்றக் கூடும். ஆனால் தாழ்த்தப்பட்ட மக்களைப் பொறுத்தவரை, பேரினவாதச் சூழலிலும் சாதியம் தொடர்ச்சியாகத் தனது கோர அடக்குமுறைகளை புதிய புதிய வகைகளில் தொடரும் அவலத்தையே காணமுடிகின்றது.

www.padippakam.com



1984 காலப் பகுதியில் சிறுப்பிட்டிக் கிராமத்தில் "தட்டுவத்தில் சோறுவேண்டாம்." "சிரட்டையில் தேனீர்வேண்டாம்." "சம்பளத்தை நியாயமாகக் கொடுங்கள்" என்ற கோரிக்கைகளின் அடிப்படை யில் தாழ்த்தப்பட்ட கூலி விவசாயிகளான மக்கள் பல மாதங்க ளாகப் போராட்டத்தை நடத்தினர். அதேபோல் தெற்கு புன்னாலைக் கட்டுவன் பகுதியிலும் சம்பள உயர்வுக்காக தாழ்த்தப்பட்ட கூலி விவசாயி கள் போராட்டம் நடத்தினர். இவற்றை சாதிவாதக் கண்ணோட்டத்து டன்தான் உயர் சாதிப் பணக்கார விவசாயிகள் பார்த்தார்களே அன்றி தமிழ் இனத்தைச் சேர்ந்த தமது உழைக்கும் மக்கள் என்ற நிலைப்பாட்டுடன் துளியளவேனும் அணுகவில்லை. இதன் மூலம் சாதியும் வர்க்கமும் இணைந்த ஒடுக்குமுறை தமிழ்த் தேசிய இனத்தின் மத்தியில் நீடித்து வரும் தன்மையைக் காணமுடிந்தது.

மேற் குறிப்பிட்ட சம்பவங்கள் போன்று வடபுலத்தின் பல் வேறு கிராமங்களிலும் ஆங்காங்கே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிரான தாக்குதல், எதிர்த்தாக்குதல் சம்பவங்கள் இடம் பெற்று வந்தன. அவையா வும் சாதிய-தீண்டாமைக்கு எதிரான நிலைப்பாட்டில் தாழ்த்தப்பட்ட மக்கள் தமது எதிர்ப்பையும் போராட்ட முன்னெடுப்பையும் தொடர்ந்து முன்னெ டுக்க முன்னின்ற சூழலிலேயே இடம்பெற்றவைகளாகும்.

இந் நிலை எதனைக் காட்டுகின்றது என்றால் சுமார் இரண்டாயிரம் வருடங்களாக கருத்தியல் நடைமுறை வழிகளில் பேணிப் பாதுகாக்கப்பட்டடு வந்த சாதியத்தையும் தீண்டாமையையும் ஒரு குறிப் பிட்ட எழுச்சியாலோ அல்லது குறுகிய காலப் போராட்டங்களாலோ மட்டும் முற்று முழுதாக அழித்து ஒழித்து விடமுடியாது என்பதையே யாகும். இறுகி உரம் பெற்று நின்ற சாதிய அமைப்பின் மீது 1966 ஒக் ரோபர் 21 எழுச்சியும் போராட்டங்களும் பலத்த தாக்கத்தையும் அதிர்வை யும் ஏற்படுத்திக் குறிப்பிட்ட நிலைமைகளில் கணிசமான மாற்றங்களைக் கொண்டு வந்த போதிலும் அப் பாதையில் தாழ்த்தப்பட்ட மக்களும் ஏனைய முற்போக்கு ஜனநாயக சக்திகளும் தொடர்ந்து போராடும் தேவையையும் அவசியத்தையும் அவ் எழுச்சி திசை காட்டி நின்றது என்பதே அதன் சாராம்சமாகும்.

www.padippakam.com

# 10

## தமிழ்த் தேசியப் போராட்டத்தில் சாதியத்தின் நிலைப்பாடு

தமிழ்த் தேசியவாதம் எப்பொழுதும் தன்மத்தியில் ஒரு அமைப்பாக நீடித்து வந்த சாதியம் பற்றிய தெளிவையோ அதனை எதிர்த்துப் போராடும் உறுதியான நிலைப்பாட்டையோ கொண்டிருக்க வில்லை. ஆரம்பம் முதல் தமிழ்த் தேசியத்தின் பிரதிநிதிகளாக சைவவேளாள மேட்டுக்குடி வழி வந்தோரே இருந்து வந்துள்ளனர். அதன் பின், சைவ–கிறிஸ்தவ உயர் வேளாளத் தலைமையானது தமிழ்த் தேசியத்தை கையேற் றுக் கொண்டது. அத் தலைமை முன்னெடுத்த பாராளுமன்றப் பேரப் பேச்சு அரசியலாலோ அல்லது மேற்கொண்ட அகிம்சைப் போராட்டங்க ளாலோ சாதியத்தையும் தீண்டாமையையும் எதிர்க்கவோ இல்லாதொழிக்கவோ முடியவில்லை.

இவ் அத்தியாயம் தமிழ்த் தேசியப் போராட்டம் ஆயுதம் தாங்கிய இளைஞர் இயக்கங்களால் முன்னெடுக்கப்பட்டு வந்த சூழலில் சாதியம் எவ்வாறு இருந்து வந்தது என்பதைக் காண்பதாகும். குறிப்பாகக் கடந்த மூன்று தசாப்த கால இன ஒடுக்கல் யுத்தமும்–இனவிடுதலைப் போராட்டமும் என்னும் கால கட்டத்தின் ஊடாக சாதியம் கருத்தியல் அடிப்படையிலும் நடைமுறை வாழ்விலும் எவ்வாறு செயற்பட்டு வந்தது என்பதைக் கண்டுகொள்வதாகும்.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் 1977ம் ஆண்டு ஒரு திருப்பு முனையை ஏற்படுத்திய ஆண்டாகும். அந்த ஆண்டின் நடுக் கூறில் இலங்கையின் படுபிற்போக்குவாதியும் முதலாளித்துவப் பேரின

படிப்பகம்

www.padippakam.com



வாதியுமான ஜே.ஆர். ஜயவர்த்தன பதவிக்கு வந்தார். அவரது அரசியல் பொருளாதார முடிவுகள் இலங்கையை ஒரு இருண்ட காலகட்ட த்தினுள் இழுத்துச் சென்றது. முதலாவதாக, ஜே. ஆரின் விசுவாசம் மிக்க அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் வழிகாட்டலில் தாராள தனியார் மயக் கொள்கைக்காக நாடு முற்று முழுதாகத் திறந்து விடப்பட்டது. இரண்டா வதாக, இன ஒடுக்கு முறை பேரினவாத ராணுவ ஒடுக்கு முறையாக முன்னெடுக்கப் பட்டது. 1977ம், 79ம், 81ம், 83ம் ஆண்டுகளில் மோசமான இன வன்முறைகள் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டன. பேரினவாத ராணுவ ஒடுக்குமுறை முத்திரை பொறிக்கப்பட்ட இன வன்முறைகளின் எதிர் வினையாகத் தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தும் நிலை தோற்றுவிக்கப்பட்டது.

இவ்வாறு ஆயுதப் போராட்ட இயக்கங்களாகிக் கொண்ட தமிழ் இளைஞர் அமைப்புகள் தமிழ்த் தேசியவாதத்தின் அடிப்படையில் இன ஒடுக்குமுறைக்கு எதிராக தமிழீழத்தை வென்றெடுத்து நிலைநிறு த்தும் கொள்கையை கையேற்றுக்கொண்டன. இத் தமிழீழக் கோரிக்கை க்கான முடிவ தமிழர் விடுதலைக் கூட்டணி 1976ல் வட்டுக்கோட்டைத் தீர்மானமாக எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. எல்லா இளைஞர் இயக்கங்களும் தமிழீழம் அல்லது ஈழம் என்பதைத்தத்தமது அமைப்புக்க ளின் பெயராக்கியும் கொண்டன. தமிழீழக் கொள்கை பொத்தம் பொது வாக முன்வைக்கப்பட்டு அதனை அடைவதற்கு இளைஞர்களுக்கு அழைப்பு விடுவிக்கப்பட்ட அதே வேளை அத் தமிழ் இளைஞர்களின் அமைப்புகள் தெளிவான தூரநோக்குடைய அரசியல் பொருளாதாரக் கொள்கைகளைக் கொண்டிருக்கவில்லை. ஒருபுறம் இன ஒடுக்கலின் வேகம் அதிகரித்து வந்தது. மறுபுறத்தில் ஆயுதங்களின் மீதான மோகமும் கவர்ச்சியும் இளம் தலைமுறையினரிடையே வளர்ச்சி கண்டது. இந் நிலையை அந்நிய சக்திகள் தத்தமது தேவை கருதி நன்கு பயன்படுத்திக் கொண்டன. பேரினவாத ஒடுக்குமுறையை எதிர்த்து ஏதாவது ஒரு இயக்கத்தில் இணைவது என்ற நிலைப்பாட்டில் எல்லா இயக்கங்களிலும் இளைஞர் யுவதிகள் சேர்ந்தனர். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் **(LTTE)**, தமிழீழ விடுதலை அமைப்பு **(TELO)** என்பன மார்க்ஸிசம் சோஷலிசம் பற்றிப் பேசுவதை முன்னிறுத்தவில்லை. அதே வேளை ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி **(EPRLF)**, தமிழீழ மக்கள் புரட்சிகர விடுதலை அமைப்பு **(PLOTE)** ஈழப் புரட்சிகர அமைப்பு **(EROS)** ஈழ மக்கள் ஜனநாயக கட்சி **EPDP** போன்றன சோஷலிசம், மாக்ஸிசம்

www.padippakam.com



பற்றியும் இடதுசாரிக் கொள்கைகள் சம்மந்தமாகவும் மேலெழுந்தவாரியாகப் பேசிக் கொண்டன. ஆனால் இவர்கள் பேசிய மாக்சிச இடதுசாரிக் கொள்கைகள் தத்தமது குறுந்தேசிய்வாதத்திற்கு அளவான நிலைப்பாட்டையே கொண்டிருந்தன. வர்க்கப் போராட்டத்தையும் அதன் இயங்கிய லையும் இவர்களால் புரிந்து கொள்ள இயலவில்லை. இருந்தும் இவர்களது இடதுசாரிப்பேச்சுக்கள் மூலம் இளந்தலைமுறையினர் ஈர்த்துக் கொள்ளப் பட்டனர். இருப்பினும் இளைஞர்கள் ஒரு வர்க்கம் அல்ல என்பதையும் அவர்கள் பல்வேறு வர்க்கப் பிரிவினரிடையே இருந்து வருபவர்கள் என்ற உண்மையையும் இவர்கள் காண மறுத்தனர். இதனால் சிறு முதலாளித்துவக் கருத்துக்கள் மேலோங்கி தனிநபர் வாதத் தலைமைகளும் ஆயுத வழி பாட்டு நிலைமைகளும் வளர்ச்சி கண்டன. இவற்றை சரியான வர்க்கப் போராட்ட நிலை நின்று மாக்ஸிச லெனினிசக் கோட் பாட்டின் மூலம் தூரநோக்கில் பார்க்கத் தவறிய நிலையே காணப்பட்டது. அதேவேளை பொதுவுடமை இயக்கப் பரப்பில் இருந்து வந்தவர்கள் சிலரும் போராட்டக் கவர்ச்சி காரணமாக அத்தகைய இளைஞர் இய க்கங்களில் இணைந்து கொண்ட நிகழ்வுகளும் இடம் பெற்றன.

இவ்வாறு தமிழ் இளைஞர் இயக்கங்களில் இளைஞர்கள் யுவதிகள் உள்ளீர்க்கப்பட்டபோது அங்கே சாதியம் ஒரு அளவுகோலாகப் பார்க்கப்படவில்லை. காரணம் இவ் இயக்கங்களுக்கு அவ்வேளை பெருந் தொகையில் இளைஞர்கள் தேவைப்பட்டனர். அத்துடன் சாதியம் ஒரு வெளிப்படையான தடையாக இருக்கக் கூடிய அளவுக்கு சாதிய-தீண்டாமை இறுக்கம் தளர்வுற்றிருந்தது. அதற்குக் காரணம் சாதிய தீண்டாமைக்கு எதிரான போராட்டம் ஏற்கனவே குறிப்பிட்டளவிற்கு புரட்சிகர கம்யூனிஸ்டுகளின் தலைமையில் வெற்றி பெற்றிருந்தமையாகும். பொது இடங்களில் பகிரங்கமாகத் தீண்டாமை பாராட்டுவது இல்லா தொழிக்கப் பட்டதன் காரணமாக தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியிலிருந்து இயக்கங்களில் இணைய முற்பட்ட வயதில் குறைந்த முதிரா இளைஞர்களுக்கு மேலோட்டமாகப் பார்த்த போது சாதி-தீண்டாமையும் ஒரு பிரச்சினையாகத் தெரியவில்லை.

ஆனால் இயக்கங்களுக்குள் உட்சென்ற பின்பே பல்வேறு நிலைகளில் சாதியக் கருத்தியலின் நடைமுறை அனுபவங்களைப் பல இளைஞர்களால் கண்டு கொள்ள முடிந்தது. எல்லா இயக்கங்களினது தலைமைகளும் உயர் சாதியைச் சேர்ந்தோராலேயே நிரப்பப்பட்டிருந்தன.

www.padippakam.com



அவற்றுக்கும் அப்பால் சில தாழ்த்தப்பட்டவர்களின் மத்தியிலிருந்து சென்ற இளைஞர்களும் யுவதிகளும் அவர்களின் ராணுவ ஆற்றல்கள் காரணமாக உயர் பீடங்களில் செயலாற்றி வந்ததையும் காண முடிந்தது.

வடக்கு கிழக்கின் தமிழ் மக்கள் மத்தியில் நிலைபெற்ற பிரதான தமிழ் இளைஞர் இயக்கங்களான விடுதலைப் புலிகள். தமிழீழ விடுதலை இயக்கம் ஆகிய இரண்டு இயக்கங்களிலும் 'அண்ணை' 'தம்பி' 'அக்கா' 'தங்கச்சி' என விழித்தே இயக்க உறுப்பினர்கள் அழைக்கப்பட்டனர். அதே வேளை ஏனைய நான்கு இயக்கங்களான புளொட். ஈ.பி.ஆர்.எல்.எவ். ஈரோஸ். ஈ.பி.டி.பி ஆகியவற்றில் 'தோழர்' 'தோழியர்' என்றே இயக்க உறுப்பினர்கள் ஒருவரை ஒருவர் அழைத் தனர். மேற்கூறியவற்றை அவதானிக்கும் போது அங்கே சாதியக் கண் ணோட் டம் தோற்றமளவில் முன்னிறுத்தப்படவில்லை. ஆனால் சாதியக் கருத்தியலும் அதன் அடிப்படையிலான சமூகப் பார்வையும் ஒவ்வொரு வரிடமும் இருக்கவே செய்தது. ஏனெனில் சாதியம் பற்றிப் பேசக் கூடாது என்பதும் சாதி பார்த்தோ அல்லது சாதி கூறியோ எவரொருவரும் நடந்து கொள்ளக் கூடாது என்பதும் பொதுவான நடைமுறையாக இயக்கங்களி டையே இருந்து வந்த போதிலும் சில முக்கியமான தருணங்களில் அல்லது தீர்மானங்களின் போது சாதிய உளவியல் தனது வேலையை உள்ளூரச் செய்யவே செய்தது. அதற்கு காரணம் சாதியம் பற்றிய வரலாற்றுத் தெளிவோ சாதியக் கருத்தியல் உடைத்தெறியப்பட வேண்டும் என்ற மார்க்கிச அறிவியல் அணுகுமுறையோ சமூகக் கண்ணோட்டமோ முன்வைக்கப்படவும் இல்லை. நடைமுறைப்படுத்தப்படவும் இல்லை. சாதியம் பற்றி எவரும் பேசக் கூடாது என்றும் அது அது அப்படியே இருக்கட்டும். தமிழீழம் வந்த பின் அது பற்றிய முடிவுக்கு வர முடியும் என்ற பொதுவான ஒரு போக்கே தமிழ் இயக்கங்கள் மத்தியில் கடைப்பிக்கப்பட்டது. இதற்குக் காரணம் சாதியம் பற்றியோ அல்லது எஞ்சியுள்ள சில தீண்டாமை நடைமுறைகள் பற்றியோ பேசினால் தமிழர்கள் மத்தியில் பிளவுகள் ஏற்பட்டு அதனால் விடுதலைப் போராட்டம் பின்னடைவு கண்டு விடும் என்ற தர்க்கம் முன்வைக்கப்பட்டது. இத் தர்க்கம் சாதியக் கருத்தியலை எதிர்த்து நிற்கமுடியாத பழைமைவாதத் திற்குள் கட்டுண்ட அவலத்தையே வெளிப்படுத்தியது. தமிழ்த் தேசியம் என்னும் உணர்ச்சி மிகு போக்கில் சாதியம் பற்றிய முரண்பாடு உரியவாறு அடையாளம் காணாது புறமொதுக்கப்பட்டுத் தீண்டப்படவில்லை.

இவ்வாறு இளைஞர் ஆயுதப் போராட்ட இயக்கங்கள் தமிழர்

படிப்பகம்

www.padippakam.com



சமூகப் பரப்பிலே சாதியத்தைப் பற்றி அடக்கி வாசித்து அதனை இல்லாதொழிக்க ஏற்றதான வழிவகைகளை முன்வைக்காது அமுக்கி வைத்திருந்த நிலை நீடித்தது. இதனால் சாதியக் கருத்தியலும் சாதியச் சமூகப் பார்வையும் தொடர்ந்தும் தமிழர்கள் மத்தியில் செல்வாக்குச் செலுத்தி வந்தன. இயக்கங்களின் துப்பாக்கிகளுக்கு முன்பாக சாதியம் பதுங்கிக் கொண்டது போல் காட்டிக் கொண்டது. சில சந்தர்ப்பங்களில் பின்வாங்கியிருப்பினும் அதே துப்பாக்கிகள் மறைமுகமாகச் சாதியத்திற்கு துணை நின்று பாதுகாத்த சந்தர்ப்பங்களும் இடம் பெற்றன.

கடந்த கால் நூற்றாண்டுக்கு மேலான போராட்டக் கால கட்டத்தின் ஊடாகச் சாதியம் அற்றுப் போய்விட்டது என்றும் முன்பு போல் தீவிரமாக இல்லை என்றும் கூறுவோர் இருக்கிறார்கள். இயக்க உறுப்பினர்கள் மத்தியில் போராளிகளிடையே அல்லது அதற்கும் வெளியே சில கலப்புத் திருமணங்கள் சாதியம் கடந்த நிலையில் இடம் பெற்றிருக் கின்றன. அவை மறுப்பதற்குரியவை அல்ல. அத்தகைய நிலை வரவேற் கப்பட வேண்டியதாகும். அதேவேளை திருமணமாகிக் குழந்தைகள் பிறந்த பின்பு அவரவர் சாதி அறிந்து பிரிந்து போன குடும்பங்களும் இருக்கின்றன. போராட்ட உச்சக் கட்டத்தில் காதல் திருமணம் செய்து பின்பு சமாதான காலத்தில் ஊர் உறவுகள் வந்த போது சாதி அறிந்து பிரிந்து போன போராளிகளையும் தமிழர் சமூகப் பரப்பில் காண முடிந்துள்ளது. வர்க்கக் கண்ணோட்டமின்மையும் நிலவுடைமைச் சமூக உறவுகள் பற்றிய தெளிவீனமுமே இதற்கான அடிப்படைக்காரணிகளாகும்.

தோற்றத்திலும் தத்தமது இயக்க மட்டங்களிலும் சாதியம் ஒரு பிரச்சினையாக இருக்கக் கூடாது என்பது வற்புறுத்தப்பட்டு வந்த போதிலும் அந்த விருப்பங்களையும் வரையறைகளையும் மீறிச் சாதியம் தனது நடைமுறை அகோரத்தை வெளிப்படுத்தவே செய்தது. அதன் காரணமாக விடுதலைப் புலிகள் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் உருவாக்கிய நீதித்துறையின் தண்டனைச் சட்ட கோவையில் சாதியின் பெயரால் உயர்வு தாழ்வான நடைமுறைகளைப் பின்பற்றுவதோ சாதி கூறி இழிவாகப் பேசுவதோ தண்டனைக்குரிய குற்றமாக்கப்பட்டுள்ளது. அவ்வாறே சீதனம் வாங்குவதும் கொடுப்பதும் தண்டனைக்குரிய குற்றமா கும். சாதிய நடைமுறையான அடிமை குடிமை முறைகள் பின்பற்ற ப்படுவது தடைசெய்யப்பட்டதுடன் மீறுவோர் அத் தொழில்களுக்குரிய அமைப்புகளினால் குற்றப் பணம் அதிக தொகையாக அறவிடும் நடை முறையும் செயற்படுத்தப்பட்டது. மேற் கூறியவற்றை மீறியோர் தண்டிக்

www.padippakam.com



கப்பட்டுக் குற்றப்பணம் செலுத்திய சந்தர்ப்பங்களையும் காணமுடிந்தது.

இவ்வாறான சூழலில் வடக்கு கிழக்கில் குறிப்பாக வட புலத்தில் சாதியம் தீண்டாமை பகிரங்கமாக வெளிப்படுத்தப்படுவது குறைவடைந்துள்ள போதிலும் சமூக கருத்தியல் சிந்தனைத்தளங்களில் இருந்து சாதியம் அகற்றப்படவில்லை. இதற்குப் பல்வேறு உதாரணங்களைக் கண்டு கொள்ளலாம்.

தாழ்த்தப்பட்ட மக்களின் கல்வியானது மிகப் பின்தங்கியதாகவே இருந்து வந்தது. இலவசக் கல்வியும் பாடசாலைகளின் தேசியமயமும் ஓரளவுக்கு கல்வி வளர்ச்சிக்குப் பங்களித்தன. இருப்பினும் பொருளாதார நிலை உயர் கல்விக்கு வழிவிட்டுக் கொடுக்கவில்லை. எதிர் நீச்சல் இட்டு ஒரு சில மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்லவும் அத்தகையவர்களில் ஓரிருவர் இலங்கை அரசாங்க நிர்வாக சேவை; **(SLAS)** பரீட்சையில் சித்தி பெறவும் செய்தனர். அவ்வாறே கல்வி நிர்வாக சேவைப் **(SLES)** பரீட்சையிலும் சித்தி பெற்றுக் கொண்டனர். அதன் மூலம் இவ்வாறானவர்களுக்கு அரசாங்க உயர் நிர்வாகப் பதவிகள் கிடைத்தன. அவ்வாறு உயர்பதவி பெற்ற தாழ்த்தப்பட்ட கல்வியாளர்கள் வடக்கு மாகாணத்தில் நியமனம் பெறுவது முயற்கொம்பாகவே காணப்பட்டது. அத்தகையவர்களுக்கு ஒதுக்கப்படுவது கிழக்கு மாகாணமும் ஏனைய பிரதேசங்களும் என்ற நடைமுறை இருந்து வந்தது.

ஆனால் எண்பதுகளில் இருந்து இந்நிலையில் சிறு மாற்றம் ஏற்பட ஆரம்பித்தது. அரசாங்க உயர் நிலை அதிகாரிகள் ஓரிருவர் வட புலத்திற்கு மாற்றம் பெற்றனர். யாழ் செயலகத்திற்கு உதவித் தேர்தல் ஆணையாளராக ஒருவரும் உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரியாக மற்றொருவருமாக இரு தாழ்த்தப்பட்டவர்கள் மாற்றம் பெற்று வந்தனர். முன்னையவர் யாழ்ப்பாணம் அரியாலையைச் சேர்ந்தவர். இரண்டாமவர் தென்மராட்சியின் மந்துவிலைச் சேர்ந்தவர். இவர்கள் இருவரும் சமூக அடி நிலைக் குடும்பங்களில் இருந்து பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுத்து தமது கல்வியை முன்னெடுத்து உயர் பதவி நிலைக்கு வந்தவர்கள். அதனால் நேர்மையும் சேவை மனப்பான்மையும் கொண்ட சிறந்த நிர்வாகிகளாக செயலாற்றி வந்தனர். அப்படி இருந்தும் அவர்கள் தமது கடமையின் போது சாதி காரணமான நேரடி, மறைமுகப் பாதிப்பு களை எதிர் நோக்கினர். ஒரு உயர் அதிகாரி அரசாங்க திணைக்களத் திற்கோ அல்லது தனியார் நிறுவனப் பணிமனைகளுக்கோ மாற்றலாகி அல்லது நியமனம் பெற்று வந்தால் அடுத்த நாளிலேயே அவரது ஊர் உறவு சாதி

www.padippakam.com



பற்றி அறிந்து கொள்வது வடபுலத்தின் பிரதான நடைமுறையாக இருந்து வந்தது. அதன் வழியில் இவ் இருவரும் தமது யாழ் செயலகப் பதவிக் காலத்தில் எதிர் கொண்ட சாதிய வக்கிரம் சார்ந்த பல அனுபவங்களை எடுத்துக் கூறி இருந்தனர். அவர்கள் ஒருபோதும் தமது தாழ்த்தப்பட்ட சாதி அடையாளத்தை மறைத்தவர்கள் அல்லர். துணிவுடன் அத்தகைய போக்குகளுக்கு முகம் கொடுத்துச் செயற்பட்டவ ர்கள். அதற்கு ஒரு காரணமாக அமைந்திருந்தது அவர்கள் பெற்றிருந்த மாக்ஸிச உலக நோக்கும் பின்பற்றி வந்த பொதுவுடைமைக் கொள்கையுமாகும். இவர்களிடம் தமக்குரிய வேலைகளைச் செய்ய வரும் எவரையும் மனித நேயத்துடன் உரிய நேரத்தில் அவர்களுக்குரிய விடயங்களைக் கவனித்து இழுத்தடிக்காது வேலைகளை முடித்து அனுப்புவதில் இவர்கள் கடமையுணர்வுடன் செயலாற்றி வந்தனர். இவ்விடத்தில் இரு உதாரணங்க ளைக் கூறலாம். தனது தேவை ஒன்றை முடித்து வெளியே வந்த ஒரு உயர் சாதி திமிர் பிடித்தவன் "பறைப்பொடியன் என்றாலும் விஷயத்தை மற்றவர்கள் போல் இழுத்தடிக்காமல் செய்து தந்திட்டான்" எனக் கூறிக் கொண்டான் அவ்வாறே மற்றொரு சந்தர்ப் பத்தில் முறைகேடான வழிகளில் ஒரு பணக் கொடுப்பனவைத் தரும்படி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரியை உயர் சாதியைச் சேர்ந்த ஒருவர் வற்புறுத்த முயன்றார். ஆனால் அதனை நிறைவேற்றிக் கொள்ள முடிய வில்லை. வெளியே வந்த அந்த உயர் சாதியினன் "அவன் தனது நளப் புத்தியைக் காட்டி விட்டான்" என ஆத்திரத்துடன் கூறிக் கொண்ட சம்பவமும் இடம் பெற்றது.

இவ்விரு அரசாங்க நிர்வாக உயர் அதிகாரிகளும் அரசாங்க அதிபர்களாகிக் கொள்வதற்கு சேவை, திறமை, அனுபவம், நேர்மை போன்ற தகுதிகள் இருந்தும் அவர்களது சாதி காரணமாக ஒரு போதுமே அப் பதவிக்கு அவர்கள் நியமிக்கப்படவில்லை. யாழ் உதவித் தேர்தல் ஆணையாளராகப் பதவி வகித்தவரை 1986ல் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் பதவிக்கு கொழும்பில் இருந்த சில சிங்கள உயர் அதிகாரிகள் சிபாரிசு செய்தனர். அன்றைய ஐ.தே. கட்சி அமைச்சரவையில் முக்கிய அமைச்சராக இருந்த அத்துலத்முதலி "அவ்வாறான அரசாங்க அதிபர் நியமனத்தை ஒரு தாழ்த்தப்பட்டவருக்கு வழங்குவதை யாழ்ப்பாண சமூகம் ஏற்றுக் கொள்ளாது" எனக் கூறி அச் சிபாரிசினை மறுத்து விட்டார். அவ்வாறே யாழ். உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரியான தாழ்த் தப்பட்டவர் மன்னார் அரசாங்க அதிபர் பதவிக்கு சிபாரிசு செய்யப்பட்ட போதும் அவரது

www.padippakam.com



சாதி காரணமாக அந் நியமனம் கிடைக்கவில்லை. இதே போன்று கல்வித்துறையின் உயர் நிர்வாகப் பதவிகளிலும் சாதியம் மிக நுணுக்கமாகப் பார்க்கப்பட்டது. இவை எண்பதுகளின் நடுக் கூறிலே இடம் பெற்றவைகளாகும்.

இரண்டாயிரமாம் ஆண்டுகளின் ஆரம்பத்திலிருந்து கல்வித் திணைக்களத்தின் வடபுல கோட்டப் பணிப்பாளராக ஒரு தாழ்த்தப்பட்ட கல்வியாளர் பதவி வகித்தார். அவரிடம் தமது வேலைகளைச் செய்யவரும் உயர்சாதி அதிபர்கள் ஆசிரியர்கள் "சேர்" போட்டு தத்தமது காரியங்க ளைச் சாதித்துக் கொண்டார்கள். ஆனால் வெளியே வந்து "இப்படி அந்தப் பள்ளனிடம் சேர் போட வேண்டிய தலைவிதி" என நொந்து கொண்டனர்.

அவ்வாறே பாடசாலைகளில் கற்பிக்கும் தாழ்த்தப்பட்ட ஆசிரியர்கள் வீடுகளில் நடைபெறும் நன்மைச் சடங்குகளில் கலந்து கொள்ளும் சந்தர்ப்பங்களில் உயர்சாதி அதிபர்கள் சக ஆசிரியர்கள் அங்கு உணவருந்துவதை மிகவும் நாசுக்காகத் தவிர்த்துக் கொள்வது இன்றும் வடபுலத்தின் கல்வித்துறை நடைமுறையாகும். பாடசாலைகளிலும் தாழ்த்தப்பட்ட மாணவர்கள் ஆசிரியர்கள் உள்ளார்ந்த பாகுபாடுகளுடன் நடாத்தப்படுவது தொடரும் நடைமுறையாக இருந்து வருகிறது.

ஒருவர் யாழ்ப்பாணத்தில் அதிபர் தரத்தில் தகைமை உடையவராக இருப்பினும் குறிப்பாக இந்து உயர்தரப் பாடசாலைகளில் அதிபர்களாக நியமனம் பெறுவது முடியாத ஒன்றாகும். யாழ் இந்துக் கல்லூரி போன்ற உயர் பாடசாலைகளில் அதனைக் கற்பனை செய்து கூடப் பார்க்க முடியாத சாதித்துவ நிலை நீடித்து வருகின்றது. காங்கேச ன்துறை நடேஸ்வராக் கல்லூரிக்கு மந்துவிலைச் சேர்ந்த தாழ்த்தப்பட்டவர் ஒருவர் 1988ல் அதிபராக மாற்றம் பெற்று வந்தார். அவர் ஏற்கனவே அச்சுவேலி மகா வித்தியாலயத்தில் அதிபராக இருந்து சாதியப் பிரச்சினைக்கு முகம் கொடுத்தவர். அவரது வருகையை உள்வாங்கிக் கொள்வதில் காங்கேசன்துறை சாதியச் சமூகச் சூழல் தவிர்த்து நின்றது. மேற்படி பாடசாலைக்கு மாற்றம் கோரி விண்ணப்பித்த போது அன்றைய வட மாகாணக் கல்விப்பணிப்பாளராக இருந்த தடிப்பு மிக்க உயர்சாதி வேளா ளர். நடேஸ்வராக் கல்லூரியில் நீர் எப்படிச் சமாளிக்கப் போறீரோ தெரியாது" எனக் கூறி தனது சாதி அகம்பாவத்தை தெரிவித்துக் கொண்டார். ஆனால் அவ் அதிபர் சாதிய வக்கிரதத்திற்குப் பணிந்து போகாத நிலையில் தன் கல்விக் கடமையை முன்னெடுத்தும் வந்தார்.

www.padippakam.com



அவரது சேவையும் கல்வித் தரமும் நிர்வாகத்திறனும் காரணமாக பின்பு அவர் யாழ் நகரின் கிறிஸ்தவப் பின் புலத்தைக் கொண்ட தேசியப் பாட சாலையான யாழ். மத்திய கல்லூரியின் அதிபராக மாற்றம் பெற்று நெருக் கடிகளின் மத்தியில் அக் கல்லூரியின் தேவைகளையும் கல்வியின் தரத் தையும் உயர்த்துவதில் முன்னின்றார். அத்தகைய தாழ்த்தப்பட்ட சிறந்த கல்வியாளரும் நிர்வாகியுமான அந்த அதிபர் 2005ம் ஆண்டில் யாழ் நகரில் வைத்து அடையாளம் தெரியாத ஆயுததாரிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டார். யாரும் அப் படுகொலைக்கு உரிமை கோரியதுமில்லை. உரிய காரணம் வெளிப்படுத்தியதும் கிடையாது. ஆனால் சாதி வெறி வக்கிரமே மந்துவிலைச் சேர்ந்த அந்த அதிபரின் படுகொலைக்குக் கார ணம் என்றே பரவலாகப் பேசப்பட்டது. இக் கொலையால் சாதிய ஆதிக்க வாதிகள் உள்ளார்ந்த திருப்தி பெற்றனர். இது போன்ற சாதிய உள் நோக்கம் கொண்ட அடையாளம் வெளிப்படுத்தப்படாத கொலைகள் சில முன்னரும் இடம் பெற்றிருக்கின்றன என்பது பகிரங்க இரகசியம்.

வடபுலத்தின் உயர் கல்வி நிறுவனமான யாழ்ப்பாணப் பல்க லைக் கழகத்தின் நிர்வாகத்திலும் அதன் பீடங்களிலும் சாதியம் இருந்து வந்துள்ளமை இரகசியமல்ல. பேராசிரியர் க. கைலாசபதி தலைமைப் பதவி வகித்த நான்கு ஆண்டுகளில் சாதியப் போக்கு முன்னிலை பெற முடியவில்லை. அவருக்குப் பின் வந்தவர்களின் தலைமைத்துவ நிர்வாகம் சாதியத்தை மிக நாசுக்காகக் கடைப்பிடித்து வந்தது. விரிவுரையாளர் களை நியமிப்பது தொடக்கம் நியமனங்கள் பதவி உயர்வுகள் வழங்குவதில் சாதியத் தகுதி உள்ளூரப் பார்க்கப்பட்டது. அதாவது இறுதித் தீர்மானம் எடுப்பதில் சாதியம் என்பது தீர்க்கமான பாத்திரத்தை வகிக்கவே செய்தது. அதனால் சில தாழ்த்தப்பட்ட பட்டதாரிகள் தகுதியிருந்தும் விரிவுரையா ளர்களாக நியமனம் பெற முடியாத நிலைக்கு உள்ளாகினர். வேறு சிரேஷ்ட விரிவுரையாளருக்கு உரிய பதவி உயர்வு வழங்கப்படாது இழுத்த டிக்கப்பட்டது.

உதாரணத்திற்கு ஒன்றைக் கூற முடியும். ஒரு தாழ்த்தப்பட் டவர் யாழ். பல்கலைக்கழக நிர்வாகப் பிரிவில் கடமை புரிந்து வந்தார். அவர் பட்டதாரியாகியதுடன் உதவிப் பதிவாளர் பதவிக்குரிய கல்வித் தகைமைகளும் பெற்றிருந்தார். வரணியைச் சேர்ந்த அவர் தாழ்த்தப்பட் டவர் என்ற காரணத்தினால் அவருக்கு அப்பதவி வழங்கப்படவில்லை. திட்டமிட்ட வழிகளில் அவர் அப்பதவிக்கு வருவது தடுக்கப்பட்டது. தனக்கு இழைக்கப்பட்ட அநீதியை அவர் தேசிய மனித உரிமைகள் ஆணைக்

www.padippakam.com



குழுவில் முறையிட்டார். தனக்குத் தகைமைகள் இருந்தும் பதவிக்குரிய இடமிருந்தும் தாழ்த்தப்பட்ட சாதி காரணமாகத் தனக்கு நியமனம் வழங்கப்படவில்லை என்றும் எடுத்துக் கூறினார். இடம் இருப்பின் அவருக்கு அப் பதவி வழங்கப்படவேண்டும் என ஆணைக்குழு தீர்ப்பளித்தது. அப்படி இருந்தும் அவருக்கு அப் பதவி வழங்கப்படவில்லை. இது இரண்டாயிரமாம் ஆண்டில் இடம் பெற்ற சம்பவமாகும். இச் சம்பவத்தில் அன்றைய யாழ் பல்கலைக்கழக உப வேந்தர் முதல் உயர் நிர்வாக அதிகாரிகள் வரை சம்பத்தப்'ட்டி ருந்தனர் என அறியப்படுகிறது.

இதே போன்று யாழ் பல்கலைக் கழகம் வழங்கி வரும் கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கலிலும் நடைபெற்றது. நாடறிந்த இலக்கிய வாதியான டொமினிக் ஜீவாவை விடத் தகுதி குறைந்த எத்தனையோ பேருக்கு யாழ் பல்கலைக்கழகத்தால் இலக்கியத்திற்கான கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கப்பட்டு வந்திருக்கிறது. ஆனால் அவருக்கு வழங்கும் பரிந்துரை பல்கலைக்கழக மூதவைக்கு முன்னால் வைக்கப்பட்ட போது அவ்வாறு வழங்குவதைத் தவிர்த்து அதிலுங்குறை வான கல்விக்கு வழங்கப்படும் ஏம்.ஏ. பட்டத்தை வழங்க முடிவானது. டொமினிக் ஜீவா அதனை ஏற்காது நிராகரித்து தனது சுயமரியாதையைப் பேணிக் கொண்டார். இச் சம்பவம் யாழ் பல்கலைக் கழகத்தின் சாதிய வக்கிர நிலைப்பாடு இருபத்தியோராம் நூற்றாண்டிலும் தொடர்வதை எடுத்துக் காட்டியது.

இரண்டாயிரமாம் ஆண்டின் பொதுத் தேர்தல் காலத்தில் சுழிபுரம் பறாளை விநாயகர் ஆலயத்தின் நீர் நிரம்பியிருந்த கேணியில் உயர் சாதிய இளைஞர்கள் நீந்திக் குளித்து வந்தனர். இதைப் பார்த்து நின்ற தாழ்த்தப்பட்ட இளைஞர்கள் இருவர் அக்கேணியில் இறங்கித் தாமும் நீந்திக் குளித்தனர். அதனால் சாதிய தீண்டாமைப் பிரச்சினை ஏற்பட்டு வாள் வெட்டுகளும் மோதலும் ஏற்பட்டது. பின்பு அக் கேணியைச் சுற்றி முட் கம்பி வேலி போடப்பட்டு தாழ்த்தப்பட்டோர் குளிக்காதவாறு தடுக்கப்பட்டது.

2005ல் கொடிகாமத்தில் சாதி உயர்வு தாழ்வு காரணமான மோதல்கள் சில வாரங்கள் நடைபெற்றன. நமது தமிழ் நாளேடுகள் இரு குழுக்களுக்கிடையிலான மோதல் என்றே எழுதிக் கொண்டன. ஆனால் ஒடுக்கு முறை ராணுவமே சிரித்து நிற்குமளவிற்கு சாதிய மோதல்கள் இடம் பெற்றன. பலர் படுகாயங்கள் அடைந்தனர். எவ்வாறு தான் கூறிய போதிலும் தமிழர் சமூகம் சாதிய சமூகம் தான் என்பதையே இது

www.padippakam.com



எடுத்துக்காட்டி நின்றது.

மேற்கூறிய சம்பவங்கள் ஒரு சில மட்டுமே. ஆனால் மேலும் பல சம்பவங்கள் பேரினவாத ஒடுக்குமுறை யுத்த சூழலிலும் தமிழ்த் தேசியப் போராட்டத்தின் மத்தியிலும் ஆங்காங்கே இடம் பெற்று வந்துள் ளன. இந் நிலை இன்றும் தொடரவே செய்கின்றன.

மேலும் வடபுலத்தில் இடம் பெற்று முடிந்த ஒரு மனித அவலம் நிறைந்த சோக நிகழ்வின் ஊடே சாதியம் எவ்வாறு செயற்பட்டது என்பதைக் காண்பதன் மூலமாக அதன் நீட்சியின் தன்மையைப் புரிந்து கொள்ள முடியும். 1995ம் ஆண்டு ஒக்ரோபர் 30ம் திகதி வடபுலத்தின் பரந்த வலிகாமம் பிரதேசத்திலிருந்து ராணுவ நடவடிக்கை காரணமாக அனைத்து மக்களும் வெளியேற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அடைமழைக் காலத்தில் ஒரேநாளில் இடம்பெற்ற இவ் இடப் பெயர்வு ஒரே ஒரு தரை வழிப்பாதையான கண்டி வீதியின் ஊடாக தென்மராட்சி நோக்கி இடம் பெற்றது. பல லட்சம் மக்கள் ஒரு பகலிலும் ஒரு இரவிலும் நாவற்குழிப் பாலத்தின் ஊடாகப் பயணித்தனர். குடும்பம் குடும்பமாக எடுத்து வரக் கூடிய பொருட்களுடன் மக்கள் முண்டியடித்துச் சென்று கொண்டிருந் தனர். அவ் வேளையில் எல்லோரும் துன்பச் சுமைகளுடனும் தாங்கமுடி யாத வேதனைகளுடனும் நடைப்பயணம் மேற்கொண்ட அவ் வேளை ஆளை ஆள், ஐயா, அம்மா, அண்ணை, தம்பி, ஆச்சி, அப்பு என அழைத்துக் கொண்ட சமத்துவத் தமிழர்களாகவே காட்சி தந்தனர்.

ஆனால் நாவற்குழிப் பாலம் தாண்டியதும் எல்லோரும் தத்தமது சாதிய அடையாளம் கொண்ட தென்மராட்சிக் கிராமங்களைத் தேடிச் செல்ல வேண்டியதாயிற்று. சாதியம் கடந்த தமிழர்களாகத் தொடர்ந் தும் செல்லவோ வீடுகளில் கோவில்களில் தங்கிக் கொள்ளவோ முடியவில் லை. இடம் பெயர்ந்தோருக்கான முகாங்கள் சாதிய அடிப்படையிலேயே அமைந்தன. உறவினர் வீடுகளில் தங்கியோர் அல்லது காணிகளில் இருப்பிடம் அமைத்தோர் தத்தமது சாதிய அடிப்படையிலேயே தங்க வேண்டியதாயிற்று. ஆரம்பத்தில் சாதி அறியாது வீடுகளைக் கொடுத்தோர் சாதி அறிந்து கொண்ட பின் வீடுகளில் இருந்து வெளியேற்றவும் செய்த னர். ஒரு சிலர் மட்டுமே விதிவிலக்காகச் சாதியம் கடந்த மனித நேய நட்பு அடிப்படையில் நடந்து கொண்டனர்.

இவ் இடப்பெயர்வு காலத்தில் தென்மராட்சிப் பிரதேசத்தில் பொதுக் கிணறுகளில் தாழ்த்தப்பட்டோர் தண்ணீர் எடுத்தமைக்காக அக் கிணறுகளில் கழிவு எண்ணெய்களும் கழிவுப் பொருட்களும் இட்டு

www.padippakam.com



அசுத்தப்படுத்திய சம்பவங்கள் இடம் பெற்றன. தாழ்த்தப்பட்டோர் என அடையாளம் காணப்பட்டோர் உயர்சாதியினர் குளிக்கும் குளங்களில் குளிப்பது தடுக்கப்பட்டது. சில கோவில்களுக்குள் செல்லவும் முடியவில் லை. இவையாவும் ''தமிழர்களாக இருங்கள். ஆனால் சாதிகளாகத் தொடர்ந்திருப்பதைக் கைவிடாதீர்கள்'' என்ற தமிழன் பழைமைவாதப் பிற்போக்குத்தனத்தையே எடுத்துக் காட்டி நின்றன.

இவ்விடத்தில் மற்றொரு சம்பவத்தையும் குறிப்பிட்டாக வேண்டும் யாழ்ப்பாண மாநகர சபையின் தமிழர் விடுதலைக் கூட்டணியின் இரண்டு முதல்வர்கள் அடுத்தடுத்து சுட்டுக் கொல்லபட்ட சம்பவங்கள் இடம் பெற்றன. இதனையடுத்து இரண்டாயிரமாம் ஆண்டின் ஆரம்பத்தில் பல இழுபறிகள் தயக்கங்கள் மத்தியில் யாழ்- அரியாலையைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட கூட்டணி மாநகரசபை உறுப்பினர் முதல்வராகத் தெரிவு செய்யப்பட்டார். அவரது முதல்வர் தெரிவு அன்றைய நெருக்கடிமிக்க கொலை அச்சுறுத்தல் சூழலில் கூட்டணியால் அரங்கேற்றப்பட்டது. செல்லன் கந்தையன் என்ற தாழ்த்தப்பட்டவர் முதல்வராக தெரிவு செய்யப்பட்டமை யாழ்ப்பாண நகரின் சாதியவாதிகளுக்கு பெரும் நெருடலாகவே அமைந்திருந்தது. பல சந்தர்ப்பங்களில் மாநகர சபைக்கு உள்ளேயும் வெளியேயும் அவர் சாதி கூறப்பட்டு அவமானப்படுத்தப்பட்ட பல சம்பவங்கள் நிகழ்ந்தன. ஒரு முறை உயர்சாதி கூட்டணி மாநகர சபை உறுப்பினரால் காரியாலயத்தில் வைத்து செல்லன் கந்தையன் தாக்கப்பட்ட சம்பவம் இடம் பெற்றது. அத்துடன் 1981ல் முற்றாக எரியூட்டப்பட்டு அழிவுற்ற யாழ்ப்பாண பொது நூலகம் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு புதுப் பொலிவுடன் திறப்பு விழாவிற்கும் தயார் செய்யப்பட்டது. முதல்வராக இருந்த செல்லன் கந்தையா திறந்து வைப்பதாகவும் நாள் குறிக்கப்பட்டு அழைப்பிதழ்களும் அனுப்பப்பட்டிருந்தன. இதனை யாழ்ப்பாண சாதிய ஆதிக்கவாதிகளால் உள்ள வாங்கிக் கொள்ள முடியவில்லை. அப்படித் திறப்பு விழாச் செய்யப்பட்டால் திறப்பு நாள் பதிகக் கல்லில் ஒரு தாழ்த்தப்பட்டவரின் பெயர் இடம் பெற்று விடும் என்பதே அவர்களது மனக்கொதிப்பாக இருந்தது. ஆதலால் அத்திறப்பு விழா ஆயுத அச்சுறுத்தல் மூலம் தடுக்கப்பட்டது. அந் நிகழ்வு இடம் பெறவில்லை. இதுவும் தமிழர் விடுதலைப் போராட்டத்தின் மத்தியில் இடம்பெற்ற சாதிய வக்கிரம் மிக்க அவமானம் மிக்க வரலாற்று நிகழ்வாகிக் கொண்டது. இவை போன்ற சம்பவங்களுக்கும் நிகழ்வுகளுக்கும் ஆயிரம் காரணங்கள் கூறப்பட்டாலும் அவையாவும் சாதிய வக்கிரப் போக்குகளை மூடி மறைக் கும் போர்வைகளேயாகும்.

இன்றுங் கூட வடமராட்சி. தென்மராட்சி உட்பட வடபுல

www.padippakam.com



த்தில் தாழ்த்தப்பட்ட மக்களைச் சமத்துவமாக அனுமதிக்காத சில சிறிய நடுத்தரக் கோவில்களைக் காணமுடியும். அத்துடன் சாதிய தீண்டாமை காரணமாக ஆங்காங்கே உயர்சாதி தாழ்த்தப்பட்ட சாதி மோதல்கள் இடம் பெற்று வருகின்றமை மூடி மறைப்பதற்குரியன அல்ல. இவை அனைத்தும் தமிழ்த் தேசியப் போராட்டம் ஆயுதப் போராட்டமாக மாற்றமடைந்து விட்ட இரண்டு தசாப்த காலகட்டத்தில் இடம் பெற்ற சாதியச் சம்பவங்கள் என்பது தான் ஆழ்ந்த சிந்தனைக்குரியதாகும்.

இவ்வாறான சூழலில் மற்றொரு அம்சத்தையும் காண வேண்டும். ரி. இராஜலிங்கம் தமிழர் விடுதலைக் கூட்டணியில் ஒரு பாராளு மன்ற உறுப்பினராக 1977ல் பதவி வகித்த பின் தாழ்த்தப்பட்ட எவரும் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்படவில்லை. ஆனால் 2004ம் ஆண்டு இடம் பெற்ற பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் ஒரு பாராளுமன்ற உறுப்பினராக தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த கரவெட்டி கிழக்கு கே. சிவநேசன் தெரிவு செய்யப்பட்டார். இத் தேர்தலி லும் முன்னைய காலத் தேர்தல்கள் போன்றே வேட்பாளர் தெரிவும் வாக்கு கள் சேகரிப்பும் சாதிய அடிப்படைச் சாராம்சத்தையே கொண்டிருந்தமை நோக்குதற்குரிய அம்சமாகும்.

அவர் பாராளுமன்ற உறுப்பினராக வந்தபின் ஆங்காங்கே சாதிய தீண்டாமைச் சம்பவங்கள் யுத்த சூழலிலும் இடம் பெறவே செய்கி ன்றன. 'வரணியில் உயர்சாதி- தாழ்த்தப்பட்ட சாதிய மோதல் இடம் பெற்றதுடன் பாம்பை அடித்து கிணற்றில் போட்ட சம்பவமும் இடம் பெற்றது. இம் மோதலில் பாராளுமன்ற உறுப்பினர் சிவநேசன் தலையிட்டு சமரசம் செய்த நிகழ்வு இடம் பெற்றது. சாதிய அடையாளம் கொண்ட பாராளுமன்றப் பிரதி நிதித்துவத்தால் தாழ்த்தப்பட்ட மக்கள் பயன் பெற்றது அன்றும் இல்லை இன்றும் இல்லை. இனிமேலும் இருக்கப்போவதில்லை.

தமிழ்த் தேசிய இனத்தின் மத்தியில் சாதிய முரண்பாடும் ஒடுக்கு முறையும் இன்று வரை வெவ்வேறு அளவுகளில் தொடர்ந்தும் இருந்து வருவதையே இவை எடுத்துக் காட்டுகின்றன.

அதேவேளை சாதிய வரையறையைக் கடந்து எந்தவொரு தாழ்த்தப்பட்ட பாராளுமன்ற உறுப்பினாரலும் சாதிய ஒடுக்கு முறைக்குள் ளான மக்களுக்கு சேவை செய்ய முடியாது என்பது இன்றும் நிதர்சன மாகவே இருக்கின்றது.

www.padippakam.com

## முடிவுரை

இந்நூலில் கூறப்பட்டுள்ளவற்றை ஆழ்ந்து நோக்கினால் இரண்டு விடயங்கள் தெளிவாகப் புலப்படும். ஒன்று சாதியும் தீண்டாமையும் தமிழர் சமூகத்தில் ஒரு அமைப்பாக இறுக்கமுடன் இருந்து வந்திருக்கிறன. இரண்டாவது, தமிழர்களிடையே சமூகப் பிளவுகள் நீடித்து வருவதற்கு சாதியும் தீண்டாமையும் காரணமாக இருந்துள்ளன. இவ் இரண்டையும் எதிர்த்துப் போராடுவதில் தமிழ்த் தேசியத் தலைமை கள் எக்கட்டத்திலும் அக்கறை காட்டவோ முன் நிற்கவோ வில்லை. தாழ்த் தப்பட்ட மக்களை சமத்துவமான நிலையில் வைத்து நடாத் தவும் ஜனநாய கப்படுத்துவதற்கும் அதன் மூலம் ஒரு பரந்த ஐக்கியத்தை ஏற்படுத்துவ தற்கும் அவர்கள் முன்வந்ததில்லை. ஏதாவது ஒரு அரசியல் பிரதிநிதித்து வத்தையோ அன்றி சில எலும்புத்துண்டுச் சலுகைகளை வழங்கி தாழ்த்தப் பட்ட மக்கள் தங்களுடன் இருப்பதாகக் காட்டிக் கொள்வதிலேயோ தமிழ்த் தேசியத் தலைமைகள் என்றும் முயன்று வந்திருக்கின்றன. அதே வேளை ஜனநாயக வாதிகள் முற்போக்கு சக்திகள் இடதுசாரிகள் குறிப்பாக பொதுவுடைமை வாதிகள் என்போர் சொல்லாலும் செயலாலும் தாழ்த் தப்பட்ட மக்களுடன் இணைந்து நின்று அவர்களை அமுக்கி வந்த சாதிய தீண்டாமைக்கு எதிராகக் குரல் கொடுத்தும் போராடியும் உரிமைகளை வென்றெடுத்தும் வந்துள்ளனர். இதனை வரலாற்று ரீதியில் இந் நூலிலே காண முடியும்.

தாழ்த்தப்பட்ட சமூக மக்கள் அடிப்படையில் எதிர்நோக்கி நின்ற நிலம், குடியிருப்பு, தொழில் வாய்ப்புகள், கல்வி வளர்ச்சி, பண்பாட்டு மாற்றங்கள் போன்ற பிரச்சினைகளில் இரண்டாம் மூன்றாம் தர நிலையிலேயே வைத்து நடாத்தப்பட்டனர். முற்றிலும் உடல் உழைப்பாளர்களான தாழ்த்தப்பட்ட மக்கள் பொருளாதார அடிப்படையில் மிகப் பின் தங்கியவர்களாக இருந்து வந்தனர். இன்றும் வடக்கின் தாழ்த்தப்பட்ட மக்களின் கிராமங்கள் பின் தங்கியனவாகவே காணப்படுகின்றன. இன்றைய யுத்த சூழலில் மிகவும் பாதிக்கப்பட்டவர்கள் அவர்களாகவே காணப்படு

www.padippakam.com



கின்றனர். எவ்வளவு ஒடுக்குமுறை வந்த போதிலும் தமது சொந்த மண்ணை விட்டுச் செல்லாத உழைப்பாளி மக்களாக அவர்கள் இருந்து வருகின்றனர். அத்தகைய மக்களுக்கு நிலம் சொந்தமாக இல்லை. தோட்டங்கள் வயல்கள் இல்லை. வீடுகள் இருப்பிடங்கள் உரியவாறு கிடையாது. சுகாதாரம் கல்வி என்பன மிகத் தாழ்ந்த நிலையிலேயே இருந்து வருகின்றன. கிராமங்களில் சாதிய வக்கிரத்தின் பாதிப்புகள் நவீன முறைகளில் முன்னெடுக்கப்படுகின்றன. வெளிப்படையாக அன்றி பல விடயங்களில் மறைமுகமாகவும் நாசுக்காகவும் சாதியப் பாகுபாடுகள் இருக்கவே செய்கின்றன. அதேவேளை உள்ளூரில் கல்வி உத்தியோக வாய்ப்புப் பெற்று ஓரளவு வசதிகளைத் தேடிக் கொண்டவர்களில் சிலர் தங்களைச் சாதாரண தாழ்த்தப்பட்ட மக்களில் இருந்து வேறுபடுத்தி மேனிலையாக்கத்திற்கு உள்ளாக்கி உயர்வானவர்களாக வைத்துள்ள போக்கை அவதானிக்க முடிகிறது. வெளிநாடுகளுக்கு புலம் பெயர்ந்தவர்கள் பொருளாதார நிலையில் மேம்பாடடைந்து தங்களுக்குரிய வட்டங்களுக்குள் பணம் படைத்தவர்களாகிக் கொண்டுள்ளனர். இத்தகையோரில் சிலர் தமது சாதி அடையாளங்களை மறைக்கவும் செய்கின்றனர். அன்று சாதியத்திற்கும் தீண்டாமைக்கும் எதிராகப் போராடி வரலாற்றுப் பதிவு பெற்ற சில கிராமங்களின் பெயர்களை தத்தமது திருமண அழைப்பிதழ்க ளில் குறிப்பிட வேண்டாம், பொதுவான பெயருடன் இருந்தால் போதும் எனக் கூறும் அளவுக்கு புலம் பெயர்ந்தவர்களின் சாதிய தாழ்வுச்சிக்கல் காரணமான கருத்தோட்டத்தையும் அவதானிக்க முடிகின்றது. இத்தகைய மேன்னிலையாக்கம் பெற்றவர்கள் தத்தமக்குரிய பண வருவாயையும் பொருளாதார மேம்பாட்டையும் கொண்டவர்களாகி உள்ளனரே தவிர தான் பிறந்து வளர்ந்து துன்பங்கள் ஏற்றத்தாழ்வுகள் அனுபவித்த சமூகத்திற்கும் சக மக்களுக்கும் உதவுவோராக இல்லை என்பது வருத்தம் தருவதாகவே உள்ளது. அதேவேளை தாம் சார்ந்த மக்களின் முன்னேற்றத்திற்காகப் பலமுனைப் பங்களிப்பு செய்து வரும் புலம் பெயர்ந்த தாழ்த்தப் பட்டோரில் சிலர் சமூக அக்கறையுடன் இருந்தும் வருகின்றமை குறிப்பிடத் தக்கதாகும்.

இவ் விடத்தில் மற்றொரு முக்கிய விடயத்தை கவனத்திற் கொள்ளல் வேண்டும். 1966- 71 கால கட்டத்தில் மாக்சிச லெனினிச வாதிகளின் வழிகாட்டலின் கீழ் இடம் பெற்ற புரட்சிகர வெகுஜனப் போராட்டங்கள் தமிழர் சமூகத்தில் வரலாற்று ரீதியான பண்பு மாற்றத்தை ஏற்படுத்திக் கொண்டன. அதன் மூலம் தமிழ்த் தேசிய இனம் குறிப்பிட்ட

www.padippakam.com



ளவிற்கு ஒன்றுபட்டு இன முரண்பாட்டின் பேரினவாத ஒடுக்கு முறைக்கு முகம் கொடுக்கும் புதிய சூழலுக்கு உள்ளாகியது. இக் கட்டத்தில் சாதிய முரண்பாடு பிரதான இடத்திலிருந்து கீழிறிங்கியது. அந்த இடத்தை இன முரண்பாடும் பேரினவாத ஒடுக்குமுறையும் எடுத்து நின்றன. இதன் போது தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியிலிருந்து தமிழ் இளைஞர்கள் இயக்கங்களில் இணைந்து கொண்டனர். அவர்கள் அடிப்படையில் உழைப் பாளி வர்க்கத்தில் இருந்து சென்றவர்களாக இருந்தனர். அத்துடன் சாதிய தீண்டாமை ஒடுக்கு முறையை அனுபவித்து வந்த குடும்பங்க ளைச் சேர்ந்தவர்களாகவும் இருந்தனர். இதனால் அத்தகைய இளை ஞர்களிடம் இயல்பாகவே வர்க்க உணர்வும் போர்க்குணமும் ஓங்கி நின்றன. இத்தகைய அம்சங்களை தமிழ் இளைஞர் இயக்கங்கள் தத் தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டன. இன ஒடுக்கு முறை யின் ஆரம்ப காலகட்டத்தில் இனமுழக்கம் செய்து நின்ற மத்தியதர வர்க்கக் குடும்பங்களைச் சேர்ந்த தமிழ் இளைஞர்கள் யுவதிகள் தமக்குள்ள பொருளாதார பின்புல வசதி காரணமாக வெளி நாடுகளுக்குப் புலம் பெயர்ந்து கொண்டார்கள். ஆனால் சாதாரண தமிழ்த் தொழிலாளர் விவ சாயிகளான உழைக்கும் மக்களும் குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட மக்களும் பேரினவாத ஒடுக்கு முறைக்கு முகம் கொடுப்போராகினர். இளைஞர் இயக்கங்களில் இணைந்து போராடும் நிர்ப்பந்த சூழலுக்கும் உள்ளாகினர்.

இலங்கையின் பேரினவாத ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடுவது ஒடுக்கு முறைக்கு உள்ளாகி நிற்கும் ஒவ்வொரு தமிழ்த் தேசிய இனத்தவருக்கும் நிராகரிக்க முடியாத ஒன்றாகும். ஆனால் எத்தகைய உலகக் கண்ணோட்டத்தின் அடிப்படையில் என்பதும் எவ்வா றான வர்க்க சமூக நிலைப்பாட்டிலும் என்பதுமே பிரதான பிரச்சினையா கும். கடந்த இரண்டு தசாப்த கால தமிழ்த் தேசியவாதக் கண்ணோட்டத்தி னூடான வர்க்கங்கள் கடந்த தமிழின நிலைப்பாட்டிலேயே போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இப் போராட்டங்களின் சாதக பாதக அம்சங்கள் உரிய மதிப்பீட்டிற்கும் விமர்சனம் சுய விமர்சனங்களுக்கும் உள்ளாக்கப்பட வேண்டும். அதனை சாதியத்திற்கும் தீண்டாமைக்கும் எதிரான புரட்சிகர வெகுஜனப் போராட்டங்களின் அனுபவ வெளிச்சத்தில் வைத்து அணுகி ஆராய வேண்டும். அப்பொழுது தான் தமிழ்த் தேசிய இனத்தின் சுய நிர்ணய உரிமைக்கான போராட்டம் குறுகிய நிலைகள் கடந்து உண்மை யான மக்கள் போராட்டமாக முன் செல்ல முடியும். அச் சூழலில் தான் விடுதலை மக்களுக்குரியதாக முழு அர்த்தமும் நடைமுறையும் கொண்ட

www.padippakam.com



தாக அமைய முடியும். அத்தகைய நிலையிலேயே சமூக அநீதிகளுக்கும் இரண்டாம் தர நிலைகளுக்கும் உள்ளாக்கப்பட்டு சாதிய தீண்டாமையால் புறக்கணிக்கப்பட்டு வந்த தாழ்த்தப்பட்ட மக்கள் ஒரு சமூக மாற்றத்தின் ஊடான புதிய சமூக வாழ்வை எய்த முடியும்.

இந் நூலிலே கூறப்பட்டுள்ளவாறு தாழ்த்தப்பட்ட மக்கள் கடந்த நூற்றாண்டின் இருபதுகளில் இருந்து சாதிய தீண்டாமைக்கு எதிராகப் பல்வேறு நிலை இயக்கங்களையும் போராட்டங்களையும் முன்னெடுத்து வந்துள்ளனர். அவற்றின் உச்ச கட்டமே 1966- 71 ன் இடம் பெற்ற புரட்சிகர வெகுஜனப் போராட்டங்களாகும். தமிழர் சமூகப் பரப்பில் இதற்குரிய வரலாற்று முக்கியத்துவத்தை நேர்மையான வரலாற்றாய் வாளர்களால் நிராகரிக்க முடியாது. இருந்தும் அப்போராட் டங்களை வெறும் "சாதிக் கலவரங்கள்" எனவும் "சாதியச் சண்டியர்களின் நடவடிக்கை" என்றும் புறம் தள்ளும் கனவான்கள் இன்றும் இருக்கிறார்கள். இவர்கள் இவ்வாறு காண்பது ஆச்சரியத்திற்குரிய ஒன்றல்ல. ஆதிக்க சாதியினராகவும் அதிகாரத்திலிருப்போருமாக உள்ளவர்கள் சார்பாக எழுத ப்படும் எந்த வரலாறும் சாதாரண உழைக்கும் வர்க்கத் தினரையும் தாழ்த்தப்பட்ட மக்களையும் என்றுமே ஒரு பொருட்டாக மதித்துக் கொண்டதில்லை. இதனைப் பழம் பெரும் இலக்கியங்கள் தொட்டு இன்றைய ஆய்வாளப்பெருமக்கள் பேராசிரியப் பெருந்தகைகள் வரை பிரதிபலிப்பவர்களாகவே உள்ளனர். இத்தகைய கனவான்கள் தான் இன்றைய யுத்த சூழலில் இடம் பெறும் போராட்டங்களை சங்ககால வீரத்துடனும் வீறு கொண்ட போர்க்கள நிகழ்வுகளுடனும் ஒப்பிட்டு பக்கம் பக்கமாக எழுதுகின்றனர். ஆனால் தமிழர் வரலாற்றில் அன்றைய புரட்சிகர வெகுஜனப் போராட்டங்கள் நிகழ்த்திய சமூக அதிர்வுகளும் மாற்றங்களும் தான் இன்றைய தமிழர் போராட்டத்தின் அடிப்படை என்பதை ஒரு வரியில் தானும் எழுத முடியாத நிலையில் இருந்து வருவது தான் தமிழர் சமூகத்தினிடையே காணப்படும் வரலாற்றுச் சோகமாகும். இத்தகைய சாதியாதிக்க வரலாற்றுப் புரட்டர்கள் எப்பொழுதும் அதிகாரம் சார்ந்தும் மக்களையும் அவர்களது வீரம் செறிந்த போராட்டங்களையும் கொச்சைப்படுத்தி நிராகரிப்பவர்கள் என்பது புதுமையான ஒன்றல்ல. அதனைப் புரிந்து கொள்வது சிரமமான ஒன்றுமல்ல.

இறுதியாக 1966 ஒக்ரோபர் 21 எழுச்சியின் நாற்பதாவது ஆண்டு நினைவாக இவ் இரண்டாவது பதிப்பு வெளிவரும் போது அன்றைய போராட்டகால நினைவுகள் மிகவும் பசுமையுடன் நினைவலைகளில்

www.padippakam.com



ஒளிக்கீற்றுக்களாகப் பிரகாசித்து நிற்கின்றன. அவற்றினிடையே முதன்மை பெற்று நிற்பது அப்போராட்டங்களின் அச்சாணியாக விளங்கிய மக்களும் அவர்களது கிராமங்களுமேயாகும். அவர்களிடையே இருந்து போராட்டங் களின் முன்னணிப் போராளிகளாக வீறுடன் போராடித் தம் இன்னுயிர் களை அர்ப்பணித்த ஒவ்வொருவருடைய போர்குணம் மிக்க வீரமுகங்க ளும் நம் கண் முன்னே தெளிவுடன் தெரிகின்றன. அத்தகைய தியாகிக ளை புரட்சிகர உணர்வுடன் நினைவு கூர்ந்து மரியாதை செலுத்துகின் றோம். மேலும் சாதி வெறியர்களின் கொடுமைகளுக்கும் பொலீஸ் அடக்கு முறைகளின் சித்திரவதைகளுக்கும் உள்ளாகிய தோழர்களுக்கு நாம் தலை வணங்கி நிற்கின்றோம். மேலும் சிறைகளில் நீண்டகாலம் துன்ப துயரங்களை அனுபவித்து தூக்குமேடைக்கு அண்மை வரை சென்று மீண்ட போராளிகளின் உயர்ந்த இலட்சிய உணர்வுக்கு நாம் தலை வணங்குகின்றோம். போராட்டங்களின் போது இரத்தம் சொரிந்தும் படுகாயங்கள் பட்டும் அங்கங்களை இழந்தும் மிகுந்த மனவலிமையுடன் போராடி வந்த அனைவரும் எமது அன்புக்கும் மரியாதைக்கும் உரியவர் கள்.

கட்சி, வெகுஜன இயக்கத் தலைவர்கள் முதல் போராளிகள் ஊழியர்கள் வரை சிறை, தலைமறைவு, தேடுதல் போன்ற துன்பங்கள் அனுபவித்த அந்நாட்களையும் மக்கள் வழங்கிய நிகரற்ற ஆதரவையும் நன்றியுடன் நினைவுகூர்கின்றோம். அதேபோல் அப்போராட்ட காலங்க ளில் ஏற்பட்ட பல்வேறுவகையான இழப்புக்களையும் தாங்கிக் கொண்டு தொடர்ந்தும் சமூக மாற்றத்திற்கான பாதையில் இன்றும் மக்கள் மத்தியில் அரசியல் சமூகப் பணி செய்துவரும் அனைத்து தோழர்களும் போற்றப் படவேண்டியவர்களே. கட்சி வெகுஜன அணிகளுக்கு அப்பாலும் அன்றைய போராட்டங்களில் பல்வகைப் பங்களிப்பை வழங்கிய பல சமூக அக்கறை மிக்க முற்போக்காளர்கள் ஜனநாயக வாதிகள் இருக்கின்றார்கள். அவர்க ளையும் இவ்வேளை நினைவு கூர்ந்து அன்றைய பங்களிப்பை போற்று கின்றோம்.

1966ம் ஆண்டு ஒக்ரோபர் 21 எழுச்சியும் அதன் வழியிலான புரட்சிப் போராட்டங்களும் தமிழர் சமூகத்தில் ஆழமான அனுபவ முத்திரை களைப் பதித்துச் சென்ற வரலாற்று நிகழ்வுகளாகும். அவற்றை முடிந்தளவி ற்கு இந்நூலிலே பதிவு செய்திருக்கின்றோம். மிகைப்படுத்தல்களோ இட்டுக்கட்டுதல்களோ திரிபுகளோ மறைப்புகளோ இன்றி நெஞ்சிற்கு நேர்மையாக இருந்து இந்நூலை எழுதியுள்ளமை ஒரு பொறுப்புள்ள சமூகக் கடமையின் பகுதியேயாகும்.

படிப்பகம்

www.padippakam.com

பின் இணைப்பு

## யாழ்ப்பாணத்தின் சமூகக் கோலம் உயர் வர்க்கச் சமூகத்தினரை அதிர வைத்த ‘தாலி’ விவகாரம்

அவர்களால் அவர்களது செவிகளையே நம்ப இயலவில்லை. "இத்தகைய செயல் ஒன்று செய்யப்பட்டிருக்க இயலுமா? உலகமே மேல் கீழாகப் புரண்டுள்ளதா? இந்த அபச்சாரம் நிறுத்தப்பட வேண்டும். அதுவும் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்."

கிராமத்தின் உயர் சாதியினர் கடுஞ்சினத்துடன் சீறினர். பொன்னன் மனைவி சின்னி தாலி அணிந்து கொண்டாள் என்று யாரோ அவர்கட்குச் சொல்லி விட்டார்கள். உடனடியாகவே பொன்னன் அழைக்கப்பட்டுச் செம்மையாக உதைக்கப்பட்டு அவனது மனைவியின் கழுத்திலிருந்து தாலியைக் கழற்றும்படி ஐயத்திற்கிடமின்றி அவனிடஞ் சொல்லப்பட்டது. பொன்னன் அன்றும் இன்றும் ஒரு இந்து. திருமணச்சடங்கின் போது மணமகள் கழுத்தில் மணமகன் கட்டுகிற கழுத்தாரம் தாலி. மணமான ஒவ்வொரு இந்துப் பெண்ணும் அணிய வேண்டிய ஆபரணம் அது. "ஆனாற் கீழ்ச் சாதிகட்கு என்ன தாலி?"

இச் சம்பவம் ஏற்றத்தாழப் பத்து வருடங்கள் முன்னம் யாழ்ப்பாணத்தில் நடந்தது. இத்தகைய சாதிப்பாகுபாட்டு நிகழ்வுகள்

www.padippakam.com



எத்தனையோ பற்றிச் சொல்லலாம். தாழ்ந்த சாதியினரான ஆண் எவரும் மேற்சட்டை அணியவோ கழுத்தைச் சுற்றிச் சால்வையுடன் திரியவோ இயலாது.

அவரது குழந்தை அருகிலிருந்த ஆங்கிலப் பாடசாலையிற் படிக்க இய லாது. ஏனெனில் தாழ்ந்த சாதிக்குழந்தை உயர்சாதிக் குழந்தைக்கு அருகாக அமரக் கூடாது.

### மாற்றங்கள்

தாழ்ந்த சாதிப் பெண்கள் தமது சேலைகளை மார்புக்கு மேலாகக் குறுக்குக்கட்டாகக் கட்ட வேண்டியும் தாழ்ந்த சாதியினர் உயர் சாதியினர் எவரையும் விபரிக்கும் போது பன்மையிலேயே விளிக்க வேண்டி யும் இருந்த இறுக்கமான சாதி அமைப்பின் காலத்திலிருந்து விடயங்கள் மாறித்தான் உள்ளன. ஆனால் இம் மாற்றங்கள் ஒரு காலத்தில் ஓங்கியிரு ந்த ஒடுக்குமுறையை நாம் காணாதிருக்க இடமளிக்கலாகாது.

தம்மிடையே பல வேறு உட்பிரிவுகளைக் கொண்டவர்களான பிராமணர் ஷத்திரியர், வைசியர் போக சூத்திரருக்குள் 41 கிளைச் சாதிகள் இருந் தன. சாதி அமைப்பின் எழுச்சியைத் தொழிற் பங்கீட்டுடன் தொடர்பு படுத்துவது மிகையான எளிமைப்படுத்தலாய் அமையலாம். ஏனெனில் இன மரபுக் குழுக்களும் குலமரபினரும் அரசுச் சமுதாயத்தினுள் உள்வாங் கப்பட்டதை இந்திய வரலாற்றிற் காணுகிறோம். எனினும் அவர்கள் பிற சாதியினருடன் ஒன்றிணைய இயலாதபடி செம்மையாக இழைக்கப்பட்ட ஒரு உறவுமுறை அமைப்பின் மூலம் அவர்களது அடையா ளங்கள் பேணப்பட்டன.

1. கள்ளரும் மறவரும் சாதிகளாக மாறிய இன மரபுக் குழுக்களாவர்.
2. நிலப்பிரபுத்துவச் சமூகத்திற் சாதி முறை வேலைப்பங்கீட்டின் அடிப்ப டையில் அமைந்திருக்க காண்கிறோம். பள்ளர் பண்ணையாட்கள்: வேளா ளர் கமக்காரர்.

## பெரிய மனிதர்

யாழ்ப்பாணத்தில் சுதந்திரக் கிளைச் சாதிகள் நிறைய உண்டு. மரபுவழி இந்துமுறையில் பிராமணர் மனிதரில் முதன்மையா னோர். எனினும் யாழ்ப்பாணத்தில் வேளாளரே அதி வலிமையுடையோர்.

அவர்கள் விவசாயி வர்க்கத்திற்குரியோர். அவர்களே நிலவு டைமையாளர்களும். அதனாற் தவிர்க்க இயலாதவாறு முழுச் சமூக இயக்க

www.padippakam.com



வடக்கின் சாதிகளிற் கொஞ்சம் முன்னேறியவர்களாயுள்ளனர். அவர்களிடையே சிறந்த சப்பாத்து உற்பத்தியாளர்களையும் நெசவாளர்களையுங் காணலாம்.

ஒரு பள்ளர் சமூக ஆண் மரமேறுவதுண்டு. எனினும் அது பெருமளவும் நளவர் சமூகத்தினரது தொழிலே. மரபுவழிக் கூற்றுக்களின் படி அவர்கள் ஏதோ ஒரு முக்கியமான போரின் போது கைவிட்டதால் இந்தத் தாழ்நிலைக்குத் தள்ளப்பட்டனர் எனப்படுகிறது.

இனி வண்ணாரும் (சலவைத் தொழிலாளர்) அம்பட்டரும் (நாவிதர்) அவர்களுள் மிகவும் தாழ்ந்தோரான துரும்பரும் உள்ளனர். மடைப்பள்ளியர் அகம்படியார் எனுஞ் சாதிக் குழுமங்கள் பற்றியுங் கூறப்படுகிறது. அவர்களது தோற்றுவாய் பற்றித் திட்டவட்டமாக எதுவும் கூறப்படவில்லை. தாழ்த்தப்பட்ட சாதியினரிடையே கூட ஒரு கிளைச் சாதியைச் சேர்ந்தவர் இன்னொரு கிளைச்சாதிக்குரியவருடன் உறவு கொண்டாடாதளவுக்கு வேறுபட்ட பல வேறு கிளைச் சாதிகளை நாம் காணலாம்.

இவ்வாறான வேறுபாடுகள் தணிந்து வருகிற இக்காலகட்டத்தில் அவை பற்றிப் பேசுவது மதியூகமானதல்ல. எனினும் யாழ்ப்பாணச் சமூகச் செயற் பாட்டின் அடிப்படையான இயங்குமுறையை விளங்கிக்கொள்ள அவை பற்றிய போதுமானளவு அறிவு உதவியாயிருக்கும்.

### நீர்

தண்ணீரைச் சேமித்து வைக்கும் கலமான செம்பில் நீர் பகிருவது யாழ்ப்பாணத் தமிழரின் சமூக மேம்பாட்டின் ஒரு அடையாளம் எனலாம். "அவர்களுடைய செம்பைத் தொடுவேனா?" என்றோ "என்னுடைய செம்பில் அவனுக்குத் தண்ணீர் கொடுப்பேனா?" என்று மனிதர் பேசுவதை அடிக்கடி கேட்டிருக்கலாம். இன்று யாழ்ப்பாணச் சமூகத்தில் ஏற்பட்டுள்ள மாற்றத்தின் அடையாளமாக கண்ணாடிக் குவளையின் பாவனை உள்ளது.

தாழ்த்தப்பட்ட சாதிக்குரிய ஒருவன் உயர்சாதிக்குரிய ஒருவனின் செம்பைத் தொட அனுமதிக்கப்பட மாட்டார். அருந்துவதற்கு நீர் தேவையானால் அது அவனது குவித்த கைகட்குள் ஊற்றப்படும். அதை அவன் அப்படியே வேகமாகப் பருக வேண்டும். யாழ்ப்பாணத்து

படிப்பகம்

www.padippakam.com



இளைஞர்கள் சிலர் இப்போது சாதி வேறுபாடுகள் பற்றி அதிகம் அலட்டிக் கொள்வதில்லை என்று கூறப்படுகிறது. ஒருமுறை உயர்சாதிக்குரிய ஒருவனது மேற் சட்டையிலிருந்த ஈயொன்றைத் தாழ்ந்த சாதிக்குரிய ஒரு இளைஞன் தட்டிவிட்டான். அதற்காக அவனுக்கு நன்றி சொல்லப்பட்டது. ஆனால் அதைக் கண்ட உயர்சாதியினரது மாமியார் மருமகன் வீட்டிற்குள் நுழையுமுன் குளித்துவிட்டு வர வேண்டுமென்று ஆணையிட்டார்.

தோளில் அணியும் சால்வை போக நெற்றிக்குச் சிறிது மேலாக உள்ள தலைமயிரை மழிப்பதும் சமூக மேம்பாட்டின் அடையாள மாயிருந்தது. ஆனாற் குடுமி இப்போது நாகரீகமில்லை. கிராமப்புறங்களிற் சொல்லுவது போல "சாதி வேறுபாடுகள் எல்லாம் பொலிஸ் குறோப் தலை முடி வெட்டுக்குள்ளும் காற்சட்டை சேட்டுக்குள்ளும் காணாமற் போய் விட்டன."

சாதி இப்போது யாழ்ப்பாணச் சமூகத்திற் பேசத் தகாத கொடுமையாகியுள்ளது. எல்லாரும் அதை ஒழிக்க விரும்புகிறார்கள் அல்லது அவ்வாறு செய்ய விரும்புவதாக வெளி வெளியாகச் சொல்லிக் கொள்கிறார்கள். ஆனால் சாதியுணர்வு இருப்பதை மறுப்பது உண்மை யை மறுப்பதாகும். அதே வேளை பத்து பதினைந்து ஆண்டுகள் முன் இருந்ததைவிடத் தாழ்த்தப்பட்ட சாதியினர். இன்று பொருளாதாரத்திலும் பிற வழிகளிலும் ஓரளவுக்கு மேம்பாடு கண்டுள்ளனர்.

## கல்வி

சி. தர்மகுலசிங்கம் போன்ற சீர்திருத்தவாதிகளதும் ஸி. சுப்பிரமணியம் (ஒறேற்றர்) ஹன்டி பேரின்பநாயகம் எஸ். குமாரசுவாமி போன்ற யாழ்ப்பாணப் பாடசாலைகளதும் கல்லூரிகளதும் ஊக்கமிக்க அதிபர்களதும் முன்னோடியான முயற்சிகளின் விளைவாகத் தாழ்த்தப் பட்ட சாதியினரது சமூக உயர்வுக்கான பணிகள் பலவும் ஆற்றப்பட்டுள் ளன. தாழ்த்தப்பட்ட வர்க்கத்தினரின் சமூக கழகங்களும் தொழிற்சங்கங் களும் அவர்கள் மேலெழுவதற்கு உதவும் விதமாகப் பெரும்பணி ஆற்றி யுள்ளன.

அண்மைக்கால அரசியல் வரலாறு இச் செயற்பாட்டைத் துரிதப்படுத்தியுள்ளது. "தமிழர் ஒற்றுமைக்கான" தேவை ஒன்றுபட்டு நிற்பதற்கும் சாதி வேறுபாடுகளை இல்லாதொழிப்பதற்கும் அழைப்பு விடுமாறு தலைவர்களை வற்புறுத்தியுள்ளது. கூடியளவு ஞானமுடைய பகுதிகளில் அகமண முறைக்குட்பட்ட திருமணங்களில் சாதி பார்க்கப்படு

www.padippakam.com



கிறது.

சாதியத்திற்கு ஆதாரமாயிருந்த பொருளியல் அத்திவாரங்கள் நொருங்கிவிட்டன. மனிதர் பொருளியல் தங்கியிருத் தலை வேண்டி நின்ற தமது மரபு சார்ந்த தொழில்களைக் கைவிட்டு வருகின்றனர். மேசன் தச்சு வாகனச் சாரதி வேலைகள் அண்மைக்காலங்களில் அதிகளவில் நாடப்படுவதிலிருந்து இதை உணரலாம்.

தாழ்த்தப்பட்ட சாதிகள் எனப்படுவனவற்றைச் சேர்ந்த பலர் இன்று சம்பளம் பெறுவோராக உள்ளனர். சலவை நாவிதம் போன்ற தொழில்களில் தொடர்ந்து நிலைப்போர் நடுவிலும் தொழில் முறைகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் அவர்களது தொழிலின் கோலத்தையே மாற்றியுள்ளன.

வீடு வீடாக ஒருவர் துணிகளை எடுக்கப் போவதற்கு மாறாக இன்று நகரங்களில் எல்லாரையும் சமமாக நடத்தும் லோண்டரிகளைக் காணுகிறோம். மரநிழலில் தாடி மீசை மழிக்கும் பாரம்பரியத்தின் இடத்தைச் சலூன்கள் பிடித்துக் கொண்டுள்ளன.

சாதியால் தாழ்த்தப்பட்டோரிடையேயுள்ள செல்வந்தர்கள் பிற நடுத்தர வகுப்பினருக்குச் சமமானவர்களாக உள்ளனர். ஏழ்மைப்பட்டோரிடையே பாகுபாடு இன்னமுங் காணப்படுகின்றது. விரைவில் நடந்து முடியவுள்ள ஒரு கேவலமான நாடகத்தின் இறுதிக் காட்சியாக இந்த அநீதி அமையும் என்பது உறுதி.

சி. தில்லைநாதன்
25- 06- 1962ல்
சிலோன் ஒப்சேவர் (Ceylon Observer)
இதழில் எழுதிய கட்டுரையின்
தமிழ் வடிவம்

www.padippakam.com



## உசாத்துணை நூல்கள்

1. குடும்பம். தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம். பிரெடரிக் ஏங்கெல்ஸ்.

2. மண்ணும் மனித உறவுகளும். கோ. கேசவன், சென்னை புக்ஸ்.

3. ஒப்பியல் இலக்கியம். க. கைலாசபதி.

4. பழந்தமிழர் வீரப்பண்பாடு (ஒப்பிலக்கியக் கணிப்பு), கதிர்மகாதேவன். ஏரக வெளியீடு 263C சதாசிவநகர் மதுரை 625020.

5. தமிழ் நாடு வரலாற்றுக் கருத்தரங்கு. பதிப்பாசிரியர்; டாக்டர் இரா. நாகசாமி. 42/2 சுப்பிரமணியஐயர் தெரு, அபிராமபுரம், சென்னை 6000018. மே 1979.

6. யாழ்ப்பாண வைபவ கௌமுதி, மெஸ் க. வேலுப்பிள்ளை. 1918.

7. அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் 16வது ஆண்டு விழா வெளியீடு
1959 ஆகஸ்ட் 30.

8. Handy Perinpanayagam- A Memorial Volume 1980.

9. Ceylon: Report of the Special Commission on the Constitution- 1927- 28

10. Ceylon: Report of the Commission on the Constitution Reform. Septemler 1945.

11. பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும் க. கைலாசபதி.

12. அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் வருடாந்த மாநாட்டு அறிக்கைகள், பிரசுரங்கள், வேண்டுகோள்கள், மகஜர்கள்.

13. 1966ம் ஆண்டு ஜனவரி தொடக்கம் 74ம் ஆண்டு வரையான 'தொழிலாளி' பத்திரிகைகள்.

14. தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் மாநாட்டு மலர் 1969.

15. யோவேல் போல் வகுத்த வழி "அல்லது" புதிய யாழ்ப்பாணம்

16. அடியும் முடியும். க. கைலாசபதி.

17. பஞ்சமரும் சமூகத் தொடர்புகளும்- அருட்திரு பெஞ்ஜமின் ஜெயராசா- 2004 மார்ச்.

18. மட்டக்களப்பு வரலாறு, ஒரு அறிமுகம், வெல்லவூர் கோபால், 2005.

19. இருபதாம் நூற்றாண்டில் தாழ்த்தப்பட்ட மக்களின் கல்வி வளர்ச்சி- சுப்பிரமணியம் சந்திரபோஸ் 1989.

படிப்பகம்

www.padippakam.com



20. K. Arumainayagam- Caste in Jaffna in the19th Century and 20th Century - Tribune Colombo August 14th 1978.

21. வடமராட்சி தேவரையாளி இந்துக் கல்லூரி மலர். வட அல்வாய் முருகேசனார் மலர்- கந்தையா நடேசன் கட்டுரைகள்.

22. வடபுலத்து பொதுவுடைமை இயக்கமும் தோழர் கார்த்திகேசனும் சி. கா. செந்திவேல்

## வரலாற்றுக் குறிப்புகள்

1694- இந்தியாவில் இருந்து 3589 அடிமைகள் யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்டு விற்பனை செய்யப்பட்டனர்.

1824 கணக்கிடப்பட்ட குடிசன மதிப்பொன்றின்படி யாழ்ப்பாணத்தில் 15341 சிறைகள் அதாவது அடிமை குடிமை செய்வோர் இருந்துள்ளனர்.

1910 வடபகுதி தொழிலாளர் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது.

1910 முதலாவது தாழ்த்தப்பட்ட மாணவன் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் அனுமதிக்கப்பட்டான்.

1920 யாழ்ப்பாண மாணவர் (வாலிபர்) காங்கிரஸ் உதயம்.

1924 யாழ்ப்பாண வாலிபர் காங்கிரசின் முதலாவது மாநாடு.

1927 மகாத்மா காந்தி யாழ்ப்பாணம் வருகை.

1927 ஒடுக்கப்படும் தமிழ் ஊழியர் சங்கம் உருவாக்கம்.

1928 மிஷனரிப்பாடசாலைகளில் சம ஆசனம்- சமபோசனம் இயக்கம் தொடங்கப்படல்.

1928 சேர். பொன். இராமநாதன் தேசவழமையை வற்புறுத்தி

www.padippakam.com



தேசாதிபதியிடம் தூது.

1929 இந்து மகாசபை உயர்சாதியினர் சார்பாக தேசாதிபதிக்கு மனு.

1929 யோவேல்போல் தாழ்த்தப்பட்ட மக்கள் சார்பாக தேசாதிபதியைச் சந்தித்தல்.

1930 மிஷனரிப் பாடசாலைகளில் சம ஆசனம் சமபோசனம் சட்டமாக்கப்படல்.

1931 டொனமூர் ஆணைக்குழுவின் சிபார்சின்படி நடைபெற்ற முதலாவது சட்டசபைத் தேர்தலில் யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் பகிஷ்கரிப்பு.

1931 சங்கானை மயானத்தில் சமத்துவம் கோரிய போராட்டம்.

1933 வட இலங்கை கள் இறக்கும் தொழிலாளர் சங்கம் உதயம்

1934 நன்னெறி போதிக்கும் சங்கம் ஆரியகுளம் பலாலி வீதியில் ஆரம்பம்

1936 வடபகுதிக்கு மரவரி முறை அறிமுகமாதல்.

1941 சன்மார்க்க ஐக்கிய வாலிபர் சங்கம் உதயம்.

1943 வடஇலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபை ஆரம்பம்.

1944 அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபையாக பெயர் மாற்றமும் 2வது மாநாடும்.

1944 வில்லூன்றி மயானப் போராட்டம்.

1944 இலவசக் கல்வியின் அறிமுகம்.

1945 வடபகுதியில் கம்யூனிஸ்ட் கட்சி உதயம்.

1945 சோல்பரி ஆணைக்குழு வருகை.

1947 முதலாவது பாராளுமன்றத் தேர்தல்.

1948 இலங்கை சுதந்திரம் அடைதல்.

1953 மகத்தான ஹர்த்தால்.

1956 நல்லூர் கந்தசுவாமி கோவில் பிரவேசம்.

1956 எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா பதவிக்கு வருதல்.

1956 தோழர் பொன். கந்தையா பருத்தித்துறைத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு.

1957 சமூகக் குறைபாடுகள் ஒழிப்புச்சட்டம் நிறைவேறல்.

1958 யாழ். நகர தேநீர்க்கடைகள்– உணவகங்களில் சமத்துவப்போராட்டம்.

1962 கரவெட்டியின் தாழ்த்தப்பட்ட மக்கள் தாக்கப்பட்டு வீடுகள் எரிப்பு.

1963 நீர்வேலியில் தாழ்த்தப்பட்ட மக்கள் மீது தாக்குதல்.

www.padippakam.com



அதற்கெதிரான போராட்டங்களும்

1964 கம்யூனிஸ்ட் கட்சிக்குள் பிளவு.

1966 அச்சுவேலியில் சர்வகட்சி மாநாடு.

1966 ஒக்ரோபர் 21 எழுச்சி

1967 சங்கானைப் போராட்டம்.

1967 தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் உதயம்.

1968 அச்சுவேலி ஆலய- தேநீர்க்கடைப் போராட்டம்.

1968 சாவகச்சேரி- கொடிகாமம் தேநீர்க்கடைப் போராட்டம்.

1968 கொடிகாமம்- மந்துவில் போராட்டம்.

1968 மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயப் பிரவேசப் போராட்டம்.

1968 மாவிட்டபுரம் ஆலயப்பிரவேசப் போராட்டம்.

1969 தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் இரண்டாவது மாநாடு.

1969 நெல்லியடி – கரவெட்டி – கன்பொல்லைப் போராட்டம்.

1969 தீ.ஒ.வெ. இயக்கம் கொழும்பில் ஓவியக்கண்காட்சியும்
பொதுக்கூட்டமும் நடத்தியது.

1970 பொதுத்தேர்தலில் ஐக்கியமுன்னணி அரசு பதவி ஏற்பு.

1970 பாராளுமன்ற உறுப்பினராக எம். சி. சுப்பிரமணியம் நியமனம்.

1972 சமூகக்குறைபாடுகள் ஒழிப்புச்சட்டத்தில் திருத்தம்

1974 சங்கானையில் குத்தகை நிலப்போராட்டம்.

1975 கோப்பாய்- இருபாலைப் போராட்டம்.

1977 ரி. இராஜலிங்கம் பாராளுமன்றத்திற்கு தெரிவு

1978 மாதகல் கோடாலிக்காடு போராட்டம்.

1979 புத்தூர் கலைமதிக் கிராமத்தின் போராட்டம்.

1981 தென்மராட்சி எழுதுமட்டுவாள் சாதியத் தாக்குதல்.

1982 புன்னாலைக்கட்டுவன் ஈவினையில் கொலைகள்.

1984 சிறுப்பிட்டி – புன்னாலைக் கட்டுவன் போராட்டம்

1995 வலிகாமத்திலிருந்து தென்மராட்சி நோக்கிய இடப்பெயர்வு

2004 கி. சிவநேசன் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற
உறுப்பினராகத் தெரிவு

2006 ஒக்ரோபர் 21 1966 எழுச்சியின் 40வது ஆண்டு நினைவு.

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

இன்று சிலர் வேண்டுமென்றும் சிலர் அறியாமையாலும் சாதியம் ஒழிந்து விட்டதென்றும் தமிழ்த் தேசியமே அதை முறியடித்தது என்றும் பேசுகின்றனர். இரண்டுமே பொய்யானவை. சாதியம் இன்னும் ஒழிய வில்லை. அதற்கான சான்றுகள் வெளிவெளியாகவே உள்ளன. ஆயினும் சாதிய ஒடுக்கு முறைக்குச் சாவுமணி அடிக்கப்பட்டாயிற்று. தாழ்த்தப்பட்ட மக்கள் இன்று தலை நிமிர்ந்து நிற்கிறார்கள். அந்த வெற்றிக்குத் தமிழ்த் தேசியம் எவ்வகையிலும் பங்களிக்கவில்லை. அதை இயலுமாக்கியவர்கள் தாழ்த்தப்பட்ட வெகுசனங்களும் அவர்களோடு இணைந்து நின்று போராடிய நேர்மையான இடதுசாரி, சனநாயக, முற்போக்குச் சக்திகளுமேயாவர். அதை இயலுமாக்கியது மாக்ஸிஸ லெனினியவாதிகளின் வழிநடத்தலின் கீழ் அவர்கள் முன்னெடுத்த வெகுசனப் போராட்டப் பாதையே.

மேற்கூறிய வகையில் ஒரு வரலாற்று ஆவணமாகவும் இன்றைக்கும் பயனுள்ள போராட்டப் பாடல்களின் தொகுப்பாகவும் இந்த நூல் புதிய தகவல்களை உள்ளடக்கி மீளப் பதிப்பிக்கப் பெறுவது இன்று அவசியமான ஒரு சமூகக் கடமையினது நிறைவேற்றல் ஆகும். சமூக ஒடுக்குமுறைக்கு முகங்கொடுக்கிறவர்களும் சமூக நீதிக்காகப் போராடுகிறவர்களும் இந்த நூலைக் கட்டாயம் ஊன்றிப் படிக்க வேண்டும்.

மக்கள் பதிப்பு

படிப்பகம்